उक्त्वा वृत्तान्तमेवं तान् प्रेरयित्वा स्वयं द्विजाः । न्यवसद् बहुकालं स स्वयं सन्दूषयञ्छिवम् ॥ ९
अथ कालेन महता विधाता विश्वसृड्विधिः । मखं कर्तुमनास्तस्य यानि द्रव्याणि भूसुराः ॥ १०
अपेक्षितानि संपाद्य तानि सर्वाणि शीघ्रतः । राजानमध्वरस्याहं महादेवं त्र्यंबकम् ॥ ११

த்வாரஸ்தை ஸ்தத்ர ருத்ரஸ்ய க்ரூரை: கிஞ்சித் விசேஷ்டிதம் ।
ந கந்தவ்யம் ந த்ருஷ்டவ்யம் த்வந்முகம் சங்கராக்ஞயா ॥ 3
விநாத்ர கச்சவாதிஷ்ட இதி நிஷ்டுரபாஷிபி: ।
தூஷணாநிச பூரீணி க்ருதாநி மமதைரஹோ ॥ 4
வாக்யம் துஹித்ரு ஜாமாத்ரோ ஸ்ஸமாகர்ண்ய ஸுரேச்வரா: ।
ந தேஷாமபராதோऽத்ர மயிதோஷோ ந ஸம்சய: ॥ 5
முக்த்வாபிமானம் கதவான் தாவஹம் வீக்ஷிதும் யத: ।
பஹுநா கிம் ஸுராஸ் ஸர்வே ச்ருணுத்வமவதானத: ॥ 6
இத: ப்ரப்ருதி யுஷ்மாபிர் ந கர்த்தவ்யா நமஸ்க்ரியா ।
ந ஸ்துதிர் ந ஸ்மிருதிர் வாபி ருத்ரஸ்ய க்ரூர சேதஸ: ॥ 7
க்ருதா சேதபராதோபி யுஷ்மாகம் ஸுமஹான் பவேத் ।
ப்ரயச்சேயம் பரேப்யோஹம் தாவகாநி பதாந்யபி ॥ 8
உக்த்வா வ்ருத்தாந்தமேவம் தான் ப்ரேரயித்வா ஸ்வயம் த்விஜா:
ந்யவஸத் பகுகாலம் ஸ ஸ்வயம் ஸந்தூஷயன் சிவம் ॥ 9
அத காலேந மஹதா விதாதா விச்வஸ்ருட் விதி: ।
மகம் கர்தும்மனாஸ் தஸ்ய யாநி த்ரவ்யாணி பூஸுரா: ॥ 10
அபேக்ஷிதாநி ஸம்பாத்ய தாநி ஸர்வாணி சீக்ரத: ।
ராஜாநமத்வரஸ்யாஹம் மஹாதேவம் த்ரயம்பகம் ॥ 11

தேவர்களே! உங்கள் வார்த்தையைக் கேட்டு நான் என் பெண்ணையும் ஸ்ரீருத்ரனையும் பார்ப்பதற்குக் கைலாஸமலையை நோக்கிச் சென்றேன் (2) அங்கு ருத்ரனுடைய கொடியவர்களான வாயிற்காவலரால் சிறிது அவமரியாதை செய்யப்பட்டது. "ஸ்ரீ சங்கரருடைய உத்திரவின்றி நீ உள்ளே போகக்கூடாது. நாங்கள் உன் முகத்தைப் பார்க்கவும் தகாது (3) எங்கேயாவது சென்றுவிடு அல்லது இங்கேயே நில்" என்று எனது பெண் மாப்பிள்ளைகளுடைய வார்த்தையைக் கேட்டு கொடூரமாய்ப் பேசுகின்ற அவர்களால் இன்னும் பல இகழ்வான வார்த்தைகள் என்னைப் பார்த்துக் கூறப்பட்டன. ஓ தேவர்களே! நான் அபிமானத்தை விட்டு அந்தப் பெண் மாப்பிள்ளைகளைப் பார்க்கச் சென்றதால்தான் சந்தேகமின்றி நம்மீது குற்றமே அன்றி அவர்களிடத்தில் யாதொரு குற்றமுமில்லை. இன்னும் பல கூறுவானேன். எல்லா தேவர்களும் ஸாவதானமாய்க் கேளுங்கள் (4 6) இது முதற்கொண்டு நீங்கள் யாவரும் அந்த கொடூர மனம் உடைய ருத்ரனுக்கு நமஸ்காரமோ துதிகளோ செய்யக் கூடாது. அவனை நினைக்கவும் கூடாது (7) அப்படிச் செய்வீர்களேயாகில் உங்களுக்கு மிகுந்த குற்றம் ஏற்படும். நான் உங்களுடைய பதவிகளையும் மற்றவர்களுக்குக் கொடுத்துவிடுவேன் (8) இவ்விதம் அவர்களிடத்தில் விஷயத்தைக் கூறித் தானே அவர்களை அனுப்பிவிட்டு ஓ முனிவர்களே! அவன் தான் பரமேச்வரனை நிந்தித்துக்கொண்டே பலகாலம் வஸித்துவந்தான் (9) ஓ முனிவர்களே! இப்படி வெகு காலம் சென்ற பிறகு ப்ரபஞ்சங்களை ஸ்ருஷ்டிக்கும் ப்ரும்மதேவனுக்கு யாகம் செய்ய மனமுண்டாயிற்று. அவர் அதற்கு வேண்டிய திரவ்யங்கள் யாவையும் சீக்கிரம் தயாரித்துக்கொண்டு முக்கண்ணரும், ப்ரபஞ்சந்தத்தக்காட்டிலும் மேலானவரும், பரஞ்ஜோதி ஸ்வரூபியும், பரப்ரும்ம ஸ்வரூபியும், யாகத்திற்கு ராஜாவுமாகிய அந்த மகாதேவனை அழைத்து வந்து

विश्वाधिकं परञ्ज्योतिस्वरूपं ब्रह्म केवलम् । आनयित्वा हविर्भिस्तं पूजयिष्यामि भक्तितः ॥ १२
दक्षोऽयं विमुखो मोहादभिवीक्ष्य यदीश्वरम् । तथापि तं महादेवं पूजयिष्याम्यसंशयम् ॥ १३
यत्किञ्चिदपि वा दक्षः करोतु मम दुर्मनाः । परित्यजेहं प्राणांश्च तदर्थं नात्रसंशयः १४
यस्य प्राणाभिमानोऽस्ति तस्य भीतिः क्वचिद्भवेत् । प्राणेश्वरो महादेवः कृत्तिवासाः पिनाकधृक् ॥ १५
रक्षेदित्यं मतिं कृत्वा ब्रह्मा लोकपितामहः । कैलासं पर्वतश्रेष्ठं गत्वा परमया मुदा ॥ १६
तत्र दृष्ट्वा महाकायं नन्दिनं द्वारपेश्वरम् । प्रणम्य तन्मुखादेवं बोधयित्वा तदाज्ञया ॥ १७
प्रविश्य भवनं रम्यं महादेवस्य भूसुराः । विनयेन महादेवं दृष्ट्वा हृष्टमना विधिः ॥ १८
पुनः पुनः प्रणम्यायं प्रार्थयामास भूरिशः । देवदेव महादेव शरणागतवत्सल ॥ १९
रक्ष मां करुणामूर्ते यज्ञेश्वर महेश्वर । मया करिष्यमाणे त्वं प्रसन्नो भव चाध्वरे ॥ २०
अनुमन्यस्व देवेश प्रथमं हविरीश्वर । भविष्यामि कृतार्थोऽहं तेन सत्यजगद्गुरो ॥ २१

விச்வாதிகம் பரஞ்ஜ்யோதி ஸ்வரூபம் ப்ரம்மகேவலம் ।
ஆனயித்வா ஹவிர்பிஸ்தம் பூஜயிஷ்யாமி பக்திதः ॥ 12
தக்ஷோऽயம் விமுகோ மோஹாத் அபிவீக்ஷ்ய யதீச்வரம் ।
ததாபி தம் மஹாதேவம் பூஜயிஷ்யாம்யஸம்சயம் ॥ 13
யத் கிஞ்சிதபிவா தக்ஷः கரோது மம துர்மனுः ।
பரித்யஜேஹம் ப்ராணும்ஸ்ச ததர்த்தம் நாத்ர ஸம்சயः ॥ 14
யஸ்ய ப்ராணாபிமானோஸ்தி தஸ்ய பீதிः க்வசித் பவேத் ।
ப்ராணேச்வரோ மஹாதேவः க்ருத்திவாஸாः பிநாகத்ருக் ॥ 15
ரக்ஷேதித்தம் மதிம் க்ருத்வா ப்ரும்மா லோகபிதாமஹः ।
கைலாஸம் பர்வத ச்ரேஷ்டம் கத்வா பரமயா முதா ॥ 16
தத்ர த்ருஷ்ட்வா மஹாகாயம் நந்திநம் த்வாரபேச்வரம் ।
ப்ரணம்ய தந்முகாத்தேவம் போதயித்வா ததாக்ஞயா ॥ 17
ப்ரவிச்ய பவனம் ரம்யம் மஹாதேவஸ்ய பூஸுராः ।
வினயேந மஹாதேவம் த்ருஷ்ட்வா ஹ்ருஷ்டமனு விதிः ॥ 18
புநः புநः ப்ரணம்யாயம் ப்ரார்த்தயாமாஸ பூரிசः ।
தேவ தேவ மஹாதேவ சரணுகத வத்ஸல ॥ 19
ரக்ஷமாம் கருணாமூர்த்தே யக்ஞேச்வர மஹேச்வர ।
மயா கரிஷ்யமாணே த்வம் ப்ரஸந்நோ பவசாத்வரே ॥ 20
அனுமன்யஸ்வ தேவேச ப்ரதமம் ஹவிரீச்வர ।
பவிஷ்யாமி க்ருதார்த்தோஹம் தேந ஸத்யம் ஜகத்குரோ ॥ 21

அவரை மிகுந்த பக்தியோடு ஹவிர்பாகங்களால் பூஜை செய்யப் போகிறேன் (10-12) இந்த தக்ஷனும் ஈச்வரனைப் பார்த்து புத்தி மோஹத்தால் பராமுகமாயிருந்தபோதிலும் நான் அந்த மஹாதேவனை சந்தேகமின்றி பூஜை செய்யப் போகிறேன் (13) கெட்ட எண்ணங்கொண்ட அந்த தக்ஷன் என்னை அதற்காக என்ன வேண்டுமானாலும் செய்யட்டும். நான் அதுவிஷயத்தில் சந்தேகமின்றி உயிரையும் விடுவேன் (14) எவனுக்கு உயிரில் அபிமானமிருக்கிறதோ அவனுக்கல்லவோ எங்காகிலும் பயமுண்டு. யானைத் தோலை உடுத்தவரும், பினாகமென்ற வில்லைத் தரித்தவரும், ப்ராணங்களுக்கு ஈசனுமான ஸ்ரீ மஹாதேவன் (15) எப்படியும் என்னைக் காப்பாற்றுவார் எனப் புத்தியைத் தீர்மானித்துக்கொண்டவரும், உலகிற்கெல்லாம் பாட்டனுமான அந்த ப்ரும்மாவானவர் மிகுந்த சந்தோஷத்தோடு சிறந்த கைலாஸமலைக்குச் சென்று (16) அங்கு வாயிற்காப்போர்களுக்குத் தலைவரும், பெருத்த சரீரத்தை உடையவருமான நந்திகேச்வரரைப் பார்த்து நமஸ்கரித்து அவர் வாயிலாக ஸ்ரீ பரமேச்வரருக்கு அறிவித்து அவருடைய உத்திரவால் (17) அந்த மஹாதேவருடைய அழகிய மாளிகைக்குச் சென்று சந்தோஷமுள்ள மனதுடன் ப்ரும்மாவானவர் அவரைப் பார்த்து வணக்கத்துடன் (18) பல தடவை நமஸ்கரித்து ரொம்பவும் ப்ரார்த்தித்தார். ஓ தேவாதி தேவ! மஹாதேவ! சரணமடைந்தவர்களிடத்தில் அன்புகொண்டவரே! (19) ஓ கருணைக் கடலே! ஓ யக்ஞேச்வரரே! ஓ மஹேச்வரா! என்னைக் காத்து நான் செய்யப்போகின்ற யாகத்தில் தாங்கள் ப்ரஸன்னராகி (20) ஓ தேவேசா! ஓ ஈச்வரா! முதலாவதான ஹவிர்பாகத்தைத் தாங்கள்

इति ब्रह्मवचश्श्रुत्वा देवदेवोऽब्रवीद्वचः । प्रेरयामि विधे यज्ञे नन्दिनं तव मामकम् ॥ २२
इति शम्भुर्विधातारं मन्दस्मितमुखांबुजः । प्रेरयामास विश्वात्मा ब्रह्माणं परया मुदा ॥ २३
तथेति स विधाताशु प्रणम्य परमेश्वरम् । विनिर्गत्य पुनर्गत्वा दक्षस्यान्तिकमात्मवान् ॥ २४
विज्ञाप्य तञ्च लब्धाज्ञो गत्वा मेरुं महीभृतम् । समागत्यात्र शिखरे मनोवत्याह्वये शुभे ॥ २५
तत्र स्थित्वा शुचिर्भूत्वा यागारंभञ्चकार सः । विष्ण्वादि देवतास्सर्वा ब्रह्मपुत्रा महौजसः ॥ २६
समानीयागताश्शीघ्रं कैलासमचलं परम् । निर्गत्य तासां पुरतो ब्रह्मापि जगतां प्रभुः ॥ २७
उक्त्वोपचारानेतासां परिकल्प्यासनानि च । दक्षप्रजापतिं तद्वदागतं पुरतो विधिः ॥ २८
विनिर्गत्योपचारेण प्रेरयित्वा तरांतदा । विधायास्यासनं रम्यं स्वयं तस्थे तदाज्ञया ॥ २९
नन्दी समागतश्शीघ्रं तदानीं शङ्कराज्ञया । उत्थाय तं विनिर्गत्य पुरतोऽस्य महात्मनः ॥ ३०
नानोपचारैस्संपूज्य प्रणम्य परया मुदा । मध्ये महार्हे संस्थाप्य वरे सैंहे महासने ॥ ३१

இதி ப்ரும்ம வசச் ச்ருத்வா தேவதேவோऽப்ரவீத்வச: ।
ப்ரேரயாமி விதேயக்ஞே நந்திநம் தவ மாமகம் ॥ 22
இதி சம்புர் விதாதாரம் மந்தஸ்மித முகாம்புஜ: ।
ப்ரேரயாமாஸ விச்வாத்மா ப்ரும்மாணம் பரயா முதா ॥ 23
ததேதி ஸ விதாதாசு ப்ரணம்ய பரமேச்வரம் ।
விநிர்கத்ய புநர் கத்வா தக்ஷஸ்யாந்திக மாத்மவாந் ॥ 24
விக்ஞாப்ய தஞ்ச லப்தாக்ஞோ கத்வா மேரும் மஹீப்ருதம் ।
ஸமாகத்யாத்ர சிகரே மநோவத்யாஹ்வயே சுபே ॥ 25
தத்ர ஸ்தித்வா சுசிர்பூத்வா யாகாரம்பம் சகார ஸ: ।
விஷ்ண்வாதி தேவதாஸ் ஸர்வா ப்ரும்மபுத்ரா மஹௌஜஸ: ॥ 26
ஸமாநீயாகதாச்சிக்ரம் கைலாஸமசலம் பரம் ।
நிர்கத்ய தாஸாம் புரதோ ப்ரும்மாபி ஜகதாம் ப்ரபு: ॥ 27
உக்த்வோபசாரா நேதாஸாம் பரிகல்ப்யாஸநாநி ச ।
தக்ஷப்ரஜாபதிம் தத்வதாகதம் புரதோ விதி: ॥ 28
விநிர்கத்யோபசாரேண ப்ரேரயித்வா தராம் ததா ।
விதாயாஸ்யாஸநம் ரம்யம் ஸ்வயம் தஸ்தே ததாக்ஞயா ॥ 29
நந்தி ஸமாகதச்சிக்ரம் ததாநீம் சங்கராக்ஞயா ।
உத்தாய தம் விநிர்கத்ய புரதோऽஸ்ய மஹாத்மன: ॥ 30
நாநோபசாரைஸ் ஸம்பூஜ்ய ப்ரணம்ய பரயாமுதா ।
மத்யே மஹார்ஹே ஸம்ஸ்தாப்யவரே ஸைம்ஹே மஹாஸநே ॥ 31

அங்கீகரிக்கவேண்டும். எல்லா உலகங்களுக்கும் குருவான ஓ பரமசிவா! அதனால் நான் ஸத்யமாகவே க்ருதார்தனாகின்றேன் (21) இவ்வாறான ப்ரும்மாவின் வார்த்தையைக் கேட்டு தேவதேவன் பதில் கூறினான். ஓ ப்ரும்மனே! உனது யாகத்திற்கு என்னுடைய நந்தியை அனுப்புகிறேன் (22) என்று ஸர்வ ப்ரபஞ்ச ரூபியான சம்புவானவர் மந்தஹாஸத்துடன் கூடிய முகமுள்ளவராய் ப்ரும்மாவை மிகுந்த ஸந்தோஷத்தோடு அனுப்பினார் (23) ப்ரும்மாவும் அப்படியே ஆகட்டுமென்று பரமேச்வரரை நமஸ்கரித்து வேகமாய் வெளியில் வந்து மறுபடியும் தக்ஷனிடம் சென்று தைர்யத்துடன் (24) அவனிடம் தான் செய்யப்போகும் யாகத்தை அறிவித்து அவனிடம் அனுமதி பெற்று மஹாமேரு மலைக்குச் சென்று அங்குள்ள மங்களமான மனோவதி என்ற சிகரத்திற்கு வந்து (25) அங்கு மிகப் பரிசுத்தராக இருந்து கொண்டு யாகம் செய்ய ஆரம்பித்தார். அப்பொழுது விஷ்ணு முதலிய எல்லா தேவர்களும் மிக பலசாலிகளான ப்ரும்ம புத்ரர்களும் (26) சேர்ந்து சிறந்த கைலாஸ மலைக்குச் சீக்கிரம் வந்தார்கள். உலகங்களுக்கெல்லாம் ப்ரபுவான ப்ரும்மாவும் புறப்பட்டு அவர்களுக்கு எதிர்கொண்டு சென்று (27) உபசார வார்த்தைகள் சொல்லி ஆஸனங்களை ஏற்படுத்தினார். அப்பொழுது அதுபோலவே முன்பே அங்கு வந்த தக்ஷப்ரஜாபதியை ப்ரும்மாவானவர் (28) வெளியில் வந்து மிகுந்த உபசாரங்களைச் செய்து ஓர் சிறந்த அழகிய ஆஸனத்தைக் கொடுத்து அவன் உத்திரவின்பேரில் தானும் உட்கார்ந்தார் (29) நந்திகேச்வரரும் ஸ்ரீ பரமசிவனுடைய உத்திரவால் அப்பொழுது அங்கு வந்தார். ப்ரும்மாவும் உடன் எழுந்து மஹாத்மாவாகிய நந்திகேச்வரருக்கு எதிர்கொண்டு சென்று (30) அவரைப் பல உபசாரங்களோடு பூஜித்து

समागतास्तमानीय शतकोटिमिता गणाः । आसनानि वराण्येषां परिकल्प्य स्वयंविधिः ॥ ३२
विवेश स महारम्भो यागंकर्तुं द्विजोत्तमाः । तदा दक्षस्तु तं दृष्ट्वा शैलादिं गणनायकैः ॥ ३३
विष्ण्वादि देवास्सर्वेऽपि तिष्ठन्ति परितोऽस्यहि । पद्मा सरस्वतीमुख्या देवानां पत्नयस्तथा ॥ ३४
विलक्षणोऽयं सर्वेषां वरासनगतो बत । द्वाः स्थोऽयं कस्यचित् क्रूरो गर्वाविष्टो महाखलः ॥ ३५
कैलासे वर्तते नित्यं रुद्रस्य क्रूरचेतसः । कोवैनमानयामास इति कोपाकुलान्तरः ॥ ३६
ब्रह्माणं वीक्ष्य वाहायं ज्ञात्वा सर्वं दुरात्मवान् । आनीतो भवता नूनं रुद्रस्य द्वारपालकः ॥ ३७
आसनञ्चास्य सुमहद्दत्तवानसि विश्वसृट् । पितेति त्वामहं ब्रह्मन् मुक्तवानस्मि सत्यतः ॥ ३८
अन्यश्चेत्तस्य शीघ्रेण शिरच्छेदं करोम्यहम् । तस्माद्रुद्रस्य यज्ञेऽस्मिन्नदातव्यं हविर्वरम् ॥ ३९
प्रीणनीयास्सुरास्सर्वे विष्णुपूर्वा स्त्वया मखे । यत्र कुत्रापि महिमा रुद्रस्य श्रूयते श्रुतौ ॥ ४०

ஸமாகதாஸ்தமாநீய சதகோடி மிதா கணா: ।
ஆஸநாநி வராண்யேஷாம் பரிகல்ப்ய ஸ்வயம் விதி: ॥ 32
விவேச ஸ மஹாரம்போ யாகம் கர்தும் த்விஜோத்தமா: ।
ததா தக்ஷஸ்து தம் த்ருஷ்ட்வா சைலாதிம் கணநாயகை: ॥ 33
விஷ்ண்வாதி தேவாஸ் ஸர்வேऽபி திஷ்டந்தி பரிதோஸ்யஹி ।
பத்மா ஸரஸ்வதீ முக்யா தேவாநாம் பத்நயஸ்ததா ॥ 34
விலக்ஷணோऽயம் ஸர்வேஷாம் வராஸநகதோ பத ।
த்வா:ஸ்தோऽயம் கஸ்யசித் க்ரூரோ கர்வாவிஷ்டோ மஹாகல: 35
கைலாஸே வர்த்ததே நித்யம் ருத்ரஸ்ய க்ரூரசேதஸ: ।
கோவைந மாநயாமாஸ இதி கோபாகுலாந்தர: ॥ 36
ப்ரும்மாணம் வீக்ஷ்யசாஹாயம் ஞாத்வா ஸர்வம் துராத்மவான் ।
ஆநீதோ பவதா நூநம் ருத்ரஸ்ய த்வாரபாலக: ॥ 37
ஆஸநஞ்சாஸ்ய ஸுமஹத் தத்தவாநஸி விச்வஸ்ருட் ।
பிதேதி த்வாமஹம் ப்ரும்மன் முக்தவாநஸ்மி ஸத்யத: ॥ 38
அன்யச்சேத் தஸ்ய சீக்ரேண சிரச்சேதம் கரோம்யஹம் ।
தஸ்மாத் ருத்ரஸ்ய யக்ஞேஸ்மின் ந தாதவ்யம் ஹவிர்வரம் ॥ 39
ப்ரீணநீயாஸ் ஸுராஸ்ஸர்வே விஷ்ணுபூர்வாஸ்த்வயா மகே ।
யத்ர குத்ராபி மஹிமா ருத்ரஸ்ய ச்ரூயதே ச்ருதௌ ॥ 40

மிகுந்த சந்தோஷத்தோடு நமஸ்கரித்து, நடுவில் மிகச் சிறந்ததும், மேன்மை பொருந்தியதுமான சிம்மாஸனத்தில் அவரை அமரச் செய்து (31) அவருடன் கூட வந்த நூறு கோடி பூதகணங்களுக்கும் சிறந்த ஆஸனங்களை அளித்து ப்ரும்மாவானவர் தானும் (32) ஓ முனிவர்களே! மிகுந்த முயற்சியுள்ள அந்த ப்ரும்மாவானவர் யாகம் செய்வதற்காக யாகசாலைக்குள் ப்ரவேசித்தார். அப்பொழுது தக்ஷனோவெனில், கணாதிபர்களால் சூழப்பட்ட நந்தியைப் பார்த்து (33) விஷ்ணு முதலிய எல்லாத் தேவர்களும் லக்ஷ்மீ, ஸரஸ்வதீ முதலிய எல்லா தேவபத்னிகளும் இவனைச் சுற்றிலும் நின்று வருகிறார்கள் (34) மிக அவலக்ஷணமுள்ள இவன் எல்லோருக்கும் மேலாகச் சிறந்த ஆஸனத்தில் அமர்ந்திருப்பது மிகக் கஷ்டம். கொடியவனும், மிகுந்த கர்வம் கொண்டவனும், மகா துஷ்டனுமாகிய இவன் யாரோ ஒரு அற்பனுடைய வாசற்காப்பவன் (35) கொடிய மனமுள்ள ருத்ரனுடைய கைலாஸ மலையில் எப்பொழுதும் இருப்பவன். இவனை யார் இங்கு அழைத்தார்? என்று கோபத்தினால் வியாகுலமான மனமுள்ளவனாகி (36) ப்ரும்மாவைப் பார்த்துக் கூறினான். நீர் எல்லாவற்றையும் அறிந்திருந்தும் ருத்ரனுடைய வாசற்காப்போனான இந்த துராத்மாவை அழைத்து வந்திருக்கிறீர். இது நிச்சயம் (37) எல்லா உலகங்களையும் சிருஷ்டி செய்கின்ற நீர் இப்படிப்பட்டவனுக்கு உயர்ந்த ஆஸனத்தைக் கொடுத்திருக்கிறீர். ஸத்யமாய் நான் உம்மை தகப்பனென்றதால்தான் விட்டேன் (38) மற்றொருவனாகில் அவனுடைய தலையைச் சீக்கிரம் வெட்டிவிடுவேன். ஆகையால் இந்த யாகத்தில் ருத்ரனுக்குச் சிறந்த ஹவிஸ்ஸை கொடுக்கக் கூடாது (39) நீர் இந்த யாகத்தில் விஷ்ணு முதலிய எல்லா தேவர்களை மட்டும் ஹவிர்பாகத்தினால் ஸந்தோஷமடையச் செய்யும். வேதத்தில் எங்கெல்லாம் அந்த ருத்ரனுடைய மகிமையானது புகழப்படு

अप्रमाणं हि सा सर्वा त्यक्ता त्यज मदाज्ञया । रुद्रस्स्वभावात्क्रूरात्मा तामसोऽस्त्यघरोऽनिशम् ॥ ४१
तस्यास्य द्वारदेशस्थ स्तादृशः क्रूरचेतनः । इत्यादि वचनं दक्षे जल्पति ब्राह्मणोत्तमाः ॥ ४२
श्रुत्वैतदखिलं नन्दी श्रवसोः कार्यो युगम् । कृत्वा शिवशिवेत्युक्त्वा कोपाकुलितचेतनः ॥ ४३
ध्यात्वा शिवं महादेवं दक्षमेनं समीक्ष्यच । रे रे दक्ष महापापिन् शिवस्य परमात्मनः ॥ ४४
दूषणं क्रियते हन्त त्वयात्रासन्नमृत्युना । जिह्वाग्रखण्डनं तद्वत्तिर्यगास्यस्य भेदनम् ॥ ४५
शंभो र्दूषणकर्तॄणां सकृदेव वदन्ति हि । मुक्तवानस्मि पापिष्ठं शिवेच्छा कीदृशीत्यहम् ॥ ४६
त्वां विनिन्दकमीशस्य महादेवस्य शूलिनः । अत एव महापापिन् जीवसित्व ममुं क्षणम् ॥ ४७
इतऊर्ध्वं त्वया मूर्खं यत्किञ्चिज्जल्प्यते यदि । छिन्नं विद्धि शिरश्शीघ्र मिहैवासिन्नखायुधैः ॥ ४८
हविर्नास्तीति देवस्य यज्ञेचैवत्वमुक्तवान् । शंभो र्यज्ञेश्वरस्यात्र वारयित्वा प्रजापतिम् ॥ ४९

அப்ரமாணம் ஹி ஸா ஸர்வா த்யக்தா த்யஜ மதாக்ஞயா ।
ருத்ரஸ் ஸ்வபாவாத் க்ரூராத்மா தாமஸோऽஸ்தி தரோऽநிசம் ॥ 41
தஸ்யாஸ்ய த்வார தேசஸ்தஸ்தாத்ருச: க்ரூரசேதன: ।
இத்யாதி வசனம் தக்ஷே ஜல்பதி ப்ராம்மணோத்தமா: ॥ 42
ச்ருத்வைதத்ஸகிலம் நந்தீ ச்ரவஸோ: கரயோர்யுகம் ।
க்ருத்வா சிவசிவேத்யுக்த்வா கோபாகுலித சேதன: ॥ 43
த்யாத்வா சிவம் மஹாதேவம் தக்ஷமேனம் ஸமீக்ஷ்யச ।
ரே ரே தக்ஷ மஹாபாபின் சிவஸ்ய பரமாத்மன: ॥ 44
தூஷணம் க்ரியதே ஹந்த த்வயா த்ராஸன்னமிருத்யுனா ।
ஜிஹ்வாக்ர கண்டநம் தத்வத் திர்யகாஸ்யஸ்ய பேதனம் ॥ 45
சம்போர் தூஷண கர்த்ருணாம் ஸக்ருதேவ வதந்திஹி ।
முக்தவாநஸ்மி பாபிஷ்டம் சிவேச்சா கீத்ருசீத்யஹம் ॥ 46
த்வாம் விநிந்தக ஈசஸ்ய மஹாதேவஸ்ய சூலின: ।
அத ஏவ மஹாபாபின் ஜீவஸித்வ மமும் க்ஷணம் ॥ 47
இத ஊர்த்வம் த்வயா மூர்க்க யத் கிஞ்சித் ஜல்ப்யதே யதி ।
சின்னம் வித்தி சிரச்சீக்ரமிஹைவாஸ்மிந் நகாயுதை: ॥ 48
ஹவிர் நாஸ்தீதி தேவஸ்ய யக்ஞே சைவ த்வமுக்தவான் ।
சம்போர் யக்ஞேச்வரஸ்யாத்ர வாரயித்வா ப்ரஜாபதிம் ॥ 49

கின்றதோ (40) அந்த இடமெல்லாம் ப்ரமாணமில்லாததால் விலக்கப்பட்டதாகையால் அவற்றை என் கட்டளையின்படி விட்டுவிடும். அந்த ருத்ரன் ஸ்வபாவமாக க்ரூரமான மனமுடையவன், தமோகுணமுள்ளவன், எப்பொழுதும் எலும்புகளைத் தரிப்பவன் (41) அப்படிப்பட்ட ருத்ரனுடைய வாயிற்காப்போனை கொடிய மனமுடைய இவனும் அப்படிப்பட்டவனே. இது முதலான பல நிந்தாவார்த்தைகளை தக்ஷன் பிதற்றும்பொழுது ஓ ப்ராம்மணோத்தமர்களே! (42) இவையெல்லாம் நந்திகேச்வரர் கேட்டு இரண்டு காதுகளிலும் கைகளை வைத்துப் பொற்றிக்கொண்டு சிவ சிவ எனக் கூறி கோபத்தினால் நடுங்கிய மனமுடையவனாகி (43) மஹாதேவனாகிய ஸ்ரீ பரமசிவனைத் தியானம் செய்துகொண்டு தக்ஷனைப் பார்த்து அடா! அடா!! மஹாபாவியான ஓ தக்ஷா! நெருங்கிய மரண காலத்தை உடைய உன்னால் பரமாத்மாவாகிய சிவனுடைய நிந்தையானது செய்யப்பட்டதல்லவோ? ஓகோ இது கஷ்டம். சர்வேச்வரனான சம்புவை ஒரு தடவை நிந்திப்பவர்களைக்கூட நுனி நாக்கை அறுத்து முகத்தையும் குறுக்காய்த் திருப்பி வைக்கவேண்டுமென்று சொல்லப்படுகிறதன்றோ? மகாதேவனும், சூலத்தைத் தரித்தவனுமான பரமசிவனை நிந்திக்கின்ற பாவியான உன்னை நான் சிவனுடைய விருப்பம் எவ்வாறு இருக்குமோவென எண்ணி உயிருடன் விட்டேன். அதனால் தான் ஓ மஹா பாபியே! நீ இந்த க்ஷணத்தில் உயிருடன் இருக்கிறாய் (44-47) ஓ மூடா! இதற்குமேல் நீ சிறிதாயினும் பிதற்றுவாயேயாகில் இந்த யாகசாலையிலேயே உன் தலையானது எனது நகங்களாகிற ஆயுதங்களால் சீக்கிரம் கிள்ளப்பட்டதென்றே அறிவாய் (48) யக்ஞங்களுக்கு அதிபரான ஸ்ரீ மஹாதேவருக்கு யாகத்தில் ஹவிர்பாகமில்லையென்று நீ ப்ரும்மாவைத்

अदत्वा ये महामोहाद्धविः प्रथममध्वरे । तेषां शिरांसि शीघ्रेण छिन्नानि स्युर्ममाज्ञया ॥ ५०
गच्छन्तु संपदो सान्त तव सर्वाश्शिवेच्छया । शिवनिन्दाकरं दक्ष शिरस्ते पततु क्षितौ ॥ ५१
समुच्छिन्नमिदं भूयो भवत्वाजं विगर्हितम् । तिष्ठन्ति ये दुरात्मानो निकटे ते दुरात्मनः ॥ ५२
तदीयशिरसांछेदो भवत्वाशु तवाध्वरे (पराकरे) । पीड्यन्त्वेते खलास्सर्वे शूरपद्मेन सन्ततम् । ५३
शपित्वैवं क्षणादेष नन्दी शंकरवल्लभः । उत्थाय सकलै र्भूतगणैः कैलासमुत्तमम् ॥ ५४
आगत्य दृष्ट्वा देवेशं सोमं सोमार्धशेखरम् । प्रणिपत्यानुपूर्व्येण वृत्तान्तं देवसन्निधौ ॥ ५५
उक्त्वा प्रणम्य भूयोऽपि महादेवं महाबलम् । आज्ञया शंकरस्यायं स्वद्वारं प्राप भूसुराः ॥ ५६

इति श्री स्कान्दे महापुराणे शंकरसंहितायां शिवरहस्यखण्डे
दक्षकाण्डे नवमोऽध्यायः

அதத்வா யே மஹாமோஹாத் ஹவிஃ ப்ரதம மத்வரே ।
தேஷாம் சிராம்ஸி சீக்ரேண சின்னானிஸ்யுர் மதாக்ஞயா ॥ 50
கச்சந்து ஸம்பதோ ப்ராந்த தவ ஸர்வாச்சிவேச்சயா ।
சிவநிந்தாகரம் தக்ஷ சிரஸ்தே பதது க்ஷிதௌ ॥ 51
ஸமுச்சின்ன மிதம் பூயோ பவத்வாஜம் விகர்ஹிதம் ।
திஷ்டந்தி யே துராத்மாநோ நிகடே தே துராத்மந: ॥ 52
ததீய சிரஸாஞ்சேதோ பவத்வாக தவாத்வரே (பராகரே) ।
பீட்யந்த்வேதே கலாஸ்ஸர்வே சூரபத்மேன ஸந்ததம் ॥ 53
சபித்வைவம் க்ஷணாதேஷ நந்தி சங்கர வல்லப: ।
உத்தாய ஸகலைர் பூதகணை: கைலாஸமுத்தமம் ॥ 54
ஆகத்ய த்ருஷ்ட்வா தேவேசம் ஸோமம் ஸோமார்த்தசேகரம் ।
ப்ரணிபத்யாநு பூர்வ்யேண வ்ருத்தாந்தம் தேவஸந்நிதௌ ॥ 55
உக்த்வா ப்ரணம்ய பூயோऽபி மஹாதேவம் மஹாபலம் ।
ஆக்ஞயா சங்கரஸ்யாயம் ஸ்வத்வாரம் ப்ராப பூஸுரா: ॥ 56

இதி ஸ்ரீஸ்காந்தே மஹாபுராணே சங்கரஸம்ஹிதாயாம் சிவரஹஸ்யகண்டே
தக்ஷகாண்டே நவமோऽத்யாய: ॥

தடை செய்கின்றார் (49) எவர்கள் மோஹத்தினால் யாகத்தில் முதல் ஹவிஸ்ஸை பரமேச்வரனுக்குக் கொடுக்காமல் யாகத்தைச் செய்கின்றார்களோ அவர்களுடைய தலைகள் எனது ஆக்ஞையால் சீக்கிரம் வெட்டப்படும் (50) ஓ பித்தனான தக்ஷனே! உனது எல்லா ஐச்வர்யங்களும் சிவனுடைய விருப்பத்தால் நாசமாகக் கடவன. சிவனை நிந்திக்கும் உனது தலையும் பூமியில் விழக் கடவது (51) மீண்டும் அறுக்கப்பட்ட அந்தத் தலையும் மட்டமான ஆட்டின் தலையாக ஆகட்டும். கெட்ட எண்ணமுள்ள உனது சமீபத்தில் எந்த துஷ்டர்கள் நிற்கின்றார்களோ (52) அவர்களுடைய தலைகளும் உனது யாகத்தில் சீக்கிரமே வெட்டப்படட்டும். மேலும் அந்த எல்லா துஷ்டர்களும் சூரபத்மனால் எப்பொழுதும் துன்பம் அடையட்டும் (53) இவ்விதம் சபித்துவிட்டு நொடியில் பரமேச்வரனை நாயகனாகக் கொண்ட அந்த நந்தி பகவான் எழுந்து எல்லாப் பூதகணங்களுடனும் சிறந்த கைலாஸ மலையை (54) அடைந்து, சந்திரகலையைத் தலையில் கொண்டவரும், தேவர்களுக்கு ஈச்வரனுமான ஸ்ரீ பரமசிவனை தர்சித்து நமஸ்கரித்து பரமசிவனுடைய ஸன்னிதியில் அந்த விஷயங்களை வரிசை க்ரமமாகத் (55) தெரிவித்து மிக்க பலம் வாய்ந்த அம்மஹாதேவனை மறுபடியும் நமஸ்கரித்தார். ஓ ப்ராம்மணர்களே! ஸ்ரீ சங்கரனுடைய ஆக்ஞையால் அந்த நந்திபகவான் தன் வாயிலை அடைந்தார் (56).

ஒன்பதாவது அத்யாயம் முற்றிற்று.

॥ अथ दशमोऽध्यायः ॥

दक्षयागारम्भे दधीच्यागमनम् ॥

ततो विष्णुमुखा देवाः शैलादौ निर्गते कुधा । भीता भृशं तयो र्नन्दि दक्षयोर्ब्राह्मणोत्तमाः ॥ १
तस्थु दुःखपरा नम्रवक्त्रा सर्वे गतप्रभाः । यज्ञमध्ये विधातापि यागं दक्षाद्भयं गतः ॥ २
यागादपि वरं तूष्णीं भावः कलहवर्जनात् । इति निश्चित्य मनसा तस्थे केवलमेव सः ॥ ३
ततो दक्षस्समुत्थाय कोपात् स्वपुरमाययौ । यथायथं देवताश्च स्वपदानि गतास्तदा ॥ ४
नन्दिशापमनुस्मृत्य भीत्या मनसि भूसुराः । तदाप्रभृति कुत्रापि यागो नास्ति जगत्त्रयो ॥ ५
अनेककालपर्यन्तं भीत्याभ्यन्तं तयोर्द्विजाः । स्वयमेव तदा दक्षो यागं कर्तुमनाः पुनः ॥ ६
सर्वान् देवान् समुद्वीक्ष्य प्रोवाच वचनंचतान् । नन्दिशापवशात्सर्वे देवा यूयं भयं गताः ॥ ७
विमुखाः स्थ मखे तस्मादहं यागं महाधनम् । करिष्यामि ततः पश्चात्परित्यक्तभयास्सुराः ॥ ८

॥ அத தஶமோऽத்யாய: ॥

தக்ஷன் யாகம் ஆரம்பிக்கும்கால் தத்சி வருதல்

ததோ விஷ்ணுமுகா தேவா: ஶைலாதௌ நிர்கதே க்ருதா ।
தோ ப்ருசம் தயோர் நந்திதக்ஷயோர் ப்ராம்மணோத்தமா: ॥ 1
தஸ்துர் துக்கபரா நம்ரவக்த்ராஸ் ஸர்வே கதப்ரபா: ।
யக்ஞமத்யே விதாதாபி யாகம் தக்ஷாத் பயம் கத: ॥ 2
யாகாதபி வரம் தூஷ்ணீம் பாவ: கலஹவர்ஜனாத் ।
இதி நிச்சித்ய மனஸா தஸ்தே கேவலமேவ ஸ: ॥ 3
ததோ தக்ஷஸ்ஸமுத்தாய கோபாத் ஸ்வபுரமாப்தவான் ।
யதாயதம் தேவதாச்ச ஸ்வபதாநி கதாஸ்ததா ॥ 4
நந்திசாப மனுஸ்ம்ருத்ய பீத்யா மனஸி பூஸுரா: ।
ததா ப்ரப்ருதி குத்ராபி யாகோ நாஸ்தி ஜகத் ஸ்வஹோ ॥ 5
அநேக கால பர்யந்தம் பீத்யாத்யந்தம் தயோர் த்விஜா: ।
ஸ்வயமேவ ததா தக்ஷோ யாகம் கர்தும்மன: புந: ॥ 6
ஸர்வான் தேவான் ஸமுத்வீக்ஷ்ய ப்ரோவாச வசனம் ச தான் ।
நந்திசாப வசாத் ஸர்வே தேவா யூயம்பயம் கதா: ॥ 7
விமுகா: ஸ்த மகே தஸ்மாதஹம் யாகம் மஹாதனம் ।
கரிஷ்யாமி தத: பச்சாத் பரித்யக்தபயாஸ்ஸுரா: ॥ 8

பத்தாவது அத்தியாயம்

பிறகு விஷ்ணு முதலிய தேவர்கள் நந்திகேச்வரர் கோபத்துடன் வெளியே சென்றதும், நந்தி, தக்ஷன் இவ்விருவர்களிடமிருந்தும் மிகவும் பயமடைந்தவர்களாய் (1) எல்லோரும் துக்கமாகிய பாரத்தால் தலை வணங்கினவர்களாகவும், காந்தியற்றவர்களாகவும் ஆனார்கள். யாக மத்தியில் ப்ரம்மாவும் தக்ஷனிடமிருந்து பயங்கொண்டவராகி இந்த யாகத்தை முடிப்பதைக் காட்டிலும் கலஹமில்லாமல் சும்மா இருப்பது நல்லதே என்று மனதில் நிச்சயித்துக்கொண்டு இந்த யாகத்தைப் பாதியில் நிறுத்திவிட்டுத் தனியாய் இருந்துவிட்டார் (2–3) பிறகு தக்ஷனும் கோபத்தோடு எழுந்து தன் நகரத்திற்குச் சென்றுவிட்டான். ஓ முனிவர்களே! அப்பொழுது தேவர்கள் நந்திகேச்வரனுடைய சாபத்தை நினைத்து நினைத்து மனதில் பயங்கொண்டவர்களாகி அப்படி அப்படியே தன் தன் இருப்பிடங்களுக்குச் சென்றார்கள். அது முதற்கொண்டு வெகு காலம் வரை உலகில் அவ்விருவர்களிடத்திலும் மிகுந்த பயத்தால் எங்கும் யாகமே நடக்கவில்லை. ஓ முனிவர்களே! கஷ்டம் (4–5) பிறகு அப்பொழுது தக்ஷன் தானாகவே ஒரு யாகம் செய்ய எண்ணம் கொண்டவனாய் (6) எல்லாத் தேவர்களையும் பார்த்து ஓர் வார்த்தை கூறினான். ஓ தேவர்களே! நீங்கள் யாவரும் நந்திகேச்வரனுடைய சாபத்தால் மிகவும் பயமடைந்தவர்களாகி (7) யாகம் செய்வதில் பராமுகமாய் இருக்கிறீர்கள். ஆகையால் நான் முதலில் பெரும் பொருளால் செய்யக் கூடிய ஓர் யாகத்தைச் செய்யப் போகிறேன். ஓ தேவர்களே! பிறகு நீங்கள் பயமற்றவர்களாய் (8) ருத்ரனை விலக்கிவிட்டுத் தங்கள் பலத்தை அறிந்து பெரிய யாகங்களைச் செய்யுங்கள் எனக் கூறிவிட்டு

कुरुतात्मबलं ज्ञात्वा मुक्त्वा रुद्रं महाक्रतुम् । इत्युक्त्वा विश्वकर्माणं वीक्ष्य प्राह वचस्तदा ॥ ९
विशाला यागशाला मे कर्तव्येतिद्रुतं त्वया । तस्य तद्वचनं श्रुत्वा वर्धकिर्नाकिनां क्षणात् ॥ १०
गङ्गातीरे कनखलस्थाने रम्ये सुपावने । सहस्रयोजनायामप्राकारसुमनोहराम् ॥ ११
गोपुराट्टालवलभीहर्म्यादिभिरलङ्कृताम् । वापीकूपतटाकाद्यै र्वृक्षारामैश्च पेशलाम् ॥ १२
अन्नव्यञ्जनशालाभि र्विशालाभिरितस्ततः । दधिक्षीरघृतानांच शालाभिः परितो वृताम् ॥ १३
कस्तूरी चन्दनानाञ्च मालानामपि मण्डिताम् । सुवर्णरत्नरूप्याणां वस्त्राणामपि भूरिशः ॥ १४
यागोपकरणानाञ्च शालाभिः परितो वृताम् । शतयोजनविस्तीर्णकुण्डमण्डलवेदिकाम् ॥ १५
बह्वीभिश्चित्रशालाभिरभितः परिवेष्टिताम् । आसनानि च भूरीणि देवतानामितस्ततः ॥ १६
एवमादिभि रन्यैश्च मण्डितामतिसुन्दराम् । निर्माय यागशालां तां दक्षायास्मै न्यवेदयत् ॥ १७
विलोक्य तामिमां शालां दक्षो लोकेषु विश्रुतः । सन्तोषेणच संयुक्तो महता ब्राह्मणोत्तमाः ॥ १८

குருதாத்மபலம் ஞாத்வா முக்த்வா ருத்ரம் மஹாக்ரதும் ।
இத்யுக்த்வா விச்வகர்மாணம் வீக்ஷ்ய ப்ராஹ வசஸ்ததா ॥ 9
விசாலா யாகசாலா மே கர்தவ்யேதி த்ருதம் த்வயா ।
தஸ்ய தத்வசனம் ச்ருத்வா வர்தகிர் நாகிநாம் க்ஷணாத் ॥ 10
கங்காதீரே கநகலஸ்தானே ரம்யே ஸுபாவநே ।
ஸஹஸ்ர யோஜநாயாம ப்ராகார ஸுமநோஹராம் ॥ 11
கோபுராட்டால வளபீ ஹர்ம்யாதிபி ரலங்க்ருதாம் ।
வாபீ கூப தடாகாத்யைர் வ்ருக்ஷாராமைச்ச பேசலாம் ॥ 12
அன்ன வ்யஞ்ஜன சாலாபிர் விசாலாபி ரிதஸ்தத: ।
ததிக்ஷீர க்ருதாநாஞ்ச சாலாபி: பரிதோ வ்ருதாம் ॥ 13
கஸ்தூரீ சந்தநாநாஞ்ச மாலாநாமபி மண்டிதாம் ।
ஸுவர்ண ரத்ன ரூப்யாணாம் வஸ்த்ராணாமபி பூரிச: ॥ 14
யாகோப கரணாநாஞ்ச சாலாபி: பரிதோவ்ருதாம் ।
சதயோஜன விஸ்தீர்ண குண்டமண்டல வேதிகாம் ॥ 15
பஹ்வீபிச் சித்ரசாலாபி ரபித: பரிவேஷ்டிதாம் ।
ஆஸநாநி ச பூரீணி தேவதாநா மிதஸ்தத: ॥ 16
ஏவமாதிபி ரந்யைச்ச மண்டிதா மதிஸுந்தராம் ।
நிர்மாய யாகசாலாம் தாம் தக்ஷாயாஸ்மை ந்யவேதயத் ॥ 17
விலோக்ய தாமிமாம் சாலாம் தக்ஷோ லோகேஷு விச்ருத: ।
ஸந்தோஷேண ச ஸம்யுக்தோ மஹதா ப்ராம்மணோத்தமா: ॥ 18

அப்பொழுது விச்வகர்மாவைப் பார்த்துக் கூறினான் (9) நீ எனக்காக சீக்கிரம் விசாலமான ஓர் யாக சாலையை அமைக்கவேண்டும் என்ற தக்ஷனுடைய வார்த்தையைக் கேட்ட தேவதச்சன் ஓர் க்ஷணத்தில் (10) கங்கைக் கரையிலுள்ள கனகலம் என்ற மிகப் பரிசுத்தமும் அழகியதுமான ஓரிடத்தில் ஆயிரம் யோஜனை விஸ்தாரமுள்ள ப்ராகாரங்களால் மிக அழகானதும் (11) கோபுரங்கள் அட்டால மண்டபங்கள் கொடுங்கைகள், உப்பரிகைகள் முதலியவைகளால் அலங்கரிக்கப்பட்டதும், ஓடைகள், கிணறுகள், குளங்கள் முதலியவைகளாலும், மரத் தோட்டங்களாலும் அழகுள்ளதும் (12) அன்னசாலைகள், காய்கறி முதலிய பதார்த்தங்களைப் பக்குவம் செய்யும் சாலைகள், தயிர், பால், நெய் முதலியவைகளின் சாலைகள் இவைகளால் சுற்றிலும் இங்குமங்கும் விசாலமாய் சூழப்பட்டதும் (13) கஸ்தூரி, சந்தனம், மாலைகள், தங்கம், ரத்னங்கள், நாணயங்கள், வஸ்திரங்கள் முதலியவைகள் நிரம்பிய பல சாலைகளால் அலங்கரிக்கப்பட்டதும் (14) யாகத்திற்கு வேண்டிய ஸாமான்களோடு கூடிய பல சாலைகளால் சுற்றிலும் அலங்கரிக்கப்பட்டதும், நூறு யோஜனை விஸ்தீர்ணமுள்ள பல ஹோம குண்டங்கள், மேடைகள், வேதிகைகள் இவைகளோடு கூடியதும் (15) அனேகம் சித்ரசாலைகளால் நான்கு பக்கங்களிலும் சூழப்பட்டதும், தேவர்களுக்காகப் போடப்பட்டிருக்கும் பல ஆஸனங்களோடு கூடியதும் (16) இன்னும் இதுபோன்ற பலவற்றால் மிக அழகாய் அலங்கரிக்கப்பெற்றதுமான யாகசாலையை அமைத்து அதை தக்ஷனுக்கு அறிவித்தான் (17) ஓ முனிவர்களே! உலகில் கியாதி பெற்ற அந்த யாகசாலையைப் பார்த்து மிகுந்த சந்தோ

स्रुक्स्रुवादीनि सर्वाणि यागोपकरणानिच । कल्पवृक्षं कामधेनुं निधिश्चिन्तामणिं तथा ॥ १९
आगतानां दापयितुं वस्त्राण्याभरणान्ययम् । मण्टपे मण्टपे सर्वान् स्थापयामास भूसुराः ॥ २०
त्रिंशत्सहस्रमन्नस्य दातारो ब्राह्मणाः परे । व्यञ्जनप्रमुखानाञ्च षष्टिसाहस्रसंख्यया ॥ २१
कल्पितास्तेन दक्षेण ब्राह्मणानामधीश्वराः । ततस्तुचोदिता दूता ब्रह्मविष्णुमुखान् सुरान् ॥ २२
बोधयित्वाऽगताश्शीघ्रं दक्षस्य निकटं द्विजाः । अथ विष्णुविधीन्द्राद्या देवाश्च मुनिसत्तमाः ॥ २३
सूर्याचन्द्रमसौ दैत्या स्सर्वेऽपि स्वबलैस्सह । सपत्नीभिश्च सन्तुष्टा वीक्षितुं सहसागताः ॥ २४
तेषांतु पुरतो गत्वा ब्रह्मविष्णू उभावपि । तोषयित्वा यथान्यायं स्थापयित्वा वरासने ॥ २५
नानोपचारैरमरानृषीनपि वरानयम् । आसनेषु तदा तेषु व्यवस्थाप्य स्वयं पुनः ॥ २६
देवतानां च सर्वेषां मध्ये तस्थे तदा द्विजाः । प्रसिद्धा बहवो विप्रास्तदानीं तेऽपि चाययुः । २७
लक्ष्मी सरस्वतीन्द्राण्यो याश्चान्या देवपत्नयः । ऋषीणां पत्नयश्चापि सर्वास्तास्सुमनोहराः ॥ २८

ஸ்ருக் ஸ்ருவாதீநி ஸர்வாணி யாகோப கரணாநி ச ।
கல்பவ்ருக்ஷம் காமதேனும் நிதிஞ்சிந்தாமணிம் ததா ॥ 19
ஆகதாநாம் தாபயிதும் வஸ்த்ராண் யாபரணாந்யயம் ।
மண்டபே மண்டபே ஸர்வான் ஸ்தாபயாமாஸ பூஸுராः ॥ 20
த்ரும்சத் ஸஹஸ்ர மன்னஸ்ய தாதாரோ ப்ராம்மணாः பரே ।
வ்யஞ்ஜன ப்ரமுகாணாஞ்ச ஷஷ்டி ஸாஹஸ்ர ஸங்க்யயா ॥ 21
கல்பிதா ஸ்தேந தக்ஷேண ப்ராம்மணா நாமதீச்வராः ।
ததஸ்து சோதிதா தூதா ப்ரும்மவிஷ்ணுமுகான் ஸுரான் ॥ 22
போதயித்வாऽऽகதாச்சீக்ரம் தக்ஷஸ்ய நிகடம் த்விஜாः ।
அத விஷ்ணு விதீந்த்ராத்யா தேவாஸ்ச முனிஸத்தமாः ॥ 23
ஸூர்யா சந்த்ரமஸௌ தைத்யாஸ் ஸர்வேऽபி ஸ்வபலைஸ்ஸஹ ।
ஸ பத்னீபிச்ச ஸந்துஷ்டா வீக்ஷிதும் ஸஹஸாऽऽகதாः ॥ 24
தேஷாம் து புரதோ கத்வா ப்ரும்மவிஷ்ணு உபாவபி ।
தோஷயித்வா யதாந்யாயம் ஸ்தாபயித்வா வராஸநே ॥ 25
நாநோபசாரை ரமராந் ருஷீநபி வராநயம் ।
ஆஸநேஷு ததாதேஷு வ்யவஸ்தாப்ய ஸ்வயம் புநः ॥ 26
தேவதாநாஞ்ச ஸர்வேஷாம் மத்யே தஸ்தே ததா த்விஜாः ।
ப்ரஸித்தா பஹவோ விப்ரா ஸ்ததாநீம் தேऽபி சாययுः ॥ 27
லக்ஷ்மீ ஸரஸ்வதீந்த்ராண்யோ யாஸ்சான்யா தேவபத்நயः ।
ருஷீணாம் பத்னயஸ்சாபி ஸர்வாஸ்தாஸ் ஸுமனோஹராः ॥ 28

ஷம் கொண்டவனும் (18) ஓ முனிவர்களே! யாகத்திற்கு வேண்டிய ஸ்ருக்கு ஸ்ருவம் முதலிய (அதாவது ஸ்ருக்கு என்பது ஹோமம் செய்வதற்குத் தகுதியான ஆப்பை போன்ற ஓர் மரப் பாத்திரம். ஸ்ருவம் என்பது ஹோமத்திற்குரிய முட்டை ஓர் சிறிய மரப் பாத்திரம்.) எல்லா ஸாதனங்களையும் வந்தவர்களுக்கு வஸ்திரம், ஆபரணம் முதலியவைகளைக் கொடுப்பதற்காகக் கல்பக வ்ருக்ஷம், காமதேனு, சங்கம் நிதிகள், சிந்தாமணி இவைகளை ஒவ்வொரு மண்டபங்களிலும் ஏற்படுத்தினான் (19-20) ஓ முனிவர்களே! அந்த தக்ஷன் அன்னம் பறிமாறுவதற்கு முப்பதினாயிரம் ப்ராம்மணர்களையும், வ்யஞ்ஜனம் (காய்கறி) முதலியவற்றைப் பறிமாறுவதற்காக அறுபதினாயிரம் ப்ராம்மண பரிசாரகர்களையும் ஏற்படுத்தினான். பிறகு தக்ஷனால் அனுப்பப்பட்ட தூதர்கள் ப்ரும்மா, விஷ்ணு முதலிய தேவர்களுக்கு (21-22) அறிவித்து சீக்கிரம் தக்ஷன் ஸமீபம் திரும்பி வந்தார்கள். பிறகு விஷ்ணு, ப்ரும்மா, இந்திரன் முதலிய தேவர்களும், முனிச்ரேஷ்டர்களும் (23) சந்திர சூர்யர்களும் எல்லா அசுரர்களும் இந்த யாகத்தைப் பார்ப்பதற்காக தங்கள் சைன்யங்களோடும், மனைவிகளோடும், மிகுந்த சந்தோஷத்தோடும் அங்கு வேகமாய் வந்தார்கள் (24) அப்பொழுது தக்ஷன் அவர்களை எதிர்கொண்டு சென்று, ப்ரும்மா விஷ்ணு இருவர்களையும் சந்தோஷிக்கச் செய்து அவர்களுக்கு உரிய சிறந்த ஆஸனத்தில் இருக்கச் செய்து (25) பிறகு மற்ற தேவர்களையும், ரிஷி ச்ரேஷ்டர்களையும் பற்பல உபசாரங்களோடு அவர்களை ஆஸனங்களில் இருக்கச் செய்து தானும் (26) எல்லாத் தேவர்களுக்கும் நடுவில் உட்கார்ந்தான். கியாதி பெற்ற அநேகம் ப்ராம்மணர்களும் அப்பொழுது அங்கு வந்தார்கள் (27) லக்ஷ்மீ, ஸரஸ்வதி, இந்திராணி இன்னும் மற்ற

प्रविश्य वेदवल्यास्तु गृहं परमशोभनम् । कृतनानोपचारास्ता स्तस्थुस्तां परितो मुदा ॥ २९
दक्षस्तु प्रेषितान् दूतानागतान्वीक्ष्य संमुखः । कोवाऽत्र नागतो दूता देवद्विजऋषिष्वपि ॥ ३०
वदन्तु निकटेऽस्माकं भवन्तो निर्भया इह । इति तस्य वचश्श्रुत्वा तदा दूता वचोऽभयम् ॥ ३१
ऊचुस्सर्वेऽपि तं वीक्ष्य ब्राह्मणानामधीश्वराः । अगस्त्यस्तपतां श्रेष्ठो नारदोऽत्र प्रभो महान् ॥ ३२
सनकाद्याश्च मुनयो वेदवेदांगपारगाः । दधीच्यत्रिवसिष्ठाश्च पराशरभृगूमपि ॥ ३३
दुर्वासास्तपतां वर्यो दूषयित्वा जगत्प्रभुम् । भवत्कर्तुं भवन्तश्च नाययुस्ते तपोधनाः ॥ ३४
इति तेषां वचः श्रुत्वा दक्षः पापी तदा हसन् । रुद्रभक्ता इमे सर्वे नागतास्तत एवते ॥ ३५
मागच्छन्त्विति तान् सर्वान् धिक्कृत्य च वचोऽब्रवीत् । तदा दधीचिशिष्यैश्च प्रशिष्यैश्च तपोधनाः ॥ ३६
समागतो महात्माऽयं सर्वेश्वरपरो द्विजाः । तं दृष्ट्वा रुद्रभक्तोऽयं न भवत्यत एहि ॥ ३७

ப்ரவிச்ய வேதவல்யாஸ்து க்ருஹம் பரம சோபனம் ।
க்ருத நானோபசாராஸ்தா ஸ்தஸ்துஸ்தாம் பரிதோ முதா ॥ 29

தக்ஷஸ்து ப்ரேஷிதான் தூதாநாகதான் வீக்ஷ்ய ஸம்முக: ।
கோவாத்ர நாகதோ தூதா தேவத்விஜ ரிஷிஷ்வபி ॥ 30

வதந்து நிகடேऽஸ்மாகம் பவந்தோ நிர்பயா இஹ ।
இதி தஸ்ய வசச் ச்ருத்வா ததா தூதா வசோऽபயம் ॥ 31

ஊசுஸ் ஸர்வேऽபி தம் வீக்ஷ்ய ப்ராம்மணாநாமதீச்வரா: ।
அகஸ்த்யஸ்தபதாம் ச்ரேஷ்டோ நாரதோऽத்ர ப்ரபோ மஹான் 32

ஸனகாத்யாஸ்ச முனயோ வேதவேதாங்கபாரகா: ।
ததீச்யத்ரி வஸிஷ்டாச்ச பராசரப்ருகூ அபி ॥ 33

தூர்வாஸா ஸ்தபதாம் வர்யோ தூஷயித்வா ஜகத் ப்ரபும் ।
பவத்க்ரதும் பவந்தஞ்ச நாயயுஸ்தே தபோதனா: ॥ 34

இதி தேஷாம் வசச் ச்ருத்வா தக்ஷ: பாபீ ததாஹஸன் ।
ருத்ரபக்தா இமே ஸர்வே நாகதாஸ்தத ஏவ தே ॥ 35

மாகச்சந்த்விதி தான் ஸர்வான் திக்க்ருத்யச வசோऽப்ரவீத் ।
ததா ததீசிச்சிஷ்யைச்ச ப்ரசிஷ்யைச்ச தபோதனா: ॥ 36

ஸமாகதோ மஹாத்மாऽயம் ஸர்வேச்வரபரோ த்விஜா: ।
தம் த்ருஷ்ட்வா ருத்ர பக்தோऽயம் ந பவத்யத ஏவ ஹி ॥ 37

தேவபத்னிகள் ரிஷிபத்னிகள் யாவரும் மிக அழகுள்ளவர்களாய் அங்கு வந்து (28) வேதவல்லியினுடைய மிக மங்களகரமான மாளிகைக்குச் சென்று பல உபசாரங்கள் செய்யப் பெற்றவர்களாகி ஸந்தோஷத்தோடு அவளைச் சுற்றிலும் இருந்தார்கள் (29) தக்ஷனோவெனில் அங்கு வந்திருந்த தூது சென்ற காவலர்களை நேர்முகமாய் பார்த்து ஓ தூதர்களே! தேவர்கள், ரிஷிகள், ப்ராம்மணர்கள் இவர்களில் யார் இங்கு வரவில்லை (30) என்பதைக் கொஞ்சமேனும் பயப்படாமல் இங்கு நம் முன்பாகக் கூறுங்கள் என்ற தக்ஷனுடைய வார்த்தையைக் கேட்டு ஓ முனிவர்களே! எல்லாத் தூதர்களும் பயமற்றவர்களாகி தக்ஷனைப் பார்த்துக் கூறினார்கள். ஓ ஸ்வாமி! தபஸ்விகளில் சிறந்த அகஸ்தியரும், மஹானாகிய நாரதரும் (31-32) வேத வேதாங்கங்களில் கரை கடந்தவர்களான ஸனகர் முதலிய முனிவர்களும் ததீசி, அத்ரி, வஸிஷ்டர், பராசரர், ப்ருகு (33) தபஸ்விகளில் முதன்மையான துர்வாஸர் இவர்களெல்லாம் உலகிற்கெல்லாம் ப்ரபுவான தங்களையும் தங்கள் யாகத்தையும் தூஷித்து இங்கு வராமலிருந்துவிட்டார்கள் (34) என்ற அவர்களுடைய வார்த்தையைக் கேட்டு பாபியான தக்ஷன் நகைத்துக்கொண்டு இவர்கள் யாவரும் ருத்ர பக்தர்கள். ஆகையால்தான் அவர்கள் இங்கு வரவில்லை (35) அவர்கள் இங்கு வரவே வேண்டாம் என்று எல்லோரையும் திரஸ்காரம் செய்து கூறினான். அப்பொழுது மஹாத்மாவும் ஸர்வேச்வரனிடத்தில் பக்தியுற்றவருமான ததீசி முனிவர் தனது சிஷ்யர்களோடும், சிஷ்யர்களின் சிஷ்யர்களோடும் அங்கு வந்தார். அவரைப் பார்த்து தக்ஷன் இவர் ருத்ரபக்தரல்ல. ஆகையால்தான் (36-37)

मद्भीत्या चागतोनूनमिति निश्चितमानसः । आसनं कल्पयामास शिष्याणामपि भूसुराः ॥ ३८
तदा दधीचिस्तं वीक्ष्य चाह्वानं भवता कृतम् । किमर्थमिति पप्रच्छ स्फुरद्गम्भीरवाग्यम् ॥ ३९

इति श्रीस्कान्दे महापुराणे शंकरसंहितायां शिवरहस्यखण्डे
दक्षकाण्डे दशमोऽध्यायः ॥

॥ अथ एकादशोऽध्यायः ॥

दक्षेण शिवनिन्दनम् ॥

प्रत्युवाच ऋषिं दक्षो वीक्ष्य तं तपतां वरम् । मत्कन्यापाणिसंग्राहं कृत्वा पूर्वं त्रिलोचनः ॥ १
मध्ये कल्याणमुच्छिद्य गत्वातु कुटिलक्रियः । पुनरागत्य चौर्येण गृहीत्वा तामिमामयम् ॥ २
गतवान् क्रूरकर्मात्मा क्रूरदृग्भ्रूनयोद्यमः । तथापि वीक्षितुं तस्य कैलासे तावुभावहम् ॥ ३
गतवानस्मि सहसा तत्पतीहागतिभिः । अनुरोधः कृतोऽस्माकं श्रुततद्वचनैरहो ॥ ४

மத்பீத்யா சாகதோ நூனமிதி நிச்சித மானஸ: ।
ஆஸநம் கல்பயாமாஸ சிஷ்யாணாமபி பூஸுரா: ॥ 38
ததா ததீசிஸ்தம் வீக்ஷ்ய சாஹ்வாநம் பவதா க்ருதம் ।
கிமர்த்தமிதி பப்ரச்ச ஸ்புரத் கம்பிர வாகயம் ॥ 39

இதி ஸ்ரீஸ்காந்தே மஹாபுராணே சங்கரஸம்ஹிதாயாம் சிவரஹஸ்யகண்டே
தக்ஷகாண்டே தசமோऽத்யாய: ॥

॥ அத ஏகாதஶோऽத்யாய: ।

தக்ஷன் சிவனை நிந்தித்தல்

ப்ரத்யுவாச ருஷிம் தக்ஷோ வீக்ஷ்ய தம் தபதாம் வரம் ।
மத்கன்யாபாணி ஸங்க்ராஹம் க்ருத்வா பூர்வம் த்ரிலோசன: ॥ 1
மத்யே கல்யாணமுச்சித்ய கத்வாது குடிலக்ரிய: ।
புனராகத்ய சௌர்யேண க்ருஹீத்வா தாமிமாமயம் ॥ 2
கதவான் க்ரூர கர்மாத்மா க்ரூர த்ருக் வஞ்சநோத்யம: ।
ததாபி வீக்ஷிதும் தஸ்ய கைலாஸே தாவுபாவஹம் ॥ 3
கதவானஸ்மி ஸஹஸா தத்ப்ரதிஹாரவர்திபி: ।
அநுரோத: க்ருதோऽஸ்மாகம் ச்ருத தத்வசநைரஹோ ॥ 4

இவர்கள் என்னிடத்தில் பயமடைந்து வந்திருக்கிறார்கள் என்று மனதில் நிச்சயித்துக்கொண்டு ஓ முனிவர்களே! அவருக்கும் அவர் சிஷ்யர்களுக்கும் ஆஸனம் கொடுத்தான் (38) அப்பொழுது ததீசி முனிவர் அவனைப் பார்த்து நீ எதற்காக என்னை இங்கு அழைத்தாய் என்று கம்பிரமான வாக்கோடு அவனைக் கேட்டார். (39)

பத்தாவது அத்யாயம் முற்றிற்று.

பதினொன்றாவது அத்தியாயம்

தக்ஷனானவன் தபஸ்விகளில் சிறந்த ததீசி மஹரிஷியைப் பார்த்து பதில் கூறினான். முன்பு முக்கண்ணனான பரமேச்வரன் என் பெண்ணைப் பாணிக்ரஹணம் செய்துகொண்டு (1) அந்தக் கல்யாணத்தைப் பாதியில் கெடுத்துவிட்டு கெட்ட நடத்தை உடையவனாய் ஓடிவிட்டான். பிறகு கொடிய நடத்தை, மனம் இவைகளை உடையவனும், கடூரமான கண்களை உடையவனும். வஞ்சிப்பதில் முயற்சி உடையவனுமான அந்தச் சிவன் மறுபடியும் இங்கு வந்து என் பெண்ணைத் திருட்டுத்தனமாய் எடுத்துப் போய்விட்டான். அப்படி யிருந்தும் நான் அவ்விருவர்களையும் பார்ப்பதற்காக அவனுடைய கைலாஸ மலைக்கு (2-3) வேகமாய்ச் சென்றபோது அவனுடைய வாசற் காப்பவர்கள் அவன் வார்த்தையைக்

मायया मोहयित्वाऽयं मत्पुत्रीं मत्समीपगाम् । कृत्वातु विमुखीमत्र वर्तते परवञ्चकः ॥ ५
तत्कृते ब्रह्मयागेऽस्य निरुद्धैव हविर्मया । द्वाःस्थस्तस्य तदा नन्दी समुत्थाय शिवाय ये ॥ ६
अदत्वा प्रथमं यज्ञे हविरस्मै यजन्ति च । तेषां शिरांसि छिन्नानि विशीर्णानि भवन्त्विति ॥ ७
उक्त्वा कोपाकुलश्शीघ्रं ययौ मद्भीतिसंयुतः । मद्दलाघातकवच श्रुत्वा सर्वे इमे सुराः ॥ ८
न कुर्वन्ति तदारभ्य यागं भीता विना हरम् । अहमेव पुनस्तेषा मगणय्य वचोऽस्य च ॥ ९
करोमि रुद्रं मुक्त्वा तं यागं परमपावनम् । तदर्थममरास्सर्वे मया हूता स्तपोधन ॥ १०
आगतं भवताप्यत्र द्रष्टुं यागं महात्मना । तत्समाप्तमिमं मन्ये नात्र कार्या विचारणा ॥ ११
तदेतस्य वचश्श्रुत्वा दधीचिस्तपतां वरः । हासं कृत्वा तदा प्राह करावास्फाल्य कोपतः ॥ १२
त्वत्पुण्यमखिलं दक्ष पापायैवाभवत्किल । इत्युक्त्वा मौनमास्थाय तूष्णीं तस्थे तदा द्विजाः ॥ १३

மாயயா மோஹயித்வாऽயம் மத்புத்ரீம் மத்ஸமீபகாம் ।
க்ருத்வாது விமுகீமத்ர வர்ததே பரவஞ்சகः ॥ 5
தத்க்ருதே ப்ரம்மயாகேऽஸ்ய நிருத்தஞ்ச ஹவிர்மயா ।
த்வா:ஸ்த ஸ்தஸ்ய ததா நந்தீ ஸமுத்தாய சிவாய யே ॥ 6
அதத்வா ப்ரதமம் யக்ஞே ஹவிரஸ்மை யஜந்தி ச ।
தேஷாம் சிராம்ஸி சின்னாநி விசீர்ணாநி பவந்த்விதி ॥ 7
உக்த்வா கோபாகுல ச்சீக்ரம் யயௌ மத்பீதிஸம்யுத: ।
மத்தளாகாதகவச ச்ருத்வா ஸர்வ இமேஸுரா: ॥ 8
ந குர்வந்தி ததாரப்ய யாகம் பீதா விநா ஹரம் ।
அஹமேவ புனஸ்தேஷா மகணய்ய வசோஸ்யச ॥ 9
கரோமி ருத்ரம் முக்த்வா தம் யாகம் பரமபாவநம் ।
ததர்த்த மமராஸ் ஸர்வே மயா ஹூதாஸ் தபோதன ॥ 10
ஆகதம் பவதாப்யத்ர த்ரஷ்டும் யாகம் மஹாத்மனா ।
தத் ஸமாப்த மிதம் மன்யே நாத்ர கார்யா விசாரணா ॥ 11
ததேதஸ்ய வசச்ச்ருத்வா ததீசி ஸ்தபதாம் வர: ।
ஹாஸம் க்ருத்வா ததா ப்ராஹ கராவாஸ்பால்ய கோபத: ॥ 12
த்வத்புண்ய மகிலம் தக்ஷ பாபாயைவா பவத்கில ।
இத்யுக்த்வா மௌனமாஸ்தாய தூஷ்ணீம் தஸ்தே ததா த்விஜா: 13

கேட்டு என்னைத் தடுத்துவிட்டார்கள் (4) பிறரை ஏமாற்றுகிறவனான அந்தச் சிவன் எனது சமீபத்தி லுள்ள எனது பெண்ணைக் கபடமாக மோஹிக்கச் செய்து அவளை என்னிடம் அன்பில்லாமலிருக்கும்படியும் செய்துகொண்டிருக்கிறான் (5) ஆகவே ப்ரம்மா செய்த யாகத்தில் அவனுக்கு ஹவிர்பாகம் கொடுக்கா மல் தடுக்கப்பட்டது. அவனுடைய வாயிற்காப்போனான நந்தி அப்பொழுது எழுந்து எவர்கள் சிவனுக்கு (6) யாகத்தில் முதலில் ஹவிஸ்ஸைக் கொடாமல் செய்கின்றார்களோ அவர்களுடைய தலைகள் அறுபட்டும் சிதறியும் போகக் கடவன என்று (7) சொல்லி மிகுந்த கோபம் கொண்டவனாயும், என்னிடத்தில் பயம் கொண்டவனாயும் வேகமாய்ச் சென்றுவிட்டான். அப்பொழுது மத்தளமடித்து போன்ற வார்த்தையைக் கேட்டு அந்த தேவர்கள் எல்லோரும் (8) அது முதற்கொண்டு பரமசிவனல் லாது யாகம் செய்ய பயம் கொண்டவர்களாகி யாகம் செய்யவில்லை. பிறகு அவர்களுக்காக நானே அந் நந்தியின் வார்த்தையை மதிக்காமல் (9) அந்த ருத்ரனை விலக்கிவிட்டு மிக்க பரிசுத்தமான இந்த யாகத்தைச் செய்கிறேன் ஓ ததீசி முனிவரே! அதற்காக எல்லாத் தேவர்களையும் நான் அழைத்திருக் கிறேன் (10) மஹாத்மாவாகிய தாங்கள் இந்த யாகத்தைப் பார்ப்பதற்காக இங்கு வந்தபடியால் இது யாதொரு தடங்கலுமின்றி முடிந்துவிட்டதாக நினைக்கிறேன் என்ற (11) அவனுடைய வார்த்தையைக் கேட்டு தபஸ்விகளில் சிறந்த ததீசி முனிவர் அப்பொழுது கோபத்தினால் கைகளைக் கொட்டிச் சிரித்துக் கூறினார் (12) ஓ தக்ஷா! உனது புண்யங்கள் யாவும் பாபமாகவே முடிந்துவிட்டதல்லவோ? என்று கூறிவிட்டு ஓ முனிவர்களே! அப்பொழுது ததீசி முனிவர் மௌனமடைந்து பேசாமலிருந்துவிட்டார் (13) பிறகு தக்ஷன் கோபத்தினால் கலங்கிய கண்களை உடையவனாய் கூறியதாவது : நீர் இந்த ருத்ரனிடத்தில்

ततः प्राह वचो दक्षः कोपाकुलितलोचनः । रुद्रस्य भक्तिमत्वात्त्वं विहस्यात्र विनिंद्य माम् ॥ १४
इत्युक्त्वा कोपकुटिलवक्त्रस्तस्थे तदा द्विजाः । उक्तवानसि यत्किञ्चिद्दधीचे पुरतो मम ॥ १५
दधीचिः — अध्वरेशं महादेवं मुक्त्वा दक्ष क्रतुं भवान् । कर्तुमिच्छति मोहेन महता सर्वशास्त्रवित् ॥ १६
ब्रह्मविष्णुमुखान्देवान् पशून् सृष्ट्वा महेश्वरः । कल्पयित्वा स्थितिं तेषां संहरिष्यति कालतः ॥ १७
सर्वेषाञ्जनकश्शम्भुः परमात्मेति विश्रुतः । हव्याशो हविराकारो जनको जातवेदसः ॥ १८
कर्ता यज्ञस्य देवोऽयं रक्षकोऽस्य जगत्प्रभुः । शिव एवेति वेदान्ता नान्योऽस्तीति वदन्तिहि ॥ १९
अस्तिचेदत्र यज्ञेश स्समुत्तिष्ठतु मत्पुरः । अनेन दत्तमैश्वर्यं विष्ण्वादीनां हि नाकिनाम् ॥ २०
सर्वकर्ता महादेवो नास्य कर्तास्ति कुत्रचित् । शिवोमहेश्वर श्शम्भु र्नीलग्रीवस्त्रिलोचनः ॥ २१
अन्तर्यामी परं ब्रह्म परात्परतरश्च सः । सर्वेष्वेतेषु देवेषु वरीयान् ब्राह्मणोह्यसौ ॥ २२
त्रिमूर्तिषु परा मूर्तिस्तस्यैव जगतां प्रभोः । ब्राह्मणोऽयं महादेवः क्षत्रियो विष्णुरित्यपि ॥ २३

ததः ப்ராஹ வசோ தக்ஷ: கோபாகுலித லோசன: ।
ருத்ரஸ்ய பக்திமத்வாத் த்வம் விஹஸ்யாத்ர விநிந்த்ய மாம் ॥ 14
இத்யுக்த்வா கோபகுடில வக்த்ர ஸ்தஸ்தே ததா த்விஜா: ।
உக்தவானஸி யத்கிஞ்சித் தத்சே புரதோ மம ॥ 15
ததீசி:— அத்வரேசம் மஹாதேவம் முக்த்வா தக்ஷ க்ரதும் பவான் ।
கர்துமிச்சதி மோஹேன மஹதா ஸர்வ சாஸ்த்ரவித் ॥ 16
ப்ரம்மவிஷ்ணு முகான்தேவான் பசூன் ஸ்ருஷ்ட்வா மஹேச்வர:
கல்பயித்வா ஸ்திதிம் தேஷாம் ஸம்ஹரிஷ்யதி காலத: ॥ 17
ஸர்வேஷாம் ஜனகர் சம்பு: பரமாத்மேதி விச்ருத: ।
ஹவ்யாசோ ஹவிராகாரோ ஜனகோ ஜாதவேதஸ: ॥ 18
கர்தா யக்ஞஸ்ய தேவோऽயம் ரக்ஷகோऽஸ்ய ஜகத் ப்ரபு: ।
சிவ ஏவேதி வேதாந்தா நான்யோऽஸ்தீதி வதந்திஹி ॥ 19
அஸ்தி சேதத்ர யக்ஞேச ஸ்ஸமுத்திஷ்டது மத்புர: ।
அநேன தத்தமைச்வர்யம் விஷ்ணவாதீனும் ஹி நாகினும் ॥ 20
ஸர்வகர்தா மஹாதேவோ நாஸ்ய கர்தாஸ்தி குத்ரசித் ।
சிவோ மஹேச்வர ச்சம்பு: நீலக்ரீவஸ் த்ரிலோசன:: ॥ 21
அந்தர்யாமீ பரம் ப்ரம்ம பராத்பரதரச்ச ஸ: ।
ஸர்வேஷ்வேதேஷு தேவேஷு வரியான் ப்ராம்மணோஹ்யஸௌ
த்ரிமூர்திஷு பரா மூர்திரஸ்யைவ ஜகதாம் ப்ரபோ: ।
ப்ராம்மணோऽயம் மஹாதேவ: க்ஷத்ரியோ விஷ்ணுரித்யபி ॥ 23

பக்தி உடையவராகையாலல்லவோ நகைத்துக்கொண்டு என்னையும் நிந்தித்து என் முன்னிலையில் ஏதேதோ பேசலானீர் எனக் கூறி கோபத்தினால் திரும்பிய முகத்தை உடையவனாயிருந்தான் (14-15) ததீசி முனிவர் கூறுகிறார் :— ஓ தக்ஷா! எல்லா சாஸ்திரங்களையும் நன்கு அறிந்த நீ மோகத்தினால் யாகங்களுக்கு ஈசனான மஹாதேவனை விலக்கிவிட்டு யாகம் செய்ய விரும்புகிறாய் (16) ஸ்ரீ மஹேச்வரன் ப்ரம்மா விஷ்ணு முதலிய தேவர்களையும் மற்றப் பிராணிகளையும் படைத்து அவர்களை ரக்ஷிப்பதற்குத் தகுந்த ஏற்பாடு செய்து முடிவில் ஸம்ஹாரமும் செய்கின்றார் (17) எல்லோருக்கும் தந்தையான சம்புவே பரமாத்மா என்று ப்ரஸித்தி பெற்றிருக்கிறார். அந்த மஹாதேவரே ஹவிஸ்ஸுக்களைச் சாப்பிடுகிறவர். ஹவிஸ்ஸின் ஸ்வரூபமும் அவரே. அக்னிக்கும் தந்தை அவரே (18) ஜகதீசரான ஸ்ரீ பரமசிவனே யாகத்திற்குக் கர்த்தாவும் அதைக் காப்பவருமே அன்றி வேறு யாருமில்லை என்று உபநிஷத்துக்கள் கூறுகின்றன (19) இப்பொழுது இந்த ஸபையில் யாகத்திற்கு ஈசன் யாராவது இருந்தால் அவர் நம் முன்னால் வந்து நிற்கட்டும். விஷ்ணு முதலிய தேவர்களுக்கும் அவராலேதான் ஐச்வர்யம் அளிக்கப்படுகின்றது (20) எல்லாவற்றையும் படைப்பவர் ஸ்ரீ மஹாதேவனே. அவரைப் படைப்பவர் எங்குமில்லை. சிவனும் மஹேச்வரனும் சம்புவும் கருத்த கழுத்தை உடையவனும் முக்கண்ணனாகும் (21) எல்லோருள்ளுமிருப்பவரும், பரப்ரும்மமூர்த்தியும் மாயைக்கு உட்படாதவரும் அவரே. அவர் இந்த எல்லாத் தேவர்களிலும் சிறந்த ப்ராம்மணரல்லவோ? (22) அப்படிப்பட்ட ஜகதீசனே மும்மூர்த்திகளிலும் மிக மேன்மையான மூர்த்தி.

आम्नाय एव भगवानभ्यासेन वदत्यमुम् । इममर्थं महामोहादस्मृत्वाऽऽम्नायचोदितम् ॥ २४
अध्वरेशं महादेवं होतारं रुद्रमव्ययम् । मुक्त्वान्याञ्छल्मलीपुष्पतुल्यांस्तुच्छफलप्रदान् ॥ २५
मेळयित्वा वृथारंभो वर्तसेऽत्र क्रतून्मुखः । दासीपुत्रः स्वजनकमविज्ञाय यथापरम् ॥ २६
मन्यते पितरं तद्वत्सर्वज्ञातमिदं बत । पुण्यार्थं तु प्रवृत्तस्य पापमत्र फलं ननु ॥ २७
वेदमार्गं परित्यक्त्वा वर्तते कुपथे भवान् । अतोऽस्य तव यागस्य महान्विघ्नो भविष्यति ॥ २८
आसन्नस्तु विनाशोऽपि भवतस्सत्यमुच्यते । भीषास्मात्सर्वदा वायु र्वात्युदेति च भास्करः ॥ २९
ऊर्ध्वं ज्वलति वह्निश्च नाकं रक्षति वृत्रहा । पञ्चमस्सोऽपि (स्योपि) मृत्युस्तद्भक्तस्याशु विदूरतः ॥
भीषास्माद्याति देवेषु कोन बिभ्यति तं वद । कालकालस्य देवस्य सर्वदा चित्स्वरूपिणः ॥
तत्तस्मैभवता दक्ष दातव्यं प्रथमं हविः ॥ ३१

ஆம்னாய ஏவ பகவானப்யாஸேன வதத்யமும் ।
இமமர்த்தம் மஹாமோஹா தஸ்ம்ருத்வாऽऽம்னாய சோதிதம் ॥ 24
அத்வரேசம் மஹாதேவம் ஹோதாரம் ருத்ரமவ்யயம் ।
முக்த்வான்யான் சல்மலீ புஷ்ப துல்யான் துச்சபல ப்ரதான் ॥ 25
மேளயித்வா வ்ருதாரம்போ வர்தஸேऽத்ர க்ருதூன்முக: ।
தாஸீபுத்ர: ஸ்வஜனக மவிக்ஞாய யதா பரம் ॥ 26
மன்யதே பிதரம் தத்வத் ஸர்வம் ஜாதமிதம் பத ।
புண்யார்த்தம் து ப்ரவ்ருத்தஸ்ய பாபமத்ரபலம் நது ॥ 27
வேதமார்கம் பரித்யக்த்வா வர்ததே குபதே பவான் ।
அதோऽஸ்ய தவ யாகஸ்ய மஹான் விக்னோ பவிஷ்யதி ॥ 28
ஆஸன்னஸ்து விநாசோऽபி பவதஸ் ஸத்யமுச்யதே ।
பீஷாஸ்மாத் ஸர்வதா வாயுர் வாத்யுதேதிச பாஸ்கர: ॥ 29
ஊர்த்வம் ஜ்வலதி வன்ஹிச்ச நாகம் ரக்ஷதி வ்ருத்ரஹா ।
பஞ்சமஸ்ஸோऽபி (ஸ்தோபி) ம்ருத்யுஸ்தத் பக்த ஸ்யாசு விதூரத:
பீஷாஸ்மாத்யாதி தேவேஷு கோ ந பிப்யதி தம்வத ।
காலகாலஸ்ய தேவஸ்ய ஸர்வதா சித்ஸ்வரூபிண: ।
தத் தஸ்மை பவதா தக்ஷ தாதவ்யம் ப்ரதமம் ஹவி: ॥ 31

வேதத்தில் பகவானாகிய ஸ்ரீ மஹாதேவன் ப்ராம்மணரென்றும், விஷ்ணு க்ஷத்ரியர் என்றும் அடிக்கடி முறையிடுகின்றது. நீ மிகுந்த புத்தி ப்ரமையால் வேதத்தில் கூறப்பட்ட இப்பொருளை அறியாமல் (23-24) யாகங்களுக்கு அதிபரும், யாகங்களுக்கு கர்தாவும், துக்கத்தைப் போக்குகின்றவரும், என்றும் அழியாதவருமான அந்த மஹாதேவரை விட்டு இலவம் பூவிற்கு நிகரானவர்களும், மட்டமான பலத்தைக் கொடுக்கின்றவர்களுமான மற்றவர்களைக் (25) கூட்டி வைத்துக்கொண்டு யாகம் செய்ய வீணாக முயற்சிக்கிறாய். எவ்விதம் வேசியின் மகன் தன் தந்தையை அறியாமல் மற்றவனைத் (26) தன் தந்தையாக எண்ணுகிறானோ அதுபோல் இதெல்லாம் ஆயிற்று. கஷ்டம். புண்யத்தைக் குறித்துத் தொடங்கியவனுக்கு இங்கு பாபமல்லவா பலமாக ஆயிற்று (27) நீ வேத மார்க்கத்தை விட்டு கெட்ட மார்க்கத்தில் செல்லுகின்றாய். ஆகையால் உன்னுடைய இந்த யாகத்திற்குப் பெரிய இடையூறானது ஏற்படப்போகின்றது (28) உனக்கு விநாச காலமும் நெருங்கிவிட்டது என்று ஸத்யமாய்ச் சொல்லுகிறேன். எப்பொழுதும் இந்தப் பரமசிவனிடத்தில் பயந்தே வாயுதேவன் வீசுகிறான். சூரியனும் உதயமாகிறான் (29) அக்னியும் மேல்நோக்கி ஜொலிக்கிறான். இந்திரனும் ஸ்வர்க்கத்தைக் காத்து வருகிறான். ஐந்தாவதான யமனும் எந்தப் பரமேச்வரனிடத்தில் பயத்தால் அவருடைய பக்தர்களைக் கண்டவுடனேயே வெகு தூரத்திற்கு ஓடுகிறானோ? காலனுக்குக் காலனும், நித்யானந்த ஸ்வரூபியுமான அந்த மஹாதேவரிடத்தில் தேவர்களுள் யார்தான் அவரைக் கண்டு பயப்படவில்லை. அவரை நீ சொல். ஆகையால் நீ யாகத்தில் அவருக்கு முதன்மை

इति तस्य वचो निशम्य दक्षः कलुषाविष्टमना ऋषीश्वरस्य ।
निजगादच वीक्ष्य तं दुरात्मा पुनरुद्भ्रान्तविलोचनो द्विजेन्द्राः ॥ ३२
इति श्री स्कान्दे महापुराणे शङ्करसंहितायां शिवरहस्यखण्डे
दक्षकाण्डे एकादशोऽध्यायः ॥

॥ अथ द्वादशोऽध्यायः ॥
दधीचिमहर्षिणा शिवएव परं ब्रह्मेति निरूपणम् ॥

ऋषे नाहं प्रयच्छामि रुद्रस्यास्य हविर्वरम् । यक्ष्ये तद्धरये दत्वा विष्णवे प्रभविष्णवे ॥ १
पूज्यस्य एव यज्ञेऽस्मिन् मया सर्वजगन्मयः । इति तस्य वचः श्रुत्वा पुनः प्राह ऋषीश्वरः ॥ २
अपूज्यस्य त्वया पूजा क्रियते चेत्प्रजापते । सद्यो मृत्युर्भवेन्नूनमिति शास्त्रविदो विदुः ॥ ३
सर्वज्येष्ठो महादेव श्रिया चन्द्रार्धशेखरः । अध्वरेश इति ख्यातो महेशो लोकवेदयोः ॥ ४

இதி தஸ்ய வசோ நிசம்ய தக்ஷ: கலுஷாவிஷ்டமனா ரிஷீச்வரஸ்ய ।
நிஜகாத ச வீக்ஷ்ய தம் துராத்மா புனருத் ப்ராந்தவிலோசனோ த்விஜேந்த்ரா: ॥ 32
இதி ஸ்ரீஸ்காந்தே மஹாபுராணே சங்காஸம்ஹிதாயாம் சிவரஹஸ்யகண்டே
தக்ஷகாண்டே ஏகாதசோऽத்யாய: ॥

॥ அத த்வாதசோऽத்யாய: ॥
ததீசி மஹரிஷியால் "சிவனே பரப்ரும்மம்" என நிரூபித்தல்.

ருஷே நாஹம் ப்ரயச்சாமி ருத்ரஸ்யாஸ்ய ஹவிர்வரம் ।
யக்ஷ்யே தத்தரயே தத்வா விஷ்ணவே ப்ரபவிஷ்ணவே ॥ 1
பூஜ்ய ஸ்ஸைவ யக்ஞேऽஸ்மின் மயா ஸர்வஜகன்மய: ।
இதி தஸ்ய வச: ச்ருத்வா புந: ப்ராஹ ருஷீச்வர: ॥ 2
அபூஜ்யஸ்ய த்வயா பூஜா க்ரியதே சேத் ப்ரஜாபதே ।
ஸத்யோ ம்ருத்யுர் பவேந்நூன மிதி சாஸ்த்ரவிதோவிது: ॥ 3
ஸர்வஜ்யேஷ்டோ மஹாதேவ ச்ச்ரியா சந்த்ரார்த்தசேகர: ।
அத்வரேச இதி க்யாதோ மஹேசோ லோகவேதயோ: ॥ 4

யாக ஹவிஸ்ஸைக் கொடுக்கவேண்டும் (30-31) என்ற அந்த முனிவருடைய வார்த்தையைக் கேட்டு ஓ முனிவர்களே! துராத்மாவான தக்ஷன் பாபத்தினால் ஆவேசம் கொண்ட மனமுடையவனாகவும், சுழலுகின்ற விழிகளை உடையவனாகவும் ஆகி அவரைப் பார்த்து மறுபடியும் சொன்னான் (32)

பதினோராவது அத்தியாயம் முற்றிற்று.

பன்னிரெண்டாவது அத்தியாயம்

பதினொன்று, பன்னிரண்டு இவ்விரு அத்யாயங்களிலும் சில பாகத்தில் ஸ்ரீ சிவபிரானைப் பரப்ரும்ம மாய் ததீசி முனிவர் கூறும்பொழுது உபநிஷத் வாக்யங்களே ச்லோகங்களாய் அமைந்திருப்பதை அறிய வேண்டும்.

ஓ முனிவரே! நான் அந்தப் பரமசிவனுக்குச் சிறந்ததான ஹவிஸ்ஸைக் கொடுக்க மாட்டேன். ஆனால் அந்த ஹவிஸ்ஸை எல்லாப் பாபங்களையும் போக்குகிறவரும், ஸகல ஜனங்களுக்கும் ப்ரபுவுமான ஸ்ரீமஹாவிஷ்ணுவிற்குக் கொடுத்து யாகம் செய்யப்போகிறேன் (1) இந்த யாகத்தில் எல்லா ப்ரபஞ்ச உருவமாய் விளங்கும் அந்த விஷ்ணுவே என்னால் பூஜிக்கத் தகுந்தவர் என்ற அவனுடைய வார்த்தையைக் கேட்டு முனிச்ரேஷ்டர் மீண்டும் கூறினார் (2) ஓ தக்ஷ ப்ரஜாபதியே! பூஜிக்கத் தகாதவனை நீ பூஜிப் பாயானால் உடன் உனக்கு நிச்சயம் நாசம் ஏற்படும் என்று சாஸ்திரமறிந்தவர்கள் கூறுகிறார்கள் (3) எல்லோருக்கும் பெரியவரும், மஹாதேவரும், ஸகல ஸ்ரீஸம்ருத்தியுடன் கூடியவரும், சந்திரக்கலையை சிரஸ்

प्रथमं तस्य पूजाहि कर्तव्या क्रतुषु प्रभोः । इति तस्य वचश्श्रुत्वा दक्षः प्राह पुनर्वचः ॥ ५
ईशानमेव यागेऽस्मिन् दिगीशं प्रथितं भुवि । रुद्रानेकादश तथा पूजयिष्याम्यसंशयम् ॥ ६
तेषु रुद्रेषु सोप्येकस्तत्ते पूज्या मया क्रतौ । दधीचिः — एते कथं महादेव तुल्या रुद्राः प्रजापते ॥ ७
ध्यायन्ति ये महात्मानश्शिवं परमकारणम् । सारूप्यभाजस्ते सर्वे रुद्राश्च प्रथिता ननु ॥ ८
न तावता क्रतौ पूज्यास्ते रुद्राः परमेशवत् । ब्रह्मादीनामपि वरा भवन्त्येते न संशयः ॥ ९
तथापि ते महादेवभक्ताः पूर्वं पदेच्छया । स्वपदानि च संप्राप्ता नार्हन्त्येते हविर्वरम् ॥ १०
आदातुं पारमेशं तदस्तु वा तावकेऽध्वरे । एषां तपोभिर्देवेशः प्रसन्नः पूर्वमीश्वरः ॥ ११
ईशानं परिकल्प्याशु दिगीशं निजरूपिणम् । दिक्पालमध्ये रुद्रांस्तु व्यवस्थाप्य सुरेषुतान् ॥ १२
रक्षत्यनिशमाद्यन्तहीन स्सस्स्वयमीश्वरः । साकं सुराख्यत्रिंशत्कोटिकास्तैर्मिताः खलु ॥ १३

ப்ரதமம் தஸ்ய பூஜாஹி கர்தவ்யா க்ரதுஷு ப்ரபோ: ।
இதி தஸ்ய வசச் ச்ருத்வா தக்ஷ: ப்ராஹ புநர்வச: ॥ 5
ஈசானமேவ யாகேऽஸ்மின் திகீசம் ப்ரதிதம் புவி ।
ருத்ராநேகாதச ததா பூஜயிஷ்யாம்யஸம்சயம் ॥ 6
தேஷு ருத்ரேஷு ஸோப்யேக ஸ்தத்தே பூஜ்யா மயா க்ரதௌ
ததீசி: — ஏதேகதம் மஹாதேவ துல்யா ருத்ரா: ப்ரஜாபதே ॥ 7
த்யாயந்தி யே மஹாத்மான ச்சிவம் பரமகாரணம் ।
ஸாரூப்யபாஜஸ்தே ஸர்வே ருத்ராச்ச ப்ரதிதாநநு ॥ 8
ந தாவதா க்ரதௌ பூஜ்யா ஸ்தே ருத்ரா: பரமேசவத் ।
ப்ரும்மாதீநாமபி வரா பவந்த்யேதே ந ஸம்சய: ॥ 9
ததாபி தே மஹாதேவபக்தா: பூர்வம் பதேச்சயா ।
ஸ்வபதாநி ச ஸம்ப்ராப்தா நார்ஹந்த்யேதே ஹவிர்வரம் ॥ 10
ஆதாதும் பாரமேசம் ததத்தும் வா தாவகேऽத்வரே ।
ஏஷாம் தபோபிர் தேவேச: ப்ரஸன்ன: பூர்வமீச்வர: ॥ 11
ஈசானம் பரிகல்ப்யாசு திகீசம் நிஜரூபிணம் ।
திக்பாலமத்யே ருத்ராம்ஸ்து வ்யவஸ்தாப்ய ஸுரேஷு தான் ॥ 12
ரக்ஷத்யனிச மாத்யந்தஹீன ஸ்ஸஸ்ஸ்வயமீச்வர: ।
ஸாகம் ஸுரா ஸ்த்ரயஸ்த்ரிம்சத் கோடிகாஸ்தைர்மிதா: கலு ॥ 13

எரில் தரித்தவரும், யாகத்திற்கு ராஜாவுமான மஹேசர் உலகத்திலும் வேதத்திலும் ப்ரஸித்தமானவராய் விளங்குகிறார் (4) யாகங்களில் ப்ரபுவான பரமசிவனுக்கு முதல் பூஜை செய்யவேண்டியது என்ற த஧ீசி முனியின் வார்த்தையைக் கேட்டு தக்ஷன் மறுபடியும் கூறினான் (5) இந்த யாகத்தில் பூமியில் பிரஸித்தி பெற்ற ஈசானரென்ற திக்பாலகரையும் அதே விதமாகப் பதினொரு ருத்ரர்களை மட்டில்தான் நான் பூஜை செய்வேன். இதில் ஸந்தேகமில்லை (6) ஏனென்றால் அந்த ருத்ரர்களைப் போலவே அந்தச் சிவனும் ஒருவனாகையால் நான் அந்த யாகத்தில் ஏகாதச ருத்ரர்களையே பூஜிப்பேன் எனக் கூறினான். த஧ீசி கூறுகிறார் :— ஓ தக்ஷ ப்ரஜாபதியே ! இந்த ருத்ரர்களெல்லாம் மஹாதேவனுக்கு எப்படி ஸமமாக ஆவார்கள் ? (7) ஓ தக்ஷா ! உலகத்தில் எந்த மஹாத்மாக்கள் பரம காரணராகிய சிவனைத் தியானிக்கின்றார்களோ அவர்கள் ஸாரூப்ய பதவியை அடைந்ததால்லவோ அந்த எல்லோரும் ருத்ரர்கள் என்று ப்ரஸித்தி பெற்றிருக்கின்றனர் (8) ஆனால் ஸாரூப்யத்தை அடைந்ததால் மட்டிலும் யாகத்தில் பரம சிவனைப்போல் பூஜிக்கத் தகுதியுள்ளவர்களாக ஆகமாட்டார்கள். பின்னையோவெனில், அவர்கள் ப்ரும்மா விஷ்ணு முதலியவர்களுக்கும் மேல்பட்டவர்கள்தான். ஸந்தேகமில்லை, (9) அப்படியிருந்தபோதிலும் இவர்கள் மஹாதேவ பக்தர்களாய் முன்பு பதவியை விரும்பித் தங்கள் பதவிகளை அடைந்தார்கள். ஆயினும் இவர்கள் பரமேச்வரனுக்குரியதான சிறந்த ஹவிஸ்ஸை உனது யாகத்தில் பெற்றுக்கொள்ளவோ சாப்பிடவோ தகுதி அற்றவர்கள். தேவேசனான ஈச்வரன் முந்தி இவர்களுடைய தவத்தினால் ப்ரஸன்னமடைந்து (10-11) தனது உருவத்தைக் கொண்ட ஈசானரை திக்பாலகர்களுக்குள் ஒரு திக்குக்கு அதிபதியாக ஏற்படுத்தி தேவர்களோடு அந்த ருத்ரர்களைச் சேர்த்து (12) ஆதி அந்தம் அற்ற அந்த ஈச்வரன் தானே எப்பொழுதும் காப்பாற்றி வருகிறார். அவர்களோடு சேர்ந்ததால்தான் தேவர்களின்

नास्त्येषामधिकारोऽपि गृहीतुं शाङ्करञ्च तत् । तस्माद्दक्ष महादेवं यज यज्ञेश्वरं परम् ॥ १४
स एव भगवानीश स्सर्वाभीष्टं प्रदास्यति । इत्युक्तिमस्य संश्रुत्य पुनः प्राह दुरात्मवान् ॥ १५
ऋषे किमर्थं भवता महान्यत्नोऽनु भूयते । आवोराजानमन्त्रेण रुद्राय हविरीरितम् ॥ १६
तदत्र रुद्रं यागेमे पूजयिष्यामि कञ्चन । सर्वेषामपि रुद्राणां तारतम्यं न विद्यते ॥ १७
इच्छया मम तेष्वेको मत्पूजार्हो नचापरः । इत्युक्तिमस्य श्रुत्वाऽयं दधीचिः प्राह तत्ववित् ॥ १८
यज्ञेऽपि रुद्रनामेदं ख्यातं तद्वच षण्मुखे । ज्वरेऽपि सर्वसन्तापकारके प्रथितं ननु ॥ १९
सारूप्यभाञ्जु भूतेषु गणेष्वपिच वर्तते । पाताळानामधोभागे कालाग्निरिति यश्श्रुतः ॥ २०
तस्मिंश्च हाटकेशेऽपि कूश्माण्डेऽपि प्रवर्तते । द्रव्यं (हव्यं) गृहीत्वा देवानां यदा यावद्धि पावकः ॥
अनुद्रुत स्तदा तैस्तु भीतोऽरोदीद्भृशं सुरैः । रोदनाद्रुद्रनामाच वह्नावपिच वर्तते ॥ २२
परब्रह्मणि सर्वेशे महादेवे त्रयंबके । नीलग्रीवे कृतानन्द बोधदुग्धांबुधौ शिवे ॥ २३

நாஸ்த்யேஷா மதிகாரோऽபி க்ரஹீதும் சாங்கரஞ்ச தத் ।
தஸ்மாத் தக்ஷ மஹாதேவம் யஜ யக்ஞேச்வரம் பரம் ॥ 14
ஸ ஏவ பகவானீச ஸ்ஸர்வாபீஷ்டம் ப்ரதாஸ்யதி ।
இத்யுக்தி மஸ்ய ஸம்ச்ருத்ய புந: ப்ராஹ துராத்மவான் ॥ 15
ரிஷே கிமர்த்தம் பவதா மஹான் யத்னோऽநு பூயதே ।
ஆவோராஜானமந்த்ரேண ருத்ராய ஹவிரீரிதம் ॥ 16
ததத்ர ருத்ரம் யாகேமே பூஜயிஷ்யாமி கஞ்சந ।
ஸர்வேஷாமபி ருத்ராணாம் தாரதம்யம் ந வித்யதே ॥ 17
இச்சயா மம தேஷ்வேகோ மத்பூஜார்ஹோ நசாபர: ।
இத்யுக்தி மஸ்ய ச்ருத்வாயம் தத்ரீசி: ப்ராஹ தத்வவித் ॥ 18
யக்ஞேऽபி ருத்ரநாமேதம் க்யாதம் தத்வச்ச ஷண்முகே ।
ஜ்வரேऽபி ஸர்வஸந்தாபகாரகே ப்ரதிதம் நநு ॥ 19
ஸாரூப்யபாக்ஷு பூதேஷு கணேஷ்வபிச வர்ததே ।
பாதாளாநு மதோபாகே காலாக்னி ரிதியச் ச்ருத: ॥ 20
தஸ்மிம்ச்ச ஹாடகேசேऽபி கூச்மாண்டேऽபி ப்ரவர்ததே ।
த்ரவ்யம் (ஹவ்யம்) க்ரஹீத்வா தேவாநாம் யதா யாவத்தி பாவக: 21
அநுத்ருத ஸ்ததா தைஸ்து பீதோऽரோதீத் ப்ருசம் ஸுரை: ।
ரோதநுத் ருத்ரநாமாச வன்ஹாவபிச வர்த்ததே ॥ 22
பரப்ரும்மணி ஸர்வேரே மஹாதேவே த்ரியம்பகே ।
நீலக்ரீவே ருதாநந்த போததுக்தாம்புதௌ சிவே ॥ 23

எண்ணிக்கை முப்பது முக்கோடி ஆகின்றது (13) அதனால் அவர்களுக்கு பரமேச்வரனுக்குரியதான ஹவிர்பாகத்தைப் பெறுவதற்கு அதிகாரமில்லை. ஆகையால் ஓ தக்ஷா! யாகத்திற்கு அதிபதியும், மிகச் சிறந்தவருமான மஹாதேவனையே பூஜிக்கலாவிர் (14) அந்த ஸர்வேச்வரனை பகவானே எல்லா விருப்பங்களையும் கொடுக்க வல்லவர் என்ற தத்ரீசி முனிவருடைய வார்த்தைகளைக் கேட்டு துராத்மாவான தக்ஷன் மறுபடியும் கூறினான் (15) ஓ முனிவரே! தாங்கள் ஏன் மிக்க ச்ரமத்தை அடைகிறீர்? "ஆவோராஜாநம்" என்ற வேதமந்திரத்தால் ருத்ரனுக்கு ஹவிர்பாகம் கொடுக்கவேணுமென்று சொல்லப் பட்டிருக்கிறது (16) ஆகையால் எனது யாகத்தில் எந்த ருத்ரனையாவது பூஜிக்கிறேன். எல்லா ருத்ரர்களுக்கும் ஒருவருக்கொருவர் ஏற்றத் தாழ்வு இல்லை (17) ஆகையால் எனது விருப்பப்படி அவர்களில் ஏதாவது ஓர் ருத்ரன் என் பூஜைக்குரியவரே அன்றி வேறு யாருமல்ல என்ற தக்ஷன் வார்த்தையைக் கேட்டு தத்வார்த்தங்களை அறிந்த அந்த தத்ரீசி முனிவர் கூறினார் (18) ஓ தக்ஷா! ருத்ரன் என்ற பெயரின் பொருளானது யாகத்திலும் அப்படியே முருகனிடத்திலும் எல்லோருக்கும் தாபத்தைச் செய்யும் ஜ்வரத்திலும் பொருந்தியிருப்பது ப்ரஸித்தமல்லவோ (19) மேலும் அப்பொருள் ஸாரூப்ய பதவியை அடைந்திருக்கும் பூத கணங்கள் பாதாள லோகங்களுக்குக் கீழ் பாகத்திலுள்ள காலாக்னிருத்ரர் (20) ஹாடகேச்வரர் கூஷ்மாண்டருத்ரர் இவர்களுக்கும் பொருந்தி இருக்கிறது. எப்பொழுது அக்னிதேவன் தேவர்களுக்காக ஹவிர்பாகங்களைப் பெற்றுக்கொண்டு எதற்குள் செல்லுகிறானோ (21) அப்பொழுதே தேவர்களால் பின் தொடர்ந்து பிடிக்கப்பட்டபோது அவன் ரோதனம் (அழுதல்) செய்ததால் ருத்ரன்

ऋजूंद्रावयतीष्टानां भक्तानां दयया ह्यसौ । वर्तते योगरूढिभ्यां तन्नामेदं सुपावने ॥ २४
तस्माद्दक्ष वृथा मोहं मुक्त्वा त्वं परमेश्वरम् । यज यज्ञेश्वरं साक्षात्सर्वान्मुक्त्वा महेश्वरम् ॥ २५
दक्षः — त्रिषु मूर्तिषु रुद्रोऽयमेकस्संहारकारकः । क्रियेते ब्रह्मविष्णुभ्यां ताभ्यां सृष्टिस्थिती ननु ॥ २६
संहर्तुस्सर्वकर्तृत्वं कथमस्य भवेदिदम् । मोहात्त्वमेव तं सर्वकर्तारं वदसि ध्रुवम् ॥ २७
एवं वदन्तं विप्रेन्द्राः पापिष्ठं प्राहतापसः । शृणु दक्ष महामोहं मुक्त्वा त्वं प्राप्तचेतनः ॥ २८
ज्ञानमूर्तिर्महादेव स्सत्यानन्दगुणः स्मृतः । नास्ति तस्य शरीरञ्च मुक्त्वा चिच्छक्तिमव्ययाम् ॥ २९
स एव ब्रह्मविष्ण्वादीनुत्पाद्य जनकस्स्वयम् । सृष्टिस्थित्यादि कार्याणि कर्तृनेतान्विधायच ॥ ३०
सीदमानेषु सर्वेषु ज्ञायते न हि तैरपि । प्रेरयत्यनिशं सर्वान् कालयन्त्रस्थितानमून् ॥ ३१
हत्वा कालेन तानेतान् ब्रह्मविष्णुमुखान् सुरान् । लीलयाच पुनस्सृष्ट्वा स्वकर्माणि विधायच ॥ ३२

ருஜும் த்ராவயதீஷ்டானும் பக்தானும் தயயா ஹ்யஸௌ ।
வர்ததே யோகரூடிப்யாம் தந்நாமேதம் ஸுபாவனே ॥ 24
தஸ்மாத் தக்ஷ வ்ருதா மோஹம் முக்த்வா த்வம் பரமேச்வரம் ।
யஜ யக்ஞேச்வரம் ஸாக்ஷாத் ஸர்வான் முக்த்வா மஹேச்வரம் ॥ 25
தக்ஷ: — த்ரிஷு மூர்திஷு ருத்ரோऽய மேகஸ்ஸம்ஹாரகாரக: ।
க்ரியேதே ப்ரும்மவிஷ்ணுப்யாம் தாப்யாம் ஸ்ருஷ்டிஸ்திதீ நநு ॥ 26
ஸம்ஹர்துஸ் ஸர்வகர்த்ருத்வம் கதமஸ்ய பவேதிதம் ।
மோஹாத் த்வமேவ தம் ஸர்வகர்தாரம் வதஸி த்ருவம் ॥ 27
ஏவம் வதந்தம் விப்ரேந்த்ரா: பாபிஷ்டம் ப்ராஹுதாபஸ: ।
ச்ருணு தக்ஷ மஹாமோஹம் முக்த்வா த்வம் ப்ராப்தசேதன: ॥ 28
ஞானமூர்திர் மஹாதேவ ஸ்ஸத்யானந்தகுண: ஸ்ம்ருத: ।
நாஸ்தி தஸ்ய சரீரஞ்ச முக்த்வா சிச்சக்திமவ்யயாம் ॥ 29
ஸ ஏவ ப்ரும்மவிஷ்ண்வாதீனுத்பாத்ய ஜனகஸ்ஸ்வயம் ।
ஸ்ருஷ்டிஸ்தித்யாதி கார்யாணி கர்த்ருநேதான் விதாயச ॥ 30
ஸீதமானேஷு ஸர்வேஷு க்ஞாயதே நஹி தைரபி ।
ப்ரேரயத்யநிசம் ஸர்வான் காலயந்த்ரஸ்திதாநமூன் ॥ 31
ஹத்வா காலேன தாநேதான் ப்ரும்மவிஷ்ணு முகான் ஸுரான்
லீலயாச புநஸ்ஸ்ருஷ்ட்வா ஸ்வகர்மாணி விதாய ச ॥ 32

என்ற பெயர் அக்னி தேவனுக்கும் பொருந்துகிறது (22) தனக்கு இஷ்டர்களான பக்தர்களுக்கு தயவினால் அவர்களுடைய துக்கத்தைப் போக்குவதால் பரப்ரும்மமும், ஸர்வேசரும், மஹாதேவரும், முக்கண்ணரும், நீலகண்டரும், ஸத்யானந்த ஞானபாற்கடலும், மிகப் பரிசுத்தருமாகிய அந்தப் பரமசிவனிடத்திலேயே (23) அந்த ருத்ரன் என்ற பெயரானது காரணப் பெயராகவும் ரூடியாகவும் பூர்ணமாய்ப் பொருந்தியிருக்கிறது (24) ஆகையால் ஓ தக்ஷா! நீ மோஹத்தை விட்டு எல்லாத் தேவர்களையும் தள்ளி யாகங்களுக்கு அதிபரும், மஹேச்வரனுமான ஸாக்ஷாத் பரமசிவனையே பூஜிக்க வேண்டும் எனக் கூறினர் (25) தக்ஷன் கூறுகிறான்:— ஓ முனிவரே! மும்மூர்த்திகளில் அந்த ருத்ரன் ஸம்ஹாரத் தொழிலை நடத்துகின்ற ஒருவன். ப்ரும்மா விஷ்ணு இவர்களால் ஸ்ருஷ்டி ஸ்திதி இவ்விரண்டும் நடத்தப் படுகிறதல்லவோ? (26) அப்படியிருக்க ஸம்ஹாரத் தொழிலை மட்டும் நடத்தும் இந்தச் சிவனுக்கு எல்லாத் தொழிலையும் நடத்தும் தன்மை எவ்வாறு ஏற்படும்? நீர் நிச்சயமாய் புத்தி மோஹத்தால்தான் அவனை எல்லாத் தொழிலுக்கும் கர்த்தாவென்று கூறுகின்றீர் (27) ஓ ப்ராம்மணர்களே! இவ்வாறு கூறிய அந்தப் பாதகனைப் பார்த்து ததீசி கூறினர். ஓ தக்ஷா! நீ புத்தி மோஹத்தை விட்டு நல்ல புத்தி அடைந்தவனாய்க் கேள் (28) ஸ்ரீமஹாதேவன் ஞானமூர்த்தியும் ஸத்யானந்த குணமுள்ளவருமென்று சொல்லப்படுகிறார். அவருக்கு என்றும் அழிவற்றதான சேதன சக்தியைத் தவிர வேறு சரீரமில்லை (29) அவரே தகப்பனாக இருந்து ப்ரும்மா விஷ்ணு முதலியவர்களை ஸ்ருஷ்டித்து அவர்களுக்கு ஸ்ருஷ்டி ஸ்திதி முதலிய கார்யங்களை ஏற்படுத்துகிறார் (30) எல்லா ப்ரபஞ்சமும் நாசமடையும்போது அவர்களால் கூட அவர் அறியப்படுவதில்லை. காலமாகிய யந்திரத்தில் அகப்பட்ட இந்த எல்லோரையும் அவர் எப்பொழுதும் ஆட்டிவைக்கிறார் (31) பலகாலம் சென்றவுடன் ப்ரும்மா விஷ்ணு முதலிய அந்த எல்லாத்

वेदानध्यापयामास षण्मुखान्महेश्वरः । तथा विभूतिरुद्राक्षाण्यमून्धारयति प्रभुः ॥ ३३
पञ्चाक्षरं महामन्त्रं पञ्चब्रह्मस्वरूपकम् । उपदिष्ट्वा महादेवो रक्षत्यनिशमव्ययः ॥ ३४
मोहितांस्तु पुनर्दृष्ट्वा विनिगृह्णाति शंकरः । नशक्योन्यैस्सुरैर्यस्मात्संहारः कर्तुमीश्वरात् ॥ ३५
करोति तं ततश्शंभूरुद्ररूपी जगद्गुरुः । अतस्सृष्टिस्थितिध्वंसतिरोभावादयो विभोः ॥ ३६
परमेशान्महादेवात् सत्यज्ञानस्वरूपिणः । एवमेव पुरा केचिदृषयः प्राप्तसंशयाः ॥ ३७
मेरुं गत्वा विधातारं दृष्ट्वा तत्र प्रजापते । स्तुत्वा ते विविधैः स्तोत्रैः पप्रच्छुर्विनयानताः ॥ ३८
ब्रूहि नो भगवन्धात स्संशयाविष्टचेतसाम् । परंब्रह्म परंज्योतिः कोवादेवो भवेदिति ॥ ३९
तेषां तद्वचनं श्रुत्वा ब्रह्मा ध्यात्वा क्षणं तदा । हृत्पुण्डरीकमध्यस्थं नीलग्रीवं त्रिलोचनम् ॥ ४०
चन्द्रार्धभूषणं सौम्यं सच्चिदानन्द विग्रहम् । कृष्णपिङ्गलमीशानं ऋतं सत्यं परात्परम् ॥ ४१

வேதாநத்யாபயாமாஸ ஸ்ஷடங்கான் மஹேச்வர: ।
ததா விபூதிருத்ராக்ஷாண்யமூன் தாரயதி ப்ரபு: ॥ 33
பஞ்சாக்ஷரம் மஹாமந்த்ரம் பஞ்சப்ரும்ம ஸ்வரூபகம் ।
உபதிஷ்ட்வா மஹாதேவோ ரக்ஷத்யனிச மவ்யய: ॥ 34
மோஹிதாம்ஸ்து புநர்த்ருஷ்ட்வா விநிக்ருண்ஹாதி சங்கர: ।
ந சக்யோன்யைஸ்ஸுரைர் யஸ்மாத் ஸம்ஹார: கர்துமீச்வராத் 35
கரோதி தம் ததச் சம்பூ ருத்ரரூபீ ஜகத் குரு: ।
அதஸ் ஸ்ருஷ்டி ஸ்திதி த்வம்ஸ திரோபாஸாதயோ விபோ: ॥ 36
பரமேசான் மஹாதேவாத் ஸத்ய க்ஞான ஸ்வரூபிண: ।
ஏவமேவ புரா கேசித்ருஷய: ப்ராப்தஸம்சயா: ॥ 37
மேரும் கத்வா விதாதாரம் த்ருஷ்ட்வா தத்ர ப்ரஜாபதே ।
ஸ்துத்வா தே விவிதை: ஸ்தோத்ரை: பப்ரச்சுர் வினயாநதா: ॥ 38
ப்ருஹ்யேஷாம் பகவன் தாத ஸ்ஸம்சயாவிஷ்டசேதஸாம் ।
பரம் ப்ரும்ம பரஞ்ஜ்யோதி: கோவா தேவோ பவேதிதி ॥ 39
தேஷாம் தத்வசனம் ச்ருத்வா ப்ரும்மா த்யாத்வா க்ஷணம் ததா
ஹ்ருத்புண்டரீக மத்யஸ்தம் நீலக்ரீவம் த்ரிலோசனம் ॥ 40
சந்த்ரார்தபூஷணம் ஸௌம்யம் ஸச்சிதாநந்தவிக்ரஹம் ।
க்ருஷ்ணபிங்கள மீசானம் ருதம் ஸத்யம் பராத்பரம் ॥ 41

தேவர்களையும் அவர் நாசம் செய்து பிறகு விளையாட்டாக எல்லோரையும் ஸ்ருஷ்டித்து அவர்களுக்குத் தொழிலையும் ஏற்படுத்திப் (32) பிறகு அவர்களுக்கு அந்த மஹேச்வரன் வேதங்களை ஆறு அங்கங்களோடு கற்பித்து அவர்களை விபூதி ருத்திராக்ஷங்களை தரிக்கும்படி செய்தார் (33) ஸத்யோஜாதம், வாமதேவம், அகோரம், தத்புருஷம், ஈசானம் ஆகிய ஐந்து ப்ரும்ம ஸ்வரூபத்தைக்கொண்ட ஸ்ரீ பஞ்சாக்ஷர மஹாமந்திரத்தையும் உபதேசித்து அழிவில்லாத அந்த மஹாதேவன் அவர்களை எப்பொழுதும் ரக்ஷித்து வருகிறார் (34) அவர்கள் மறுபடியும் புத்தி மோஹம் அடைவதைப் பார்த்து ஸ்ரீ சங்கரன் அவர்களை அடக்குகிறார். ஈச்வரனான பரமசிவனைத் தவிர மற்ற தேவர்களால் ஸம்ஹாரமானது செய்ய முடிகிறதில்லை (35) ஆதலால் உலகிற்கு குருவான ஸ்ரீ பரமசிவன் ருத்ர ரூபியாய் இருந்துகொண்டு அந்த ஸம்ஹாரத் தொழிலைச் செய்கிறார். ஆகவே ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் திரோபாவம் (மறைதல்) முதலியவைகள் ப்ரபுவும் (36) பரமேச்வரரும் ஸத்ய ஞான ஸ்வரூபியுமான ஸ்ரீ மஹாதேவனுலேயே செய்யப்படுகின்றன. முன் சில ரிஷிகள் இம்மாதிரி ஸந்தேஹம் கொண்டவர்களாகி (37) மஹாமேரு மலைக்குச் சென்று ஓ தக்ஷா! அவர்கள் அங்கு ப்ரும்மாவைக் கண்டு பல ஸ்தோத்திரங்களால் துதித்து விநயத்தோடு வணங்கிக் கேட்டார்கள். (38) ஓ பகவானுன ப்ரும்ம தேவா! ஸந்தேகத்தால் சூழப்பட்ட மனமுடைய எங்களுக்குப் பரப் ப்ரும்மமும் பரஞ்ஜோதியுமான தேவன் யார் என்பதைக் கூறவேண்டும் (39) ப்ரும்மாவும் அவர்களுடைய வார்த்தையைக் கேட்டவுடன் ஹ்ருதய கமல மத்தியில் இருப்பவரும் நீல கண்டரும் முக்கண்ணரும் சந்திரக் கலையை அலங்காரமாக தரித்தவரும் சாந்த மூர்த்தியும் ஸச்சிதாநந்த மூர்த்தியும் ஓர் பக்கத்தில் கருப்பும் மற்றோர் பக்கத்தில் சிவப்புமான நிறத்தைக் கொண்டவரும் மானஸிக ஸத்ய ஸ்வரூபியும் வாசிக ஸத்ய ஸ்வரூபியும் ப்ரபஞ்சத்தைக் காட்டிலும் வேறானவருமான ஸ்ரீ பரமேச்

आनन्दाश्रुकणान् सिञ्चन् हर्षगद्गदवाग्यम् । ईशानस्सर्वविद्यानामीश्वरो जगतां प्रभुः ॥ ४२
ब्रह्मणोऽधिपति श्शंभु र्ब्रह्माधिपतिरव्ययः । सदाशिवः परञ्ज्योतिरोङ्कारनिलयो महान् ॥ ४३
स एव शंकरश्शंभुः परं ब्रह्म न चेतरः । सत्यं सत्यं पुनस्सत्य मुद्धृत्यकरमुच्यते ॥ ४४
ऋतं सत्यं ब्रह्मपरं पुमांसं कृष्णपिङ्गलम् । ऊर्ध्वज्वलनरेतस्कं विश्वाकारं महेश्वरम् ॥ ४५
नमस्कृत्वैव ते वेदा वदन्तीशं महाभयात् । स एव तस्मात्सर्वेश इशतवारं मयोच्यते ॥ ४६
तत्समो नास्ति लोकेषु न वरो नापरः क्वचित् । सर्वेज्यायानणीयांश्च स्तब्धो वृक्ष इवाचलः ॥ ४७
दिवि तिष्ठति सर्वात्मा तेन पूर्णमिदञ्जगत् । यस्माद्वाचो निवर्तन्ते अप्राप्य मनसा सह ॥ ४८
आनन्दमस्य यो वेत्ति न भयं तस्य कुत्रचित् । अद्यापि ब्रह्मविष्णुभ्यां न दृष्टोऽयं महेश्वरः ॥ ४९
पशूनां पतिरीशोऽयं ब्रह्माद्याः पशवः स्मृताः । करुणामूर्तिरतुलो भक्तानामभयङ्करः ॥ ५०

ஆனந்தாச்ருகணுன் ஸிஞ்சன் ஹர்ஷகத்கதவாகயம் ।
ஈசான ஸ்ஸர்வவித்யாநு மீச்வரோ ஜகதாம்ப்ரபு: ॥ 42
ப்ரும்மணோதிபதி ச்சம்பூர் ப்ரும்மாதிபதி ரவ்யய: ।
ஸதாசிவ: பரஞ்ஜ்யோதி ரோங்காரநிலயோ மஹான் ॥ 43
ஸ ஏவ சங்கரச் சம்பு: பரம் ப்ரும்ம ந சேதர: ।
ஸத்யம் ஸத்யம் புநஸ் ஸத்ய முத்ருத்ய கரமுச்யதே ॥ 44
ருதம் ஸத்யம் ப்ரும்ஹ பரம் புமாம்ஸம் க்ருஷ்ணபிங்களம் ।
ஊர்த்வஜ்வலனரேதஸ்கம் விச்வாகாரம் மஹேச்வரம் ॥ 45
நமஸ்க்ருத்வைவ தே வேதா வதந்தீசம் மஹாபயாத் ।
ஸ ஏவ தஸ்மாத் ஸர்வேச ச்சதவாரம் மயோச்யதே ॥ 46
தத்ஸமோ நாஸ்தி லோகேஷு ந வரோ நாபர: க்வசித் ।
ஸர்வஜ்யாயா நணீயாம்ச்ச ஸ்தப்தோ வ்ருக்ஷ இவாசல: ॥ 47
திவி திஷ்டதி ஸர்வாத்மா தேந பூர்ண மிதம்ஜகத் ।
யஸ்மாத் வாசோ நிவர்தந்தே அப்ராப்ய மனஸா ஸஹ ॥ 48
ஆனந்தமஸ்ய யோ வேத்தி ந பயம் தஸ்ய குத்ரசித் ।
அத்யாபி ப்ரும்ஹவிஷ்ணுப்யாம் ந த்ருஷ்டோऽயம் மஹேச்வர: 49
பசூநாம் பதிரீசோऽயம் ப்ரும்ஹாத்யா: பசவ: ஸ்ம்ருதா: ।
கருணாமூர்தி ரதுலோ பக்தாநு மபயங்கர: ॥ 50

வரனைச் சிறிது நேரம் த்யானம் செய்து (40–41) ஆனந்தக் கண்ணீர்த் திவலைகளால் நனைந்தவரும், சந்தோஷத்தால் தழதழத்த வார்த்தையை உடையவருமாகி எல்லா வித்தைகளுக்கும் ஈச்வரனும், எல்லா உலகங்களுக்கும் ஈசனும், ப்ரபுவும் (42) ப்ரும்மாவுக்கு அதிபரும், பக்தர்களுக்கு க்ஷேமத்தை அளிப்பவரும், வேதங்களுக்கு அதிபரும், என்றும் அழியாதவரும், பரஞ்ஜோதியும், ப்ரணவத்தில் குடியிருப்பவரும், மஹானுமான (43) ஸ்ரீ சங்கரன்தான் பரப்ரும்மமேயன்றி மற்றவரல்லர் எனக் கைகளை உயரத் தூக்கிக் கொண்டு ஸத்யமாய்ச் சொல்லுகிறேன். இது ஸத்யம்! இது ஸத்யம்!! (44) எங்கும் நிறைந்திருப்பவரும், ஸத்ய ரூபியும், பரப்ரும்ம மூர்த்தியும், ஓர் பக்கத்தில் கருப்பும் மற்றோர்பக்கத்தில் சிவப்புமான நிறத்தை உடைய புருஷரும், மேலே நோக்கி ஜ்வலிக்கும் ரேதஸ்ஸை உடையவரும், உலக உருவாய் இருப்பவருமான அந்த மஹேச்வரனை (45) வேதங்கள் நமஸ்கரித்து மிகுந்த பயத்துடன் அவரையே ஸர்வேச்வரனாகக் கூறுகின்றன. ஆதலால் அவரே ஸர்வேச்வரனென்று நான் நூறு முறை கூறுகின்றேன். (46) உலகில் அவருக்கு ஒப்பானவரோ மேல்பட்டவரோ கிடையாது. பெரிய வஸ்துக்களுக்கெல்லாம் பெரிதாக உள்ளவர், சிறிய வஸ்துக்களுக்கெல்லாம் சிறியதாக இருப்பவர், கட்டைபோல் ஆகாசத்தில் ஓங்கி விளங்கி நிற்கின்றார். (47) யாவருக்கும் ஆத்மாவாக இருக்கும் அவரால் இந்த உலகம் முழுவதும் நிரம்பியிருக்கிறது. வேதங்கள் மனதினால் கூட அவரை எட்டமுடியாமல் திரும்புகின்றன. (48) இவருடைய ஆனந்த ஸ்வரூபத்தை எவன் உணருவானோ அவனுக்கு ஓரிடத்திலும் பயமில்லை. இன்றும்கூட ப்ரும்மாவான என்னாலும் விஷ்ணுவாலும் கூட இந்தப் பரமேச்வரன் காணப்படவில்லை. (49) இந்த ஈச்வரன் ப்ராணிகளாகிற பசுக்களுக்குப் பதி. ப்ரும்மாவாகிய யான்முதற்கொண்டு யாவரும் பசுக்களே. கருணை

सर्वैश्वर्येण संपन्न श्शम्भुराकाशमध्यगः । बहुना किं परं ब्रह्म स एव ऋषिसत्तमाः ॥ ५१
इति धातृवचः श्रुत्वा ते सर्वे मुनिसत्तमाः । त्यक्तमोहा महादेवं परं ब्रह्म सनातनम् ॥ ५२
ज्ञात्वा प्रणम्य धातारं स्तुत्वाच विविधैः स्तवैः । धृतत्रिपुण्ड्ररुद्राक्षमालाभरणभूषिताः ॥ ५३
वरपञ्चाक्षरीमन्त्रजपतत्परमानसाः । कैवल्यमाययुस्सर्वे शिवभक्ताः प्रजापते ॥ ५४
ततस्सभगवानीशः परमात्मा शिवः स्वयम् । नान्योऽतोऽस्ति महादेवाद्दृष्टाश्रोता परात्परः ॥ ५५
इति वेदान्तवाक्यानां निष्ठा काष्ठा महेश्वरे । पतिस्सएव भगवांस्तदन्ये पशवः स्मृताः ॥ ५६
निश्चितं ब्रह्मणा पूर्वमेवं वेदानुसारतः । त्वञ्च पूर्वं वचः श्रुत्वा ब्रह्मणस्त्वष्टुरीदृशम् ॥ ५७
अवाप्य भक्तिं देवेशे तपस्तप्त्वा सुदुश्चरम् । आप्तवानीश्वरादृक्ष परमैश्वर्यमीदृशम् ॥ ५८
ब्रह्मणस्सृष्टिकर्तृत्वं विष्णोर्दानवमर्दनम् । स्वर्गाधिपत्य मिन्द्रस्य शिवपूजाफलं खलु ॥ ५९

ஸர்வைச்வர்யேண ஸம்பன்ன ச்சம்புராகாசமத்யக: |
பஹுனா கிம் பரம் ப்ரும்ஹ ஸ ஏவ ரிஷிஸத்தமா: || 51

இதி தாத்ரு வச: ச்ருத்வா தே ஸர்வே முனிஸத்தமா: |
த்யக்த மோஹா மஹாதேவம் பரம் ப்ரும்ஹ ஸனாதனம் || 52

ஞாத்வா ப்ரணம்ய தாதாரம் ஸ்துத்வாச விவிதை: ஸ்தவை: |
த்ருத த்ருபுண்ட்ர ருத்ராக்ஷ மாலா பரணபூஷிதா: || 53

வரபஞ்சாக்ஷரிமந்த்ரஜபதத்பரமானஸா: | கைவல்ய மாயயு ஸ்ஸர்வே சிவபக்தா: ப்ரஜாபதே || 54

தத ஸ்ஸ பகவாநீச: பரமாத்மா சிவ: ஸ்வயம் |
நாந்யோऽதோऽஸ்தி மஹாதேவாத் த்ரஷ்டா ச்ரோதா பராத்பர: 55

இதி வேதாந்தவாக்யானும் நிஷ்டா காஷ்டா மஹேச்வரே |
பதி ஸ்ஸஏவபகவான் ததன்யே பசவ: ஸ்ம்ருதா: || 56

நிச்சிதம் ப்ரும்ஹணா பூர்வமேவம் வேதாநுஸாரத: |
த்வஞ்ச பூர்வம் வச: ச்ருத்வா ப்ரும்ஹண ஸ்ஸ்ரஷ்டுரீத்ருசம் || 57

அவாப்ய பக்திம் தேவேசே தபஸ்தப்த்வா ஸுதுஸ்சரம் |
ஆப்தவாநீச்வராத் தக்ஷ பரமைச்வர்ய மீத்ருசம் || 58

ப்ரும்ஹண ஸ்ஸ்ருஷ்டிகர்த்ருத்வம் விஷ்ணோர்தானவமர்தனம் |
ஸ்வர்காதிபத்ய மிந்த்ரஸ்ய சிவ பூஜா பலம் நநு || 59

மூர்த்தியும், ஒப்பற்றவரும், பக்தர்களுக்கு அபயமளிப்பவரும் (50) எல்லா ஐச்வர்யங்களுடனும் கூடி யிருப்பவரும், ஹ்ருதயாகாசத்தில் விளங்கியிருப்பவரான சம்பூவானவர் ஓ முனிச்ரேஷ்டர்களே! வளர்த்துச் சொல்லுவதில் யாது பயன்? பரப்ரும்மமென்பது அவர்தான். (51) இவ்வாறான ப்ரும்ம தேவனின் வார்த்தையைக் கேட்ட முனிச்வரர்கள் மோஹத்தை விட்டவர்களாகி மஹாதேவனையே ஸனாதனமான பரம்பொருளாக (52) உணர்ந்து ப்ரும்மதேவனை நமஸ்கரித்து பலவாறாகத் துதித்து விபூதியையும் ருத்ராக்ஷ மாலைகளையும் ஆபரணமாகத் தரித்தவர்களாயும், சிறந்த பஞ்சாக்ஷரி மஹா மந்திரத்தை ஜபிப் பதில் மனம்கொண்டவர்களாயும் ஆகி சிவபக்தர்களான அந்த யாவரும் ஓ தக்ஷப்ரஜாபதியே! மோக்ஷத்தை அடைந்தனர். (53-54) ஆதலால் ஸகல குணங்களும் நிரம்பிய அந்த ஜகதீசனான பரமசிவனே பரமாத்மா. அந்த மஹாதேவனைத் தவிரப் பார்ப்பவரோ கேட்பவரோ பரம்பொருளோ வேறில்லை (55) என்ற வேதாந்த வாக்யங்களுக்கு இந்த மஹேச்வரனிடத்திலேயே முக்கியமான பற்றுதல். அந்த பகவானே பதி என்றும் மற்றவர்கள் பசுக்களென்றும் (56) முன் ப்ரும்ம தேவரால் வேதத்தை ஆதாரமாகக் கொண்டு நிச்சயிக்கப்பட்டது. நீயும் முன்பு ஸ்ருஷ்டிகர்த்தாவான ப்ரும்ம தேவனின் வார்த்தையைக் கேட்டு அந்தப் பரமசிவனிடத்தில் பக்திகொண்டு கடினமான தவத்தைச் செய்து ஓ தக்ஷா! இவ்வாறான சிறந்த ஐச்வர்யத்தை அடைந்தாய் (57-58) ப்ரும்ம தேவனுக்குப் படைத்தல் பதவி கிடைத்ததும், மஹாவிஷ்ணுவிற்கு அசுரர்களை நிக்ரஹம் செய்யும் சக்தியும், இந்திர னுக்கு ஸ்வர்கத்தை ஆளும் சக்தியும் சிவ பூஜையின் பயனல்லவா? (59) உனக்கு மரண காலம்

मायया मोहितो नूनं त्वमासन्नमृतिर्यतः । ब्रह्मणा विष्णुना वापि तस्य माया दुरत्यया ॥ ६०
मायां तु प्रकृतिं विद्यान्मायिनंतु महेश्वरम् । न बाधते तान् साघोरा महात्मानश्शिवप्रियान् ॥ ६१
अत एव भवानद्य किञ्चिद्वा न स्मरत्यहो । महामोहवशादेते ब्रह्मविष्ण्वादयस्सुराः ॥ ६२
आसते तेऽन्तिकं प्राप्य सर्वेऽपि हविराशया । बहुना किं दुराचार यदीच्छसि परं हितम् ॥ ६३
अध्वरेशं महादेवं हविर्भिः प्रीणयाधुना । सर्वात्मा स महादेवः परं ब्रह्म न चेतरः ॥ ६४
हितमिच्छन्नहं दक्ष तवेत्थमवदं ध्रुवम् । एवमुक्त्वा ऋषिवरो मौनमाश्रित्य तिष्ठति ॥ ६५

इति श्री स्कान्दे महापुराणे शंकरसंहितायां शिवरहस्यखण्डे
दक्षकाण्डे द्वादशोऽध्यायः

மாயயா மோஹிதோ நூனம் த்வமாஸன்னம்ருதிர்யத: ।
ப்ரம்ஹணா விஷ்ணுனா வாபி தஸ்ய மாயா துரத்யயா ॥ 60

மாயாம் து ப்ரக்ருதிம் வித்யாத் மாயினம் து மஹேச்வரம் ।
ந பாததே தான் ஸாகோரா மஹாத்மானச்சிவப்ரியான் ॥ 61

அத ஏவ பவானத்ய கிஞ்சித்வா ந ஸ்மரத்யஹோ ।
மஹாமோஹவசாதேதே ப்ரம்மவிஷ்ண்வாதயஸ்ஸுரா: ॥ 62

ஆஸதே தேऽந்திகம் ப்ராப்ய ஸர்வேऽபி ஹவிராசயா ।
பஹுனா கிம் துராசார யதிச்சஸி பரம் ஹிதம் ॥ 63

அத்வரேசம் மஹாதேவம் ஹவிர்பி: ப்ரீணயாதுனா ।
ஸர்வாத்மா ஸ மஹாதேவ: பரம் ப்ரம்ஹ ந சேதர: ॥ 64

ஹிதமிச்சன்னஹம் தக்ஷ தவேத்தமவதம் த்ருவம் ।
ஏவ முக்த்வா ரிஷிவரோ மௌனமாச்ரித்ய திஷ்டதி ॥ 65

இதி ஸ்ரீஸ்காந்தே மஹாபுராணே சங்கரஸம்ஹிதாயாம் சிவாஹஸ்யகண்டே
தக்ஷகாண்டே த்வாதசோऽத்யாய: ॥

நெருங்கிவிட்டபடியால்தான் புத்திப் பிரமம் அடைந்திருக்கிறாய். அவரது மாயையை ப்ரும்மாவோ விஷ்ணுவோ கடக்க முடியாது. (60) ப்ரக்ருதி என்பதே மாயை எனப்படும் அந்த மாயையை அடக்கி வைத்திருப்பவரே பரமேச்வரர். அந்த க்ரூரமான மாயை சிவபக்தர்களைப் பாதிப்பதில்லை. (61) அந்த மாயையால்தான் நீர் பரமசிவனைச் சிறிதளவுகூட நினைக்கவில்லை. இந்த ப்ரும்மா விஷ்ணு முதலிய தேவர்களும் மஹாமோஹத்திற்கு வசமானவர்களாகி ஹவிர்பாகத்தில் ஆசைகொண்டு உனது சமீபத்திற்கு வந்திருக்கிறார்கள். ஓ கெட்ட நடையுள்ள தக்ஷனே! வளத்துவதால் என்ன? நீ சிறந்த நன்மையை விரும்புவாயேயாகில் (62–63) யாகத்திற்குத் தலைவனான ஸ்ரீ மஹாதேவனை ஹவிஸ்ஸுக்களால் இப்பொழுது திருப்தி செய்து வைப்பாயாக. அந்த மஹாதேவனே ஸகல ப்ரபஞ்ச ஸ்வரூபியான பரப்ரும்மம். வேறு ஒருவருமில்லை. (64) ஓ தக்ஷா! உனக்கு நன்மையை விரும்பியே நான் இவ்வாறாக நிச்சயம் உரைத்தேன் என்று இவ்வாறுகச் சொல்லிவிட்டு அச்சிறந்த ததீசி முனிவர் மௌனங்கொண்டு அமர்ந்திருந்தார். (65)

பன்னிரெண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

॥ अथ त्रयोदशोऽध्यायः ॥

श्री शिवेन दारुकावनप्रवेशः ॥

विहस्य दक्षः पापिष्ठः पुनः प्राह वचो द्विजाः । परमात्मा कथं रुद्रः परं ब्रह्म कथं मुने ॥ १
यदि वायं परं ब्रह्म कथमेष दिगम्बरः । कथं बिभर्ति शूलं वा कपालं वातिगर्हितम् ॥ २
मुक्तलज्जः कथं वीथ्यां भिक्षामटति निर्भयः । कर्कशं व्याघ्रचर्मापि कथं धत्ते पिनाकधृक् ॥ ३
मृगं वा परशुं घोरं पाणिभ्यां वहते खलु । आशीविषै महाघोरै स्सर्पै र्वेष्टित विग्रहः ॥ ४
भूतसेनाभि रनिशं भीताभिः परितो वृतः । मूर्ध्ना बिभर्ति सततं शिरोमुण्डं शुचिस्मितम् ॥ ५
धत्ते डमरुकञ्चापि महारावविभीषणम् । अपस्मारमघः कृत्वा पादस्याद्यापि वर्तते ॥ ६
धृत्वा करतले वह्निं नृत्यते खलु भीषणम् । निष्ठुरं गजचर्मापि ध्रियते किं परात्मना ॥ ७
वाराहं दन्तमुत्पाट्य कथं ब्रह्म बिभर्ति तम् । ध्रियतेऽनेन घोरेण कमठास्थि सुनिन्दितम् ॥ ८
अपिबत्कालकूटंच विषन्तु (विषञ्च) श्चेष्टयापुरा । भिक्षामटति लोकेषु सर्वेष्वपि दुराशया ॥ ९

॥ அத த்ரயோதஶோऽத்யாய: ॥

ஸ்ரீ சிவன் தாருகவனத்தில் பிரவேசித்தல்

விஹஸ்ய தக்ஷ: பாபிஷ்ட: புன: ப்ராஹ வசோ த்விஜா: ।
பரமாத்மா கதம் ருத்ர: பரம் ப்ரம்ம கதம் முனே ॥ 1
யதி வாயம் பரம் ப்ரம்ஹ கதமேஷ திகம்பர: ।
கதம் பிபர்தி சூலம் வா கபாலம் வாதிகர்ஹிதம் ॥ 2
முக்தலஜ்ஜ: கதம் வீத்யாம் பிக்ஷாமடதி நிர்பய: । கர்கசம் வ்யாக்ர சர்மாபி கதம் தத்தே பினாகத்ருக் ॥ 3
ம்ருகம் வா பரசும் கோரம் பாணிப்யாம் வஹதே கலு ।
ஆசீவிஷைர் மஹாகோரைஸ் ஸர்பைர் வேஷ்டிதவிக்ரஹ: ॥ 4
பூதஸேனாபி ரனிசம் பீதாபி: பரிதோ வ்ருத: । மூர்த்ன பிபர்தி ஸततம் சிரோமுண்டம் சுசிஸ்மிதம் ॥ 5
தத்தே டமருகஞ்சாபி மஹாராவ விபீஷணம் । அபஸ்மாரமத: க்ருத்வா பாதஸ்யாத்யாபி வர்ததே ॥ 6
த்ருத்வா கரதலே வன்ஹிம் ந்ருத்யதே கலு பீஷணம் । நிஷ்டுரம் கஜசர்மாபி த்ரியதே கிம் பராத்மனா ॥ 7
வாராஹம் தந்தமுத்பாட்ய கதம் ப்ரும்ஹ பிபர்திதம் । த்ரியதேऽநேந கோரேண கமடாஸ்தி ஸுநிந்திதம் 8
அபிபத் காலகூடஞ்ச விஷம் து (விஷஞ்ஞ) ச்சேஷ்டயாபுரா ।
பிக்ஷாமடதி லோகேஷு ஸர்வேஷ்வபி துராசயா ॥ 9

பதின்மூன்றாவது அத்தியாயம்.

ஓ பிராம்மணோத்தமர்களே, பிறகு மஹா பாபியான தக்ஷன் சிரித்துக்கொண்டு மறுபடியும் கூறினான். ஓ முனிவரே, அந்த ருத்ரன், பரமாத்மாவாகவும், பரப்ரும்மமாகவும் எவ்விதம் ஆவான்? (1) அவன் பரப்ரும்மமாயிருப்பானேயாகில் எப்படி வஸ்திரமில்லாதவனாக ஆவான்? ஏன் அவன் சூலத்தையும், மிக இழிவான மண்டை ஓட்டையும் வைத்திருக்கிறான்? (2) ஏன் அவன் கொஞ்சமேனும் வெட்கமில்லாமல் பயமின்றித் தெருவில் பிச்சை எடுக்கிறான்? ஏன் அவன் கடினமான புலித்தோலையும், அஜக வத்தினாலான பினாகமென்ற வில்லையும் தரிக்கிறான்? (3) மானையும், கடுரமான கோடரியையும் கைகளால் வஹிக்கிறான் அல்லவா? மிக்க கோரங்களும், பற்களில் விஷங்கொண்டவைகளுமான பாம்புகளை உடம்பில் தரித்துக்கொண்டிருக்கிறான். (4) மிக்க பயங்கரமான பூதஸேனைகளால் எப்பொழுதும் சூழப்பட்டிருக்கிறான். சிரித்துக்கொண்டிருக்கிற ஓர் முண்டமான தலையை எப்பொழுதும் தலையில் தரிக்கிறான். (5) மிகுந்த சப்தத்தால் பயங்கரமான உடுக்கையைக் கையில் தரிக்கிறான். இப்பொழுதும் கூட தனது காலின்கீழ் அபஸ்மாரரோக தேவதையை வைத்து மிதித்துக் கொண்டிருக்கிறான். (6) கையில் நெருப்பைத் தரித்துக்கொண்டு பயங்கரமாய்க் கூத்தாடுகிறான் அல்லவா? மிகவும் கடினமான யானைத்தோலை அந்த பரமாத்மா ஏன் போர்த்திக் கொண்டிருக்கிறான்? (7) ப்ரும்மமாகிய அவன் பன்றியின் பல்லைப் பிடுங்கி ஏன் தரிக்கிறான்? இந்தக் கொடியனால் ஏன் மிகவும் இழிவான ஆமையின் எலும்பு தரிக்கப்படுகிறது? (8) முன்பு அவன் கெட்ட நடத்தையால் காலகூட விஷத்தைக் குடித்திருக்

तुन्दिलं वृषभं वृद्धमारोहति विगर्हितम् । मुण्डमालाभिरन्याभिस्सर्वदा परिवेष्टितः ॥ १०
अशुचीनि सदास्थीनि धत्तेऽङ्गे कुसुमं यथा । यज्ञोपवीतमद्यापि शिरोरुहमयं किल ॥ ११
शूलाग्रे प्रेतमनिशं प्रोतं कृत्वा विभीषणम् । श्मशानभस्मभिर्गात्र मुद्धूळय सततोद्यमः ॥ १२
ननृते स महाटोपं कृत्वा कृत्वा मदेन सः । संहर्त्ता सर्वभूतानां निष्ठुरो बहुरूपवान् ॥ १३
कामान्धीकृत चक्षुस्सञ्छिरसा वहते स्त्रियम् । एकां परामपि सदा पार्श्वे लोकेषु विश्रुतः ॥ १४
सकुटुम्बी गृहस्थोऽयं पुत्रवान्धनवर्जितः । तमोमयगुणो घोरे स्सर्वेषामपकारकः ॥ १५
कथमेतादृशो रुद्रः परं ब्रह्म ऋषीश्वर । इत्युक्तवन्तं तं कोपा द्दधीचि र्वीक्ष्य तापसः ॥ १६
न हि संभाषणं युक्तं दक्षेणानेन पापिना । अवलोकयितुञ्चास्य न युक्तं मुखमीदृशम् ॥ १७
महामोहवशात्पापी सभायामेवमुक्तवान् । अनुक्त्वोत्तरमेतस्य न युक्तं गन्तुमत्रहि ॥ १८
इति निश्चित्य मनसा प्राहैनं तापसेश्वरः । महामोहवशाद्दक्ष शिवस्य परमात्मनः ॥ १९

துந்திலம் வ்ருஷபம் வ்ருத்தமாரோஹதி விகர்ஹிதம் । முண்டமாலாபி ரன்யாபி ஸ்ஸர்வதா பரிவேஷ்டித:
அசுசீநி ஸதாஸ்தீனி தத்தேऽங்கே குஸுமம் யதா । யக்ஞோபவீதமத்யாபி சிரோருஹமயம் கில ॥ 11

சூலாக்ரே ப்ரேதமனிசம் ப்ரோதம் க்ருத்வா விபீஷணம் ।
ச்மசானபஸ்மபிர்காத்ர முத்தூள்ய ஸततோத்யம: ॥ 12

நந்ருதே ஸ மஹாடோபம் க்ருத்வா க்ருத்வா மதேன ஸ: ।
ஸம்ஹர்தா ஸர்வபூதானும் நிஷ்டுரோ பஹுரூபவான் ॥ 13

காமாந்தீக்ருத சக்ஷுஸ்ஸந் சிரஸா வஹதே ஸ்த்ரியம் ।
ஏகாம் பராமபி ஸதா பார்ச்வே லோகேஷு விச்ருத: ॥ 14

ஸகுடும்பீ க்ருஹஸ்தோऽயம் புத்ரவான் தனவர்ஜித: । தமோமயகுணோ கோரஸ்ஸர்வேஷாமபகாரக: 15
கதமேதாத்ருசோ ருத்ர: பரம் ப்ரும்ஹ ரிஷிச்வர । இத்யுக்த்வந்தம் தம் கோபாத் ததீசிர்வீக்ஷ்ய தாபஸ: 16
ந ஹி ஸம்பாஷணம் யுக்தம் தக்ஷேணாநேந பாபிநா । அவலோகயிதுஞ்சாஸ்ய ந யுக்தம் முகமீத்ருசம் 17

மஹாமோஹவசாத் பாபி ஸபாயாமேவ முக்தவான் ।
அனுக்த்வோத்தர மே தஸ்ய ந யுக்தம் கந்துமத்ரஹி ॥ 18

இதி நிச்சித்ய மனஸா ப்ராஹைனம் தாபஸேச்வர: ।
மஹாமோஹவசாத் தக்ஷ சிவஸ்ய பரமாத்மன: ॥ 19

கிறான்? அவன் துராசையால் உலகங்கள் தோறும் பிச்சை எடுக்கிறான். (9) மட்டமான பெருத்த வயிற்றை உடைய கிழக்காளையின் மீது ஏறுகிறான். அவன் எப்பொழுதும் வேறான முண்ட மாலைகளை அணிந்துகொண்டிருக்கிறான். (10) மிகவும் அசுத்தமான எலும்புகளை எப்பொழுதும் புஷ்பத்தைப் போல் சரீரத்தில் தரிக்கிறான். இன்னும் அவன் தலைமயிர்களை யக்ஞோபவீதமாகத் தரித்துக்கொண்டிருக்கிறானல்லவோ? (11) அவன் எப்பொழுதும் சூலத்தின் நுனியில் மிக பயங்கரமான பிணத்தைக் கோத்துக் கொண்டிருக்கிறான். சுடுகாட்டுச் சாம்பலை உடம்பில் பூசிக்கொண்டு எப்பொழுதும் மிக முயற்சியுடன் (12) மதத்தால் மிகுந்த அட்டஹாஸம் செய்து கொண்டு கூத்தாடுகிறான். மேலும் அவன் எல்லா ப்ராணிகளையும் ஸம்ஹரிப்பவன். மிகக் கொடியவன். பல உருவங்களைத் தரிப்பவன். (13) அவன் காமவிகாரத்தால் கண் தெரியாதவனாகி ஓர் பெண்ணைத் (கங்கையை) தலையிலும் மற்றொருவளைப் (அம்பிகையை) பக்கத்திலும் தரிக்கிறான் என்பது உலகில் ப்ரஸித்தமானது. (14) மனைவி, குழந்தைகளோடு ஓர் குடும்பியாயிருந்தும் தரித்திரனாயிருக்கிறான். அவன் தமோகுணம் உடையவன். மிகக் கொடியவன். எல்லோருக்கும் அபகாரம் செய்கிறவன். (15) ஓ ரிஷிச்ரேஷ்டரே, இப்படிப்பட்ட அந்த ருத்திரன் எவ்விதம் பரப்ரும்மமாவான்? எனக்கூறிய அந்த தக்ஷனைத் ததீசி முனிவர் கோபத்துடன் பார்த்து (16) பாபியான இந்த தக்ஷனோடு பேசுவதும் சரியில்லை. அவனுடைய இவ்விதமான முகத்தைப் பார்ப்பதும் சரியில்லை. (17) இந்தப் பாபி மிகுந்த புத்தி மோஹத்தால் ஸபையில் இவ்வாறு கூறினான். இவனுக்கு இங்கு பதில் கூறாமல் செல்வதும் சரியில்லை. (18) இவ்விதம் மனதால் நிச்சயித்து, சிறந்த முனிவர் இந்த தக்ஷனைக் கூறினார். ஓ தக்ஷனே! மிகுந்த புத்தி மயக்கத்தால் பரமாத்மாவான

अमूनि सुचरित्राणि दूषणत्वेन जल्पसि । एतानि किन्न जानासि चरितानि महेशितुः ॥ २०
अन्तर्यामी स सर्वेषां सर्वात्मा च महेश्वरः । न शक्यतेऽस्य केनापि स्वरूपं द्रष्टुमद्भुतम् ॥ २१
सर्वलोकोपकाराय श्रीमत्कैलासपर्वते । तथा विराजते शंभुर्ज्ञानमूर्तिर्वराकृतिः ॥ २२
स्थित्वाऽत्र सकलान्देवाननुगृह्णाति देवपः । दिगंबरादि चरितं कारणादस्य नान्यथा ॥ २३
शृणु दक्ष दुराचार संप्राप्तज्ञानलोचनः । पुरा केचिन्महाभागा ऋषयो दारुकावने ॥ २४
भक्तिहीनाः महादेवे कर्मठा दुष्टचेतसः । न तपोव्यतिरेकेण देवता काचिदस्ति हि ॥ २५
न यागेन विना देवः फलं कश्चिद्ददाति हि । फलं ददाति सर्वेषां तत्तत्कर्माणि सत्यतः ॥ २६
न कर्मणा विना देवो नास्त्यन्यः फलदायकः । भोगोऽपि कर्मणा जन्तो रपवर्गोऽपि तेनहि ॥ २७
इत्यादिकुकथाः कृत्वा तस्थुस्तत्वा चिरादमी । तानेतान्पापिनो ब्रह्म विष्णुपूर्वा स्सुरोत्तमाः ॥ २८
ज्ञात्वैषां शङ्करे भक्तिर्न भविष्यत्ययत्नतः । पापोपहतचित्तानां शिवे भक्तिर्न जायते ॥ २९

அமூனி ஸுசரித்ராணி தூஷணத்வேன ஜல்பஸி । ஏதானி கிம் ந ஜானாஸி சரிதானி மஹேசிது: ॥ 20
அந்தர்யாமீ ஸ ஸர்வேஷாம் ஸர்வாத்மாச மஹேச்வர: ।
ந சக்யதேऽஸ்ய கேனாபி ஸ்வரூபம் த்ரஷ்டுமத்புதம் ॥ 21
ஸர்வலோகோபகாராய ஸ்ரீமத்கைலாஸ பர்வதே । ததா விராஜதே சம்பு: ஞானமூர்த்திர் வராக்ருதி: ॥ 22
ஸ்தித்வாऽத்ர ஸகலான் தேவானனுக்ருண்ஹாதி தேவப: । திகம்பராதி சரிதம் காரணாதஸ்ய நான்யதா 23
ச்ருணு தக்ஷ துராசார ஸம்ப்ராப்த ஞானலோசன: । புரா கேசின் மஹாபாகா ருஷயோ தாருகா வனே 24
பக்திஹீனா மஹாதேவே கர்மடா துஷ்டசேதஸ: । ந தபோவ்யதிரேகேண தேவதா காசிதஸ்தி ஹி ॥ 25
ந யாகேன விநாதேவ: பலம் கச்சித் ததாதி ஹி । பலம் ததாதி ஸர்வேஷாம் தத்தத்கர்மாணி ஸத்யத: 26
ந கர்மணா விநா தேவோ நாஸ்த்யன்ய: பலதாயக: ।
போகோऽபி கர்மணா ஜந்தோரபவர்கோऽபி தேன ஹி ॥ 27
இத்யாதி குகதா: க்ருத்வா தஸ்து ஸ்தப்த்வா சிராதமி ।
தானேதான் பாபினோ ப்ரும்ஹவிஷ்ணுபூர்வாஸ்ஸுரோத்தமா: 28
ஞாத்வைஷாம் சங்கரே பக்திர் ந பவிஷ்யத்யயத்னத: ।
பாபோப்ஹதசித்தானாம் சிவே பக்திர் ந ஜாயதே ॥ 29

சிவனுடைய (19) இந்த நல்ல நடத்தைகளை எல்லாம் தோஷமுள்ளதாகச் சொல்கிறாய். பரமேச்வரனுடைய இந்த சரித்திரங்களை எல்லாம் ஏன் அறியவில்லை? (20) எல்லா ஸ்வரூபமாய் இருக்கும் அந்த மஹேச்வரன் எல்லா ப்ரபஞ்சங்களின் உள்ளிலும் இருக்கிறான். அவருடைய அத்புதமான உருவத்தைப் பார்க்க யாவராலும் முடியாது. (21) ஞானஸ்வரூபியான அந்தப் பரமசிவன் எல்லா உலகங்களின் நன்மையைக் கோரி, ஐச்வர்யம் பொருந்திய கைலாஸ மலையில் சிறந்த சரீரம் கொண்டு விளங்குகிறார். (22) தேவர்களைக் காக்கும் அந்தச் சிவன் அங்கிருந்தபடியே எல்லாத் தேவர்களையும் அனுக்ரஹித்து வருகிறார். திகம்பரன் முதலிய செய்கை எல்லாம் ஓர் காரணத்தினாலேயே தவிர வேறில்லை. (23) கெட்ட நடை உள்ள ஓ தக்ஷனே! நீ ஞானமாகிற கண்களைக்கொண்டு கேள். முன்பு தாருகா வனத்தில் மிக்க பாக்ய சாலிகளான சில முனிவர்கள் (24) கெட்ட மனமுள்ளவர்களாயும் ஸ்ரீ பரமசிவனிடத்தில் பக்தி அற்றவர்களாயும், ஜபம், தவம் முதலிய கர்மாவிலேயே ஈடுபட்டவர்களாயிருந்துகொண்டு தவத்தைக் காட்டிலும் வேறான தேவதையே இல்லை. (25) யாகத்தைத் தவிர வேறு எந்த தெய்வமும் பலனைக் கொடுக்கவில்லை. யாவருக்கும் அவரவர்களுடைய கர்மங்களே உண்மையில் பலனைக் கொடுக்கிறது. (26) கர்மாவைத் தவிர பலனை அளிக்கும் தெய்வம் வேறில்லை. ஜீவனுக்கு போகமும், மோக்ஷமும் அந்தக் கர்மாவினாலேயே தான் கிடைக்கிறது. (26A) இவ்வாறெல்லாம் வீண்வாதங்கள் செய்துகொண்டு அவர்கள் பலகாலம் தவம் செய்து வந்தார்கள். பிறகு விஷ்ணு, ப்ரும்மா முதலிய தேவ ச்ரேஷ்டர்கள் பாபிகளான அந்த ரிஷிகளைப் பார்த்து (27) பாபத்தினால் கெட்டுப்போன மனமுடையவர்களுக்குச் சிவனிடத்தில் பக்தி ஏற்படாது ஆகையால் அதற்குத் தகுந்த முயற்சி செய்தாலன்றி இவர்களுக்கு ஸ்ரீபரமேச்வரனிடத்தில் பக்தி உண்டாகப் போவதில்லை எனக் கருதி (28) ஓ தக்ஷா! அவர்கள் சபித்து விடுவார்களே என்ற பயத்தினால் அவர்களைச் சிக்ஷிப்பதற்கும் சக்தி அற்றவர்களாகி அந்தத் தேவர்கள் மஹா தேவனிடம்

शिक्षितुञ्चासमर्थास्ते शापभीत्या प्रजापते । व्यजिज्ञिपन्महादेव मिदं सर्वं तदा सुराः ॥ ३०
श्रुत्वैतदखिलं शंभुः प्रेषयामास तांस्तदा । पुनः कालेन महता शङ्करो लोकशंकरः । ३१
सस्मार विष्णुं तान्सर्वान्व्यामोहयितुमीश्वरः । तदाज्ञया हरिस्तूर्णमाससाद शिवान्तिकम् ॥ ३२
तत्पाणिमवलंब्यायं शिवस्सिंहासनात्स्वकात् । अवरुह्याशुकैलासं मुक्त्वा परमपावनम् ॥ ३३
विष्णो त्वयाऽत्र मोहिन्या रूपमास्थाय शीघ्रतः । मोहनीया वृथाचारा मदाज्ञावर्तिनाऽधुना ॥ ३४
इत्युक्त्वा स महादेवो दिगंबरतया तदा । इच्छाज्ञानक्रियाशक्ति स्वरूपं शूलमद्भुतम् ॥ ३५
पराशक्तिस्वरूपञ्च कपालं परमेश्वरः । पादुकेच तिरोधानशक्तिरूपे विचित्रिते ॥ ३६
परिकल्प्याविवेशाशु दारुकावनमीश्वरः । तदानीं मोहिनी शम्भुं वीक्ष्य मोहमवाप्यसा ॥ ३७
अयाचतामुना भोगं शिवेन परमात्मना । ऊर्ध्वरेतास्तदा शंभु लोलापाङ्गेक्षणामिमाम् ॥ ३८
चारुहार मनोहारि दन्तपङ्क्तिशुचिस्मिताम् । नवविद्रुमसंकाश प्रकाशाधरपल्लवाम् ॥ ३९

சிக்ஷிதும் சாஸமர்தாஸ்தே சாபபீத்யா ப்ரஜாபதே ।
வ்யஜிஞ்ஞிபன் மஹாதேவ மிதம் ஸர்வம் ததா ஸுரா: ॥ 30
ச்ருத்வைததகிலம் சம்பு: ப்ரேஷயாமாஸ தாம்ஸ்ததா ।
புன: காலேன மஹதா சங்கரோ லோகசங்கர: ॥ 31
ஸஸ்மார விஷ்ணும் தான் த்ஸர்வான் வ்யாமோஹயிதுமீச்வர: ।
ததாக்ஞயா ஹரிஸ்தூர்ண மாஸஸாத சிவாந்திகம் ॥ 32
தத்பாணிமவலம்ப்யாயம் சிவஸ்ஸிம்ஹாஸனாத் ஸ்வகாத் ।
அவருஹ்யாசு கைலாஸம் முக்த்வா பரமபாவனம் ॥ 33
விஷ்ணோத்வயாத்ர மோஹின்யா ரூபமாஸ்தாய சீக்ரத: ।
மோஹனீயா வ்ருதாசாரா மதாக்ஞாவர்தினாऽதுனா ॥ 34
இத்யுக்த்வா ஸ மஹாதேவோ திகம்பரதயா ததா ।
இச்சாஞானக்ரியாசக்திஸ்வரூபம் சூலமத்புதம் ॥ 35.
பராசக்திஸ்வரூபஞ்ச கபாலம் பரமேச்வர: । பாதுகே ச திரோதான சக்திரூபே விசித்ரிதே ॥ 36
பரிகல்ப்யா விவேசாசு தாருகாவனமீச்வர: । ததானீம் மோஹினீ சம்பும் வீக்ஷ்ய மோஹமவாப்யஸா ॥ 37
அயாசதாமுனா போகம் சிவேன பரமாத்மனா ।
ஊர்த்வரேதாஸ்ததா சம்புர் லோலாபாங்கேக்ஷணாமிமாம் ॥ 38
சாருஹார மனோஹாரி தந்த பங்க்தி சுசிஸ்மிதாம் । நவவித்ரும ஸங்காச ப்ரகாசாதர பல்லவாம் ॥ 39

சென்று இவையாவற்றையும் அறிவித்தார்கள். (29) ஸ்ரீமஹாதேவன் அவையாவற்றையும் கேட்டு அப்பொழுது அந்த தேவர்களை அனுப்பினார். வெகு காலம் சென்றபின் உலகத்திற்கெல்லாம் மங்களத்தைச் செய்யும் ஸ்ரீசங்கரன் (30) அந்த ரிஷிகளை எல்லாம் மோஹிக்கச் செய்வதற்காக ஸ்ரீமஹாவிஷ்ணுவை மனதில் நினைத்தார். அவருடைய உத்திரவால் ஸ்ரீமஹாவிஷ்ணு ஸ்ரீபரமசிவன் ஸன்னதிக்குச் சீக்கிரம் வந்தார். (31) ஸ்ரீ மஹேச்வரன் தனது ஸிம்மாஸனத்திலிருந்தபடியே அவருடைய கைகளைப் பற்றிக் கொண்டு இறங்கி மிகப் பரிசுத்தமான கைலாஸ மலையைவிட்டுப் (32) புறப்பட்டு ஓ விஷ்ணுவே! இப்பொழுது என்னுடைய உத்திரவின் பேரில் தாங்கள் மோஹினியின் உருவத்தை எடுத்துக்கொண்டு வீணான ஆசாரத்தைச் செய்துவரும் முனிவர்களை மோஹிக்கச் செய்வீராக. (33) இவ்வாறு கூறிவிட்டு ஸ்ரீ மஹாதேவன் ஓர் அவதூதராக ஆகி இச்சாசக்தி, ஞானசக்தி, க்ரியாசக்தியின் உருவான த்ரிசூலத்தை யும் (34) பராசக்தியின் உருவாகிய கப்பரையையும் திரோதான சக்தியின் உருவாகிய பாதுகைகளை யும் (35) அமைத்துக்கொண்டு வேகமாய் அந்தத் தாருகவனத்திற்குச் சென்றார். அப்பொழுது மோஹினி உருவமெடுத்த விஷ்ணுவானவர் ஸ்ரீசம்புவைப் பார்த்து மோஹத்தை அடைந்து (36) பரமாத்மாவான சிவனுடன் போகத்தை வேண்டினாள். அப்பொழுது மேல் நோக்கும் வீர்யமுள்ள ஸ்ரீசம்பு வானவர் சுழலுகின்ற பார்வையுடன் கூடிய கண்களை உடையவளும் (37) அழகான ஹாரங்களையும், பிறர் மனதை அபகரிக்கும் பல் வரிசைகளால் சுத்தமான புன்சிரிப்பை உடையவளும், புதிதான பவழம் போல் பிரகாசிக்கின்ற களிர் போன்ற உதடுகளை உடையவளும் (38) சந்திரக்கலை போன்ற புருவங்களைச் சிமிட்டுகிறவளும், நீலோத்பலம் போன்ற கண்களை உடையவளும், நன்கு வட்டமாய் பருத்த தசபாரத்தி

अर्धेन्दु चक्र भ्रूक्षेपकियां नीलाब्जलोचनाम् । सुवृत्ताभ्यां स्तनाभ्याञ्च स्तोकनम्रां कृशोदरीम् ॥ ४०
नीलोत्पलसमच्छायरोमराजिविराजिताम् । चाटुवाक्यैकवचनां वीक्ष्य मन्दस्मिताननः ॥ ४१
कालान्तरे त्वया मेऽस्तु संभोगस्सर्वमोहिनि । अधुना दारुकारण्ये गत्वा त्वं विमुखान्मयि ॥ ४२
तापसान्मोहयित्वाऽऽशु पुनरागच्छ शीघ्रतः । इत्युक्त्वा प्रेरयामास तां तदा परमेश्वरः ॥ ४३
साधु शंभोर्वचश्श्रुत्वा तपोवनमनुत्तमम् । विवेश निरवद्याङ्गी वर्तन्ते यत्र तापसाः ॥ ४४
दृष्ट्वैनां तापसा स्सर्वे लीलामन्थरगामिनीम् । इतस्ततश्च परितो वीक्ष्य मुग्धस्मिताननाम् ॥ ४५
हरिणीमिव विस्रस्तनयनां वनमध्यगाम् । कन्दर्पकळमावापवरकेदाररूपिणीम् ॥ ४६
नितम्बप्रस्खलत्पाणिपल्लवां लीलया मुहुः । पादाङ्गदकळारावै र्बोधयन्तीं मनोभवम् ॥ ४७
पीडिताः कामबाणेन ऋषयस्ते प्रजापते । नियमान् संपरित्यज्य सर्वेऽपि गळितेन्द्रियाः ॥ ४८
परिवृत्य विकारेण तामेतां स्रस्तवाससः । उत्प्रेक्ष्योत्प्रेक्ष्य बहुधा वर्णयित्वा वराङ्गनाम् ॥ ४९

அர்தேந்துவக்ர ப்ரூக்ஷேபக்ரியாம் நீலாப்ஜலோசனாம் ।
ஸுவ்ருத்தாப்யாம் ஸ்தனாப்யாம்ச ஸ்தோகநம்ராம் க்ருசோதரீம்
நீலோத்பல ஸமச்சாய ரோமராஜிவிராஜிதாம் । சாருவாக்யைகவசனாம் வீக்ஷ்யமந்தஸ்மிதானனா: ॥ 41
காலாந்தரே த்வயா மேऽஸ்து ஸம்போகஸ்ஸர்வ மோஹினி ।
அதுனா தாருகாரண்யே கத்வா த்வம் விமுகான்மயி ॥ 42
தாபஸான் மோஹயித்வாऽசு புனராகச்சசீக்ரத: । இத்யுக்த்வா ப்ரேரயாமாஸ தாம் ததா பரமேச்வர: 43
ஸாது சம்போர்வச ச்ச்ருத்வா தபோவன மனுத்தமம் । விவேச நிரவத்யாங்கீ வர்தந்தே யத்ர தாபஸா: 44
த்ருஷ்ட்வைனாம் தாபஸாஸ்ஸர்வே லீலாமந்தரகாமினீம் ।
இதஸ்ததச்ச பரிதோ வீக்ஷ்ய முக்தஸ்மிதானனாம் ॥ 45
ஹரிணீமிவ விக்ரஸ்தநயனாம் வனமத்யகாம் । கந்தர்ப களமாவாப வரகேதார ரூபிணீம் ॥ 46
நிதம்ப ப்ரஸ்கலத்பாணிபல்லவாம் லீலயா முஹு: । பாதாங்கதகளாராவைர்போதயந்தீம் மனோபவம் ॥ 47
பீடிதா: காமபாணேன ருஷயஸ்தே ப்ரஜாபதே । நியமான் ஸம்பரித்யஜ்ய ஸர்வேऽபி களிதேந்த்ரியா: 48
பரிவ்ருத்ய விகாரேண தாமேதாம் ஸ்ரஸ்தவாஸஸ: ।
உத்ப்ரேக்ஷ்யோத்ப்ரேக்ஷ்ய பஹுதா வர்ணயித்வா வராங்கனாம் ॥

னால் சிறிது வணங்கியவளும், குறுகிய இடுப்பை உடையவளும் (39) நீலோத்பல காந்திபோன்ற ரோம வரிசையை உடையவளும், சிருங்கார ரஸத்தையே முக்கியமாய்க் கொண்ட சொற்களை உடையவளுமான அந்த மோஹினியைக் கண்டு ஸ்ரீ பகவான் மந்தஹாஸத்துடன் கூடிய முகமுள்ளவராகி, (40) யாவரையும் மோஹிக்கச் செய்யும் ஓ மோஹினி! மற்றொரு சமயத்தில் உன்னுடன் சேர்க்கை ஏற்படும். இப்பொழுது தாருகாவனத்தில் என்னிடத்தில் பக்தியில்லாத (41) தபஸ்விகளை மோஹிக்கச் செய்து சீக்கிரமாய் வருவாயாக. இவ்வாறு சொல்லி அப்பொழுது பரமேச்வரன் மோஹினியை அனுப்பினான். (42) பரமசிவனின் அழகிய வார்த்தையைக் கேட்ட குற்றமற்ற அழகுடைய மோஹினியானவள் எந்த வனத்தில் தபஸ்விகள் இருக்கின்றார்களோ அந்த வனத்திற்குள் சென்றாள் (43) விளையாட்டாய் ஓய்யாரமாக நடப்பவளும், நான்கு பக்கங்களிலும் இங்குமங்கும் பார்த்துக்கொண்டு செல்லுகின்றவளும், புன்சிரிப்புடன் கூடிய அழகிய முகமுள்ளவளும் (44) காட்டின் நடுவிலிருக்கும் பயந்த கண்களை உடைய பெண் மான் போன்றவளும் மன்மதனுடைய செம்பா விதையை விதைப்பதற்குச் சிறந்த நாத்தங்கால் போன்றவளும் (45) ஓய்யாரத்தினால் அடிக்கடி பின்தட்டிலிருந்து நழுவிய தளிர் போன்ற கையை உடையவளும் பாத சரங்களின் இனிமையான சப்தங்களால் மன்மதனுக்கு அறிவிக்கின்றவளுமான அந்த மோஹினியைப் பார்த்து எல்லா மஹரிஷிகளும் (46) ஓ தக்ஷா! காமபாணத்தால் பீடிக்கப்பட்டவர்களாகித் தங்கள் நியமங்களை விட்டு இடுப்பு வஸ்திரங்கள் அவிழ்ந்து காம விகாரத்தால் அவளைச் சுற்றிக்கொண்டு இந்திரியங்களை நழுவ விட்டுக்கொண்டும், அவளை உற்று உற்றுப் பார்த்தும், பலவிதமாய் அவளை வர்ணித்தும் (47-48) அவர்கள் இஷ்டப்படியெல்லாம் மோஹத்தால் ஸல்லாபம் செய்துகொண்டிருந்தார்கள். அப்பொழுது ஸ்ரீ மஹாதேவனும் கோடி மன்மதர்களுக்குத் துல்யமான உருவத்தைக் கொண்ட ஓர் பிச்சைக்காரனாகி

तस्थुर्मोहवशात्सर्वे कृत्वालापं यथेच्छया । तदानीं स महादेवो तद्वीथ्यामागतो युवा ॥ ५०
कन्दर्पकोटिसंकाश शरीरोभिक्षुकाकृतिः । अटतिस्म तदा भिक्षां पठन्वेदवचः क्वचित् ॥ ५१
वीणातन्त्रीं समुत्पीड्य कचिद्गायतिसुस्वरम् । शिवागमान् पठित्वापि भैक्षं गृह्णाति कुत्रचित् ॥
शिवसंकीर्तनं कृत्वा कुत्रचिल्लीलया शिवः ॥ ५२

इति श्री स्कान्दे महापुराणे शङ्करसंहितायां शिवरहस्यखण्डे
दक्षकाण्डे त्रयोदशोऽध्यायः ॥

॥ अथ चतुर्दशोऽध्यायः ॥

ईश्वरेण दारुकावने भिक्षाटनादिकम् ॥

एवं विलासमार्गेण भिक्षामटति शङ्करे । तदान्नपूर्णदर्वीका ऋषिपत्न्यो महेश्वरम् ॥ १
युवानं सुन्दराकारं वीक्ष्य कामवशं गताः । स्रस्ताभरणनिचयाः प्रोच्छ्वसन्नीविबन्धकाः ॥ २
द्रवद्भगाः कण्टकित शरीरावयवा भृशम् । श्लथधम्मिल्लनिचया श्चाटुवाक्यपरायणाः ॥ ३
भिक्षाप्रदानव्याजेन भिक्षुकं तमुपाययुः । तदानीं धृतगर्भास्ताः पुत्रांश्चाजीजनन् क्षणात् ॥ ४

தஸ்துர்மோஹவசாத் ஸர்வே க்ருத்வா லாபம் யதேச்சயா ।
ததானீம் ஸ மஹாதேவோ தத்வீத்யாமாகதோ யுவா ॥ 50
கந்தர்ப்பகோடி ஸங்காச சரீரோ பிக்ஷுகாக்ருதி: । அடதிஸ்ம ததா பிக்ஷாம் படன்வேதவச: க்வசித் ॥ 51
வீணாதந்த்ரீம் ஸமுத்பீட்ய க்வசித்காயதி ஸுஸ்வரம் ।
சிவாகமான் படித்வாபி பைக்ஷம் க்ருன்ஹாதி குத்ரசித் ।
சிவஸங்கீர்கனம் க்ருத்வா குத்ரசித் லீலயா சிவ: ॥ 52

இதி ஸ்ரீஸ்காந்தே மஹாபுராணே சங்கரஸம்ஹிதாயாம் சிவரஹஸ்யகண்டே
தக்ஷகாண்டே த்ரயோதசோऽத்யாய:

॥ அத சதுர்தஶோऽத்யாய: ॥

ஸ்ரீ பரமசிவனுல் தாருக வனத்தில் பிக்ஷை எடுத்தல் முதலியன

ஏவம் விலாஸமார்கேண பிக்ஷாமடதி சங்கரே । ததான்ன பூர்ணதர்வீகா ருஷிபத்ன்யோ மஹேச்வரம் ॥ 1
யுவானம் ஸுந்தராகாரம் வீக்ஷ்ய காமவசம் கதா: । ஸ்ரஸ்தாபரணநிசயா: ப்ரோச்வஸன்னீவிபந்தகா: 2
த்ரவத்பகா: கண்டகித சரீராவயவாப்ருசம் । ச்லததம்மில்லநிசயா ச்சாடுவாக்ய பராயணா: ॥ 3
பிக்ஷாப்ரதானவ்யாஜேன பிக்ஷுகம் தமுபாயயு: । ததானீம் த்ருதகர்பாஸ்தா: புத்ராம்ச்சா ஜீஜனன்க்ஷணாத்

அதே தெருவில் வந்து சில இடங்களில் வேதவாக்யங்களைச் சொல்லிக்கொண்டே பிக்ஷை வாங்கியும் (49-50) சில இடத்தில் வீணையை மீட்டி அழகிய ஸ்வரத்தோடு பாடிக்கொண்டும், சில இடங்களில் சிவாகமங்களைப் படித்துக்கொண்டும், சில இடங்களில் சிவ நாம ஸங்கீர்த்தனம் செய்துகொண்டும் விளையாட்டாகப் பிச்சை வாங்கி வந்தார். (51)

பதின்மூன்றாவது அத்தியாயம் முற்றிற்று.

பதினான்காவது அத்தியாயம்

இவ்வாறாக ஜகதீசன் உல்லாசமாய் பிக்ஷை எடுத்து ஸஞ்சரிக்கும் காலத்தில் முனிவர்களின் மனைவிகள் கரண்டியில் அன்னம் போட எடுத்துவரும் வியாஜத்தால் இந்த யௌவனமுள்ள அழகுவாய்ந்த இந்த பரமசிவனைக்கண்டு மன்மதனுக்கு வசமாகி நழுவிய ஆபரணங்களை உடையவர்களாயும், முடிச்சு அவிழ்ந்த புடவைகளை உடையவர்களாயும் (1-2) ரோமாஞ்சமடைந்தவர்களாயும், அவிழ்ந்த கூந்தலை உடையவர்களாயும், ஸரஸ உல்லாஸ வார்த்தைகளைப் பேசுகின்றவர்களாயும் ஆகி (3) அந்த பிச்சைக்

शिवाज्ञया शिवं सर्वे प्रणम्य विनयेन ते । तस्थुस्तानात्मजान्वीक्ष्य सन्तोषेणाहमिक्षुकः ॥ ५
ध्यात्वा मामत्र सर्वेऽपि यूयं पुत्र मदाज्ञया । तपः कुरुत सुमहत् प्रेरयित्वैवमात्मवान् ॥ ६
चचाल ऋषिपत्नीभि रनुयान्तीभिरीश्वरः । मोहिन्यपि तदा तत्र ऋषिभिः परितो वृता ॥ ७
समाययौ शिवभ्याशे सर्वावयवपेशला । ऋषय स्वस्त्रियो दृष्ट्वा तत्र कामवशङ्गताः ॥ ८
भिक्षुकश्शिवएवायं समागत्यात्र मत्प्रियाः । मायया मोहयामास मन्त्री मन्त्रौषधैरिव ॥ ९
यैषाऽस्मान्मोहयामास मोहिनी वरवर्णिनी । स तु नारायणो नूनं तदा त्वित्थं चकारहि ॥ १०
ज्ञात्वैवं ज्ञानदृष्ट्या ते ऋषयः कोपविह्वलाः । अस्माकं व्रतभंगेन यत्किञ्चिज्जायते यदि ॥ ११
प्रायश्चित्तेन तत्पापं प्रणश्यति न संशयः । पतिव्रतात्वमेतासां स्त्रीणां भग्नं हि दुर्लभम् ॥ १२
सर्वलोकेषु विख्यातमयशस्संबभूव हि । इत्यालोच्यान्तरेवैते ऋषयः स्वकुटुम्बिनीः ॥ १३
बहुधापि समाहूय यूयं गच्छत मद्गृहान् । इत्यूचुर्बहुवारं ते तदा दक्ष तपोधनाः ॥ १४

சிவாஜ்ஞயா சிவம் ஸர்வே ப்ரணம்ய வினயேன தே ।
தஸ்து ஸ்தாநாத்மஜாந்விக்ஷ்ய ஸந்தோஷேணாஹமிக்ஷுகः 5
த்யாத்வா மாமத்ர ஸர்வேऽபி யூயம் புத்ரா மதாஜ்ஞயா ।
தபः குருத ஸுமஹத் ப்ரேரயித்வைவ மாத்மவான் ॥ 6
சசால ருஷிபத்னிபி ரனுயாந்திபிர்ச்வரः । மோஹின்யபி ததா தத்ர ருஷிபிः பரிதோவ்ருதா ॥ 7
ஸமாயயௌ சிவாப்யாசே ஸர்வாவயவபேசலா ।
ருஷயஸ்ஸ்வஸ்வத்ரியோ த்ருஷ்ட்வா தத்ர காமவசங்கதாः ॥ 8
பிக்ஷுகச்சிவ ஏவாயம் ஸமாகத்யாத்ர மத்ப்ரியாः ।
மாயயா மோஹயாமாஸ மந்த்ரி மந்த்ரௌஷதைரிவ ॥ 9
யைஷாऽஸ்மான் மோஹயாமாஸ மோஹினி வரவர்ணினி ।
ஸ து நாராயணோ நூனம் ததா த்வித்தும் சகார ஹி ॥ 10
ஞாத்வைவம் ஞானத்ருஷ்ட்யா தே ருஷயः கோபவிஹ்வலாः ।
அஸ்மாகம் வ்ருதபங்கேன யத்கிஞ்சிஜ்ஜாயதே யதி ॥ 11
ப்ராயச்சித்தேன தத்பாபம் ப்ரணச்யதி ந ஸம்சயः ।
பதிவ்ரதாத்வமேதாஸாம் ஸ்த்ரீணாம் பக்னம் ஹி துர்லபம் ॥ 12
ஸர்வலோகேஷு விக்யாதமயச ஸ்ஸம்பபூவ ஹி ।
இத்யாலோச்யாந்தரே வைதேருஷயः ஸ்வகுடும்பினீः ॥ 13
பஹுதாபி ஸமாஹூய யூயம் கச்சத மத்க்ருஹான் ।
இத்யூசுர் பஹுவாரம் தே ததா தக்ஷ தபோதனாः ॥ 14

காரனிடம் வந்தனர். அப்பொழுது அத்தப் பெண்கள் கர்ப்பமடைந்தவர்களாகி சிவனுடைய ஆக்ஞையால் ஓர் கணத்தில் புத்திரர்களையும் பெற்றனர். (4) உடன் அப்பிள்ளைகளும் எழுந்து பரமசிவனை வணக்கத்துடன் நமஸ்கரித்து நின்றார்கள். பிக்ஷுகரும் தனது பிள்ளைகளைப் பார்த்து ஸந்தோஷத்தோடு கூறினர். (5) ஓ புத்திரர்களே! நீங்கள் யாவரும் எனது ஆக்ஞையின்படி இங்கு என்னைத் தியானம் செய்துகொண்டு கடும் தவத்தைச் செய்வீர்களாக என்று ஞானமூர்த்தியான ஜகதீசன் அவர்களை அனுப்பி விட்டு (6) அந்த ரிஷி பத்னிகளால் பின் தொடரப்பட்டு அங்கு உலாவினார். எல்லா அவயவங்களும் அழகாய் அமையப்பெற்ற மோஹினியும் சுற்றிலும் ரிஷிகளால் சூழப்பட்டவளாகி அந்த பரமேச்வரன் சமீபத்திற்கு வந்தாள். முனிவர்கள், அப்பொழுது தன் மனைவிகள் காமத்திற்கு வசமாயிருப்பதைப் பார்த்து (7–8) இப்பிச்சைக்காரன் சிவனே. இவன் இங்கு வந்து மந்திரவாதியானவன் மந்திரத்தினாலும் மருந்தினாலும் செய்வதுபோல் நமது மனைவிகளை மாயையால் மயக்கி விட்டான். (9) நம்மை மயக்கிய சிறந்த பெண்ணான இம்மோஹினி விஷ்ணுவே. அவனே இவ்வாறு செய்திருப்பது நிச்சயம். (10) என்று இவ்விதமாய் ஞான திருஷ்டியால் அறிந்த அம்முனிவர்கள் கோபாவேசம் கொண்டவர்களாகி நமது நியமத்திற்கு ஏதாகிலும் சிறிது குறைவு ஏற்படுமேயாகில் (11) அதைத் தக்க பிராயச்சித்தத்தினால் தீர்த்துக்கொள்ளலாம் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இந்த ஸ்திரீகளின் பாதிவ்ரத்ய பங்கத்தைத் தீர்த்துக்கொள்ள இடமில்லை (12) எல்லா உலகங்களிலும் பிரஸித்தமான அபகீர்த்திக்கு இடமாயிற்றே என்று அந்த ரிஷிகள் மனதிற்குள் ஆலோசித்து தன் மனைவிகளைப் (13) பலவிதமாய் கூப்பிட்டு நீங்கள்

तेषां तद्वचनं श्रुत्वा स्त्रियस्सर्वा दिगंबराः । शिवानुधावनं मुक्त्वा विविशुः स्वगृहानमूः ॥ १५
शिवाज्ञयैव परमा दक्ष नार्यः क्षणादहो । निजरूपं समादाय विष्णुश्शंभुं प्रणम्य च ॥ १६
तस्थे स्तुतिवरैः स्तुत्वा बद्धाञ्जलिपुटो भयात् । तदा ब्रह्मादयो देवा स्समागत्य महेश्वरम् ॥ १७
प्रणम्य तुष्टुवुर्भक्त्या गृहीतनिजविग्रहम् । शिवं परमकल्याणं नीलग्रीवं परात्परम् ॥ १८
तदा तं देवमतुलं दृष्ट्वा ते ऋषयः क्रुधा । यस्मादेवञ्चकारायमस्माकमयशो महत् ॥ १९
तपोमहिम्ना वध्योऽयमस्माभिरिह दुष्क्रियः । इति निश्चित्य ते सर्वे चक्रुः कर्माभिचारकम् ॥ २०
तदा व्याघ्रो बभूवात्र घोरः परशुरेव च । मृगसर्पौ च भूतानि भीषणानि बहून्यपि ॥ २१
शुचिस्मितं शिरोमुण्डमपस्मारश्च भीषणः । महारावैरट्टहासैः परुषैर्वचनैरपि ॥ २२
चकंपिरे जनास्सर्वे सर्वलोकस्थिता अपि । तदा ब्रह्मादयो देवाश्शिवस्य परमात्मनः ॥ २३
पृष्ठभागं गतास्सर्वे भीतभीता भृशं बत । शिवस्तदैषामाटोपयुतारावं विभीषणान् ॥ २४

தேஷாம் தத்வசனம் ச்ருத்வா ஸ்த்ரியஸ்ஸர்வா திகம்பரா: ।
சிவானுதாவனம் முக்த்வா விவிசு: ஸ்வக்ருஹானமூ: ॥ 15

சிவாக்ருயைவ பரமா தக்ஷ நார்ய: க்ஷணாதஹோ ।
நிஜ ரூபம் ஸமாதாய விஷ்ணுச்சம்பும் ப்ரணம்ய ச ॥ 16

தஸ்தே ஸ்துதிவரைஸ் ஸ்துத்வா பத்தாஞ்ஜலி புடோபயாத் ।
ததா ப்ரம்ஹாதயோ தேவா ஸ்ஸமாகத்ய மஹேச்வரம் ॥ 17

ப்ரணம்ய துஷ்டுவுர் பக்த்யா க்ருஹீத நிஜவிக்ரஹம் ।
சிவம் பரம கல்யாணம் நீலக்ரீவம் பராத்பரம் ॥ 18

ததா தம் தேவமதுலம் த்ருஷ்ட்வா தே ருஷய: க்ருதா ।
யஸ்மா தேவம் சகாராய மஸ்மாக மயசோ மஹத் ॥ 19

தபோமஹிம்ன வத்யோSயமஸ்மாபிரிஹ துஷ்க்ரிய: ।
இதி நிச்சித்ய தே ஸர்வே சக்ரு: கர்மாபிசாரகம் ॥ 20

ததா வ்யாக்ரோ பபூவாத்ர கோர: பரசுரேவ ச । ம்ருகஸர்பௌ ச பூதானி பீஷணானி பஹூன்யபி ॥ 21
சுசிஸ்மிதம் சிரோமுண்டமபஸ்மாரச்ச பீஷண: । மஹாராவைரட்டஹாஸை: பருஷைர்வசனைரபி ॥ 22

சகம்பிரே ஜனாஸ்ஸர்வே ஸர்வலோக ஸ்திதா அபி ।
ததா ப்ரம்ஹாதயோ தேவாச்சிவஸ்ய பரமாத்மன: ॥ 23

ப்ருஷ்டபாகம் கதாஸ்ஸர்வே பீதபீதாப்ருசம் பத । சிவஸ்ததைஷாமாடோபயுதாராவ விபீஷணான் ॥ 24

நமது வீட்டிற்குப் போங்கள் என்று பல தடவை அம்மஹரிஷிகள் கூறினார்கள். ஓ தக்ஷா! (14) அப்பொழுது வஸ்திரமில்லாமலிருந்த சிறந்த அந்த ஸ்திரீகளெல்லாம் பரமேச்வரனைப் பின் தொடராமல் சிவனின் உத்திரவின்படியே ஓர் க்ஷணத்தில் தன் வீடு சேர்ந்தார்கள் இது ஆச்சரியம்! பிறகு விஷ்ணு வானவர் தன் சுய உருவத்தை எடுத்துக்கொண்டு மஹாதேவனை நமஸ்கரித்து (15–16) சிறந்த துதி களால் துதித்து பயத்தோடு அஞ்சலி செய்துகொண்டு நின்றார். அப்பொழுது ப்ரும்மா முதலிய தேவர்கள் அங்கு வந்து ஸ்ரீ பரமசிவனை (17) நமஸ்கரித்து மிகுந்த பக்தியோடு துதித்தார்கள். பிறகு நிஜ உருவத்தைத் தரித்தவரும் பரம கல்யாண சீலரும், கருத்த கழுத்தை உடையவரும், ப்ரபஞ்சத்தைக் காட்டிலும் வேறானவரும் (18) ஒப்பற்றவருமான ஸ்ரீ பரமாத்மாவை அப்பொழுது முனிவர்கள் கண்டு கோபமடைந்து இவன் நமக்கு மிகுந்த அபகீர்த்தியை உண்டாக்கியபடியால் கெட்ட நடத்தை உடைய இவனை நாம் தவத்தின் மகிமையால் கொன்றுவிடவேண்டும் என்று நிச்சயித்து அவர்கள் யாவரும் ஆபிசார ப்ரயோகத்தை (ஏவல் வைத்தல்) செய்தார்கள். (19–20) அப்பொழுது அங்கிருந்து கொடூரமான புலி, கோடரி, மான், ஸர்பம், பயங்கரமான பல பூதங்கள் (21) பல்லைக் காட்டும் முண்டமான தலை, பயங் கரமான அபஸ்மாரம் இவைகளெல்லாம் மிகுந்த சப்தத்துடன் கூடிய நாகங்களும், கடூரமான வசனங் களுடனும் வரும்பொழுது (22) எல்லா உலகங்களிலும் உள்ள ஸமஸ்த ஜனங்களும் பயந்து நடுங்கினார்கள். அப்பொழுது பிரும்மா முதலிய தேவர்கள் மிகவும் நடுங்கி பரமாத்மாவான சிவனுடைய பின்பக்கத்தில்

श्रुत्वा गमनमेतेषां तस्थे ज्ञात्वा निजान्तरे । तदन्तरे शिवं व्याघ्रो भर्त्सयन् कुटिलाननः ॥ २५
हन्तुकामोऽन्तिकं प्राप वितत्योर्ध्वं करं क्रुधा । गृहीत्वा वालमेतस्य करेणास्फाल्य निष्ठुरम् ॥ २६
हत्वा त्वचं समादाय वस्त्रवद्विदधे शिवः । ततः परशुमायान्तमायुधं परिकल्प्य सः ॥ २७
महाघोरं महानादं गृहीत्वा पाणिना मृगम् । तिष्ठ मत्कर्णसविधे शब्दं कृत्वा सदेति तम् ॥ २८
स्थापयामास विश्वात्मा स्वतन्त्रस्तं प्रजापते । समायान्तं पुनस्सर्पं महानादेन भीषणम् ॥ २९
कल्पयामास चाकल्पं सर्वाभरणभूषितः । ततो भूतानि सर्वाणि महाघोराणि शङ्करः ॥ ३०
साट्टहासानि बलवान् स्वसेनाः परिकल्प्यच । शिरोमुण्डं दधौ मूर्ध्नि शुचिस्मितमुखश्शिवः ॥ ३१
अपस्मारमपि क्रूरं पादस्याघश्चकार हि । एवं व्यर्थतया तेषु गतेषु ऋषयः क्रुधा ॥ ३२
अग्निं संप्रेषयामासुर्हन्तुं तं परमेश्वरम् । बभार पाणावायान्तं कालानलसमप्रभम् ॥ ३३
ततो मन्त्रान्महाघोरान् हन्तुं तं प्रैरयच्छिवम् । बृहडुमरुकाकारं परिकल्प्य तपोबलात् ॥ ३४

ச்ருத்வா கமனமேதேஷாம் தஸ்தே ஞாத்வா நிஜாந்தரே ।
ததந்தரே சிவம் வ்யாக்ரோ பர்த்ஸயன் குடிலானன: ॥ 25
ஹந்துகாமோऽந்திகம் ப்ராப விதத்யோர்த்வம் கரம் க்ருதா ।
க்ருஹீத்வா வாலமேதஸ்ய கரேணாஸ்பால்ய நிஷ்டுரம் ॥ 26
ஹத்வா த்வசம் ஸமாதாய வஸ்த்ரவத் விததே சிவ: ।
தத: பரசுமாயாந்த மாயுதம் பரிகல்ப்ய ஸ: ॥ 27
மஹாகோரம் மஹாநாதம் க்ருஹீத்வா பாணினாம்ருகம் ।
திஷ்ட மத்கர்ணஸவிதே சப்தம் க்ருத்வா ஸதேதி தம் ॥ 28
ஸ்தாபயாமாஸ விச்வாத்மா ஸ்வதந்த்ரஸ்தம் ப்ரஜாபதே ।
ஸமாயாந்தம் புனஸ்ஸர்பம் மஹாநாதேன பீஷணம் ॥ 29
கல்பயாமாஸ சாகல்பம் ஸர்வாபரண பூஷித: । ததோ பூதானி ஸர்வாணி மஹாகோராணி சங்கர: ॥ 30
ஸாட்டஹாஸானி பலவான் ஸ்வஸேனா: பரிகல்ப்யச ।
சிரோமுண்டம் ததௌ மூர்த்னி சுசிஸ்மிதமுகச்சிவ: ॥ 31
அபஸ்மாரமபி க்ரூரம் பாதஸ்யாத ச்சகார ஹி । எவம் வ்யர்த்தயா தேஷு கதேஷு ருஷய: க்ருதா ॥ 32
அக்னிம் ஸம்ப்ரேஷயாமாஸுர் ஹந்தும் தம் பரமேச்வரம் ।
பபார பாணுவாயாந்தம் காலானல ஸமப்ரபம் ॥ 33
ததோ மந்த்ரான் மஹாகோரான் ஹந்தும் தம் ப்ரைரயன் சிவம் ।
ப்ருஹட்டமருகாகாரம் பரிகல்ப்ய தபோபலாத் ॥ 34

பதுங்கினார்கள். பிறகு ஸ்ரீ பரமேச்வரன் அவைகளுடைய கர்வத்தோடு கூடிய மிக பயங்கரமான சப்தத்தைக் (23-24) கேட்டுத் தன் மனதில் அவைகள் வருவதை அறிந்து நிற்கும்பொழுது அதற்குள் கொடிய முகத்தை உடைய புலியானது சிவனை பயமுறுத்திக்கொண்டு (25) அவரைக் கொல்ல எண்ணிக் கையை உயரே தூக்கிக்கொண்டு சமீபத்திற்கு வந்தது. அதனுடைய கடினமான வாலைக் கையால் பிடித்து அடித்து அதனைக் கொன்றார். (26) ஸ்ரீ பரமசிவன் அதன் தோலை எடுத்து வஸ்திரம் போல் உடுத்திக் கொண்டார். அதன் பிறகு வந்ததான கோடாரியை ஆயுதமாகச் செய்து கொண்டார். (27) பிறகு மிகுந்த சப்தத்தோடு மிகக் கோரமாய் வந்த மானைக் கையினால் பிடித்து நீ எப்பொழுதும் சப்தம் செய்து கொண்டு எனது காதின் சமீபத்திலிருந்து வா. என்று அந்த மானை (28) தரித்துக்கொண்டார். ஸகல ப்ரபஞ்ச ஸ்வரூபியும், ஸ்வாதந்திரியம் உள்ளவருமான அப்பரமசிவன் ஓ ப்ரஜாபதியே! மீண்டும் மிகுந்த சப்தத்துடன் பயங்கரமாய் வருகின்ற ஸர்பத்தையும் (29) எல்லா ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவராயிருந்த போதிலும் அதையும் ஆபரணமாய் சூட்டிக் கொண்டார். பிறகு மிக பயங்கரமாய் அட்டஹாஸம் செய்துகொண்டு வரும் எல்லாப் பூதகணங்களையும் மிக பலம் வாய்ந்த ஸ்ரீ சங்கரர் தனது சைன்யங்களாகச் செய்து கொண்டும், முண்டமான சிரஸ்ஸைத் தலையிலும், க்ரூரமான அபஸ்மார தேவதையை காலுக்கு அடியிலும் சுத்தமான புன்சிரிப்புள்ள பரமசிவன் செய்துகொண்டார். இவ்வாறு அவைகள் யாவும் வீணானதும், முனிவர்கள் கோபம் கொண்டு (30-32) கொல்லுவதற்காக அக்னியை ஏவினார்கள். பிரளயகால அக்னிக்கு ஒப்பானவரும் அந்தத் தீயைக் கையில் தரித்தார். (33) பிறகு மிகக் க்ரூரமான மஹா மந்திரங்களைப் பெரும் டமருக வாத்யமாகத்

तं च घोरं महानादं दधौ हस्ते पिनाकधृक् । विफलेष्वेवमेतेषु ऋषयः क्रोधविह्वलाः ॥ ३५
शेपुस्ते परमेशानं सर्वे दक्ष प्रजापते । शापाश्च तेषां देवेशे व्यर्थतामगमं स्तदा ॥ ३६
ज्वलद्वह्निमुखे यद्वत्तूलराशिर्महानपि । तदेतत्सर्वमालोक्य भीतभीतास्तपोधनाः ॥ ३७
व्यर्थानि नस्तपांस्यासन् कियास्सर्वास्समन्त्रकाः । अस्मिन् पुरुषधौरेये युवायमतिमानुषः ॥ ३८
इति चिन्तामवाप्यैते, तस्थु र्वीळानताननाः । तदानीं स महादेवः स्मयमानमुखांबुजः ॥ ३९
महिमानं न जानन्ति ममैवमिति तापसाः । इति स्मृत्वा ननर्तायं ताण्डवं नटनं भृशम् ॥ ४०
तस्य तं नटनं दृष्ट्वा सर्वे ते भयकंपिताः । बभ्रमुश्च महाभीता निपेतुर्नमिताननाः ॥ ४१
शिवस्तदा कृपां चक्रे सर्वेषु करुणाकरः । समुत्थाय ततस्सर्वे प्राप्य ज्ञानं प्रणम्य तम् ॥ ४२
जय देव महादेव क्षमस्व करुणाकर । अपराधं शिवास्माकं रक्ष रक्षान्तकान्तक ॥ ४३
इति स्तुत्वा स्थितानेतान् बद्धपाणीन्महेश्वरः । प्रोवाच करुणामूर्ति र्वीक्ष्यैतान्वचनं तदा ॥ ४४

தம்ச கோரம் மஹாநாதம் ததௌ ஹஸ்தே பிநாகத்ருக் ।
விபலேஷ்வேவ மேதேஷு ருஷய: க்ரோதவிஹ்வலா: ॥ 35

சேபுஸ்தம் பரமேசானம் ஸர்வே தக்ஷப்ரஜாபதே ।
சாபாச்ச தேஷாம் தேவேசே வ்யர்த்ததாமகமம் ஸ்ததா ॥ 36

ஜ்வலத்வன்ஹிமுகே யத்வத்தூலராசிர் மஹானபி ।
ததேதத் ஸர்வ மாலோக்ய பீதபீதாஸ்தபோதனா: ॥ 37

வ்யர்த்தானி நஸ்தபாம்ஸ்யாஸன் க்ரியாஸ்ஸர்வாஸ்ஸமந்த்ரகா:
அஸ்மின் புருஷதௌரேயே யுவாய மதிமானுஷ: ॥ 38

இதி சிந்தாமவாப்யைதே தஸ்துர் வ்ரீளா நதாननா: । ததானீம் ஸ மஹாதேவ: ஸ்மயமான முகாம்புஜ: 39
மஹிமானம் ந ஜானந்தி மமைவமிதி தாபஸா: । இதி ஸ்மருத்வா ந நர்தாயம் தாண்டவம் நடனம் ப்ருசம் 40
தஸ்ய தம் நடனம் த்ருஷ்ட்வா ஸர்வே தே பயகம்பிதா: । பப்ரமுச்ச மஹாபீதா நிபேதுர் நமிதாननா: 41

சிவஸ்ததா க்ருபாம் சக்ரே ஸர்வேஷு கருணாகர: ।
ஸமுத்தாய ததஸ்ஸர்வே ப்ராப்ய க்ஞானம் ப்ரணம்ய தம் ॥ 42

ஜய தேவ மஹாதேவ க்ஷமஸ்வ கருணாகர । அபராதம் சிவாஸ்மாகம் ரக்ஷ ரக்ஷாந்தகாந்தக ॥ 43

இதி ஸ்துத்வா ஸ்திதானேதான் பத்தபாணீன் மஹேச்வர: ।
ப்ரோவாச கருணாமூர்திர் வீக்ஷ்யைதான் வசனம் ததா ॥ 44

தங்கள் தவத்தின் மகிமையால் செய்து பரமசிவனைக் கொல்லுவதற்காக ஏவினார்கள். (34) பெரும் ஒலியுடன் கூடின அந்த கோரமான டமருக வாத்தியத்தைப் பினாகியான பரமசிவன் கையில் தரித்தார். ஓ தக்ஷனே! இவையாவும் பயனற்றதாக ஆனதும் முனிவர்கள் கோபம் கொண்டு (35) ஸ்ரீ பரமசிவனை அவர்கள் யாவரும் சபித்தனர். அப்பொழுது அந்த சாபங்களும் ஸ்ரீ தேவேசனிடத்தில் ஜ்வலிக்கின்ற அக்னி ஜ்வாலையில் மிகுந்த பஞ்சுக் கூட்டம் போல் வீணாயின. இவை யாவையும் பார்த்து தபோதனர்கள் ரொம்பவும் பயந்து (36-37) இந்தப் புருஷ ச்ரேஷ்டரிடத்தில் நமது தவங்களும், ஸகல மந்திர தந்திரங்களும் வீணாகிவிட்டனவே. யுவாவான இவன் மானிடர்களை அதிக்ரமித்தவன் (38) இவ்வாறு கவலை கொண்டு இந்த முனிவர்கள் வெட்கத்தால் தலைகுனிந்திருந்தார்கள். அப்பொழுது ஸ்ரீ மஹாதேவன் புன்சிரிப்புடன் கூடிய முகமுள்ளவராயிருந்துகொண்டு (39) இந்தத் தபஸ்விகள் நமது மஹிமையை அறியவில்லை என்று நினைத்து இந்த மஹாதேவன் மஹா தாண்டவத்தைச் செய்தார் (40) அந்தத் தாண்டவத்தைப் பார்த்து அவர்கள் யாவரும் பயத்தால் நடுங்கி, ப்ரமித்து, திகைத்துத் தலை கவிழ்ந்து கீழே விழுந்தார்கள். (41) அப்பொழுது கருணைக்கடலான ஸ்ரீ பரமசிவன் அவர்கள் எல்லோரிடத்திலும் கருணையைச் செய்தார். உடன் அவர்கள் நல்லறிவு பெற்று எழுந்து அவரை நமஸ்கரித்து (42) தேவாதிதேவனும், கருணைக்கடலுமான ஓ மஹாதேவா! தாங்கள் ஜயத்துடன் விளங்கவேண்டும். ரக்ஷிக்க வேண்டும். ரக்ஷிக்க வேண்டும். (43) என்று ஸ்தோத்திரம் செய்து கைகளைக் கட்டிக்கொண்டு நிற்கின்ற அந்த மஹரிஷிகளைக் கருணாமூர்த்தியான ஸ்ரீ பரமசிவன் பார்த்து வார்த்தையைக் கூறினார். (44)

एतावत्कालपर्यन्तमृषयो यूयमीश्वरम् । मामविज्ञाय दुर्मार्गमवष्टभ्याभिमोहिताः ॥ ४५
अतिष्ठन् किल युष्माभिरित ऊर्ध्वं मदाज्ञया । स्थातव्यं वैदिके मार्गे भस्मरुद्राक्षधारिभिः ॥ ४६
यजध्वं यूयमनिशं मामेवानन्यभावनाः । प्रेषयित्वा कृपांबोधिरेवमेतानृषीश्वरान् ॥ ४७
कैलासं प्राप तरसा नानाश्चर्यसमन्वितम् । तत्र विष्णुमुखान् देवान् प्रेषयित्वा स्वयं शिवः ॥
शिवया सहितो देव्या क्रीडंस्तस्थे प्रजापते ॥ ४८

इति श्री स्कान्दे महापुराणे शंकरसंहितायां शिवरहस्यखंडे
दक्षकाण्डे चतुर्दशोऽध्यायः ॥

॥ अथ पञ्चदशोऽध्यायः ॥

गजासुरवधः ॥

दिगंबरादिचरितं वृत्तपर्यन्तमद्भुतम् । शिवस्यानन्यतुल्यस्य ऋषीन्प्रक्षितुमिच्छतः ॥ १
मयोक्तं सावधानेन दक्षान्यच्च ब्रवीमिते । शृणुष्वावहितो ज्ञात्वा विगतैना भविष्यसि ॥ २

ஏதாவத்கால பர்யந்தம் ருஷயோ யூய மீச்வரம் ।
மாமவிக்ஞாய துர்மார்கமவஷ்டப்யாதி மோஹிதா: ॥ 45
அதிஷ்டன் கில யுஷ்மாபிரித ஊர்த்வம் மதாக்ஞயா ।
ஸ்தாதவ்யம் வைதிகே மார்கே பஸ்மருத்ராக்ஷ தாரிபி: ॥ 46
யஜத்வம் யூயமனிசம் மாமேவானன்ய பாவனு: ।
ப்ரேஷயித்வா க்ருபாம்போதி ரேவமேதான் ருஷீச்வரான் ॥ 47
கைலாஸம் ப்ராப தரஸா நாநாச்சர்ய ஸமன்விதம் ।
தத்ர விஷ்ணுமுகான் தேவான் ப்ரேஷயித்வா ஸ்வயம் சிவ: ॥
சிவயா ஸஹிதோ தேவ்யா க்ரீடம்ஸ்தஸ்தே ப்ரஜாபதே ॥ 48

இதி ஸ்ரீஸ்காந்தே மஹாபுராணே சங்கரஸம்ஹிதாயாம் சிவரஹஸ்யகண்டே
தக்ஷகாண்டே சதுர்தசோऽத்யாய: ॥

॥ அத பஞ்சதசோऽத்யாய: ॥

கஜாசுரனை வதைத்தல்

திகம்பராதி சரிதம் த்ருத்தபர்யந்தமத்புதம் । சிவஸ்யானன்ய துல்யஸ்ய ருஷீன்ரக்ஷிதுமிச்சத: ॥ 1
மயோக்தம் ஸாவதானேன தக்ஷான்யச்ச ப்ரவிமிதே ।
ச்ருணுஷ்வா வஹிதோ ஞாத்வா விகதைனு பவிஷ்யஸி ॥ 2

ஓ முனிவர்களே! நீங்கள் இதுவரை ஜகதீசனான என்னை அறியாமல் புத்தி மோஹம் கொண்டு கெட்ட வழியில் சென்று (45) இருந்து விட்டீர்களல்லவா? இனிமேலாவது நமது கட்டளையின்படி வைதிகமான மார்க்கத்திலிருந்து விபூதி ருத்ராக்ஷங்களைத் தரித்துக்கொண்டு (46) மற்றெங்கும் மனதைச் செலுத்தாமல் எப்பொழுதும் என்னையே பூஜை செய்துவரவேண்டும் என்று சொல்லி அந்த மஹரிஷிகளை இவ்விதமாய் அனுப்பிவிட்டுப் பிறகு தயாநிதியான பரமசிவன் (47) பல விசித்திரங்களோடு கூடிய கைலாஸ மலைக்கு வேகமாகச் சென்று அங்கிருந்து விஷ்ணு முதலிய தேவர்களையும் அனுப்பிவிட்டு தான் பார்வதி தேவியுடன் உல்லாசமாயிருந்தார். (48)

பதினான்காவது அத்தியாயம் முற்றிற்று.

பதினைந்தாவது அத்தியாயம்

ஓ தக்ஷனே! மஹரிஷிகளை ரக்ஷிக்க மனம் கொண்டவரும், ஒப்பற்றவருமான பரமசிவனுடைய திகம்பரனாக இருந்தது முதல் நர்த்தனம் செய்தது வரையிலுள்ள ஆச்சரியமான சரித்திரங்களை (1) நான்

पुरा गजासुरो घोरस्तपस्तप्त्वाऽपि निष्ठुरः । प्रीणयित्वा विधातारं वरं वव्रे प्रजापते ॥ ३
अवध्यत्वं सुरैरन्यैः भयङ्करं शिवं विना । सुबहूनि तथायूंषि बलं वीर्यं पराक्रमम् ॥ ४
एवमादीनि चान्यानि प्रदत्तानि स्वयंभुवा । ततो लब्धवरो दैत्यो बबाधे सकलं जगत् ॥ ५
जित्वा ब्रह्मादि देवांश्च रणमध्य गतानयम् । हत्वा ऋषीन् सुरांश्चापि सुबहूनवलेपतः ॥ ६
इत्थं प्रतिदिनं तस्थे बाधयन् सकलञ्जगत् । ततः कदाचिदमरनायकं बलमेदकम् ॥ ७
जित्वा रणे द्रावयित्वा गजमभ्रमुवल्लभम् । गृहीत्वा पाणिना वालं भ्रामयित्वा समन्ततः ॥ ८
क्षेप्यामास दुष्टात्मा सुदूरं मूर्छितं गजम् । दिशामधीशानन्यांश्च द्रावयामास पीडयन् ॥ ९
यक्षानपि तदा हत्वा भूलोकनिलयान् परान् । हन्तुमद्रावयद्घोरः पुनः कांश्चिदृषीश्वरान् ॥ १०
भीतास्ते तापसाः काशीं समागत्यात्र संभवैः । ऋषिभिर्मिलिता गत्वा मणिकर्ण्यां ततः पुनः ॥ ११
प्रविश्य विश्वनाथस्य परमंधाम चाद्भुतम् । तत्रत्यैरपि देवस्य परिचर्यारतैर्जनैः ॥ १२

புரா கஜாஸுரோ கோரஸ்தபஸ்தப்த்வாதி நிஷ்டுர: ।
ப்ரீணயித்வா விதாதாரம் வரம் வவ்ரே ப்ரஜாபதே ॥ 3
அவத்யத்வம் ஸுரைரன்யை: க்ஷயத்வீரம் சிவம் விநா ।
ஸுபஹூனி ததாயூம்ஷி பலம் வீர்யம் பராக்ரமம் ॥ 4
ஏமவாதீனி சான்யானி ப்ரதத்தானி ஸ்வயம்புவா ।
ததோ லப்தவரோ தைத்யோ பபாதே ஸகலம் ஜகத் ॥ 5
ஜித்வா ப்ரும்ஹாதிதேவாம்ச்ச ரணமத்யகதானயம் ।
ஹத்வா ருஷீன் ஸுராம்ச்சாபி ஸுபஹூனவலேபத: ॥ 6
இத்தம் ப்ரதிதினம் தஸ்தே பாதயன் ஸகலம் ஜகத் । தத: கதாசிதமரநாயகம் வலபேதகம் ॥ 7
ஜித்வாரணே த்ராவயித்வா கஜமப்ரமு வல்லபம் । க்ருஹீத்வா பாணினு வாலம் ப்ராமயித்வா ஸமந்தத: 8
க்ஷேபயாமாஸ துஷ்டாத்மா ஸுதூரம் மூர்ச்சிதம் கஜம் ।
திசாமதீசாநன்யாம்ச்ச த்ராவயாமாஸ பீடயன் ॥ 9
யக்ஷானபி ததா ஹத்வா பூலோகநிலயான் பரான் ।
ஹந்துமத்ராவயத் கோர: புன: காம்ச்சித்ருஷீச்வரான் ॥ 10
பீதாஸ்தே தாபஸா: காசீம் ஸமாகத்யாத்ர ஸம்பவை: ।
ருஷிபிர்மிளிதா கத்வா மணிகர்ண்யாம் தத: புன: ॥ 11
ப்ரவிச்ய விச்வநாதஸ்ய பரமம் தாம சாத்புதம் । தத்ரத்யைரபி தேவஸ்ய பரிசர்யாரதைர்ஜனை: ॥ 12

இப்பொழுது கூறினேன். மற்றுமுள்ள சரித்திரங்களையும் நான் உனக்குக் கூறுகிறேன். ஒருமைப்பட்ட மனதுடன் கேட்கவேண்டும். அதனால் நீ பாபமற்றவனாக ஆவாய். (2) ஓ தக்ஷா! முன்னொரு காலத்தில் மிகக் கொடியவனும், துஷ்டனுமான கஜாஸுரனென்பவன் தவத்தினால் ப்ரும்மாவை சந்தோஷிக்கச் செய்து வரத்தைக் கேட்டான். (3) எல்லா வீரர்களையும் ஸம்ஹரிக்கும் ஸ்ரீ பரமசிவனைத் தவிர மற்ற தேவர்களால் கொல்லப்படாதிருத்தலையும், நீண்ட ஆயுஸ், பலம், சௌரியம், பராக்கிரமம் (4) இவை முதலிய இன்னும் மற்ற வரன்களும் அந்த ப்ரும்மாவினால் அவனுக்குக் கொடுக்கப்பட்டன. பிறகு வரன்களைப் பெற்ற கஜாசுரன் எல்லா உலகங்களையும் துன்புறுத்தி வந்தான். (1) ப்ரும்மா, விஷ்ணு முதலிய தேவர்களைப் போர் முனையில் ஜயித்தும், இன்னும் மற்ற தேவர்களையும், அனேகம் ரிஷிகளையும், கர்வத்தோடு கொன்றும், பாதித்து வந்தான். (6) இவ்விதமாய் எல்லா உலகங்களையும் தினந்தோறும் பீடித்து வந்தான். பிறகு ஓர் சமயம் வலாசுரனைக் கொன்ற தேவராஜனை (7) யுத்தத்தில் ஜயித்து அப்ரமு என்ற பெண் யானைக்குக் கணவனான ஐராவதத்தைத் துரத்தி அதன் வாலைக் கையால் பிடித்து நான்கு பக்கத்திலும் சுழற்றி (8) அதனால் மூர்ச்சையடைந்த அந்த கஜத்தை அந்த துராத்மா வெகு தூரத்தில் எறிந்து விட்டான். மற்ற திக் பாலகர்களையும் பலவிதமாய் துன்பம் செய்து விரட்டி விட்டான். (9) அக்கொடியவன் யக்ஷர்களையும், பூலோகத்தில் வஸிக்கும் மற்றவர்களையும், சில மகரிஷிகளையும் கொல்லுவதற்காக விரட்டும் பொழுது (10) அந்த மகரிஷிகள் யாவரும் பயமடைந்து காசிக்குச் சென்று அங்குள்ள மஹரிஷிகளோடு சேர்ந்து மணிகர்ணிகாகட்டமடைந்து விச்வனாதருடைய மிகச் சிறந்த அத்புதமான கோவிலுக்குள் சென்று அங்கு பக்தர்களான ஜனங்களுடன் (11-12)

विश्वनाथं प्रणम्यैते तस्थुस्तत्र भयान्विताः । तदानीमागतस्तत्र त्वरया स गजासुरः ॥ १३
வீரபத்ர மஹாஸத்வ சிவாக்ஞாபரிபாலக | ஸம்ஸர்காதஸ்ய பாபஸ்ய சிவநிந்தாரதஸ்ய ஹி || 39
ஸ்வோசிதம் பலமஸ்மாபி: ப்ராப்தம் மூடாத்மபி: ப்ரபோ: | சராசராணி பூதானி புவனானி சிவானிச || 40

போல் வீரபத்ரரின் சமீபம் வந்தார். (30) ஓ முனிவர்களே! அப்பொழுது சத்ருக்களை நாசம் செய்கின்ற வீரபத்ரர் மிக வேகமாய் வருகின்ற விஷ்ணுவை ஹுங்காரம் செய்து ஸ்தம்பிக்கச் செய்தார். (31) விஷ்ணுவும் உடனே சித்ரத்தில் எழுதப்பட்ட பொம்மைபோல் அசைவற்று ஸ்தம்பித்து நின்றார். ஓ முனிவர்களே! அப்பொழுது வீரபத்ரர் இவரைப் பிசைந்துவிடலாமா? அல்லது அடித்துவிடலாமா? அல்லது வேறென்ன செய்யலாம்? ஒன்றும் தோன்றவில்லையே என்று ஆலோசித்தார் அப்பொழுது சிவனின் கட்டளையின்படி சகல பிரபஞ்சங்களையும் ஸம்ஹரிக்கும் ஓ வீரபத்ரா! கோபத்தை விட்டுவிடு என்று அசரீரி வாக்கானது ஏற்பட்டது. பராக்கிரமசாலியான வீரபத்ரர் அதைக் கேட்டு இது சிவாக்ஞை என்று நிச்சயித்து (32–34) தேவர்களுக்கு ஈசரான வீரபத்ரர் கோபத்தை தனக்குள்ளேயே அடக்கிக் கொண்டார் பிறகு ப்ரும்மதேவன் அந்தத் தேரிலிருந்து வெகு சீக்கிரமாய் இறங்கி (35) அஞ்சலி செய்துகொண்டு அன்புடன் தண்டம்போல் நமஸ்கரித்தார். கருணாகரரான ஓ தேவேச! எனது தவறைப் பொறுத்துக்கொள்ள வேண்டும் (36) என்று துதித்து வீரபத்ரரை ஓ முனிவர்களே! மனமிரங்கச் செய்துகொண்டார். இதே சமயத்தில் விஷ்ணுவானவர் தேவேசரான வீரபத்ரரைத் (37) தண்டம் போல் நமஸ்கரித்து பக்தியுடன் நூற்றுக் கணக்கான துதிகளால் துதித்துத் தனது குற்றங்களை நீக்கிவிடும்படி பக்தியுடன் பிரார்த்தித்தார். (38) ஓ வீரபத்ரா! மிகுந்த பலமுள்ளவரே! சிவனின் கட்டளையை நிறைவேற்றுகிறவரே! சிவநிந்தை செய்வதில் ஈடுபட்ட பாபியின் சேர்க்கையால் (39) எங்களுக்குத் தகுதியான பயனை மூட புத்தியுள்ள நாங்கள் அடைந்துவிட்டோம். ஓ பிரபுவே! ஸகல ஸ்தாவர ஜங்கமங்கள், பூதங்கள், புவனங்கள், அகில பிரும்மாண்டங்கள் இவைகளெல்லாம் தங்களது பார்வை, மந்த

ब्रह्माण्डान्यप्य शेषाणि भस्मानि तव वीक्षणात् । स्मितेन वाट्टहासेन निश्वासोश्वासकैरपि ॥ ४१
तदस्मासु सुरेश्वीश तूलकल्पेषु देवप । लीलामात्रं विलसितं नात्र कार्या विचारणा ॥ ४२
कासि त्वं सर्वसंहर्त्ता क्वैते मशकास्सुराः । किं सेनया तव विभोरायुधैर्वा स्मितायुत ॥ ४३
त्वदधीनानिमान्रक्ष बहुना किं महाबल । शक्तिरस्मि शिवस्याहं प्रकृत्याख्या जगत्प्रभोः ॥ ४४
प्राप्तं तस्मात्पुरा चक्रं वरमन्यच्च शंकरात् । शिवपूजामहिम्नैव विष्णुत्वं प्राप्तवानहम् ॥ ४५
महाबल महासत्व क्षमस्वागो ममाधुना । इत्युक्त्वा प्रणनामायं वीरभद्रं पुनः पुनः ॥ ४६
कृपाञ्चक्रे तदा वीरः प्रसन्नो माधवाय सः । तदन्तरे महादेवः प्रादुरासीद्वृषोपरि ॥
अंबया सह कल्याण्या नन्द्याद्यैश्च गणैस्सह ॥ ४७

इति श्री स्कान्दे महापुराणे शंकरसंहितायां शिवरहस्यखण्डे
दक्षकाण्डे चतुस्त्रिंशोऽध्यायः ॥

ப்ரம்ஹாண்டான்யப்யசேஷாணி பஸ்மானி தவ வீக்ஷணாத் ।
ஸ்மிதேன வாட்டஹாஸேன நிச்வாஸோச்வாஸகைரபி ॥ 41
ததஸ்மாஸு ஸுரேஷ்வீச தூலகல்பேஷு தேவப । லீலாமாத்ரம் விலஸிதம் நாத்ர கார்யா விசாரணா ॥ 42
க்வாஸி த்வம் ஸர்வஸம்ஹர்தா க்வ வைதே மசகாஸ்ஸுராः ।
கிம் ஸேனயா தவ விபோராயுதைர்வா ஸ்மிதாயுத ॥ 43
த்வததீனாநிமான்ரக்ஷ பஹுனா கிம் மஹாபல ।
சக்திரஸ்மி சிவஸ்யாஹம் ப்ரக்ருத்யாக்யா ஜகத்ப்ரபோः ॥ 44
ப்ராப்தம் தஸ்மாத் புரா சக்ரம் வரமன்யச்ச சங்கராத் ।
சிவபூஜாமஹிம்னைவ விஷ்ணுத்வம் ப்ராப்தவானஹம் ॥ 45
மஹாபல மஹாஸத்வ க்ஷமஸ்வாகோ மமாதுனா । இத்யுக்த்வா ப்ரணநாமாயம் வீரபத்ரம் புனः புனः 46
க்ருபாம் சக்ரே ததா வீரः ப்ரஸன்னோ மாதவாய ஸः ।
ததந்தரே மஹாதேவः ப்ராதுராஸீத்வ்ருஷோபரி ॥
அம்பயாஸஹ கல்யாண்யா நந்த்யாத்யைச்ச கணைஸ்ஸஹ ॥ 47

இதி ஸ்ரீஸ்காந்தே மஹாபுராணே சங்கரஸம்ஹிதாயாம் சிவரஹஸ்யகண்டே
தக்ஷகாண்டே சதுஸ்த்ரிம்சோத்யாயः

ஹாஸம், அட்டஹாஸம், உள்மூச்சு, வெளிமூச்சு இவைகளால் க்ஷேமமுள்ளவைகளாகவும் சாம்பலாகவும் ஆகின்றன. (40-41) ஓ தேவரக்ஷக! ஓ ஈசனே! ஆகையால் கேவலம் பஞ்சுக்கு ஒப்பாகிய தேவர்களான எங்களிடத்தில் தாங்கள் விளையாட்டாகத்தான் செய்தீர்களென்பதில் ஆக்ஷேபணையில்லை. (42) ஸகல பிரபஞ்சங்களையும் ஸம்ஹரிக்க வல்லமையுள்ள தாங்களெங்கே, கொசுக்களை ஒத்த தேவர்களான நாங்களெங்கே? புன்சிரிப்பை ஆயுதமாகக் கொண்ட ஓ பிரபுவே! தங்களுக்குச் சேனையாலும், ஆயுதங்களாலும் ஆகவேண்டியது என்ன? (43) ஓ மஹா பலிஷ்டரே! அதிகமாகச் சொல்லுவதில் என்ன பயன்? தங்களுக்கு அதீனர்களான இந்த தேவர்களை ரக்ஷிக்க வேண்டும். நானே ஜகதீசராகிய பரம சிவனுடைய ப்ரக்ருதி எனப் பெயருள்ள சக்தியாக இருக்கிறேன். (44) முன்பு அந்த சங்கரரிடமிருந்து சிவபூஜையின் பயனாக சிறந்த சக்கிரத்தையும் விஷ்ணுத் தன்மையையும் மற்றும் பலவற்றையும் அடைந்தேன். (45) ஓ மஹாபலிஷ்டரே! மிகுந்த பராக்கிரமமுள்ளவரே! இப்பொழுது எனது குற்றத்தை மன்னிக்க வேண்டும். இவ்வாறு சொல்லி வீரபத்ரரைத் திரும்பத் திரும்ப இந்த விஷ்ணுவானவர் நமஸ்கரித்தார். (46) அப்பொழுது வீரபத்ரர் மாதவனின் பொருட்டு இரக்கமுள்ளவரானார். இதற்குள் ஸ்ரீ மஹாதேவர் விருஷபத்தில் கல்யாணியான பார்வதியுடனும், நந்தி முதலிய கணங்களுடனும் ஆவிர்பவித்தார். (47)

முப்பத்து நான்காவது அத்தியாயம் முற்றிற்று.

॥ अथ पञ्चत्रिंशोऽध्यायः ॥

दक्षादीनां उज्जीवनं तैः कृत स्तुतिश्च ॥

तं दृष्ट्वा वीरभद्रोऽसौ महादेवं जगद्गुरुम् । प्रणम्य परया भक्त्या स्तुत्वा स्तोत्रशतैरपि ॥ १
तस्थौ बद्धाञ्जलिपुटः पुरतोऽस्य महेशितुः । तस्थतुश्च तदा विष्णुब्रह्माणौ भयकंपितौ ॥ २
प्रणम्य सांबमीशानं सगणं परमेश्वरम् । दाक्षायणी तदा गौरी दृष्ट्वा देवान्मृतिं गतान् ॥ ३
एतौ बद्धाञ्जलिकरौ विधिनारायणावपि । यागस्यापि तथा ध्वंसं मृतं दक्षमपि द्विजाः ॥ ४
कृपामूर्तिं कृपायुक्ता देवं वीक्ष्य वचोऽब्रवीत् । स्वामिन्नज्ञानतो देवं त्वामविज्ञाय शङ्करम् ॥ ५
इमां दशामनुप्राप्ता स्सर्वेप्यत्यन्तगर्विताः । मन्निमित्तात्ततस्तस्मात्सर्वानुज्जीवय प्रभो ॥ ६
इत्युक्त्वा सा महादेवी प्रणनाम महेश्वरम् । कृपामूर्तिर्वचस्तस्या हृदि कृत्वा महेश्वरः ॥ ७
वीरभद्रं समीक्ष्यैनं बद्धाञ्जलिपुटं पुरः । पुनस्सञ्जीवयाश्वेनान् वीरभद्र मदाज्ञया ॥ ८
इत्युवाच दयासिन्धुस्तदानीं ब्राह्मणोत्तमाः । ततशिवाज्ञां शिरसा वहन्वीरस्सुरानिमान् ॥ ९

॥ அத பஞ்சத்ரிம்ஶோऽத்யாய: ॥

தக்ஷன் முதலியவர்களைப் பிழைப்பித்தலும், அவர்கள் செய்த துதியும்

தம் த்ருஷ்ட்வா வீரபத்ரோऽஸௌ மஹாதேவம் ஜகத்குரும் ।
ப்ரணம்ய பரயா பக்த்யா ஸ்துத்வா ஸ்தோத்ரசதைரபி ॥ 1
தஸ்தௌ பத்தாஞ்ஜலிபுட: புரதோऽஸ்ய மஹேசிது: ।
தஸ்ததுச்ச ததா விஷ்ணுப்ரம்ஹாணௌ பயகம்பிதௌ ॥ 2
ப்ரணம்ய ஸாம்பமீசானம் ஸகணம் பரமேச்வரம் ।
தாக்ஷாயணீ ததா கௌரீ த்ருஷ்ட்வா தேவான் ம்ருதிம் கதான் ॥ 3
ஏதௌ பத்தாஞ்ஜலிகரௌ விதிநாராயணாவபி । யாகஸ்யாபி ததா த்வம் ஸம் ம்ருதம் தக்ஷமபி த்விஜா: ॥ 4
க்ருபா மூர்த்திம் க்ருபாயுக்தா தேவம் வீக்ஷ்ய வசோऽப்ரவீத் ।
ஸ்வாமின்னக்ஞானதோ தேவம் த்வாமவிக்ஞாய சங்கரம் ॥ 5
இமாம் தசா மனுப்ராப்தாஸ் ஸர்வேऽப்யத்யந்தகர்விதா: ।
மன்னிமித்தாத்யதஸ்மாத் ஸர்வானுஜ்ஜீவய ப்ரபோ ॥ 6
இத்யுக்த்வா ஸா மஹாதேவீ ப்ரணநாம மஹேச்வரம் ।
க்ருபாமூர்திர் வசஸ்தஸ்யா ஹ்ருதி க்ருத்வா மஹேச்வர: ॥ 7
வீரபத்ரம் ஸமீக்ஷ்யைனம் பத்தாஞ்ஜலிபுடம் புர: । புனஸ்ஸஞ்ஜீவயாச்வேனான் வீரபத்ர மதாக்ஞயா ॥ 8
இத்யுவாச தயாஸிந்து ஸ்ததானீம் ப்ராம்ஹணோத்தமா: ।
ததச்சிவாக்ஞாம் சிரஸா வஹன் வீரஸ்ஸுராநிமான் ॥ 9

முப்பத்தைந்தாவது அத்தியாயம்

பிறகு வீரபத்ரர் ஜகத் குருவாகிய ஸ்ரீ மஹாதேவரைப் பார்த்து நமஸ்கரித்து பல துதிகளால் பக்தியுடன் துதித்து (1) அந்த மஹேச்வரருடைய முன்னிலையில் நின்றார். அப்பொழுது ப்ரும்மாவும் விஷ்ணுவும் மிக பயமடைந்தவர்களாகி (2) ப்ரமத கணங்களுடன் கூடிய பார்வதீ பரமேச்வரர்களை நமஸ்கரித்து நின்றார். ஓ முனிவர்களே! அப்பொழுது தக்ஷன் பெண்ணாகிய கௌரியானவள் மரணமடைந்த தேவர்களையும் (3) அஞ்சலி செய்துகொண்டு நிற்கின்ற அந்த விஷ்ணு ப்ரும்மர்களையும், யாகம் நாசம் செய்யப்பட்டிருப்பதையும் பார்த்து (4) கருணையுடன் கருணைமூர்த்தியாகிய ஸ்ரீ பரமேச்வரனைப் பார்த்துச் சொன்னாள். ஓ ஸ்வாமியே! அறிவின்மையால் சங்கரரும் தேவருமான தங்களை அறியாமல் (5) இவர்கள் யாவரும் மிகுந்த கர்வம் கொண்டு இந்த நிலையை அடைந்தார்கள். ஓ பிரபுவே! இவையெல்லாம் என் நிமித்தமாகவே ஏற்பட்டனவாகையால் இவர்கள் யாவரையும் பிழைக்கச் செய்யவேண்டும். (6) இவ்வாறு சொல்லி அந்த மஹாதேவியானவள் ஸ்ரீ மஹேச்வரனை நமஸ்கரித்தாள். கிருபாமூர்த்தியான பரமேச்வரன் அம்பாளின் அந்த வார்த்தையை மனதில் வாங்கிக்கொண்டு (7) கை கூப்பிக்கொண்டு முன்னிலையிலிருக்கும் ஸ்ரீ வீரபத்ரரைப் பார்த்து, ஓ வீரபத்ர! எனது கட்டளையின்படி இவர்களைச் சீக்கிரம் பிழைக்கச் செய்வாயாக. (8) ஓ பிராம்மணோத்தமர்களே! கருணைக் கடலான ஸ்ரீ பரமேச்வர்

समीक्ष्योज्जीवयामास कृपादृष्ट्या महाबलः । स्वापादिव ततोत्तस्थुस्सर्वे विनिहतास्सुराः ॥ १०
दक्षगोष्ठीनिवासोऽपि स्वप्ने दृष्ट इव स्मृतः । अथैते देवमीशानं मंबिकासहमव्ययम् ॥ ११
प्रणम्य दण्डवद्भीता भक्त्या च परया युताः । स्तुत्वा स्तोत्रैर्महादेवं वाचमूचुश्च ते द्विजाः ॥ १२
दयासिन्धो महादेव परार्थैकप्रयोजन । महापापात्सुरास्सर्वे बहुकालफलप्रदात् ॥ १३
शिव दक्षस्य संसर्गसंभवादतिपापिनः । मोचिताश्शीघ्रकालेन वयं युगपदेवभो ॥ १४
कस्त्वां विना महादेव सुराणां मूढचेतसाम् । शरण्यश्शरणं लोकेष्वापन्नार्तिप्रभञ्जन ॥ १५
पुरा भागीरथीं पुण्यां शिरसा धृतवानसि । सर्वेषामेव देवानां रक्षायै पाणिपल्लवे ॥ १६
वह्निमप्यवहश्शंभो विषमप्यपिबः खलु । एवमादिभयेभ्यस्त्वमस्मान्रक्षितवानसि ॥ १७
तस्मात्त्वमेव न स्त्राता भीतानां परमेश्वर । नमस्तेऽस्तु महादेव नमोमीढुष्टमाय ते ॥ १८
मुण्डिने जटिने तुभ्यं सर्वरक्षापरायण । एवमुक्त्वा तदा देवाः प्रणेमुर्भक्तवत्सलम् ॥ १९

ஸமீக்ஷ்யோஜ்ஜீவயாமாஸ க்ருபாத்ருஷ்ட்யா மஹாபல: ।
ஸ்வாபாதிவ ததோத்தஸ்துஸ்ஸர்வே வினிஹதாஸ்ஸுரா: ॥ 10
தக்ஷகோஷ்டிநிவாஸோऽபி ஸ்வப்னே த்ருஷ்ட இவஸ்ம்ருத: ।
அதைதே தேவமீசானமம்பிகாஸகமவ்யயம் ॥ 11
ப்ரணம்ய தண்டவத்பீதா பக்த்யாச பரயா யுதா: ।
ஸ்துத்வா ஸ்தோத்ரைர் மஹாதேவம் வாசமூசுச்ச தே த்விஜா: ॥ 12
தயாஸிந்தோ மஹாதேவ பரார்தைக ப்ரயோஜன । மஹாபாபாத் ஸுராஸ்ஸர்வே பஹுகாலபலப்ரதாத்
சிவ தக்ஷஸ்ய ஸம்ஸர்கஸம்பவாததி பாபின: । மோசிதாச்சீக்ரகாலேன வயம் யுகபதேவ போ ॥ 14
கஸ்த்வாம் விநு மஹாதேவ ஸுராணாம் மூடசேதஸாம் ।
சரண்யச்சரணம் லோகேஷ்வாபன்னார்தி ப்ரபஞ்ஜன ॥ 15
புரா பாகீரதீம் புண்யாம் சிரஸா த்ருதவானஸி । ஸர்வேஷாமேவ தேவானாம் ரக்ஷாயை பாணிபல்லவே 16
வன்னிமப்யவஹச்சம்போ விஷமப்யபிப: கலு । ஏவமாதி பயேப்யஸ்த்வமஸ்மான் ரக்ஷிதவானஸி ॥ 17
தஸ்மாத் த்வமேவ நஸ்த்ராதா பீதானாம் பரமேச்வர ।
நமஸ்தேஸ்து மஹாதேவ நமோ மீடுஷ்டமாய தே ॥ 18
முண்டினே ஜடினே துப்யம் ஸர்வரக்ஷாபராயண ।
ஏவமுக்த்வா ததா தேவா: ப்ரணேமுர் பக்தவத்ஸலம் ॥ 19

இவ்வாறு சொன்னார். பிறகு ஸ்ரீ சிவனின் கட்டளையைச் சிரஸ்ஸில் வஹித்து, இந்த தேவர்களை (9) கருணைக் கண்களால் மஹா பலிஷ்டரான வீரர் மறுபடி பிழைக்கச் செய்தார். மடிந்து கிடந்த தேவர்களெல்லாம் தூக்கத்திலிருந்து எழுந்திருப்பதுபோல் உடன் எழுந்தனர். (10) தக்ஷன் கூட்டத்தில் சேர்ந்திருந்ததெல்லாம் அந்த தேவர்களுக்கு ஸ்வப்னத்தில் கண்டதுபோலிருந்தது. பிறகு இந்த தேவர்கள் தேவரும், ஈசானரும், அழிவற்றவருமான பார்வதீ பதியைத் (11) தண்டம்போல் நமஸ்கரித்து பயத்துடனும் மிகுந்த பக்தியுடனும் அவர்கள் நூற்றுக் கணக்கான ஸ்தோத்திரங்களால் துதித்து ஸ்ரீமஹாதேவனைப் பார்த்துக் கூறினர். (12) ஓ கருணைக் கடலே! ஓ மஹாதேவரே! பக்தர்களின் க்ஷேமத்தையே பயனாகக் கொண்டவரே! இந்த தேவர்களாகிய நாங்கள் யாவரும் மஹா பாபியான இந்த தக்ஷனின் சேர்க்கையினால் ஏற்பட்டதும், வெகுகாலம் அனுபவிக்கவேண்டியதான மஹா பாபத்திலிருந்து சிறிது காலத்திலேயே ஒரே சமயத்தில் விடுபடலானோம். (13-14) சரணமடைந்தவர்களின் துக்கத்தைப் போக்கும் ஓ பரமசிவ! மூட புத்தியுள்ள தேவர்களுக்கு இந்த உலகத்தில் தங்களைத் தவிர யார்தான் கதி? தாங்கள் தான் சரணம் (15) முன்பு புண்யமான கங்கையைத் தலையினால் தரித்தீரல்லவா! தேவர்களையெல்லாம் காப்பாற்றுவதற்காகத் துளிர் போன்ற கையில் (16) அக்னியையும் தரித்தீரல்லவா! ஓ சம்புவே! விஷத்தையும் சாப்பிட்டீரல்லவா! இது போன்ற பல அபாயங்களிலிருந்தும் எங்களைக் காப்பாற்றியிருக்கிறீர். (17) ஓ பரமேச்வர! ஆகையால் மிக பயமடைந்த எங்களுக்குத் தாங்களே ரக்ஷகர். ஓ மஹாதேவ! தங்களுக்கு நமஸ்காரம். பக்தர்களின் அபீஷ்டங்களை அளிக்கும் தங்களுக்கு நமஸ்காரம். (18) மொட்டைத் தலையரான தங்களுக்கு நமஸ்காரம். ஜடை தரித்த தங்களுக்கு நமஸ்காரம். யாவரையும் ரக்ஷிப்பதில் முயன்றவரே தங்களுக்கு நமஸ்காரம் என்று தேவர்கள் கூறிவிட்டு அப்பொழுது பக்தர்களிடத்தில் அன்புகொண்ட அப்பிரபுவை நமஸ்கரித்தார்கள். (19) அப்பொழுது

तानेतानमरान् सर्वान् विष्णुब्रह्ममुखाञ्छिवः । निरीक्ष्य करुणादृष्ट्या मन्दस्मितमुखांबुजः ॥ २०
पदेभ्यः प्रेषयामास रक्षायै ब्राह्मणोत्तमाः । प्रेषितास्तु ततो देवा महादेवं त्रियंबकम् ॥ २१
प्रणेमुर्दण्डवद्भक्त्या प्रीत्याच परया सह । स्रष्टा तदा महादेवं प्रणम्य प्रणतार्तिहम् ॥ २२
उज्जीवय महादेव दक्षमप्याश्रितार्तिहन् । स्वतन्त्रशक्ते सर्वज्ञ सर्वभूतहितोद्यम ॥ २३
एवमप्रार्थयद्देवं भक्तवश्यं कृपानिधिम् । तस्य तद्वचनं श्रुत्वा महादेवः पिनाकधृक् ॥ २४
वीरभद्रं समीपस्थमवलोक्यदीश्वरः । विज्ञायेङ्गितमीशस्य वीरभद्रशिवाज्ञया ॥ २५
भानुकंपं गणेशानं तद्देहानयनाय तम् । प्रेषयामास बलवांस्तदानीं ब्राह्मणोत्तमाः ॥ २६
शीघ्रमेव तमानीय भानुकंपस्समागतः । आजं शिरश्च दक्षस्य कबन्धे तस्य पापिनः ॥ २७
प्राणेन योजयामास शिवाज्ञापरिपालकः । ततो दक्षस्समुत्थाय स्वापादिव भयान्वितः ॥ २८
प्रणम्य वीरभद्रं तं स्मरन् पापमपि स्वकम् । तस्थे महत्या भीत्याऽयं बद्धाञ्जलिकरः पुरः ॥ २९
क्षिप्रेण च पुनश्शंभुं दृष्ट्वा सांबं वृषोपरि । प्रणनाम भयाविष्टः प्राञ्जलिः पुरुषर्षभाः ॥ ३०

தானேதானமரான் ஸர்வான் விஷ்ணுப்ரும்ஹமுகாஞ்சிவ: ।
நிரீக்ஷ்ய கருணத்ருஷ்ட்யா மந்தஸ்மிதமுகாம்புஜ: ॥ 20
பதேப்ய: ப்ரேஷயாமாஸ ரக்ஷாயை ப்ராம்ஹணோத்தமா: ।
ப்ரேஷிதாஸ்து ததோ தேவா மஹாதேவம் த்ரியம்பகம் ॥ 21
ப்ரணேமுர்தண்டவத் பக்த்யா ப்ரீத்யாச பரயா ஸஹ ।
ஸ்ரஷ்டா ததா மஹாதேவம் ப்ரணம்ய ப்ரணதார்திஹம் ॥ 22
உஜ்ஜீவய மஹாதேவ தக்ஷமப்யாச்ரிதார்திஹன் । ஸ்வதந்த்ரசக்தே ஸர்வக்ஞ ஸர்வபூதஹிதோத்யம 23
ஏவமப்ரார்தயத்தேவம் பக்தவச்யம் க்ருபாநிதிம் । தஸ்ய தத்வசனம் ச்ருத்வா மஹாதேவ: பினாகத்ருக் 24
வீரபத்ரம் ஸமீபஸ்த மவலோகயதீச்வர: । விக்ஞாயேங்கிதமீசஸ்ய .. வீரபத்ரச்சிவாக்ஞயா ॥ 25
பானுகம்பம் கணேசானம் தத்தேஹானயனாயதம் ।
ப்ரேஷயாமாஸ பலவான் ததாநீம் ப்ராம்ஹணோத்தமா: ॥ 26
சீக்ரமேவ தமானீய பானுகம்பஸ்ஸமாகத: । ஆஜம் சிரச்ச தக்ஷஸ்ய கபந்தே தஸ்ய பாபின: ॥ 27
ப்ராணேன யோஜயாமாஸ சிவாக்ஞாபரிபாலக: । ததோ தக்ஷஸ்ஸமுத்தாய ஸ்வாபாதிவ பயான்வித: 28
ப்ரணம்ய வீரபத்ரம் தம் ஸ்மரன் பாபமபி ஸ்வகம் । தஸ்தே மஹத்யா பீத்யாऽயம் பத்தாஞ்ஜலிகர: புர: 29
க்ஷிப்ரேணச புனச்சம்பும் த்ருஷ்ட்வா ஸாம்பம் வ்ருஷோபரி ।
ப்ரணநாம பயாவிஷ்ட: ப்ராஞ்ஜலி: புருஷர்ஷபா: ॥ 30

அவர் மந்தஹாஸத்துடன் கூடிய முகாரவிந்தத்தைக் கொண்டவராகி, விஷ்ணு, ப்ரும்மா முதலிய எல்லா தேவர்களையும் கருணைக் கண்ணோடு பார்த்து, (20) ஓ முனிவர்களே! உலகத்தை ரக்ஷிப்பதற்காக அவரவர்களுடைய ஸ்தானங்களுக்கு அனுப்பினார். அவ்வாறு அனுப்பப்பட்ட தேவர்கள் முக்கண்ணனாகிய மஹாதேவரை, (21) பக்தியுடனும், அன்புடனும் தண்டம்போல் நமஸ்கரித்தார்கள். பிறகு, பிரும்மா வானவர், நமஸ்கரித்தவர்களின் துக்கத்தைப் போக்கும் ஸ்ரீ மஹாதேவரை நமஸ்கரித்து, (22) அண்டினவர்களின் துக்கத்தைப் போக்கும் ஓ மஹாதேவ! ஸ்வாதீன சக்தியுடையவரே! ஸர்வக்ஞரே! ஸகல பிராணிகளுக்கும் நன்மையைச் செய்ய முயன்றவரே! இந்த தக்ஷனையும் உயிர்ப்பிக்கவேண்டும். (23) என்று பக்தர்களுக்கு வசமானவரும், கருணைக்கடலுமான ஸ்ரீ மஹாதேவரைப் பிரார்த்தித்தார். அவரது வார்த்தையைக் கேட்டு பினாகபாணியான ஸ்ரீ பரமசிவன் (24) சமீபத்திலிருக்கும் வீரபத்ரரைப் பார்த்தார். ஈசனுடைய இங்கிதத்தை அறிந்துகொண்டு வீரபத்ரர், ஈசனது கட்டளையின்படி (25) கணங்களுக்கு அதிபதியான பானுகம்பனை அந்த தக்ஷனின் தேஹத்தைக் கொண்டுவருவதற்காக அனுப்பினார். ஓ பிராம்மணோத்தமர்களே! பலவானான பானுகம்பன் அப்பொழுது (26) அதைக் கொண்டுவந்தான். சிவாக்ஞையின்படி நடக்கின்ற வீரபத்ரர் பாபியான தக்ஷனுடைய கபந்தத்தில் ஆட்டினுடைய தலையை வைத்து உயிரை உண்டுபண்ணினார். பிறகு, தக்ஷன் தூக்கத்திலிருந்ததுபோல் எழுந்து மிக பயங்கொண்டவனாகி, (27-28) அந்த வீரபத்ரரை நமஸ்கரித்து, தனது பாபத்தை நினைத்து மிக்க பயத்துடன் அவர் முன்னிலையில் அஞ்சலிசெய்துகொண்டு நின்றான் (29) மறுபடியும், உடன் விருஷபத்தின்மேல் ஸ்ரீ அம்பாளுடன் கூடிய ஸ்ரீ பரமேச்வரரைப் பார்த்து, மிக பயங்கொண்டவனாகி,

वेपमानशरीरं तं वीक्ष्य शम्भुः कृपाकरः । माभी र्भवतु ते दक्ष प्रसन्नं विद्धि मामिह ॥ ३१
इति शंभोर्वचश्श्रुत्वा दक्षश्श्रोत्रसुखावहम् । प्रणनाम पुनर्भक्त्या प्राञ्जलिर्ब्राह्मणोत्तमाः ॥ ३२
कृतार्थोऽस्मि महादेव दर्शनेन तव प्रभो । मुक्त्वा त्वां देवदेवेशमवलंब्य सुरानिमान् ॥ ३३
फलञ्च भुक्तवानस्मि शीघ्रमेव तवाज्ञया । क्षमस्व मे महादेव मन्तुमेनं कृपानिधे ॥ ३४
नमो नमस्ते देवेश पुनर्भूयो नमो नमः । त्वदधीनमिदं शंभो जगदेतच्चराचरम् ॥ ३५
अतस्त्वद्विहितामाज्ञां क्षमते कोऽतिवर्तितुम् । आज्ञाभंगात्तव स्वामिन्मया प्राप्तमिदं फलम् ॥ ३६
इति ब्रुवति दक्षेऽस्मिन् बद्धाञ्जलिकरो द्विजाः । वीरभद्रं तदा गौरी वीक्ष्य प्रेमरसानना ॥ ३७
पस्पर्श पाणिना पृष्ठे तुष्ट्या परमया युता । ददावस्य वराम्भूयो बहून् दाक्षायणीमुदा ॥ ३८
तदा विष्णुमुखान् देवान्वीक्ष्य प्राह महेश्वरः । स्वकृतस्याद्य पापस्य फलं दत्तं मया सुराः ॥ ३९
इति देववचश्श्रुत्वा तदानीं ते तु नाकिनः । प्रणम्य शम्भुं गौरीञ्च वीरभद्रं महाबलम् ॥ ४०

வேபமானசரீரம் தம் வீக்ஷ்ய சம்பு: க்ருபாகர: । மாபீர்பவதுதே தக்ஷ ப்ரஸன்னம் வித்திமாமிஹ ॥ 31
இதி சம்போர்வசச் ச்ருத்வா தக்ஷச்ச்ரோத்ரஸுகாவஹம் ।
ப்ரணநாம புனர்பக்த்யா ப்ராஞ்ஜலிர் ப்ராஹ்மணோத்தமா ॥ 32
க்ருதார்த்தோऽஸ்மி மஹாதேவ தர்சனேன தவ ப்ரபோ: ।
முக்த்வா த்வாம் தேவதேவேச மவலம்ப்ய ஸுரானிமான் ॥ 33
பலஞ்ச புக்தவானஸ்மி சீக்ரமேவ தவாக்ஞயா । க்ஷமஸ்வ மே மஹாதேவ மந்துமேனம் க்ருபாநிதே ॥ 34
நமோ நமஸ்தே தேவேச புனர்பூயோ நமோ நம: । த்வததீநமிதம் சம்போ ஜகதேதச்சராசரம் ॥ 35
அதஸ்த்வத்விஹிதாமாக்ஞாம் க்ஷமதே கோऽதிவர்திதும் ।
ஆக்ஞாபங்காத்தவஸ்வாமின் மயா ப்ராப்தமிதம் பலம் ॥ 36
இதி ப்ருவதி தக்ஷேऽஸ்மின் பத்தாஞ்ஜலிகரோ த்விஜா: ।
வீரபத்ரம் ததா கௌரீ வீக்ஷ்ய ப்ரேமரஸானனா ॥ 37
பஸ்பர்ச பாணினா ப்ருஷ்டே துஷ்ட்யா பரமயாயுதா ।
ததாவஸ்ய வரான்பூயோ பஹூன் தாக்ஷாயணீ முதா ॥ 38
ததா விஷ்ணுமுகான் தேவான் வீக்ஷ்ய ப்ராஹ மஹேச்வர: ।
ஸ்வக்ருதஸ்யாஸ்ய பாபஸ்ய பலம் தத்தம் மயா ஸுரா: ॥ 39
இதி தேவ வச: ச்ருத்வா ததானீம் தேது நாகின: । ப்ரணம்ய சம்பும் கௌரீஞ்ச வீரபத்ரம் மஹாபலம் ॥ 40

அஞ்சலி செய்து நமஸ்கரித்தான். ஓ முனிவர்களே! (30) கருணைக்கடலான அந்த பகவான் நடுங்குகின்ற சரீரத்தை உடைய அந்த தக்ஷனைப் பார்த்து ஓ தக்ஷ! நீ பயப்படவேண்டாம். நான் உனக்குப் பிரஸன்னராகிவிட்டேன் எனச் சொன்னார். (31) என்ற சம்புவின், காதுக்கினிமையான வார்த்தையைக் கேட்டு தக்ஷன், ஓ முனிவர்களே! மறுபடியும் அஞ்சலி செய்துகொண்டு பக்தியுடன் அந்த பரமேச்வரரை நமஸ்கரித்தான். (32) ஓ பிரபுவான மஹாதேவ! தங்களைத் தரிசித்ததால் நான் கிருதார்த்தனாகிவிட்டேன் ஓ தேவாதிதேவ! தங்களை விலக்கி, இந்த தேவர்களை அண்டியதற்கு (33) தங்களது ஆக்ஞையால் அதிசீக்கிரத்தில் தக்க பயனை அடைந்தேன். ஓ கருணைக்கடலான ஓ மஹாதேவ! என் குற்றங்களை மன்னிக்கவேண்டும். (34) ஓ தேவேச! தங்களுக்கு நமஸ்காரம், நமஸ்காரம், மறுபடி நமஸ்காரம்! மறுபடி நமஸ்காரம். ஓ சம்புவே! ஸ்தாவர ஜங்கம ரூபமான இந்த உலகம் யாவும் தங்களுக்குட்பட்டதே. (35) ஆகையால் தங்களிட்ட கட்டளையை மீறுவதற்கு யாரால் தான் முடியும். ஓ ஸ்வாமியே! தங்களுடைய கட்டளையை மீறியதால் எனக்கு இப்படிப்பட்ட பயன் ஏற்பட்டது. (36) ஓ த்விஜர்களே! இவ்வாறு தக்ஷன் கைகூப்பிக்கொண்டு கூறும்போது, அன்பினால் நனைந்த முகத்தை உடைய கௌரியானவள் வீரபத்ரனைப் பார்த்து (37) பரம சந்தோஷத்தோடு முதுகில் தடவிக் கொடுத்து, தாக்ஷாயணியானவள் சந்தோஷத்துடன் பின்னும் பல வரங்களைக் கொடுத்தாள். (38) அப்பொழுது மஹேச்வரர் விஷ்ணு, முதலிய தேவர்களைப் பார்த்து, ஓ தேவர்களே உங்களால் செய்யப்பட்ட பாவத்திற்குத் தக்க பயனை நான் கொடுத்தேன் (39) என்ற பரமேச்வருடைய வார்த்தையைக்கேட்டு அப்பொழுது அந்த தேவர்களெல்லாம் ஸ்ரீ சம்புவையும், கௌரியையும், மஹா பலிஷ்டரான வீரபத்ரரையும்

तस्थुः प्राञ्जलयस्सर्वे जयशब्दाभिभाषिणः । स्थानान्तरं महासत्रशालायां ब्राह्मणोत्तमाः ॥ ४१
ततः प्रतस्थे भगवान् गौर्या सह महेश्वरः । वीरभद्रेण काळ्या च गणैस्सर्वैः परीवृतः ॥ ४२
नानावादित्रनिनदपूरिताखिलदिङ्मुखाः । प्राप कैलासमचलं पर्वतानामधीश्वरम् ॥ ४३
तत्र सिंहासने स्थित्वा गौर्या साकं महेश्वरः । वीरभद्रं ससैन्यं तं भद्रकाळ्या पदंप्रति ॥ ४४
प्रेषयामास भगवान्विश्वात्मा लोकपूजितः । शिवस्याज्ञामयं धृत्वा शिरसा बलिनांवरः ॥ ४५
प्रणम्य सोममीशानं भद्रकाळ्या रथे स्थितः । प्रतस्थे सहसा वीरै स्सर्वैरपि परीवृतः ॥ ४६
भानुकंपाख्यगणपकृतसारथ्यकर्मवान् । तुष्ट्या परमया युक्तस्स्वां पुरीं प्राप भूसुराः ॥ ४७

इति श्री स्कान्दे महापुराणे शंकरसंहितायां शिवरहस्यखण्डे
दक्षकाण्डे पञ्चत्रिंशोऽध्यायः ॥

தஸ்து: ப்ராஞ்ஜலயஸ்ஸர்வே ஜயசப்தாபிபாஷிண: ।
ஸ்தானாந்தரம் மஹாஸத்ரசாலாயாம் ப்ராம்ஹணோத்தமா: ॥ 41

தத: ப்ரதஸ்தே பகவான் கௌர்யாஸஹ மஹேச்வர: । வீரபத்ரேண காள்யாச கணைஸ்ஸர்வை: பரிவ்ருத:
நானாவாதித்ரநினதபூரிதாகிலதிங்முக: । ப்ராப கைலாஸமசலம் பர்வதானாமதீச்வரம் ॥ 43

தத்ர ஸிம்ஹாஸனே ஸ்தித்வா கௌர்யா ஸாகம் மஹேச்வர: ।
வீரபத்ரம் ஸஸைன்யம் தம் பத்ரகாள்யாபதம் ப்ரதி ॥ 44

ப்ரேஷயாமாஸ பகவான் விச்வாத்மா லோகபூஜித: । சிவஸ்யாக்ஞாமயம் த்ருத்வா சிரஸா பலினாம்வர: 45
ப்ரணம்ய ஸோமமீசானம் பத்ரகாள்யா ரதே ஸ்தித: । ப்ரதஸ்தே ஸஹஸா வீரைஸ்ஸர்வைரபி பரிவ்ருத:

பானுகம்பாக்யகணபக்ருதஸாரத்யகர்மவான் ।
துஷ்ட்யா பரமயாயுக்தஸ் ஸ்வாம்புரீம் ப்ராப பூஸுரா: ॥ 47

இதி ஸ்ரீஸ்காந்தே மஹாபுராணே சங்கரஸம்ஹிதாயாம் சிவரஹஸ்யகண்டே
தக்ஷகாண்டே பஞ்சத்ரிம்சோத்யாய:

நமஸ்கரித்து, (40) எல்லோரும் அஞ்சலி செய்துகொண்டு, ஜய சப்தத்தைக் கூறிக்கொண்டு பெரிய அந்த யாகசாலையில் மற்றோரிடத்தில் நின்றார்கள். (41) பிறகு, பகவானான ஸ்ரீ பரமேச்வரர் பார்வதியுடன் புறப்பட்டு வீரபத்ரனாலும், காளியாலும், ஸகல பிரதம கணங்களாலும் சூழப்பட்டவராகி, (42) பலவாத்ய கோஷங்களால் நிரம்பிய திங்முகங்களை உடையவராகி, மலைகளில் சிறந்த கைலாஸ மலையை அடைந்தார். (43) அங்கு ஸர்வ பிரபஞ்ச ஸ்வரூபியும், எல்லா உலகங்களாலும், பூஜிக்கப்படுகின்றவருமான ஸ்ரீ பகவான் கௌரியோடுகூட சிம்மாஸனத்தில் அமர்ந்து பத்ரகாளியுடன் கூடிய வீரபத்ரரை சைன்யங்களோடு அவரது இருப்பிடத்திற்கு அனுப்பினார். பிறகு, பலவான்களில் சிறந்த வீரபத்ரரும் ஸ்ரீ பரமேச்வரரின் ஆக்ஞையை சிரஸ்ஸால் வஹித்து, (44-45) பார்வதீ, பரமேச்வரர்களை நமஸ்கரித்து, பத்ரகாளியுடன் ரதத்தில் ஏறிக்கொண்டு எல்லா வீரர்களாலும் சூழப்பட்டு, (45) பானுகம்பனென்ற கணத்தலைவனால் ஸாரத்யம் செய்யப்பட்டவராகிப் புறப்பட்டு, ஓ பிராம்மணோத்தமர்களே! மிகுந்த சந்தோஷத்தோடு தன் நகரம் சேர்ந்தார். (47)

முப்பத்தைந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

॥ अथ षट्त्रिंशोऽध्यायः ॥

महाशिवरात्रौ ज्योतिर्लिङ्ग रूपेण आविर्भावः ॥

ततो दक्षं विधिः प्राह पुत्रं दुःखभरान्वितम् । महामोहेन दक्ष त्वं किं कार्यं कृतवानसि ॥ १
देवतानामृषीणांच ब्राह्मणानां महात्मनाम् । केवलं मृत्युरेवात्र त्वया संपादितः खलु ॥ २
तथापि नाशिता कीर्तिः श्रीरप्यन्ये त्वदाश्रिताः । विनिन्द्य सांबमीशानमिदं प्राप्तं फलं त्वया ॥ ३
न केवलं महामोहो बभूवात्मज ते शिवे । मायया पूर्वमीशस्य महामोहो ममाप्यभूत् ॥ ४
समागत्य तदा शंभुर्मां ररक्ष शिवस्स्वयम् । तत्त्वं पूजय देवेशं सर्वश्रेयोविधायिनम् ॥ ५
दक्षः — मोहः कदा बभूवास्मिंस्तव शम्भौ कृपानिधौ । कथं ररक्ष भगवांस्तात त्वामेत्य मोहितम् ॥ ६
एतन्मे ब्रूहि वृत्तान्तं यथावृत्तं क्रमात् प्रभो । इति दक्षस्य वचनं समाकर्ण्य तदा विधिः ॥ ७
प्रोक्तमेव पुनर्वक्ष्ये पुत्र शृण्ववधानतः । इत्युक्त्वाऽयं महादेवं साक्षात्संसारभेषजम् ॥ ८

॥ அத ஷட்த்ரிம்சோऽத்யாய: ॥

மஹா சிவாத்திரியில் ஸ்ரீ பரமேச்வரர் ஜ்யோதிர்லிங்க ரூபமாய் ஆவிர்ப்பவித்தல்

ததோ தக்ஷம் விதி: ப்ராஹ புத்ரம் துக்கபரான்விதம் ।
மஹா மோஹேன தக்ஷ த்வம் கிம் கார்யம்க்ருதவானஸி ॥ 1
தேவதானும் ருஷிணுஞ்ச ப்ராம்ஹணுனும் மஹாத்மனும் ।
கேவலம் ம்ருத்யுரேவாத்ர த்வயா ஸம்பாதித: கலு ॥ 2
ததாபி நாசிதா கீர்திர் ச்ரீரப்யன்யே த்வதாச்ரிதா: ।
விநிந்த்ய ஸாம்பமீசானமிதம் ப்ராப்தம் பலம் த்வயா ॥ 3
ந கேவலம் மஹாமோஹோ பபூவாத்மஜ தே சிவே । மாயயா பூர்வமீசஸ்ய மஹாமோஹோ மமாப்யபூத் 4
ஸமாகத்ய ததா சம்புர் மாம் ரரக்ஷ சிவஸ்ஸ்வயம் । தத்த்வம் பூஜய தேவேசம் ஸர்வச்ரேயோவிதாயினம் 5
தக்ஷ: — மோஹ: கதா பபூவாஸ்மின் தவ சம்பௌ க்ருபாநிதௌ ।
கதம் ரரக்ஷ பகவாம்ஸ்ததா த்வாமேத்ய மோஹிதம் ॥ 6
ஏதன்மே ப்ரூஹி வ்ருத்தாந்தம் யதாவ்ருத்தம் க்ரமாத் ப்ரபோ ।
இதி தக்ஷஸ்ய வசனம் ஸமாகர்ண்ய ததா விதி: ॥ 7
ப்ரோக்தமேவ புனர்வக்ஷ்யே புத்ர ச்ருண்ववதானத: ।
இத்யுக்த்வாऽயம் மஹாதேவம் ஸாக்ஷாத் ஸம்ஸாரபேஷஜம் ॥ 8

முப்பத்தாறுவது அத்தியாயம்

பிறகு, பிரும்மாவானவர் மிகவும் துக்கத்தோடு கூடிய தனது புத்ரனான தக்ஷனைப் பார்த்துக் கூறினார். ஓ தக்ஷ! நீ மிகுந்த மோஹத்தினால் என்ன காரியம் செய்யலானாய் (1) தேவர்களுக்கும், மஹாத்மாக்களாகிய மஹரிஷிகளுக்கும், பிராம்மணர்களுக்கும் உன்னால் கேவலம் நாசமேற்படுத்தப்பட்டது அல்லவோ! (2) மேலும், நீ அடைந்திருந்த கீர்த்தியும், ஐச்வர்யமும், மற்றும் உன்னை அண்டினவர்களும் உன்னால் நாசமடைந்தார்கள். அம்பாளோடு கூடிய ஸ்ரீ பரமேச்வரரை நிந்தித்ததால் நீ இப்பயனை அனுபவிக்கலானாய். (3) ஓ தக்ஷ! உனக்கு மாத்திரம் ஸ்ரீ மஹேச்வரரிடமிருந்து மிகுந்த மோஹம் உண்டாயிற்றென்பதில்லை. ஸ்ரீ ஜகதீசருடைய மாயையால் முன்பு ஒரு சமயம் எனக்குக்கூட புத்தி மோஹம் ஏற்பட்டது. (4) அப்பொழுது அந்த பகவானே வந்து என்னைக் காப்பாற்றினார். ஆகையால் ஸகல க்ஷேமங்களையும் அளிக்கும் ஸ்ரீ தேவேசரைப் பூஜை செய்வாயாக எனக்கூறினார். (5) தக்ஷன் வினவினான் :— ஓ தந்தாய்! தயாநிதியாகிய அந்த பரமேச்வரரிடத்தில் தங்களுக்கு எப்பொழுது புத்தி மோஹமுண்டாயிற்று, மோஹமடைந்த தங்களை ஸ்ரீ பகவான் எவ்வாறு வந்து காப்பாற்றினார் ஓ பிரபுவே! இந்த விருத்தாந்தத்தை எனக்கு நடந்தபடி வரிசையாகக் கூறுங்கள் (6–7) தக்ஷனுடைய இவ்வாறான வசனத்தைக்கேட்டு ப்ரும்மாவானவர் கூறினார். ஓ புத்திர! நான் உனக்கு இதை முன்னமேயே சொல்லி இருக்கிறேன். ஆயினும், மறுபடியும் சொல்லுகிறேன் நீ ஸாவதானமாய் கேள். (8) எனச்சொல்லிவிட்டு

ध्यात्वा हृदब्जनिलये बद्धाञ्जलिकरोऽवदत् । चतुर्युगसहस्रान्तमहः प्रोक्तं ममात्मज ॥ ९
रात्रिश्च तावती ज्ञेया निद्रा तस्यां सदा भवेत् । नार्कस्तदा न चन्द्रादिग्रह नक्षत्रमण्डलम् ॥ १०
सत्यलोकावधि तदा जगदेतज्जलावृतम् । यत्र पुर्यां भवानी सा द्वात्रिंशद्धर्मचारिणी ॥ ११
कामाक्षीति जगत्ख्याता सा काञ्ची वाञ्छितार्थदा । विनिक्षिप्ते घटे यद्वद्विपरीततयांबुधौ ॥ १२
बहिरेव जलं नान्तस्तद्वदेषा बहिर्जला । तदानीं ववृधेत्यन्तं कैलासः पर्वतेश्वरः ॥ १३
न्यग्रोधात्पतितं पर्णमेकं तस्याञ्जलाशये । तस्योपरि हरिस्त्वेकश्शयित्वा विचचारह ॥ १४
शिशुरूपेण राऽयन्तं जलमध्ये भयंकरे । व्यतीत्य तां तदा विष्णुर्निशां सर्वविनाशिनीम् ॥ १५
वाराहं रूपमास्थाय जलमध्यगतां क्षितिम् । उत्थाप्य पूर्ववच्छीघ्रमास्थापयदयं सुत ॥ १६
यथापूर्वं प्रजास्सर्वा मयाप्युत्पादितास्तदा । शिवाज्ञया तदा पुत्र मम मोहोऽभवद्धत ॥ १७
अहमेव जगत्कर्ता नान्यः कश्चन विद्यते । सुप्ते मयि जगत्सुप्तं प्रबुद्धेच प्रबुध्यते ॥ १८

த்யாத்வா ஹ்ருதப்ஜநிலயே பத்தாஞ்ஜலிகரோऽவதத் । சதுர்யுகஸஹஸ்ராந்தமஹ: ப்ரோக்தம் மமாத்மஜ 9
ராத்ரிச்ச தாவதீ க்ஞேயா நித்ரா தஸ்யாம் ஸதா பவேத் ।
நார்கஸ்ததா ந சந்த்ராதிக்ரஹநக்ஷத்ரமண்டலம் ॥ 10
ஸத்யலோகாவதி ததா ஜகதேதஜ்ஜலாவ்ருதம் ।
யத்ர புர்யாம் பவானீ ஸா த்வாம்ரும்சத்தர்மசாரிணீ ॥ 11
காமாக்ஷீதி ஜகத்க்யாதா ஸா காஞ்சீ வாஞ்சிதார்ததா ।
விநிக்ஷிப்தே கடே யத்வத்விபரீததயாம்புதௌ ॥ 12
பஹிரேவ ஜலம் நாந்தஸ்ததத்வதேஷா பஹிர் ஜலா ।
ததாநீம் வவ்ருதேऽத்யந்தம் கைலாஸ: பர்வதேச்வர: ॥ 13
ந்யக்ரோதாத் பதிதம் பர்ணமேகம் தத்ஸ்தாஜ்ஜலாசயே ।
தஸ்யோபரி ஹரிஸ்த்வேகச்சயித்வா விசசாரஹ ॥ 14
சிசுரூபேண ராத்ரியந்தம் ஜலமத்யே பயங்கரே ।
வ்யதீத்ய தாம் ததா விஷ்ணுர்நிசாம் ஸர்வவினாசினீம் ॥ 15
வாராஹம் ரூபமாஸ்தாய ஜலமத்யகதாம் க்ஷிதிம் । உத்தாப்ய பூர்வவச்சீக்ரமாஸ்தாபயதயம் ஸுத ॥ 16
யதாபூர்வம் ப்ரஜாஸ்ஸர்வா மயாப்யுத்பாதிதாஸ்ததா ।
சிவாக்ஞயா ததா புத்ர மம மோஹோऽபவத்பத ॥ 17
அஹமேவ ஜகத்கர்தா நான்ய: கச்ச ந வித்யதே । ஸுப்தே மயி ஜகத்ஸுப்தம் ப்ரபுத்தே ச ப்ரபுத்யதே 18

அந்த ப்ரும்மாவானவர் ஸம்ஸாரத்திற்கு மருந்தாகிய ஸ்ரீ மஹாதேவரை ஸாக்ஷாத்தாக ஹ்ருதய கமலத்தில் தியானித்து கைகூப்பிக் கூறினார். (9) ஓ புத்ரனே! ஆயிரம் சதுர்யுகம் கொண்டது எனக்கு ஓர் பகலாகும். ராத்ரியும் அதே அளவுள்ளதென அறியவேணும். அந்த இரவில் எப்பொழுதும் எனக்குத் தூக்கம்தான். (10) அப்பொழுது சூரியனில்லை, சந்திரனில்லை. கிரஹ நக்ஷத்திர மண்டலங்களுமில்லை. ப்ரும்ம லோகம் வரையிலுள்ள எல்லா உலகங்களும் ஜலத்தால் மூழுகப்பட்டிருக்கும். (11) எந்த நகரத்தில் முப்பத்திரண்டு தர்மங்களை நடத்துகிறவளும், பக்தர்கள் வேண்டியதை அளிப்பவளும், உலகில் காமாக்ஷி என்று மிகப் பிரஸித்தி பெற்றவளுமான ஸ்ரீ பவானியானவள் விளங்குகிறாளோ அப்படிப்பட்ட காஞ்சீபுரம் மாத்திரம் (12) ஓர் குடமானது ஸமுத்திரத்தில் கவிழ்க்கப்பட்டிருக்கும்போது ஜலம் அதன் உட்புறத்தில் செல்லாமல் வெளியில் மாத்திரமிருப்பதுபோல் அந்த நகரமானது ஜலம் கொள்ளப்படாமல் இருக்கும். (13) அப்பொழுது பர்வதங்களுக்கு ஈச்வரனான கைலாஸமலை மிகப் பெரிதாக வளர்ந்து விடும். அந்த மலையிலுள்ள ஆலமரத்திலிருந்து ஓர் இலை அந்தப் பிரளய ஜலத்தில் விழும். (14) இந்த ராத்திரி முடியும் வரையில் பயங்கரமான இந்த ஜலத்தின் நடுவில் ஆலிலையின் மீது ஹரியானவர் ஒருவராக குழந்தை உருவத்தோடு படுத்துக்கொண்டு சஞ்சரிப்பார். (15) புத்ரனான ஓ தக்ஷ! அப்பொழுது விஷ்ணுவானர் யாவற்றையும் நாசம் செய்யும் ராத்திரியின் முடிவில் வராஹ (பன்றி) உருவத்தை எடுத்துக் கொண்டு ஜலத்தின் நடுவில் மூழ்கிய பூமியை (16) எடுத்துவந்து முன்போல் நிலைநிறுத்தி வைத்தார். அப்பொழுது சிவனின் கட்டளையின்பேரில் முன்போல் எல்லா பிரஜைகளையும் நான் ஸ்ருஷ்டித்தேன். (17) அப்பொழுது எனக்கு புத்தி மோஹமானது ஏற்பட்டது. இது கஷ்டம். பிறகு நானே ஜனங்களுக்கு

देवाश्च दानवा यक्षाः स्थावरं जङ्गमं तथा । मदधीनं न मे कश्चित्कर्ता जगति विद्यते ॥ १९
अहमेव परं ब्रह्म योगिध्येयं सनातनम् । इत्यस्त्वेवं विनिष्क्रम्य सत्यलोकान्ममास्पदात् ॥ २०
मेरुमन्दरकैलासचक्रवाळमुखादिषु । द्वीपेषुच समुद्रेषु नानालोकेषु गर्वितः ॥ २१
सञ्चरन्वीक्ष्य तत्रत्यान्यद्भुतानि क्रमादहम् । क्षीराब्धिं प्राप्तवानस्मि यत्र शेते हरिस्स्वयम् ॥ २२
तत्र दृष्ट्वा हरिं हृष्टं मया भूमिर्यदुद्धृता । स्थापिता पूर्ववत्तस्मादहमेव जगत्पतिः ॥ २३
इति सञ्चिन्त्य मनसा शयानं भोगितल्पके । आस्फाल्य वक्षोमध्ये तमबोधयमहं सुत ॥ २४
ततस्सम्भ्रमं विष्णुस्समुत्थायावदत्क्रुधा । कस्त्वं ब्रूहीति तं वीक्ष्य प्रोक्तवानस्म्यहङ्कृतः ॥ २५
सोऽपि मद्वचनं श्रुत्वा विद्धि मां जनकं तव । कर्तारमपि सर्वस्य प्रोवाचैवं क्रुधान्वितः ॥ २६
इदानीमपि किं निद्राब्रूहि यद्विपरीततः । सर्वलोकस्य धातारं माञ्चब्रूषे तवात्मजम् ॥ २७
मोहं त्यज परं तत्त्वं मां ज्ञात्वाशु सुखीभव । इति ब्रुवाणं मां वीक्ष्य प्रोवाचायं पुनः क्रुधा ॥ २८

தேவாச்ச தானவா யக்ஷா: ஸ்தாவரம் ஜங்கமம் ததா । மததீனம் ந மே கச்சித் கர்தா ஜகதிவித்யதே 19
அஹமேவ பரம் ப்ரும்ஹ யோகித்யேயம் ஸனாதனம் ।
த்ருப்த ஸ்த்வேவம் விநிஷ்க்ரம்ய ஸத்யலோகான்மமாஸ்பதாத் ॥ 20
மேருமந்தரகைலாஸ சக்ரவாள முகாதிஷு । த்வீபேஷுச ஸமுத்ரேஷு நாநாலோகேஷு கர்வித: ॥ 21
ஸஞ்சரன் வீக்ஷ்ய தத்ரத்யான்யத்புதானி க்ரமாதஹம் ।
க்ஷீராப்திம் ப்ராப்தவானஸ்மி யத்ர சேதே ஹரிஸ்ஸ்வயம் ॥ 22
தத்ர த்ருஷ்ட்வா ஹரிம் த்ருப்தம் மயா பூமிர்யதுத்ருதா ।
ஸ்தாபிதா பூர்வவத் தஸ்மாதஹமேவ ஜகத்பதி: ॥ 23
இதி ஸஞ்சிந்த்ய மனஸா சயானம் போகிதல்பகே ।
ஆஸ்பால்ய வக்ஷோமத்யே தமபோதய மஹம் ஸுத ॥ 24
ததஸ்ஸஸம்ப்ரமம் விஷ்ணுஸ்ஸமுத்தாயாவதத் க்ருதா ।
கஸ்த்வம் ப்ரூஹீதிதம் வீக்ஷ்ய ப்ரோக்தவானஸ்ம்யஹங்க்ருத: ॥ 25
ஸோऽபி மத்வசனம் ச்ருத்வா வித்திமாம் ஜனகம் தவ ।
கர்த்தாரமபி ஸர்வஸ்ய ப்ரோவாசைவம் க்ருதான்வித: ॥ 26
இதானீமபி கிம் நித்ரா ப்ரூஹி யத்விபரீதத: ।
ஸர்வலோகஸ்ய தாதாரம் மாஞ்ச ப்ரூஷே தவாத்மஜம் ॥ 27
மோஹம் த்யஜ பரம் தத்வம் மாம் ஞாத்வாக ஸுகீபவ ।
இதி ப்ருவாணம் மாம் வீக்ஷ்ய ப்ரோவாசாயம் புன: க்ருதா ॥ 28

கர்த்தா. வேறொருவருமில்லை. (18) நான் தூங்கினால் உலகமெல்லாம் தூங்குகிறது. விழித்தால் விழிக்கின்றது. தேவர்கள், அஸுரர்கள், யக்ஷர்கள் இவர்களும், ஸகல ஸ்தாவர ஜங்கமங்களும் (19) நமது வசத்தில் உள்ளவர்கள். இந்த உலகத்தில் நமக்குக் கர்தா ஒருவருமில்லை, நானே யோகீந்திரர்களால் தியானம் செய்யத் தகுந்த நித்யமான ப்ரும்மம் என்று (20) இவ்விதமெல்லாம் நான் மதம் பிடித்தவனாகி எனது லோகமாகிய பிரும்மலோகத்திலிருந்து புறப்பட்டு மேரு, மந்தரம், கைலாஸம், சக்கிரவாளம் முதலிய பர்வதங்கள், (21) தீவுகள், ஸமுத்திரங்கள், பல உலகங்கள் இவைகளில் மிகுந்த கர்வத்தோடு அலைந்துகொண்டு அங்குள்ள ஆச்சரியங்களையெல்லாம் வரிசையாகப் பார்த்துக்கொண்டு நான் (22) விஷ்ணு, யோக நித்திரை செய்துகொண்டிருக்கும் பாற்கடலை அடைந்தேன். ஓ புத்திரனே! அங்கு இந்த பூமியை நான் உயரத் தூக்கி முன்போல் ஸ்தாபித்தேன். (23) ஆகையால் நானே உலகங்களுக்குப் பதி என்று மனதில் நினைத்துக்கொண்டு ஆதிசேஷ சயனத்தில் படுத்து மிகுந்த கர்வங்கொண்டிருந்த விஷ்ணுவைப் பார்த்து (24) ஓ புத்திர! அவரது நடு மார்பில் கையால் தட்டி எழுப்பினேன். பிறகு விஷ்ணுவானவர் பரபரப்புடன் எழுந்து கோபத்துடன் கூறினார். (32) நான் அஹங்காரத்துடன் அவரைப் பார்த்து நீர் யார் எனக் கேட்டேன். அவரும் எனது வார்த்தையைக் கேட்டு நான் உனக்குத் தகப்பனென்றும், எல்லா உலகங்களுக்கும் கர்த்தாவென்றும், அறிவாய். இவ்விதம் மிகுந்த கோபத்தோடு கூறினார். அதற்கு நான் இப்பொழுதுகூட என்ன தூக்கம் சொல்லும். (27) எல்லா உலகங்களுக்கும் ஸ்ருஷ்டி

मन्नाभिकमलाद्ब्रह्मन् समुत्पन्नः पुराऽत्मज । विस्मृत्य तद्भवानद्य विपरीतं वदत्यहो ॥ २९
मां विना मत्सुतस्यात्रतवकाजनिरीशता (स्रष्टृतावद) । इति विष्णोर्वचश्श्रुत्वा पुनश्च प्रोक्तवानहम् ॥ ३०
समुत्पन्नोऽरणौ वह्निर्न तस्यात्मज उच्यते । तथा त्वत्तो मम पुरा प्रादुर्भावो मदिच्छया ॥ ३१
तादृश्यपि समुत्पत्तिस्तंभे तवच विद्यते । स्तंभपुत्रमतस्त्वंच ब्रवीम्यद्य निरंकुशम् ॥ ३२
शप्तस्य पूर्वमृषिणा भृगुणा तव दुर्मते । मयाहि दशजन्मानि सृष्टानि च हृतान्यहो ॥ ३३
स्रष्टुर्मम करोप्यद्य रक्ततां भजते तराम् । वदन्तमेवं मां वीक्ष्य पुनः प्राह जनार्दनः ॥ ३४
ममापि त्वं यदि भवान् स्रष्टा तर्हि शिवेन तत् । पञ्चमं यच्छिरश्छिन्नं सृजत्वेतत्पुरो मम ॥ ३५
तस्मादहं जगत्कर्ता तव कर्ता विशेषतः । महामोहेन यत्किंचिदुक्तवानसि मत्पुरः ॥ ३६
ब्रुवत्येवं हरौ तस्मिन्मयाप्येवं तदेरितम् । प्रवृत्तः कलहस्त्वेवमावयो र्वाङ्मयस्तदा ॥ ३७
अहंपूर्वमहंपूर्वं ब्रुवतोर्मोहगौरवात् । पुनश्च समयं कृत्वा यो जयेदपरं युधि ॥ ३८

மந்நாபிகமலாத் ப்ரும்ஹன் ஸமுத்பன்ன: புராத்மஜ ।
விஸ்ம்ருத்ய தத்பவானத்ய விபரீதம் வதத்யஹோ ॥ 29
மாம் விநு மத்ஸுதஸ்யாத்ரதவகாஜனிரீசதா (ஸ்ருஷ்ட்ருதாவத)
இதி விஷ்ணோர் வசச்ச்ருத்வா புனச்ச ப்ரோக்தவானஹம் ॥ 30
ஸமுத்பன்னோऽரணௌ வன்ஹிர் ந தஸ்யாத்ம உச்யதே ।
ததா த்வத்தோ மம புரா ப்ராதுர்பாவோமதிச்சயா ॥ 31
தாத்ருச்யபி ஸமுத்பத்திஸ் ஸ்தம்பே தவச வித்யதே ।
ஸ்தம்பபுத்ரமதஸ்த்வஞ்ச ப்ரவீம்யத்ய நிரங்குசம் ॥ 32
சப்தஸ்ய பூர்வம் ருஷிணா ப்ருகுணா தவ துர்மதே । மயாஹி தசஜன்மானி ஸ்ருஷ்டானிச ஹ்ருதான்யஹோ
ஸ்ருஷ்டுர்மம கரோப்யத்ய ரக்ததாம் பஜதேதராம் । வதந்தமேவம் மாம் வீக்ஷ்ய புன: ப்ராஹ ஜனார்தன: 34
மமாபி த்வம் யதி பவான் ஸ்ரஷ்டா தர்ஹி சிவேன தத் ।
பஞ்சமம் யச்சிரச்சின்னம் ஸ்ருஜத்வேதத் புரோ மம ॥ 35
தஸ்மாதஹம் ஜகத்கர்தா தவகர்தா விசேஷத: । மஹாமோஹேன யத்கிஞ்சிதுக்தவானஸி மத்புர: ॥ 36
ப்ருவத்யேவம் ஹரௌ தஸ்மின் மயாப்யேவம் ததேரிதம் ।
ப்ரவ்ருத்த: கலஹஸ்த்வேவமாவயோர்வாங்மயஸ்ததா ॥ 37
அஹம் பூர்வமஹம்பூர்வம் ப்ருவதோர் மோஹகௌரவாத் ।
புனச்ச ஸமயம் க்ருத்வா யோ ஜயேதபரம்யுதி ॥ 38

கர்த்தாவான என்னையும் விபரீதமாய் பிள்ளையெனக் கூறுகிறீர். அக்ஞானத்தைவிட்டு என்னையே பரதத்வம் என உணர்ந்து சுகமாக இரும். (28) எனக் கூறிய என்னைப் பார்த்து மறுபடி கோபத்துடன் இந்த விஷ்ணுவானவர் கூறினார்: ஓ பிரும்மாவான புத்ரனே! முன்பு என் நாபிகமலத்திலிருந்து நீ உண்டானாய். (29) அதை நீர் இப்பொழுது மறந்து விபரீதமாய்ப் பேசுகிறீர். இது ஆச்சரியம். என் பிள்ளையான உனக்கு இங்கு நானின்றி ஏது பிறப்பு? ஈச்வரத்தன்மைதான் ஏது? (30) இவ்வாறு விஷ்ணுவின் வார்த்தையைக் கேட்டு, மறுபடி நான் கூறினேன். அரணி (யாகத்தில் நெருப்பு கடைந்து எடுப்பதற்காக வைத்துக்கொள்ளும் அரசு அல்லது வன்னி மரக்கட்டை) யிலிருந்து அக்னி உண்டாவதால் இந்த அக்னி அந்த கட்டைக்குப் பிள்ளையாக ஆகாது. (31) அதுபோல் எனது இச்சையினால் முன்பு எனக்கு உம்மிடமிருந்து பிறப்பேற்பட்டது. உமக்கும் அவ்வாறே நரஸிம்மாவதாரத்தில் தூணிலிருந்து பிறப்பு ஏற்பட்டிருக்கிறது. (32) அதனால் உம்மைத் தூணின் பிள்ளையென்று நான் தடையின்றி கூறுகிறேன். ஓ துர்புத்தி பிடித்தவரே! முன்பு ப்ருகு முனியால் சபிக்கப்பட்ட உமக்கு (33) என்னால் பத்து ஜன்மங்கள் ஸ்ருஷ்டித்து மறுபடி அழித்து, ஸ்ருஷ்டி கர்த்தாவான என் கை இப்பொழுதுகூட மிகவும் சிவந்திருக்கிறது. (34) இப்படிச் சொல்லுகின்ற என்னைப் பார்த்து, விஷ்ணு மறுபடியும் கூறினார். என்னையும், நீர் படைத்தவனாக இருக்கும் பட்சத்தில் சிவனால் (35) கிள்ளப்பட்ட உமது தலையை எனக்கு முன்பாக இப்பொழுது ஸ்ருஷ்டித்துக் கொள்ளும். ஆதலால் நானே உலகங்களுக்கு கர்த்தா. விசேஷமாய் உமக்கும் கர்த்தா. (36) இப்படியிருக்கையில் நீர் மிக்க மோஹத்தால் எனக்கு முன்னால் ஏதேதோ கூறினாயல்லவா! என்று இவ்விதம் விஷ்ணு சொல்லும்பொழுது நானும் அதேவிதமாய்ச் சொன்னேன். (37) மிகுந்த புத்தி மோகத்தால் நான் முன்னே, நான் முன்னேயென்று சொல்லும்

स कर्तेति मदाविष्टावन्योन्यजयकांक्षिणौ । आयुधै विविधै र्युद्धं तुमुलं शीघ्रमाप्तितौ ॥ ३
ततो नारायणः क्रुद्धो बाणं नारायणाभिधम् । मुमोच मय्ययं घोरं जेतुकामनया तदा ॥ ४
जित्वा तं तेनबाणेन पुनर्ब्राह्मं हरौ कुधा । अप्रेषयमहं तेन चिच्छेदैतदरिन्दमः ॥ ४
इति प्रत्यस्त्रकुशलौ छित्वा छित्वा पुनःपुनः । विधिनारायणावावां मदोन्मत्तौ गजाविव ॥ ४
अयुधाव महाघोरौ महावेगौ महाबलौ । पुनश्च नितरां क्रुद्धौ शिवास्त्रं सर्वघस्मरम् ॥ ४
अमुचाव महाघोरं परनाशजयैषिणौ । आवाभ्यां प्रेषितं घोरं तदस्त्रं निस्सृतं यदा ॥ ४
समुद्राश्शोषितास्तेन पर्वतारेणुतां गताः । अस्फुटच्च तदा भूमिश्चकम्पे सर्पमूर्धनि ॥ ४
देवाश्च ऋषयो मर्त्या भीतास्सर्वेऽपि दुद्रुवुः । मृताश्च बहवः खिन्नाः केचिच्छिन्नांघ्रिपाणयः ॥ ४६
अशिश्रयन् परे शीघ्रं कैलासमचलेश्वरम् । एवं दहति शैवास्त्रे लोकान्सर्वांस्तदा सुत ॥ ४

ஸ கர்தேதிமதாவிஷ்டாவன்யோன்யஜயகாம்க்ஷிணௌ ।
ஆயுதைர்விவிதைர் யுத்தம் துமுலம் சீக்ரமாச்ரிதௌ ॥ 39
ததோ நாராயணஃ க்ருத்தோ பாணம் நாராயணாபிதம் ।
முமோச மய்யயம் கோரம் ஜேதுகாமநயா ததா ॥ 40
ஜித்வா தம் தேன பாணேன புனர்ப்ராம்ஹம் ஹரௌ க்ருதா ।
அப்ரேஷயமஹம்தேன சிச்சேதைததரிந்தமஃ ॥ 41
இதி ப்ரத்யஸ்த்ரகுசலௌ சித்வா சித்வா புனஃ புனஃ ।
விதிநாராயணாவாவாம் மதோந்மத்தௌ கஜாவிவ ॥ 42
அயுதாவ மஹாகோரௌ மஹாவேகௌ மஹாபலௌ ।
புனச்ச நிதராம் க்ருத்தௌ சிவாஸ்த்ரம் ஸர்வகஸ்மரம் ॥ 43
அமுசாவ மஹாகோரம் பரநாச ஜயைஷிணௌ ।
ஆவாப்யாம் ப்ரேஷிதம் கோரம் ததஸ்த்ரம் நிஸ்ஸ்ருதம் யதா ॥ 44
ஸமுத்ராச்சோஷிதாஸ்தேன பர்வதா ரேணுதாம் கதாஃ । அஸ்புடச்ச ததா பூமிச்சகம்பே ஸர்பமூர்தனி ॥ 45
தேவாச்ச ருஷயோ மர்த்யா பீதாஸ்ஸர்வேऽபி துத்ருவுஃ ।
ம்ருதாச்ச பஹவஃ கின்னுஃ கேசிச்சின்னாங்க்ரிபாணயஃ ॥ 46
அசிச்ரயன் பரே சீக்ரம் கைலாஸமசலேச்வரம் ।
ஏவம் தஹதி சைவாஸ்த்ரே லோகான்ஸர்வாம்ஸ்ததா ஸுத ॥ 47

எங்கள் இருவருக்கும் அப்பொழுது மிகுந்த வாக்கினால் கலகமுண்டாயிற்று. (38) மறுபடியும் யுத்தத்தில் ஜயத்தை அடைபவரே உலகிற்கு கர்த்தா என்று சபதம் செய்துகொண்டு, நாங்கள் இருவரும் மதம் கொண்டவர்களாகி ஒருவருக்கொருவர் ஜயத்தை விரும்பி (39) பல ஆயுதங்களால் சீக்கிரம் இருவரும் மிக பயங்கரமான யுத்தம் செய்தோம். பிறகு விஷ்ணுவானவர் மிகுந்த கோபம் கொண்டவராகி, ஜயத்தில் விருப்பம் கொண்டு, என்மீது மிக பயங்கரமான நாராயணாஸ்திரத்தைப் பிரயோகித்தார். பிறகு நான் அதை அதே நாராயணாஸ்திரத்தால் ஜயித்து, மறுபடியும் கோபத்தோடு விஷ்ணுமீது ப்ரும்மாஸ்திரத்தைப் (40-41) பிரயோகித்தேன். சத்ருக்களை நாசம் செய்கின்ற விஷ்ணுவும் அதே அஸ்திரத்தினால் அதைத் துண்டித்துவிட்டார். இவ்விதம் ஒருவருக்கொருவர் அஸ்திரத்திற்குப் பதிலஸ்திரம் போடுவதில் ஸமர்த்தர்களாகி, அடிக்கடி முறித்து, முறித்து (42) ப்ரும்ம, விஷ்ணுக்களாகிய நாங்களிருவரும் மதம் பிடித்த யானைகள்போல் மிக கோரர்களாகவும், மிக வேகமுள்ளவர்களாகவும், பலமுள்ளவர்களாகவும் ஆகி யுத்தம் செய்தோம். (43) மறுபடி ஒருவருக்கொருவர் மிகக் கோபம்கொண்டவர்களாகி சத்ருவை நாசம் செய்து தான் ஜயமடைய எண்ணமுள்ளவர்களாய், எல்லாவற்றையும் பக்ஷிக்கக்கூடிய மிக கோரமான சிவாஸ்திரத்தைப் பிரயோகித்துக்கொண்டோம் (44) எங்கள் இருவர்களாலும் ஏவப்பட்ட அதிகோரமான அந்த அஸ்திரமானது எப்பொழுது வெளிக்கிளம்பிற்றோ அப்பொழுது அதனால் ஸமுத்திரங்களெல்லாம் வற்றிப்போயின. பர்வதங்களெல்லாம் பொடியாயின. (45) அப்பொழுது பூமியானது வெடித்து ஆதிசேஷன் தலையில் ஆடிற்று. தேவர்களும், ரிஷிகளும், மனிதர்களும் இந்த எல்லோரும் பயந்து ஓடினார்கள். (46) பலர் மிக வருந்தி இறந்தார்கள். சிலர் கை, கால்கள் முறிந்தவர்களானார்கள். மற்றவர்கள் மலைகளுக்கு ஈசனான கைலாஸ மலையை சீக்கிரம் அண்டினார்கள். (47) ஓ புத்ர! இவ்விதம்

नारदोऽभ्यागमत्तत्र तदानीमात्मजो मम । प्रोवाच वचनं वीक्ष्य विधिनारायणावुभौ ॥ ४८
कर्तारमीशमज्ञात्वा युवयोः प्राणदायिनम् । किं युध्येथे वृथा मूढौ महामोहपरायणौ ॥ ४९
मास्तु युद्धमिदानीं वां ज्योतिर्लिङ्गी महेश्वरः । प्रादुर्भविष्यत्यचिराद्बलसंशोधनायहि ॥ ५०
इत्युक्त्वा निरगात्सोऽयं यथामार्गं तपोनिधिः । गतेऽप्यस्मिन्सुरऋषौ सहस्राब्दान्तमावयोः ॥ ५१
अभवत्तुमुलं घोरं युद्धदुर्मदयोर्मृधम् । तदन्ते भगवाञ्छम्भुराविरासीज्जगद्गुरुः ॥ ५२
लोकोपद्रवमाकर्ण्य ज्योतिर्लिङ्गतया शिवः । माघकृष्णचतुर्दश्यां मध्येरात्रमतुल्यभाः ॥ ५३
तस्मिञ्ज्योतिषि लिल्ये तदस्त्रं शैवं तदात्मज । तदद्भुतमुभावावामपश्याव परस्परम् ॥ ५४
ऊर्ध्वदृष्टी तदा काचिद्वाग्जिजृंभे नभोऽन्तरे । रे रे देवौ हीनबलौ महामोहपरायणौ ॥ ५५
किं बलं युवयोर्मुक्त्वा महादेवबलं परम् । नास्ति नास्ति बलं सत्यमुच्यतेऽत्र मयाऽधुना ॥ ५६
यः प्रपश्यति लिंगस्य युवयोर्भास्वरूपिणः । ऊर्ध्वभागमधोभागं स वै बलवतां वरः ॥ ५७

நாரதோऽப்யாகமத்தத்ர ததானீமாத்மஜோ மம । ப்ரோவாச வசனம் வீக்ஷ்ய விதிநாராயணாவுபௌ ॥ 48
கர்தாரமீசமஜ்ஞாத்வா யுவயோ: ப்ராணதாயினம் ।
கிம் யுத்யேதே வ்ருதா மூடௌ மஹாமோஹபராயணௌ ॥ 49
மாஸ்து யுத்தமிதானீம் வாம் ஜ்யோதிர்லிங்கீ மஹேச்வர: ।
ப்ராதுர்பவிஷ்யத்யசிராத் பலஸம்சோதனாயஹி ॥ 50
இத்யுக்த்வா நிரகாத் ஸோऽயம் யதாமார்கம் தபோநிதி: ।
கதேऽப்யஸ்மின் த்ஸுரருஷௌ ஸஹஸ்ராப்தாந்தமாவயோ: ॥ 51
அபவத்துமுலம் கோரம் யுத்ததுர்மதயோர் ம்ருதம் । ததந்தே பகவாஞ்சம்புராவிராஸீஜ்ஜகத்குரு: ॥ 52
லோகோபத்ரவமாகர்ண்ய ஜ்யோதிர்லிங்கதயா சிவ: ।
மாகக்ருஷ்ண சதுர்தச்யாம் மத்யேராத்ரமதுல்யபா: ॥ 53
தஸ்மின் ஜ்யோதிஷி லில்யே ததஸ்த்ரம் சைவம் ததாத்மஜ ।
ததத்புதமுபாவாவாமபச்யாவ பரஸ்பரம் ॥ 54
ஊர்த்வத்ருஷ்டீ ததா காசித் வாக்ஜிஜ்ரும்பே நபோऽந்தரே ।
ரே ரே தேவௌ ஹீநபலௌ மஹாமோஹபராயணௌ ॥ 55
கிம் பலம் யுவயோர் முக்த்வா மஹாதேவபலம் பரம் ।
நாஸ்தி நாஸ்தி பலம் ஸத்யமுச்யதேऽத்ர மயாऽதுனா ॥ 56
ய: ப்ரபச்யதி லிங்கஸ்ய யுவயோர்பாஸ்வரூபிண: । ஊர்த்வபாக மதோபாகம் ஸ வை பலவதாம் வர: ॥ 57

அந்த இரு சைவாஸ்திரங்களும், எல்லா உலகங்களையும் கொளுத்தும்போது எனது புத்ரனான நாரதர் அப்பொழுது அங்கு வந்து, (48) ப்ரும்ம, விஷ்ணுக்களாகிய எங்களிருவரையும் பார்த்துச் சொன்னார்:— உங்களுக்கு உயிரைக் கொடுத்தவர் எல்லா உலகங்களுங்கும் கர்த்தாவாகிய ஸ்ரீ பரமேச்வரரென்றே அறியாமல் (49) மூடர்களாய் மிகுந்த மோஹம் மேலிட்டு ஏன் வீணாய் சண்டை செய்துகொள்ளுகிறீர்கள். இப்பொழுது உங்களுக்கு இச்சண்டை வேண்டாம். ஸ்ரீ பரமேச்வரர் இப்பொழுது அதிசீக்கிரத்தில் உங்கள் பலத்தைப் பரிசோதிப்பதற்காக ஜ்யோதிர்லிங்க ரூபியாய் ஆவிர்பவிக்கப் போகிறார். என்கூறிவிட்டு, தபோநிதியான நாரதர் வந்த வழியே சென்றுவிட்டார். (50-51) அந்த தேவரிஷியானவர் சென்ற பிறகும், யுத்தம் செய்வதில் கெட்ட மதங்கொண்ட எங்களிருவருக்கும் ஆயிரம் வருஷம் முடியும் வரை பயங்கரமான யுத்தம் நடந்தது. (52) பிறகு அதன் முடிவில் ஜகத் குருவும், பகவானுமாகிய ஸ்ரீ சம்பு வானவர் உலகிற்கு ஏற்பட்ட தொந்திரவைக் கேட்டு, மாசி மாதம், கிருஷ்ண பட்சம் சதுர்தசி திதியில் (அதாவது மஹா சிவராத்ரியன்று) பாதி ராத்திரியில் நிகரற்ற காந்தியைக் கொண்டவராகி, ஜ்யோதிர்லிங்க ரூபியாய் ஆவிர்பவித்தார். ஓ புத்ர! அப்பொழுது அந்த சைவாஸ்திரமானது அந்த ஜ்யோதியில் மறைந்தது. (53-54) அந்த அத்புதத்தை நாங்கள் இருவரும் திகைத்து, பார்த்துக் கொண்டேயிருந்தோம். அப்பொழுது ஆகாசத்தின் நடுவிலிருந்து ஓர் சொல்லானது உண்டாயிற்று. (55) அடா, அடா மகா மோகத்தை அடைந்த பலமற்றவர்களான ஓ ப்ரும்ம, விஷ்ணுக்களே! ஸ்ரீ மஹாதேவருடைய சிறந்த பலத்தைக் காட்டிலும் உங்கள் பலம் என்ன பலம்? (56) உங்களுக்கு பலமே இல்லை, இல்லையென்று நான் இப்பொழுது ஸத்யமாய்ச் சொல்லுகிறேன். ஜ்யோதிஸ்வரூபமாய் விளங்கும் இந்த லிங்கத்தினுடைய

वाचमेनां निशम्यैता मावामित्थं तदात्मज । मुक्त्वा कोपं पुनर्गर्वयुक्तावत्यन्तमात्मनि ॥ ५८

इति श्री स्कान्दे महापुराणे शंकरसंहितायां शिवरहस्यखण्डे
दक्षकाण्डे षट्त्रिंशोऽध्यायः ॥

॥ अथ सप्तत्रिंशोऽध्यायः ॥

ज्योतिर्लिङ्गस्य अरुणाचलेनाविर्भावः ॥

ततो विचिन्त्य तां वाणीमावामात्तकुतूहलौ । पुरस्ताद्भास्वरज्योतिस्तदप्यालोक्य गर्वितौ ॥ १
अगण्याग्निबुध्या तदूर्ध्वाधोभागवीक्षया । कृतप्रतिज्ञावन्योन्यं हंसक्रोडस्वरूपिणौ ॥ २
सहस्रयोजनोच्छ्रायौ महावेगबलान्वितौ । ऊर्ध्वं द्रष्टुमहं विष्णुरधोभागं गतावुभौ ॥ ३
बहुदूरं ततो गत्वा विष्णुर्भग्नमनोरथः । अत्यन्तक्षीणदेहोऽयं तदात्यन्तशुगन्वितः ॥ ४
पुनरागमनेऽशक्तः पदं गन्तुं तथैव च । असमर्थस्तदा देहं तंच त्यक्तुमयं सुत ॥ ५

வாசமேனும் நிசம்யைதா மாவாமித்தம் ததாத்மஜ ।
முக்த்வா கோபம் புனர்கர்வயுக்தாவத்யந்தமாத்மனி ॥ 58

இதி ஸ்ரீஸ்காந்தே மஹாபுராணே சங்கரஸம்ஹிதாயாம் சிவரஹஸ்யகண்டே
தக்ஷகாண்டே ஷட்த்ரிம்சோऽத்யாயः ॥

॥ அத ஸப்தத்ரிம்ஶோऽத்யாயः ॥

ஜ்யோதிர்லிங்கம் அண்ணாமலையாக ஆனது

ததோ விசிந்த்ய தாம் வாணீ மாவாமாத்தகுதூஹலௌ ।
புரஸ்தாத்பாஸ்வரஜ்ஜ்யோதிஸ்ததப்யாலோக்ய கர்விதௌ ॥ 1
அகணய்யாக்னிபுத்யா ததூர்த்வாதோபாகவீக்ஷயா ।
க்ருதப்ரதிக்ஞாவன்யோன்யம் ஹம்ஸக்ரோடஸ்வரூபிணௌ ॥ 2
ஸஹஸ்ரயோஜனோச்ராயௌ மஹாவேகபலாந்விதௌ ।
ஊர்த்வம் த்ரஷ்டுமஹம் விஷ்ணு ரதோபாகம் கதாவுபௌ ॥ 3
பஹுதூரம் ததோ கத்வா விஷ்ணுர்பக்னமனோரத: ।
அத்யந்த ருக்ணதேஹோऽயம் ததாத்யந்தசுகன்வித: ॥ 4
புனராகமனேऽசக்த: பதம் கந்தும் ததைவச । அஸமர்தஸ்ததா தேஹம் தஞ்ச த்யக்துமயம் ஸுத ॥ 5

சிரஸ்ஸையும், அடியையும் உங்களிருவர்களில் யார் காண்கிறீர்களோ அவரே பலவான்களுள் சிறந்தவர் என அசரீரி வாக்கு கூறிற்று. இந்த வார்த்தையை நாங்கள் இருவரும் கேட்டு ஓ புத்ர! நாங்கள் கோபத்தைவிட்டு மறுபடியும் தன்னிடத்தில் மிகுந்த கர்வமுடையவர்களாக ஆனோம். (57-58)

முப்பத்தாறுவது அத்தியாயம் முற்றிற்று.

முப்பத்தேழாவது அத்தியாயம்

பிறகு, நாங்களிருவர்களும் அந்த ஆகாசவாணியைக்கேட்டு, ஆலோசித்து மிகுந்த சந்தோஷம் கொண்டவர்களாய் எதிரில் பிரகாசிக்கும் ஜ்யோதியைக்கண்டும்கூட கர்வமடைந்து, (1) அதை அக்னி என்று கருதிப் பொருட்படுத்தாமல் அதன் மேல் பாகத்தையும், கீழ் பாகத்தையும் காண இச்சைகொண்டு ஒருவருக்கொருவர் பிரதிக்ஞை செய்துகொண்டு ஆயிரம் யோஜனை உயரமுள்ளவைகளும், மிகுந்த வேகத்தையும், பலத்தையும் உடையதுகளுமான ஹம்ஸ பக்ஷியின் உருவத்தையும், பன்றியின் உருவத்தையும் கொண்டவர்களாகி, நான் மேல் பாகத்தையும், விஷ்ணு கீழ் பாகத்தையும் பார்ப்பதற்காகச் சென்றோம். (2-3) பிறகு, விஷ்ணுவானவர் பன்றி உருவத்தோடு வெகு தூரம் சென்று எண்ணம் நிறைவேறாமல் உடல் முழுதும் மிகவும் தளர்ச்சியுற்றவராய் மிகுந்த துக்கமுள்ளவரானார். (4) மேலுமவர்

सस्मार केवलं शम्भुं तदानीं रक्षकं परम् । ततश्शिवाज्ञया तस्य बलं किञ्चिद्बभूवह ॥ ६
निवृत्तस्सहसा सोऽयं भूतलं प्राप्य माधवः । अधोभागमदृष्ट्वाऽस्य ज्योतिषः परमस्य सः ॥ ७
वेपमानशरीरोऽयं तस्थे नत्वा पुरस्सुत । सहस्राब्दावधि तदा सोऽहं हंसस्वरूपवान् ॥ ८
उपर्युपरि गत्वाऽथ रुग्णपक्षोऽतिदुःखितः । गन्तुमूर्ध्वमशक्तत्वादृष्ट्वा ज्योतिषश्शिरः ॥ ९
भ्रमन्नितस्ततस्तूर्णं क्षणं तत्रावसं सुत । तदानीं ज्योतिषस्तस्य वामभागात्प्रतस्थिरे ॥ १०
सिद्धाः केचन योगीन्द्रा रुद्राक्षकृतभूषणाः । हंसोऽयमधुनात्यन्तमज्ञानेन परीवृतः ॥ ११
इत ऊर्ध्वं पदं वा चेद्गमिष्यति मरिष्यति (न संशयः) । विष्णुरप्येतदज्ञात्वा ज्योतिश्शैवं परात्परम् ॥ १२
अदृष्ट्वैतस्य महसो मूलभागं शुगन्वितः । निवृत्तो नितरां खिन्नः प्रणम्यास्ते भयान्वितः ॥ १३
शिवस्यानुग्रहेणास्य महामूढस्य पक्षिणः । प्राणास्तिष्ठन्त्यसन्देहो न चेन्मरणमेवहि ॥ १४
इति ब्रुवाणास्तेऽन्योन्यं निर्ययुर्मत्पुरस्सुत । समाकर्ण्य वचस्तेषां महमप्याप्तचेतनः ॥ १५

ஸஸ்மார கேவலம் சம்பும் ததானீம் ரக்ஷகம் பரம் । ததச்சிவாக்ஞயா தஸ்ய பலம் கிஞ்சித்பபூவஹ ॥ 6
நிவ்ருத்தஸ்ஸஹஸா ஸோऽயம் பூதலம் ப்ராப்ய மாதவ: ।
அதோபாகமத்ருஷ்ட்வாऽஸ்ய ஜ்யோதிஷ: பரமஸ்ய ஸ: ॥ 7
வேபமானசரீரோऽயம் தஸ்தே நத்வா புரஸ்ஸுத ।
ஸஹஸ்ராப்தாவதி ததா ஸோऽஹம் ஹம்ஸஸ்வரூபவான் ॥ 8
உபர்யுபரிகத்வாऽத ருக்ணபக்ஷோऽதிது:கித: । கந்துமூர்த்வமசக்தத்வாத்ருஷ்ட்வா ஜ்யோதிஷச்சிர: ॥ 9
ப்ரமன்னிதஸ்ததஸ்தூர்ணம் க்ஷணம் தத்ராவஸம் ஸுத ।
ததானீம் ஜ்யோதிஷஸ்தஸ்ய வாமபாகாத்ப்ரதஸ்திரே ॥ 10
ஸித்தா: கேசந யோகீந்த்ரா ருத்ராக்ஷக்ருதபூஷணா: ।
ஹம்ஸோऽயமதுநாऽத்யந்தமக்ஞானேன பரீவ்ருத: ॥ 11
இத ஊர்த்வம் பதம் வா சேத்கமிஷ்யதி மரிஷ்யதி (ந ஸம்சய:) ।
விஷ்ணுரப்யேததக்ஞாத்வா ஜ்யோதிச்சைவம் பராத்பரம் ॥ 12
அத்ருஷ்ட்வைதஸ்ய மஹஸோ மூலபாகம் ஸுகன்வித: ।
நிவ்ருத்தோ நிதராம் கின்ன: ப்ரணம்யாஸ்தே பயான்வித: ॥ 13
சிவஸ்யானுக்ரஹேணாஸ்ய மஹாமூடஸ்ய பக்ஷிண: ।
ப்ராணாஸ்திஷ்டந்த்யஸந்தேஹோ ந சேன்மரணமேவஹி ॥ 14
இதி ப்ருவாணாஸ்தேऽன்யோன்யம் நிர்யயுர்மத்புரஸ்ஸுத ।
ஸமாகர்ண்ய வசஸ்தேஷாமஹமப்யாத்தசேதன: ॥ 15

திரும்பி வருவதற்கு ஓர் அடிகூட நடப்பதற்கும் சக்தியற்றவரானார். ஓ புத்ரனே தக்ஷ! அப்பொழுது அவர் அப்பன்றி உருவத்தை விடுவதற்குக்கூட சக்தியற்றவரானார். (5) அப்பொழுது ஸாக்ஷாத் ஸ்ரீ பரமேச்வரனையே மேன்மை பொருந்திய ரக்ஷகரென்று நினைத்தார். அதன்மேல் அவருக்கு சிவாக்ஞையால் சிறிது பலமுண்டாயிற்று. (6) உடன் ஜ்யோதிர்லிங்க ரூபியான அந்த பரமேச்வரனுடைய கீழ் பாகத்தைப் பார்க்காமலேயே ஸ்ரீ மாதவன் சீக்கிரம் பூமிக்கு வந்து (7) ஓ தக்ஷ! அந்த ஸ்ரீ பரமேச்வரரை நமஸ்கரித்து, நடுங்கும் சரீரத்தை உடையவராகி அவருக்கு முன்னால் நின்றார். அப்பொழுது நானோவெனில் ஹம்ஸ பக்ஷியின் உருவமெடுத்துக்கொண்டு ஆயிரம் வருஷம் முடியும் வரை (8) மேல், மேலே பறந்து சென்று தளர்ச்சியுற்ற இறக்கைகளை உடையவனாகி, மிகவும் துக்கமடைந்தவனாய் மேலே பறந்து செல்ல சக்தியற்றவனாகி ஜ்யோதிர்லிங்கத்தின் சிரஸ்ஸைக் காணாமல் அங்கு மிங்கும் தத்தளித்துக் கொண்டு ஓர் க்ஷணநேரம் அங்கேயே இருந்துவிட்டேன். ஓ தக்ஷ! (9) அப்பொழுது சில சித்தர்களும் யோகீச்வரர்களும் ருத்ராக்ஷங்களை ஆபரணங்களாய்த் தரித்துக்கொண்டு அந்த ஜ்யோதிர்லிங்கத்தினுடைய இடது பக்கத்திலிருந்து புறப்பட்டார்கள். (10) இப்பொழுது அக்ஞானத்தால் சூழப்பட்ட இந்த ஹம்ஸமானது இனி ஓரடியாவது உயரப் பறந்தால் மரித்தேவிடும். (11) விஷ்ணுவும் பராத்பரமான இந்த சிவ ஜ்யோதி ஸ்வரூபத்தின் மஹிமையை அறியாமலே அந்த ஜ்யோதியின் அடிபாகத்தைக் காணாமல் வருத்தப்பட்டு (12) திரும்பிச் சென்று மிகவும் களைத்துப்போய் நமஸ்கரித்து மிகவும் பயங்கொண்டு நிற்கின்றார். மிகுந்த மோகங்கொண்ட இந்த ஹம்ஸ பக்ஷிக்கு ஸ்ரீ பரமேஸ்வரருடைய அனுக்ரஹத்தால்தான் உயிரிருக்கிறது. இல்லாவிடில் இது சந்தேகமின்றி இறந்தேவிடும் என்று அவர்கள் ஒருவருக்கொருவர் என் முன்னிலையில் பேசிக்கொண்டு சென்றார்கள். ஓ புத்ரா! (13-14) பிறகு அவர்களுடைய வார்த்தையைக்

गतमोहतया शीघ्रं निवृत्तस्तन्महीतलम् । प्राप्य भीत्या महादेवं स्तुत्वा स्तोत्रै रनेकधा ॥ १६
अदर्शयं ततो विष्णुं तत्र बद्धाञ्जलिं भयात् । तदानीमावयोः काचिदुत्पन्ना शङ्कराज्ञया ॥ १७
पूजा कार्या महेशस्य ज्योतिष्यत्रेति शेमुषी । वृथैव भ्रान्तमावाभ्यां विष्णो मोहवशादिह ॥ १८
इत्युक्त्वाऽऽवां तदाऽन्योन्यं पूजायां कृतनिश्चयौ । अपूजयाव देवेशं भक्त्या परमया सुत ॥ १९
आविरासीत्ततश्शंभुर्ज्योतिर्मध्यादुमासखः । अप्राकृततनुश्श्रीमान् चन्द्रार्धकृतशेखरः ॥ २०
शुद्धस्फटिकसंकाशस्त्रिणेत्रो नीलकन्धरः । वराभयकरश्श्रीमान् परश्वेण लसत्करः ॥ २१
तं दृष्ट्वा देवमीशानं शंकरं लोकशङ्करम् । प्रणम्य परया भक्त्या स्तुत्वा स्तोत्रैरनेकधा ॥ २२
आवयोरपराधोऽयं क्षन्तव्यश्शङ्कर त्वया । त्वं हि सर्वगुरुश्शंभु स्सर्वलोकहितोद्यमः ॥ २३
एवमप्रार्थयावावां महादेवं त्रिशूलिनम् । स हि प्रसन्नो भगवान् चन्द्रचूडस्सुमङ्गळः ॥ २४
प्रकल्प्य पूर्ववत्स्थान मावयोस्स्वेच्छया सुत । प्रेषयामास विश्वात्मा ततोभावपि नौ शिवः ॥ २५

கதமோஹதயா சீக்ரம் நிவ்ருத்தஸ்தன்மஹீதலம் ।
ப்ராப்ய பீத்யா மஹாதேவம் ஸ்துத்வா ஸ்தோத்ரைரநேகதா ॥ 16
அதர்சயம் ததோ விஷ்ணும் தத்ர பத்தாஞ்சலிம் பயாத் ।
ததானீமாவயோ: காசிதுத்பன்ன சங்கராக்ஞயா ॥ 17
பூஜா கார்யா மஹேசஸ்ய ஜ்யோதிஷ்யத்ரேதி சேமுஷீ ।
வ்ருதைவ ப்ராந்தமாவாப்யாம் விஷ்ணோ மோஹவசாதிஹ ॥ 18
இத்யுக்த்வா வாம் ததான்யோன்யம் பூஜாயாம் க்ருதநிச்சயௌ ।
அபூஜயாவ தேவேசம் பக்த்யா பரமயா ஸுத ॥ 19
ஆவிராஸீத்ததச்சம்புர்ஜ்யோதிர்மத்யாதுமாஸக: । அப்ராக்ருத தனுச்ச்ரீமான் சந்த்ரார்தக்ருதசேகர: ॥ 20
சுத்தஸ்படிகஸங்காசஸ்த்ரிணேத்ரோ நீலகந்தர: । வராபயகரச்ச்ரீமான் பரச்வேண லஸத்கர: ॥ 21
தம் த்ருஷ்ட்வா தேவமீசானம் சங்கரம் லோகசங்கரம் ।
ப்ரணம்ய பரயா பக்த்யாஸ்துத்வா ஸ்தோத்ரைரநேகதா ॥ 22
ஆவயோரபராதோऽயம் க்ஷந்தவ்யச்சங்கர த்வயா ।
த்வம்ஹி ஸர்வகுருச்சம்புஸ்ஸர்வலோகஹிதோத்யம: ॥ 23
ஏவமப்ரார்த்தயாவாவாம் மஹாதேவம் த்ரிசூலினம் ।
ஸஹிப்ரஸன்னோ பகவான் சந்த்ரசூடஸ்ஸுமங்கள: ॥ 24
ப்ரகல்ப்ய பூர்வவத்ஸ்தானமாவயோஸ்ஸ்வேச்சயா ஸுத ।
ப்ரேஷயாமாஸ விச்வாத்மா ததோபாவபி நௌ சிவ: ॥ 25

கேட்டு நானும் அறிவை அடைந்தவனாய் மோஹம் நீங்கி சீக்கிரம் அந்த பூமிக்குத் திரும்பி (15) வந்து மிகுந்த பயத்தோடு ஸ்ரீ மஹாதேவரைப் பல ஸ்தோத்திரங்களால் அநேகவிதமாய்த் துதித்து அங்கு மிகுந்த பயத்தோடு அஞ்சலி செய்து கொண்டிருக்கும் விஷ்ணுவைப் பார்த்தேன். (16) அப்பொழுது எங்களிருவருக்கும் சிவாக்ஞையால் ஜ்யோதி ரூபமான இந்த மஹேச்வரருக்கு பூஜை செய்ய வேண்டுமென்ற புத்தி உண்டாயிற்று (17) ஓ விஷ்ணுவே! வீண் மோஹத்தால் நாம் புத்தி கெட்டுப்போனோம் என்று நாங்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டு பூஜை செய்யத் தீர்மானித்தவர்களாகி (18) ஸ்ரீ மஹாதேவரை மிகுந்த பக்தியோடு பூஜை செய்தோம். ஓ புத்ர! பிறகு பகவான் பார்வதியோடு அந்த ஜ்யோதிர்லிங்கத்தின் நடுவிலிருந்து ஆவிர்பவித்தார். (19) மாயா சம்பந்தமற்ற சரீரமுடையவரும், லக்ஷ்மீ விலாஸமுள்ளவரும், சந்திரகலையைத் தலையில் அலங்காரமாய் தரித்தவரும், சுத்தமான ஸ்படிகத்திற்கு நிகரானவரும், மூன்று கண்களை உடையவரும், கருத்த கழுத்தை உடையவரும், (20) வரம், அபயம் இந்த முத்திரைகளைக் கையில் தரித்தவரும், மிக ஸௌந்தர்யமுள்ளவரும், கோடரி, மான் இவைகளால் விளங்குகின்ற கைகளை உடையவருமாய் ஆவிர்பவித்து உலகங்களுக்கு மங்களத்தை அளிப்பவரும், மங்கள மூர்த்தியும், தேவருமான அந்த ஸ்ரீ பரமசிவனைப் பார்த்து (21) நமஸ்கரித்து மிகுந்த பக்தியுடன் பலவிதமாய் ஸ்தோத்திரங்களால் துதித்து ஓ சங்கர! எங்களிருவர்களுடைய குற்றத்தைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். (22) தாங்களோ வெனில் யாவருக்கும் குரு. சுகத்திற்கு இருப்பிடமானவர். ஸர்வ லோகங்களுக்கும் நன்மையைச் செய்வதில் முயற்சியுள்ளவர் என்று சூலபாணியான மஹாதேவரை நாங்கள் வேண்டிக்கொண்டோம். (23) ஓ புத்ர! சந்திரசேகரரும் திவ்ய மங்கள மூர்த்தியுமான அந்த பகவான் முன்போல் எங்களுக்கு அவரவர்களுடைய பதவியை அளித்து அப்பொழுது ஸர்வ ஸ்வரூபியான

ततोऽन्तर्धिमगात्तस्मिन्महति ज्योतिषि स्वयम् । तदेतदचलश्रीमाननलाख्यो महानभूत् ॥ २६
तं प्रणम्यानलगिरिं ज्योतिर्लिङ्गस्वरूपिणम् । परित्यक्त महामोहावावामस्य कृपाबलात् ॥ २७
अवसावपदं प्राप्य सुखेनात्मज पूर्ववत् । माघकृष्णचतुर्दश्यामनलाचलमद्भुतम् ॥ २८
ज्योतिर्लिङ्गाकृतिं प्राप्य बहवो दग्धकिल्बिषाः । संपूज्याभीप्सितं प्राप्य कृपया तस्य शूलिनः ॥ २९
कृपया तस्य देवस्य ज्ञानं वेदागमोत्थितम् । लभन्ते पक्वचित्ताः ये तस्मिन्विन्यस्तमानसाः ॥ ३०
शंभोः कृपा तवाप्यस्ति दग्धाघौघो भवानिह । यतो बभूव विज्ञानं तव शांकरमात्मज ॥ ३१
शरणं प्राप्य देवेशं सुखीभव निरङ्कुशम् । एवमुक्त्वा विधिस्तूर्णं देवैस्सर्वैः परीवृतः ॥ ३२
पूजयित्वा पुरारातिं स्वपदं प्राप्तवान् द्विजाः । ततस्तु दक्षस्तरसा ब्रह्मणा प्रेरितस्स्वयम् ॥ ३३
काशीमवाप नगरीं सर्वपापप्रणाशिनीम् । लिङ्गं तत्र प्रतिष्ठाप्य स्वनाम्ना पुरविद्विषः ॥ ३४
आगमोक्तेन मार्गेण दक्षेश्वरसमाह्वयम् । अपूजयदयं भक्त्या सहस्राब्दान्तमात्मवान् ॥ ३५

ததோऽந்தர்திமகாத் தஸ்மின் மஹதி ஜ்யோதிஷி ஸ்வயம் । ததேததசலச்ச்ரீமா நனலாக்யோ மஹானபூத்

தம் ப்ரணம்யானலகிரிம் ஜ்யோதிர்லிங்கஸ்வரூபிணம் ।
பரித்யக்தமஹாமோஹாவாவாமஸ்ய க்ருபாபலாத் ॥ 27

அவஸாவ பதம் ப்ராப்ய ஸுகேநாத்மஜ பூர்வவத் । மாகக்ருஷ்ணசதுர்தச்யாமனலாசலமத்புதம் ॥ 28

ஜ்யோதிர்லிங்காக்ருதிம் ப்ராப்ய பஹவோ தக்தகில்பிஷா: ।
ஸம்பூஜ்யாபீப்ஸிதம் ப்ராப்ய க்ருபயா தஸ்ய சூலின: ॥ 29

க்ருபயா தஸ்ய தேவஸ்ய ஞானம் வேதாகமோத்திதம் ।
லபந்தே பக்வசித்தா யே தஸ்மின் வின்யஸ்தமானஸா: ॥ 30

ஈம்போ: க்ருபா தவாப்யஸ்தி தக்தாகௌகோ பவானிஹ । யதோ பபூவ விக்ஞானம் தவசாங்கரமாத்மஜ 31

சரணம் ப்ராப்ய தேவேசம் ஸுகீ பவ நிரங்குசம் ।
ஏவமுக்த்வா விதிஸ்தூர்ணம் தேவைஸ்ஸர்வை: பரிவ்ருத: ॥ 32

பூஜயித்வா புராராதிம் ஸ்வபதம் ப்ராப்தவான் த்விஜா: ।
ததஸ்து தக்ஷஸ்தரஸா ப்ரம்ஹணா ப்ரேரிதஸ்ஸ்வயம் ॥ 33

காசீமவாப நகரீம் ஸர்வபாபப்ராணாசினீம் । லிங்கம் தத்ர ப்ரதிஷ்டாப்ய ஸ்வ நாம்னாபுரவித்விஷ: ॥ 34

ஆகமோக்தேன மார்கேண தக்ஷேச்வர ஸமாஹ்வயம் । அபூஜயதயம் பக்த்யா ஸஹஸ்ராப்தாந்தமாத்மவான்

என்ற அரசனின் புத்ரனும் யுவாவுமான கமலாக்ஷன் என்ற ராஜகுமாரன் மூத்த பெண்ணான ஸர்வ கலாக்ஞா என்றவளை சாஸ்திர முறைப்படி கல்யாணம் செய்துகொண்டு அன்றிரவு அவ்விருவர்களும் சேர்ந்திருந்தார்கள். (26) அப்பொழுது கமலாக்ஷன் அப்பெண்ணின் ஆபரணமான ருத்ராக்ஷணங்களை எல்லாம் வாங்கி பெட்டியில் வைத்து தனது ஆபரணங்களை அவள் கையில் கொடுத்து (27) மிகுந்த காமாதுரனாய் அவளை ஸம்போகத்திற்கு அழைத்தான். ஓ ஸ்வாமி! சிறந்த ஆபரணமும் பரிசுத்தமுமான ருத்ராக்ஷத்தை தாங்கள் தரிக்காததால் (28) தாங்கள் என்னுடன் சேரத்தகுதியற்றவர் என்றாள். இவ்வாறு உரைத்த தன்மனைவியின் சொல்லைக்கேட்டு கமலாக்ஷன் கூறினான். (29) சிறந்த முகத்தை உடைய ஓ பெண்ணே! பலரத்னங்களால் விசித்ரமான சிறந்த ஆபரணங்களை நான் தரித்திருக்கையில் அதைக்காட்டிலும் ருத்ராக்ஷத்துக்கு என்ன அதிகப்பெருமை இருக்கிறது என்றான். (30) இவ்வாறு கமலாக்ஷனின் வார்த்தையைக்கேட்டு அவன் மனைவி கூறினாள். தாங்கள் மிகுந்த மோஹத்தால் சிறந்த ஆபரணமான ருத்ராக்ஷத்தை தரிக்காதபடியால் (31) மஹாபாதகங்களாகிற ஆதிசேஷனால் நீர் தீண்டப்பட்டிருக்கிறீர் இதில் ஸந்தேஹமில்லை. ஆகையால் தங்களுடன் சேருவதோ ஸஹவாஸம் செய்வதோ உசிதமில்லை (32) இவ்விஷயத்தில் புராணங்கள் ஆதாரங்களாகும் என்பதில் ஸந்தேஹமில்லை அல்லது தங்களுக்கு நம்பிக்கை உள்ள எல்லா சாஸ்த்ரங்களையும் நன்கறிந்த சிறந்த மனிதரையாவது என் முன்னிலையில் கேட்க வேண்டுமென்றாள். இவ்வாறுரைத்த மனைவியின் வார்த்தையைக்கேட்டு அரசன் மறுபடியும் கூறினான். (34) ஓ பெண்ணே! எனக்கு ஸம்மதமான பண்டிதன் இவ்விஷயத்தை சொல்லுவாராகில் அப்பொழுது நான் புருஷனாயிருந்தாலும் உனக்கு மனைவியாவேன். (35) நீயும் எனக்கு அப்பொழுது கணவனாகப்போகிறாய் என்பதை ஸத்யமாய்ச் சொல்லுகிறேன் என்று அரசன் தன்மனைவி

तस्य तद्वचनं श्रुत्वा तथेत्यङ्गीचकार सा । तस्यां रात्र्यां व्यतीतायां दंपती तौ समुत्थितौ ॥ ३७
कल्याणमण्टपं प्राप्तौ सर्वाभरणभूषितौ । तदानीमागतास्तत्र ब्राह्मणः केचनोत्तमाः ॥ ३८
द्रष्टुं कल्याणमनयोर्भूपालाश्च समागताः । समागतानियं वीक्ष्य भर्तारमवदत्सुधीः ॥ ३९
संमतस्तव कोवास्या देषु विप्रेषु भूमिपः । रुद्राक्षस्य वरिष्ठत्वं प्रष्टुं तद्धर्तुरप्यहो ॥ ४०
इति तस्या वचश्श्रुत्वा स्मितपूर्वमभाषत । पतिः — कल्याणमण्टपे ह्यस्मिन् शेषशायी जनार्दनः ॥ ४१
चित्ररूपी चित्रकुड्ये यस्तिष्ठति वरानने । अनेनोक्तं यदि तदा त्वयोक्तं तत्तथा भवेत् ॥ ४२
उत्थाय तरसा स्थित्वा बद्धाञ्जलि पुटेन वै । इति भर्तुर्वचश्श्रुत्वा तथेत्युक्त्वा पुनश्च सा ॥ ४३
बद्धाञ्जलिपुटा विष्णुं चित्ररूपिणमाह हि । अस्ति चेन्महिमा विष्णो रुद्राक्षस्याघहारिणः ॥ ४४
रुद्राक्षधारिणां पापं कृतं पुण्यफलप्रदम् । कृतं च पुण्यं पापाय येनारुद्राक्षधारिणा ॥ ४५
अयमर्थो यदि हरे सत्यो वेदान्त संमतः । सर्वा विरुद्धस्सर्वत्र विश्रुतस्तव संमतः ॥ ४६

தஸ்ய தத்வசனம் ச்ருத்வா ததேத்யங்கீசகார ஸா ।
தஸ்யாம் ராத்ர்யாம் வ்யதீதாயாம் தம்பதீ தௌ ஸமுத்திதௌ ॥ 37

கல்யாணமண்டபம் ப்ராப்தௌ ஸர்வாபரண பூஷிதௌ ।
ததானீமாகதாஸ்தத்ர ப்ராம்ஹணா: கேச நோத்தமா: ॥ 38

த்ரஷ்டும் கல்யாணமனயோர் பூபாலாச்ச ஸமாகதா: । ஸமாகதானியம் வீக்ஷ்ய பர்தாரமவதத்ஸுதீ: ॥ 39

ஸம்மதஸ்தவ கோவாஸ்யா தேஷு விப்ரேஷு பூமிப: ।
ருத்ராக்ஷஸ்ய வரிஷ்டத்வம் ப்ரஷ்டும் தத்தர்துரப்யஹோ ॥ 40

இதி தஸ்யா வசச்ச்ருத்வா ஸ்மிதபூர்வமபாஷத ।
பதி: — கல்யாணமண்டபே ஹ்யஸ்மின் சேஷசாயீ ஜனார்தன: ॥ 41

சித்ரரூபீ சித்ரகுட்யே யஸ்திஷ்டதி வரானனே । அனேனோக்தம் யதி ததா த்வயோக்தம் தத்ததா பவேத்
உத்தாய தரஸா ஸ்தித்வா பத்தாஞ்ஜலிபுடேன வை । இதி பர்துர்வச: ச்ருத்வா ததேத்யுக்த்வா புனச்ச ஸா

பத்தாஞ்ஜலிபுடா விஷ்ணும் சித்ரரூபிணமாஹ ஹி ।
அஸ்திசேன்மஹிமா விஷ்ணோ ருத்ராக்ஷஸ்யாகஹாரிண: ॥ 44

ருத்ராக்ஷதாரிணாம் பாபம் க்ருதம் புண்யபலப்ரதம் । க்ருதஞ்ச புண்யம் பாபாய யே நா ருத்ராக்ஷதாரிணா 45
அயமர்தோ யதி ஹரே ஸத்யோ வேதாந்த ஸம்மத: । ஸர்வாவிருத்தஸ் ஸர்வத்ர விச்ருதஸ்தவ ஸம்மத:

யின் முன்னிலையில் விளையாட்டாகச் சொன்னான். (36) அவளும் அரசனுடைய வார்த்தையைக்கேட்டு அப்படியே ஆகட்டும் என்று அங்கீகரித்தாள். அவ்விரவு கழிந்ததும் தம்பதிகள் எழுந்து (37) ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவர்களாகி கல்யாண மண்டபத்திற்கு வந்தார்கள். அப்பொழுது அவர்களின் கல்யாணத்தைப்பார்க்க சில சிறந்த ப்ராம்மணர்களும் அரசர்களும் அங்கே வந்தார்கள். அதிபுத்திசாலியான அப்பெண்ணானவள் அங்கு வந்திருப்போரைக்கண்டு தன் புருஷனிடம் கூறியதாவது (39) ஓ அரசனே! இங்கு வந்திருப்போருள் யாரிடம் ருத்ராக்ஷத்தின் மேன்மையைப்பற்றியும் அதைத்தரிப்போரின் மேன்மையைப்பற்றியும் கேட்க உமக்கு ஸம்மதம்? (40) இவ்வாறுரைத்த அவளுடைய வார்த்தையைக் கேட்ட கணவன் புன்சிரிப்புடன் கூறினான். ஓ பெண்ணே! இக்கல்யாண மண்டபத்தில் உள்ள சித்ரங்கள் வரையப்பட்ட சுவற்றில் சித்ர உருவமாய் ஆதிசேஷன் மீது பள்ளிக்கொண்டிருக்கும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவானவர் சீக்ரம் எழுந்து அஞ்சலிசெய்து கொண்டு சொல்லுவாராகில் அப்பொழுது நீ சொல்லுவதும் அவ்விதமே ஸரியாகும் என்ற கணவனின் வார்த்தையைக்கேட்டு அவளும் அப்படியே ஆகட்டுமென்று சொல்லிவிட்டு (43) அஞ்சலி செய்துகொண்டு சித்திரத்தின் உருவமாய் விளங்கும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவைப்பார்த்துச் சொன்னாள். ஓ விஷ்ணுவே! பாபங்களைப் போக்கும் ருத்ராக்ஷத்துக்கு மஹிமை இருப்பதானால் (44) ருத்திராக்ஷம் தரித்தவர்கள் பாபம் செய்தாலும் அது புண்ணியத்தின் பலனை கொடுக்குமென்பதையும் ருத்திராக்ஷம் தரிக்காதவர்கள் என்ன புண்ணியங்கள் செய்தாலும் அவைகள் பாவங்களின் பயனையே கொடுக்குமென்பதையும் (45) ஆகிய இந்த அர்த்தங்களெல்லாம் ஸத்தியமாயும் வேதாந்தத்திற்கு சம்மதமாயும் எல்லா சாஸ்திரங்களுக்கும் விரோதமற்றதாயும் எங்கும் பிரஸித்த

तथा वदाधुना शीघ्रमुत्थायास्माद्भुजङ्गतः । स्थित्वा सुखासनं स्वामिन् यथातथ्यं शिवाज्ञया । ४७
इत्युक्तमात्रेण हरिः चित्ररूपी भयान्वितः । सत्यं सत्यं त्वया प्रोक्तं सर्ववेदान्तसंमतम् ॥ ४८
माहात्म्यमस्य देवेशः केवलं वेद शङ्करः । जातेन यत्र कुत्रापि जातौ मर्त्येन शोभने ॥ ४९
धार्यते पावनं स्वाङ्गे रुद्राक्षं वरभूषणम् । स एव धन्यः पूज्यश्च बिभ्येऽहं तस्यसत्यतः ॥ ५०
बहुनोक्तेन किं साध्वि सर्वैर्धार्यमिदं ध्रुवम् । इत्युक्त्वा वासुदेवोऽयं पुनश्शिश्ये यथा पुरा ॥ ५१
तदेतदद्भुतं दृष्ट्वा सर्वे तत्र जनाः स्थिताः । आश्चर्यमापुरत्यर्थं तस्यां विश्वासमाययुः ॥ ५२
कमलाक्षोऽपि राजायमाश्चर्येण समन्वितः । विचारमाप नात्यर्थं स्मृत्वा स्ववचनं हृदि ॥ ५३
तदानीं तं समावृत्य तस्या भृत्यवधूजनाः । राजंस्त्वमधुना शीघ्रं मुक्त्वा पुरुषलक्षणम् ॥ ५४
स्त्रीचिह्नैर्वस्त्रभूषाद्यैर्भव स्ववचनं स्मरन् । परिहासवचः श्रुत्वा नृपोऽयं व्रीळयानतः ॥ ५५

ததா வதாதுனா சீக்ரமுத்தாயாஸ்மாத் புஜங்கத: ।
ஸ்தித்வா ஸுகாஸனம் ஸ்வாமின் யதாதத்யம் சிவாக்ஞயா ॥ 47

இத்யுக்தமாத்ரேண ஹரி: சித்ரரூபீ பயான்வித: ।
ஸத்யம் ஸத்யம் த்வயா ப்ரோக்தம் ஸர்வ வேதாந்த ஸம்மதம் ॥ 48

மாஹாத்ம்யமஸ்ய தேவேச: கேவலம் வேத சங்கர: ।
ஜாதேன யத்ரகுத்ராபி ஜாதேன மர்த்யேன சோபனே ॥ 49

தார்யதே பாவனம் ஸ்வாங்கே ருத்ராக்ஷம் வரபூஷணம் ।
ஸ ஏவ தன்ய: பூஜ்யச்ச பிப்யேऽஹம் தஸ்ய ஸத்யத: ॥ 50

பஹுனோக்தேன கிம் ஸாத்வி ஸர்வைர்தார்யமிதம் த்ருவம் ।
இத்யுக்த்வா வாஸுதேவோऽயம் புனச்சிச்யே யதா புரா ॥ 51

ததேத தத்புதம் த்ருஷ்ட்வா ஸர்வே தத்ர ஜனா: ஸ்திதா: ।
ஆச்சர்யமாபுரத்யர்தம் தஸ்யாம் விச்வாஸமாயயு: ॥ 52

கமலாக்ஷோऽபி ராஜாய மாச்சர்யேண ஸமன்வித: ।
விசாரமாப சாத்யர்தம் ஸ்ம்ருத்வா ஸ்வவசனம் ஹ்ருதி ॥ 53

ததானீம் தம் ஸமாவ்ருத்ய தஸ்யாப்ருத்ய வதூஜனா: ।
ராஜம்ஸ்த்வ மதுனா சீக்ரம் முக்த்வா புருஷலக்ஷணம் ॥ 54

ஸ்த்ரீசின்னைர் வஸ்த்ரபூஷாத்யைர்பவ ஸ்வ வசனம் ஸ்மரன் ।
பரிஹாஸவச: ச்ருத்வா ந்ருபோऽயம் வ்ரீளயானத: ॥ 55

மாயும் இருப்பது தங்களுக்கு சம்மதமானால் (46) இப்பொழுது தாங்கள் சீக்கிரம் சுகாசனமாய் இருக்கும் இந்த ஆதிசேஷனைவிட்டு எழுந்து, ஸ்ரீ சிவனின் கட்டளையின்படி அதை உண்மையாய் சொல்ல வேண்டும். (47) என்று சொன்னவுடன் சித்திரத்தின் உருவமாய் இருந்த ஸ்ரீ மஹாவிஷ்ணு வானவர் எழுந்து பயத்துடன் கூடியவராய் நீ உரைத்தது எல்லா உபநிஷத்துக்களுக்கும் ஸர்வ வேதாந்தங்களுக்கும் சம்மதமென்பது ஸத்தியம் ஸத்தியம். (48) ருத்திராக்ஷத்தின் மஹிமையை தேவர்களுக்கு ஈசனான ஸ்ரீ பரமேச்வரன் மட்டுமே அறிவார். ஓ மங்களமுள்ள பெண்ணே! எப்படிப்பட்ட ஜாதியில் பிறந்த மனிதராயினும் (49) மிகப் பரிசுத்தமும் சிறந்த ஆபரணமுமாகிய ருத்திராக்ஷங்களை தனது சரீரத்தில் தரிப்பானேயாகில் அவனே தன்யன். அவனே எல்லோராலும் பூஜிக்கத் தகுந்தவன். ஸத்தியமாய் அவனுக்கு நானும் பயப்படுகிறேன். (50) ஓ பதிவிரதையே! அதிகம் கூறுவானேன். ருத்திராக்ஷமானது யாவராலும் தரிக்கத்தக்கது என்பது நிச்சயமே என்று கூறிவிட்டு ஸ்ரீ மஹாவிஷ்ணு வானவர் முன்போல் படுத்துவிட்டார். (51) அங்கிருந்த ஜனங்கள் யாவரும் இந்த ஆச்சரியத்தைக் கண்டு அவளிடத்தில் மிகுந்த விசுவாசமடைந்தார்கள். (52) கமலாக்ஷன் என்ற அந்த அரசனும் மிகுந்த ஆச்சரியம் கொண்டவனாய் தான் சொன்ன வார்த்தையை மனதில் நினைத்து மிகவும் கவலையை அடைந்தான். (53) அவளுடைய வேலைக்காரிகள் அவனைச் சூழ்ந்துக்கொண்டு, ஓ அரசனே! தாங்கள் சொன்ன வார்த்தையை மனதில் நினைத்துக்கொண்டு இப்பொழுதே சீக்கிரம் புருஷ லக்ஷணங்களை விலக்கி விட்டு (54) பெண்களுக்குரிய ஆடையாபரணங்களை தரித்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள்.

स्वयं भृत्यजनान् प्राह यद्येषा पुरुषो भवेत् । तदानीमहमेतस्या भवेयं वल्लभा वधूः ॥ ५६
इत्युक्तमात्रेण तदा पुरुषोऽभूदियं वधूः । कमलाक्षोऽपि सहसा स्त्रीत्वं प्राप शिवाज्ञया ॥ ५७
कमलाक्षीति विख्याता तदारभ्येयमङ्गना । सोऽयं सर्वकलावल्लभाख्यया प्रथितो भुवि ॥ ५८
कमलाक्षी प्रणम्यैनं भर्तारं वीक्ष्य चाब्रवीत् । प्रयच्छ मम रुद्राक्षं सर्वपापौघनाशनम् ॥ ५९
सर्ववेदान्तसंसिद्धं साक्षादीशात्मकं परम् । न ज्ञायतेऽस्य माहात्म्यं केनापि प्रियपावनम् ॥ ६०
दत्तं भक्त्या समादाय दधौ स्वाङ्गे मुदान्विता । तावुभौ दंपती सम्यग्भुक्त्वा भोगांश्च तस्थतुः ॥ ६१
कमलाक्षपिता योऽसौ ब्रह्मनाथाह्वयो नृपः । केरळी तं समुद्वीक्ष्य सौम्यवन्तं महीपतिम् ॥ ६२
मम पुत्रोऽगमत् स्त्रीत्वं कमलाक्षो महीपते । सुता तवापि संप्राप्ता पुरुषत्वं सुशोभनम् ॥ ६३
अत्याश्चर्यमिदं दृष्टमनयोश्चरितं नृप । अस्ति मे तनयोऽन्यो विबुधाख्यो महामतिः ॥ ६४

ஸ்வயம் ப்ருத்யஜனான் ப்ராஹ யத்யேஷா புருஷோபவேத் ।
ததானிமஹமேதஸ்யா பவேயம் வல்லபா வதூ: ॥ 56

இத்யுக்தமாத்ரேண ததா புருஷோऽபூதியம் வதூ: ।
கமலாக்ஷோऽபி ஸஹஸா ஸ்த்ரீத்வம் ப்ராப சிவாக்ஞயா ॥ 57

கமலாக்ஷீதி விக்யாதா ததாரப்யேயமங்கனா । ஸோயம் ஸர்வ கலாவல்லபாக்யயா ப்ரதிதோ புவி ॥ 58

கமலாக்ஷி ப்ரணம்யைனம் பர்தாரம் வீக்ஷ்ய சாப்ரவீத் ।
ப்ரயச்ச மம ருத்ராக்ஷம் ஸர்வபாபௌக நாசனம் ॥ 59

ஸர்வவேதாந்த ஸம்ஸித்தம் ஸாக்ஷாதீசாத்மகம் பரம் ।
ந க்ஞாயதேऽஸ்ய மாஹாத்ம்யம் கேனாऽபி ப்ரிய பாவனம் ॥ 60

தத்தம் பக்த்யா ஸமாதாய ததைன ஸ்வாங்கே முதான்விதா ।
தாவுபௌ தம்பதீ ஸம்யக் புக்த்வா போகாம்ச்ச தஸ்தது: ॥ 61

கமலாக்ஷபிதா யோऽஸௌ ப்ரும்ஹநாதாஹ்வயோ ந்ருப: ।
கேரளீதம் ஸமுத்வீக்ஷ்ய ஸௌம்யவந்தம் மஹீபதிம் ॥ 62

மம புத்ரோऽகமத் ஸ்த்ரீத்வம் கமலாக்ஷோ மஹீபதே ।
ஸுதா தவாபி ஸம்ப்ராப்தா புருஷத்வம் ஸுசோபனம் ॥ 63

அத்யாச்சர்யமிதம் த்ருஷ்டமனயோச்சரிதம் ந்ருப ।
அஸ்தி மே தனயோऽப்யன்யோ விபுதாக்யோ மஹாமதி: ॥ 64

இவ்வாறு பரிகாஸ வார்த்தையைக் கேட்டு அரசன் தலை வணங்கியவனாய் (55) அந்த வேலைக்காரிகளைப் பார்த்து, ஓ பெண்களே! இவள் புருஷனாகிவிட்டால் அப்பொழுது நான் இவளுக்கு அன்புள்ள மனைவியாகிவிடுகிறேன். (56) என்று அவன் சொன்ன உடன் அப்பொழுதே அப்பெண்ணானவள் சிவனின் கட்டளைப்படி புருஷனாகிவிட்டாள். கமலாக்ஷனும் சீக்கிரம் பெண்ணாகிவிட்டான். (57) அதுமுதல் அப்பெண் கமலாக்ஷி என்றும், அப்புருஷன் ஸர்வகலாவல்லபன் என்றும் உலகில் பிரஸித்தி அடைந்தார்கள். கமலாக்ஷியானவள் தன் கணவனை நமஸ்கரித்து பார்த்துக் கூறியதாவது:- எல்லா பாபக் கூட்டங்களையும் நாசம் செய்யவல்லதும், எல்லா உபநிஷத்துக்களிலும் கொண்டாடப்பட்டதும், ஸ்ரீ பரமேச்வர ஸ்வரூபமும், மிகச் சிறந்ததுமான ருத்திராக்ஷத்தை எனக்கு தந்து அருள வேண்டும். ஓ அன்புள்ளவரே! மிக பரிசுத்தமான இந்த ருத்திராக்ஷத்தின் மஹிமை ஒருவராலும் அறியமுடியாது என்று சொன்னாள். அப்படியே அவன் கொடுத்த ருத்திராக்ஷத்தை அவள் பக்தியோடு வாங்கி மிகுந்த ஸந்தோஷத்துடன் தனது சரீரத்தில் தரித்துக்கொண்டாள். தம்பதிகளான அவ்விருவர்களும் இவ்விதம் பலகாலம் நன்கு சுகங்களை அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். (61) இப்படி இருக்கையில் கமலாக்ஷனுக்குத் தந்தையாகிய கேரள தேசாதிபதியான பிரம்மநாதன் என்ற அரசன் சௌம்யவான் என்ற அரசனைப் பார்த்து (62) ஓ ராஜேந்திரா! என் பிள்ளையான கமலாக்ஷன் பெண் தன்மையை அடைந்துவிட்டான். உமது குமாரியும் மங்களமான புருஷத்தன்மையை அடைந்துவிட்டாள். (63) ஓ அரசனே! இவ்விருவர்களுடைய சரித்திரமும் மிகுந்த ஆச்சரியமாய் காண்கின்றது. எனக்கு மிக புத்திசாலியான

तस्य ते कन्यकामन्यां ख्यातां चित्राङ्गनाख्यया । प्रयच्छ विधिना राजन् सर्वलक्षणसंयुताम् ॥ ६
ब्रह्मनाथवचः श्रुत्वा सौम्यवान् पृथिवीपतिः । तथेति च ददौ कन्यां विबुधस्यात्मजां पराम् ॥ ६६
विबुधोऽपि विवाह्येनां धृतरुद्राक्षभूषणाम् । आनयित्वा स्वकं देशं प्राप कल्याणवेषतः ॥ ६७
तत्र स्थित्वातु विपुलान् भोगांश्च बुभुते तथा । सौम्यवान् ब्रह्मनाथोऽपि धृतरुद्राक्षभूषणौ ॥ ६८
कथयन्तौ च माहात्म्यं पुराणेषु प्रसिद्धिमत् । भुक्त्वा भोगांश्च विपुलान् दृष्ट्वा दृश्यञ्च शोभनम् ॥ ६९
अन्ते च परया प्रीत्या पुत्रपौत्रकलत्रकैः । श्रीमत्कैलासमतुलं प्रापतुर्ब्राह्मणोत्तमाः ॥ ७०

इति श्री स्कान्दे महापुराणे शंकरसंहितायां शिवरहस्यखण्डे
उपदेशकाण्डे चतुर्दशोऽध्यायः ॥

தஸ்ய தே கன்யகாமன்யாம் க்யாதாம் சித்ராங்கநாக்யயா ।
ப்ரயச்ச விதினு ராஜன் ஸர்வலக்ஷண ஸம்யுதாம் ॥ 65

ப்ரும்ஹநாதவச: ச்ருத்வா ஸௌம்யவான் ப்ருதிவீபதி: ।
ததேதி ச ததௌ கன்யாம் விபுதஸ்யாத்மஜாம் பராம் ॥ 66

விபுதோऽபி விவாஹ்யேனும் த்ருதருத்ராக்ஷபூஷணும் ।
ஆனயித்வா ஸ்வகம் தேசம் ப்ராப கல்யாண வேஷத: ॥ 67

தத்ர ஸ்தித்வாது விபுலான் போகாம்ச்ச புபுஜே ததா ।
ஸௌம்யவான் ப்ரும்ஹநாதோऽபி த்ருதருத்ராக்ஷபூஷணௌ ॥ 68

கதயந்தௌ ச மாஹாத்ம்யம் புராணேஷு ப்ரஸித்திமத் ।
புக்த்வா போகாம்ச விபுலான் த்ருஷ்ட்வா த்ருச்யஞ்ச சோபனம் ॥ 69

அந்தேச பரயா ப்ரீத்யா புத்ரபௌத்ர களத்ரகை: ।
ஸ்ரீமத்கைலாஸமதுலம் ப்ராபதுர் ப்ராம்ஹணோத்தமா: ॥ 70

இதி ஸ்ரீஸ்காந்தே மஹாபுராணே சங்கரஸம்ஹிதாயாம் சிவரஹஸ்யகண்டே
உபதேசகாண்டே சதுர்தசோऽத்யாய:

விபுதன் என்ற மற்றோர் பிள்ளை இருக்கிறான் (64) அவனுக்கு ஸகல லக்ஷணங்களும் அமைந்த 'சித்திராங்கனை' என்ற உனது மற்றொரு கன்னிகையை விதிப்படி விவாஹம் செய்து கொடுக்க வேண்டும் எனக் கேட்டான். பிரம்மநாதனுடைய வார்த்தையைக் கேட்டு சௌம்யவான் என்ற அரசனும் அப்படியே ஆகட்டுமென்று சிறந்த தனது பெண்ணை விபுதனுக்கு கன்னிகாதானம் செய்து கொடுத்தான். (66) விபுதனும் ருத்திராக்ஷங்களை ஆபரணமாய் தரித்த அப்பெண்ணை மணந்து கொண்டு கல்யாண கோலத்தோடு தன் தேசத்திற்கு அழைத்து வந்தான். (67) அங்கு இருந்துகொண்டு அவன் அளவற்ற போகங்களை அனுபவித்தான். மேலும் சௌம்யவான் பிரும்மநாதன் அவ்விருவர்களும் ருத்திராக்ஷங்களை ஆபரணங்களாகத் தரித்துக்கொண்டு, (68) புராணங்களில் பிரசித்தியடைந்த ருத்திராக்ஷ மஹிமையை சொல்லிக் கொண்டு, அளவற்ற ஸுகங்களை அனுபவித்து, அநேகம் மங்களக் காட்சிகளைப் பார்த்து (69) முடிவில் ஓ முனிவர்களே! பிள்ளை, பேரன், மனைவி இவர்களோடும் மிகுந்த ஸந்தோஷத்துடன் நிகரற்றதும் லக்ஷ்மி விலாசம் பொருந்தியதுமான கைலாச பதவியை அடைந்தார்கள்.

பதினான்காவது அத்தியாயம் முற்றிற்று.

॥ अथ पञ्चदशोऽध्यायः ॥

रुद्राक्षधारण महिम्नामार्जारेण स्वर्गात् कल्पवृक्षानयनम् ॥

अथान्यदपि रुद्राक्षमाहात्म्यं वर्णयाम्यहम् । सिन्धुदेशे पुरं किञ्चिद्भूचक्राख्यं सु शोभनम् ॥ १
तत्र कश्चिद्द्विजश्रेष्ठस्सुप्रदीपाह्वयो महान् । रुद्राक्षमालाभरणो रुद्रे विन्यस्तमानसः ॥ २
पुत्राः पौत्रास्तदीया ये सर्वे रुद्राक्षभूषणाः । एवं वसन् सुप्रदीपो नियमञ्च चकारवै ॥ ३
रुद्राक्षधारिणामन्नं दास्याम्यहमनुत्तमम् । नेतरेषां महापापकलुषीकृतचेतसाम् ॥ ४
श्रुत्वाऽस्य नियमं कश्चिद्योगाह्वाख्यो यतीश्वरः । योगमार्गैकनिरतस्सर्वशास्त्रार्थकोविदः ॥ ५
समागतः पुरं शीघ्रात्सर्वैर्बहुमतो जनैः । न धारयत्ययं पुण्यं रुद्राक्षं वरभूषणम् ॥ ६
तस्मादेनमसौ विप्रस्सुप्रदीपो महामतिः । नाङ्गीचकार भिक्षांच नोक्तवानस्य योगिनः ॥ ७
एवं दिनेषु कतिषु गतेष्वयमतिक्रुधा । गृहेषु भिक्षाव्याजेन तद्गृहद्वारमागतः ॥ ८

॥ अथ पञ्चदशोऽध्यायः ॥

ருத்ராக்ஷத்தை தரித்த மஹிமையால் பூனை ஸ்வர்கத்திலிருந்து கல்பவிருக்ஷத்தை கொண்டுவருதல்

அதான்யதபி ருத்ராக்ஷ மாஹாத்ம்யம் வர்ணயாம்யஹம் ।
ஸிந்துதேசே புரம் கிஞ்சித் பூசக்ராக்யம் ஸு சோபனம் ॥ 1
தத்ர கச்சித்த்விஜச்ரேஷ்டஸ் ஸுப்ரதீபாஹ்வயோ மஹான் ।
ருத்ராக்ஷமாலாபரணே ருத்ரே வின்யஸ்தமானஸ: ॥ 2
புத்ரா: பௌத்ராஸ்ததீயாயே ஸர்வே ருத்ராக்ஷ பூஷணா: ।
ஏவம் வஸன் ஸுப்ரதீபோ நியமஞ்ச சகார வை ॥ 3
ருத்ராக்ஷதாரிணாமன்னம் தாஸ்யாம்யஹ மனுத்தமம் ।
நேதரேஷாம் மஹாபாபகலுஷிக்ருதசேதஸாம் ॥ 4
ச்ருத்வாऽஸ்ய நியமம் கச்சித் யோகாங்காக்யோ யதீச்வர: ।
யோகமார்கைகநிரதஸ்ஸர்வசாஸ்த்ரார்தகோவித: ॥ 5
ஸமாகத: புரம் சீக்ராத் ஸர்வைர்பஹுமதோ ஜனை: ।
ந தாரயத்யயம் புண்யம் ருத்ராக்ஷம் வரபூஷணம் ॥ 6
தஸ்மாதேநமஸௌ விப்ரஸ்ஸுப்ரதீபோ மஹாமதி: ।
நாங்கீசகார பிக்ஷாஞ்ச நோக்தவானஸ்ய யோகின: ॥ 7
ஏவம் தினேஷு கதிஷு கதேஷ்வய மதிக்ருதா । க்ருஹேஷு பிக்ஷாவ்யாஜேன தத்க்ருஹத்வாரமாகத: 8

பதினைந்தாவது அத்தியாயம்

ஓ சௌனகாதி முனிவர்களே! ருத்திராக்ஷ மஹிமையைப் பற்றிய மற்றொரு சரித்திரத்தை சொல்லுகிறேன். ஸிந்து தேசத்தில் பூ சக்கரம் என்ற மங்களமான ஓர் சிறிய பட்டிணம் இருக்கிறது. (1) அதில் மஹிமை பொருத்தியவரும், ருத்திராக்ஷ மாலைகளை ஆபரணமாகக் கொண்டவரும், ஸ்ரீ பரமேச்வரனிடத்தில் நிலைத்த மனதுடையவருமான ஸுப்ரதீபன் என்ற ஓர் சிறந்த பிராம்மணர் இருந்தார். (2) அவருடைய பிள்ளைகளும், பேரன்களும் மற்றும் அவரைச் சேர்ந்தவர்கள் யாவரும் ருத்திராக்ஷத்தை ஆபரணமாகக் கொண்டிருந்தார்கள். இவ்விதமாக ஸுப்ரதீபன் வசித்து வருகையில் ஓர் உறுதி செய்து கொண்டான். (3) நான் ருத்திராக்ஷங்களை தரிப்பவர்களுக்கே சிறந்த அன்னத்தைக் கொடுப்பதேயன்றி மகா பாபங்களால் கலங்கிய மனமுடைய மற்றவர்களுக்கு கொடுப்பதில்லை என உறுதி செய்து கொண்டான். (4) இவனது நியமத்தைக் கேட்டு யோகமார்க்கத்தை நாடியவரும், எல்லா சாஸ்த்திரார்த்தங்களையும் நன்கு அறிந்தவருமான யோகாங்கர் என்ற ஓர் சிறந்த ஸன்யாஸியானவர் (5) சீக்கிரமாக அப்பட்டிணத்திற்கு வந்து அங்குள்ள மற்ற எல்லா ஜனங்களாலும் நன்கு வெகுமதிக்கப்பட்டவராய் இருந்து வந்தார். அவர் சிறந்த ஆபரணமும் புண்ணியத்தை அளிப்பதுமான ருத்திராக்ஷத்தைத் தரிப்பதில்லை. (6) ஆகையால் மிக புத்திசாலியான ஸுப்ரதீபனும் அந்த யோகீச்வரரை ஆதரிக்கவில்லை. அவருக்கு பிக்ஷையும் கொடுக்கவில்லை. (7) இவ்விதம் சில தினங்கள் சென்றபின் அந்த யோகீச்வரர் மிகுந்த கோபத்துடன் வீடுகளில் பிக்ஷை வாங்கும் வியாஜமாய் அந்த ஸுப்ரதீபனுடைய

तमागतञ्च विज्ञाय सर्वे तद्गृहवासिनः । नाङ्गीचक्रुस्स्थितास्तूष्णीमजानन्त इवान्तरे ॥ ९
सुप्रतीपस्स्वयं पश्चाद्विनिर्गत्य गृहाद्बहिः । किमर्थमागतं गच्छ भिक्षा नास्ति गृहे मम ॥ १०
गृहेष्वन्येषु सर्वेषु भिक्षामट यथेच्छया । रुद्राक्षधारिणामन्नं नेतरेषां च मद्गृहे ॥ ११
न धार्यते त्वया विप्र रुद्राक्षं सर्वपापहम् । इति तस्य वचः श्रुत्वा गच्छ गच्छ पुरो मम ॥ १२
भिक्षा न दीयते तुभ्यमित्युवाच द्विजोत्तमः । एवं निशम्य वचनं सुप्रदीपस्य धीमतः ॥ १३
रुषा बभाषे वचनं परुषाक्षरसंयुतम् । निशम्य वचनं तस्य योगिनो निष्ठुरं तदा ॥ १४
सुप्रतीपात्मजाः क्रुद्धास्तमपृष्ट्वा दुराशयम् । तदीयेनैव दण्डेन निरस्थन् दूरतो द्विजाः ॥ १५
ततस्सञ्जभ्रमं क्रुद्धस्सन्यासी तत्पुराधिपम् । सालंकाख्यं समासाद्य सर्वमस्मै न्यवेदयत् ॥ १६
सालंकोऽपि नृपश्रेष्ठः श्रुत्वा तदनुपूर्वशः । स्वकीयै रानयामास सुप्रतीपं भटैस्तदा ॥ १७
सन्यासिनं समायान्तं भिक्षार्थं तव वेश्मनि । किमुच्चाटयितुं युक्तमदत्त्वा तं बलात्पुनः ॥ १८
परुषं वचनं चोक्तं स्वकीयै पुत्रकैर्वत । इति राज्ञो वचश्श्रुत्वा सुप्रतीपोऽब्रवीद्वचः ॥ १९

தமாகதஞ்ச விக்ஞாய ஸர்வே தத்க்ருஹவாஸின: ।
நாங்கீசக்ருஸ் ஸ்திதாஸ்தூஷ்ணீமஜானந்த இவாந்தரே ॥ 9
ஸுப்ரதீபஸ் ஸ்வயம் பச்சாத் விநிர்கத்ய க்ருஹாத்பஹி: ।
கிமர்தமாகதம் கச்ச பிக்ஷா நாஸ்தி க்ருஹே மம ॥ 10
க்ருஹேஷ்வன்யேஷு ஸர்வேஷு பிக்ஷாமட யதேச்சயா ।
ருத்ராக்ஷதாரிணாமன்னம் நேதரேஷாஞ்ச மத்க்ருஹே ॥ 11
ந தார்யதே த்வயா விப்ர ருத்ராக்ஷம் ஸர்வபாபஹம் । இதி தஸ்ய வச: ச்ருத்வா கச்ச கச்ச புரோ மம ॥ 12
பிக்ஷாநதீயதே துப்யமித்யுவாச த்விஜோத்தம: । ஏவம் நிசம்ய வசனம் ஸுப்ரத்பஸ்ய தீமத: ॥ 13
ருஷாபாஷே வசனம் பருஷாக்ஷர ஸம்யுதம் । நிசம்ய வசனம் தஸ்ய யோகிநோ நிஷ்டுரம் ததா ॥ 14
ஸுப்ரதீபாத்மஜா: க்ருத்தாஸ்தமப்ருஷ்ட்வா துராசயம் ।
ததீயேனைவ தண்டேன நிரஸ்தன் தூரதோ த்விஜா: ॥ 15
ததஸ்ஸ ஸம்ப்ரமம் க்ருத்தஸ்ஸன்யாஸீதத்புராதிபம் ।
ஸாலங்காக்யம் ஸமாஸாத்ய ஸர்வமஸ்மைந்வேதயத் ॥ 16
ஸாலங்கோऽபி ந்ருபச்ரேஷ்டச்ச்ருத்வாததனு பூர்வச: ।
ஸ்வகீயை ரானயாமாஸ ஸுப்ரதீபம் படைஸ்ததா ॥ 17
ஸன்யாஸினம் ஸமாயாந்தம் பிக்ஷார்தம் தவ வேச்மனி । கிமுச்சாடயிதும் யுக்தமதத்வா தம் பலாத்புன: 18
பருஷம் வசனம் சோக்தம் ஸ்வகீயைர்புத்ரகைர்பத । இதி ராக்ஞோ வச: ச்ருத்வா ஸுப்ரதீபோऽப்ரவீத் வச:

வீட்டு வாசற்படிக்கு வந்தார். (8) அவ்வீட்டிலுள்ள யாவரும் அவர் வந்ததை அறிந்திருந்தும் அறியாதவர்கள் போல் அவரை ஆதரிக்காமல் பேசாமல் உள்ளே இருந்துவிட்டார்கள். (9) பிறகு ஸுப்ரதீபர் வெளியே வந்து நீர் எதற்காக இங்கு வந்தீர். உமக்கு எமது வீட்டில் பிக்ஷை இல்லை. சென்று விடும். (10) மற்ற வீடுகளில் உமதிஷ்டப்படி பிக்ஷை வாங்குங்கள். எனது வீட்டில் ருத்திராக்ஷத்தைத் தரிப்பவர்களுக்கு அன்னமிடுவதேயன்றி மற்றவர்களுக்கு கொடுப்பதில்லை. (11) ஓ பிராம்மணரே! எல்லா பாவங்களையும் போக்கவல்ல ருத்திராக்ஷமானது உம்மால் தரிக்கப்படவில்லை. என் முன் நிற்காதீர்கள். உமக்கு பிக்ஷைப் போடப் போவதில்லை என்று சொன்னார். புத்திமானான ஸுப்ரதீபன் அவ்வாறு உரைத்த வார்த்தையைக் கேட்டு யோகியானவர் மிகுந்த கோபத்துடன் சில கொடூர வார்த்தைகளைச் சொன்னார். யோகிச்வரருடைய கொடிய வார்த்தையைக் கேட்டவுடன் அப்பொழுது (14) ஸுப்ரதீபனின் பிள்ளைகள் மிகுந்த கோபம் கொண்டு கெட்ட எண்ணமுள்ள அந்த யோகீஸ்வரரை ஒன்றும் பேசாமல் அவருடைய தடியாலேயே அவரை தூரத்தில் தள்ளினார்கள். ஓ முனிவர்களே! (15) பிறகு ஸன்யாஸியான அவர் மிகுந்த கோபம் கொண்டவராகி மிகுந்த பரபரப்புடன் அந்த தேசத்து அரசனான ஸாலங்கராஜனிடம் சென்று அவனிடத்தில் எல்லாவற்றையும் தெரிவித்தார். ராஜேந்திரனான ஸாலங்கனும் அவைகளை ஆதியோடந்தமாய்க் கேட்டு, அப்பொழுது தன் தூதர்களைக் கொண்டு ஸுப்ரதீபரை அழைத்துவரச் செய்தான். (17) உமது வீட்டிற்கு பிக்ஷைக்காக வந்த இந்த ஸன்யாஸியை அவருக்கு பிக்ஷை கொடாமல் பலவந்தமாய் தள்ளிவிட்டது நியாயமாகுமா? (18) உமது பிள்ளைகள் அவரை கொடுமையாக

न सन्यासाश्रमो राजन्विना रुद्राक्षधारणम् । रुद्राक्षधारणं ह्यङ्गं सर्वस्यैवाश्रमस्य च ॥ २०
रुद्राक्षधारणेनैव मुक्तिर्ज्ञानान्न केवलात् । इति वेदाश्च चत्वारो वदन्ति किल सादरम् ॥ २१
किञ्चास्ति नियमः कश्चिन्मम राजन्निमं शृणु । रुद्राक्षधारिणामन्नं दास्याम्यहमनेनसाम् ॥ २२
स वन्द्यो मम राजेन्द्र योवा कोवाऽस्तु मानवः । स पूज्यस्सहि धर्मात्मा यथा देवो महेश्वरः ॥ २३
नेतरेषाञ्च डंभानामन्नं दास्याम्यनुत्तमम् । न पूज्योऽयं महापापी वरीयानाश्रमेष्वपि ॥ २४
सुप्रतीपस्य वचनं श्रुत्वा राज्ञोऽस्य सन्निधौ । सन्यासी च पुनः कोपादिदं वचनमब्रवीत् ॥ २५
किं साध्यमस्ति रुद्राक्षधारणेन मम द्विज । किमायाति धृते तस्मिन्रुद्राक्षे तव भूसुर ॥ २६
गत्वाऽहमधुना शीघ्रं देवलोकमनुत्तमम् । पुष्पाणि योगमाहात्म्यात्कल्पवृक्षस्य चानये ॥ २७
यदि शक्तिस्तव भवेदेवं रुद्राक्षधारणात् । तदा त्वयोक्तमखिलं सत्यमेव भविष्यति ॥ २८
इति तस्य वचश्श्रुत्वा योगिनोऽयं महीसुराः । यदि गत्वा पुरं दैवं योगाभ्यासेन केवलम् ॥ २९
आनयिष्यसि पुष्पाणि त्वमाशु सुरशाखिनः । तदास्ति मद्गृहे कश्चिन्मार्जारशिशुरुज्ज्वलः ॥ ३०

ந ஸன்யாஸாச்ரமோ ராஜன்விநு ருத்ராக்ஷதாரணம் ।
ருத்ராக்ஷதாரணம் ஹ்யங்கம் ஸர்வஸ்யைவாச்ரமஸ்யச ॥ 20
ருத்ராக்ஷதாரணேனைவ முக்திர்ஞானுன்ன கேவலாத் । இதி வேதாச்ச சத்வாரோ வதந்தி கில ஸாதரம் 21
கிஞ்சாஸ்தி நியம: கச்சின் மம ராஜந்நிமம் ச்ருணு । ருத்ராக்ஷதாரிணுமன்னம் தாஸ்யாம்யஹ மநேனஸாம்
ஸ வந்த்யோ மம ராஜேந்த்ர யோவா கோவாऽஸ்து மானவ: ।
ஸ பூஜ்யஸ்ஸஹி தர்மாத்மா யதாதேவோ மஹேச்வர: ॥ 23
நேதரேஷாஞ்ச டம்பானுமன்னம் தாஸ்யாம்யனுத்தமம் । ந பூஜ்யோऽயம் மஹாபாபீ வரீயாநாச்ரமேஷ்வபி
ஸுப்ரதீபஸ்ய வசனம் ச்ருத்வா ராக்ஞோऽஸ்ய ஸன்னிதௌ ।
ஸன்யாஸீச புன: கோபாதிதம் வசனமப்ரவீத் ॥ 25
கிம் ஸாத்யமஸ்தி ருத்ராக்ஷதாரணேன மம த்விஜ । கிமாயாதி த்ருதே தஸ்மின் ருத்ராக்ஷே தவ பூஸுர 26
கத்வாऽஹமதுனு சீக்ரம் தேவலோகமனுத்தமம் ।
புஷ்பாணி யோகமாஹாத்ம்யாத் கல்பவ்ருக்ஷஸ்ய சானயே ॥ 27
யதி சக்திஸ்தவ பவேதேவம் ருத்ராக்ஷதாரணுத் । ததா த்வயோக்தமகிலம் ஸத்யமேவ பவிஷ்யதி ॥ 28
இதி தஸ்ய வச:ச்ருத்வா யோகிநோऽயம் மஹீஸுரா: ।
யதி கத்வா புரம் தைவம் யோகாப்யாஸேன கேவலம் ॥ 29
ஆனயிஷ்யஸி புஷ்பாணி த்வமாசு ஸுரசாகின: । ததாஸ்தி மத்க்ருஹே கச்சின் மார்ஜார் சிசுருஜ்வல: 30

வார்த்தை சொல்லியிருக்கிறார்கள். இது ரொம்பக் கஷ்டம் என்றான். இவ்வாறு அரசனுடைய வார்த்தையைக் கேட்டு ஸுப்ரதீபன் பதில் சொன்னான். (19) ஓ ராஜேந்திரா! ருத்திராக்ஷ தாரணமில்லாமல் ஸன்யாஸ ஆசிரமமே இல்லை. ஏனெனில் எல்லா ஆசிரமங்களுக்கும் ருத்திராக்ஷத்தை தரிப்பதே முக்கிய அங்கமாகிறது. (20) ருத்ராக்ஷத்தை தரித்தாலன்றி ஞானத்தால் மட்டில் மோக்ஷம் ஏற்படாதென்று நான்கு வேதங்களும் அன்போடு சொல்லுகின்றன. (21) அன்றியும் ஓ அரசனே! எனக்கு ஓர் நியமமுண்டு, அதைக் கேளும். பாபமற்றவர்களான ருத்ராக்ஷதாரிகளுக்கே நான் அன்னம் போடுகிறேன். (22) ஓ ராஜேந்த்ர, ருத்ராக்ஷத்தைத் தரிப்பவர் யாராயினும் அவர் நமஸ்கரிக்கத் தக்கவர். ஸ்ரீ மஹேச்வரரைப் போல அவரே பூஜிக்கத் தக்கவர். அவரே தர்மாத்மா. (23) மற்ற டாம்பிகர்களுக்கு நான் சிறந்த அன்னம் இடுவதில்லை. அந்த பாபியானவன் ஆச்ரமங்களில் சிறந்தவனாயினும் பூஜிக்கத் தக்கவனல்ல (24) என்றான். ஸுப்ரதீபன் அரசன் முன்னிலையில் சொன்ன வார்த்தையைக் கேட்டு ஸன்யாஸி மிகுந்த கோபத்துடன் பின்னும் உரைத்ததாவது: (25) ஓ ப்ராம்மணரே! எனக்கு ருத்ராக்ஷத்தைத் தரிப்பதால் ஆகவேண்டியதென்ன? அந்த ருத்ராக்ஷத்தை தரிப்பதால் உனக்கு என்ன வந்துவிட்டது? (26) நான் எனது யோக மஹிமையால் இப்பொழுதே உத்தமமான தேவ லோகத்திற்குச் சீக்ரம் சென்று கற்பக வ்ருக்ஷத்தின் புஷ்பங்களைக்கொண்டு வருவேன். (27) ருத்ராக்ஷத்தை தரிப்பதால் உனக்கு இவ்வித திறமை இருக்குமாகில் நீ சொல்லியதெல்லாம் உண்மையேயாகும். (28) இவ்வாறு ஸன்யாஸியின் வார்த்தையைக் கேட்டு பிராமணர் கூறியதாவது: ஓ தபஸ்வியே! நீர் உமது யோகாப்யாஸ பலத்தால் தேவலோகம் சென்று வெறும் கற்பக வ்ருக்ஷத்தின் மலரைக் கொண்டுவருவீராகில் அப்பொழுது எனது வீட்டிலிருக்கும் அழகிய ஓர் பூனைக் குட்டியானது (30) ருத்ராக்ஷங்களைத் தரித்துக்

देवलोकं समासाद्य पूजितस्सकलैस्सुरैः । सुशीघ्रं धृतरुद्राक्षः कल्पवृक्षं सु शोभनम् ॥ ३१
मानयिष्यति रुद्राक्षधारणेनैव सत्यतः । सुप्रतीपवचः श्रुत्वा यतिः कोपाकुलस्तदा ॥ ३२
एवं यदि भवेद्वाक्यं तव विप्र तदादितः । वन्द्यो मम भवान्विप्र भविता नात्र संशयः ॥ ३३
रुद्राक्षधारणं श्रेष्ठं तदा सर्वेषु कर्मसु । उक्त्वैवं योगमार्गस्थः पश्यत्सु सकलेष्वपि ॥ ३४
प्राणानायम्य विधिना खमशिश्रयदुज्वलः । गत्वा सुरपुरं शीघ्रात्कल्पवृक्षप्रसूनकम् ॥ ३५
समानीयागमन्मध्यं सभायां भूमिपाश्रितम् । ददौ प्रसूनं भूपस्य हस्ते तत्सुरशाखिनः ॥ ३६
दृष्ट्वा तदद्भुतं सर्वे महदाश्चर्यसंयुताः । तुष्टुवुस्ते नृपेन्द्राद्यास्सर्वे तत्र सभासदः ॥ ३७
एवं योगिनमानीय कल्पवृक्षप्रसूनकम् । समागतमयं दृष्ट्वा सुप्रतीपो महीसुरः ॥ ३८
स्वपुत्रं प्रेषयामास स्वगृहं प्रति बुद्धिमान् । मार्जारशिशुमानेतुं धृतरुद्राक्षभूषणम् ॥ ३९
स तु शीघ्रं गृहं गत्वा तमानिन्ये सभान्तरे । तं समादाय मार्जारं सुप्रतीपोऽब्रवीद्वचः ॥ ४०
राजन्रुद्राक्षमाहात्म्याद्गत्वा स्वर्लोकमद्भुतम् । मार्जारोऽयं देवतरुं समानेष्यति शीघ्रतः ॥ ४१

தேவலோகம் ஸமாஸாத்ய பூஜிதஸ்ஸகலைஸ்ஸுரை: ।
ஸுசீக்ரம் த்ருதருத்ராக்ஷ: கல்பவ்ருக்ஷம் ஸுசோபனம் ॥ 31
ஆனயிஷ்யதி ருத்ராக்ஷ தாரணேனைவ ஸத்யத: । ஸுப்ரதீபவச: ச்ருத்வா யதி: கோபாகுலஸ்ததா ॥ 32
ஏவம் யதி பவேத் வாக்யம் தவ விப்ர ததாதித: । வந்த்யோ மம பவான்விப்ர பவிதா நாத்ர ஸம்சய: ॥ 33
ருத்ராக்ஷதாரணம் ச்ரேஷ்டம் ததா ஸர்வேஷு கர்மஸு ।
உக்த்வைவம் யோகமார்கஸ்த: பச்யத்ஸு ஸகலேஷ்வபி ॥ 34
ப்ராணாநாயம்ய விதினா கமசிச்ரயதுஜ்வல: । கத்வா ஸுரபுரம் சீக்ராத் கல்பவ்ருக்ஷப்ரஸூனகம் ॥ 35
ஸமாநீயாகமன்மத்யம் ஸபாயாம் பூமிபாச்ரிதம் । ததௌ ப்ரஸூனம் பூபஸ்ய ஹஸ்தே தத்ஸுரசாகின:
த்ருஷ்ட்வா ததத்புதம் ஸர்வே மஹதாச்சர்ய ஸம்யுதா: ।
துஷ்டுவுஸ்தம் ந்ருபேந்த்ராத்யாஸ்ஸர்வே தத்ர ஸபாஸத: ॥ 37
ஏவம் யோகினமாநீய கல்பவ்ருக்ஷப்ரஸூனகம் । ஸமாகதமயம் த்ருஷ்ட்வா ஸுப்ரதீபோ மஹீஸுர: ॥ 38
ஸ்வபுத்ரம் ப்ரேஷயாமாஸ ஸ்வக்ருஹம் ப்ரதிபுத்திமான் । மார்ஜாரசிசுமாநேதும் த்ருதருத்ராக்ஷபூஷணம்
ஸ து சீக்ரம் க்ருஹம் கத்வா தமாநின்யே ஸபாந்தரே ।
தம் ஸமாதாய மார்ஜாரம் ஸுப்ரதீபோऽப்ரவீத் வச: ॥ 40
ராஜன் ருத்ராக்ஷமாஹாத்ம்யாத் கத்வா ஸ்வர்லோகமத்புதம் ।
மார்ஜாரோऽயம் தேவதரும் ஸமாநேஷ்யதி சீக்ரத: ॥ 41

கொண்டு தேவலோகம் சென்று எல்லா தேவர்களாலும் பூஜிக்கப்பட்டு அதி சீக்ரத்தில் மங்களமான கல்ப வ்ருக்ஷத்தையே (31) ருத்ராக்ஷத்தை தரித்த மஹிமையால் ஸத்யமாய்க் கொண்டு வரும் என்றுரைத்த ஸுப்ரதீபனின் வார்த்தையைக் கேட்டு ஸன்யாஸி மிகுந்த கோபமடைந்து (32) ஓ ப்ராம்மணரே, இப்பொழுது நீர் சொல்லியபடி நடத்திவிட்டால் என்னால் வணங்கத் தக்கவராவிர் என்பதில் ஸந்தேஹ மில்லை. (33) மேலும் அப்பொழுது எல்லாக் கர்மாக்களிலும் ருத்ராக்ஷத்தை தரிப்பது மிக உத்தமமாகும் என்று சொல்லிவிட்டு அந்த ஸன்யாஸி எல்லோரும் பார்த்துக்கொண்டிருக்கையில் யோக மார்க்கத்தைக் கடைப்பிடித்து (34) முறைப்படி மூச்சை அடக்கி ஆகாசத்தை அடைந்து ஜ்வலித்துக்கொண்டு தேவ லோகம் சென்று சீக்கிரம் கற்ப வ்ருக்ஷத்தின் மலரை (35) கொண்டுவந்து அரசனுடைய ஸபா மத்தி யத்தை அடைத்து அத்தேவ வ்ருக்ஷத்தின் மலரை அரசன் கையில் கொடுத்தார். (36) அப்பொழுது அங்கிருந்த யாவரும் அவ்வத்புதத்தைக் கண்டு மிகுந்த ஆச்சரியமடைந்தார்கள். அரசன் முதலிய ஸபையில் உள்ள யாவரும் அந்த யோகியை துதித்தார்கள். (37) இவ்வாறாக அந்த யோகீச்வரர் கற்ப வ்ருக்ஷத்தின் மலர் கொண்டுவந்ததைப் பார்த்து மிக புத்திசாலியான ஸுப்ரதீகன் என்ற ப்ராம்மணன் (38) தன் வீட்டிலிருக்கும் ருத்ராக்ஷம் கட்டிய பூனைக்குட்டியைக் கொண்டுவரும்படி தன் புத்திரனை அனுப் பினான். (39) அவனும் சீக்கிரம் வீடு சென்று பூனைக்குட்டியை ஸபையின் நடுவிற்குக் கொண்டுவந்தான். ஸுப்ரதீபன் அப் பூனைக்குட்டியைக் கையில் எடுத்துக்கொண்டு கூறியதாவது : (40) ஓ அரசனே! ருத்ராக்ஷத்தின் மகிமையால் இப்பூனைக்குட்டி தேவலோகத்திற்குச் சென்று சீக்கிரம் கற்ப வ்ருக்ஷத்தையே

इत्युक्त्वा पाणिना विप्रस्तमंबरतलेऽक्षिपत् । तदानीमागतं तत्र विमानमति शोभनम् ॥ ४२
पश्यत्सु तत्र सर्वेषु जनेष्वारुह्य तत्पुनः । स्वर्गलोकं ययौ शीघ्रं मार्जारोऽपि महीसुराः ॥ ४३
तमायान्तं सुराधीशो विज्ञाय सहसा बली । प्रत्यग्रहीत्समारुह्य गजमल्लं स्वसेनया ॥ ४४
अवरुह्य गजात्तूर्णमभ्याशं प्राप्य तस्य च । भक्तिनम्रो विमानस्थं गजस्कंधे विधाय च ॥ ४५
विज्ञायागमनं तस्य मनसा वृत्रहा सुधीः । आघ्राय च शिरस्तस्य नेत्रयोस्तं विधाय च ॥ ४६
स्वीयैराभरणैरेनं समलंकृत्य बुद्धिमान् । विधाय पूजामत्यर्थं पुनस्तंच सुरद्रुमम् ॥ ४७
सुप्रतीपवचश्श्रुत्वा तिष्ठाभ्याशे महात्मनः । उक्त्वैवं वृक्षमतुलं प्रेषयित्वा सुरेश्वरः ॥ ४८
वेदसिद्धाह्वयं देवं प्रेषयित्वाऽमुना सह । मार्जारं तं यथापूर्वं व्योमयाने विधाय च ॥ ४९
प्रणम्य परया प्रीत्या प्रेषयामास देवपः । इत्थं संप्रेषितस्तेन मार्जारोऽयं मरुत्वता ॥ ५०
आरुह्याशु विमानं तत् व्योममार्गमशिश्रयत् । क्षणेन तत्सभामध्यं प्राप ताभ्यां परिष्कृतः ॥ ५१
अवरुह्य विमानात्स्वादभ्याशं द्विजन्मनः । प्रदक्षिणत्रयं कृत्वा प्रणम्य विनयेन च ॥ ५२

இத்யுக்த்வா பாணினு விப்ரஸ்தமம் பரதலேऽக்ஷிபத் । ததானீமாகதம் தத்ர விமானமதி சோபனம் ॥ 42
பச்யத்ஸு தத்ர ஸர்வேஷு ஜனேஷ்வாருஹ்ய தத்புன: ।
ஸ்வர்கலோகம் யயௌ சீக்ரம் மார்ஜாரோऽபி மஹீஸுரா: ॥ 43
தமாயாந்தம் ஸுராதீசோ விக்ஞாய ஸஹஸாபலீ । ப்ரத்யக்ரஹீத் ஸமாருஹ்ய கஜமல்லம் ஸ்வஸேனயா 44
அவருஹ்ய கஜாத்தூர்ணமப்யாசம் ப்ராப்யதஸ்யச । பக்திநம்ரோ விமானஸ்தம் கஜஸ்கந்தே விதாயச 45
விக்ஞாயா கமனம் தஸ்ய மனஸா வ்ருத்ரஹா ஸுதீ: । ஆக்ராயச சிரஸ்தஸ்ய நேத்ரயோஸ்தம் விதாயச 46
ஸ்வீயைராபரணைரேனம் ஸமலங்க்ருத்ய புத்திமான் । விதாய பூஜாமத்யர்தம் புனஸ்தஞ்ச ஸுரத்ருமம் 47
ஸுப்ரதீப வச: ச்ருத்வா திஷ்டாப்யாசே மஹாத்மன: ।
உக்த்வைவம் வ்ருக்ஷமதுலம் ப்ரேஷயித்வா ஸுரேச்வர: ॥ 48
வேதசித்தாஹ்வயம் தேவம் ப்ரேஷயித்வாऽமுனா ஸஹ ।
மார்ஜாரம் தம் யதாபூர்வம் வ்யோமயானே விதாயச ॥ 49
ப்ரணம்ய பரயா ப்ரீத்யா ப்ரேஷயாமாஸ தேவப: ।
இத்தம் ஸம்ப்ரேஷிதஸ்தேன மார்ஜாரோऽயம் மருத்வதா ॥ 50
ஆருஹ்யாசு விமானம் தத்வ்யோமமார்கமசிச்ரயத் ।
க்ஷணேன தத்ஸபாமத்யம் ப்ராபதாப்யாம் பரிஷ்க்ருத: ॥ 51
அவருஹ்ய விமானாத்ஸ்வாதப்யாசம் த்விஜஜன்மன: । ப்ரதக்ஷிணத்ரயம் க்ருத்வா ப்ரணம்ய வினயேனச

கொண்டுவரப் போகிறது (41) என்று சொல்லி அப்பூனையைக் கையால் ஆகாயத்தில் எறிந்தான். அப்பொழுது அங்கு மங்களமான ஓர் சிறந்த விமானம் வந்தது. (42) அங்கிருந்த ஜனங்கள் யாவரும் பார்த்துக்கொண்டிருக்கையில் பூனைக்குட்டி அவ்விமானத்திலேறிக்கொண்டு சீக்கிரம் ஸ்வர்கலோகம் சென்றது. ஓ சௌனகாதி முனிவர்களே ! (43) அப்பொழுது பலவானான தேவராஜனும் அப்பூனைக்குட்டி வருவதை அறிந்து சீக்கிரம் தனது சிறந்த ஐராவதத்தின்மீது ஏறிக்கொண்டு ஸேனைகளோடு அதை எதிர்கொண்டு சென்றான். (44) அதனருகில் சென்றவுடன் சீக்கிரம் யானையை விட்டிறங்கி பக்தியால் வணங்கியவனாகி அப்பூனைக்குட்டியை யானையின் கழுத்தில் வைத்துக்கொண்டு புத்திசாலியான இந்திரன் அது வந்த கார்யத்தை மனதினால் அறிந்து அதை எடுத்து முத்தமிட்டு தன் தலைமேல் வைத்துக்கொண்டு கண்களில் ஒத்திக்கொண்டு (46) தனது ஆபரணங்களால் அதை அலங்கரித்து நன்கு பூஜித்து பின்பு கற்ப வ்ருக்ஷத்தைப் பார்த்து (47) ஓ கற்ப வ்ருக்ஷமே! மஹாத்மாவாகிய ஸுப்ரதீபர் சொல்வதைக் கேட்டுக் கொண்டு அவர் ஸமீபத்திலிருக்க வேண்டுமென்று சொல்லி நிகரற்ற கற்ப வ்ருக்ஷத்தை அனுப்பி (48) அதோடுகூட வேதஸித்தன் என்ற தேவனை அனுப்பிவிட்டு பூனைக்குட்டியையும் முன் போல் விமானத்தில் ஏற்றிவைத்து நமஸ்கரித்து மிகுந்த ஸந்தோஷத்துடன் அனுப்பினான். பிறகு அப்பூனைக்குட்டியும் இவ்விதம் இந்திரனால் அனுப்பப்பட்டு (50) விமானத்திலேறிக்கொண்டு சீக்ரம் ஆகாய மார்க்கமாய்ச் சென்று வேதஸித்தன் கற்பக வ்ருக்ஷத்தோடு ப்ரகாசிக்கின்றதாகி ஓர் க்ஷணத்தில் அரசனுடைய ஸபையின் நடுவை அடைந்தது. (51) விமானத்திலிருந்து இரங்கி ஸுப்ரதீபன் அருகில் வந்து அவரை மும்முறை ப்ரதக்ஷிணம் செய்து வணக்கத்துடன் நமஸ்கரித்து (52) அந்த ராஜ ஸபை

तस्यौ तस्याग्रतस्तस्यां सभायां ब्राह्मणोत्तमाः । भक्त्या प्रदक्षिणीकृत्य वेदसिद्धाह्वयोऽमरः ॥ ५३
प्रणम्य सुप्रतीपं तं जगादेन्द्रं वचस्तदा । निष्कण्टकमहं स्वर्गं कृपया तव केवलम् ॥ ५४
पालयामि सदा स्मृत्वा भवन्तं त्वां शिवप्रियम् । इति देवेन्द्रवचनमुक्त्वाऽयं पूजितोऽमुना ॥ ५५
स्वर्गं तदनुमत्याशु विमानेनाप सोऽमरः । कल्पद्रुमोऽपि तं विप्रं विधाय त्रिःप्रदक्षिणम् ॥
प्रणम्य परया भक्त्या तस्थे तस्याग्रतो द्विजाः ॥ ५६

इति श्री स्कान्दे महापुराणे शंकरसंहितायां शिवरहस्यखण्डे
उपदेशकाण्डे पञ्चदशोऽध्यायः ॥

॥ अथ षोडशोऽध्यायः ॥

श्री रुद्राक्षधारणमहिम्ना मार्जारशिशोः देवलोके इन्द्रसत्कारः ॥

दृष्ट्वैतदखिलं राजा विस्मयाविष्टमानसः । उत्थाय तरसा विप्रं प्रणम्य विनयेन च ॥ १
भयेन च समाविष्टो मार्जारं वीक्ष्य तं तदा । प्राप्तस्त्वया कथं स्वर्गस्तत्रेन्द्रेण च किं कृतम् ॥ २

தஸ்தௌ தஸ்யாக்ரதஸ்தஸ்யாம் ஸபாயாம் ப்ராம்ஹணோத்தமா:
பக்த்யா ப்ரதக்ஷிணீக்ருத்ய வேதஸித்தாஹ்வயோऽமர: ॥ 53
ப்ரணம்ய ஸுப்ரதீபம் தம் ஜகாதைந்த்ரம் வசஸ்ததா ।
நிஷ்கண்டமஹம் ஸ்வர்கம் க்ருபயா தவ கேவலம் ॥ 54
பாலயாமி ஸதா ஸ்ம்ருத்வா பவந்தம் த்வாம் சிவப்ரியம் ।
இதி தேவேந்த்ரவசன முக்த்வாऽயம் பூஜிதோऽமுனா ॥ 55
ஸ்வர்கம் ததனுமத்யாऽசு விமானேநாப ஸோமர: ।
கல்பத்ருமோऽபி தம் விப்ரம் விதாய த்ரி:ப்ரதக்ஷிணம் ॥
ப்ரணம்ய பரயா பக்த்யா தஸ்தே தஸ்யாக்ரதோ த்விஜா: ॥ 56

இதி ஸ்ரீஸ்காந்தே மஹாபுராணே சங்கரஸம்ஹிதாயாம் சிவரஹஸ்யகண்டே
உபதேசகாண்டே பஞ்சதசோऽத்யாய:

॥ அத ஷோடஶோऽத்யாய: ॥

ஸ்ரீ ருத்ராக்ஷத்தின் பெருமையால் ஸ்வர்கத்தில் பூனைக்கு இந்திரனின் உபசாரம்

த்ருஷ்ட்வைததகிலம் ராஜா விஸ்மயாவிஷ்டமானஸ: । உத்தாய தரஸா விப்ரம் ப்ரணம்ய வினயேதச ॥ 1
பயேன ச ஸமாவிஷ்டோ மார்ஜாரம் வீக்ஷ்ய தம் ததா ।
ப்ராப்தஸ்த்வயா கதம் ஸ்வர்கஸ்தத்ரேந்த்ரேண ச கிம் க்ருதம் ॥ 2

யின் முன்னால் வந்து நின்றது. ஓ ப்ராம்மணோத்தமர்களே, வேதஸித்தன் என்ற தேவனும் ஸுப்ரதீபனை ப்ரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து அப்பொழுது இந்திரனால் சொல்லப்பட்ட வார்த்தைகளைக் கூறினான். ஸ்ரீ பரமேச்வரனுக்குப் பிரியரான தங்களுடைய தயவால் தங்களை எப்பொழுதும் மனதினால் நினைத்துக் கொண்டு பகைவர்கள் அற்றவனாய் ஸ்வர்க்கத்தை ஆண்டு வருகிறேன் என்ற தேவேந்திரனின் வார்த்தையைச் சொல்லியவுடன் ஸுப்ரதீபனால் பூஜிக்கப்பட்டு (55) அவனிடம் விடை பெற்று விமானத்தில் ஏறிக் கொண்டு சீக்கிரம் ஸ்வர்க்கலோகம் அடைந்தான். ஓ வேதியர்களே, கற்பக வ்ருக்ஷமும் பக்தியோடு ஸுப்ரதீபரை மூன்று ப்ரதக்ஷிணங்கள் செய்து மிகுந்த பக்தியுடன் நமஸ்கரித்து அவர் முன்னிலையில் நின்றது. (56)

பதினைந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

பதினாறாவது அத்தியாயம்.

அரசன் இவை யாவற்றையும் கண்டு மிகுந்த ஆச்சரியமடைந்த மனமுடையவனாய் சீக்கிரம் எழுந்து ஸுப்ரதீபனைப் பணிவுடன் வணங்கி (1) பயத்துடன் கூடியவனாய் அப் பூனைக்குட்டியைப் பார்த்து நீ எவ்வாறு ஸ்வர்க்கம் சென்றாய்? இந்த்ரன் அங்கு உனக்கு என்ன செய்தான்? (2) மேலும்

किमुक्तं वचनं ब्रूहि मार्जार वद तत्त्वतः । इति राज्ञो वचश्श्रुत्वा सुप्रतीपश्शिवं स्मरन् ॥ ३
स्वर्गलोकस्त्वया प्राप्तो दृष्टश्च सुरपुङ्गवः । पूजितस्तेन मार्जार शिशो तत्त्वं शिवाज्ञया ॥ ४
मुक्त्वाशु वचनाच्छक्तिं वद सर्वं सदुत्तरम् । इति ब्रुवति विप्रेन्द्रे तस्मिन्रुद्राक्षभूषणे ॥ ५
मार्जारोऽपि समुत्थाय बद्धाञ्जलिपुटोऽब्रवीत् । आरुह्य सुन्दरं दिव्यं विमानमहमुज्ज्वलम् ॥ ६
स्वर्गमापं सुरेशो मां द्रष्टुं प्रत्यग्रहीन्मुदा । ततस्ससंभ्रमं दृष्ट्वा चावरुह्य गजाद्द्रुतम् ॥ ७
पाणिभ्यां मां समालिंग्य शिरश्चाघ्राय भक्तितः । गजस्कन्धं समारोप्य भूषयन् भूषणैः स्वकैः ॥ ८
वृत्तान्तमखिलं ज्ञात्वा कल्पवृक्षामरावुभौ । योजयित्वा मया साकं विधायापचितिं पराम् ॥ ९
प्रेषयामास मतिमान् भक्त्या परमया सह । तदानीं तस्य महिषी शची प्रोवाच देवपम् ॥ १०
मार्जारोऽयमिमां पूजां कथमर्हति देवप । कोऽयं समागतः कस्माद्देशादेतद्वद प्रभो ॥ ११
इति तस्या वचः श्रुत्वा सुरेशः प्राह तां पुनः । बिभर्त्ययं परं पुण्यं रुद्राक्षं रुद्रभूषणम् ॥ १२
स एव धन्यः पूज्योऽपि सर्वैर्देवैश्च मानुषैः । धार्यते येन रुद्राक्षं देहिनां पावनं प्रिये ॥ १३

किमुक्तम् वचनम् ब्रूहि मार्ज्जारवत तत्त्वत: ।
इति राक्ञो वचश्च्रुत्वा सुप्रतीपश्च्शिवम् स्मरन् ॥ 3
स्वर्कलोकस्त्वया प्राप्तो त्रुष्टश्च सुरपुंगव: ।
पूजितस्तेन मार्ज्जारशिशो तत्त्वम् शिवाज्ञया ॥ 4
मुक्त्वाशु वचनच्शक्तिम् वद सर्वम् सदुत्तरम् ।
इति ब्रुवति विप्रेन्द्रे तस्मिन् रुद्राक्ष भूषणे ॥ 5
मार्ज्जारोऽपि समुत्थाय बद्धाञ्जलि पुटोऽब्रवीत् ।
आरुह्य सुन्दरम् दिव्यम् विमानमहमुज्वलम् ॥ 6
स्वर्गमापं सुरेशो मां द्रष्टुं प्रत्यग्रहीन्मुदा ।
ततस्ससंभ्रमम् दृष्ट्वा चावरुह्य गजाद्द्रुतम् ॥ 7
पाणिभ्याम् मां समालिंग्य शिरश्चाघ्राय भक्तित: ।
गजस्कन्धम् समारोप्य भूषयन् भूषणै: स्वकै: ॥ 8
वृत्तान्तमखिलम् ज्ञात्वा कल्पवृक्षामरावुभौ ।
योजयित्वा मया साकम् विधायापचितिम् पराम् ॥ 9
प्रेषयामास मतिमान् भक्त्या परमया सह । तदानीम् तस्य महिषी शची प्रोवाच देवपम् ॥ 10
मार्ज्जारोऽयमिमाम् पूजाम् कथमर्हति देवप । कोऽयम् समागत: कस्माद्देशादेतद्वद प्रभो ॥ 11

इति तस्या वच: च्रुत्वा सुरेश: प्राह तां पुन: ।
बिभर्त्ययम् परम् पुण्यम् रुद्राक्षम् रुद्रभूषणम् ॥ 12
स एव धन्य: पूज्योऽपि सर्वैर्देवैश्च मानुषै: ।
धार्यते येन रुद्राक्षम् देहिनाम् पावनम् प्रिये ॥ 13

என்ன சொன்னான்? இவை யாவற்றையும் உண்மையாய்ச் சொல்லவேண்டும் என்ற அரசனின் வார்த்தையைக் கேட்டு ஸுப்ரதீபர் ஸ்ரீ பரமேச்வரனை மனதில் தியானித்துக் கொண்டு (3) ஓ பூனைக்குட்டியே, நீ ஸ்வர்க்கம் சென்றதையும், தேவேந்த்ரனைப் பார்த்ததையும், நீ அவனால் பூஜிக்கப்பட்டதையும், நீ சிவனின் கட்டளைப்படி உண்மையாகச் சொல்ல வேண்டும் என்று சொன்னவுடன் அதற்குப் பேசும் சக்தி ஏற்பட்டது. ருத்ராக்ஷங்களை ஆபரணமாகக் கொண்ட ஸுப்ரதீபர் இவ்வாறு சொன்னவுடன் (5) பூனைக்குட்டி எழுந்து கைகூப்பிக்கொண்டு சொன்னதாவது: ஓ ராஜேந்த்ர! நான் மிகுந்த அழகுள்ளதும், ப்ரகாசிக்கின்றதுமான திவ்ய விமானத்தில் ஏறிக்கொண்டு (6) ஸ்வர்க்க லோகம் சென்றவுடன் தேவராஜன் என்னைப் பார்ப்பதற்காக எதிர்கொண்டு வந்தான். பிறகு என்னைப் பார்த்து பரபரப்புடன் சீக்கிரம் ஐராவதத்தை விட்டிறங்கி (7) பக்தியுடன் என்னைத் தழுவி முத்தமிட்டு உச்சி முகர்ந்து யானையின் கழுத்தில் ஏற்றி வைத்து தனது ஆபரணங்களால் என்னை அலங்கரித்து (8) மேன்மையாகப் பூஜித்து நான் வந்த வரலாறுகளை அறிந்துகொண்டு புத்திசாலியான இந்த்ரன் பக்தியோடு கற்பக வ்ருக்ஷத்தையும் ஓர் தேவனையும் என்னுடன் சேர்த்து அனுப்பினான். அப்பொழுது அவன் மனைவியான இந்த்ராணி தேவராஜனைப் பார்த்து கூறியதாவது: (10) ஓ தேவேந்த்ர, இந்த பூனையானது இப்பேர்ப்பட்ட பூஜையைச் செய்வதற்கு எவ்வாறு தகுதி வாய்ந்ததாகும்? இது யார்? எங்கிருந்து வந்திருக்கிறது? என்பதையும் சொல்லவேண்டும். (12) என்ற இந்த்ராணியின் வார்த்தையைக் கேட்டு இந்த்ரன்

न ज्ञायते त्वया किंवा रुद्राक्षमहिमा प्रिये । अत्र पुण्यां कथां मत्तः शृणुष्वावहिता प्रिये ॥ १४
पूर्वेद्युश्शङ्करं प्राप्य प्रेतराट्सहकिङ्करैः । प्रणम्य परया भक्त्या मन्दरे चारुकन्दरे ॥ १५
पृष्टः प्रोवाच देवेन स्वस्यागमनमत्र च । धर्मः — जय शंभो महादेव भक्तवत्सल विश्वप ॥ १६
त्वयैवेदं पुरा दत्तं पदं मम महेश्वर । क्रियते च मया पूजा भक्तानां तव पावनी ॥ १७
भवाब्धिपोते भगवंस्त्वयि ये विमुखा जनाः । पीड्यन्ते पापिनस्तेवै नरके दुःखसागरे ॥ १८
त्वया कृता च मर्यादा कुत्रवा वितथा भवेत् । धर्माधर्माह्वयौ मार्गौ कल्पितौ भवता प्रभो ॥ १९
सुखं धर्मफलं शंभो दुःखं पापफलं तथा । विनिर्मितं भगवता देवदेवेन शङ्कर ॥ २०
तद्धेतुस्स्वर्गनरकौ भवतैवहि कल्पितौ । तदत्र मामकैर्दूतैः पीडितं नरके भृशम् ॥ २१
महापापिनमासाद्य भवदीयगणाः प्रभो । दिव्यं विमानमारोप्य नानारत्नचिचित्रितम् ॥ २२
सन्ताड्य मामकान् दूतान् कैलासं निन्युरे वत । इति ब्रुवति कीनाशे भयाकुलितमानसे ॥ २३
प्राह गंभीरया वाचा भैरवस्तं शिवाग्रतः । किमस्य पुण्यं मतिमन्नास्ति कीनाश शोभनम् ॥ २४

ந க்ஞாயதே த்வயா கிம் வா ருத்ராக்ஷ மஹிமா ப்ரியே ।
அத்ர புண்யாம் கதாம் மத்தச்ச்ருணுஷ்வா வஹிதா ப்ரியே ॥ 14
பூர்வேத்யுச்சங்கரம் ப்ராப்ய ப்ரேதராட்ஸஹகிங்கரை: । ப்ரணம்ய பரயா பக்த்யா மந்தரே சாருகந்தரே 15
ப்ருஷ்ட: ப்ரோவாச தேவேன ஸ்வஸ்யாகமன மத்ரச ।
தர்ம: — ஜய சம்போ மஹாதேவ பக்தவத்ஸல விச்வப ॥ 16
த்வயைவேதம் புராதத்தம் பதம் மம மஹேச்வர । க்ரியதேச மயா பூஜா பக்தானும் தவ பாவனீ ॥ 17
பவாப்திபோதே பகவன் த்வயியே விமுகாஜனு: । பீட்யந்தே பாபினஸ்தேவை நரகே து:கஸாகரே ॥ 18
த்வயா க்ருதாச மர்யாதா குத்ரவா விததா பவேத் ।
தர்மாதர்மாஹ்வயௌ மார்கௌ கல்பிதௌ பவதா ப்ரபோ ॥ 19
ஸுகம் தர்மபலம் சம்போ து:கம் பாபபலம் ததா । வினிர்மிதம் பகவதா தேவ தேவேன சங்கர ॥ 20
தத்தேதுஸ் ஸ்வர்கநரகௌ பவதைவஹி கல்பிதௌ । ததத்ரமாமகைர் தூதைர் பீடிதம் நரகே ப்ருசம் 21
மஹாபாபிநமாஸாத்ய பவதீயகணு: ப்ரபோ । திவ்யம் விமானமாரோப்ய நாநாரத்ன விசித்ரிதம் ॥ 22
ஸந்தாட்யமாமகான் தூதான் கைலாஸம் நின்யுரே பத । இதி ப்ருவதி கீநாசே பயாகுலிதமானஸே ॥ 23
ப்ராஹ கம்பீரயா வாசா பைரவஸ்தம் சிவாக்ரத: । கிமஸ்ய புண்யம் மதிமன்நாஸ்திகீநாச சோபனம் ॥ 24

அவனைப் பார்த்துச் சொன்னான். ஓ தேவி, இப்பூனையானது ருத்ரனுக்கு ஆபரணமும் சிறந்ததும் புண்யமுமான ருத்ராக்ஷத்தைக் கட்டிக்கொண்டிருக்கிறது. (13) ஓ அன்புள்ளவளே, ப்ராணிகளில் எவர் மிகப் பரிசுத்தமான ருத்ராக்ஷத்தைத் தரிக்கிறாரோ அவரே பாக்யவான். அவரே எல்லா தேவர்களாலும் மனுஷ்யர்களாலும் பூஜிக்கத் தக்கவர். (14) ஓ அன்பு வாய்ந்தவளே, ருத்ராக்ஷத்தின் மகிமையை நீ அறியமாட்டாயா? அதைப்பற்றி நான் ஓர் புண்ய கதையைச் சொல்லுகிறேன். கவனமாய்க் கேள். (15) நேற்றையதினம் அழகிய குகைகளை உடைய மந்தர பர்வதத்தில் பரமசிவனை யமதர்மராஜன் தனது தூதர்களோடு வந்து அடைந்து மிகுந்த பக்தியோடு அவரை வணங்கி (16) தான் இங்கு வந்த வரலாற்றை பரமேச்வரனால் கேட்கப்பட்டு கூறியதாவது: ஓ சம்புவே, ஓ மஹாதேவ, பக்தர்களிடம் அன்பு கொண்டவரே, உலகங்களைக் காப்பவரே, தாங்கள் ஜயத்துடன் வாழவேண்டும். (17 ஓ மஹேச்வர, தங்களால்தான் முன்பு எனக்கு இந்த பதவி கொடுக்கப்பட்டது. நான் தங்களுடைய பக்தர்களுக்கெல்லாம் சிறந்த பூஜை செய்து வருகிறேன். (18) ஸம்ஸாரமாகிய ஸமுத்ரத்திற்குத் தெப்பம் போன்ற ஸ்ரீபகவானே, தங்களிடம் பராமுகமாயிருக்கிற ஜனங்கள் எல்லாம் துக்கக் கடலான நரகத்தில் கஷ்டப்பட்டு வருகிறார்கள். (19) தங்களால் செய்யப்பட்ட சட்டமானது எங்குதான் மீறத் தகும்? ஓ ப்ரபு! வேதங்களால் தர்மமென்றும் அதர்மமென்றும் இரு வழிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. (20) ஓ சங்கர! தேவாதி தேவனான தங்களால் தர்மத்தின் பயனாக ஸுகமும், அதர்மத்தின் பயனாக துக்கமும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. (21) மேலும் அந்த ஸுக துக்கங்களை அனுபவிப்பதற்காக ஸ்வர்க்கமும் நரகமும் தங்களாலேயே உண்டாக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் எனது தூதர்களால் நரகத்தில் மிகுதியாய் ஹிம்ஸிக்கப்படுகின்ற (22) ஓர் மஹாபாபியை ஓ ப்ரபுவே, தங்களுடைய கணங்கள் வந்து பல ரத்னங்களால் விசித்ரமான ஓர் திவ்ய விமானத்தில் ஏற்றிக்கொண்டு (23) எனது தூதர்களையும் அடித்து அவனை கைலாஸத்திற்கு அழைத்துச் சென்றார்கள். இது மிகுந்த கஷ்டம். இவ்வாறு யமன் பயத்தால் கலங்கிய

इह जन्मनि सत्यं त्वं वदात्र शिवसन्निधौ । इति तस्य वचश्श्रुत्वा भैरवस्य स धर्मराट् ॥ २६
चित्रगुप्तं निजाभ्याशे स्थितं दक्षंजयावदत् । चित्रगुप्तस्ततो देवं प्रणम्याञ्जलि हस्तवान् ॥ २७
जगाद भैरवं वीक्ष्य प्रश्रयावनतः पुरः । प्रसीद देवदेवेश करुणाकर भैरव ॥ २८
देशे कलिङ्गसंज्ञे यत्पुरं व्याघ्राभिधं महत् । तत्रास्तेऽयं महापापी जामित्राख्यो महाखलः ॥ २९
जारजस्यास्य पापस्य जननी व्यभिचारिणी । जारौषधवशात्पापामृतैषा किल देवप ॥ ३०
जारेण रक्षितः पापी जनकेनैवदुष्टधीः । कालेन यौवने प्राप्ते महाव्यामोहकारणे ॥ ३१
चौर्यं कृत्वापि दुष्टात्मा कामबाणेन पीडितः । दासीसंगरतो नित्यं सवयोभिश्च तादृशैः ॥ ३२
द्रव्याभावात्पुनः कस्मिन् दिवसे जनकंचतम् । जघान वतपापिष्ठः कपटेन दुरात्मवान् ॥ ३३
मद्यपायी सदा तद्वन्मांसभोज्यतिवञ्चकः । स्तेयं कुर्वन् दिने कस्मिन् दृष्टोऽयं ग्रामपालकैः ॥ ३४
ताडितः पीडितो नित्यं निहतः पितृकानने । नकिञ्चिदस्य पापस्य पुण्यम् जन्मनि विद्यते ॥ ३५

இஹ ஜன்மனி ஸத்யம் த்வம் வதாத்ர சிவஸன்னிதௌ ।
இதி தஸ்ய வசச்ச்ருத்வா பைரவஸ்ய ஸ தர்மராட் ॥ 26
சித்ரகுப்தம் நிஜாப்யாசே ஸ்திதம் த்ருக்ஸம்ஞயாऽவதத் ।
சித்ரகுப்தஸ்ததோ தேவம் ப்ரணம்யாஞ்ஜலி ஹஸ்தவான் ॥ 27
ஜகாத பைரவம் வீக்ஷ்ய ப்ரச்ரயாவனத: புர: । ப்ரஸீத தேவதேவேச கருணாகர பைரவ ॥ 28
தேசே கலிங்கஸம்ஞேயத்புரம் வ்யாக்ராபிதம் மஹத் ।
தத்ராஸ்தேऽயம் மஹாபாபீ ஜாமித்ராக்யோ மஹாகல: ॥ 29
ஜாரஜஸ்யாஸ்ய பாபஸ்ய ஜனனீ வ்யபிசாரிணீ । ஜாரௌஷதவசாத் பாபா ம்ருதைஷாகில தேவப ॥ 30
ஜாரேண ரக்ஷித: பாபீ ஜனகேனைவ துஷ்டதீ: ।
காலேன யௌவனே ப்ராப்தே மஹாவ்யாமோஹ காரணே ॥ 31
சௌர்யம் க்ருத்வாபி துஷ்டாத்மா காமபாணேன பீடித: ।
தாஸீஸங்கரதோ நித்யம் ஸவயோபிச்ச தாத்ருசை: ॥ 32
த்ரவ்யாபாவாத் புன: கஸ்மின் திவஸே ஜனகஞ்ச தம் । ஜகான பத பாபிஷ்ட: கபடேன துராத்மவான் 33
மத்யபாயீ ஸதா தத்வன் மாம்ஸ போஜ்யதிவஞ்சக: ।
ஸ்தேயம் குர்வன் தினேகஸ்மின் த்ருஷ்டோऽயம் க்ராமபாலகை: 34
தாடித: பீடிதோ நித்யம் நிஹத: பித்ருகானனே । ந கிஞ்சிதஸ்ய பாபஸ்ய புண்யம் ஜன்மனி வித்யதே 35

மனமுடையவனாய் சொன்னவுடன் (24) ஸ்ரீ பைரவமூர்த்தியானவர் பரமேச்வரன் முன்னிலையில் இந்த யமனைப் பார்த்து கம்பீரமான வாக்குடன் கூறியதாவது: ஓ புத்திசாலியான தர்மனே, இவனுக்கு இந்த ஜன்மத்தில் மங்களத்தைக் கொடுக்கும் புண்யமானது என்ன இல்லை? அதை நீ இப்பொழுது ஸ்ரீ பரமேச்வரன் ஸன்னிதியில் உண்மையாகச் சொல் என்ற அப்பைரவரின் வார்த்தையைக் கேட்டவுடன் தர்மராஜன் (26) தன் ஸமீபத்தில் நின்ற சித்ரகுப்தனை கண் ஜாடை செய்தான். பிறகு சித்ரகுப்தன் பைரவரை நமஸ்கரித்து கைகூப்பிக்கொண்டு அவர் முன்னிலையில் அவரைப் பார்த்தவாறு பயத்தினால் வணக்கமுற்றவனாய்க் கூறியதாவது: ஓ தேவாதிதேவ! கருணைக் கடலான பைரவமூர்த்தியே! தாங்கள் எனக்கு அருள் புரியவேண்டும். (28) கலிங்க தேசத்தில் உள்ள வ்யாக்ரபுரமென்ற பெரிய பட்டணத்தில் மிகக் கொடியவனாகிய ஜாமித்ரன் என்ற இந்த மஹாபாபி இருந்து வந்தான். கள்ளப் புருஷனுக்குப் பிறந்தவனான இப் பாதகனுடைய தாயானவள் ஓர் வ்யபிசாரி. ஓ தேவரக்ஷக! இப்பாவியானவள் கள்ளப் புருஷனால் மருந்திடப்பட்டு மரித்தாள். (30) கொடிய புத்தியை உடைய இப்பாதகன் கள்ள புருஷனான தகப்பனால் ரக்ஷிக்கப்பட்டு வந்தான். நாளடைவில் இவனுக்கு மிகுந்த மோஹத்தை உண்டு பண்ணும் யௌவனம் வந்தபோது (31) இந்த துராத்மா, மன்மத பாணங்களால் பீடிக்கப்பட்டவனாகி, ஸமவயதுகொண்ட தன்னைப்போன்ற பல தோழர்களுடன் திருட்டுச் செயல் புரிந்தும், தாஸிகளோடு சேருவதில் விருப்பமுள்ளவனாகவுமிருந்துவந்தான். (32) ஒரு நாள் அவனுக்கு பணமில்லாத பொழுது மஹாபாபியான அந்த துராத்மா கபடமாய் தகப்பனைக் கொன்றான். (33) மேலும், அவன் எப்பொழுதும் மத்யபானம் செய்கிறவனாயும், மாம்ஸங்களை புஜிப்பவனாகவும், மிக்க வஞ்சகனாகவுமிருந்து வந்தான். இப்படியிருக்கையில் ஒரு நாள் அவன் திருடும்பொழுது, கிராமக் காவலர்கள் கண்டு, அவனைப்

दिनान्यपिच चत्वारि मृतस्यासन् जगत्प्रभो । बाधितो नितरां दूतैरस्मदीयैरयं प्रभो ॥ ३६
सन्ताड्य तान् भृशं दूतान् भवदीया महेश्वर । मोचयित्वा दुरात्मानं कैलासं निन्यिरे प्रभो ॥ ३७
न किञ्चिदपि जानेऽहं पुण्यमस्य दुरात्मनः । इत्युक्त्वा चित्रगुप्तोऽयं तस्थे बद्धाञ्जलिःपुरः ॥ ३८
तमाह भैरवो वीक्ष्य चित्रगुप्तं सयन्निव । चक्रवाकस्य भूपस्य सुता सर्वांगसुन्दरी ॥ ३९
सस्नौ गृहे स्वकीये सा हारयष्टिं मनोहराम् । निधाय मल्लिकावल्यां रुद्राक्षप्रोतमध्यमाम् ॥ ४०
गृहीत्वोड्डीय तां काकः कश्चिद्गगनमार्गतः । अभ्यागतस्तदाछिन्ना हारयष्टिर्मनोहरा ॥ ४१
तदा तन्मध्यरुद्राक्षमेतस्य छिन्नमूर्धनि । पपात किल पुण्येन केनाप्यस्यातिपावनम् ॥ ४२
निमग्नं रक्तसंस्पर्शात्तिष्ठत्यद्यापि चान्तक । तेन पुण्येन कैलासं प्राप्तवानयमन्तक ॥ ४३
अहो रुद्राक्षमाहात्म्यं मया वक्तुं न शक्यते । स वेत्तिरुद्रो भगवान् भक्तरुद्रावको न वा ॥ ४४
तदेतत्सर्वमाकर्ण्य शैलादिरुषितोऽवदत् (हर्षितांगवान्) । तिष्ठते देहिनो यस्य देहे रुद्राक्षमुत्तमम् ॥ ४५

திநான்யபி ச சத்வாரிம்ருதஸ்யாஸன் ஜகத் ப்ரபோ । பாதிதோ நிதராம் தூதைரஸ்மதீயைரயம் ப்ரபோ 36

ஸந்தாட்ய தான் ப்ருசம் தூதான் பவதீயா மஹேச்வர ।
மோசயித்வா துராத்மானம் கைலாஸம் நிந்யிரே ப்ரபோ ॥ 37

ந கிஞ்சிதபி ஜானேऽஹம் புண்யமஸ்ய துராத்மன: ।
இத்யுக்த்வா சித்ரகுப்தோऽயம் தஸ்தே பத்தாஞ்ஜலி: புர: ॥ 38

தமாஹ பைரவோ வீக்ஷ்ய சித்ரகுப்தம் ஸ்மயன்னிவ ।
சக்ரவாகஸ்ய பூபஸ்ய ஸுதா ஸர்வாங்க ஸுந்தரீ ॥ 39

ஸஸ்னௌ க்ருஹே ஸ்வகீயே ஸா ஹாரயஷ்டிம் மனோஹராம் ।
நிதாய மல்லிகாவல்யாம் ருத்ராக்ஷ ப்ரோதமத்யமாம் ॥ 40

க்ருஹீத்வோட்டீயதாம் காக: கச்சித் ககனமார்கத: ।
அப்யாகதஸ்ததா சின்ன ஹாரயஷ்டிர் மனோஹரா ॥ 41

ததா தன்மத்ய ருத்ராக்ஷமேதஸ்ய சின்னமூர்தனி । பபாத கில புண்யேன கேனாப்யஸ்யாதி பாவனம் ॥ 42

நிமக்னம் ரக்தஸம்ஸ்பர்சாத் திஷ்டத்யத்யாபி சாந்தக ।
தேன புண்யேன கைலாஸம் ப்ராப்தவானய மந்தக ॥ 43

அஹோ ருத்ராக்ஷ மாஹாத்ம்யம் மயா வக்தும் ந சக்யதே ।
ஸ வேத்தி ருத்ரோ பகவான் பக்த ருத்ராவகோ ந வா ॥ 44

ததேதத்ஸர்வமாகர்ண்ய சைலாதிருஷிதோऽவதத் ।
திஷ்டதே தேஹிநோ யஸ்ய தேஹே ருத்ராக்ஷ முத்தமம் ॥ 45

பிடித்து, (34) அடித்து, நாள்தோறும் ஹிம்ஸித்து பிறகு கொன்று சுடுகாட்டில் போட்டுவிட்டார்கள். இப்பாதகனுக்கு இந்த ஜன்மத்தில் யாதொரு புண்யமும் காணப்படவில்லை. ஓ ஜகதீசா, அவன் இறந்து நான்கு தினங்கள் ஆகிவிட்டன. அவன் எனது தூதர்களால் மிகவும் துன்புறுத்தப்படுகையில் (36) ஓ மஹேச்வரா! தங்கள் தூதர்கள் வந்து எங்களுடைய தூதர்களை நன்கு அடித்து, இந்த துராத்மாவை விடுவித்து கைலாஸத்துக்குகொண்டு சென்றார்கள் ஓ ப்ரபோ! (37) இத்துராத்மாவிற்கு கொஞ்சமேனும் புண்யமிருப்பதாக எனக்குத் தெரியவில்லை, என அறிவித்துக்கொண்டு சித்ரகுப்தன் பைரவர் முன்னிலையில் அஞ்சலி செய்துகொண்டு நின்றான். (38) அப்பொழுது பைரவர் சித்ரகுப்தனைப் பார்த்து, மந்தஹாஸம் செய்துகொண்டு கூறியதாவது. ஓ சித்ரகுப்தனே, எல்லா அவயவங்களிலும் அழகுவாய்ந்த சக்ரவாக அரசனின் பெண்ணானவள் தனது அரண்மனையில் நடுவில் ருத்ராக்ஷம் கோர்க்கப்பட்ட அழகிய ரத்ன மாலையை மல்லிகைக் கொடியின் மேல் வைத்துவிட்டு ஸ்நானம் செய்துகொண்டிருந்தாள். (40) அப்பொழுது ஓர் காக்கையானது அதை எடுத்துக்கொண்டு உயரப் பறந்து ஆகாய மார்க்கமாக செல்லும்போது மனதைக் கவரும் அம்மாலையானது அறுந்து (41) போயிற்று. அதன் நடுவிலிருந்த மிகப் பரிசுத்தமான ருத்ராக்ஷமானது ஏதோ புண்ய வசத்தால் வெட்டுண்டு கிடந்த இவன் தலையில் விழுந்தது. (42) இப்பொழுதும் அவன் ரத்தத்தில் ஸம்மந்தப்பட்டு ஒட்டிக்கொண்டிருக்கிறது. அப்புண்யத்தால் இவன் கைலாஸத்தை அடைந்திருக்கிறான். (43) ஆச்சர்யமான ருத்ராக்ஷத்தின் மஹிமை என்னால் கூற இயலாது. பக்தர்களின் துக்கங்களைப் போக்கும் ஸ்ரீ ருத்ரபகவான் அறிவாரோ

कैलासमेव यातीति किमाश्चर्यं शिवप्रियम् । अस्थि केशादि गङ्गायां मृतानां बहुकालतः ॥ ४६
पतितं यदि ते शीघ्रं कैलासं यान्ति वै यम । तस्मादेतस्य कैलासप्राप्तिर्नैवाद्भुतं किल ॥ ४७
इति नन्दीशवचनं श्रुत्वातौ भयकंपितौ । चित्रगुप्तयमौ नत्वा देवदेवं त्रियंबकम् ॥ ४८
विचिन्तयन्तौ माहात्म्यं रुद्राक्षस्याघहारिणः । प्रतस्थाते महेशस्य चाज्ञया स्वपदं प्रति ॥ ४९
प्रस्थितं तं पुनरपि समाहूय महेश्वरः । अद्यप्रभृति रुद्राक्षधारिणो मम वल्लभान् ॥ ५०
मारात् दृष्ट्वा यम भयान्नत्वा तान्मनसा व्रज । दूतानामपि शिक्षैषा कर्तव्या चाप्रमादतः ॥ ५१
ममप्राणाधिका भक्ता भस्मरुद्राक्षधारिणः । न तान् प्रत्यधिकारस्ते सत्यं सत्यमिहोच्यते ॥ ५२
इति शंभोर्वचश्श्रुत्वा तथा कृत्वा मनस्ययम् । प्रणम्य परया भक्त्या निर्जगाम पदं प्रति ॥ ५३
दृष्ट्वैतदखिलं शंभोस्सन्निधौ गतवासरे । ममात्यन्तमभूत्प्रीतिः प्रतिरुद्राक्षधारिणम् ॥ ५४
तन्मया वल्लभे पूजाकृतास्याखुभुजस्तराम् । इति देवेशवचनं श्रुत्वेन्द्राण्यपि विस्मिता ॥ ५५
मामादाय कराभ्यां सा मूर्ध्न्याघ्राय नरेश्वर । कृत्वा स्वनेत्रयोर्भक्त्या प्रेषयामास भूमिप ॥ ५६

கைலாஸ மேஷயாதீதி கிமாச்சர்யம் சிவப்ரியம் । அஸ்தி கேசாதி கங்காயாம் ம்ருதானும் பஹுகாலத: 46
பதிதம்யதிதே சீக்ரம் கைலாசம்யாந்தி வையம । தஸ்மாதேதஸ்ய கைலாஸப்ராப்திர்நைவாத்புதம் கில 47
இதி நந்தீச வசனம் ச்ருத்வா தௌ பயகம்பிதௌ । சித்ரகுப்தயமௌ நத்வா தேவதேவம் த்ரியம்பகம் 48

விசிந்தயந்தௌ மாஹாத்ம்யம் ருத்ராக்ஷஸ்யாக ஹாரிண: ।
ப்ரதஸ்தாதே மஹேசஸ்ய சாக்ஞயா ஸ்வபதம் ப்ரதி ॥ 49

ப்ரஸ்திதம் தம் புனரபி ஸமாஹூய மஹேச்வர: । அத்யப்ரப்ருதி ருத்ராக்ஷதாரிணோ மம வல்லபான் ॥ 50

ஆராத் த்ருஷ்ட்வா யம பயான் நத்வா தான் மனஸா வ்ரஜ ।
தூதானுமபி சிக்ஷைஷா கர்தவ்யா சாப்ரமாதத: ॥ 51

மம ப்ராணாதிகா பக்தா பஸ்மருத்ராக்ஷதாரிண: । ந தான் ப்ரத்யதிகாரஸ்தே ஸத்யம் ஸத்யமிஹோச்யதே 52
இதி சம்போர்வச: ச்ருத்வா ததா க்ருத்வா மனஸ்யயம் । ப்ரணம்ய பரயா பக்த்யா நிர்ஜகாம பதம் ப்ரதி 53

த்ருஷ்ட்வை ததகிலம் சம்போஸ்ஸன்னிதௌ கதவாஸரே ।
மமாத்யந்த மபூத்ப்ரீதி: ப்ரதி ருத்ராக்ஷதாரிணம் ॥ 54

தன்மயா வல்லபே பூஜா க்ருதாஸ்யாகுபுஜஸ்தராம் ।
இதி தேவேச வசனம் ச்ருத்வேந்த்ராண்யபி விஸ்மிதா ॥ 55

மாமாதாய கராப்யாம் ஸா மூர்த்ன்யாக்ராய நரேச்வர ।
க்ருத்வா ஸ்வநேத்ரயோர்பக்த்யா ப்ரேஷயாமாஸ பூமிப ॥ 56

இல்லையோ, (44) என்று சொன்னார். இவை யாவற்றையும் கேட்டு, நந்திகேச்வரர் கூறியதாவது. ஓ யமனே! எந்த ப்ராணியின் சரீரத்தில் பரமேச்வரனுக்குப் பிரியமும் உத்தமுமான ருத்ராக்ஷமிருக்கிறதோ அவன் கைலாஸத்தை அடைவதில் என்ன ஆச்சரியமிருக்கிறது. ஓ யமனே! மரித்தவர்களுடைய எலும்பு, கேசம் முதலியவை வெகு காலம் சென்றபின்னராவது கங்கையில் (46) விழுமேயாகில் அவர்களும் கைலாஸத்தை அடைகிறார்கள், அப்படியிருக்க இவனுக்கு கைலாஸம் கிடைத்ததில் என்ன ஆச்சரியமிருக்கிறது? 'என்ற நந்திகேச்வரருடைய வார்த்தையைக் கேட்டு, யமனும், சித்ரகுப்தனும் பயத்தால் நடுக்கமுற்று, தேவாதி தேவரான முக்கண்ணரை நமஸ்கரித்து விட்டு, (48) அவரது கட்டளையின்படி எல்லா பாபங்களையும் போக்கும் ருத்ராக்ஷத்தின் மஹிமையை நினைத்துக்கொண்டு, தங்கள் இருப்பிடத்திற்குப் புறப்பட்டார்கள். (49) அவ்வாறு புறப்படும் யமனை ஸ்ரீ மஹேச்வரர் மறுபடியும் கூப்பிட்டு, இது முதற்கொண்டு ருத்ராக்ஷத்தை தரிப்பவர்களான எனது பக்தர்களைப் (50) பார்த்தால் பயத்தோடு தூரத்தில் நின்றபடியே அவர்களை மனதினால் வணங்கிச் சென்றுவிடவேண்டும். உனது தூதர்களுக்கும் இப்போதனையை கவனத்துடன் கற்பிக்கவேண்டும். (51) பஸ்மத்தையும், ருத்ராக்ஷங்களையும் தரிப்பவர்களான பக்தர்கள் எனக்கு உயிரைக் காட்டிலும் மேலானவர்கள். அவர்களிடம் உனது அதிகாரம் செல்லத்தக்கதல்ல. இதை ஸத்யமாகச் சொல்லுகிறேன். (52) என்ற ஸ்ரீ சம்புவின் வார்த்தையைக் கேட்டு, யமன் அவ்விதமே மனதில் உறுதி செய்துகொண்டு, மிகுந்த பக்தியுடன் நமஸ்கரித்து, தன் இருப்பிடம் சென்றான். (53) ஓ இந்த்ராணியே! முன் தினம் ஸ்ரீ சம்புவின் முன்னிலையில் நான் இவை யாவற்றையும் பார்த்ததின் பேரில் எனக்கு ருத்ராக்ஷம் தரித்தவர்களிடத்தில் மிகுந்த அன்பு உண்டாகிவிட்டது. (54) ஓ ப்ரியநாயகியே! ஆகையால் தான் நான் இப்பூஜையை நன்கு பூஜித்தேன்.

गदितमिति निशम्य तत्र वृत्तं दिविनृपतिः पृषदंशकेन सत्यम् ।
अधिकमयमियाय भक्तिमस्मिन्नधिगतविस्मयमानसो द्विजेन्द्राः ॥ ५७
इति श्री स्कान्दे महापुराणे शंकरसंहितायां शिवरहस्यखण्डे
उपदेशकाण्डे षोडशोऽध्यायः ॥

॥ अथ सप्तदशोऽध्यायः ॥

श्रीरुद्राक्षधारणात् शान्तिकस्य भद्रकाव्यनुग्रहः ॥

ततः प्रणम्य राजाऽसौ सुप्रतीपं द्विजोत्तमम् । भक्त्या स्वस्यापि रुद्राक्षं ययाचे धर्तुमात्मवित् ॥ १
रक्ष मां शरणं प्राप्तं क्षमस्तु द्विजोत्तम । कृतार्थोऽस्मि कृतार्थोऽस्मि दर्शनालापतस्तव ॥ २
इति ब्रुवति राजेन्द्रे सहसोत्थाय स व्रती । प्रणम्य परया प्रीत्या द्विजश्रेष्ठमुवाच ह ॥ ३
रुद्राक्षधारणात्त्वं वै रुद्रोऽस्यनघ केवलम् । क्षमस्व मत्कृतं मन्तुं दयार्द्रान्तर सर्वदा ॥ ४
न कुप्यन्ति महात्मानः कृतागस्वपि देहिषु । स्तुत्वैवमास्थितावेतौ बद्धाञ्जलिपुटावुभौ ॥ ५

கதிதமிதிநிசம்ய தத்ர வ்ருத்தம் திவிந்ருபதி: ப்ருஷதம்சகேந ஸத்யம் ।
அதிகமயமியாய பக்திமஸ்மின்னதிகத விஸ்மயமானஸோ த்விஜேந்த்ரா: ॥ 57
இதி ஸ்ரீஸ்காந்தே மஹாபுராணே சங்கரஸம்ஹிதாயாம் சிவரஹஸ்யகண்டே
உபதேசகாண்டே ஷோடசோऽத்யாய: ॥

॥ அத ஸப்ததஶோऽத்யாய: ॥

ஸ்ரீ ருத்ராக்ஷத்தை தரித்ததால் சாந்திகனுக்கு பத்ரகாளி அனுக்ரஹம் செய்தல்

தத: ப்ரணம்ய ராஜாऽஸௌ ஸுப்ரதீபம் த்விஜோத்தமம் ।
பக்த்யா ஸ்வஸ்யாபி ருத்ராக்ஷம் யயாசே தர்துமாத்மவித் ॥ 1
ரக்ஷ மாம் சரணம் ப்ராப்தம் க்ருதமந்தும் த்விஜோத்தம ।
க்ருதார்தோऽஸ்மி க்ருதார்தோऽஸ்மி தர்சனாலாபதஸ்தவ ॥ 2
இதி ப்ருவதி ராஜேந்த்ரே ஸஹஸோத்தாய ஸ வ்ரதீ । ப்ரணம்ய பரயா ப்ரீத்யா த்விஜச்ரேஷ்டமுவாசஹ 3
ருத்ராக்ஷ தாரணாத் த்வம் வை ருத்ரோஸ்யனக கேவலம் ।
க்ஷமஸ்வ மத்க்ருதம் மந்தும் தயார்தாந்தர ஸர்வதா ॥ 4
தின்றதல்லவா? ஆகையால் அறியாமையால் கொல்லப்பட்ட தங்கள் பிள்ளையையும், மருமகளையும், அப்பசுவையும், ஓ பிரபுவே! சீக்கிரமாய் பிழைக்கச்செய்ய வேண்டும் என்றாள். (55) இவ்வாறு அவளுடைய வார்த்தையைக் கேட்டு அந்த பிராம்மணர்களெல்லாம் அவ்விதமே அவரை வேண்டிக் கொண்டு ஓ பிராம்மணோத்தமரே! இவர்களை திரும்ப பிழைக்கச் செய்வதில் தங்களுக்கு என்ன சிரமம்? (56) ஓ பாபமற்றவரே! தாங்கள் பஞ்சாக்ஷர மந்திரத்தின் மஹிமையால் இவர்களை திரும்பவும் பிழைக்கச் செய்ய வேண்டும். இவ்வாறு இவர்களுடைய வார்த்தையைக் கேட்டு மறுபடியும் அந்த ஸூரியசர்மன் (57) * பஞ்சாக்ஷர மஹா மந்திரமானது மஹா பாதகங்களை நாசம் செய்யக் கூடிய தென்பதும் அதை ஜபிப்பவர்களுக்கு மறுபிறப்பில்லை என்பதும் நிச்சயமானால் (58) இப்பொழுது நீங்கள் தூக்கத்திலிருந்து எழுந்திருப்பதுபோல் சீக்கிரம் எழுந்திருங்கள் என்று சொல்லி கைகளை அஞ்சலி செய்து கொண்டு சிறந்ததான அந்த பஞ்சாக்ஷர மஹா மந்திரத்தை ஜபம் செய்தார். (59) ஓ சௌனகாதி முனிவர்களே! அப்பொழுது உடனே அவருடைய பிள்ளையும், மருமகளும், அப்பசுவும் எழுந்து விட்டன. இந்த ஆச்சரியத்தை கண்ட பிராம்மணர்கள் யாவரும் அந்த ஸூரியசர்மனை (60) ஸாக்ஷாத் பரமசிவனென்றே நிச்சயித்துக் கொண்டு மனப்பூர்வமாய் நமஸ்கரித்து அவர் உத்தரவின் பேரில் தங்கள் வீடுகளுக்கு சென்றார்கள் ஓ பூமிதேவர்களே. (61) பிறகு ஸூரிசர்மன் ஸ்ரீ பஞ்சாக்ஷர மஹா மந்திரத்தை ஜபம் செய்து கொண்டே வெகு காலமளவும் பேரானந்தத்துடன் வேண்டியபடி போகங்களை அனுபவித்து விட்டு (62) பிறகு மனைவி, பிள்ளை பந்து வர்க்கங்கள் தன் இஷ்ட ஜனங்கள் இவர்

குறிப்பு:— * பொய்யை திருடுவது, மத்யபானம் செய்தல், குருவின் மனைவியோடு புணருதல், பிரம்ம ஹத்தி; இந்த நான்கு பாதகங்களை செய்தவர்களோடு சேருதல் இவ்வைந்தும் பஞ்ச மஹா பாதகங்கள் எனப்படும். ஆனால் மேல்கண்டவைகளில் ஐந்தாவது பாபமாகிய நான்கு மஹா பாதகங்களை செய்தவர்களோடு சேருதலாகிய பாபத்திற்கு பிராயச்சித்தம் விதிக்கப்பட்டிருக்கிறது. மற்ற நான்கு பாதகங்களுக்கும் பிராயச்சித்தம் விதிக்கப்பட வேயில்லை. ஹேமாத்ரி என்ற தர்மசாஸ்திர கிரந்தத்தில் பாபங்களுக்கு பிராயச்சித்தம் சொல்லுமிடத்தில் நான்கு மஹா பாதகங்களையும் தவிர, மற்ற பாபங்களுக்கு மட்டில் பிராயச்சித்தம் விதிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட மஹாபாதகங்கள் கூட ஸ்ரீ பஞ்சாக்ஷர மந்திர ஜபத்தினால் விலகி விடுகிறதென்பது கருத்து.

आरुह्य परया प्रीत्या देवदुन्दुभिनिस्वनैः । विकीर्यत्पुष्पवृष्ट्यौघैश्शिवलोकं ययौ द्विजाः ॥ ६४
तत्र स्थित्वा चिरं कालं प्रीत्या रुद्रगणैस्सह । सायुज्यं ब्रह्मणश्शंभोरवाप ब्रह्मणोत्तमाः ॥ ६५
य एतस्य विरोध्यासीन्मानदः परवञ्चकः । स तु भीत्याशु तं देशं मुक्त्वा देशान्तरं गतः ॥ ६६
निरन्नो विधुरो नित्यमन्तस्ताप समन्वितः । कृमिक्लिन्नशरीरोऽयं व्याधिना महता हतः ॥ ६७
चिरकालं मृतः पापी नरकेऽद्यापि बाध्यते । तस्मात् द्विषन्ति ये मर्त्या मर्त्यं पञ्चाक्षरीपरम् ॥ ६८
महापातकसंयुक्तास्ते यान्ति नरकं ध्रुवम् । पञ्चाक्षरीपराणां ये सुहृदः पुण्यगौरवात् ॥ ६९
यान्ति ते परया प्रीत्या शिवलोकमनुत्तमम् । तस्मात्पञ्चाक्षरीमन्त्रः पञ्चपातकनाशनः ॥
जप्यो नित्यं प्रयत्नेन सर्वैरेव तपोधनाः ॥ ७०

इति श्री स्कान्दे महापुराणे शङ्करसंहितायां शिवरहस्यखण्डे
उपदेशकाण्डे द्वाविंशोऽध्यायः ॥

ஆருஹ்ய பரயா ப்ரீத்யா தேவதுந்துபி நிஸ்வனை: ।
விகீர்யத் புஷ்பவ்ருஷ்ட்யௌகை: சிவலோகம் யயௌ த்விஜா: ॥ 64
தத்ர ஸ்தித்வா சிரம் காலம் ப்ரீத்யா ருத்ரகணைஸ்ஸஹ ।
ஸாயுஜ்யம் ப்ரும்ஹணச்சம்போ: அவாப ப்ராம்ஹணோத்தமா: ॥ 65
ய ஏதஸ்ய விரோத்யாஸீன் மானத: பரவஞ்சக: । ஸ து பீத்யாசு தம் தேசம் முக்த்வா தேசாந்தரம் கத: 66
நிரன்னோ விதுரோ நித்யமந்தஸ்தாப ஸமன்வித: । க்ருமிக்லின்ன சரீரோऽயம் வியாதினா மஹதா ஹத: 67
சிரகாலம் ம்ருத: பாபீ நாகேऽத்யாபி பாத்யதே ।
தஸ்மாத் த்விஷந்தி யே மர்த்யா மர்த்யம் பஞ்சாக்ஷரீ பரம் ॥ 68
மஹாபாதகஸம்யுக்தாஸ்தே யாந்தி நரகம் த்ருவம் ।
பஞ்சாக்ஷரீபராணாம் யே ஸுஹ்ருத: புண்யகௌரவாத் ॥ 69
யாந்தி தே பரயா ப்ரீத்யா சிவலோக மனுத்தமம் ।
தஸ்மாத் பஞ்சாக்ஷரீ மந்த்ர: பஞ்சபாதக நாசன: ॥
ஜப்யோ நித்யம் ப்ரயத்னேன ஸர்வைரேவ தபோதனா: ॥ 70

இதி ஸ்ரீஸ்காந்தே மஹாபுராணே சங்கரஸம்ஹிதாயாம் சிவரஹஸ்யகண்டே
உபதேசகாண்டே த்வாவிம்சோऽத்யாய:

களோடுகூட தேவரிஷி கணங்களால் விளங்கப்பெற்ற மிக மங்களகரமான ஓர் விமானத்தில் (63) மிகுந்த ஸந்தோஷத்தோடு ஏறிக்கொண்டு தேவ துந்துபி வாத்தியங்கள் முழங்க புஷ்பமாரி பெய்ய சிவலோக மடைந்தார் ஓ ப்ராம்மணர்களே (64) அங்கு ருத்திர கணங்களோடு வெகுகாலம் வஸித்து ஓ பிராம்மணோத்தமர்களே! ஸ்ரீ சம்புவாகிய பரப்பிரம்மத்தின் ஸாயுஜ்ஜிய பதவியை அடைந்தார். (65) இவருக்கு விரோதியும், பிறரை வஞ்சிப்பவனுமான மானதன் மிகுந்த பயத்துடன் சீக்கிரம் அந்த தேசத்தை விட்டு வேறு தேசத்திற்கு ஓடிப்போய் அங்கு ஆஹாரமில்லாமலும் மனைவியில்லாமலும் மிகுந்த தாபத்தோடு வெகுகால மளவும் பல வியாதிகளால் பீடிக்கப்பட்டு பூச்சி வைத்து ஊனீர் வடியப்பெற்ற சரீரத்தை உடையவனாய், பலகாலம் இருந்துவந்து பிறகு மடிந்தான். அந்த பாவி இப்பொழுதும் கூட நரகத்தில் துன்புறுத்தப்படுகிறான். ஆகையால் எந்த மனிதர்கள் ஸ்ரீ பஞ்சாக்ஷர மஹா மந்திரத்தை ஜபம் செய்யும் மானிடரை பகைக்கின்றார்களோ (68) அவர்கள் மஹா பாதகங்களோடு கூடியவர்களாகி நிச்சயம் நரகத்தை அடைவார்கள். எவர்கள் ஸ்ரீ பஞ்சாக்ஷர மந்திரத்தை ஜபிப்பவர்களுக்கு ஸ்நேகிதர்களாயிருக்கிறார்களோ, அவர்கள் மிகுந்த புண்ணிய வசத்தால் அதிக ஸந்தோஷத்துடன் மிகச்சிறந்த சிவலோகத்தை அடைவார்கள். ஆகையால் ஓ முனிவர்களே! யாவரும் பஞ்ச (ஐந்து) மஹா பாதகங்களை நாசம் செய்யவல்ல ஸ்ரீ பஞ்சாக்ஷர மஹா மந்திரத்தை நாள்தோறும் மிக முயற்சியுடன் ஜபம் செய்ய வேண்டும். (70)

இருபத்திரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

॥ अथ त्रयोविंशोऽध्यायः ॥

अज्ञानतोपि शिवनाम उच्चारण वैभवात् महा पातकिनोपि कैलासप्राप्तिः ॥

पञ्चाक्षरस्य माहात्म्यं वर्णितं खलु भूसुराः । शिवनाम्नांच माहात्म्यं शृणुध्वमवधानतः ॥ १
शिवः पशुपतिश्शंभुश्शङ्करश्चन्द्रशेखरः । मृत्युञ्जयो विरूपाक्षो नीलकण्ठो महेश्वरः ॥ २
भवो भर्गो महादेवो हरो रुद्र उमापतिः । एवमादीनि नामानि सन्ति दिव्यान्युमापतेः ॥ ३
तेषु चैकमनेकं वा यो जपत्यनिशं नरः । स एव धन्यः पुण्यात्मा वन्द्यश्च सकलैस्सुरैः ॥ ४
स भोगान् विपुलान् भुक्त्वा कैलासं प्राप्य भूसुराः । उषित्वाऽत्र चिरं कालं सायुज्यं ब्रह्मणः परम् ॥ ५
आप्नोति सत्यमेतद्वो वर्णितं ब्राह्मणोत्तमाः । ज्ञात्वा ये शिवनामानि पवित्राण्युच्चरन्ति ते ॥ ६
शिवलोकं समासाद्य शिवसायुज्यमुत्तमम् । यान्तीत्येतत् द्विजश्रेष्ठा नैवाश्चर्यमिदं ध्रुवम् ॥ ७
उच्चार्याज्ञानतश्शंभोश्शिवलोकमवापिरे । बहवस्तेषु युष्माकं कतिचिद्वर्णयामि तान् ॥ ८

॥ अथ त्रयोविंशोऽध्यायः ॥

அறியாமையாலும் சிவநாமத்தை உச்சரித்த மஹிமையால் மஹாபாதகனுக்கும் கைலாஸ ப்ராப்தி

பஞ்சாக்ஷரஸ்ய மாஹாத்ம்யம் வர்ணிதம் க்லு பூஸுராः ।
சிவநாம்னாஞ்ச மஹாத்ம்யம் ச்ருணுத்வ மவதானத: ॥ 1

சிவ: பசுபதிச்சம்பு: சங்கரச்சந்த்ரசேகர: । ம்ருத்யுஞ்ஜயோ விரூபாக்ஷோ நீலகண்டோ மஹேச்வர: ॥ 2

பவோ பர்கோ மஹாதேவோ ஹரோ ருத்ர உமாபதி: ।
ஏவமாதீனி நாமானி ஸந்தி திவ்யான்யுமாபதே: ॥ 3

தேஷு சைகமனேகம் வா யோ ஜபத்யனிசம் நர: ।
ஸ ஏவ தன்ய: புண்யாத்மா வந்த்யச்ச ஸகலைஸ்ஸுரை: ॥ 4

ஸ போகான் விபுலான் புக்த்வா கைலாஸம் ப்ராப்ய பூஸுரா: ।
உஷித்வாऽத்ர சிரம் காலம் ஸாயுஜ்யம் ப்ரம்ஹண: பரம் ॥ 5

ஆப்நோதி ஸத்யமேதத்வோ வர்ணிதம் ப்ராம்ஹணோத்தமா: ।
ஞாத்வா யே சிவநாமானி பவித்ராண்யுச்சரந்தி தே ॥ 6

சிவலோகம் ஸமாஸாத்ய சிவஸாயுஜ்ய முத்தமம் ।
யாந்தீத்யேதத் த்விஜச்ரேஷ்டா நைவாச்சர்யமிதம் த்ருவம் ॥ 7

உச்சார்யாக்ஞானதச்சம்போ: சிவலோக மவாபிரே । பஹவஸ்தேஷு யுஷ்மாகம் கதிசித் வர்ணயாமி தான்

இருபத்திமூன்றாவது அத்தியாயம்

ஓ பூஸுரர்களே! இதுவரை ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தின் மஹிமையை எடுத்துச் சொன்னேன். இப்பொழுது ஸ்ரீ சிவபிரானின் திரு நாமங்களின் மஹிமையைச் சொல்கிறேன், கவனமாய் கேளுங்கள். (1) சிவன், பசுபதி, சம்பு, சங்கரன், சந்திரசேகரன், மிருத்யுஞ்ஜயன், விரூபாக்ஷன், நீலகண்டன், மஹேச்வரன், (2) பவன், பர்க்கன், மஹாதேவன், ஹரன், ருத்திரன், உமாபதி இவை முதலிய சிறந்த நாமாக்கள் ஸ்ரீ ஸதாசிவனுக்கு இருக்கின்றன. இவைகளில் ஒன்றையோ அல்லது பல நாமாக்களையோ எந்த மனிதன் எப்பொழுதும் ஜபிக்கிறானோ அவனே பாக்கிய சாலியாகவும், புண்ணியாத்மாவாகவும், எல்லா தேவர்களாலும் நமஸ்கரிக்கத் தக்கவனாகவும் ஆகிறான். (4) அவன் இந்த லோகத்தில் எல்லா போகங்களையும் அனுபவித்துவிட்டு முடிவில் கைலாஸமடைந்து ஓ பூஸுரர்களே! அங்கு வெகுகாலம் இருந்து விட்டு பிறகு சிறந்ததான பரப்பிரும்மத்தின் ஸாயுஜ்யத்தை அடைகிறான் என்பதை உங்களுக்கு ஸத்தியமாய்ச் சொல்கிறேன். மேலும் ஸ்ரீ சிவபிரானுடைய நாமாக்கள் மிக பரிசுத்தமுள்ளவைகளென்பதை அறிந்து எவர்கள் சொல்லுகிறார்களோ (6) அவர்கள் சிவலோகத்தை அடைந்து மிகச்சிறந்த சிவபிரானுடைய ஸாயுஜ்ய பதவியை அடைகிறார்களென்பதில் ஆச்சரியமே இல்லை என்பது நிச்சயம். (7) ஏனெனில் பலர் ஸ்ரீ சம்புவின் நாமாக்களை கேவலம் அக்ஞானத்தால் உச்சரித்த மாத்திரத்தில் சிவலோகமடைந்திருக்கிறார்கள். அவர்களில் சிலரை இப்பொழுது உங்களுக்கு எடுத்து கூறுகிறேன். (8)

देशे गौतमसंज्ञेऽस्ति कन्दुकाख्यं महत्पुरम् । तत्रास्ति कश्चिद्व्याळाख्यो ब्राह्मणः पापवर्जितः ॥ ९
तस्यासीत्तनयः कश्चिद्वीर्यवान् पापकर्मकृत् । मद्यपायी महामायी मांसभुङ्मद्यविक्रयी ॥ १०
मांसादिविक्रयी द्रव्यलोभाद्दोषदुराशयः । मुक्त्वाऽयं ब्राह्मणाचारं हीनाचाररतोऽवसत् ॥ ११
तस्यैवं वर्तमानस्य चिरकालं दुरात्मनः । समाययावन्त्यकालः क्षणादेव महीसुराः ॥ १२
पुत्रास्तदानीमेतस्य शयनाभ्याशमेत्य ते । पप्रच्छुः केन दातव्यं कियदस्माभिरप्युत ॥ १३
उत्तमर्णश्च कस्मात्ते अधमर्णं कुतो यथा । इति तेषां वचश्श्रुत्वा मांसविक्रयणोद्भवम् ॥ १४
उक्त्वा द्रव्यं पुनर्मद्यविक्रयी तद्ऋणं च सः । मद्यं कस्यचिदन्त्यस्य ऋणं शिवमिति ब्रुवन् ॥ १५
अत्यजत्प्राणमरुतस्तदानीं ब्राह्मणोत्तमाः । बद्धुं तदागतास्तूर्णं यमदूता भयानकाः ॥ १६
दुद्रुवुस्ते शिवगणास्तान् सन्ताड्य निजायुधैः । कालं संप्राप्य ते दूताः प्रोचुर्वृत्तान्तमञ्जसा ॥ १७
स तु निर्गत्य सहसा सेनया परिवारितः । अभ्याशमाययौ भीमो गणानां परमेशितुः ॥ १८

தேசே கௌதமஸம்க்ஞேऽஸ்தி கந்துகாக்யம் மஹத்புரம் ।
தத்ராஸ்தி கச்சித் வ்யாளாக்யோ ப்ராம்ஹணः பாபவர்ஜிதः ॥ 9
தஸ்யாஸீத்தனயः கச்சித் வீர்யவான் பாபகர்மக்ருத் । மத்யபாயீ மஹாமாயீ மாம்ஸபுக் மத்யவிக்ரயீ ॥ 10
மாம்ஸாதிவிக்ரயீ த்ரவ்யலோபாத்தோஷ துராசயः ।
முக்த்வாऽயம் ப்ராம்ஹணாசாரம் ஹீனாசாரரதோऽவஸத் ॥ 11
தஸ்யைவம் வர்தமானஸ்ய சிரகாலம் துராத்மனः । ஸமாययாவந்த்யகालः க்ஷணாதேவ மஹீஸுராः ॥ 12
புத்ராஸ்ததானீமேதஸ்ய சயனாப்யாசமேத்ய தே । பப்ரச்சுः கேன தாதவ்யம் கியதஸ்மாபிரப்யுத ॥ 13
உத்தமர்ணஞ்ச கஸ்மாத்தே அதமர்ணம் குதோயதா ।
இதி தேஷாம் வசச்ருத்வா மாம்ஸவிக்ரயஜோத்பவம் ॥ 14
உக்த்வா த்ரவ்யம் புனர்மத்யவிக்ரயீ தத்ரணஞ்ச ஸः ।
மத்யம் கஸ்யசிதந்த்யஸ்ய ருணம் சிவமிதி ப்ருவன் ॥ 15
அத்யஜத்ப்ராணமருதஸ்ததானீம் ப்ராப்ஹணோத்தமாः ।
பத்தும் ததாகதாஸ்தூர்ணம் யமதூதா பயானகாः ॥ 16
துத்ருவுஸ்தே சிவகணாஸ்தான் ஸந்தாட்ய நிஜாயுதைः ।
காலம் ஸம்ப்ராப்ய தே தூதாः ப்ரோசுர் வ்ருத்தாந்தமஞ்ஜஸா ॥ 17
ஸ து நிர்கத்ய ஸஹஸா ஸேனயா பரிவாரிதः । அப்யாசமாययௌ பீமோ கணானாம் பரமேசிதுः ॥ 18

கௌதமம் என்ற தேசத்தில் கந்துகபுரம் என்ற ஓர் பெரிய பட்டிணம் இருக்கிறது. அங்கு பாபமற்றவனான வியாளன் என்ற ஓர் பிராம்மணன் இருந்தான். (9) அவனுக்கு பலமுடையவனும் பாபத் தொழில்களைச் செய்பவனும், மத்தியபானம் செய்கிறவனும் மஹா மாயாவியும், மாமிசத்தைத் தின்பவனும் பணத்தின் துராசையால் கள், மாமிசம் முதலியவைகளை வியாபாரம் செய்கிறவனும் மஹா பாபியும், கெட்ட எண்ணம் உடையவனுமான ஓர் பிள்ளை இருந்தான் அவன் பிராம்மணர்களுக்கு உரிய ஒழுக்கங்களை விட்டு கெட்ட நடத்தைகளை நாடியவனாய் இருந்து வந்தான் (11) அந்த துராத்மா இவ்வாறு வெகு காலமாகவும் இருந்து வருகையில் ஓ முனிவர்களே! அவனுக்கு முடிவுகாலம் நேரிட்டு விட்டது. (12) அப்பொழுது அவன் பிள்ளைகள் அவன் படுத்திருக்கும் இடத்திற்கு வந்து அவனைக் கேட்டார்கள். ஓ தந்தையே நமக்கு யார் என்ன கொடுக்க வேண்டும்? நாம் யாருக்கு என்ன கொடுக்கவேண்டும். (13) மேலும் நீர் யாருக்கு கடன் கொடுத்திருக்கிறீர்? எவரிடத்தில் கடன் வாங்கி இருக்கிறீர்? என்று கேட்டார்கள். அவர்களுடைய வார்த்தையைக் கேட்டு, பிறகு அவன் மாமிச வியாபாரத்தால் ஏற்பட்ட வரவு செலவுகளை சொல்லி பிறகு கள் வியாபாரத்தில் கடன் கொடுத்திருக்கும் விவரத்தையும் சொல்லுகையில் ஓர் சண்டாளனுக்கு சிவம் (குறுணி) கள் கடன் கொடுத்திருக்கிறேன் என்று சொன்னவுடன் (15) அவன் பிராணனை விட்டான். அப்பொழுது ஓ பிராம்மணோத்தமர்களே! மிக பயங்கரர்களான யம தூதர்கள் அவனை கட்டிக்கொண்டு போவதற்காக வேகமாய் வந்தார்கள் (16) அதே ஸமயத்தில் சிவகணங்கள் வந்து தங்கள் ஆயுதங்களால் யமதூதர்களை அடித்துத் துரத்தினார்கள். பிறகு யமதூதர்கள் யாவரும் சீக்கிரம் யமனிடம் சென்று ஸங்கதிகளைச் சொன்னார்கள். அப்பொழுது பயங்கரனாகிய யமனும் ஸேனைகளால் சூழப்பட்டவனாகி சீக்கிரம் புறப்பட்டு சிவகணங்கள் இருக்குமிடம் வந்தான் அப்பொழுது

तमायान्तं महाघोरं दृष्ट्वा ते शिवकिङ्कराः । सन्ताड्य तस्य तास्सेना द्रावयित्वा बलादमुम् ॥ १९
तदीयेनैव बध्वा तं पाशेन शिवकिङ्कराः । प्रधानपुरुषं ज्ञात्वा यमस्यैनं महाबलाः । २०
श्रीमत्कैलासशैलस्य गुहां निन्युरधो द्रुतम् । दृष्टो यदि यमस्त्वेतैर्हन्यते नात्र संशयः ॥ २१
ज्ञात्वा प्रधानं तं कालं प्राणानस्य ददुर्द्विजाः । बध्वा तं कुत्रचिद्वृक्षे विधायाश्वस्य पालकम् ॥ २२
स्वयमेते महासत्वा वीर्यवन्तं द्विजोत्तमम् । शिवलोकं समानीय तत्र देवस्य सन्निधौ ॥ २३
मुक्त्वा ययुर्निजावासमाज्ञया परमेशितुः । सेवयित्वा महादेवं तस्थे सारूप्यभागयम् ॥ २४
निशम्य कालवृत्तान्तं यमो दूतमुखैस्तदा । अजोवतीति विख्याते शिखरे मेरुपर्वते ॥ २५
समासीनं महादेवं सेवयित्वा गतो यमः । दुःखेन महताऽविष्टो विचाराक्रान्तमानसः ॥ २६
कैलासं त्वरया प्राप्य नन्दिकेशं व्यजिज्ञिपत् । अथ नन्दी यमं प्राह भयाविष्टं समीक्ष्य सः ॥ २७
प्राणात्यये ऽयं पुण्यात्मा शिवनाम सुपावनम् । जगाद तेन पुण्येन महता शिवरूपताम् ॥ २८
अवाप नात्र सन्देहः कर्तव्यो भवता यम । ज्ञानतोऽज्ञानतोवापि शिवनामाघहारकम् ॥ २९

தமாயாந்தம் மஹாகோரம் த்ருஷ்ட்வா தே சிவகிங்கரா: ।
ஸந்தாட்ய தஸ்யதாஸ்ஸேனு த்ராவயித்வா பலாதமும் ॥ 19
ததீயேனைவ பத்வா தம் பாசேன சிவகிங்கரா: । ப்ரதானபுருஷம் ஞாத்வா யமஸ்யைனம் மஹாபலா: ॥ 20
ஸ்ரீமத்கைலாஸசைலஸ்ய குஹாம் நின்யுரதோ த்ருதம் ।
த்ருஷ்டோ யதி யமஸ்த்வேதைர் ஹன்யதே நாத்ர ஸம்சய: ॥ 21
ஞாத்வா ப்ரதானம் தம் காலம் ப்ராணாநஸ்யததுர் த்விஜா: ।
பத்வா தம் குத்ரசித்வ்ருக்ஷே விதாயாச்வஸ்ய பாலகம் ॥ 22
ஸ்வயமேதே மஹாஸத்வா வீர்யவந்தம் த்விஜோத்தமம் ।
சிவலோகம் ஸமானிய தத்ர தேவஸ்ய ஸன்னிதௌ ॥ 23
முக்த்வாயயுர் நிஜாவாஸமாக்ஞயா பரமேசிது: । ஸேவயித்வா மஹாதேவம் தஸ்தே ஸாரூப்யபாகயம் ॥ 24
நிசம்ய காலவ்ருத்தாந்தம் யமோ தூதமுகைஸ்ததா । அஜோவதீதி விக்யாதே சிகரே மேரு பர்வதே ॥ 25
ஸமாஸீனம் மஹாதேவம் ஸேவயித்வா கதோ யம: । து:கேன மஹதாவிஷ்டோ விசாராக்ராந்தமானஸ: 26
கைலாஸம் த்வரயா ப்ராப நந்திகேசம் வ்யஜிக்ஞிபத் । அத நந்தீ யமம் ப்ராஹ பயாவிஷ்டம் ஸமீக்ஷ்ய ஸ:
ப்ராணாத்யயேऽயம் புண்யாத்மா சிவநாம ஸுபாவனம் । ஜகாத தேன புண்யேன மஹதா சிவரூபதாம் 28
அவாப நாத்ர ஸந்தேஹ: கர்தவ்யோ பவதா யம । ஞானதோऽக்ஞானதோவாபி சிவநாமாகஹாரகம் ॥ 29

சிவதூதர்கள் வருகின்ற மிகக் கொடூரனான காலனைக்கண்டு அவனது ஸேனைகளை அடித்து துரத்திவிட்டு அவனையும் அவனது கைப் பாசத்தாலேயே பலவந்தமாய்க் கட்டி அந்த பலவான்களில் இவன் யமனுடைய முதன்மையான வேலைக்காரன் என்பதை அறிந்து அவனை ஸ்ரீ கைலாஸ பர்வதத்தில் கீழே உள்ள ஓர் குகைக்கு சீக்கிரமாய் அழைத்துச் சென்றார்கள். அப்பொழுது யமன் அவர்களால் காணப் பட்டிருந்தால், அவன் கொல்லப்பட்டே இருப்பானென்பதில் ஸந்தேகமில்லை. (21) ஓ முனிவர்களே! ஆனால் அவர்கள் அக்காலனை யமனின் முதன்மையான வேலைக்காரனென்று அறிந்ததால் தான் அவன் உயிரை வைத்தார்கள் அவர்கள் அவனை ஓர் மரத்தில் கட்டிவைத்து அவனுக்கு ஓர் காவலனையும் ஏற்படுத்தி விட்டு (22) பிறகு மஹா பலவான்களான அவர்கள் வீரியவான் என்னும் அந்த பிராம்மணோத்தமனை சிவலோகத்திற்கு அழைத்துச் சென்று அங்கு ஸ்ரீமஹாதேவனின் ஸன்னிதியில் (23) அவனை விட்டுவிட்டு ஸ்ரீ பரமேச்வரரின் கட்டளையால் தங்கள் இருப்பிடத்திற்குச் சென்றார்கள். பிறகு அப்பிராம்மணனும் ஸ்ரீ மஹாதேவனை ஸேவித்துக்கொண்டு ஸாரூப்ய பதவியை அடைந்து அங்கிருந்தான். (24) அப்பொழுது யமன் மேரு மலையின் சிகரத்தில் அஜோவதி என்று பெயர் பெற்ற நகரத்தில் விளங்கும் ஸ்ரீ மஹாதேவரை ஸேவித்து விட்டு திரும்பி வந்தான். தூதர்கள் முகமாய் காலனுடைய விஷயங்களைக் கேட்ட யமன் (26) மிகுந்த துயரத்தினால் கவலைகொண்ட மனமுடையவனாகி சீக்கிரம் கைலாஸத்திற்குச் சென்று ஸ்ரீ நந்திகேசனிடம் அறிவித்தான். அப்பொழுது அவர் பயமடைந்திருக்கும் யமனைப்பார்த்துச் சொன்னார். (27) ஓ யமனே! அப் புண்ணியாத்மா உயிர்விடும் காலத்தில் மிகப் பரிசுத்தமான ஸ்ரீ மஹேச்வரனுடைய நாமாவை உச்சரித்தான். அச்சிறந்த புண்ணியத்தால் சிவ ஸாரூப்யத்தை (28) அடைந்தான், என்பதில் நீ ஸந்தேகிக்க வேண்டியதில்லை ஓ யமனே! எந்த

ये वदन्ति महात्मानः प्राणापक्रमणे यम । न तान्प्रत्यधिकारस्ते शंभोराज्ञेदृशीखलु ॥ ३०
अर्थेह्यननुभूते स्यात्सन्देहः प्राणिनां यम । अनुभूतं त्वया पूर्वं नामोच्चारण वैभवम् ॥ ३१
किं विस्मृतं तदधुना त्वं स्मर्तुं पुनरर्हसि । पूर्वं किराते सुव्याधे महापापे मृते तदा ॥ ३२
चित्रगुप्तं समाहूय धर्माधर्मविचारणा । कृताहि भवता धर्म मार्गनिष्ठेन सन्ततम् ॥ ३३
चित्रगुप्तस्ततोवाच विचार्य मनसा भृशम् । नैतस्य धर्मलेशोऽपि घातकस्यात्र देहिनाम् ॥ ३४
सोऽयं प्रतिदिनं प्रातरुत्थाय वनमध्यगः । हन्तिकांश्चिद्दुराचारः पथिकान् द्रव्यलोभतः ॥ ३५
तथा बध्वा परान् पापी नयत्यनुदिनं यम । परान् प्रहरति क्रुद्धो व्याधैर्बहुभिरावृतः ॥ ३६
आहरैनं दृढं बध्वा प्रहरैनं कशैर्भृशम् । खड्गेन संहरात्रैनमिति निष्ठुरभाषयम् ॥ ३७
मद्यपायी महापापी मांसभुक्खद गर्वितः । बहुनात्र किमुक्तेन नास्ति पुण्यं दुरात्मनः ॥ ३८
तदाशु शिक्षा कर्तव्या भवता यमकिङ्करैः । प्राणोत्क्रमणकालेऽपि प्रहराहरसंहर ॥ ३९
इत्युक्त्वा निजपुत्राणां जीवोपायंतु पृच्छताम् । ममारायं महापापी सर्वदा सर्वघातकः ॥ ४०

யே வதந்தி மஹாத்மான: ப்ராணாபக்ரமணே யம। ந தான் ப்ரத்யதிகாரஸ்தே சம்போராக்ஞேத்ருசீ கலு 30
அர்தேஹ்யனனுபூதே ஸ்யாத் ஸந்தேஹ: ப்ராணினும் யம ।
அனுபூதம் த்வயா பூர்வம் நாமோச்சாரண வைபவம் ॥ 31
கிம் விஸ்ம்ருதம் ததுனு த்வம் ஸ்மர்தும் புனரர்ஹஸி ।
பூர்வம் கிராதே ஸுவ்யாதே மஹாபாபே ம்ருதே ததா ॥ 32
சித்ரகுப்தம் ஸமாஹூய தர்மாதர்ம விசாரணு। க்ருதாஹி பவதா தர்ம மார்கநிஷ்டேந ஸந்ததம் ॥ 33
சித்ரகுப்தஸ்ததோவாச விசார்ய மனஸா ப்ருசம் । நைதஸ்ய தர்மலேசோऽபி காதகஸ்யாத்ர தேஹினும் 34
ஸோऽயம் ப்ரதிதினம் ப்ராதருத்தாய வனமத்யக:। ஹந்தி காம்ச்சித் துராசார: பதிகான் த்ரவ்யலோபத: 35
ததா பத்வா பரான் பாபீ நயத்யனுதினம் யம । பரான் ப்ரஹரதி க்ருத்தோ வ்யாதைர்பஹுபிராவ்ருத: ॥ 36
ஆஹரைனம் த்ருடம் பத்வா ப்ரஹரைனம் கசைர்ப்ருசம் ।
கட்கேன ஸம்ஹராத்ரைனமிதி நிஷ்டுரபாஷ்யயம் ॥ 37
மத்யபாயீ மஹாபாபீ மாம்ஸபுங்மத கர்வித:। பஹுநாத்ர கிமுக்தேன நாஸ்தி புண்யம் துராத்மன: ॥ 38
ததாசு சிக்ஷா கர்தவ்யா பவதா யமகிங்கரை:। ப்ராணோத்க்ரமண காலேऽபி ப்ரஹராஹர ஸம்ஹர ॥ 39
இத்யுக்த்வா நிஜபுத்ராணும் ஜீவோபாயந்து ப்ருச்சதாம் । மமாராயம் மஹாபாபீ ஸர்வதா ஸர்வகாதக: 40

மஹாத்மாக்கள் அறிந்தோ அறியாமலோ உயிரை விடும் ஸமயத்தில் பாபங்களைப்போக்கும் ஸ்ரீ பரமேச்வரனுடைய நாமாவை சொல்லுகிறார்களோ அவர்களிடத்தில் உனது தூதர்களின் அதிகாரம் செல்லாதென்று ஸ்ரீ பரமேச்வரனின் ஆணையல்லவா? (30) ஓ யமனே! அனுபவம் இல்லாத விஷயத்தில் பிராணிகளுக்கு ஸந்தேகம் ஏற்படுவது ஸகஜமே. பகவன் நாமாக்களை உச்சரிப்பதின் மஹிமையைப்பற்றி நீ முன்பே அனுபவப்பட்டிருக்கிறாயல்லவா? (31) அதை நீ இப்பொழுது மறந்துவிட்டாயோ. அதை மறுபடியும் நினைத்துப் பார்த்துக்கொள். முன்பு மஹா பாபியான ஓர் வேடத்தலைவன் மரணமடைந்த பொழுது (32) எப்பொழுதும் தர்ம மார்க்கத்தில் நிலைபெற்ற நீ சித்திர குப்தனை அழைத்து அவன் செய்த தர்ம அதர்மங்களை (புண்ணிய பாபங்களை) விசாரித்தாயல்லவா? (33) பிறகு சித்திர குப்தன் மனதில் நன்கு ஆலோசித்து சொன்னதாவது:— ஓ தர்ம ராஜனே! பிராணிகளைக் கொலை செய்பவனான இப்பாதகனுக்கு சிறிதும் தர்மமில்லை. கெட்ட நடத்தை உடைய இந்த வேடன் பணத்தின் ஆசையால் நாள்தோறும் காலையில் எழுந்து காட்டிற்குச்சென்று சிலரைக் கொன்றும் (35) சிலரைக் கட்டியும் பலரை அடித்தும் இப்பாதகன் நாள்தோறும் வழிப்போக்கர்களின் பொருள்களை அபகரித்துச் செல்வான். மேலும் அவன் பலவேடர்களோடு கூடியவனாய் மிகுந்த கோபம் கொண்டவனாகி (36) அடா! அவனைக் கட்டிக்கொண்டுவா அவனை சாட்டையால் நன்கு அடி. இவனை இங்கு கொன்றுவிடு என்று கொடுமையாய் சொல்வான் (37) மேலும் அப்பாதகன் மத்தியபானம் செய்கிறவனாயும் மாமிசங்களைச் சாப்பிடுகிறவனாயும் கொழுப்பினால் மிகக் கர்வம் அடைந்திருந்தான். அதிகம் சொல்லுவானேன் இந்த துராத்மாவுக்கு புண்ணியமே கிடையாது. (38) ஆகையால் தாங்கள் தூதர்களைக் கொண்டு இவனுக்கு சிக்ஷை செய்யவேண்டும் ஓ தர்மராஜனே! எப்பொழுதும் எல்லோரையும் கொல்லுகிறவனான இப்பாதகன் உயிர் போகும்போது பிறைக்கும் வழியை கேட்ட தன் பிள்ளைகளுக்கு பிரஹர (அடி), ஆஹர (பரித்துவா), ஸம்ஹர (கொன்றுவிடு) என்று புத்தி சொல்லிக்கொண்டே உயிர்

इति तस्य वचश्श्रुत्वा मनसा त्वं विचार्य च । नैनं प्रत्यधिकारोऽस्ति चित्रगुप्त महामते ॥ ४१
सारूप्यभाजनं शंभोरयं पुण्यविशेषतः । रे रे दूता दुरात्मानो मुक्त्वैनं गच्छताधुना ॥ ४२
बन्धोऽयं मम पुण्यात्मा सर्वदा शंभुबुद्धितः । प्राणोत्क्रमणकालेऽयं प्रहराहर संहर ॥ ४३
इति ब्रुवन्ममाराशु नामोच्चार्य महेशितुः । इत्युक्त्वा त्वं महाभीत्या प्रणेमिथ तदा यम ॥ ४४
तदत्र भवता शंभोर्नामस्मरण वैभवम् । स्मर्तव्यं सावधानेन स्थातव्यञ्चाप्रमादिना ॥ ४५
तं व्याधं दिव्यमारोप्य विमानं शाङ्करा गणाः । श्रीमत्कैलास मचलं नीत्वा देवस्य सन्निधौ ॥ ४६
स्थापयित्वा यम गतास्तव दूताः पुरा खलु । इत्थं निशम्य वचनं शैलादेर्धर्मराडयम् ॥ ४७
मयाऽत्र नस्थितं स्वामिन् गतं सेवार्थमीशितुः । नवाऽधिकारः कालोऽसौ न जानातीदृशं प्रभो ॥ ४८
नामोच्चारणमाहात्म्यं शङ्करस्य परात्मनः । तद्रक्ष भगवन् कालं बाध्यमानं स्वकैर्गणैः ॥ ४९
यमस्य वचनं श्रुत्वा नन्दी प्राह पुनर्यमम् । महाकालगणाः कालं बध्वा निन्युर्यमाधुना ॥ ५०

இதி தஸ்ய வச: ச்ருத்வா மனஸா த்வம் விசார்யச । நைனம் ப்ரத்யதிகாரோऽஸ்தி சித்ரகுப்த மஹாமதே 41
ஸாரூப்ய பாஜனம் சம்போரயம் புண்யவிசேஷத: । ரே ரே தூதா துராத்மானோ முக்த்வைனம் கச்சதாதுனு
வந்த்யோऽயம் மம புண்யாத்மா ஸர்வதா சம்புபுத்தித: ।
ப்ராணோத்க்ரமண காலேऽயம் ப்ரஹராஹரஸம்ஹர ॥ 43
இதி ப்ருவன் மமராசு நாமோச்சார்ய மஹேசிது: । இத்யுக்த்வா த்வம் மஹாபீத்யா ப்ரணேமித ததா யம 44
ததத்ர பவதா சம்போர்நாமஸ்மரண வைபவம் । ஸ்மர்தவ்யம் ஸாவதானேன ஸ்தாதவ்யஞ்சாப்ரமாதினு
தம் வ்யாதம் திவ்யமாரோப்ய விமானம் சாங்கரா கணு: ।
ஸ்ரீமத்கைலாஸமசலம் நீத்வா தேவஸ்ய ஸன்னிதௌ ॥ 46
ஸ்தாபயித்வா யம கதாஸ்தவ தூதா: புரா கலு । இத்தம் நிசம்ய வசனம் சைலாதேர் தர்மராடயம் ॥ 47
மயாऽத்ர ந ஸ்திதம் ஸ்வாமின் கதம் ஸேவார்தமீசிது: ।
நவாऽதிகார: காலோऽஸௌ ந ஜானாதீத்ருசம் ப்ரபோ ॥ 48
நாமோச்சரண மாஹாத்ம்யம் சங்கரஸ்ய பராத்மன: ।
தத்ரக்ஷ பகவன் காலம் பாத்யமானம் ஸ்வகைர்கணை: ॥ 49
யமஸ்ய வசனம் ச்ருத்வா நந்தீ ப்ராஹ புனர்யமம் । மஹாகாளகணு: காலம் பத்வா நின்யுர்யமாதுனு ॥ 50

விட்டான் (40) என்ற சித்திர குப்தனுடைய வார்த்தையைக் கேட்டு, ஓ யமனே! நீ மனதில் நன்கு ஆலோசித்துக் கொண்டு, புத்திசாலியான சித்திர குப்தனைப் பார்த்து புண்ணிய விசேஷத்தினால் ஸாரூப்ய பதவிக்கு தகுதி வாய்ந்தவனான இம்மனிதனைப்பற்றி நமக்கு அதிகாரம் இல்லையே என்று சொல்லி விட்டு அடா! துராத்மாக்களான தூதர்களே இப்பொழுது இவனை விட்டு சென்று விடுங்கள் (42) இப்புண்ணியாத்மா எப்பொழுதும் ஸ்ரீ சம்புவென்ற பாவனையுடன் என்னால் நமஸ்கரிக்கத் தக்கவன். ஏனெனில் இவன் பிராணனை விடும் ஸமயத்தில் பிரஹர, ஆஹர, ஸம்ஹர (43) என்று சொன்னதில் ஸ்ரீ மஹேச்வரனுடைய நாமாவாகிய 'ஹர' என்ற மொழி மூன்று தடவை அவனால் உச்சரிக்கப் பட்டவுடன் அவன் மரண மடைந்திருக்கிறான் என்று சொல்லிவிட்டு ஓ! யமனே! நீ மிகுந்த பயம் கொண்டவனாகி அப்பொழுது அவனை நமஸ்கரித்தாய். (44) ஆகையால் நீ இங்கு ஸ்ரீ சம்புவின் நாமாக்களை நினைத்தலின் மஹிமையை நினைத்துப்பார்த்து தவறுதலின்றி ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். (45) பிறகு சிவகணங்கள் அந்த வேடனை சிறந்த விமானத்தில் ஏற்றிக்கொண்டு ஸ்ரீ கைலாஸ மலைக்குச்சென்று மஹாதேவனின் ஸன்னிதியில் அவனைக்கொண்டு விட்டார்கள் (46) ஓ யமனே! உனது தூதர்கள் முன்பே ஓடி விட்டார்கள். இவ்வாறு நந்திகேச்வரனுடைய வார்த்தையைக் கேட்டு தர்மராஜன் (47) ஓ ஸ்வாமி! நான் அப்பொழுது இங்கு இருக்கவில்லை பரமேச்வரனை ஸேவிப்பதற்காக சென்றிருந்தேன். ஓ பிரபுவே! புதிதாக அதிகாரத்தில் நியமிக்கப் பட்டவனான இக் காலன் ஸ்ரீ பரமேச்வரனுடைய நாமங்களை உச்சரிப்பது இப்படிப்பட்ட மஹிமை வாய்ந்த தென்பதை அறியவில்லை. ஓ பகவானே! தாங்கள் தங்கள் கணங்களால் துன்புறுத்தப் படுகின்ற காலனை ரக்ஷிக்க வேண்டும் என்றான் (49) யமனுடைய வார்த்தையைக்கேட்டு நந்திதேவர் அவனைப் பார்த்து மறுபடியும் சொன்னதாவது. ஓ யமனே! இப்பொழுது மஹாகாளருடைய கணங்கள் காலனை கட்டிக்

महाकालस्य निकटं गत्वा त्वं संप्रणम्य तम् । उक्त्वाऽस्य मदनुज्ञाञ्च कालं मोचय शीघ्रतः ॥ ५१
इत्युक्त्वा प्रेषयामास नन्दी तं समवर्तिनम् । स तथेति विनिर्गत्य महाकालं गणाधिपम् ॥ ५२
संप्राप्य भीत्या परया प्रणम्याष्टाङ्गपूर्वकम् । वृत्तान्तं निखिलं चोक्त्वा कालं मोचयितुं यमः ॥ ५३
गणाध्यक्षस्य वचनं नन्दिकेशस्य चाब्रवीत् । निशम्यैतं महाकालो यममेनञ्चुकोप हि ॥ ५४
विस्मृतं किं यम पुरा वृत्तमद्य दुराशय । एतावदस्य वचनं निशम्यायं यमोऽवदत् ॥ ५५
न विस्मृतं महाकाल पुरावृत्तं मया प्रभो । इदानीमपि तिष्ठामि स्मृत्वैवैतद्गणाग्रणीः ॥
इत्युवाच महाभीत्या ब्राह्मणानामधीश्वराः ॥ ५६

इति श्री स्कान्दे महापुराणे शंकरसंहितायां शिवरहस्यखण्डे
उपदेशकाण्डे त्रयोविंशोऽध्यायः ॥

மஹாகாளஸ்ய நிகடம் கத்வா த்வம் ப்ரணம்யதம் । உக்த்வாSஸ்ய மதனுக்ஞாஞ்ச காலம் மோசய சீக்ரத: 51
இத்யுக்த்வா ப்ரேஷயாமாஸ நந்தீ தம் ஸமவர்தினம் । ஸ ததேதி விநிர்கத்ய மஹாகாளம் கணாதிபம் ॥ 52
ஸம்ப்ராப்ய பீத்யா பரயா ப்ரணம்யாஷ்டாங்க பூர்வகம் ।
வ்ருத்தாந்தம் நிகிலம் சோக்த்வா காலம் மோசயிதும் யம: ॥ 53
கணாத்யக்ஷஸ்ய வசனம் நந்திகேசஸ்ய சாப்ரவீத் । நிசம்யைதம் மஹாகாளோ யமமேனம் சுகோப ஹி 54
விஸ்ம்ருதம் கிம் யம புரா வ்ருத்தமத்ய துராசய । ஏதாவதஸ்ய வசனம் நிசம்யாயம் யமோSவதத் ॥ 55
ந விஸ்ம்ருதம் மஹாகால புரா வ்ருத்தம் மயா ப்ரபோ ।
இதாநீமபி திஷ்டாமி ஸ்ம்ருத்வைவைதத்கணாக்ரணீ: ॥
இத்யுவாச மஹாபீத்யா ப்ராம்ஹணாநாமதீச்வரா: ॥ 56

இதி ஸ்ரீஸ்காந்தே மஹாபுராணே சங்கரஸம்ஹிதாயாம் சிவரஹஸ்யகண்டே
உபதேசகாண்டே த்ரயோவிம்சோSத்யாய: ॥

கொண்டு போயிருக்கிறார்கள் (50) ஆகையால் நீ மஹா காளரிடம் சென்று அவரை நமஸ்கரித்து எனது உத்தரவை அவருக்குத் தெரிவித்து சீக்கிரம் காலனை மீட்டுக்கொண்டு செல். (51) என நந்தி தேவர் யமனை அனுப்பினார். யமனும் அப்படியே ஆகட்டுமென்று புறப்பட்டு கணாதிபராகிய மஹா காளரிடம் சென்று (52) மிகுந்த பயத்தோடு அவரை ஸாஷ்டாங்கமாய் (எட்டு அங்கத்தோடு அதாவது சிரஸ், மார்பு, கண், வாக்கு, மனது, கைகள், காதுகள், பாதங்கள் இவை எட்டு அங்கங்களும் பூமியில் படும்படி நமஸ்கரித்தல் ஸாஷ்டாங்க நமஸ்காரம் எனப்படும்) * நமஸ்கரித்துவிட்டு காலனை விடுவிப்பதற்காக எல்லா விருத்தாந்தங்களையும் சொல்லிவிட்டு (53) பிறகு கணங்களுக்குத் தலைவரான நந்தி கேச்வரர் சொன்ன வார்த்தையையும் சொன்னார். அதுகேட்டு மஹாகாளர் அந்த யமனை கோபித்துக் கொண்டு (54) கெட்ட எண்ணம் கொண்ட ஓ யமனே! நீ முன்பு நடந்த ஸங்கதியை மறந்து விட்டாயா? என்றார். அவ்வாறு மஹா காளருடைய வார்த்தையைக்கேட்டு யமன் பதிலுரைத்ததாவது (55) பிரபுவும், கணத்தலைவருமான ஓ! மஹா காளரே! நான் முந்தைய விருந்தாந்தத்தை மறக்கவே இல்லை இப்பொழுதும் கூட அதை மனதில் நினைத்துக் கொண்டேயிருக்கிறேன் என்று மிகுந்த பயத்தோடு தெரிவித்துக் கொண்டான் (56)

இருபத்தி மூன்றாவது அத்தியாயம் முற்றிற்று.

குறிப்பு :— * நமஸ்காரம் நான்கு வகைப்படும் அஷ்டாங்கம், பஞ்சாங்கம், திரியங்கம், ஏகாங்கம், என்பவையாம் இவற்றுள் அஷ்டாங்கத்திற்குரிய எட்டு அங்கங்களோவெனில், சிரஸ், மார்பு, கண், வாக்கு, மனஸ், கைகள், புஜங்கள், பாதங்கள் இவைகள் அல்லது சிரஸ், இருகைகள், இருகாதுகள், மோவாய், இரு புஜங்கள். இந்த எட்டு அங்கங்களும் பூமியிற்படி நமஸ்கரித்தல். பஞ்சாங்கமோ வெனில் சிரஸ், இருகைகள், இரு புஜங்கள் இந்த ஐந்து அங்கங்களும் பூமியிற்படி நமஸ்கரித்தலாகும். திரியங்கமோ வெனில் இரு கைகளையும், சேர்த்து குவித்து (அஞ்சலி செய்து) சிரஸின்மேல் வைத்துக்கொள்ளல். ஏகாங்கமோவெனில், சிரஸினால்மட்டும் நமஸ்கரித்தலாம்.

॥ अथ चतुर्विंशोऽध्यायः ॥

सङ्करजातीयस्य नामकीर्तनेन शङ्करनामोच्चारण फलम् ॥

ऋषयः — महाकालेन किं पृष्टं पुरा वृत्तं तपोधन । न विस्मृतमिति प्राह यमस्तद्वक्तुमर्हसि ॥ १
सूतः — द्विजस्सौराष्ट्रदेशेऽस्ति तीव्रदाख्यो महाधनः । तस्यासीत्तनयः कश्चित्कौशिकाख्योमहाबलः ॥ २
स्तेयी दुराशयो नित्यं मधुमांसादि भोजनः । सञ्चरत्यनिशं शूद्रैस्सवयोभिश्च तादृशैः ॥ ३
स्नेहं कृत्वाऽयमन्येन केनचित्पापकारिणा । चण्डालोचितमाहारं भुङ्क्ते लज्जा विवर्जितः ॥ ४
सोऽयं कदाचिच्चण्डालनारीं रूपोपशोभिताम् । वर्तयन्नया साकं प्रस्थितश्छन्नवर्त्मना ॥ ५
दृष्ट्वैनं तत्पतिः पापं चण्डालः क्रोधविह्वलः । बध्वा तया दुराचारं सन्ताड्य निजभार्यया ॥ ६
चिच्छेद शेफः पापस्य खड्गेन निशितेन सः । तद्दुःखेन चिरं कालं स्थित्वा पश्चान्ममार ह ॥ ७
बबन्धुरेनं विप्रेन्द्रा यमदूतास्तदा भृशम् । ततश्शिवगणाश्शीघ्रं संप्राप्यैनं तु कौशिकम् ॥ ८

॥ அத சதுர்விம்ஶோऽத்யாய: ॥

ஸங்கரஜாதியில் உண்டானவனின் பெயரை சொன்னதால் சங்கர நாமத்தை உச்சரித்த பலன் ஏற்படுதல்

ருஷய: — மஹாகாளேன கிம் ப்ருஷ்டம் புரா வ்ருத்தம் தபோதன ।
ந விஸ்மிருதமிதிப்ராஹ யமஸ்தத்வக்துமர்ஹஸி ॥ 1
ஸூத: — த்விஜஸ்ஸௌராஷ்ட்ரதேசேऽஸ்தி தீவ்ரதாக்யோ மஹாதன: ।
தஸ்யாஸீத்தனய: கச்சித் கௌசிகாக்யோ மஹாகல: ॥ 2
ஸ்தேயீ துராசயோ நித்யம் மதுமாம்ஸாதி போஜன: ।
ஸஞ்சரத்யனிசம் சூத்ரை: ஸவயோபிச்ச தாத்ருசை: ॥ 3
ஸ்நேஹம் க்ருத்வாऽயமன்யேன கேனசித்பாபகாரிணா ।
சண்டாளோசிதமாஹாரம் புங்க்தே லஜ்ஜா விவர்ஜித: ॥ 4
ஸோऽயம் கதாசிச்சண்டால நாரீம் ரூபோப சோபிதாம் ।
வர்தயன்னன்யா ஸாகம் ப்ரஸ்திதச்சன்ன வர்த்மனா ॥ 5
த்ருஷ்ட்வைனம் ருத்பதி: பாபம் சண்டால: க்ரோதவிஹ்வல: ।
பத்வா தயா துராசாரம் ஸந்தாட்ய நிஜபார்யயா ॥ 6
சிச்சேத சேப: பாபஸ்ய கட்கேன நிசிதேன ஸ: । தத்து:கேன சிரம் காலம் ஸ்தித்வா பச்சான் மமாரஹ 7
பபந்துரேனம் விப்ரேந்த்ரா யமதூதாஸ்ததா ப்ருசம் । ததச்சிவகணாச்சீக்ரம் ஸம்ப்ராப்யைனம் து கௌசிகம்

இருபத்தி நான்காவது அத்தியாயம்

சௌனகாதி முனிவர்கள் கேட்கிறார்கள்: தவத்தையே தனமாகக் கொண்ட ஓ ஸூதமுனிவரே! மஹா காளரால் கேட்கப்பட்டதற்கு யமன் தான் அதை மறக்கவில்லை என்று சொன்ன பூர்வ விருத்தாந்தம் என்னவென்பதை எங்களுக்குச் சொல்லவேண்டும் எனக் கேட்டார்கள். (1) ஸூதர் சொல்லுகிறார்:— ஓ முனிவர்களே! ஸௌராஷ்டிரம் என்னும் தேசத்தில் தீவ்ரதன் என்ற ஓர் பெரிய பணக்காரனான பிராம்மணன் இருந்தான். அவனுக்கு கௌசிகன் என்னும் மிகுந்த துஷ்டனான ஓர் பிள்ளை இருந்தான். (2) அவன் திருடுகிறவனாயும், கெட்ட எண்ணமுடையவனாயும், தினமும் மதுமாமிசங்களை சாப்பிடுகிறவனாயும் தன்னைப் போன்றவர்களான பல சூத்திர ஸ்நேகிதர்களுடன் எப்பொழுதும் ஸஞ்சாரம் செய்கிறவனாயுமிருந்தான். (3) அவன் பாபங்கள் செய்கின்ற மற்றொருவனோடு ஸ்நேகம் செய்து கொண்டு வெட்கமில்லாதவனாய் சண்டாளர்களுக்குரிய ஆஹாரங்களைச் சாப்பிட்டு வந்தான். (4) இப்படி இருக்கையில் ஒருநாள் அவன் மிக அழகுள்ள சண்டாள ஸ்திரீயை அனுஸரித்து அவளுடன் கபடமாய் புறப்பட்டுப் போகையில் (5) அவனுடைய புருஷனான சண்டாளன் அவனைக் கண்டு கோபத்தினால் கலங்கியவனாகி அவனைத் தன் மனைவியோடு சேர்த்துக்கட்டி அடித்து (6) பிறகு கூர்மையான கத்தியால் அந்த பாபியினுடைய ஆண்குறியை அறுத்து விட்டான். பிறகு கௌசிகன் அந்த துக்கத்தோடு வெகுகாலம் இருந்துவிட்டு பின்பு மரணமடைந்தான் (7) ஓ பிராம்மண சிரேஷ்டர்களே! அப்பொழுது யமதூதர்கள் வந்து அவனை இருக்கிக் கட்டும்போது சிவகணங்கள் சீக்கிரம் வந்து அந்த தூதர்களை அடித்து விட்டு கௌசிகனை சிறந்த விமானத்தில் ஏற்றி கைலாஸத்தில் ஸ்ரீசிவ

दिव्यं विमानमारोप्य कैलासे शिवसन्निधौ । स्थापयित्वा यमस्यैतान् दूतान् सन्ताड्य निर्ययुः ॥ ९
तदैव यमदूतास्तु यमं प्राप्याति दुःखिताः । वृत्तान्तं कौशिकस्यैतदुक्त्वा स्वेषाञ्च ताडनम् ॥ १०
रुधिराप्लुष्ट सर्वाङ्गा रुरुदुर्गद्गदस्वराः । श्रुत्वैतेषाञ्च वचनं प्रतस्थे सहसा यमः ॥ ११
शिवान्तिकं समुद्दिश्य श्रीमत्कैलास पर्वते । स ददर्श महाकालं गणानामग्रणी यमः ॥ १२
अधस्तादचलेशस्य समासीनं वरासने । तं दृष्ट्वा कौशिकस्यैतद्वृत्तान्तमभिधाय सः ॥ १३
पुनस्स्वकीयदूतानां पीडामप्य वदत् द्विजाः । श्रुत्वैतत्समहाकालः कोपेन महता युतः ॥ १४
नैतस्य पापलेशोऽपि कौशिकस्य महात्मनः । बाल्येऽयं क्रीडयामास शम्भुनाम्ना द्विजोत्तमः ॥ १५
स तं शंभुर्महात्माऽस्य त्र्यंबकवराह्वयम् । चकार यामकालं तद्दधौ नाम महेशितुः ॥ १६
एवं स्वसुहृदां शंभुस्संकेतेन महामतिः । चकार शंभोर्नामानि पवित्राणि महामतिः ॥ १७
यस्मादयं त्र्यंबकाख्यां दधौ पुण्यां तु कौशिकः । तस्मा देतस्य कैलास प्राप्ति स्सत्यं मयेरितम् ॥ १८
महाकालवचश्श्रुत्वाप्येवं मूढो यमः पुनः । नैतावताऽस्य पापस्य श्रीमत्कैलास पर्वते ॥ १९

திவ்யம் விமானமாரோப்ய கைலாஸே சிவஸன்னிதௌ ।
ஸ்தாபயித்வா யமஸ்யைதான் தூதான் ஸந்தாட்ய நிர்யயுः ॥ 9
ததைவ யமதூதாஸ்து யமம் ப்ராப்யாதி துःகிதாः ।
வ்ருத்தாந்தம் கௌசிகஸ்யைததுக்த்வா ஸ்வேஷாஞ்ச தாடனம் ॥ 10
ருதிராப்லுஷ்ட ஸர்வாங்கா ருருதுர் கத்கதஸ்வராः ।
ச்ருத்வைதேஷாஞ்ச வசனம் ப்ரதஸ்தே ஸஹஸா யமः ॥ 11
சிவாந்திகம் ஸமுத்திச்ய ஸ்ரீமத்கைலாஸ பர்வதே । ஸ ததர்ச மஹாகாளம் கணநாமக்ரணீம் யமः ॥ 12
அதஸ்தாதசலேசஸ்ய ஸமாஸீனம் வராஸனே । தம் த்ருஷ்ட்வா கௌசிகஸ்யைதத்வ்ருத்தாந்தமபிதாய ஸः
புனஸ்ஸ்வகீய தூதானும் பீடாமப்யவதத் த்விஜாः । ச்ருத்வைதத் ஸ மஹாகாளः கோபேன மஹதாயுதः 14
நைதஸ்ய பாபலேசோऽபி கௌசிகஸ்ய மஹாத்மனः । பால்யேऽயம் க்ரீடயாமாஸ சம்புநாம்ஞுத்விஜோத்தமः
ஸ தம் சம்புர் மஹாத்மாऽஸ்ய த்ரியம்பக வராஹ்வயம் । சகார யாமகாலம் தத் ததௌ நாம மஹேசிதுः 16
ஏவம் ஸ்வ ஸுஹ்ருதாம் சம்புஸ்ஸங்கேதேன மஹாமதிः । சகார சம்போர் நாமானி பவித்ராணி மஹாமதிः
யஸ்மாதயம் த்ரயம்பகாக்யாம் ததௌ புண்யாம் து கௌசிகः ।
தஸ்மாதேதஸ்ய கைலாஸ ப்ராப்திஸ்ஸத்யம் மயேரிதம் ॥ 18
மஹாகால வசச்ச்ருத்வாப்யேவம் மூடோ யமः புனः । நைதாவதாऽஸ்ய பாபஸ்ய ஸ்ரீமத்கைலா பர்வதே 19

பிரானுடைய ஸன்னிதியில் கொண்டு விட்டுச் சென்றார்கள். (9) அப்பொழுதே யமதூதர்கள் மிக துக்கமடைந்தவர்களாய் யமனிடம் சென்று கௌசிகனுடைய வரலாறுகளையும் தாங்கள் சிவதூதர்களால் அடிபட்டதையும் சொல்லி உடல் முழுவதும் ரத்தம் பெருக தழுதழுத்த குரலோடு அழுதார்கள். யமனும் அவர்களுடைய வார்த்தையைக்கேட்டு ஸ்ரீ கைலாஸ மலையில் விளங்கும் ஸ்ரீ பரமேச்வரனிடம் செல்வதற்காக சீக்கிரம் புறப்பட்டுச் சென்றான். கைலாஸ மலையின் அடிவாரத்தில் சிங்காஸனத்தில் உட்கார்ந்திருந்த கணத் தலைவரான ஸ்ரீ மஹா காளரைப் பார்த்தான். ஓ முனிவர்களே! அவரிடத்தில் கௌசிகனுடைய வரலாறுகளையும் (13) தன் தூதர்களுக்கு சிவகணங்களால் ஏற்பட்ட உபத்திரவத்தையும் சொன்னான். மஹா காளரும் அதைக்கேட்டு மிகக் கோபம் கொண்டவராகி (14) ஓ யமனே! மஹாத்மாவாகிய இந்த கௌசிகனுக்கு சிறிது பாபங்கூட இல்லை ஏனெனில் இந்த பிராம்மணோத்தமன் சிறு பிராயத்தில் (பால்யத்தில்) "சம்பு" என்ற பிராம்மணப் பையனோடு விளையாடினான். (15) அந்த மஹாத்மாவாகிய சம்பு என்னும் சிறுவனும் இவனுக்கு (கௌசிகனுக்கு) திரியம்பகன் (முக்கண்ணன்) என சிறந்த பெயரை சொல்லி அழைத்தான். ஸ்ரீ மஹேச்வரனுடைய சிறந்த நாமத்தை இவன் ஒரு யாம நேரம் வைத்துக் கொண்டிருந்தான். (16) மேலும் மிக புத்திசாலியான சம்புவானவன் தனது தோழர்களுக்கெல்லாம் இம்மாதிரியாகவே மிக பரிசுத்தங்களான ஸ்ரீ பரமேச்வரனின் நாமாக்களை குறிப்பாய் வைத்திருந்தான். (17) இக் கௌசிகன் மிகப் புண்ணியமான திரியம்பகன் என்ற பெயரை வைத்துக் கொண்டிருந்தபடியால் இவனுக்கு கைலாஸமானது கிடைத்ததென்று நான் ஸத்தியமாய்ச் சொல்லுகிறேன் என்றார். (18) மூடனான யமனும் மஹா காளருடைய வார்த்தையைக் கேட்டும் மறுபடியும் ஓ மஹா காளரே! இப்படிப்பட்ட மஹாபாபிக்கு ஸ்ரீ மஹாகைலாஸ பர்வதத்தில் ஸ்ரீ மஹேச்வரனுடைய

सन्निधौ देवदेवस्य निवासस्संभविष्यति । इत्युक्त्वोल्लङ्घ्य वचनं महाकालस्य धर्मराट् ॥ २०
प्रतस्थे तं विहायाशु महादेवस्य सन्निधिम् । महाकालस्तदा कोपादेनमाहूय भूसुराः ॥ २१
उल्लङ्घ्यते मम वचस्त्वया यम दुरात्मवान् । इत्युक्त्वा ताडयामास निजदण्डेन वक्षसि ॥ २२
दण्डेन ताडितस्तस्य मूर्छामाप यमस्तदा । रुधिराप्लुष्ट सर्वाङ्गो महापर्वत सन्निभः ॥ २३
तत्याज मूर्छां तां कालः क्षणेनायं यदा तदा । समाययौ विधाताऽत्र सेवां कृत्वा महेशितुः ॥ २४
वृत्तान्तमेतच्छ्रुत्वाऽसौ महाकालं प्रणम्य सः । क्षन्तव्योऽयं त्वया मन्तु र्यमस्य गणनायक ॥ २५
इत्युक्त्वा प्रार्थयामास बहुवारं द्विजोत्तमाः । अधुना कौशिकश्शंभोस्सन्निधौ वर्तते महान् ॥ २६
शिवस्य देवदेवस्य नाम्नां माहात्म्यमुत्तमम् । कोवेत्ति मुक्त्वा देवेशं नीलकण्ठमुमापतिम् ॥ २७
तस्मात्त्वमद्य प्रभृति माप्रमादी भवान्तक । इत्युक्त्वा मोचयित्वैनं जगाम स पितामहः ॥ २८
तस्य तद्वचनं श्रुत्वा मोचितोऽयं यमस्तदा । महाकालं प्रणम्याशु स्वपदं प्राप भूसुराः ॥ २९

ஸன்னிதௌ தேவதேவஸ்ய நிவாஸஸ்ஸம்பவிஷ்யதி ।
இத்யுக்த்வோல்லங்க்ய வசனம் மஹாகாளஸ்ய தர்மராட் ॥ 20
ப்ரதஸ்தே தம் விஹாயாசு மஹாதேவஸ்ய ஸன்னிதிம் ।
மஹாகாளஸ்ததா கோபாதேனமாஹூய பூஸுராः ॥ 21
உல்லங்க்யதே மம வசஸ்த்வயா யம துராத்மவான் । இத்யுக்த்வா தாடயாமாஸ நிஜதண்டேன வக்ஷஸி 22
தண்டேன தாடிதஸ்தஸ்ய மூர்சாமாப யமஸ்ததா । ருதிராப்லுஷ்ட ஸர்வாங்கோ மஹாபர்வத ஸன்னிபः 23
தத்யாஜ மூர்சாம் தாம் காலः க்ஷணேனாயம் யதா ததா ।
ஸமாயயௌ விதாதாऽத்ர ஸேவாம் க்ருத்வா மஹேசிதுः ॥ 24
வ்ருத்தாந்தமே தச்ச்ருத்வாऽஸௌ மஹாகாளம் ப்ரணம்ய ஸः ।
க்ஷந்தவ்யோऽயம் த்வயா மந்துர்யமஸ்ய கணநாயக ॥ 25
இத்யுக்த்வா ப்ரார்த்தயாமாஸ பஹுவாரம் த்விஜோத்தமாः ।
அதுனா கௌசிகச்சம்போः ஸன்னிதௌ வர்ததே மஹான் ॥ 26
சிவஸ்ய தேவதேவஸ்ய நாம்னாம் மாஹாத்ம்ய முத்தமம் ।
கோவேத்தி முக்த்வா தேவேசம் நீலகண்டமுமாபதிம் ॥ 27
தஸ்மாத் த்வமத்ய ப்ரப்ருதிமாப்ரமாதீ பவாந்தக । இத்யுக்த்வா மோசயித்வைனம் ஜகாம ஸ பிதாமஹः 28
தஸ்ய தத்வசனம் ச்ருத்வா மோசிதோऽயம் யமஸ்ததா ।
மஹாகாளம் ப்ரணம்யாசு ஸ்வபதம் ப்ராப பூஸுராः ॥ 29

ஸன்னிதியில் இதனால் மட்டும் வாஸம் ஏற்படாது. என்று யமதர்ம ராஜன் ஸ்ரீ மஹாகாளருடைய வார்த்தையை மறுத்துச் சொல்லிவிட்டு (20) அவரை விட்டு ஸ்ரீ மஹாதேவருடைய ஸன்னிதிக்கு போவதற்காக சீக்கிரம் புறப்பட்டான். ஓ பூதேவர்களே! அப்பொழுது மஹாகாளர் மிகுந்த கோபத்தோடு யமனைக் கூப்பிட்டு (21) துராத்மாவாகிய ஓ யமனே! எனது வார்த்தையை நீ மறுத்து விட்டு பதில் கூறினாயல்லவா? எனச்சொல்லி தனது தண்டத்தால் அவனது மார்பில் அடித்தார். (22) மஹாகாளருடைய தண்டத்தால் அடிக்கப்பட்டவுடன் எமன் அப்பொழுது உடல் முழுவதும் ரத்தம் பெற்றவனாய் ஓர் பெரிய மலைக்கு நிகராக மூர்ச்சை அடைந்து சாய்ந்தான். (23) பிறகு அந்த யமன் ஓர் க்ஷணநேரத்தில் மூர்ச்சை தெளிந்து எழுந்திருக்கும் பொழுது பிரும்ம தேவன் ஸ்ரீ மஹேச்வரனை தரிசித்து விட்டு அங்கு வந்தார். (24) பிரும்மதேவர் அந்த விருத்தாந்தத்தைக் கேட்டு மஹாகாளரை நமஸ்கரித்து ஓ கணநாயகரே! யமனால் செய்யப்பட்ட இக்குற்றத்தை தாங்கள் மன்னிக்கவேண்டும். (25) என்று சொல்லி பலமுறை அவரை வேண்டிக்கொண்டார். ஓ யமனே! மஹிமை வாய்ந்த கௌசிகன் இப்பொழுது தேவாதி தேவனான ஸ்ரீ பரமேச்வரனுடைய ஸன்னிதியில் இருக்கிறான் (26) ஸ்ரீ மஹாதேவருடைய நாமாக்களின் சிறந்த மஹிமையை தேவேசரும் நீலகண்டனும் உமாபதியுமான ஸ்ரீ பரமசிவனைத்தவிர வேறு யார்தான் அறிவார்? (27) ஆகையால் ஓ யமனே! நீ இது முதற்கொண்டு அஜாக்கிரதையாய் இராதே என்று சொல்லிவிட்டு யமனை விடுவித்து பிரும்மதேவர் சென்று விட்டார். (28) அவருடைய வார்த்தையைக்கேட்டு பிரம்ம தேவரால் விடுவிக்கப்பட்ட யமன் ஓ முனிவர்களே! அப்பொழுது அந்த மஹாகாளரை நமஸ்கரித்து விட்டு சீக்கிரம் தனதிருப்பிடம் சென்றான். (29) ஓ பிராம்

तदे तदन्तकेनोक्तं न विस्मृतमिति द्विजाः । इत्येवं सोऽन्तकः प्राह महाकालं प्रणम्य सः ॥ ३०
नवाधिकारी कालोऽयं न जानाति किमप्यतः । बद्धस्तवगणैस्स्वामिन्मोचितव्यस्त्वया प्रभो ॥ ३१
यथाऽहं कृपया पूर्वं मोचितो भवता प्रभो । अन्तकस्य वचश्श्रुत्वा महाकालो महाबलः ॥ ३२
प्रेषयित्वा गणं कञ्चिन्मोचयामास भूसुराः । महाकाल गणैर्मुक्तः कालस्संप्राप्य तं यमम् ॥ ३३
तदैतौ तं महाकालं प्रणम्य भयकंपितौ । प्रस्थितौ स्वपदायाशु प्राप्यानुमतिमस्य च ॥ ३४
मध्ये मार्गं यमं प्राह कालोऽयं तद्भटाधिपः । ममाधिकारो भवतो निकटे मास्तु संप्रति ॥ ३५
पश्यांगं रुधिराप्लुष्टं सर्वत्रैव व्रणांकितम् । गच्छेदेतत्क्षणे प्राणो न मोक्षो यदि मे भवेत् ॥ ३६
इति कालस्य वचनं निशम्याह यमः पुनः । किमर्थं शांकरान् दृष्ट्वा गणांस्त्वं कालमूढधीः ॥ ३७
न त्यक्तवान् कौशिकं तं धर्मिष्ठं पापमेववा । दृष्ट्वा शंभुगणान्त्वा मुक्त्वा तेच शिवप्रियम् ॥ ३८
वृत्तान्तमुक्तं यदि चेत्पश्चात्तदुचितां क्रियाम् । नाहं करोमिवा काल फलं भुक्तमतस्त्वया ॥ ३९

ததேததந்தகேனோக்தம் ந விஸ்ம்ருதமிதி த்விஜா: ।
இத்யேவம் ஸோऽந்தக: ப்ராஹ மஹாகாளம் ப்ரணம்ய ஸ: ॥ 30
நவாதிகாரீ காலோऽயம் ந ஜாநாதி கிமப்யத: । பத்தஸ்தவ கணைஸ்ஸ்வாமின் மோசிதவ்யஸ்த்வயா ப்ரபோ
யதாऽஹம் க்ருபயா பூர்வம் மோசிதோ பவதா ப்ரபோ ।
அந்தகஸ்ய வச: ச்ருத்வா மஹாகாளோ மஹாபல: ॥ 32
ப்ரேஷயித்வா கணம் கஞ்சித் மோசயாமாஸ பூஸுரா: ।
மஹாகாளகணைர்முக்த: காலஸ்ஸம்ப்ராப்ய தம் யமம் ॥ 33
ததைதௌ தம் மஹாகாளம் ப்ரணம்ய பயகம்பிதௌ ।
ப்ரஸ்திதௌ ஸ்வபதாயாசு ப்ராப்யாநுமதிமஸ்ய ச ॥ 34
மத்யேமார்கம் யமம் ப்ராஹ காலோऽயம் தத்படாதிப: । மமாதிகாரோ பவதோ நிகடே மாஸ்து ஸம்ப்ரதி 35
பச்யாங்கம் ருதிராப்லுஷ்டம் ஸர்வத்ரைவ வ்ரணாங்கிதம் ।
கச்சேத் தே தத்க்ஷணே ப்ராணோ ந மோக்ஷோயதி மே பவேத் ॥ 36
இதி காலஸ்ய வசனம் நிசம்யாஹ யம: புன: । கிமர்தம் சாங்கரான் த்ருஷ்ட்வா கணாம்ஸ்த்வம் கால மூடதீ:
ந த்யக்தவான் கௌசிகம் தம் தர்மிஷ்டம் பாபமேவ வா ।
த்ருஷ்ட்வா சம்புகணான் நத்வா முக்த்வா தம் ச சிவப்ரியம் ॥ 38
வ்ருத்தாந்த முக்தம் யதி சேத் பச்சாத்ததுசிதாம் க்ரியாம் ।
நாஹம் கரோமி வா கால பலம் புக்தமதஸ்த்வயா ॥ 39

மணர்களே! இக்கதைதான் யமனால் நான் மறக்கவில்லை என்று சொல்லப்பட்டது. பிறகு யமன் இவ்வாறுகச் சொல்லி அந்த மஹாகாளரை நமஸ்கரித்து விட்டு (30) ஓ ஸ்வாமி! இக்காலன் புதிதாக அதிகாரத்திற்கு வந்தவனாகையால் ஒன்றும் அறியவில்லை. ஆகையால் தங்கள் கணங்களால் அவன் கட்டுப்பட்டிருப்பதை தாங்கள் முன்பு தயவால் என்னை விடுவித்தது போலவே விடுவிக்க வேண்டும். என வேண்டினான் மஹாபலவானாகிய மஹாகாளர் இவ்வாறு யமனுடைய வார்த்தையைக்கேட்டு, பிறகு (32) ஓ! ப்ராம்மணர்களே! ஓர் கணத்தை அனுப்பி அக்காலனை விடுவித்தார். பிறகு காலனும் மஹாகாளருடைய கணங்களால் விடுவிக்கப்பட்டு அதன்மேல் யமனிடம் வந்தான் (33) அப்பொழுது அவ்விருவரும் பயத்தால் நடுக்கமுற்றவர்களாகி அந்த மஹாகாளரை நமஸ்கரித்து அவரிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு சீக்கிரம் தனதிருப்பிடம் சென்றார்கள். (34) அப்பொழுது அவர்கள் நடுவழியில் செல்லும்போது படைத்தலைவனான காலன் யமனைப்பார்த்து சொன்னான். ஓ தர்மராஜனே! இனி தங்களிடத்தில் எனக்கு உத்தியோகம் வேண்டாம். (35) என் உடல் முழுவதும் காயம்பட்டு ரத்தம் பெருகுவதைப் பாருங்கள். இப்பொழுது நான் விடுதலை செய்யப்படாவிட்டால் இந்த நிமிஷத்திலேயே எனதுஉயிர் போயிருக்கும். (36) இவ்வாறு காலனுடைய வார்த்தையைக்கேட்டு யமன் மறுபடியும் சொல்லியதாவது மூடபுத்தியுள்ள ஓ காலனே! நீ சிவகணங்களைப் பார்த்தவுடன் ஏன் (37) கௌசிகனை விடவில்லை? அவன் புண்ணியவானாகத்தானிருக்கட்டும் அல்லது பாபியாகத்தானிருக்கட்டும். சிவகணங்களைப்பார்த்தவுடன் ஸ்ரீ பரமேச்வரனின் அன்புக்குரிய அவனை விட்டு அவர்களையும் நமஸ்கரித்துவிட்டு (38) பிறகு வ்ருத்தாந்தங்களை என்னிடம் வந்து தெரிவித்தால் அதற்குத்தக்க காரியத்தை நான் செய்ய மாட்டேனா? அதனால்தான் நீ தக்கபலனை அனுபவித்தாய். (39) நான் முன்பு அதிகாரத்திற்கு புதிதாய் வந்தபோது

पुरा नवाधिकारत्वादज्ञात्वा शम्भवैभवम् । कन्दुकाख्ये महादेशे कदळीपुरमद्भुतम् ॥ ४०
नन्दकः क्षत्रियस्तत्र तद्देशाधिपतिर्महान् । तस्यास्ति भार्या दुश्शीला दर्शनात् कामदा नृणाम् ॥ ४१
रूपलावण्य संपन्ना कामदाख्या मदान्विता । सैषा नित्यं दुराचारा व्यभिचाररता भृशम् ॥ ४२
मुक्त्वा राजानमपरं पुरुषं यञ्च कञ्चन । सुन्दरं रमते दृष्ट्वा स्वयमाहूय कामदा ॥ ४३
चण्डालानपि पापिष्ठा रमते मानवर्जिता । शूद्रं दुर्बुद्धिमाप्येयं क्रीडयित्वाऽमुना सह ॥ ४४
दधौ गर्भं पुनश्चैनं मुक्त्वा प्राप परं द्विजम् । वसुवेधीति विख्यातं पापशेषेण सा पुनः ॥ ४५
क्रीडयित्वाऽमुना पापा पूर्णगर्भाऽसृजत्सुतम् । वसुवेधी मृतः पापी चिरकालेन भूसुराः ॥ ४६
ततो निर्गत्य सा पश्चान्मुक्त्वा पुत्रं शिशुं स्वकम् । शूद्रं तमाप दुर्बुद्धिं प्राक्तनं दुष्टधीरियम् ॥ ४७
क्रीडयित्वा चिरं कालमनेनैषा दुरात्मना । महापापानि भूरीणि चकार किल कामदा ॥ ४८
पुनर्नावं समारुह्य तेन साकं दुरात्मना । द्वीपान्तरं समभ्येतुं ययावंभोधिमध्यमम् ॥ ४९
वायुना ताडिता नौस्सा भिन्नांभोनिधि मध्यगा । तदा ममार पापिष्ठा तेन साकं पयोनिधौ ॥ ५०

புரா நவாதிகாரத்வாதஜ்ஞாத்வா சம்பவைபவம் । கந்து காக்யே மஹாதேசே கதளீபுரமத்புதம் ॥ 40
நந்தக: க்ஷத்ரியஸ்தத்ர தத்தேசாதிபதிர் மஹான் ।
தஸ்யாஸ்தி பார்யா துச்சீலா தர்சனாத் காமதா நிருணாம் ॥ 41
ரூபலாவண்ய ஸம்பன்னா காமதாக்யா மதான்விதா । ஸைஷா நித்யம் துராசாரா வ்யபிசாரரதா ப்ருசம் 42
முக்த்வா ராஜானம பரம் புருஷம் யஞ்ச கஞ்சன । ஸுந்தரம் ரமதே த்ருஷ்ட்வா ஸ்வயமாஹூய காமதா 43
சண்டாளானபி பாபிஷ்டா ரமதே மானவர்ஜிதா । சூத்ரம் துர்புத்திமாப்யேயம் க்ரீடயித்வாऽமுனா ஸஹ
ததைள கர்பம் புனச்சைனம் முக்த்வா ப்ராப பரம் த்விஜம் ।
வஸுவேதீதி விக்யாதம் பாபசேஷேண ஸா புன: ॥ 45
க்ரீடயித்வாऽமுனா பாபா பூர்ணகர்பாऽஸ்ருஜத் ஸுதம் । வஸுவேதீ ம்ருத: பாபீ சிரகாலேன பூஸுரா: ॥ 46
ததோ நிர்கத்ய ஸா பச்சான் முக்த்வா புத்ரம் சிசும் ஸ்வகம் ।
சூத்ரம் தமாப துர்புத்திம் ப்ராக்தனம் துஷ்டதீரியம் ॥ 47
க்ரீடயித்வா சிரம் காலமநேநைஷா துராத்மனா । மஹா பாபானி பூரீணி சகார கில காமதா ॥ 48
புனர்நாவம் ஸமாருஹ்ய தேன ஸாகம் துராத்மனா । த்வீபாந்தரம் ஸமப்யேதும் யயாவம் போதி மத்யமம் 49
வாயுனா தாடிதாநௌஸ்ஸா பின்னாம்போநிதி மத்யகா ।
ததா மமார பாபிஷ்டா தேன ஸாகம் பயோநிதௌ ॥ 50

ஸ்ரீ பரமேச்வர நாமாக்களின் மஹிமையை அறியவில்லை. கந்துகமென்ற பெரிய தேசத்தில் அற்புதமான கதளீபுரம் என்ற ஓர் பட்டிணம் இருக்கிறது மஹிமை வாய்ந்த நந்தகன் என்னும் க்ஷத்ரியன் அந்த தேசத்திற்கு அரசனாய் இருந்து வந்தான். அவனுக்கு கெட்ட நடத்தை உள்ளவளும் பார்த்தவுடன் மனிதர்களுக்கு காமத்தை உண்டு பண்ணுகிறவளும் மிகரூப லாவண்யத்துடன் கூடியவளும், மதம் கொண்டவளுமான காமதை என்னும் பெயருள்ள ஓர் மனைவி இருந்தாள். அக்கெட்ட நடத்தைக்காரியானவள் எப்பொழுதும் விபசாரம் செய்வதில் மிகவும் முயன்றிருந்தாள். (42) அந்த காமதையானவள் மானம் கெட்டவளாகி அரசனை விட்டு விட்டு சண்டாளர்களாயினும் அழகுள்ள மற்றயாராயினும் பார்த்து அவனை தானே கூப்பிட்டு அவனோடு ஸம்போகம் செய்வாள். இப்படி இருக்கையில் அவள் துர்புத்தி என்ற சூத்திரனை அடைந்து அவனோடு புணர்ந்து (44) கர்ப்பம் தரித்தாள். பிறகு அவனையும் விட்டு பாப சேஷத்தினால் வஸுவேதி என்ற மற்றொரு பிராம்மணனை அடைந்து (45) அவனுடன் கிரீடித்து வருகையில் அப்பாதகி பூர்ணகர்ப்பம் உடையவளாகி ஓர் பிள்ளையைப் பெற்றாள். ஓ தரணிதேவர்களே! சிலகாலம் சென்றபிறகு பாதகனான வஸுவேதி மரணமடைந்தான். (46) பிறகு அந்த துர்புத்திக்காரி தன் குழந்தையை போட்டுவிட்டு வெளிப்பட்டு மறுபடியும் துர்புத்தி என்ற முந்திய சூத்திரனிடமேபோய் சேர்ந்தாள். (47) அந்த துராத்மாவுடன் வெகுகாலம் கிரீடித்திருந்து அக்காமதையானவள் மிகக் கொடிய பல பாபங்களைச்செய்து வந்தாள் (48) பின்பு அவள் அந்த துராத்மாவோடு வேறு தீவிற்குச் செல்வதற்காக கப்பலில் ஏறி நடு ஸமுத்திரத்தில் செல்லும் பொழுது (49) அக்கப்பல் காற்றால் அடிப்பட்டு உடைந்து அப்பொழுது அப்பாதகி அவனோடு கூட அக்கடலில் மாண்டாள். (50) அப்பொழுது யமதூதர்கள் அதேக்ஷணத்தில் அவனையும் அவளையும் கட்டி நரகமாகிற கடலில் தள்ளி

यमदूतास्तदा बध्वा तेनैनां नरकार्णवे । निपात्य क्रकचैर्घोरैराबध्नंस्तत्क्षणात् किल ॥ ५१
तदानीं शाङ्कराः काल समागत्य महाबलाः । सन्ताड्य स्वायुधैर्घोरैर्मोचयित्वैनमञ्जसा ॥ ५२
दिव्यं विमानमारोप्य ययुश्शिवपदं प्रति । तदा शिवगणान् दृष्ट्वा सोऽहं क्रोधसमन्वितः ॥ ५३
किमर्थमेनं पापिष्ठं पापामेनांच भो गणाः । दिव्यं विमानमारोप्य कुत्रवा नयथाधुना ॥ ५४
एवं कटुवचोऽवोचमधिकारो नवो यतः । श्रुत्वा मदीयवचनं ते सर्वे क्रोधविह्वलाः ॥ ५५
बध्वा मां दृढपाशेन संताड्य भृशमुद्भटाः । मधस्ताच्चक्रवालस्य कोटरे कुत्रचिद् गृहे ॥ ५६
निपात्याधोमुखं भूतमेकमाहूय दुर्बलम् । दत्वा मदधिकारं ते तस्मै भूताय काल हा ॥ ५७
तं शूद्रमेनां पापिष्ठां निन्युर्हि शिवसन्निधिम् । तस्थतुस्तत्र तावेतौ श्रीमत्कैलास पर्वते ॥ ५८
सेवायै चन्द्रचूडस्य विधिविष्णू समाहितौ । वृत्तान्तमेतत्प्रोवाच चित्रगुप्तो मधुद्विषम् ॥ ५९
श्रुत्वा हरिस्तदा दुःखाद्ब्रह्मणा सहितः स्वयम् । प्रतस्थे बोधितुं शंभुं शिवलोकं प्रति द्रुतम् ॥ ६०

யமதூதாஸ்ததா பத்வா தேனைனும் நரகார்ணவே ।
நிபாத்ய க்ரகசைர்கோரைராபத்னன் தத்க்ஷணாத் கில ॥ 51
ததானீம் சாங்கரா: கால ஸமாகத்ய மஹாபலா: ।
ஸந்தாட்ய ஸ்வாயுதைர் கோரைர் மோசயித்வைனமஞ்ஜஸா ॥ 52
திவ்யம் விமானமாரோப்ய யயுச்சிவபதம் ப்ரதி ।
ததா சிவகணான் த்ருஷ்ட்வா ஸோऽஹம் க்ரோத ஸமன்வித: ॥ 53
கிமர்தமேனம் பாபிஷ்டம் பாபாமேனாஞ்ச போ கணா: । திவ்யம் விமானமாரோப்ய குத்ரவா நயதாதுனா 54
ஏவம் கடுவசோऽவோசமதிகாரோ நவோ யத: ।
ச்ருத்வா மதீயவசனம் தே ஸர்வே க்ரோதவிஹ்வலா: ॥ 55
பத்வா மாம் த்ருடபாசேன ஸந்தாட்ய ப்ருசமுத்படா: ।
அதஸ்தாச்சக்ரவாளஸ்ய கோடரே குத்ரசித் க்ருஹே ॥ 56
நிபாத்யாதோமுகம் பூதமேகமாஹூய துர்பலம் ।
தத்வா மததிகாரம் தே தஸ்மை பூதாய கால ஹா ॥ 57
தம் சூத்ரமேனாம் பாபிஷ்டாம் நின்யுர்ஹி சிவ ஸன்னிதிம் ।
தஸ்ததுஸ்தத்ர தாவேதௌ ஸ்ரீமத்கைலாஸ பர்வதே ॥ 58
ஸேவாயை சந்த்ரசூடஸ்ய விதிவிஷ்ணூ ஸமாஹிதௌ ।
வ்ருத்தாந்தமேதத் ப்ரோவாச சித்ரகுப்தோ மதுத்விஷம் ॥ 59
ச்ருத்வா ஹரிஸ்ததா து:காத் ப்ரம்ஹணா ஸஹித: ஸ்வயம் ।
ப்ரதஸ்தே போதிதும் சம்பும் சிவலோகம் ப்ரதி த்ருதம் ॥ 60

கூர்மையான ரம்பங்களால் அறுத்தார்கள். (51) ஓ காலனே! உடன் மஹா பலசாலிகளான சிவகணங்கள் வந்து மிகக் கொடூரங்களான தங்கள் ஆயுதங்களால் அந்த யமதூதர்களை அடித்து அவனையும் அவனையும் மீட்டு சீக்கிரம் (52) திவ்ய விமானத்தில் ஏற்றிக்கொண்டு சிவபதம் அடைந்தார்கள். அப்பொழுது நான் சிவகணங்களைப்பார்த்துக் கோபம் கொண்டவனாகி (53) ஓ கணங்களே! இப்பாபிகளை ஏன்? திவ்விய விமானத்தில் ஏற்றிக்கொண்டு எங்கு கொண்டு போகிறீர்கள்? (54) என்று நான் அப்பொழுது புதிதாக அதிகாரத்திற்கு வந்தபடியால் அவர்களைக் கொடுமையாய் பேசினேன். அவர்கள் யாவரும் என் பேச்சைக்கேட்டு கோபத்தால் கலங்கியவர்களாகி (55) மிகுந்த இறுமாப்போடு என்னை கெட்டியான ஓர் பாசத்தால் கட்டி சக்ரவாள மலையின் அடிவாரத்திலுள்ள குகையில் ஓர் இடத்தில் (56) தலைகீழாகத் தள்ளிவிட்டு ஆஹா ஓ காலனே! பலமில்லாதவனான ஓர் பூதத்தை அழைத்து அதனிடத்தில் எனது உத்தியோகத்தை ஒப்புவித்துவிட்டு (57), அந்த சூத்திரனையும் அப்பாதகியையும் சிவன் ஸன்னிதிக்கு அழைத்துச் சென்றார்கள். அவ்விருவர்களும் கைலாஸ பர்வதத்தில் இருந்து வந்தார்கள். (58) பிறகு விஷ்ணுவும், பிரம்மாவும் சேர்ந்து ஸ்ரீ பரமேச்வரனை ஸேவிப்பதற்காக புறப்படும் ஸமயத்தில் சித்ரகுப்தன் அவர்களிடம் சென்று ஸ்ரீ விஷ்ணுவினிடம் அந்த வ்ருத்தாந்தங்களைத் தெரிவித்தான். (59) விஷ்ணுவும் அதைக் கேட்டு துக்கத்தோடு தானும் பிரும்மதேவனோடு கூட ஸ்ரீ பரமேச்வரனிடத்தில் தெரிவிப்பதற்காக சீக்கிரம் புறப்பட்டு சிவலோகம் சென்றார்கள். (60) அங்கு

तत्र विघ्नेश्वरं दृष्ट्वा कैलासे तौ सुराधिपौ । ऊचतुस्तं प्रणम्याशु वृत्तान्तं मम मन्दतः ॥ ६१
श्रुत्वैतन्मम वृत्तान्तं ज्ञात्वा विघ्नेश्वरस्तदा । कोपेन महता युक्तः प्रोवाच वचनं द्विजाः ॥ ६२
साकं शिवगणैरेषः प्रवृत्तः कलहाय हि । यमस्तदुचिता शिक्षा कृतातैरस्य दुर्मतेः ॥ ६३
इति विघ्नेशवचनं निशम्यैतौ भयान्वितौ । क्षमस्व मन्तुमेनं त्वं सर्वविघ्नाधिप प्रभो ॥ ६४
न जानाति यमो मूढो नूतनोऽयं दुराशयः । इत्युक्त्वा तौ गणाध्यक्षं नेमतुर्दण्डवत्क्षितौ ॥ ६५
ततः प्रसन्नः प्रोवाच भगवान् गणनायकः । वीरभद्रगणैरेष यमो नीतो महाबलैः ॥ ६६
चक्रवालगिरावास्ते संप्रत्यभ्येत्य शीघ्रतः । आनय त्वमिहेदानीं यममेनं सुदुःखितम् ॥ ६७
अचलाख्यं ततो भूतमेवमुक्त्वा गणेश्वरः । प्रेषयामास भगवान् दयया काल केवलम् ॥ ६८
इति तस्य वचश्श्रुत्वा भूतो निर्गत्य शीघ्रतः । आनयामास मां काल गणेशस्यान्तिकं द्रुतम् ॥ ६९
विघ्नेश्वरं प्रणम्याहं पाणिं बध्वाऽन्तिकेऽवसम् । तदा प्रोवाच भगवान्मां वीक्ष्याप्रहसन्निव ॥ ७०
त्वयैतौ पीडितौ पापबुद्ध्या यम नचान्यथा । न च जानासि सुकृतं पुण्ययोस्तयोर्यम ॥ ७१

தத்ர விக்னேச்வரம் த்ருஷ்ட்வா கைலாஸே தௌ ஸுராதிபௌ ।
ஊசதுஸ்தம் ப்ரணம்யாசு வ்ருத்தாந்தம் மம மந்ததஃ ॥ 61
ச்ருத்வைதன் மம வ்ருத்தாந்தம் ஞாத்வா விக்னேச்வரஸ்ததா ।
கோபேன மஹதா யுக்தஃ ப்ரோவாச வசனம் த்விஜாஃ ॥ 62
ஸாகம் சிவகணைரேஷஃ ப்ரவ்ருத்தஃ கலஹாய ஹி । யமஸ்ததுசிதா சிக்ஷா க்ருதா தைரஸ்ய துர்மதேஃ ॥ 63
இதி விக்னேசவசனம் நிசம்யைதௌ பயான்விதௌ ।
க்ஷமஸ்வ மந்து மேனம் த்வம் ஸர்வவிக்னாதிப ப்ரபோ ॥ 64
ந ஜாநாதி யமோ மூடோ நூதநோயம் துராசயஃ ।
இத்யுக்த்வா தௌ கணாத்யக்ஷம் நேமதுர்தண்டவத்க்ஷிதௌ ॥ 65
ததஃ ப்ரஸன்னஃ ப்ரோவாச பகவான் கணநாயகஃ । வீரபத்ரகணைரேஷ யமோ நீதோ மஹாபலைஃ ॥ 66
சக்ரவாளகிராவாஸ்தே ஸம்ப்ரத்யப்யேத்ய சீக்ரதஃ । ஆநய த்வமிஹேதாநீம் யமமேனம் ஸுதுஃகிதம் 67
அசலாக்யம் ததோ பூதமேவ முக்த்வா கணேச்வரஃ । ப்ரேஷயாமாஸ பகவான் தயயா கால கேவலம் ॥ 68
இதி தஸ்ய வசச்ச்ருத்வா பூதோ நிர்கத்ய சீக்ரதஃ । ஆநயாமாஸ மாம் கால கணேசஸ்யாந்திகம் த்ருதம் 69
விக்னேச்வரம் ப்ரணம்யாஹம் பாணிம் பத்வாऽந்திகேऽவஸம் ।
ததஃ ப்ரோவாச பகவான் மாம் வீக்ஷ்யாபஹஸன்னிவ ॥ 70
த்வயைதௌ பீடிதௌ பாபபுத்யா யம நசான்யதா । ந ச ஜாநாஸி ஸுக்ருதம் புண்யயோரநயோர்யம 71

அவ்விரு தேவர்களும் ஸ்ரீ விக்னேச்வரரைப் பார்த்து அவரை நமஸ்கரித்து அவரிடத்தில் என்னுடைய வரலாறுகளை மிருதுவாய் சொன்னார்கள். (61) ஓ முனிவர்களே! அப்பொழுது ஸ்ரீ விக்னேச்வரர் எனது விருத்தாந்தங்களைக் கேட்டு மிகுந்த கோபத்துடன் சொன்னதாவது ; (62) அந்த யமன் சிவகணங்களுடன் சண்டைக்கு ஆரம்பித்தானல்லவா ? ஆகையால் அப்புத்தி கெட்ட யமனுக்கு அவர்களால் தக்க சிக்ஷை செய்யப்பட்டது என்றார். (63) அவருடைய வார்த்தையைக் கேட்டு அவ்விருவர்களும் பயமடைந்தவர்களாகி, ஸகல விக்கினங்களுக்கும் அதிபரான பிரபுவே! தாங்கள் இந்த அபராதத்தை மன்னிக்க வேண்டும். (64) மஹா மூடனும், கெட்ட எண்ணம் கொண்டவனுமான இந்த யமன் புதிதாகையால் ஒன்றும் அறியவில்லை என்று சொல்லி அவ்விருவர்களும் கணாதிபரை பூமியில் தண்டம்போல் நமஸ்கரித்தார்கள். (65) பிறகு விக்னேச்வரர் பிரஸன்னராகி, அசலன் என்ற ஓர் பூதத்தைப் பார்த்துச் சொன்னதாவது : ஓ அசலா! இந்த யமன் மிக பலசாலிகளான வீரபத்ரகணங்களால் கொண்டுபோகப்பட்டு இப்பொழுது சக்ரவாளகிரியில் இருக்கிறான். நீ சீக்கிரம் அங்கு சென்று மிக வருத்தமடைந்திருக்கிற அந்த யமனை இங்கு அழைத்து வா எனச் சொல்லி தயவோடு அப்பூதத்தை அனுப்பினார். (68) ஓ காலனே! இவ்வாறு அவருடைய வார்த்தையைக் கேட்டு பூதமானது புறப்பட்டு சீக்கிரம் என்னை கணேசருக்கு முன்பாக அழைத்து வந்தது. (69) பிறகு நான் விக்னேச்வரரை நமஸ்கரித்து கைகட்டிக்கொண்டு அவர் அருகில் நின்றேன். அப்பொழுது அந்த கணேசர் புன்சிரிப்புடன் என்னைப்பார்த்துச் சொன்னதாவது: (70) ஓ யமனே! நீ இவர்களை பாபம் செய்தவர்களென்ற எண்ணத்தால் வருத்தினாயே அன்றி வேறில்லை.

दुर्बुद्धेरस्य शूद्रस्य बीजं गर्भं दधावियम् । पुनश्च विप्रं प्राप्यैषा वसुवेधिं महाविटम् ॥ ७२
असूत पुत्रं तद्गेहे कालपाकेन वै यम । ममार स यदा विप्रस्तदैषा तं शिशुं स्वकम् ॥ ७३
मुक्त्वा द्विजगृहे प्राप दुर्बुद्धिमियमन्तक । ववृधे विप्रगेहेऽसौ शिशुरस्यास्सुतोऽन्तक ॥ ७४
तस्थे कृषिञ्च कुर्वाणो विप्रवेश्मनि शूद्रवत् । विप्रस्य वसुवेधेर्या भार्याऽऽसीन्मानिनी यम ॥ ७५
सा तं द्विपक्ष पुत्रत्वात्संकरत्वाच्च संकरम् । नाम चक्रेऽर्थवत्तस्य शूद्रपुत्रस्य सत्यवाक् ॥ ७६
वदन्ति तमिमं लोकास्स्वव्युत्पन्नाहि शंकरम् । यस्मादयं शंकराख्यां दधावद्यानयोस्सुतः ॥ ७७
तेन पुण्येन महता कैलास प्राप्तिरेतयोः । शिवस्य देवदेवस्य नाम्नां सर्वाघहारिणाम् ॥ ७८
माहात्म्यं तत्वतो वेत्ति कोवा यम सुशोभनम् । ज्ञात्वा ये तु महादेव नाममाहात्म्यमुत्तमम् ॥ ७९
पुत्रानुत्पाद्य विधिना नाम चक्रुर्महेशितुः । तेषां फलं मया वक्तुं न शक्यं वर्षकोटिभिः ॥ ८०

துர்புத்தேரஸ்ய சூத்ரஸ்ய பீஜம் கர்பம் ததாவியம் ।
புனச்ச விப்ரம் ப்ராப்யைஷா வஸுவேதிம் மஹாவிடம் ॥ 72

அஸூத புத்ரம் தத்கேஹே காலபாகேன வை யம । மமார ஸ யதா விப்ரஸ்ததைஷா தம் சிசும் ஸ்வகம் 73

முக்த்வா த்விஜக்ருஹே ப்ராப துர்புத்திமியமந்தக ।
வவ்ருதே விப்ரகேஹேऽஸௌ சிசுரஸ்யாஸ்ஸுதோऽந்தக ॥ 74

தஸ்தே க்ருஷிஞ்ச குர்வாணோ விப்ரவேச்மனி சூத்ரவத் ।
விப்ரஸ்ய வஸுவேதேர் யா பார்யாऽऽஸீன் மானினீ யம ॥ 75

ஸா தம் த்விபக்ஷபுத்ரத்வாத் ஸங்கரத்வாச்ச ஸங்கரம் ।
நாம சக்ரேऽர்தவத்தஸ்ய சூத்ரபுத்ரஸ்ய ஸத்யவாக் ॥ 76

வதந்தி தமிமம் லோகாः ஸ்வவ்யுத்பன்னுஹி சங்கரம் ।
யஸ்மாதயம் சங்கராக்யாம் ததாவ த்யானயோஸ்ஸுத: ॥ 77

தேன புண்யேன மஹதா கைலாஸ ப்ராப்திரேதயோ: ।
சிவஸ்ய தேவதேவஸ்ய நாம்னும் ஸர்வாகஹாரிணும் ॥ 78

மாஹாத்ம்யம் தத்வதோ வேத்தி கோவா யம ஸுசோபனம் ।
ஞாத்வா யே து மஹாதேவ நாமமாஹாத்ம்யமுத்தமம் ॥ 79

புத்ரானுத்பாத்ய விதினு நாம சக்ருர்மஹேசிது: । தேஷாம் பலம் மயா வக்தும் ந சக்யம் வர்ஷகோடிபி: 80

புண்ணியசாலிகளான இவர்கள் செய்த புண்ணியத்தை நீ அறியவில்லை. (71) இந்த ஸ்திரியானவள் துர்புத்தி என்ற சூத்திரனிடமிருந்து கர்ப்பம் தரித்தபிறகு மஹாவிடனாகிய வஸுவேதி என்ற பிராம்மணனை மறுபடி அடைந்து பக்குவமான காலத்தில் அவன் வீட்டில் பிள்ளையைப் பெற்றாள். பிறகு அந்த பிராம்மணன் இறந்தவுடன் அவள் தன் குழந்தையை (73) அந்த பிராம்மணனுடைய வீட்டில் விட்டுவிட்டு பிறகு அந்த துர்புத்தியிடமே சென்றுவிட்டாள். ஓ அந்தகா! பிறகு அவள் பிள்ளையாகிய அக்குழந்தை பிராம்மணன் வீட்டிலே வளர்ந்து வந்தது. (74) அச்சிறுவன் பிராம்மணன் வீட்டில் சூத்திரன்போல் வேலைசெய்து கொண்டு வந்தான். ஓ யமனே! அப்பொழுது வசுவேதியின் கற்புடைய மனைவியானவள் (75) அப் பிள்ளை தனது சக்களத்தியின் பிள்ளையாகவும், ஸங்கர ஜாதியில் உண்டானதாலும் ஸத்தியமான வார்த்தையை உடையவளான அவள் அந்த பெயரின் பொருள் விளங்கும்படி அச் சூத்திரனின் பிள்ளைக்கு 'சங்கரன்' எனப் பெயரிட்டாள். (76) அதைக் கொண்டு உலக ஜனங்கள் தங்களது பாஷை வழக்கத்தினால் அவனை சங்கரன் என்று அழைத்தார்கள். இவ்விதமாய் அவர்களுடைய பிள்ளையானவன் இப்பொழுது சங்கரன் என்ற பெயரைக் கொண்டிருக்கிறான். (77) அப்படிப்பட்ட பெரிய புண்ணியத்தால் இவர்களுக்குக் கைலாஸ பதவி கிடைத்திருக்கிறது. ஓ யமனே! தேவாதி தேவனாகிய ஸ்ரீ சிவபிரானுடைய எல்லா பாபங்களையும் போக்கும் மங்களமான நாமாக்களின் மஹிமையை யார்தான் உண்மையாய் அறிவார்? எவர்கள் ஸ்ரீ மஹாதேவருடைய நாமாக்களின் சிறந்த மஹிமையை அறிந்து (79) முறைப்படி பிள்ளைகளைப் பெற்று அவர்களுக்கு ஸ்ரீ மஹேச்வரனுடைய பெயரை வைக்கின்றார்களோ அவர்களுடைய புண்ணிய பலனை கோடி வருஷங்களானபோதிலும் நம்மால் சொல்ல முடியாது என்றார். (80)

इत्थं निशम्य वचनं विघ्नेशस्यामितौजसः । भयकंपितसर्वाङ्गो गन्तुं स्मृत्वा स्वकं तदा ॥ ८१
प्रणम्य दण्डवत्भीत्या भूतले काल भक्तितः । ममापराधो देवेश क्षन्तव्योऽयं गणेश्वर ॥ ८२
இருக்கும்பொழுது சுக்ல பட்சத்தில் சுபமான உத்தர நக்ஷத்திரத்தில் காலையில் எழுந்து நியமத்துடன் கூடியவனாய் (2) கல்யாண கோலத்தோடு கூடிய சரீரத்தை உடையவர்களான பார்வதி பரமேச்வரர்களை தியானித்துக்கொண்டு வெளியில் சென்று பரிசுத்தமான ஜலத்தில் நியமத்துடன் ஸ்நானம் செய்து (3) நித்ய கர்மங்களைச் செய்து பிறகு சிவ பூஜையில் முயன்றவனாகி ஸகல ஜீவராசிகளுக்கும் அதிபரும், ஸ்ரீ மஹாதேவருமான பரமேச்வரனை பூஜிக்க வேண்டும். (4) சிவ பூஜை இல்லாதவனும், நித்ய கர்மங்களைச் செய்து கொண்டு தங்கத்தினால் ஸ்ரீ பார்வதி பரமேசுவரர்களுடைய உருவங்களை (பிரதிமைகளை) செய்து (5) அவைகளை விதிப்படி நல்ல (சுத்த) ஜலத்தினால் நிரப்பப்பட்ட ஓர் கும்பத்தின்மேல் வைத்து அபிஷேக விதிப்படி ஸ்ரீ ஜகத்குருவுக்கு அபிஷேகம் செய்யவேண்டும். (6) ஓ முனிவர்களே! பிறகு இந்த புத்திசாலியானவன் விவாஹ முறைப்படி எல்லா உலகங்களுக்கும் அன்னையான ஸ்ரீ பார்வதியோடு தேவேசரான ஸ்ரீ மஹாதேவருக்குத் திருக்கல்யாணம் செய்விக்க வேண்டும். (7) பிறகு பல வ்யஞ்சனங்களோடு கூடிய நைவேத்தியங்களையும் செய்து, பிறகு வேதமறிந்தவர்களும், சிவ பக்தர்களும், இந்த்ரிய ஜயம் உள்ளவர்களும், தன் மனைவியுடன் கூடியவர்களுமான பிராம்மணர்களை அநேகம் தானங்களால் ஸந்தோஷிக்கச் செய்து, பாயஸங்களுடனும், பக்ஷ்ய போஜ்யங்களுடனும் போஜனம் அளிக்க வேண்டும். (8, 9) பிறகு சிவாலயத்திற்குச் சென்று ஸ்வாமியையும், அம்பிகையையும் நமஸ்கரித்து, தன் சக்திக்குத் தக்கபடி உபசாரங்களைச் செய்து (10) மூன்று முறை பிரதக்ஷிணங்கள் செய்து, பக்தியுடன் கூடிய மனதுள்ளவனாய் நமஸ்கரித்து, சீக்கிரம் தன் வீடு சேர்ந்து இரவில் சிவ பக்தர்களான சிறந்த பிராம்மணர்களோடு, கனி வர்க்கங்களோடு கூடிய பாயஸம் முதலியவைகளை ஸ்ரீ பரமேச்வரனை தியானித்துக்கொண்டே சாப்பிட்டு அன்று இரவில் தர்ப்பங்கள்மீது படுக்கவேண்டும். (11, 12) பிறகு காலையில்

पुनः प्रातस्समुत्थाय कृतकृत्याह्निकक्रियः । दद्याद्देवस्य देव्याश्च प्रतिमे द्वे मनोहरे ॥ १३
शिष्टयोरुभयोर्भक्त्या द्विजयोश्शिवभक्तयोः । भुञ्ज्यादस्मिन्दिने भक्त्या एकवारतया द्विजाः ॥ १४
कुर्यादेवं व्रतमिदं यस्तु सर्वाघनाशकम् । स भोगान्विपुलान् भुक्त्वा स्वेच्छया शङ्करप्रियः ॥ १५
प्राप्यान्ते पर्वतश्रेष्ठं कैलासं शङ्करालयम् । तत्र गत्वा चिरं भोगान्मोक्षं याति शिवाज्ञया ॥ १६
व्रतमेतदनुष्ठाय पुरा विष्णुर्जगन्मयः । भार्यामवाप परमां महालक्ष्मीं द्विजोत्तमाः ॥ १७
ब्रह्मा सरस्वतीं प्राप वृत्रारिश्च पुलोमजाम् । अश्विनीप्रमुखास्ताराश्शशीच प्राप्तवानतः ॥ १८
सप्तविंशति संख्याका भार्यात्वेन पुरा किल । सूर्योऽपि तेजसां राशिरुषां प्राप प्रियां पराम् ॥ १९
लोपामुद्रामगस्त्योऽपि चरित्वैतद्व्रतं महत् । भार्यामवाप विप्रेन्द्रा ऋषीणां प्रवरः पुरा ॥ २०
विष्णोः कुमार्यावमृतवल्ली सौन्दर्यवल्लिके (चन्द्रवल्याख्यके परे) । पुराव्रतमिदं पुण्यं चरित्वास्य प्रभावतः ॥
स्कन्दप्रसादं लब्ध्वैते पुनश्च स्वेच्छया जनिम् । संप्राप्य देवसेनाख्यां लवल्याख्यां क्रमादिमे ॥ २२

புன: ப்ராதஸ்ஸமுத்தாய க்ருதக்ருத்யான்ஹிகக்ரிய: ।
தத்யாத்தேவஸ்ய தேவ்யாச்ச ப்ரதி மே த்வே மனோஹரே ॥ 13
சிஷ்டயோருபயோர்பக்த்யா த்விஜயோச்சிவபக்தயோ: ।
புஞ்ஜ்யா தஸ்மின் தினே பக்த்யா ப்யேகவாரதயா த்விஜா: ॥ 14
குர்யாதேவம் வ்ரதமிதம் யஸ்து ஸர்வாகநாசகம் ।
ஸ போகான் விபுலான் புக்த்வா ஸ்வேச்சயா சங்கரப்ரிய: ॥ 15
ப்ராப்யாந்தே பர்வதச்ரேஷ்டம் கைலாஸம் சங்கராலயம் ।
தத்ர கத்வா சிரம் போகான் மோக்ஷம் யாதி சிவாக்ஞயா ॥ 16
வ்ரதமேததனுஷ்டாய புரா விஷ்ணுர்ஜகன்மய: । பார்யாமவாப பரமாம் மஹாலக்ஷ்மீம் த்விஜோத்தமா: 17
ப்ரும்ஹா ஸரஸ்வதீம் ப்ராப வ்ருத்ராரிச்ச புலோமஜாம் ।
அச்வினீ ப்ரமுகாஸ்தாராச்சசீச ப்ராப்தவானத: ॥ 18
ஸப்தவிம்சதி ஸங்க்யாகா பார்யாத்வேன புரா கில ।
சூர்யோऽபி தேஜஸாம்ராசிருஷாம் ப்ராப ப்ரியாம்பராம் ॥ 19
லோபாமுத்ராமகஸ்த்யோऽபி சரித்வைதத்வ்ரதம் மஹத் ।
பார்யாமவாப விப்ரேந்த்ரா ருஷீணாம் ப்ரவர: புரா ॥ 20
விஷ்ணோ: குமார்யாவம்ருதவல்லீ ஸௌந்தர்யவல்லி (சந்த்ரவல்லாக்ய கேபரே) ।
புரா வ்ரதமிதம் புண்யம் சரித்வாஸ்ய ப்ரபாவத: ॥ 21
ஸ்கந்தப்ரஸாதம் லப்த்வைதே புனச்ச ஸ்வேச்சயா ஜனிம் ।
ஸம்ப்ராப்ய தேவஸேனாக்யம் லவல்யாக்யாம் க்ரமாதிமே ॥ 22

எழுந்து நித்ய கர்மங்களைச் செய்து, மனத்தைக் கவரும் அழகு வாய்ந்த ஸ்ரீ மஹாதேவருடையவும், ஸ்ரீ அம்பிகையுடையவுமான அவ்விரு பிரதிமைகளை ஆசாரசீலர்களும் சிவபக்தர்களுமான இரண்டு பிராம்மணர்களுக்குத் தானம் செய்யவேண்டும். அன்றைய தினத்தில் ஒரு தடவைதான் போஜனம் செய்ய வேண்டும். (13, 14) எவன் ஸகல பாபங்களையும் போக்கக்கூடிய இந்த விரதத்தை இவ்விதமாய் அனுஷ்டிக்கிறானோ அவன் ஸ்ரீ சங்கரருக்கு மிகப் பிரியமுள்ளவனாகி தன் விருப்பப்படி அளவற்ற போகங்களை அனுபவித்து (15) முடிவில் மலைகளில் சிறந்ததும், ஸ்ரீ சங்கரருடைய இருப்பிடமுமான கைலாஸத்தை அடைந்து, அங்கு வெகு காலம் இருந்து, ஸகல போகங்களையும் அனுபவித்து, சிவாக்ஞையால் மோக்ஷமடைவான். (16) ஓ முனிவர்களே! முன்பு ஜகத் ஸ்வரூபியான விஷ்ணுவானவர் இந்த விரதத்தை அனுஷ்டித்து, அதனால் சிறந்த மஹாலக்ஷ்மியை மனைவியாக அடைந்தார். அவ்விதமே இந்த விரதத்தால் ப்ரம்மதேவன் ஸரஸ்வதியையும், இந்திரன் இந்திராணியையும் மனைவியாக அடைந்தார்கள். இந்த விரதத்தால் முன்பு சந்திரன் அச்வதி முதலிய 27 (இருபத்தேழு) நக்ஷத்திரங்களையும் மனைவிகளாக அடைந்தான். ஒளிகளுக்கு இருப்பிடமான சூரியனும் சிறந்தவளான உஷாதேவியை நாயகியாக அடைந்தான். (19) ஓ ப்ராம்மண சிரேஷ்டர்களே! பூர்வத்தில் முனிவர்களில் சிறந்த அகஸ்திய முனிவர் இந்த பெரிய விரதத்தை அனுஷ்டித்து அதனால் லோபாமுத்ரையை மனைவியாக அடைந்தார். (20) முன்பு ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் பெண்களான அம்ருதவல்லி, ஸௌந்தர்யவல்லி என்ற இருவர்களும் இப்புண்ணிய விரதத்தை அனுஷ்டித்து அதன் மகிமையால் (21) ஸ்ரீ ஸ்கந்தருடைய அருளை அடைந்து மறுபடியும் அவர்கள் தங்கள் இஷ்டப்படி முறையே தேவஸேனை, வல்லி என்ற பெயர்களோடு வேறு

स्कन्दमेव पतिं लब्ध्वा देवसेना धुरन्धरम् । रेमाते तेन परया प्रीत्या ते ब्राह्मणोत्तमाः ॥ २३
व्रतमेतच्चरित्वाऽन्या वेदांगस्य महामुनेः । पुत्री सुकेशी (सुकेशा) लावण्यसिन्धुः श्रीनन्दिकेश्वरम् ॥ २४
कैलासवासिनं शंभुगणानामग्रणीं परम् । भर्त्तारं प्राप्य देवस्त्रीगणैरासेव्यते स्वयम् ॥ २५
सत्यपूर्णाह्वयस्यास्तां महर्षेर्नेत्रयोरुभे । पूर्णा पुष्कलिकाख्ये ते पुरा पुण्यमिदं व्रतम् ॥ २६
चरित्वा कन्यके पत्न्यौ महाशास्तुर्बभूवतुः । रतिं प्राप प्रियां मारो व्रतस्यास्य प्रभावतः ॥ २७
सीताच जानकी रामं पतिमाप्तवती पुरा । पुरा जांबवती कृष्णं पतिमाप्तवती द्विजाः ॥ २८
सौभरिस्तपतां श्रेष्ठश्चरित्वा व्रतमद्भुतम् । ब्रह्मीः प्राप्य स्त्रियो रम्याश्शुभलक्षण संयुताः ॥ २९
बहवोऽन्ये व्रतमिदं चरित्वा सर्वपापहम् । स्वभार्याभिश्च सहिता भुक्त्वा भोगान्यथेच्छया ॥ ३०
पुत्रांश्च लब्ध्वा परमानन्ते कैलासमाप्य च । मोक्षमापुर्द्विजश्रेष्ठाः पुनरावृत्तिवर्जितम् ॥ ३१
भार्यार्थी लभते भार्यां सर्वलक्षण संयुताम् । व्रतमेतदनुष्ठाय स्वल्पकालेन सूसुराः ॥ ३२

ஸ்கந்தமேவ பதிம் லப்த்வா தேவஸேனா துரந்தரம் ।
ரேமாதே தேன பரயா ப்ரீத்யாதே ப்ராம்ஹணோத்தமா: ॥ 23
வ்ரதமேதச்சரித்வான்யா வேதாங்கஸ்ய மஹாமுனே: ।
புத்ரீஸுகேசீ (ஸுகேசா) லாவண்ய ஸிந்து: ஸ்ரீநந்திகேச்வரம் ॥ 24
கைலாஸவாஸினம் சம்புகணநாமக்ரணீம் பரம் ।
பர்தாரம் ப்ராப்ய தேவஸ்த்ரீகணைராஸேவ்யதே ஸ்வயம் ॥ 25
ஸத்யபூர்ணாஹ்வயஸ்யாஸ்தாம் மஹர்ஷேர்நேத்ரயோருபே ।
பூர்ணா புஷ்கலிகாக்யேதே புரா புண்யமிதம் வ்ரதம் ॥ 26
சரித்வா கன்யகே பத்ன்யௌ மஹாசாஸ்துர் பபூவது: ।
பதிம்ப்ராப ப்ரியாம் மாரோ வ்ரதஸ்யாஸ்ய ப்ரபாவத: ॥ 27
ஸீதாச ஜானகீ ராமம் பதிமாப்தவதீ புரா । புரா ஜாம்பவதீ க்ருஷ்ணம் பதிமாப்தவதீ த்விஜா: ॥ 28
ஸௌபரிஸ்தபதாம் ச்ரேஷ்டச்சரித்வா வ்ரதமத்புதம் ।
பஹ்வீ: ப்ராப்ய ஸ்த்ரியோ ரம்யாச்சுபலக்ஷண ஸம்யுதா: ॥ 29
பஹவோऽன்யே வ்ரதமிதம் சரித்வா ஸர்வபாபஹம் ।
ஸ்வபார்யாபிச்ச ஸஹிதா புக்த்வா போகான் யதேச்சயா ॥ 30
புத்ராம்ச லப்த்வா பரமானந்தே கைவாஸமாப்ய ச ।
மோக்ஷமாபுர்த்விஜச்ரேஷ்டா: புனராவ்ருத்தி வர்ஜிதம் ॥ 31
பார்யார்தீ லபதே பார்யாம் ஸர்வலக்ஷணஸம்யுதாம் ।
வ்ரதமேதனுஷ்டாய ஸ்வல்பகாலேன பூஸுரா: ॥ 32

பிறப்பை அடைந்து (22) தேவ ஸைன்யங்களின் பாரத்தைத் தரிப்பவரான ஸ்ரீ ஸ்கந்தனையே பதியாக அடைந்து அவரோடு மிகுந்த ஸந்தோஷத்துடன் ரமித்து வருகிறார்கள். (23) வேதாங்க முனிவரின் குமாரியும் அழகுக்குக் கடலான ஸுகேசி என்பவள் இந்த விரதத்தை அனுஷ்டித்து அதனால் கைலாஸத்தில் வஸிப்பவரும், ஸ்ரீ பரமேச்வரனுடைய கணங்களுக்குத் தலைவரும், மிகச் சிறந்தவருமான நந்திகேச்வரரைக் கணவராக அடைந்து, தேவ ஸ்திரீகளின் கூட்டங்களால் ஸேவிக்கப்படுகிறாள். (25) ஸத்ய பூரணர் என்ற மஹரிஷியின் இரண்டு கண்களிலிருந்து உண்டான பூர்ணை, புஷ்களை என்ற இரு பெண்களும் முன்பு புண்ய விரதத்தை அனுஷ்டித்ததால் ஸ்ரீ மஹாசாஸ்தாவிற்கு மனைவியாக ஆனார்கள். ரதி தேவியை மன்மதன் இவ்விரத மஹிமையால் மனைவியாக அடைந்தான். (27) முன்பு ஜனக மஹாராஜனின் பெண்ணான ஸீதாதேவியும் இவ்விரதத்தால் ஸ்ரீராமனைப் பர்த்தாவாக அடைந்தாள். முன்பு ஜாம்பவதியும் இவ்விரதத்தால் ஸ்ரீ கிருஷ்ணனைப் பர்த்தாவாக அடைந்தாள். (28) தபஸ்விகளில் சிறந்த "ஸௌபரி முனிவரும்" இந்த அற்புதமான விரதத்தை அனுஷ்டித்து அதனால் சுப லக்ஷணங்களோடு கூடிய பல அரசகுமாரிகளை மனைவிகளாக அடைந்தார். (29) இன்னும் பலர் ஸகல பாபங்களையும் போக்கவல்ல இவ்விரதத்தை தன் மனைவிகளோடு கூட அனுஷ்டித்து தன் விருப்பப்படி எல்லா போகங்களையும் அனுபவித்து (30) சிறந்த பிள்ளைகளையும் பெற்று முடிவில் கைலாஸம் அடைந்து மறுபிறப்பற்ற மோக்ஷத்தை அடைந்திருக்கிறார்கள். (31) ஓ பூதேவர்களே! இந்த விரதத்தை ஸொல்ப காலம் அனுஷ்டிப்பதால் மனைவியை விரும்பியவன் ஸகல லக்ஷணமுள்ள மனைவியை அடைவான். கன்னிகை

कन्या तु लभते कामतुल्यं पतिमनिन्दितम् । चरित्वा दंपती पुत्रान् लेभाते व्रतमुत्तमम् ॥ ३३
कांक्षितान्यपि सर्वाणि लभन्तेऽस्य प्रभावतः । एतद्व्रतस्य माहात्म्यं किञ्चिदुक्तं मया द्विजाः ॥ ३४
न शक्यते मया वक्तुं माहात्म्यं चास्य कृत्स्नशः । पठन्ति य इमं पुण्यमध्यायं संशितव्रताः ॥ ३५
शृण्वन्ति तेषां महतां भवेत् सर्वञ्च वाञ्छितम् । अन्ते च शिवसायुज्यं लभन्ते नात्रसंशयः ॥ ३६

इति श्री स्कान्दे महापुराणे शङ्करसंहितायां शिवरहस्यखण्डे
उपदेशकाण्डे द्वात्रिंशोऽध्यायः ॥

॥ अथ त्रयस्त्रिंशोऽध्यायः ॥

मकरमासानुष्ठेय शूलव्रतम् ॥

शूलव्रतञ्च वक्ष्येऽहं सर्वाभीष्टफलप्रदम् । मकरस्थे रवौ दर्शे प्रातरुत्थाय बुद्धिमान् ॥ १
ध्यात्वा हृदब्जनिलये धृतशूलमुमासखम् । सर्वकल्याणनिलयं चन्द्रशेखरमीश्वरम् ॥ २
बहिर्गत्वा कृतस्नानशिवतीर्थे शिवं स्मरन् । समाप्य सन्ध्याकर्माणि स्वगृह्योक्तप्रकारतः ॥ ३

கன்யாது லபதே காமதுல்யம் பதிமநிந்திதம் । சரித்வா தம்பதீபுத்ரான் லேபாதே வ்ரதமுத்தமம் ॥ 33
காம்க்ஷிதான்யபி ஸர்வாணி லபந்தேஸ்ய ப்ரபாவத: ।
ஏதத்வ்ரதஸ்ய மாஹாத்ம்யம் கிஞ்சிதுக்தம் மயா த்விஜா: ॥ 34
ந சக்யதே மயா வக்தும் மாஹாத்ம்யம் சாஸ்ய க்ருத்ஸ்னச: ।
படந்தி ய இமம் புண்யமத்யாயம் ஸம்சிதவ்ரதா: ॥ 35
ச்ருண்வந்தி தேஷாம் மஹதாம் பவேத் ஸர்வஞ்ச வாஞ்சிதம் ।
அந்தேச சிவஸாயுஜ்யம் லபந்தே நாத்ர ஸம்சய: ॥ 36

இதி ஸ்ரீஸ்காந்தே மஹாபுராணே சங்கரஸம்ஹிதாயாம் சிவரஹஸ்யகண்டே
உபதேச காண்டே த்வாத்ரிம்சோऽத்யாய: ॥

॥ அத த்ரயஸ்த்ரிம்ஶோऽத்யாய: ॥

தை மாதத்தில் அனுஷ்டிக்கவேண்டிய சூல வ்ரதம்

சூலவ்ரதஞ்ச வக்ஷ்யேஹம் ஸர்வாபீஷ்ட பலப்ரதம் । மகரஸ்தே ரவௌதர்சே ப்ராதருத்தாய புத்திமான் ॥ 1
த்யாத்வா ஹ்ருதப்ஜநிலயே த்ருதசூலமுமாஸகம் । ஸர்வகல்யாணநிலயம் சந்த்ரசேகரமீச்வரம் ॥ 2
பஹிர்கத்வா க்ருதஸ்னானச்சிவதீர்தே சிவம் ஸ்மரன் ।
ஸமாப்ய ஸந்த்யாகர்மாணி ஸ்வக்ருஹ்யோக்தப்ரகாரத: ॥ 3

யானவள் மன்மதனுக்கொப்பான குற்றமற்ற கணவனை அடைவாள். தம்பதிகள் இவ்விரதத்தை அனுஷ்டிப்பதன் மஹிமையால் பல பிள்ளைகளைப் பெற்று வேண்டிய பொருள்கள் யாவையும் அடைவார்கள். ஓ முனிவர்களே! நான் இவ்விரதத்தின் மஹிமையை சிறிதளவுதான் கூறினேன். (34) இவ்விரதத்தின் மஹிமையை முற்றிலும் சொல்வதற்கு என்னால் முடியாது. எவர்கள் புண்யமான இந்த அத்யாயத்தை நியமத்துடன் படிக்கிறார்களோ அல்லது கேட்கிறார்களோ அத்தகைய மஹான்களுக்கு வேண்டிய பயன்களெல்லாம் கிடைத்து முடிவில் சிவஸாயுஜ்யத்தை அடைவார்கள் என்பதில் ஸந்தேகமில்லை. (36)

முப்பத்திரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

முப்பத்து மூன்றாவது அத்தியாயம்.

ஓ முனிவர்களே! ஸகல அதிஷ்டங்களையும் கொடுக்கவல்ல சூல விரதத்தின் மஹிமையைச் சொல்கிறேன். புத்திமானானவன் சூரியன் மகர ராசியில் இருக்கும்போது அமாவாசையன்று காலையில் எழுந்து (1) சூலபாணியும், உமாதேவிக்குத் தோழரும், ஸகல மங்களத்திற்கும் இருப்பிடமானவரும், சந்திரசேகரருமான ஸ்ரீ ஜகதீசனை ஹ்ருதய கமலப் பீடத்தில் த்யானம் செய்து (2) வெளியில் புறப்பட்டு மங்களமான தீர்த்தத்தில் (சிவ ஸன்னிதியிலிருக்கும் தீர்த்தத்தில்) ஸ்ரீ சிவனை தியானித்துக்கொண்டு ஸ்நானம் செய்து தனது க்ருஹ்ய சூத்திரத்தின் முறைப்படி ஸந்தியாவந்தனம் முதலிய கர்மாக்களை

विधाय विग्रहं शंभोर्धृतशूलमुमासखम् । काञ्चनेनाथरौप्येण सर्वावयव सुन्दरम् ॥ ४
अभिषेकविधानेन कृत्वाभिषवणक्रियाम् । अन्नं बहुविधं कृत्वा परमान्नसमन्वितम् ॥ ५
निवेदयेन्महेशाय भक्त्या सर्वेश्वराय च । दद्यान्मध्याह्नसमये दानं शक्त्यानुसारतः ॥ ६
शिवभक्ताय विप्राय धृतरुद्राक्षमालिने । ततश्शिवालयं गत्वा प्रदक्षिणविधानतः ॥ ७
दत्वा शिवाय यत्किञ्चित् प्रणम्य परमेश्वरम् । शिवभक्तैर्द्विजैस्साकमश्नीयादेकवारतः ॥ ८
स्थित्वा रात्रावनाहारः परेद्युः प्रातरुत्थितः । विधाय नित्यकर्माणि नित्यवद्ब्राह्मणोत्तमाः ॥ ९
दद्यात् स्वगुरवे शंभोर्विग्रहं तद्द्विजोत्तमाः । भुञ्जीयाच्च ततोभक्तैस्सहैव नियमान्वितः ॥ १०
अनुष्ठेयं व्रतमिदमेवमेव द्विजोत्तमाः । व्रतमेतद्विधानेन ये चरन्ति नरोत्तमाः ॥ ११
ते जित्वा सकलाञ्छत्रून्व्याधीनपि महत्तरान् । पूर्णानि लब्ध्वायूंषि पुत्रान्वंशाभिवर्धकान् ॥ १२
सर्वञ्च कांक्षितं लब्ध्वा भुक्त्वा भोगानखण्डितान् । अन्ते च शिवसायुज्यं यान्ति सत्यं मयेरितम् ॥ १३
व्रतमेतदनुष्ठाय विष्णुर्दैत्याधमं पुरा । कालनेम्याह्वयं घोरं जघान किल भूसुराः ॥ १४

விதாய விக்ரஹம் சம்போர்த்ருதசூலமுமாஸகம் ।
காஞ்சனேனாதரௌப்யேண ஸர்வாவயவஸுந்தரம் ॥ 4
அபிஷேகவிதானேன க்ருத்வாऽபிஷவணக்ரியாம் । அன்னம் பஹுவிதம் க்ருத்வா பரமான்ன ஸமன்விதம் 5
நிவேதயேன்மஹேசாய பக்த்யா ஸர்வேச்வராய ச ।
தத்யான்மத்யான்ஹஸமயே தானம் சக்த்யானுஸாரத: ॥ 6
சிவபக்தாய விப்ராய த்ருதருத்ராக்ஷமாலினே । ததச்சிவாலயம் கத்வா ப்ரதக்ஷிண விதானத: ॥ 7
தத்வா சிவாய யத்கிஞ்சித் ப்ரணம்ய பரமேச்வரம் । சிவபக்தைர்த்விஜைஸ்ஸாகமச்நீயா தேகவாரத: ॥ 8
ஸ்தித்வா ராத்ராவனாஹார: பரேத்யு: ப்ராதருத்தித: ।
விதாய நித்யகர்மாணி நித்யவத் ப்ராம்ஹணோத்தமா: ॥ 9
தத்யாத்ஸ்வகுரவே சம்போர் விக்ரஹம் தத்த்விஜோத்தமா: ।
புஞ்ஜீயாச்ச ததோபக்தைஸ்ஸஹைவ நியமான்வித: ॥ 10
அனுஷ்டேயம் வ்ரதமிதமேவமேவ த்விஜோத்தமா: । வ்ரதமேதத் விதானேன யே சரந்தி நரோத்தமா: 11
தே ஜித்வா ஸகலான் சத்ரூன் வ்யாதீனபி மஹத்தரான் ।
பூர்ணானி லப்த்வாசாயூம்ஷி புத்ரான் வம்சாபி வர்தகான் ॥ 12
ஸர்வஞ்ச காம்க்ஷிதம் லப்த்வா புக்த்வா போகானகண்டிதான் ।
அந்தேச சிவஸாயுஜ்யம் யாந்தி ஸத்யம் மயேரிதம் ॥ 13
வ்ரதமேததனுஷ்டாய விஷ்ணுர்தைத்யாதமம் புரா ।
காலநேம்யாஹ்வயம் கோரம் ஜகான கில பூஸுரா: ॥ 14

முடித்து (3) ஸ்ரீ பார்வதி தேவியோடு கூடியதும், எல்லா அவயவங்களும் அழகாக அமையப்பெற்றதும், சூலத்தைத் தரித்ததும், தங்கத்தாலோ வெள்ளியாலோ செய்யப்பட்டதுமான ஸ்ரீ சம்புவின் விக்ரஹத்தை (பிரதிமையை) வைத்துக்கொண்டு (4) அபிஷேக விதிப்படி அபிஷேகம் செய்து பாயஸத்துடன் கூடிய பலவித அன்னங்களைச் செய்து மிகுந்த பக்தியுடன் ஸ்ரீ ஸர்வேச்வரனுக்கு நைவேத்யம் செய்து மத்தியான்ன வேளையில் ருத்திராக்ஷ மாலைகளை தரித்த சிவபக்தரான பிராம்மணருக்கு தன் சக்திக்கு ஏற்றவாறு தானம் செய்யவேண்டும். பிறகு சிவாலயத்திற்குச் சென்று முறைப்படி பிரதக்ஷிணங்கள் செய்து (7) ஸ்ரீ பரமேச்வரனுக்கு சிறிது காணிக்கை செலுத்தி அவரை நமஸ்கரித்து சிவபக்தர்களான பிராம்மணர்களோடு ஒரே தடவை போஜனம் செய்யவேண்டும். (8) இரவில் ஆகாரம் செய்யாமல் மறுநாள் காலையில் எழுந்து தினமும் செய்வதுபோல் நித்ய கர்மங்களைச் செய்து (9) ஓ பிராம்மணோத்தமர்களே! அந்த சம்புவின் பிரதிமையைத் தன் குருவிற்கு தானம் செய்து பிறகு நியமத்துடன், சிவபக்தர்களுடன் கூட போஜனம் செய்யவேண்டும். (10) ஓ முனிவர்களே! இவ்விரதத்தை இவ்விதமாகவே தான் அனுஷ்டிக்கவேண்டும். எந்த மனிதர்கள் இவ்விரதத்தை இம்மாதிரி அனுஷ்டிக்கிறார்களோ (11) அவர்கள் எல்லா சத்ருக்களையும் ஜயித்து, தீராத பெரிய வியாதிகளும் நீங்கி, பூரண ஆயுளை அடைந்து, வம்சத்தை விருத்தி செய்யும் பல பிள்ளைகளைப் பெற்று (12) வேண்டிய பொருள்களையெல்லாம் அடைந்து அளவற்ற போகங்களை அனுபவித்து முடிவில் சிவஸாயுஜ்யத்தை அடைகிறார்கள் என்று ஸத்யமாகச் சொல்கிறேன். (13) ஓ பூதேவர்களே! முன்பு விஷ்ணுவானவர் இவ்விரதத்தை அனுஷ்டித்து அஸுராதம

पुरा परशुरामोऽपि जामदग्निर्महाबलः । कार्तवीर्यार्जुनं शत्रुं हतवानस्य वैभवात् ॥ १५
शिरोव्याधिर्हरेः पूर्वं शशामैतत्प्रभावतः । ब्रह्मणोप्युदरव्याधिश्शशामैतत्प्रभावतः ॥ १६
सुधर्माप्यस्य माहात्म्यान्मृत्युमप्यजयत् द्विजाः । चरित्वैतद् व्रतं पुण्यं मेघाङ्गोऽपि महीपतिः ॥ १७
सहस्रसङ्ख्यान् संप्राप्य पुत्रान् पौत्रांश्च पण्डितान् । भुक्त्वा भोगांश्च विपुलान् कैलासं प्राप भूसुराः ॥ १८
बहवोऽन्ये चरित्वैतल्लब्धवामीष्टं निजं द्विजाः । कैलासं प्रापुरतुलं शङ्करस्य वरालयम् ॥ १९
तस्मादेतद्व्रतं येतु चरन्ति विधिना द्विजाः । दूरतो याति दुरितं तेषां सत्यं मयेरितम् ॥ २०
ऐश्वर्यं यान्ति परममीश्वरस्य प्रसादतः । व्रतस्यैतस्य माहात्म्यं वीरभद्रो महाबलः ॥ २१
भानुकंपाय महते गणानामधिपाय च । उक्तवानिति मे प्राह व्यासस्साक्षान्महीसुराः ॥ २२
ये पठन्त्यमुमध्यायं सर्वपापैकनाशनम् । तेषां मृत्युभयं नास्ति शृण्वतामपि भूसुराः ॥ २३

इति श्री स्कान्दे महापुराणे शंकरसंहितायां शिवरहस्यखण्डे
उपदेशकाण्डे त्रयस्त्रिंशोऽध्यायः ॥

புரா பரசுராமோSபி ஜாமதக்னிர் மஹாபல: । கார்த்தவீர்யார்ஜுனம் சத்ரும் ஹதவானஸ்ய வைபவாத் 15
சிரோவ்யாதிர்ஹரே: பூர்வம் சசாமைதத்ப்ரபாவத: ।
ப்ரும்ஹம்ணோப்யுதரவ்யாதிச்சசாமைதத்ப்ரபாவத: ॥ 16
ஸுதர்மாப்யஸ்ய மாஹாத்ம்யான் ம்ருத்யுமப்யஜயத் த்விஜா: ।
சரித்வைதத்வ்ரதம் புண்யம் மேகாங்கோSபி மஹீபதி: ॥ 17
ஸஹஸ்ரஸங்க்யான் ஸம்ப்ராப்ய புத்ரான் பௌத்ராம்ச பண்டிதான்
புக்த்வா போகாம்ச விபுலான் கைலாஸம் ப்ராப பூஸுரா: ॥ 18
பஹவோSன்யே சரித்வைதத் லப்த்வாபீஷ்டம் நிஜம் த்விஜா: ।
கைலாஸம் ப்ராபுரதுலம் சங்கரஸ்ய வராலயம் ॥ 19
தஸ்மாதேதத்வ்ரதம் யே து சரந்தி விதினா த்விஜா: । தூரதோ யாதி துரிதம் தேஷாம் ஸத்யம் மயேரிதம் 20
ஐச்வர்யம் யாந்தி பரமமீச்வரஸ்ய ப்ரஸாதத: । வ்ரதஸ்யைதஸ்ய மாஹாத்ம்யம் வீரபத்ரோ மஹாபல: 21
பானுகம்பாய மஹதே கணானாமதிபாய ச । உக்தவானிதி மே ப்ராஹ வ்யாஸஸ்ஸாக்ஷான் மஹீஸுரா: 22
யே படந்த்யமுமத்யாயம் ஸர்வ பாபைகநாசனம் । தேஷாம் ம்ருத்யு பயம் நாஸ்தி ச்ருண்வதாமபி பூஸுரா:

இதி ஸ்ரீஸ்காந்தே மஹாபுராணே சங்கரஸம்ஹிதாயாம் சிவரஹஸ்யகண்டே
உபதேசகாண்டே த்ரயஸ்த்ரிம்சோSத்யாய:

னுகிய கொடிய காலநேமி என்ற அஸுரனைக் கொன்றார். (14) முன்பு ஜமதக்னி முனிவரின் புத்திரனும் மிக பலமுள்ளவனுமான பரசுராமர் இவ்விரதத்தின் மஹிமையால் சத்ருவாகிய கார்த்தவீர்யார்ஜுனனைக் கொன்றார். (15) இதன் மகிமையால் முன்பு ஸ்ரீ மஹாவிஷ்ணுவிற்குத் தலைவலி நீங்கியது. பிரம்மதேவருக்கும் இதன் மகிமையால் வயிற்றுவலி தீர்ந்தது. (16) ஓ முனிவர்களே! ஸுதர்மனும் இதன் மகிமையால் ம்ருத்யுவைக்கூட ஜயித்தான். மேகாங்கன் என்ற ஒரு அரசனும் இந்த விரதத்தை அனுஷ்டித்து (17) அதனால் பண்டிதர்களான ஆயிரம் புத்திர பௌத்திரர்களை அடைந்து அநேக போகங்களையும் அனுபவித்து முடிவில் கைலாஸமடைந்தான். (18) ஓ முனிவர்களே! மற்றும் அநேகர் இவ்விரதத்தை அனுஷ்டித்ததால் தங்கள் விருப்பங்கள் யாவையும் அடைந்து ஸ்ரீ சங்கரருக்குச் சிறந்த ஆலயமாகிய நிகரற்ற கைலாஸத்தை அடைந்தார்கள். (19) ஓ வேதியர்களே! ஆகையால் எவர்கள் இவ்விரதத்தை விதிப்படி அனுஷ்டிக்கிறார்களோ அவர்களுடைய பாபமெல்லாம் அவரை விட்டு விலகிவிடும் என்பதை ஸத்யமாகச் சொல்கிறேன். மேலும் அவர்கள் ஸ்ரீ ஜகதீசனின் அருளால் அளவற்ற ஐச்வர்யங்களை அடைவார்கள். பூமிதேவர்களே! மஹாபலிஷ்டரான வீரபத்ரர் மகிமை வாய்ந்த கணத்தலைவரான பானுகம்பனுக்கு இவ்விரதத்தின் மஹிமையைச் சொன்னாரென்று ஸ்ரீ வ்யாஸ முனிவர் எனக்குச் சொல்லியிருக்கின்றார். (22) ஓ வேதியர்களே! எல்லா பாபங்களையும் அடியோடு நாசம் செய்யவல்ல இந்த அத்யாயத்தை எவர்கள் படிக்கிறார்களோ கேட்கிறார்களோ அவர்களுக்கு ம்ருத்யுவின் பயமே இல்லை. (23)

முப்பத்துமூன்றாம் அத்தியாயம் முற்றிற்று.

॥ अथ चतुस्त्रिंशोऽध्यायः ॥

वृषभमासे अनुष्ठेय वृषभव्रतम् ॥

शृणुध्वमृषयस्सर्वे वृषभव्रतमुत्तमम् । वृषभस्थे दिवानाथे शुक्लपक्षेऽष्टमीतिथौ ॥ १
प्रातरेव समुत्थाय महादेवं वृषोपरि । समासीनं सह ध्यात्वा देव्या चिद्रूपया शुचिः ॥ २
स्नात्वा जलवरे सन्ध्यामुपास्य नियमान्वितः । निर्माय विग्रहं शंभोः काञ्चनं राजतं तु वा ॥ ३
वृषोपरिस्थितं देव्या श्रीपार्वत्या सहातुलम् । पञ्चामृतादिभिर्दिव्यैरभिषिच्य विधानतः ॥ ४
निवेदयेच्च शुद्धान्नं पायसादि विशेषतः । विधिना पूजयित्वैवं दद्यात् द्रव्यंच शक्तितः ॥ ५
विप्राय शिवभक्ताय सदाचारपराय च । ततश्शिवालयं गत्वा दद्याद्देवाय किञ्चन ॥ ६
प्रदक्षिण नमस्कारान्विधायानन्तरं मुदा । स्वगृहं प्राप्य मतिमान् शिवभक्तैर्द्विजोत्तमैः ॥ ७
फलैरपूपप्रमुखैरव्रतघ्नं चरेदुत । शुद्धान्नं पायसान्नं वा भुञ्जयादेभिस्सह द्विजाः ॥ ८
सायं सन्ध्यां वन्दयित्वा नित्यकर्म समाप्य च । यामावधि पुराणं च शृणुयान्निशि भूसुराः ॥ ९

॥ அத சதுஸ்த்ரிம்ஶோऽத்யாய: ॥

வைகாசி மாதத்தில் அனுஷ்டிக்கவேண்டிய விருஷப வ்ரதம்

ச்ருணுத்வம் முனயஸ்ஸர்வே வ்ருஷபவ்ரத முத்தமம் ।
வ்ருஷபஸ்தே திவாநாதே சுக்லபக்ஷேऽஷ்டமீதிதௌ ॥ 1
ப்ராதரேவ ஸமுத்தாய மஹாதேவம் வ்ருஷோபரி ।
ஸமாஸீனம் ஸஹத்யாத்வா தேவ்யா சித்ரூபயா சுசி: ॥ 2
ஸ்நாத்வா ஜலவரே ஸந்த்யாமுபாஸ்ய நியமான்வித: ।
நிர்மாய விக்ரஹம் சம்போ: காஞ்சனம் ராஜதம் து வா ॥ 3
வ்ருஷோபரி ஸ்திதம் தேவ்யா ஸ்ரீபார்வத்யா ஸஹாதுலம் ।
பஞ்சாம்ருதாதிபிர்திவ்யைரபிஷிச்ய விதானத: ॥ 4
நிவேதயேச்ச சுத்தான்னம் பாயஸாதி விசேஷத: ।
விதிநா பூஜயித்வைவம் தத்யாத்த்ரவ்யஞ்ச சக்தித: ॥ 5
விப்ராய சிவபக்தாய ஸதாசார பராய ச । ததச்சிவாலயம் கத்வா தத்யாத்தேவாய கிஞ்சன ॥ 6
ப்ரதக்ஷிண நமஸ்காரான் விதாயானந்தரம் முதா ।
ஸ்வக்ருஹம் ப்ராப்ய மதிமான் சிவபக்தைர்த்விஜோத்தமை: ॥ 7
பலைரபூபப்ரமுகைரவ்ரதக்னம் சரேதுத । சுத்தான்னம் பாயஸான்னம் வா புஞ்ஜ்யாதேபிஸ்ஸஹ த்விஜா: 8
ஸாயம்ஸந்த்யாம் வந்தயித்வா நித்யகர்ம ஸமாப்ய ச ।
யாமாவதி புராணஞ்ச ச்ருணுயான்னிசி பூஸுரா: ॥ 9

முப்பத்து நான்காவது அத்யாயம்.

ஓ முனிவர்களே! நீங்கள் எல்லோரும் சிறந்த விருஷப விரதத்தைப்பற்றிக் கேட்கவேண்டும். சூரியன் வ்ருஷப ராசியில் இருக்கும்பொழுது (வைகாசி மாதத்தில்) சுக்ல பக்ஷ அஷ்டமி திதியில் (1) அதிகாலையில் எழுந்து சுத்தம் செய்துகொண்டு சித்ரூபியான அம்பிகையோடு வ்ருஷபத்தின்மீது வீற்றிருக்கும் ஸ்ரீமஹாதேவரை த்யானம் செய்து (2) நல்ல தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து நியமத்துடன் ஸந்த்யா வந்தனத்தைச் செய்து பிறகு தங்கத்தினாலாவது வெள்ளியினாலாவது ஸ்ரீ பார்வதிதேவியோடு வ்ருஷபத்தின்மீது வீற்றிருக்கும்படி நிகரற்ற ப்ரதிமையைச் செய்து அதற்கு விதிப்படி சிறந்த பஞ்சாமிர்தம் முதலிய திரவியங்களால் அபிஷேகம் செய்து (4) விசேஷமான பாயஸம் முதலிய சுத்தான்னத்தை நைவேத்யம் செய்யவேண்டும். இவ்வாறாக விதிப்படி பூஜைசெய்து சக்திக்கு ஏற்றவாறு ஸதாசாரமுள்ள ப்ராம்மணர்க்கு திரவ்யத்தைக் கொடுத்துப் பிறகு சிவாலயத்திற்குச் சென்று பிரதக்ஷிண நமஸ்காரம் செய்து, சிறிது காணிக்கை அளித்துப் பிறகு ஸந்தோஷத்துடன் வீட்டிற்குச் சென்று சிவபக்தர்களான பிராம்மணர்களோடு (7) சுத்தான்னம், சர்க்கரைப் பொங்கல், அப்பம் முதலிய பணியாரங்கள், கனி வர்க்கங்கள் இவைகளை விரதத்திற்குப் பங்கமில்லாமல் ஆகாரம் செய்ய வேண்டும். (8) பிறகு ஸாயங்காலத்தில்

शुद्धतल्पे ततो निद्रामनुभूय सुखं द्विजाः । पुनः प्रातस्समुत्थाय परेद्युर्नियमान्वितः ॥ १०
नित्यकर्मविधायाथ विप्रहं शंकरस्य तम् । शिवभक्ताय विदुषे दद्याद्विप्राय भक्तितः ॥ ११
एवं व्रतमिदं ये तु चरन्ति मनुजोत्तमाः । तेषामायुर्धनं विद्याचारोग्यश्चाष्टभूतयः ॥ १२
संभवन्तीति चित्रं किं ब्राह्मणानामधीश्वराः । विष्णुः पुरा व्रतमिदं चरित्वा विधिना द्विजाः ॥ १३
ऐश्वर्यमाप परममीश्वरस्य प्रसादतः । पक्षिराजं च गरुडं वाहनं लब्धवान् द्विजाः ॥ १४
इन्द्रोऽपि लब्धवान्विप्रा ऐरावतमनुत्तमम् । चरित्वैतद्व्रतं वह्निरजमापाथवाहनम् ॥ १५
यमोऽपि महिषं प्राप महाकायं द्विजोत्तमाः । तथाच निर्ऋतिर्विप्रा नरवाहनमुज्वलम् ॥ १६
यादसां पतिरप्याप मकरं वाहनं परम् । कृष्णसारं पुरा वायुर्लब्धवानस्य वैभवात् ॥ १७
कुबेरः पुष्पकं दिव्यं विमानं प्राप भूसुराः । पुरेशानोऽपि विप्रेन्द्रा वृषभं धर्मरूपिणम् ॥ १८
सप्ताश्वमेकचक्रञ्च रथं सूर्योऽपि लब्धवान् । विमानं प्राप चन्द्रोऽपि नानारत्नविचित्रितम् ॥ १९

சுத்ததல்பே ததோ நித்ரா மனுபூய ஸுகம் த்விஜா: ।
புன: ப்ராதஸ்ஸமுத்தாய பரேத்யுர் நியமான்வித: ॥ 10
நித்யகர்ம விதாயாத விக்ரஹம் சங்கரஸ்ய தம் । சிவ பக்தாய விதுஷே தத்யாத் விப்ராய பக்தித: ॥ 11
ஏவம் வ்ரதமிதம் யேது சரந்தி மனுஜோத்தமா: । தேஷாமாயுர்தனம் வித்யாசாரோக்யஞ்சாஷ்ட பூதய: 12
ஸம்பவந்தீதி சித்ரம் கிம் ப்ராம்ஹ்மணாநாமதீச்வரா: ।
விஷ்ணு: புரா வ்ரதமிதம் சரித்வா விதிநா த்விஜா: ॥ 13
ஐச்வர்யமாப பரமமீச்வரஸ்ய ப்ரஸாதத: । பக்ஷிராஜம்ச கருடம் வாஹனம் லப்தவான் த்விஜா: ॥ 14
இந்த்ரோऽபி லப்தவான் விப்ரா ஐராவதமனுத்தமம் ।
சரித்வைதத்வ்ரதம் வன்ஹிரஜமாபாத வாஹனம் ॥ 15
யமோऽபி மஹிஷம் ப்ராப மஹாகாயம் த்விஜோத்தமா: ।
ததாச நிருருதிர் விப்ரா நரவாஹனமுஜ்வலம் ॥ 16
யாதஸாம் பதிரப்யாப மகரம் வாஹனம் பரம் । க்ருஷ்ணஸாரம் புரா வாயுர்லப்தவானஸ்ய வைபவாத் 17
குபேர: புஷ்கரம் திவ்யம் விமானம் ப்ராப பூஸுரா: । புரேசாநோऽபி விப்ரேந்த்ரா வ்ருஷபம் தர்ம ரூபிணம்
ஸப்தாச்வமேகசக்ரஞ்ச ரதம் ஸூர்யோऽபி லப்தவான் ।
விமானம் ப்ராப சந்த்ரோऽபி நாநாரத்னவிசித்ரிதம் ॥ 19

---

* ஸந்த்யாவந்தனம் முதலிய நித்ய கர்மாக்களை முடித்தபிறகு இரவில் ஓர் யாமம் வரை சிவ புராணங்களைக் கேட்கவேண்டும். (9) பிறகு இரவில் வெறுந் தரையில் ஸுகமாகப் படுத்து நித்திரை செய்யவேண்டும். பிறகு மறுநாள் காலையில் எழுந்து நியமத்துடன் (10) நித்ய கர்மங்களை முடித்துக்கொண்டு அந்த சங்கரப் பிரதிமையை சிவபக்தரும் வித்துவானுமான பிராம்மணருக்கு பக்தியுடன் தானம் செய்ய வேண்டும். (11) ஓ பிராம்மணோத்தமர்களே! எந்த மனிதர்கள் இவ்விரதத்தை இவ்விதமாக அனுஷ்டிக்கிறார்களோ அவர்களுக்கு ஆயுள், தனம், கல்வி, ஆரோக்கியம், அஷ்டைச்வர்யங்கள் இவைகளெல்லாம் உண்டாகுமென்பதில் என்ன ஆச்சர்யமிருக்கிறது. பூர்வத்தில் ஸ்ரீ மஹாவிஷ்ணுவானவர் இவ்விரதத்தை அனுஷ்டித்து ஸ்ரீ மஹேச்வரனருளால் அளவற்ற ஐச்வர்யங்களை அடைந்து பக்ஷிராஜனை கருடனை வாகனமாக அடைந்தார். (14) ஓ பிராம்மணோத்தமர்களே! மேலும் இவ்விரதத்தை அனுஷ்டித்ததால் இந்திரன் மிகச் சிறந்த ஐராவதத்தை வாகனமாகக் கொண்டான். அக்னிதேவனும் இவ்விரதத்தை அனுஷ்டித்து ஆட்டுக் கடாவை வாகனமாகவும் (15) அவ்விதமே யமன் பெருத்த சரீரத்தை உடைய எருமைக்கடாவை வாகனமாகவும், அவ்விதமே "நிருருதி" தேவன் சிறந்து விளங்குகின்ற மனித வாகனத்தையும், வருணதேவன் சிறந்த முதலை வாகனத்தையும், வாயுதேவன் க்ருஷ்ணஸாரம் என்னும் வகையைச் சேர்ந்த மான் வாகனத்தையும் (17) குபேரன் அழகிய புஷ்பக விமானத்தையும், ஈசானதேவன் தர்மத்தின் உருவமுள்ள காளை வாகனத்தையும் (18) சூர்யதேவன் ஏழு குதிரைகளையும் ஒரு சக்ரமுள்ள

குறிப்பு:— * "ஸந்தியாவந்தன ஜபம்" என்றதில் பெரும்பாலும் உலகில் காலை மாலைகளில் ஸந்தியையும் ஜபத்தையும் மட்டில் செய்து வருகிறார்களேயின்றி ஜபம் செய்யத் தொடங்குவதற்கு முன் முக்யமாய் சந்தியோறும் செய்ய வேண்டிய (வந்தனம்) என்ற மஹாமந்திரத்தை ஜபம் செய்து வருவதாய் காணப்படவில்லை, ஆகையால் அப்படிப்பட்ட பிராமணர்களெல்லாம் அந்த வந்தனம் என்ற மந்திரத்தை அறிந்து ஜபம் செய்து வருகிற பெரியோர்களிடம் உபதேசம் பெற்று அதையும் கிரமப்படி ஜபம் செய்து வருவதுதான் காலை மாலை நித்ய கர்மங்களை பூர்ணமாய் முடித்ததாகும்.

विश्वसेनाह्वयो राजा महाराष्ट्रजनेश्वरः । वसिष्ठं तपतां श्रेष्ठं प्राप्यायं विनयान्वितः ॥ २०
अपृच्छदद्भुतं किञ्चिदतीतानागतादिकम् । तथावदद्वसिष्ठोऽपि त्रिकालज्ञानिनां वरः ॥ २१
तदा राजातिसंतुष्टः प्रणम्यैनमृषीश्वरम् । कया वा विद्यया ब्रह्मन्नेवं त्वं प्रोक्तवानसि ॥ २२
तदेतत्तव दासाय नमामि त्वां जगद्गुरुम् । इति तस्य वचः श्रुत्वा राज्ञोऽसौ मुनिपुङ्गवः ॥ २३
वृषभाख्यं व्रतं पुण्यमनुष्ठितमनुत्तमम् । तत्प्रभावात् स्फुरंती मे त्रिषु कालेषु वस्तु यत् ॥ २४
व्रतस्यैतस्य माहात्म्यात्सर्वामीष्टं भविष्यति । इति विप्रर्षिवचनं निशम्य स महीपतिः ॥ २५
आश्चर्येण च संयुक्तस्वयमेतच्चचार हि । ततोऽयं लब्धवान्राजा त्रिकालज्ञानमद्भुतम् ॥ २६
भुक्त्वा भोगांश्च विपुलानन्ते कैलासमाप्तवान् । चरित्वैतद्व्रतं ब्रह्मा त्रिकालज्ञानमाप्तवान् ॥ २७
सन्तुष्टोऽपि महीदेवश्चरित्वा व्रतमद्भुतम् । अष्टापि सिद्धयो रम्यास्संप्राप्य गतिमाप सः ॥ २८
विधृताख्यो महीपालः पुरैतद्व्रतमद्भुतम् । अनुष्ठाय शरीरेण सप्तपाताललोककान् ॥ २९

விச்வஸேனுஹ்வயோ ராஜா மஹாராஷ்டரஜனேச்வர: ।
வஸிஷ்டம் தபதாம் ச்ரேஷ்டம் ப்ராப்யாயம் வினயான்வித: ॥ 20
அப்ருச்சதத்புதம் கிஞ்சிததீதாநாகதாதிகம் । ததாSவதத்வஸிஷ்டோபி த்ரிகால க்ஞானிகும் வர: ॥ 21
ததா ராஜாதிஸந்துஷ்ட: ப்ரணம்யைனம் ருஷீச்வரம் ।
கயா வா வித்யயா ப்ரும்ஹந்நேவம் த்வம் ப்ரோக்தவானஸி ॥ 22
ததேதத்தவ தாஸாய நமாமி த்வாம் ஜகத் குரும் ।
இதி தஸ்ய வச: ச்ருத்வா ராக்ஞோSஸௌ முனிபுங்கவ: ॥ 23
வ்ருஷபாக்யம் வ்ரதம் புண்யமனுஷ்டிதமனுத்தமம் ।
தத்ப்ரபாவாத் ஸ்புரந்தீ மே த்ரிஷு காலேஷு வஸ்து யத் ॥ 24
வ்ரததஸ்யைதஸ்ய மாஹாத்ம்யாத் ஸர்வாபீஷ்டம் பவிஷ்யதி ।
இதி விப்ரர்ஷிவசனம் நிசம்ய ஸ மஹீபதி: ॥ 25
ஆச்சர்யேணச ஸம்யுக்தஸ் ஸ்வயமேதச்சசார ஹி ।
ததோSயம் லப்தவான் ராஜா த்ரிகாலக்ஞானமத்புதம் ॥ 26
புக்த்வா போகாம்ச விபுலானந்தே கைலாஸமாப்தவான் ।
சரித்வைதத்வ்ரதம் ப்ரும்ஹா த்ரிகாலக்ஞானமாப்தவான் ॥ 27
ஸந்துஷ்டோSபி மஹீதேவச்சரித்வா வ்ரதமத்புதம் ।
அஷ்டாபி ஸித்தயோ ரம்யாஸ்ஸம்ப்ராப்ய கதிமாப ஸ: ॥ 28
வித்ருதாக்யோ மஹீபால: புரைதத்வ்ரதமத்புதம் । அனுஷ்டாய சரீரேண ஸப்தபாதாள லோககான் ॥ 29

ரதத்தையும், சந்திர பகவான் பல ரத்தினங்களால் விசித்திரமான விமானத்தையும் இவ்விரத மகிமையால் அடைந்திருக்கிறார்கள். (19) மஹாராஷ்டிர தேசத்தரசனான விச்வஸேனன் என்பவன் தபஸ்விகளில் சிறந்த வசிஷ்ட முனிவரிடம் சென்று முன்பு நடந்ததும் இனி நடக்கப் போவதுமான சில அற்புதங்களைப் பற்றி வணக்கத்துடன் கேட்டார். முக்காலங்களையும் அறிந்தவர்களுக்குள் மிகச் சிறந்தவரான வசிஷ்டரும் இவ்விதமே சொன்னார். (21) அப்பொழுது அரசன் மிகுந்த ஸந்தோஷமடைந்தவராகி அந்த வஸிஷ்டரை நமஸ்கரித்து ஓ ரிஷி சிரேஷ்டரே! தாங்கள் எந்த வித்தையால் இவ்வாறு சொன்னீர்களோ அதைத் தங்களுடைய தாஸனான எனக்குச் சொல்லவேண்டும். தங்களை நமஸ்கரிக்கின்றேன். இவ்வாறு அரசனுடைய வார்த்தையைக் கேட்டு மிகச்சிறந்த முனிவரான வஸிஷ்டர் (23) ஓ அரசனே! மிகச் சிறந்ததும் புண்யமுமான வ்ருஷப விரதத்தை நான் அனுஷ்டித்தேன். அதன் மகிமையால் எனக்கு முக்காலங்களிலுமுள்ள விஷயங்களெல்லாம் விளங்குகின்றன. (24) மேலும் இவ்விரதத்தின் மஹிமையால் எல்லா அபீஷ்டங்களுமுண்டாகும். இவ்வாறு வஸிஷ்ட மஹரிஷியின் வார்த்தையைக் கேட்ட அரசன் (25) மிகுந்த ஆச்சரியங் கொண்டவனாகி தானும் இவ்விரதத்தை அனுஷ்டித்தான் அதனால் அரசன் மிக அற்புதமான த்ரிகால ஞானத்தை அடைந்தான். (27) ஸந்துஷ்டன் என்ற அரசனும் அற்புதமான இவ்விரதத்தை அனுஷ்டித்து மிக நேர்த்தியான எட்டு ஸித்திகளையும் அடைந்து பிறகு நற்கதியை அடைந்தான். (28) முன்பு வித்ருதன் என்ற ஓர் அரசன் அற்புதமான இவ்விரதத்தை அனுஷ்டித்து அதனால்

ब्रह्मविष्णिवन्द्रपूर्वाणां लोकेष्वपि चरन् सदा । अद्भुतान्यपि सर्वाणि तत्रत्यानि समीक्ष्य सः ॥ ३०
स्वपुत्रेभ्यो वदन्नेवं चरित्वा बहुकालतः । कायसिद्धिमवाप्यान्ते शिवयोगित्वमाप्तवान् ॥ ३१
एवं व्रतमिदं केचिच्चरित्वा पुण्यगौरवात् । कांक्षितान्यपि सर्वाणि लब्ध्वान्ते मोक्षमापिरे ॥ ३२
ये पठन्त्यमुमध्यायं शृण्वन्ति श्रावयन्तिवा । कैलासं यान्ति परमं ते तु नूनं द्विजोत्तमाः ॥ ३३
एवं शिवव्रतान्यष्टौ कथितानि मया क्रमात् । अन्यान्यपिच वक्ष्येऽहं शृणुध्वं ब्राह्मणोत्तमाः ॥ ३४

इति श्री स्कान्दे महापुराणे शंकरसंहितायां शिवरहस्यखण्डे
उपदेशकाण्डे चतुस्त्रिंशोऽध्यायः ॥

॥ अथ पञ्चत्रिंशोऽध्यायः ॥

मेषमास शुक्रवारे अनुष्ठेय गौरीव्रतम् ॥

शुक्रवारव्रतं वक्ष्ये देव्यास्सर्वाघहारकम् । मेषंगते रवौ शुक्लपक्षे शुक्रस्य वासरे ॥ १

ப்ரும்ஹவிஷ்ணுவிந்த்ர பூர்வாணாம் லோகேஷ்வபி சரன்ஸதா ।
அத்புதான்யபி ஸர்வாணி தத்ரத்யானி ஸமீக்ஷ்ய ஸः ॥ 30
ஸ்வபுத்ரேப்யோ வதந்நேவம் சரித்வா பஹுகாலத: ।
காயஸித்திமவாப்யாந்தே சிவயோகித்வமாப்தவான் ॥ 31
ஏவம் வ்ரதமிதம் கேசிச்சரித்வா புண்யகௌரவாத் ।
காம்க்ஷிதான்யபி ஸர்வாணி லப்த்வாந்தே மோக்ஷமாபிரே ॥ 32
யே படந்த்யமுமத்யாயம் ச்ருண்வந்தி ச்ராவயந்தி வா ।
கைலாஸம் யாந்தி பரமம் தே து நூனம் த்விஜோத்தமா: ॥ 33
ஏவம் சிவவ்ரதான்யஷ்டௌ கதிதானி மயா க்ரமாத் ।
அன்யான்யபிச வக்ஷ்யேऽஹம் ச்ருணுத்வம் ப்ராம்ஹணோத்தமா: 34

இதி ஸ்ரீஸ்காந்தே மஹாபுராணே சங்கரஸம்ஹிதாயாம் சிவரஹஸ்யகண்டே
உபதேசகாண்டே சதுஸ்த்ரிம்சோऽத்யாய: ॥

॥ அத பஞ்சத்ரிம்ஶோऽத்யாய: ॥

சித்திரை மாதம் சுக்கிரவாரத்தில் அனுஷ்டிக்கவேண்டிய கௌரீ வ்ரதம்

சுக்ரவாரவ்ரதம் வக்ஷ்யே தேவ்யாஸ்ஸர்வாகஹாரகம் ।
மேஷம்கதே ரவௌ சுக்லபக்ஷே சுக்ரஸ்ய வாஸரே ॥ 1

சரீரத்துடனேயே ஏழு பாதள உலகங்கள் (29) ப்ரம்மா, விஷ்ணு, இந்திரன் முதலியவர்களின் உலகங்களிலும் எப்பொழுதும் ஸஞ்சரித்து ஆங்காங்குள்ள ஸகல அற்புதங்களையும் பார்த்துவந்தான். இவ்விதமாக அவன் வெகுகாலம் இவ்விரதத்தை அனுஷ்டித்துப் பிறகு தன் பிள்ளைகளுக்கும் சொல்லிவிட்டுப் பிறகு காயசித்தியை அடைந்து முடிவில் சிவயோகியானான். (31) இவ்வாறு சிலர் இவ்விரதத்தை அனுஷ்டித்து அந்தப் புண்ணிய மகிமையால் சகல அபீஷ்டங்களையும் அடைந்து முடிவில் மோக்ஷத்தை அடைந்திருக்கிறார்கள். (32) ஓ பிராம்மணோத்தமர்களே! இந்த அத்தியாயத்தை எவர்கள் படிக்கின்றார்களோ கேட்கின்றார்களோ, பிறரைக் கேட்கச் செய்கின்றார்களோ அவர்கள் முடிவில் சிறந்த கைலாஸத்தை அடைவார்கள் என்பது நிச்சயம். (33) இப்பொழுது ஓ முனிவர்களே! ஸ்ரீ சிவபிரானுடைய எட்டு விரதங்களையும் முறையே எடுத்துக் கூறினேன். மற்றுமுள்ள விரதங்களைப்பற்றியும் சொல்லுகிறேன். நீங்கள் அதைக் கவனமாகக் கேளுங்கள். (34)

முப்பத்து நான்காவது அத்தியாயம் முற்றிற்று.

முப்பத்தைந்தாவது அத்தியாயம்.

ஓ முனிவர்களே! எல்லா பாபங்களையும் போக்க வல்ல தேவியினுடைய சுக்கிரவார விரதத்தைப் பற்றிச் சொல்கிறேன். சூரியன் மேஷ ராசியில் இருக்கும்போது (சித்திரை மாதத்தில்) சுக்ல பக்ஷத்தில்

प्रातरेव समुत्थाय ध्यात्वा गौरीं मनोहराम् । स्नात्वा शुद्धजले शुद्धो नित्यकर्म समाप्य च ॥ २
स्वात्मानं भावयन्नारीरूपमुज्ज्वलकान्ति च । शुद्धोदकैः पूरयित्वा कुम्भमेकं मनोहरम् ॥ ३
तत्रावाह्य महादेवीमर्चयेद् गन्धपुष्पकैः । निवेदयित्वा नैवेद्यं पायसाद्यन्नसंभवम् ॥ ४
अष्टौ सुमङ्गलीर्वापि कन्यावापि मनोहराः । भस्मरुद्राक्षसर्वाङ्गा गन्धपुष्पैस्समर्च्य च ॥ ५
दद्याद्दानं यथाशक्ति ताभ्यश्शुद्धान्तरो द्विजाः । शिवालयमनुप्राप्य तत्र देवीं त्रियंबकम् ॥ ६
प्रदक्षिणविधानेन नमस्कृत्वा यथाविधि । दत्वा शक्त्यनुसारेण यत्किञ्चिद्भक्तिसंयुतः ॥ ७
व्रतं समाप्य नियमान्मध्याह्ने निशि वा द्विजाः । भुञ्जीयादशनं शुद्धैर्भक्तैरपि समन्वितः ॥ ८
फलान्यपूपं वा शुद्धमव्रतघ्नश्चरेदुत । एवं यस्तनुते मर्त्यश्शुक्रवारव्रतं महत् ॥ ९
तस्य प्रसन्ना श्रीगौरी सर्वाभीष्टं ददेध्रुवम् । चरित्वैतद्व्रतं शुक्रश्शुभानि प्राप्य भूसुराः ॥ १०
मन्नाम्नैतद्व्रतं भूयादिति प्राप वरं महत् । एवं दत्वा वरं तस्मै दधावन्तर्धिमीश्वरी ॥ ११

ப்ராதரேவ ஸமுத்தாய த்யாத்வா கௌரீம் மனோஹராம் ।
ஸ்னாத்வா சுத்தஜலே சுத்தோ நித்யகர்ம ஸமாப்யச ॥ 2

ஸ்வாத்மானம் பாவயன்நாரீ ரூபமுஜ்வல காந்தி ச । சுத்தோதகை: பூரயித்வா கும்பமேகம் மனோஹரம் 3

தத்ராவாஹ்ய மஹாதேவீமர்சயேத்கந்தபுஷ்பகை: ।
நிவேதயித்வா நைவேத்யம் பாயஸாத்யன்னஸம்பவம் ॥ 4

அஷ்டௌ ஸுமங்கலீர்வாபி கன்யாவாபி மனோஹரா: ।
பஸ்மருத்ராக்ஷஸர்வாங்கா கந்தபுஷ்பைஸ்ஸமர்ச்யச ॥ 5

தத்யாத்தானம் யதாசக்திதாப்யச்சுத்தாந்தரோ த்விஜா: ।
சிவாலயமனுப்பாப்ய தத்ர தேவீம் த்ரியம்பகம் ॥ 6

ப்ரதக்ஷிணவிதானேன நமஸ்க்ருத்வா யதாவிதி । தத்வா சங்த்யனுஸாரேண யத்கிஞ்சித் பக்தி ஸம்யுத: 7

வ்ரதம் ஸமாப்ய நியமான்மத்யான்ஹே நிசி வா த்விஜா: ।
புஞ்ஜீயாதசனம் சுத்தைர்பக்தைரபி ஸமன்வித: ॥ 8

பலான்யபூபம் வா சுத்தமவ்ரதக்னஞ்சரேதுத । ஏவம் ய: தனுதேமர்த்யச்சுக்ரவார வ்ரதம் மஹத் ॥ 9

தஸ்ய ப்ரஸன்னா ஸ்ரீகௌரீ ஸர்வாபீஷ்டம் ததேத் த்ருவம் ।
சரித்வைதத்வ்ரதம் சுக்ரச்சுபானி ப்ராப்ய பூஸுரா: ॥ 10

ஸ்வநாம்னைதத்வ்ரதம் பூயாதிதி ப்ராப வரம் மஹத் । ஏவம் தத்வா வரம் தஸ்மை ததாவந்தர்திமீச்வரீ 11

சுக்ர வாரத்தில் (1) அதிகாலையிலேயே எழுந்து மிக ஸௌந்தர்யம் வாய்ந்த கௌரி தேவியை தியானம் செய்து பரிசுத்தமான ஜலத்தில் ஸ்னானம் செய்து நித்ய கர்மாக்களை முடித்துக்கொண்டு (2) ஜ்வலிக்கின்ற காந்தியை உடைய பெண்ணுருவமாகத் தன்னை (தன் ஆத்மாவை) பாவித்துக்கொண்டு நேர்த்தியான ஓர் கும்பத்தை சுத்த ஜலத்தால் நிரப்பி (3) அதில் ஸ்ரீ மஹாதேவியை சந்தனம், புஷ்பம் முதலியவைகளால் பூஜை செய்து அன்னத்தினால் உண்டாக்கப்பட்ட பாயஸம் முதலியவைகளை நைவேத்யம் செய்து (4) எல்லா அவயவங்களிலும் பஸ்ம ருத்திராக்ஷங்களால் அலங்கரிக்கப்பட்ட மிக அழகு வாய்ந்த எட்டு ஸுமங்கலிகள் அல்லது எட்டு கன்னிகைகள் இவர்களை சந்தனம், புஷ்பம் முதலியவைகளால் பூஜித்து (5) பரிசுத்தமான மனமுடையவனாய் தன் சக்திக்கேற்றவாறு அவர்களுக்குத் தானம் கொடுத்துப் பிறகு தேவாலயத்திற்குச் சென்று அங்கு ஸ்ரீதேவியையும், முக்கண்ணரையும் (6) விதிப்படி பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து மிகுந்த பக்தியுடன் தம் சக்திக்கேற்றபடி காணிக்கை அளித்துவிட்டு (7) நியமத்துடன் விரதத்தை முடித்து மிகப் பரிசுத்தமான தேவி பக்தர்களுடன் பகலிலோ இரவிலோ போஜனம் செய்யவேண்டும். (8) அல்லது சுத்தமான பழவர்க்கங்கள், அப்பங்கள் முதலியவைகளையாவது விரதத்திற்குக் கெடுதியின்றி உண்ணவேண்டும். இவ்விதமாக எந்த மனிதர் மகிமை வாய்ந்த இந்த சுக்கிரவார விரதத்தை அனுஷ்டிக்கிறாரோ (9) அவருக்கு கௌரிதேவியானவள் பிரஸன்னமாகி எல்லா அபீஷ்டங்களையும் கொடுக்கிறாள் என்பது நிச்சயம். ஓ பூதேவர்களே! சுக்ரபகவான் இவ்விரதத்தை அனுஷ்டித்து அதனால் பல சுபங்களை அடைந்து (10) இவ்விரதமானது தன் பெயரால் விளங்கிவரவேண்டுமென்று பெரிய வரத்தையும் தேவியைக் கேட்டார். தேவியும் அவ்வாறே வரத்தை அளித்து மறைந்தாள். (11)

महालक्ष्मीश्चरित्वैतल्लक्ष्मीत्वं प्राप्तवत्यलम् । सर्वविद्याधिपत्यं च वाणीप्रापाद्य वैभवात् ।१२
अनुष्ठाय महीपालाः केचिद्राज्यमवापिरे । विद्यां लक्ष्मीं द्विजाः केचित्पुत्रांश्च प्रापुरञ्जसा ॥ १३
वैश्याः केचन शूद्राश्च व्रतमेतदुमाप्रियम् । चरित्वा प्रापुरखिलममीष्टं ब्राह्मणोत्तमाः ॥ १४
केचिद्व्रतमिदं कृत्वा भुक्त्वा भोगानखण्डितान् । अन्ते सालोक्य सामीप्य सारूप्यान्याप्य भूसुराः ॥ १५
सायुज्यं प्रापुरतुलं पुनरावृत्तिवर्जितम् । द्वितीयं व्रतमीश्वर्याः प्रवक्ष्ये सर्वपापहम् ॥ १६
मासेचाश्वयुजे शुक्लपक्षेच यम (पूर्वोक्त) तारके । अनुष्ठेयं व्रतमिदं गौर्याः प्रीतिकरं परम् ॥ १७
अस्मिन्दिने समुत्थाय नित्यकर्म समाप्यच । पूजयित्वा महादेवीं शुक्रवारप्रकारतः ॥ १८
दद्याद्दानंच भक्तेभ्यो यथाशक्ति समुद्भवम् । देवालयमनुप्राप्य देवं देवीं प्रणम्यच ॥ १९
दत्वा धनं यथाशक्ति गृहं प्राप्य स्वकीयकम् । मुद्गं शर्करया युक्तं दद्यादंकुरितं शुभम् ॥ २०
भुञ्जयात्परेद्युरशनं शिवभक्तैस्सहामलः । एतद्व्रतममनुष्ठाय पुरेन्द्राणी मनोरमा ॥ २१

மஹாலக்ஷ்மீச்சரித்வைதல்லக்ஷ்மீத்வம் ப்ராப்தவத்யலம் ।
ஸர்வவித்யாதிபத்யஞ்ச வாணீப்ராபாஸ்ய வைபவாத் ॥ 12
அனுஷ்டாய மஹீபாலா: கேசித்ராஜ்யமவாபிரே ।
வித்யாம் லக்ஷ்மீம் த்விஜா: கேகித்புத்ராம்ச ப்ராபுரஞ்ஜஸா ॥ 13
வைச்யா: கேசனசூத்ராச்ச வ்ரதமேததுமாப்ரியம் ।
சரித்வா ப்ராபுரகிலமபீஷ்டம் ப்ராம்ஹணோத்தமா: ॥ 14
கேசித்வ்ரதமிதம் க்ருத்வா புக்த்வா போகானகண்டிதான் ।
அந்தே ஸாலோக்யஸாமீப்ய ஸாரூப்யான்யாப்ய பூஸுரா: ॥ 15
ஸாயுஜ்யம் ப்ராபுரதுலம் புனராவ்ருத்திவர்ஜிதம் ।
த்விதீயம் வ்ரதமீச்வர்யா: ப்ரவக்ஷ்யே ஸர்வபாபஹம் ॥ 16
மாஸே சாச்வயுஜே சுக்லபக்ஷேசயம (பூர்வோக்த) தாரகே ।
அனுஷ்டேயம் வ்ரதமிதம் கௌர்யா: ப்ரீதிகரம் பரம் ॥ 17
அஸ்மின்தினே ஸமுத்தாய நித்யகர்ம ஸமாப்ய ச । பூஜயித்வா மஹாதேவீம் சுக்ரவாரப்ரகாரத: ॥ 18
தத்யாத்தானஞ்ச பக்தேப்யோ யதாசக்தி ஸமுத்பவம் ।
தேவாலயமனுப்ராப்ய தேவம் தேவீம் ப்ரணம்ய ச ॥ 19
தத்வா தனம் யதா சக்தி க்ருஹம் ப்ராப்ய ஸ்வகீயகம் ।
முத்கம்சர்கரயாயுக்தம் தத்யாதங்குரிதம் சுபம் ॥ 20
புஞ்ஜ்யாத் பரேத்யுரசனம் சிவபக்தைஸ்ஸஹாமல: । ஏதத்வ்ரதமனுஷ்டாய புரேந்த்ராணீ மனோரமா ॥ 21

மஹாலக்ஷ்மியும் இவ்விரதத்தை அனுஷ்டித்து அதனால் லக்ஷ்மித் தன்மையை அடைந்தாள். சரஸ்வதி தேவியும் இதன் மஹிமையால் எல்லா வித்தைகளுக்கும் அதிபதியாக இருக்கும் தன்மையைப் பெற்றாள் (12) சில அரசர்கள் இதை அனுஷ்டித்து ராஜ்யமடைந்திருக்கிறார்கள். சில பிராம்மணர்கள் இதனால் சீக்கிரத்தில் கல்வி ஸம்பத்து பிள்ளைகள் இவைகளை அடைந்திருக்கிறார்கள் (13) சில வைச்யர்களும், சூத்திரர்களும் பார்வதி தேவிக்கு மிகப் பிரியமான விரதத்தை அனுஷ்டித்து எல்லா அபீஷ்டங்களையும் அடைந்திருக்கிறார்கள். (14) ஓ ப்ராம்மணோத்தமர்களே! சிலர் இவ்விரதத்தை அனுஷ்டித்து அதனால் அளவற்ற போகங்களை அனுபவித்து முடிவில் ஸாலோக்கிய, ஸாமீப்ய, ஸாரூப்ய பதவிகளை அடைந்து (15) முடிவில் மறுபிறப்பல்லாத நிகரற்ற ஸாயுஜ்ய பதவியை அடைந்திருக்கிறார்கள். ஓ முனிவர்களே! எல்லா பாபங்களையும் போக்க வல்லது தேவியினுடைய இரண்டாவதான விரதத்தைப்பற்றிச் சொல்கிறேன். (16) ஐப்பசி மாதம் சுக்ல பக்ஷத்தில் எமதேவனுக்குரியதான நட்சத்திரத்தில் (பரணி) ஸ்ரீ கௌரிதேவிக்கு மிகப் பிரியமுள்ளதும், மிகச் சிறந்ததுமான இவ்விரதத்தை அனுஷ்டிக்க வேண்டும். (17) இந்த தினத்தில் காலையில் எழுந்து நித்ய கர்மங்களை முடித்துக்கொண்டு ஸ்ரீ மஹாதேவியை முன் கூறப்பட்ட சுக்ரவார விரத முறைப்படி பூஜை செய்து (18) தன் சக்திக்கு ஏற்றபடி பக்தர்களுக்கு தானம் கொடுக்க வேண்டும். பிறகு தேவாலயம் சென்று ஸ்வாமியையும், அம்பிகையையும் நமஸ்கரித்து (19) சக்திக்கு ஏற்றபடி தனத்தை காணிக்கை அளித்துவிட்டு வீடு சேர்ந்து சர்க்கரையோடு சேர்ந்த மங்களமான முளைத்த பாசிப் பயறை தானம் செய்து (20) மறுநாள் பரிசுத்தனாகி சிவ பக்தர்களுடன் போஜனம் செய்யவேண்டும். முன்பு மிக அழகுவாய்ந்த இந்திராணியானவள் இவ்வ்ரதத்தை அனுஷ்டித்து அதனால் (21) தேவராஜ

प्राणनायकतामाप सुरेशस्य महीसुराः । उषादेव्यप्यनुष्ठाय व्रतमेतदुमाप्रियम् ॥ २२
भास्करस्य प्रिया भूत्वा तच्छरीरस्थकर्कशम् । व्याधिजं वारयामास ब्राह्मणानामधीश्वराः ॥ २३
बहवोऽन्ये चरित्वैतत्सद्गतिं प्रापिरे द्विजाः । व्रतं नवम्यां वक्ष्येऽहं सर्वाभीष्टफलप्रदम् ॥ २४
आरभ्य प्रथमान्नित्यं कुंभे स्थाप्य महेश्वरीम् । शुक्रवारक्रमेणैव नित्यमभ्यर्चयेच्छिवाम् ॥ २५
नवम्यां प्रातरुत्थाय शुचिर्भूत्वा समाहितः । स्नात्वा पुण्यजले संध्यामभिवाद्य विधानतः ॥ २६
अर्चयित्वा महादेवीं भक्तवाञ्छार्थदायिनीम् । अर्चयित्वा स्त्रियश्शुद्धास्सर्वाभरणभूषिताः ॥ २७
ताभ्यो वस्त्राणि सूक्ष्माणि नवभ्यः प्रददेन्नरः । भोजयेत्पायसान्नाद्यैस्सापूपैर्व्यञ्जनान्वितैः ॥ २८
स्वयं भुञ्ज्याच्च मतिमान् भक्तैस्साकं द्विजोत्तमाः । परेद्युः प्रातरुत्थाय दशम्यां नियमान्वितः ॥ २९
नित्यकर्म समाप्याथ दर्शयित्वा शिवालयम् (स्त्रकम्) । शिवभक्तैस्सहधीमान् भुञ्जीयाद्ब्राह्मणोत्तमाः ॥ ३०
एतद्व्रतं पुरा विष्णुश्चरित्वाऽजयदात्मनः । शत्रूंस्तथान्ये विजयशक्तिं वीराभिधामपि ॥ ३१

ப்ராணநாயகதாமாப ஸுரேசஸ்ய மஹீஸுரா: । உஷாதேவ்யப்யனுஷ்டாய வ்ரதமேததுமாப்ரியம் ॥ 22
பாஸ்கரஸ்ய ப்ரியா பூத்வா தச்சரீரஸ்தகர்கசம் । வ்யாதிஜம் வாரயாமாஸ ப்ராம்ஹணாநாமதீச்வரா: ॥ 23

பஹவோऽன்யே சரித்வைதத் ஸத்கதிம் ப்ராபிரே த்விஜா: ।
வ்ரதம் நவம்யாம் வக்ஷ்யேऽஹம் ஸர்வாபீஷ்ட பலப்ரதம் ॥ 24

ஆரப்ய ப்ரதமான்னித்யம் கும்பேஸ்தாப்ய மஹேச்வரீம் ।
சுக்ரவாரக்ரமேணைவ நித்யமப்யர்சயேச்சிவாம் ॥ 25

நவம்யாம் ப்ராதருத்தாய சுசிர்பூத்வாஸமாஹித: ।
ஸ்நாத்வா புண்யஜலே ஸந்த்யாமபிவாத்ய விதானத: ॥ 26

அர்சயித்வா மஹாதேவீம் பக்தவாஞ்சார்ததாயினீம் ।
அர்சயித்வா ஸ்திரியச்சுத்தாஸ்ஸர்வாபரணபூஷிதா: ॥ 27

தாப்யோ வஸ்த்ராணி ஸூக்ஷ்மாணி நவப்ய: ப்ரததேன் நர: ।
போஜயேத்பாயஸான்னாத்யை: ஸாபூபைர்வ்யஞ்ஜனான்விதை: ॥ 28

ஸ்வயம் புஞ்ஜ்யாச்ச மதிமான் பக்தைஸ்ஸாகம் த்விஜோத்தமா: ।
பரேத்யு: ப்ராதருத்தாய தசம்யாம் நியமான்வித: ॥ 29

நித்யகர்ம ஸமாப்யாத தர்சயித்வா சிவாலயம் (ஸ்த்ரகம்) ।
சிவபக்தைஸ்ஸஹ ஸ்ரீமான் புஞ்ஜீயாத் ப்ராம்ஹணோத்தமா: ॥ 30

ஏதத் வ்ரதம் புரா விஷ்ணுச்சரித்வாऽஜயதாத்மன: । சத்ரூம்ஸ்ததான்யே விஜய சக்திம் வீரா பிதாமபி 31

னுக்குப் பிராணநாயகியாக இருக்கும் பதவியை அடைந்தாள். உஷாதேவியும், உமாதேவிக்கு மிகப் பிரியமுள்ள இவ்விரதத்தை அனுஷ்டித்து அதனால் (22) சூரியனுக்குப் பிரியநாயகியாகி அவருடைய சரீரத்தில் வியாதியால் உண்டான கடினத் தன்மையைப் போக்கினாள். (23) ஓ முனிவர்களே! மற்றும் பலர் இவ்விரகத்தை அனுஷ்டித்து நற்கதியடைந்திருக்கிறார்கள். ஓ முனிவர்களே! இப்பொழுது எல்லா அபீஷ்டங்களையும் அளிக்கக்கூடிய நவமி விரதத்தைப்பற்றிச் சொல்லுகிறேன். (24) ஓர் கும்பத்தில் ஸ்ரீ மஹேச்வரியை ஆவாஹனம் செய்து "பிரதமை திதி" முதல் "நவமி திதி" வரை தினந்தோறும் சுக்ரவார விரத முறைப்படி பூஜித்து வந்து (25) நவமி தினத்தில் காலையில் எழுந்து பரிசுத்தனாய் இந்திரிய ஜயத்துடன் புண்ய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, விதிப்படி ஸந்தியானுஷ்டானங்களைச் செய்து (26) பக்தர்களுக்கு வேண்டிய பலன்களை அளிக்க வல்ல ஸ்ரீ மஹாதேவியை பூஜித்து ஸகல ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்ட பரிசுத்தமுள்ள ஒன்பது சுமங்கலிகளைப் பூஜித்து (27) அவர்களுக்குச் சிறந்த வஸ்திரங்களைக் கொடுத்து, பாயஸம், அன்னம், அப்பம், வியஞ்சனம் முதலியவைகளுடன் போஜனம் செய்விக்க வேண்டும். (28) பிறகு புத்திசாலியான அவன் பக்தர்களுடன் கூடி உண்ண வேண்டும். பிறகு தசமியாகிய மறுநாள் காலையில் எழுந்து நியமத்துடன் (29) நித்ய கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு சிவாலயம் சென்று தேவியுடன் கூடிய பரமசிவனை தரிசித்து அந்த ஸ்ரீமான் சிவபக்தர்களுடன் கூட போஜனம் செய்ய வேண்டும். (30) பூர்வத்தில் ஸ்ரீ விஷ்ணுவானவர் இவ்விரதத்தை அனுஷ்டித்து அதனால் தனது பல சத்ருக்களை ஜயித்திருக்கிறார். அப்படியே பலரும் விஜயசக்தி,

विद्याशक्तिं भाग्यशक्तिं बलशक्तिं परामपि । लब्ध्वेह भुक्त्वा परमान् भोगानपि सुदुर्लभान् ॥ ३२
शिवलोकमनुप्राप्य शिवसायुज्यमापिरे । तस्मादिदं व्रतं पुण्यं ये चरन्ति नरोत्तमाः ॥ ३३
सर्वाश्शक्तीरनुप्राप्य ते यान्ति परमं पदम् । ये पठन्त्यमुमध्यायं व्रतमाहात्म्यमद्भुतम् ॥
शृण्वन्ति येतु ते सर्वे सद्गतिं यान्ति भूसुराः ॥ ३४

इति श्री स्कान्दे महापुराणे शंकरसंहितायां शिवरहस्यखण्डे
उपदेशकाण्डे पञ्चत्रिंशोऽध्यायः ॥

॥ अथ षट्त्रिंशोऽध्यायः ॥

वृषभमासे शुक्रवारे विनायक व्रतम्, विनायक चतुर्थी व्रतञ्च ॥

विघ्नेश्वरस्य वक्ष्येऽहं व्रतं परमपावनम् । वृषभस्थे दिवानाथे शुक्लपक्षे भृगोर्दिने ॥ १
प्रातरेव समुत्थाय शुचिर्भूत्वा समाहितः । नित्यकर्म समाप्याथ सौवर्णं राजतं तु वा ॥ २
ताम्रं गणेशं संपाद्य चावाह्याभ्यर्चयेद् द्विजाः । पुष्पैर्नानाविधैश्शुद्धैः पत्रैरपि मनोहरैः ॥ ३

வித்யாசக்திம் பாக்யசக்திம் பலசக்திம் பராமபி ।
லப்த்வேஹ புக்த்வா பரமான்போகானபி ஸுதுர்லபான் ॥ 32
சிவலோகமனுப்ராப்ய சிவஸாயுஜ்யமாபிரே । தஸ்மாதிதம் வ்ரதம் புண்யம் யே சரந்தி நரோத்தமா: ॥ 33
ஸர்வாச்சக்தீரனுப்ராப்ய தே யாந்தி பரமம் பதம் ।
யே படந்த்யமுமத்யாயம் வ்ரதமாஹாத்ம்யமத்புதம் ॥
ச்ருண்வந்தி யேது தே ஸர்வே ஸத்கதிம் யாந்தி பூஸுரா: ॥ 34

இதி ஸ்ரீஸ்காந்தே மஹாபுராணே சங்கரஸம்ஹிதாயாம் சிவரஹஸ்யகண்டே
உபதேசகாண்டே பஞ்சத்ரிம்சோऽத்யாய: ॥

॥ அத ஷட்த்ரிம்ஶோऽத்யாய: ॥

வைகாசி மாதம் வெள்ளிக்கிழமை அனுஷ்டிக்கவேண்டிய வ்ரதமும், விநாயக சதுர்த்தீ வ்ரதமும்

விக்னேச்வரஸ்ய வக்ஷ்யேऽஹம் வ்ரதம் பரம பாவனம் ।
வ்ருஷபஸ்தே திவாநாதே சுக்லபக்ஷே ப்ருகோர்தினே ॥ 1
ப்ராதரேவ ஸமுத்தாய சுசிர்பூத்வா ஸமாஹித: । நித்யகர்ம ஸமாப்யாத ஸௌவர்ணம் ராஜதம் து வா ॥ 2
தாம்ரம் கணேசம் ஸம்பாத்ய சாவாஹ்யாப்யர்சயேத் த்விஜா: ।
புஷ்பைர்தாநாவிதைச்சுத்தை: பத்ரைரபி மனோஹரை: ॥ 3

வீரசக்தி (31) வித்யாசக்தி, பாக்யசக்தி இவ்விதம் சிறந்த பல சக்திகளை அடைந்து, இவ்வுலகில் கிடைத்தற்கரிய சிறந்த போகங்களை அனுபவித்து பிறகு சிவலோகம் அடைந்து சிவ ஸாயுஜ்யத்தை அடைந்திருக்கிறார்கள். (33) ஆகையால் எந்த மனிதர்கள் இப்புண்ய விரதத்தை அனுஷ்டிக்கிறார்களோ அவர்கள் எல்லா வித சக்திகளையும் அடைந்து முடிவில் பரமபதத்தை அடைவார்கள். எவர்கள் இந்த நவமி விரதத்தைப்பற்றிக் கூறும் இந்த அத்யாயத்தைப் படிக்கிறார்களோ அல்லது கேட்கிறார்களோ அவர்கள் யாவரும் நற்கதியை அடைவார்கள். (34)

முப்பத்தி ஐந்தாதாவது அத்தியாயம் முற்றிற்று.

முப்பத்தாறுவது அத்தியாயம்.

ஓ முனிவர்களே! மிகப் பரிசுத்தமான ஸ்ரீ விக்னேஸ்வர விரதத்தைப்பற்றிச் சொல்கிறேன். சூரியன் விருஷப ராசியில் இருக்கும்போது (வைகாசி மாதம்) சுக்ல பக்ஷம் வெள்ளிக்கிழமை தினத்தில் (1) அதிகாலையில் எழுந்து இந்திரிய ஜயமுள்ளவனாயும், மிகப் பரிசுத்தமுள்ளவனாயும் இருந்துகொண்டு நித்ய கர்மங்களை முடித்து தங்கம், வெள்ளி (2) அல்லது தாமிரம் இவற்றில் ஒன்றாலான ஓர் விக்னேச்வர

निवेदयेच्च देवाय मोदकादीन्मनोहरान् । शिवालयमनुप्राप्य तत्र विघ्नेश्वरं शिवम् ॥ ४
कृतप्रदक्षिणो दत्वा यथाशक्ति धनं मुदा । नमस्कृत्य विधानेन गृहं प्राप्य स्वकीयकम् ॥ ५
दत्वा द्विजेभ्यो दानानि यथाशक्ति समुद्भवम् । दद्यात्फलमपूपं वा शुद्धमन्नमुत द्विजाः ॥ ६
स्नात्वा परेद्युः कर्माणि समाप्य विधिपूर्वकम् । विघ्नेशप्रतिमां दद्याच्छिवभक्ताय धीमते ॥ ७
अग्नीयादशनं पश्चाच्छिवभक्तैस्सहव्रती । एवमेतद्व्रतं पुण्यमनुष्ठाय पुरा ऋषिः ॥ ८
अत्रिस्सूर्यशशाङ्कौ द्वावलभत्तनुजौ परौ । ब्रह्मा ब्रह्मत्वमापाप्य प्रभावाद्ब्राह्मणोत्तमाः ॥ ९
शङ्खपद्मनिधी प्राप्य कुबेरोऽप्यस्य वैभवात् । देवा मनुष्या ऋषयः पुरैतद्व्रतमुत्तमम् ॥ १०
अनुष्ठाय प्रिया भूत्वा विघ्नेशस्यामितौजसः । शिवलोकमनुप्राप्य मोक्षमापुर्द्विजोत्तमाः ॥ ११
विनायकचतुर्थ्यां च विधिना यश्चरेद्व्रतम् । विनायकप्रियकरं सर्वपापहरं परम् ॥ १२
स भुक्त्वा विपुलान् भोगान्विघ्नेशस्य प्रसादतः । विघ्नेश्वरस्य लोकञ्च प्राप्नोति न च संशयः ॥ १३

நிவேதயேச்ச தேவாய மோதகாதீன் மனோஹரான் ।
சிவாலயமனுப்ராப்ய தத்ர விக்னேச்வரம் சிவம் ॥ 4
க்ருதப்ரதக்ஷிணோ தத்வா யதாசக்தி தனம் முதா ।
நமஸ்க்ருத்ய விதானேன க்ருஹம் ப்ராப்ய ஸ்வகீயகம் ॥ 5
தத்வா த்விஜேப்யோ தானானி யதாசக்தி ஸமுத்பவம் ।
தத்யாத்பலமபூபம் வா சுத்தமன்னமுத த்விஜா: ॥ 6
ஸ்நாத்வா பரேத்யு: கர்மாணி ஸமாப்ய விதிபூர்வகம் ।
விக்னேசப்ரதிமாம் தத்யாத் சிவபக்தாய தீமதே ॥ 7
அக்னீயாதசனம் பச்சாச்சிவபக்தைஸ்ஸஹவ்ரதீ । ஏவமேதத்வ்ரதம் புண்யமனுஷ்டாய புரா ருஷி: ॥ 8
அத்ரிஸ்ஸூர்யசசாங்கௌ த்வாவலபத்தனுஜௌபரௌ ।
ப்ரும்ஹா ப்ரும்ஹத்வமாபாஸ்ய ப்ரபாவாத் ப்ராம்ஹணோத்தமா: ॥ 9
சங்கபத்மநிதீ ப்ராப்ய குபேரோऽப்யஸ்ய வைபவாத் ।
தேவா மனுஷ்யா ருஷய: புரைதத்வ்ரதமுத்தமம் ॥ 10
அனுஷ்டாய ப்ரியா பூத்வா விக்னேசஸ்யாமிதௌஜஸ: ।
சிவலோகமனுப்ராப்ய மோக்ஷமாபு: த்விஜோத்தமா: ॥ 11
விநாயகசதுர்த்யாஞ்ச விதிநா யச்சரேத் வ்ரதம் । விநாயகப்ரியகரம் ஸர்வபாபஹரம் பரம் ॥ 12
ஸ புக்த்வா விபுலான் போகான் விக்னேசஸ்ய ப்ரஸாதத: ।
விக்னேச்வரஸ்ய லோகஞ்ச ப்ராப்நோதி ந ச ஸம்சய: ॥ 13

மூர்த்தியை அமைத்துக்கொண்டு ஆவாஹனம் செய்து மிகப் பரிசுத்தமான புஷ்பங்களாலும், அழகிய இலைகளாலும் பூஜித்து (3) தேவாதி தேவரான கணபதிக்கு மனோஹரமான கொழுக்கட்டை முதலிய வைகளை நிவேதனம் செய்து பிறகு சிவாலயத்திற்குச் சென்று ஸ்ரீ மஹேச்வரனையும், கணபதியையும் (4) பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து ஸந்தோஷத்தோடு சக்திக்கு ஏற்றவாறு காணிக்கை கொடுத்து விதிப் படி நமஸ்கரித்து தனது வீடு சேர்ந்து (5) பிராமணர்களுக்குத் தன் சக்திக்கு ஏற்றவாறு தானங்களைக் கொடுத்து ஓ அந்தணர்களே! பழங்கள், அப்பம், சுத்தான்னம் இவைகளில் ஏதாகிலும் ஒன்றைப் புசிக்க வேண்டும். (6) மறுநாள் காலையில் ஸ்நானம் செய்து விதிப்படி நித்ய கர்மாக்களை முடித்துக் கொண்டு பிறகு அந்த விக்னேச்வரப் பிரதிமையை புத்திமானும் சிவபக்தருமான ஓர் அந்தணருக்குத் தானம் செய்து (7) பிறகு அந்த விரதத்தை அனுஷ்டிக்கிறவன் சிவபக்தர்களுடன் போஜனம் செய்ய வேண்டும். பூர்வத்தில் அத்திரி முனிவர் இப் புண்ய விரதத்தை அனுஷ்டித்து அதனால் மிகச் சிறந்தவர்க ளான சந்திர, சூர்யர்களைப் பிள்ளைகளாக அடைந்தார். ஓ பிராம்மணோத்தமர்களே! இதன் மகிமையால் பிரம்மதேவன் ப்ரம்ம பதவியை அடைந்தார். (9) குபேரனும் இதன் மகிமையால் சங்க நிதி, பத்மநிதி இவைகளை அடைந்தான். மேலும் சில தேவர்கள், மனிதர்கள், ரிஷிகள் இவர்கள் யாவரும் முன்பு இச் சிறந்த விரதத்தை அனுஷ்டித்து (10) அளவற்ற சக்தியையுடைய ஸ்ரீ விக்னேச்வரருக்கு அன்புள்ளவர் களாகி சிவலோகமடைந்து மோக்ஷமடைந்திருக்கிறார்கள். (11) எவர் விநாயக சதுர்த்தி தினத்தில் ஸ்ரீ விக்னேச்வரருக்கு மிகப்ரியமுள்ளதும் எல்லா பாபங்களையும் போக்கவல்லதுமான இச்சிறந்த விரதத்தை முறைப்படி அனுஷ்டிக்கிறாரோ (12) அவர் ஸ்ரீ விக்னேச்வர ப்ரஸாதத்தால் இவ்வுலகில் எல்லா

विष्णुः पूर्वमनुष्ठाय चतुर्थीव्रतमद्भुतम् । विघ्नेशस्य प्रियो भूत्वा मुक्त्वा भोगित्वमात्मनः ॥ १४
पुण्डरीकनिभं नेत्रं लब्ध्वा गौर्याश्च शापतः । मुक्तो विष्णुत्वमापाशु पुनश्च ब्राह्मणोत्तमाः ॥ १५
पुरा ब्रह्मादयो देवा व्रतस्यास्य प्रभावतः । दृष्ट्वा विघ्नेश्वरं भक्त्या प्रणेमुर्भक्तिसंयुताः ॥ १६
विनायकस्तदा नृत्तं चक्रे सुललितं द्विजाः । शशी तदद्भुतं नृत्तं चक्रे दृष्ट्वा स्मयन् स्वयम् ॥ १७
तं शशाप गणाधीशो हसन्तं तं हिमद्युतिम् । अतस्तस्मिन्दिने कोऽपि नेक्षेत तुहिनद्युतिम् ॥ १८
योऽवलोकयते मर्त्यः पापीयान् भवति ध्रुवम् । तस्मिन् दिने पुरा कृष्णश्चन्द्रं वीक्ष्य महिसुराः ॥ १९
महान्तमपि शापञ्च प्राप्तवान् जनगर्हितम् । तस्मादिदं व्रतं पुण्यं सर्वपापप्रणाशनम् ॥ २०
यश्चरेत्सगणेशस्य प्रियो भोगानखण्डितान् । भुक्त्वान्ते शिवसायुज्यं याति सत्यं मयेरितम् ॥ २१
विधानेन व्रतं षष्ठ्यां विघ्नेशस्यान्यदद्भुतम् । बहवस्तद्व्रतिं प्रापुश्चरित्वा तत्प्रसादतः ॥ २२

விஷ்ணு: பூர்வமனுஷ்டாய சதுர்தீவ்ரதமத்புதம் ।
விக்னேசஸ்ய ப்ரியோ பூத்வா முக்த்வாபோகித்வமாத்மன: ॥ 14
புண்டரீகனிபம் நேத்ரம் லப்த்வா கௌர்யாச்ச சாபத: ।
முக்தோ விஷ்ணுத்வமாபாசு புனச்ச ப்ராம்ஹணோத்தமா: ॥ 15
புரா ப்ரும்ஹாதயோ தேவா வ்ரதஸ்யாஸ்ய ப்ரபாவத: ।
த்ருஷ்ட்வா விக்னேச்வரம் பக்த்யா ப்ரணேமுர்பக்திஸம்யுதா: ॥ 16
விநாயகஸ்ததா நிருத்தம் சக்ரே ஸுலளிதம் த்விஜா: ।
சசீததத்புதம் ந்ருத்தம் சக்ரே த்ருஷ்ட்வா ஸ்மயன் ஸ்வயம் ॥ 17
தம் சசாப கணாதீசோஹஸன்தம் தம் ஹிமத்யுதிம் ।
அதஸ்தஸ்மின்தினே கோऽபி நேக்ஷேத துஹிநத்யுதிம் ॥ 18
யோऽவலோகயதே மர்த்ய: பாபியான் பவதி த்ருவம் ।
தஸ்மின்தினே புரா க்ருஷ்ணச்சந்த்ரம் வீக்ஷ்ய மஹீஸுரா: ॥ 19
மஹாந்தமபிசாபஞ்ச ப்ராப்தவான் ஜனகர்ஹிதம் ।
தஸ்மாதிதம் வ்ரதம் புண்யம் ஸர்வபாபப்ரணாசனம் ॥ 20
யச்சரேத்ஸகணேசஸ்ய ப்ரியோ போகானகண்டிதான் ।
புக்த்வாந்தே சிவஸாயுஜ்யம் யாதி ஸத்யம் மயேரிதம் ॥ 21
விதானேன வ்ரதம் ஷஷ்ட்யாம் விக்னேசஸ்யான்யதத்புதம் ।
பஹவஸ்ஸத்கதிம் ப்ராபுச்சரித்வா தத்ப்ரஸாதத: ॥ 22

போகங்களையும் அனுபவித்து முடிவில் ஸ்ரீ விக்னேசுவரருடைய உலகத்தை அடைவார் என்பதில் ஸந்தேகமில்லை. (13) பூர்வத்தில் ஸ்ரீ விஷ்ணுவானவர் அற்புதமான இந்த சதுர்த்தி விரதத்தை அனுஷ்டித்து, அதனால் ஸ்ரீ விக்னேச்வரருக்கு ப்ரியமுள்ளவராகி ஸ்ரீ கௌரிதேவியின் சாபத்திலிருந்து விடுபட்டு தான் அடைந்திருந்த பாம்புத் தன்மையிலிருந்து விடுபட்டு தாமரைக்கு ஒப்பான கண்களை அடைந்து மறுபடியும் விஷ்ணுத் தன்மையை அடைந்தார் ஓ முனிவர்களே! (15) முன்பு ப்ரம்ம தேவன் முதலிய தேவர்கள் இவ்விரதத்தின் மகிமையால் ஸ்ரீவிக்னேச்வரரை பக்தியுடன் தரிசித்து நமஸ்கரித்தார்கள். (16) ஓ ப்ராம்மணோத்தமர்களே! அப்பொழுது ஸ்ரீவிநாயகமூர்த்தியானவர் மிக அழகாய் நர்த்தனம் செய்தார். சந்திரன் அவ்விநோதத்தைக் கண்டு நகைத்துத் தானும் அவ்விதமே நர்த்தனம் செய்தார். (17) ஸ்ரீ கணேசர் அவ்வாறு தன்னை பரிஹாஸம் செய்த சந்திரனை சபித்தார். ஆகையால்தான் அந்த விநாயக சதுர்த்தி தினத்தில் சந்திரனை ஒருவரும் பார்க்கக்கூடாது. (18) எந்த மனிதன் பார்க்கிறானோ அவன் பாவியாக ஆவது நிச்சயம். ஓ பூதேவர்களே! பூர்வத்தில் ஸ்ரீ க்ருஷ்ணர் விநாயக சதுர்த்தி தினத்தில் சந்திரனைப் பார்த்ததினால் (19) ஸகல ஜனங்களாலும் நிந்திக்கப்படும் பெரும் சாபத்தை அடைந்தார். ஆகையால் எவர் மிகப் புண்ணியமும் எல்லா பாபங்களையும் போக்க வல்லதுமான இவ் விரதத்தை அனுஷ்டிக்கிறாரோ அவர் ஸ்ரீ விக்னேச்வரருக்கு மிகப் பிரியமுள்ளவராகி ஸகல போகங்களையும் அனுபவித்து முடிவில் சிவ ஸாயுஜ்யத்தை அடைவார் என்று ஸத்தியமாய்ச் சொல்லுகிறேன். (21) மேலும் பலர் ஷஷ்டி திதியில் அனுஷ்டிக்கத் தக்க ஸ்ரீ விக்னராஜருடைய அற்புதமான மற்றொரு விரதத்தை முறைப்படி அனுஷ்டித்து ஸ்ரீ கணபதியின் அருளால் நற்கதியை அடைந்திருக்கிறார்கள். (22) பூர்வத்தில் "வித்தியுன்மாலி"

विद्युन्माली पुरा राजा व्रतं षष्ठ्यां गणेशितुः । चरित्वा व्याधिना मुक्तो वज्रदेहमवाप्य च ॥ २३
तिलोत्तमां स्त्रियं लब्ध्वा क्रीडयित्वा तया सह । पुत्रानुत्पाद्य परमान् भुक्त्वा भोगान्यथेच्छया ॥ २४
कैलासं प्राप परमं सशरीरो मनोहरम् । विघ्नेश्वरप्रियो भूत्वा मोक्षमाप द्विजोत्तमाः ॥ २५
एवं व्रतमनुष्ठाय बहवो मोक्षमापिरे । विघ्नेश्वरव्रतान्येवं कथितानि मया द्विजाः ॥ २६
ये पठन्तीममध्यायं शृण्वन्ति श्रावयन्ति वा । ते भुक्त्वा भोगमतुलं मोक्षं यान्ति द्विजोत्तमाः ॥ २७

इति श्री स्कान्दे महापुराणे शङ्करसंहितायां शिवरहस्यखण्डे
उपदेशकाण्डे षट्त्रिंशोऽध्यायः ॥

॥ अथ सप्तत्रिंशोऽध्यायः ॥

सकल भोगमोक्षप्रद स्कन्दषष्ठीव्रतादि ॥

अन्यद्व्रतं प्रवक्ष्यामि सुब्रह्मण्यस्य वै द्विजाः । तुलाराशिं गते सूर्ये पूर्वस्मिन् भृगुवासरे ॥ १

வித்யுன்மாலீ புரா ராஜா வ்ரதம் ஷஷ்ட்யாம் கணேசிது: ।
சரித்வா வ்யாதினா முக்தோ வஜ்ரதேஹமவாப்யச ॥ 23
திலோத்தமாம் ஸ்த்ரியம் லப்த்வா க்ரீடயித்வா தயாஸஹ ।
புத்ரானுத்பாத்ய பரமான் புக்த்வா போகான்யதேச்சயா ॥ 24
கைலாஸம் ப்ராப பரமம் ஸசரீரோ மநோஹரம் ।
விக்நேச்வரப்ரியோ பூத்வா மோக்ஷமாப த்விஜோத்தமா: ॥ 25
ஏவம் வ்ரதமனுஷ்டாய பஹவோ மோக்ஷமாபிரே । விக்நேச்வர வ்ரதான் யேவம் கதிதாநி மயா த்விஜா:
யே படந்தீமமத்யாயம் ச்ருண்வந்தி ச்ராவயந்தி வா ।
தே புக்த்வா போகமதுலம் மோக்ஷம் யாந்தி த்விஜோத்தமா: ॥ 27

இதி ஸ்ரீஸ்காந்தே மாஹாபுராணே சங்கரஸம்ஹிதாயாம் சிவரஹஸ்யகண்டே
உபதேசகாண்டே ஷட்த்ரிம்சோऽத்யாய:

॥ அத ஸப்தத்ரிம்சோऽத்யாய: ॥

எல்லாவித போகங்களையும், மோக்ஷத்தையும் அளிக்கவல்ல ஸ்கந்த ஷஷ்டி வ்ரதம் முதலியன

அன்யத்வ்ரதம் ப்ரவக்ஷ்யாமி ஸுப்ரம்மண்யஸ்ய வை த்விஜா: ।
துலாராசிம் கதே ஸூர்யே பூர்வஸ்மின் ப்ருகுவாஸரே ॥ 1

என்ற அரசன் ஸ்ரீ கணபதியினுடைய ஷஷ்டி வ்ரதத்தை அனுஷ்டித்து அதனால் வியாதிகள் நீங்கி வஜ்ரத்திற்கு ஒப்பான சரீரத்தை அடைந்து (23) திலோத்தமை என்ற தேவ ஸ்திரீயை அடைந்து அவளுடன் ரமித்து சிறந்த பல பிள்ளைகளைப் பெற்று, வேண்டிய மட்டில் போகங்களை அனுபவித்து (24) சரீரத்துடன் அழகியதும், சிறந்ததுமான கைலாஸ மலையை அடைந்து, ஸ்ரீ விக்னேச்வரருக்கு ப்ரியமுள்ளவனாகி முடிவில் மோட்சத்தை அடைந்தார். ஓ ப்ராம்மணோத்தமர்களே! (25) மேலும் இவ்வாறாக இவ்விரதத்தை மற்றும் பலர் அனுஷ்டித்து மோக்ஷம் அடைந்திருக்கிறார்கள். ஓ முனிவர்களே! ஸ்ரீ விக்னேச்வரருடைய வ்ரதங்கள் இவ்வாறு என்பதைச் சொன்னேன். (26) ஓ ப்ராம்மண சிரேஷ்டர்களே! எவர்கள் இந்த அத்தியாயத்தைப் படிக்கிறார்களோ, கேட்கிறார்களோ அல்லது பிறரைக் கேட்கச் செய்கிறார்களோ அவர்கள் நிகரற்ற போகங்களை அனுபவித்து முடிவில் மோக்ஷம் அடைவார்கள். (27)

முப்பத்தாறும் அத்தியாயம் முற்றிற்று.

முப்பத்தேழாவது அத்தியாயம்.

ஓ ப்ராம்மணோத்தமர்களே! மற்றதான ஸ்ரீ ஸுப்ரமண்ய ஸ்வாமியினுடைய விரதத்தைப்பற்றிச் சொல்லுகிறேன். ஸூரியன் துலா ராசியில் இருக்கும்பொழுது (ஐப்பசி மாதத்தில்) முதல் வெள்ளிக்கிழமை

समुत्थाय शुचिर्भूत्वा प्रातरेव षडाननम् । ध्यात्वा हृदब्जनिलये नित्यकर्म समाप्य च ॥ २
व्रतञ्चरेद्विधानेन सर्वपापहरं परम् । कृत्तिकाव्रतमन्यच्च स्कन्दषष्ठिव्रतं परम् ॥ ३
व्रतानि त्रीणि ये मर्त्याश्चरन्त्यागममार्गतः । ते भुक्त्वा विपुलान् भोगानन्ते मोक्षं गुहाज्ञया ॥ ४
ब्रह्मविष्ण्वादयो देवाश्चरित्वैतानि भूसुराः । जघ्नुर्दैत्यान्महाघोरान्रणमध्यगतान्पुरा ॥ ५
कर्तृत्वञ्च दिशां प्रापुर्दिक्पालाः पुनरप्युत । मुचुकुन्दो महीपालश्शत्रूञ्जित्वा रणे पुरा ॥ ६
गणाधिपत्यं संप्राप चरित्वैतानि भूसुराः । नारदप्रमुखाः पूर्वं तापसानामधीश्वराः ॥ ७
नित्यत्वं प्रापुरतुलं पुनरावृत्तिदुर्लभम् । पुत्रानायुः पुराकेचिदपुत्रा ब्राह्मणोत्तमाः ॥ ८
ऐश्वर्यं ज्ञानयोगांश्च मोक्षञ्चापुः पुरा परे । त्रिष्वेतेषुव्रतञ्चैकं यश्चरेद्गुहसंमतम् ॥ ९
स लब्ध्वा वाञ्छितं सर्वं शिवलोकमनुत्तमम् । प्राप्य मोक्षं व्रजत्यन्ते गुहस्यैव प्रसादतः ॥ १०
त्रीणि व्रतानि यो मर्त्यश्चरतिस्कन्दसंमतम् । माहात्म्यं तस्य कोवेत्ति गुहतुल्यस्य भूसुराः ॥ ११

ஸமுத்தாய சுசிர்பூத்வா ப்ராதரேவ ஷடாननம் । த்யாத்வா ஹ்ருதப்ஜநிலயே நித்யகர்மஸமாப்ய ச ॥ 2
வ்ரதஞ்சரேத்விதானேன ஸர்வபாபஹரம் பரம் । க்ருத்திகாவ்ரதமன்யச்ச ஸ்கந்த ஷஷ்டி வ்ரதம் பரம் ॥ 3

வ்ரதாநி த்ரீணி யே மர்த்யாச்சரந்த்யாகமமார்கத: ।
தே புக்த்வா விபுலான் போகானந்தே மோக்ஷம் குஹாக்ஞயா ॥ 4

ப்ரும்ஹவிஷ்ணவாதயோ தேவாச்சரித்வைதாநி பூஸுரா: ।
ஜக்நுர்தைத்யான் மஹாகோரான் ரணமத்யகதான் புரா ॥ 5

கர்த்ருத்வஞ்ச திசாம் ப்ராபுர்திக்பாலா: புனரப்யுத । முசுகுந்தோ மஹீபாலச்சத்ரூன்ஜித்வா ரணேபுரா ॥ 6
கணாதிபத்யம் ஸம்ப்ராப சரித்வைதாநி பூஸுரா: । நாரதப்ரமுகா: பூர்வம் தாபஸாநாமதீச்வரா: ॥ 7
நித்யத்வம் ப்ராபுரதுலம் புனராவ்ருத்தி துர்லபம் । புத்ரானாயு: புரா கேசித புத்ரா ப்ராம்ஹணோத்தமா: ॥ 8
ஐச்வர்யம் ஞானயோகாம்ச்ச மோக்ஷஞ்சாபு: புரா பரே ।
த்ரிஷ்வேதேஷு வ்ரதஞ்சைகம் யச்சரேத்குஹஸம்மதம் ॥ 9
ஸ லப்த்வா வாஞ்சிதம் ஸர்வம் சிவலோகமனுத்தமம் ।
ப்ராப்ய மோக்ஷம் வ்ரஜத்யந்தே குஹஸ்யைவ ப்ரஸாதத: ॥ 10
த்ரீணி வ்ரதாநி யோ மர்த்யச்சரதி ஸ்கந்தஸம்மதம் ।
மாஹாத்ம்யம் தஸ்ய கோவேத்தி குஹதுல்யஸ்ய பூஸுரா: ॥ 11

தினத்தில் (1) காலையில் எழுந்து, பரிசுத்தனாக ஆகி, ஸ்ரீ ஆறுமுகக் கடவுளை ஹ்ருதய கமல பீடத்தில் த்யானம் செய்துவிட்டு நித்திய கர்மங்களை முடித்துக்கொண்டு (2) எல்லா பாபங்களையும் போக்கவல்ல சிறந்த இவ்விரதத்தை விதிப்படி அனுஷ்டிக்க வேண்டும். மேலும் மற்றவைகளான கார்த்திகை விரதம் ஸ்கந்த ஷஷ்டி விரதம் ஆகிய இம்மூன்று விரதங்களையும் சாஸ்திர முறைப்படி எந்த மனிதர்கள் அனுஷ்டிக்கிறார்களோ அவர்கள் இவ்வுலகில் எல்லா போகங்களையும் அனுபவித்து முடிவில் ஸ்ரீ குகப் பெருமானின் ஆக்ஞையால் மோக்ஷமடைகிறார்கள். (4) ஓ பூதேவர்களே! ப்ரம்மா, விஷ்ணு முதலிய தேவர்கள் இவ்விரதங்களை அனுஷ்டித்து அதனால் யுத்தத்தில் மிகக் கொடிய அஸுரர்களையெல்லாம் வென்றார்கள். (5) திக்பாலகர்களெல்லாம் இதனால் திசைகளுக்கு அதிபர்களானார்கள். பூர்வத்தில் முசுகுந்த சக்கரவர்த்தி இவ்விரதங்களை அனுஷ்டித்து அதனால் யுத்தத்தில் ஸகல சத்ருக்களையும் ஜெயித்து கணாதிபதியாய் இருத்தலை அடைந்தார். முன்பு நாரதர் முதலிய சிறந்த தவ ச்ரேஷ்டர்கள் (7) இவ்விரதங்களால் மறுபிறப்பற்றதும், நிகரற்றதுமான நித்தியத் தன்மையை அடைந்தார்கள். ஓ முனிவர்களே! பூர்வத்தில் சிலர் பிள்ளையில்லாதவர்களாயிருந்து இவ்விரதங்களால் அநேகம் பிள்ளைகளை அடைந்திருக்கிறார்கள். (8) மேலும் மற்றும் சிலர் ஐச்வரியத்தையும், ஞான யோகத்தையும் அடைந்து, முடிவில் மோக்ஷமடைந்திருக்கிறார்கள். இம்மூன்றுகளில் ஒன்றையாயினும் ஸ்ரீ முருகனுக்கு திருப்தி அளிக்கும்படி எவர் அனுஷ்டிக்கிறாரோ (9) அவர் வேண்டிய பயன்களை எல்லாம் அடைந்து, முடிவில் மிக உத்தமமான சிவலோகத்தை அடைந்து ஸ்ரீ முருகன் அருளால் மோக்ஷமடைவார்கள் (10) ஓ பூஸுரர்களே! இப்படி இருக்கையில் இம்மூன்று விரதங்களையும் ஸ்ரீ முருகனுக்கு திருப்தி அளிக்கும்படி எந்த மனிதர் அனுஷ்டிக்கிறாரோ ஸ்ரீ முருகனுக்கு நிகரான அவருடைய மஹிமையை யார்தான் அறிவார்? (11) ஓ பூமிதேவர்களே! எவர்

य इमं पठतेऽध्यायं यश्शृणोति गुहप्रियम् । स भुक्त्वा विपुलान् भोगान्मोक्षं याति महीसुरः ॥ १२

इति श्री स्कान्दे महापुराणे शंकरसंहितायां शिवरहस्यखण्डे
उपदेशकाण्डे सप्तत्रिंशोऽध्यायः ॥

॥ अथ अष्टत्रिंशोऽध्यायः ॥

यमयातना निवृत्तिपूर्वक कैलासप्रद भैरव वीरभद्रयोः व्रतम् ॥

त्रीणि व्रतानि वक्ष्येऽहं भैरवस्य महात्मनः । मकरस्थे रवौ भानोर्वारे प्राथमिके तथा ॥ १
चैत्राश्वयुङ्मासकयोर्भरण्योरुभयोरपि । ब्राह्मे मुहूर्ते उत्थाय भैरवं मनसा स्मरन् ॥ २
समाप्य नित्यकर्माणि सौवर्णं राजतं तु वा । ताम्रजं विग्रहं वापि भैरवस्य महात्मनः ॥ ३
निर्माय पूजयित्वैनं पुष्पैर्नानाविधैरपि । निवेदयेच्च नैवेद्यं पायसाद्यन्नसंभवम् ॥ ४
प्रदक्षिणनमस्कारान् कृत्वा स्तोत्रपुरस्सरम् । दद्याच्च शिवभक्तेभ्यो दानं शक्त्यानुसारतः ॥ ५
शिवालयमनुप्राप्य तत्र देवं त्र्यंबकम् । भैरवञ्चापि देवेशं प्रदक्षिणविधानतः ॥ ६

ய இமம் படதேऽத்யாயம் யச்ச்ருணோதி குஹப்ரியம் ।
ஸ புக்த்வா விபுலான் போகான் மோக்ஷம் யாதி மஹீஸுரா: ॥ 12

இதி ஸ்ரீஸ்காந்தே மஹாபுராணே சங்கரஸம்ஹிதாயாம் சிவரஹஸ்யகண்டே
உபதேச காண்டே ஸப்ததத்ரிம்சோऽத்யாய: ॥

॥ அத அஷ்டத்ரிம்ஶோऽத்யாய: ॥

யம யாதனைகளைப் போக்கி கைலாஸத்தை அளிக்கும் பைரவர், வீரபத்திரர் இவர்களின் வ்ரதம்

த்ரீணி வ்ரதானி வக்ஷ்யேऽஹம் பைரவஸ்ய மஹாத்மன: ।
மகரஸ்தே ரவௌ பானோர்வாரே ப்ராதமிகே ததா ॥ 1
சைத்ராச்வயுங்மாஸகயோர்பரண்யோருபயோரபி ।
ப்ராம்ஹே முகூர்தே உத்தாய பைரவம் மனஸா ஸ்மரன் ॥ 2
ஸமாப்ய நித்யகர்மாணி ஸௌவர்ணம் ராஜதம் து வா ।
தாம்ரஜம் விக்ரஹம் வாபி பைரவஸ்ய மஹாத்மன: ॥ 3
நிர்மாய பூஜயித்வைனம் புஷ்பைர் நாநாவிதைரபி । நிவேதயேச்ச நைவேத்யம் பாயஸாத்யன்ன ஸம்பவம் 4
ப்ரதக்ஷிண நமஸ்காரான் ஸ்துத்வா ஸ்தோத்ரபுரஸ்ஸரம் ।
தத்யாச்ச சிவபக்தேப்யோ தானம் சக்த்யானுஸாரத: ॥ 5
சிவாலயமனுப்ராப்ய தத்ர தேவம் த்ரியம்பகம் । பைரவஞ்சாபி தேவேசம் ப்ரதக்ஷிணவிதானத: ॥ 6

ஸ்ரீ முருகனுக்கு ப்ரியம் உள்ளதான இந்த அத்தியாயத்தைப் படிக்கின்றாரோ அல்லது கேட்கிறாரோ அவர் ஸகல போகங்களையும் அனுபவித்துவிட்டு முடிவில் மோக்ஷமடைவார். (12)

முப்பத்தேழாவது அத்தியாயம் முற்றிற்று.

முப்பத்தெட்டாவது அத்தியாயம்.

ஓ முனிவர்களே! மஹாத்மாவாகிய ஸ்ரீபைரவமூர்த்தியினுடைய மூன்று விரதங்களையும் சொல்லுகிறேன். ஸூரியன் மகரராசியில் இருக்கும்பொழுது (தை மாதத்தில்) முதல் ஞாயிற்றுக்கிழமையிலும் (1) சித்திரை, ஐப்பசி மாதங்களில் இரு பரணி நக்ஷத்திரங்களிலும் பிராம்ம முகூர்த்தத்தில் எழுந்து ஸ்ரீ பைரவ மூர்த்தியை மனதில் தியானித்து (2) நித்திய கர்மங்களை முடித்துக்கொண்டு தங்கம், வெள்ளி அல்லது தாமிரத்தினால் செய்யப்பட்ட ஸ்ரீ பைரவ மூர்த்தியினுடைய விக்ரகத்தை செய்து அதை பலவித புஷ்பங்களால் பூஜை செய்து அன்னத்தினால் செய்யப்பட்ட பாயஸம் முதலியவைகளால் நைவேத்தியம் செய்து (4) ஸ்தோத்திரம் செய்துகொண்டே பிரதக்ஷிண நமஸ்காரம் செய்து சக்திக்கு ஏற்றபடி சிவபக்தர்களுக்கு தானம் செய்ய வேண்டும். (5) பிறகு சிவாலயத்துக்குச் சென்று அங்கு முக்கண்ணரையும் தேவேசரான

नमस्कृत्वा ददेद्भक्त्या यथाशक्ति समुद्भवम् । स्वगृहं प्राप्य मध्याह्ने शिवभक्तैस्समन्वितः ॥ ७
अद्यात्फलमपूपं वा अशनञ्चैकवारतः । परेद्युः प्रतिमां भक्त्या दद्याद्भक्ताय भैरवीम् ॥ ८
एवं चरतियो मर्त्यो भैरवस्य व्रतान्यपि । स भुक्त्वा विपुलान् भोगान् स्वेच्छया ब्राह्मणोत्तमाः ९
शिवलोकमनुप्राप्य भैरवस्य कृपावशात् । अन्तेचमोक्षं यान्तीतिनैवाश्चर्यं द्विजोत्तमाः ॥ १०
व्रतमेतदनुष्ठाय पुरा सूर्यो महाप्रभः । भैरवं कवचं प्राप सूर्यकोटिसमप्रभम् ॥ ११
तस्माच्चरति यो मर्त्यो व्रतान्येतानि भूसुराः । स भुक्त्वा विपुलान् भोगानन्ते मोक्षञ्च विन्दति ॥ १२
अन्यद्व्रतं प्रवक्ष्यामि वीरभद्रस्य धीमतः । भौमवारे समुत्थाय प्रातरेव द्विजश्शुचिः ॥ १३
नित्यकर्माणि सर्वाणि समाप्य विधिपूर्वकम् । रौप्येण काञ्चनेनापि वीरभद्रं महाबलम् ॥ १४
विनिर्मायाभिषेकाद्यैरर्चयित्वा यथाविधि । निवेदयेच्च नैवेद्यं नानाभक्ष्यसमन्वितम् ॥ १५
शिवभक्ताय विदुषे दद्यादानञ्च शक्तितः । ततश्शिवालयं गत्वा प्रणम्य परमेश्वरम् ॥ १६
वीरभद्रञ्च मतिमान् प्रदक्षिणविधानतः । दत्वोपहारं यत्किञ्चिद् गृहं प्राप्य स्वकं पुनः ॥ १७

நமஸ்க்ருத்வா ததேத்பக்த்யா யதாசக்தி ஸமுத்பவம் ।
ஸ்வக்ருஹம் ப்ராப்ய மத்யான்ஹே சிவபக்தைஸ்ஸமன்வித: ॥ 7
அத்யாத்பலமபூபம் வா அசனஞ்சைக வாரத: । பரேத்யு: ப்ரதிமாம் பக்த்யா தத்யாத்பக்தாய பைரவம் ॥ 8
ஏவம் சரதியோ மர்த்யோ பைரவஸ்ய வ்ரதான்யபி ।
ஸ புக்த்வா விபுலான் போகான் ஸ்வேச்சயா ப்ராம்ஹணோத்தமா: 9
சிவலோகமனுப்ராப்ய பைரவஸ்ய க்ருபாவசாத் ।
அந்தேச மோக்ஷம் யாந்தீதி நைவாச்சர்யம் த்விஜோத்தமா: ॥ 10
வ்ரதமேதத்தனுஷ்டாய புரா சூர்யோ மஹாப்ரப: । பைரவம் கவசம் ப்ராப ஸூர்யகோடி ஸமப்ரபம் ॥ 11
தஸ்மாச்சரதியோ மர்த்யோ வ்ரதான்யேதானி பூஸுரா: ।
ஸ புக்த்வா விபுலான் போகானந்தே மோக்ஷஞ்ச விந்ததி ॥ 12
அன்யத்வ்ரதம் ப்ரவக்ஷ்யாமி வீரபத்ரஸ்ய திமத: । பௌமவாரே ஸமுத்தாய ப்ராதரேவ த்விஜச்சுசி: ॥ 13
நித்யகர்மாணி ஸர்வாணி ஸமாப்ய விதிபூர்வகம் । ரௌப்யேண காஞ்சனேனாபி வீரபத்ரம் மஹாபலம் 14
விநிர்மாயாபிஷேகாத்யைரர்சயித்வா யதாவிதி । நிவேதயேச்ச நைவேத்யம் நானாபக்ஷ்ய ஸமன்விதம் 15
சிவபக்தாய விதுஷே தத்யாத்தானஞ்ச சக்தித: । ததச்சிவாலயம் கத்வா ப்ரணம்ய பரமேச்வரம் ॥ 16
வீரபத்ரஞ்சமதிமான் ப்ரதக்ஷிணவிதானத: ।
தத்வோபஹாரம் யத்கிஞ்சித் க்ருஹம் ப்ராப்ய ஸ்வகம் புன: ॥ 17

பைரவ மூர்த்தியையும் விதிப்படி பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து (6) சக்திக்கு ஏற்றவாறு பக்தியுடன் காணிக்கை கொடுத்து பின்பு தனது வீடு சேர்ந்து மத்தியான்ன காலத்தில் சிவபக்தர்களோடு (7) பழம், அப்பம் இவைகளையாவது அல்லது அன்னத்தையாவது ஒரேதடவை புசித்துவிட்டு மறுநாள் அப்பைரவ லிங்கத்தை பக்தியுடன் சிவபக்தருக்கு தானம் செய்யவேண்டும். (8) ஓ பிராம்மணோத்தமர்களே! ஸ்ரீ பைரவ மூர்த்தியினுடைய இம்மூன்று விரதங்களையும் எந்த மனிதர் அனுஷ்டிக்கிறாரோ அவர் தன் விருப்பப்படி வேண்டிய போகங்களை அனுபவித்து விட்டு (9) ஸ்ரீ பைரவனுடைய க்ருபையினால் சிவலோகமடைந்து முடிவில் மோக்ஷமடைவார் என்பதில் ஆச்சரியமே இல்லை. ஓ ப்ராம்மணோத்தமர்களே! (10) பூர்வத்தில் மிகுந்த காந்தியையுடைய ஸூரியன் இவ்விரதத்தை அனுஷ்டித்து அதனால் கோடி ஸூரியப் பிரகாசமுள்ள பைரவ கவசத்தை அடைந்தான். (11) ஓ பூமிதேவர்களே! ஆகையால் எந்த மனிதர் இம்மூன்று விரதங்களையும் அனுஷ்டிக்கிறாரோ அவர் அளவற்ற போகங்களை அனுபவித்து முடிவில் மோக்ஷமடைகிறார் (12) மிக புத்திசாலியாகிய ஸ்ரீ வீரபத்திரருடைய மற்றொரு விரதத்தைப் பற்றிச் சொல்கிறேன். பிராம்மணர் செவ்வாய்க்கிழமை காலையில் எழுந்து சுத்தி செய்துகொண்டு (13) நித்திய கர்மங்கள் யாவையும் விதிப்படி அனுஷ்டித்து தங்கத்தினாலோ வெள்ளியாலோ மிக வலிமை வாய்ந்த வீரபத்திரருடைய பிரதிமையை (14) அமைத்துக்கொண்டு அபிஷேகம் முதலியவைகளால் விதிப்படி பூஜை செய்து பலவித பக்ஷணங்களோடு கூட நைவேத்தியம் செய்து (15) சக்திக்கு ஏற்றவாறு சிவபக்தரான வித்வானுக்கு தானம் கொடுத்து பிறகு சிவாலயம் சென்று ஸ்ரீ பரமேச்வரனையும், ஸ்ரீ வீரபத்திரரையும் புத்திசாலியானவன் முறைப்படி பிரதக்ஷிண நமஸ்காரம் செய்து சிறிது காணிக்கை

भुञ्जीयाच्छिवभक्तैश्च साकं मौनं महिसुराः । परेद्युः प्रतिमां दद्याच्छिवभक्ताय भक्तिमान् ॥ १८
एवमेतद्व्रतं यस्तु वीरभद्रस्य पावनम् । आचरेत्तस्य पुण्यस्य वीर्यं तेजश्च संपदः ॥ १९
चरित्वैतद्व्रतं ब्रह्मा शंभोस्सूतत्वमाप्तवान् । कल्पवृक्षं शचींप्राप सुरेशोऽपि महीसुराः ॥ २०
ब्राह्मणा बहवः पूर्वं शिवज्ञानमवापिरे । भूपालाश्च पुराप्रापुरैश्वर्यं विजयं परम् ॥ २१
वैश्याश्शूद्राश्च बहवश्चरित्वैतद्व्रतं महत् । पुत्रान् लब्ध्वा परान् भोगान् भुक्त्वा मोक्षमवापिरे ॥ २२
तस्मादेतद्व्रतं येच चरन्तिमनुजोत्तमाः । ते लब्ध्वा विजयं पुत्रान् वीरभद्र प्रसादतः ॥ २३
अन्तेच शाङ्करं धाम यान्ति सत्यं मयेरितम् । अध्यायं ये पठन्त्येतं शृण्वन्ति श्रावयन्तिवा ॥
ते भुक्त्वा भोगमतुलं यान्ति शम्भोः परं पदम् ॥ २४

इति श्री स्कान्दे महापुराणे शंकरसंहितायां शिवरहस्यखण्डे
उपदेशकाण्डे अष्टत्रिंशोऽध्यायः ॥

புஞ்ஜீயாச்சிவபக்தைச்ச ஸாகம் மௌனம் முனீச்வர: ।
பரேத்யு: ப்ரதிமாம் தத்யாச்சிவபக்தாய பக்திமான் ॥ 18
ஏவமேதத்வ்ரதம்யஸ்து வீரபத்ரஸ்ய பாவனம் । ஆசரேத்தஸ்ய புண்யஸ்ய வீர்யம் தேஜச்ச ஸம்பத: ॥ 19
சரித்வைதத்வ்ரதம் ப்ரும்ஹா சம்போஸ்ஸூதத்வமாப்தவான் ।
கல்பவ்ருக்ஷம் சசீம்ப்ராப ஸுரேசோபி மஹீஸுரா: ॥ 20
ப்ராம்ஹணா பஹவ: பூர்வம் சிவக்ஞானமவாபிரே । பூபாலாச்ச புரா ப்ராபுரைச்வர்யம் விஜயம் பரம் ॥ 21
வைச்யாச்சூத்ராச்ச பஹவச்சரித்வைதத்வ்ரதம் மஹத் ।
புத்ரான் லப்த்வாபரான் போகான் புக்த்வா மோக்ஷமவாபிரே ॥ 22
தஸ்மாதேதத்வ்ரதம்யேச சரந்திமனுஜோத்தமா: । தே லப்த்வா விஜயம் புத்ரான் வீரபத்ரப்ரஸா தத: ॥23
அந்தேச சாங்கரம்தாம யாந்தி ஸத்யம் மயேரிதம் ।
அத்யாயம் யே படந்த்யே தம் ச்ருண்வந்தி ச்ராவயந்தி வா ॥
தே புக்த்வா போகமதுலம் யாந்தி சம்போ: பரம் பதம் ॥ 24

இதி ஸ்ரீஸ்காந்தே மஹாபுராணே சங்கரஸம்ஹிதாயாம் சிவரஹஸ்யகண்டே
உபதேச காண்டே அஷ்டத்ரிம்சோऽத்யாய: ॥

அளித்து பின்பு தனது வீடு சேர்ந்து (17) ஓ பூதேவர்களே! சிவபக்தர்களோடு மௌனமாய் போஜனம் செய்ய வேண்டும். பிறகு மறுநாள் பக்தியுடன் அந்த விக்ரகத்தை ஓர் சிவபக்தனுக்கு தானம் செய்ய வேண்டும். (18) எந்த மனிதன் இவ்விதமாக வீரபத்திரருடைய மிக பரிசுத்தமான விரதத்தை அனுஷ்டிக்கிறார்களோ அப்புண்ணியவானுக்கு வீரியம், தேஜஸ், ஸம்பத்து இவைகள் உண்டாகும். (19) இவ்விரதத்தை அனுஷ்டித்து அதனால் பிரம்மதேவன் ஸ்ரீ பரமேச்வரனுக்கு ஸாரதியாய் இருத்தலை அடைந்தார். ஓ பூதேவர்களே! தேவேந்திரன் இந்திராணியையும் கல்பக விருக்ஷத்தையும் அடைந்தான். (20) முன்பு பல பிராம்மணர்கள் சிவக்ஞானம் பெற்றிருக்கிறார்கள். அநேகம் அரசர்கள் மிகுந்த ஐச்வரியத்தையும் ஜயத்தையும் அடைந்திருக்கிறார்கள். (21) மேலும் அநேகம் வைச்யர்களும் சூத்திரர்களும் இப்பெரிய விரதத்தை அனுஷ்டித்து அதனால் சிறந்த பல பிள்ளைகளைப் பெற்று வேண்டிய போகங்களை அனுபவித்து முடிவில் மோக்ஷமடைந்திருக்கிறார்கள். (22) ஆகையால் எந்த மனிதச்ரேஷ்டர்கள் இவ்விரதத்தை அனுஷ்டிக்கிறார்களோ அவர்கள் ஸ்ரீ வீரபத்ரரின் அருளால் விஜயத்தையும் புத்திரர்களையும் அடைந்து (23) முடிவில் சிவலோகமடைவார்களென்று ஸத்தியமாய்ச் சொல்லுகிறேன். எவர்கள் இந்த அத்தியாயத்தை படிக்கின்றார்களோ, கேட்கின்றார்களோ அல்லது பிறரைக் கேட்கும்படி செய்கின்றார்களோ அவர்கள் நிகரற்ற போகங்களை அனுபவித்துவிட்டு ஸ்ரீ பரமேச்வரனுடைய சிறந்த ஸ்தானத்தை அடைவார்கள். (24)

முப்பத்தெட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

॥ अथ एकोनचत्वारिंशोऽध्यायः ॥

पशुपुण्यात् शिवपुण्यं श्रेष्ठम् ॥

एवं व्रतानि सर्वाणि कथितानि मया द्विजाः । इदानीं शिवपुण्यानि शृणुध्वमवधानतः ॥ १
शिवस्य देवदेवस्य लिङ्गरूपस्य भूसुराः । तथैव शिवबेराणामुमायाश्चण्मुखस्य च ॥ २
विघ्नेशस्य गणादीनां भक्तानामपि भूसुराः । सालोक्यादिपदप्राप्तौ भक्तानां शङ्करेच्छया ॥ ३
प्राकाराट्टालवळभिप्रासादादीन्यनेकशः । आलयानि मनोज्ञानि विद्यालोभवर्जितः ॥ ४
एताश्चनिर्ममेद्भक्त्या ताम्रस्वर्णशिलादिभिः । प्रतिष्ठाञ्च विधानेन कारयेत्सति संभवे ॥ ५
अभिषेकमलङ्कारं स्रग्भिः कुर्याद्विधानतः । वस्त्राणि गन्धनैवेद्यमेतेषां परिकल्पयेत् ॥ ६
दीपान् प्रकल्पयेत् स्थूलानुपचारंश्च कारयेत् । गाश्च संपादयेद्भक्त्या कन्या अपि च कल्पयेत् ॥ ७
क्षेत्राणि दद्याद्वित्तानुसारादारामकानि च । वापी कूपतटाकांश्च वृक्षान्देवाय कल्पयेत् ॥ ८
वाहनानि रथादीनि कल्पयेत्परमेशितुः । उत्सवान् कारयेद्विद्वान् महाविभवविस्तरम् ॥ ९

॥ அத ஏகோனசத்வாரிம்ஶோऽத்யாய: ॥

மற்ற தெய்வங்களை உபாஸிப்பதைக் காட்டிலும் சிவனை ஆராதிப்பது மிகச்சிறந்தது

ஏவம் வ்ரதானி ஸர்வாணி கதிதானி மயா த்விஜா: । இதானீம் சிவபுண்யானி ச்ருணுத்வமவதானத: ॥ 1
சிவஸ்ய தேவதேவஸ்ய லிங்கரூபஸ்ய பூஸுரா: । ததைவ சிவபேராணுமுமாயாஷ்ஷண்முகஸ்ய ச ॥ 2
விக்னேசஸ்ய கணாதீனாம் பக்தாநாமபி பூஸுரா: ।
ஸாலோக்யாதிபதப்ப்ராப்தௌ பக்தாநாம் சங்கரேச்சயா ॥ 3
ப்ராகாராட்டாலவளபி ப்ராஸாதாதீன்யனேகச: । ஆலயாநி மனோக்ஞாநி வித்தத்யால்லோப வர்ஜித: ॥ 4
ஏதாச்சநிர்மமேத்பக்த்யா தாம்ரஸ்வர்ண சிலாதிபி: । ப்ரதிஷ்டாஞ்ச விதானேன காரயேத்ஸதி ஸம்பவே 5
அபிஷேகமலங்காரம் ஸ்ரக்பி: குர்யாத்விதானத: ।
வஸ்த்ராணி கந்தநைவேத்ய மேதேஷாம் பரிகல்பயேத் ॥ 6
தீபான் ப்ரகல்பயேத் ஸ்தூலாநுபசாராம்ச்சகாரயேத் ।
காச்சஸம்பாதேயேத் பக்த்யா கன்யா அபி ச கல்பயேத் ॥ 7
க்ஷேத்ராணி தத்யாத்வித்தாநுஸாராதாராமகாநி ச ।
வாபீகூபதடாகாம்ச்ச வ்ருக்ஷான் தேவாய கல்பயேத் ॥ 8
வாஹநாநி ரதாதீநி கல்பயேத் பரமேசிது: । உத்ஸவான் காரயேத்வித்வான் மஹாவிபவ விஸ்தரம் ॥ 9

முப்பத்தொன்பதாவது அத்தியாயம்

ஓ முனிவர்களே! எல்லா விரதங்களும் இவ்விதமாக உங்களுக்கு என்னால் சொல்லப்பட்டன. இப்பொழுது சிவ புண்யங்களைப்பற்றி சொல்லுகிறேன் கவனமாய்க் கேளுங்கள். (1) ஓ பூஸுரர்களே! தேவர்களுக்கெல்லாம் தேவனான ஸ்ரீ பரமேச்வரரின் இச்சைப்படி ஸாலோகம் முதலிய பதவிகளை அடைவதற்காக ஸ்ரீ பரமேச்வரனுடைய லிங்கம், விக்ரஹங்கள், பார்வதிதேவி, ஷண்முகர், விநாயகர், சிவபக்தர்களான கணங்கள் இவர்களுக்கு (2-3) பிரகாரங்கள், அட்டாலங்கள், கொடுங்கைகள் இவைகளோடு கூடிய அழகிய ஆலயங்களை திரவ்யலோபமின்றி கட்ட வேண்டும். (4) தாம்பரம், தங்கம், கல் இவைகளாலான பிரதிமைகளை பக்தியுடன் செய்து விதிப்படி பிரதிஷ்டை செய்ய வேண்டும். (5) அந்த விக்ரஹங்களுக்கு விதிப்படி அபிஷேகம் செய்து பலவித மாலைகளால் அலங்காரம் செய்ய வேண்டும். வஸ்திரங்கள், சந்தனம், நைவேத்யம் இவைகளை அளிக்கவேண்டும். (6) ஜ்வாலையோடு கூடிய பெரிய தீபங்களை ஏற்ற வேண்டும். மற்ற உபசாரங்களையும் செய்ய வேண்டும். பக்தியுடன் பசுக்களையும், தேவதாஸிகளையும் ஏற்படுத்த வேண்டும். (7) தனது சக்திக்கு ஏற்றவாறு பூமிகளையும், தோட்டங்களையும் கொடுக்கவேண்டும். மேலும் ஸ்வாமிக்காக ஓடைகள், கிணறுகள், குளங்கள், மரங்கள் இவைகளை உண்டுபண்ண வேண்டும். (8) வித்வானானவன் தனது ஐச்வர்யத்திற்கு ஏற்றபடி விரிவாக வாஹனங்களையும், ரதம் முதலியவைகளையும் ஏற்படுத்தி உத்ஸவங்களையும் செய்விக்க வேண்டும். (9)

आलयादीनि जीर्णानि पुनरेव समुद्धरेत् । प्रदक्षिणनमस्कारान् कुर्यान्नित्यमतन्द्रितः ॥ १०
एवमादीनि पुण्यानि शिवस्य परमात्मनः । कुर्यान्नित्यं प्रयत्नेन श्रेयसे भूसुरोत्तमाः ॥ ११
शिवार्चकाय गुरवे दद्यान्निर्माय मन्दिरम् । गृहोपकरणं धान्यं धनं दद्याद्यथाबलम् ॥ १२
स्वगुरुं प्रणमेत् दृष्ट्वा कुर्याच्चैव प्रदक्षिणम् । एवं स्वगुरुकार्याणि नित्यं कुर्यादतन्द्रितः ॥ १३
गृहाणि शिवभक्तेभ्यो दद्यान्निर्माय भक्तिमान् । गृहोपकरणादीनि वस्त्राण्यपि च भूसुराः ॥ १४
तथा शिवपुराणानि भस्मरुद्राक्षकान्यपि । शिवलिङ्गानि पुण्यानि तथैवाभरणान्यपि ॥ १५
अन्नञ्च भक्तिमान्दद्याद्भक्तेभ्यो भूसुरोत्तमाः । पुरतो वीक्ष्य भक्तांश्च दृष्ट्वोत्तिष्ठेत भक्तिमान् ॥ १६
नमस्कुर्याच्च मतिमान् संभाष्य बहुमानतः । एवमादीनि कार्याणि शिवभक्तस्य निर्वहेत् ॥ १७
विदध्याच्च शिवाचार्यभक्तानां भक्तिमुज्ज्वलाम् । एतेषामपि कार्यस्य न विघ्नं मनसा स्मरेत् ॥ १८
वाचा च मनसाचैव शरीरेण धनेन वा । कुर्यात्सहायमनिशं भक्तेभ्यः परया मुदा ॥ १९
शिवाय गुरवे चैव शिवपुण्यरताय च । एतानि शिवपुण्यानि स्मृतानि मुनिसत्तमैः ॥ २०

ஆலயாதீனி ஜீர்ணானி புனரேவ ஸமுத்தரேத் । ப்ரதக்ஷிண நமஸ்காரான் குர்யான்நித்யமதந்த்ரித: ॥ 10
ஏவமாதீனி புண்யானி சிவஸ்ய பரமாத்மன: । குர்யான்நித்யம் ப்ரயத்னேன ச்ரேயஸே பூஸுரோத்தமா: 11
சிவார்சகாய குரவே தத்யான்நிர்மாய மந்திரம் । க்ருஹோபகரணம் தான்யம் தனம் தத்யாத்யதாபலம் 12
ஸ்வகுரும் ப்ரணமேத் த்ருஷ்ட்வா குர்யாச்சைவ ப்ரதக்ஷிணம் ।
ஏவம் ஸ்வகுருகார்யாணி நித்யம் குர்யாததந்த்ரித: ॥ 13
க்ருஹாணி சிவபக்தேப்யோ தத்யான்னிர்மாய பக்திமான் ।
க்ருஹோபகரணாதீனி வஸ்த்ராண்யபி ச பூஸுரா: ॥ 14
ததா சிவபுராணானி பஸ்மருத்ராக்ஷகான்யபி । சிவலிங்கானி புண்யானி ததைவாபரணான்யபி ॥ 15
அன்னஞ்ச பக்திமான் தத்யாத்பக்தேப்யோ பூஸுரோத்தமா: ।
புரதோ வீக்ஷ்ய பக்தாம்ச்ச த்ருஷ்ட்வோத்திஷ்டேத பக்திமான் ॥ 16
நமஸ்குர்யாச்ச மதிமான் ஸம்பாஷ்ய பஹுமானத: । ஏவமாதீனிகார்யாணி சிவபக்தஸ்ய நிர்வஹேத் 17
விதத்யாச்ச சிவாசார்யபக்தானாம் பக்திமுஜ்வலாம் ।
ஏதேஷாமபி கார்யஸ்ய ந விக்னம் மனஸா ஸ்மரேத் ॥ 18
வாசாச மனஸா சைவ சரீரேண தனேன வா । குர்யாத் ஸஹாயமனிசம் பக்தேப்ய: பரயா முதா ॥ 19
சிவாய குரவே சைவ சிவபுண்யரதாய ச । ஏதானி சிவபுண்யானி ஸ்ம்ருதானி முனிஸத்தமை: ॥ 20

ஜீர்ணங்களான ஆலயங்களை மறுபடி பழுதுபார்த்து தினந்தோறும் சோம்பலின்றி பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்ய வேண்டும். (10) ஓ பூதேவர்களே! மேன்மையை அடைவதற்காக பரமாத்மாவாகிய ஸ்ரீபரமேச்வரருக்கு இது முதலான புண்ய கைங்கர்யங்களையெல்லாம் முயற்சியுடன் செய்துவரவேண்டும். (11) பரமசிவனை பூஜை செய்யும் அர்ச்சகருக்கு வீடு கட்டிவைத்து தன் சக்திக்கு ஏற்றபடி க்ருஹத்திற்கு வேண்டிய தான்யம் பொருள் முதலியவைகளை கொடுக்க வேண்டும். (12) தன் குருவை பார்த்தவுடன் பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்ய வேண்டும். மேலும் இவ்விதமாக தன் குருவுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை என்றும் முயற்சியுடன் சோம்பல் இன்றி செய்து வரவேண்டும். (13) மேலும் ஓ பூதேவர்களே! மிகவும் பக்தியுடையவனாகி சிவபக்தர்களுக்கு வீடுகளையும் கட்டிக்கொடுத்து வீட்டிற்கு வேண்டிய ஸாமான்களையும் வஸ்திரங்களையும் அவர்களுக்கு கொடுக்க வேண்டும். (14) இவ்விதமாகவே சிவ புராணங்கள், விபூதி ருத்ராக்ஷங்கள், மஹா புண்யமான சிவலிங்கங்கள், ஆபரணங்கள், (15) அன்னம் முதலியவைகளை சிவபக்தர்களுக்கு பக்தியுடன் கொடுக்கவேண்டும். ஓ பூதேவர்களே! சிவபக்தர்களை எதிரில் கண்டவுடன் எழுந்து அவர்களை பக்தியுடன் நமஸ்கரித்து (16) மிக புத்திசாலித்தனமாய் அவர்களோடு வெகுமானத்துடன் ஸம்பாஷித்து இது முதலிய சிவபக்தர்களுக்குரிய காரியங்களை செய்து வரவேண்டும். (17) பக்தர்களான சிவாசாரியர்களிடத்தில் சிறந்த பக்தியுடனிருக்கவேண்டும். அவர்களுடைய கார்யங்களுக்கு மனதாலும் விரோதம் நினைக்கக் கூடாது. சிவபக்தர்களுக்கும் சிவ புண்ணியங்களில் சிறந்த சிவஸ்வரூபியான குருவுக்கும் வாக்கு, மனம், உடல், பணம் முதலியவைகளால் எப்பொழுதும் மிகுந்த ஸந்தோஷத்துடன் உதவி செய்து வரவேண்டும். ஓ முனிவர்களே! இவைகள் தான் சிவபுண்ணியங்கள் என்று சிறந்த முனிவர்களால் கூறப்படுகின்றன. எந்த மனிதர்கள் இச்சிவ

एतानि शिवपुण्यानि ये कुर्वन्ति नरोत्तमाः । ते भुक्त्वा विपुलान् भोगान् पुण्यात्मानो महीतले ॥ २१
पुत्रपौत्रसमृद्धास्ते भुक्त्वा भोगानखण्डितान् । काञ्चनेन विमानेन शिवलोकमवाप्यते ॥ २२
कल्पकोटिसहस्राणि मोदन्ते शिवसंमताः । अन्ते च शिवसायुज्यं प्राप्नुवन्ति नसंशयः ॥ २३
इत्थं निशम्य वचनं सूतस्य मुनिसत्तमाः । अपृच्छन् संशयाविष्टा भक्तानां लक्षणं मुदा ॥ २४
शिवस्य लक्षणं पूर्वं गुरोरपि च लक्षणम् । इति तेषां वचः श्रुत्वा सूतः पौराणिकोत्तमः ॥ २५
प्रोवाच लक्षणं भूयो भक्तानां परमेशितुः । शिवभक्ता महात्मानस्सन्ति देवेषु केचन ॥ २६
दैत्येषु यातुधानेषु यक्षगन्धर्वभोगिषु । मुनीश्वरेषु मर्त्येषु ब्राह्मणेषु नृपेष्वपि ॥ २७
ऊरुजेष्वपि शूद्रेषु सङ्करेष्वपि सर्वशः । वर्णाश्रमव्यवस्थाच नैषां सन्ति मुनीश्वराः ॥ २८
केवलं शिवभक्तास्ते सर्वे माहेश्वराः स्मृताः । अतिवर्णाश्रमाः प्रोक्तास्सर्ववेदेषु संमताः ॥ २९
तेषां बाह्यानि चिह्नानि दश सन्ति मुनीश्वराः । त्रीण्यान्तराणि चोक्तानि दश सन्ति महात्मनः ॥ ३०

ஏதானி சிவபுண்யானி யே குர்வந்தி நரோத்தமா: ।
தே புக்த்வா விபுலான் போகான் புண்யாத்மானோ மஹீதலே ॥ 21
புத்ரபௌத்ர ஸம்ருத்தாஸ்தே புக்த்வா போகானகண்டிதான் ।
காஞ்சனேன விமானேன சிவலோகமவாப்யதே ॥ 22
கல்பகோடிஸஹஸ்ராணி மோதந்தே சிவஸம்மதா: ।
அந்தே ச சிவஸாயுஜ்யம் ப்ராப்னுவந்தி ந ஸம்சய: ॥ 23
இத்தம் நிசம்ய வசனம் ஸூதஸ்ய முனிஸத்தமா: । அப்ருச்சன் ஸம்சயாவிஷ்டா பக்தானாம் லக்ஷணம் முதா
சிவஸ்ய லக்ஷணம் பூர்வம் குரோரபிச லக்ஷணம் ।
இதி தேஷாம் வச: ச்ருத்வா ஸூத: பௌராணிகோத்தம: ॥ 25
ப்ரோவாச லக்ஷணம் பூயோ பக்தானாம் பரமேசிது: ।
சிவ பக்தா மஹாத்மானஸ்ஸந்தி தேவேஷு கேசன: ॥ 26
தைத்யேஷு யாதுதானேஷு யக்ஷகந்தர்வபோகிஷு ।
முனீச்வரேஷு மர்த்யேஷு ப்ராம்ஹணேஷு நருபேஷ்வபி ॥ 27
ஊருஜேஷ்வபி சூத்ரேஷு ஸங்கரேஷ்வபி ஸர்வச: । வர்ணாச்ரம வ்யவஸ்தாச நைஷாம் ஸந்தி முனீச்வரா:
கேவலம் சிவபாக்தாஸ்தே ஸர்வே மாஹேச்வரா: ஸ்ம்ருதா: ।
அதிவர்ணாச்ரமா: ப்ரோக்தாஸ்ஸர்வவேதேஷு ஸம்மதா: ॥ 29
தேஷாம் பாஹ்யானி சின்ஹானி தசஸந்தி முனீச்வரா: ।
த்ரீண்யாந்த்ராணி சோக்தானி தசஸந்தி மஹாத்மன: ॥ 30

புண்ணியங்களைச் செய்கிறார்களோ புண்ணியாத்துமாக்களாகிய அவர்கள் இவ்வுலகில் அநேக போகங்களை அனுபவித்து (21) மிகுந்த புத்திர பௌத்திரர்களை நிரம்பப் பெற்றவர்களாகி, அளவற்ற சுகங்களை அனுபவித்துவிட்டு, முடிவில் தங்க விமானத்தில் சிவலோகம் அடைந்து, அங்கு (22) ஸ்ரீ பரமேச்வரனுக்கு அன்புள்ளவர்க்குரியவர்களாகி, அநேகம் ஆயிரம் கற்பகோடி காலமளவும், ஆனந்தத்துடன் வஸித்து, முடிவில் சிவஸாயுஜ்யத்தை அடைவார்கள் என்பதில் ஸந்தேகம் இல்லை.'' (23) இவ்வாறு ஸூதருடைய வார்த்தையைக் கேட்டு முனி ச்ரேஷ்டர்கள் ஸந்தேகம் அடைந்தவர்களாகி சிவபக்தர்களின் லக்ஷணத்தையும், குருவின் லக்ஷணத்தையும் ஸந்தோஷத்துடன் வினவினார்கள் இவ்வாறு அவர்களுடைய வார்த்தையைக் கேட்டு சிறந்த புராணிகரான ஸூத முனிவர் (25) ஸ்ரீ பரமேச்வர பக்தர்களின் லக்ஷணத்தைச் சொன்னார். ஓ முனிவர்களே! தேவர்கள், அஸுரர்கள், ராக்ஷஸர்கள், யக்ஷர்கள், கந்தர்வர்கள், நாகர்கள், முனிவர்கள், மனிதர்கள், பிராம்மணர்கள், க்ஷத்திரியர்கள், வைச்யர்கள், சூத்திரர்கள் இவர்களிலும், ஸங்கர ஜாதிகளிலும், மற்றும் எல்லோர்களிலும் மகாத்மாக்களான சிற்சில சிவபக்தர்கள் இருக்கிறார்கள் ஓ முனிச்வரர்களே! இவர்களுக்கெல்லாம் வர்ணாச்ரம கட்டுப்பாடு இல்லை. (28) அந்த எல்லா சிவபக்தர்களும் கேவலம் ஸ்ரீ மகேச்வரரைச் சேர்ந்தவர்கள் என்றே நினைக்கப்படுகிறார்கள். அவர்கள் எல்லாம் ஸகல வேதங்களாலும் ஸம்மதிக்கப்பட்டவர்களான ''அதிவர்ணாசிரமிகள்'' என்று கூறப்படுகின்றார்கள். (29) ஓ முனிவர்களே! அந்த மகாத்மாக்களுக்கு வெளிப்படையான அடையாளங்கள் பத்தும், உள் குறிப்புகள் மூன்றும், வெளிக்கும் உள்ளுக்கும் பொதுவானவைகள் பத்து அடையாளங்கள் உள்ளன என்று கூறப்படுகின்றன. (30) அவைகளோவெனில்

प्रथमं भस्मरुद्राक्षधारणं समुदीरितम् । द्वितीयं गुरुसेवाच शिवस्तोत्रं तृतीयकम् ॥ ३१
नामोच्चारणमीशस्य चतुर्थं परिपठ्यते । पञ्चमं देवदेवस्य पूजनं ब्राह्मणोत्तमाः ॥ ३२
शिवालयस्य पुण्यस्य दर्शनं षष्ठमीरितम् । तथा शिवपुराणानां श्रवणं सप्तमं द्विजाः ॥ ३३
नमस्कारं तु भक्तानामष्टमं कथितं खलु । नवमं शिवभक्तानां गृहे भोजनमीरितम् ॥ ३४
दानञ्च दशमं ज्ञेयं शिवभक्ते गुरावपि । एवं बाह्यानि चिह्नानि कथितानि दश द्विजाः ॥ ३५
आन्तराण्यपि चिह्नानि मनसः प्रथमो जपः । पूजा च मानसीज्ञेया द्वितीया परमेशितुः ॥ ३६
साक्षात्कारस्तृतीयस्तु ब्रह्मणो ब्राह्मणोत्तमाः । इमानि त्रीणि चोक्तानि पुराविद्भिर्मुनीश्वरैः ॥ ३७
आन्तराण्यपि बाह्यानि येषां सन्ति यदा द्विजाः । तदा भाक्तानि चिह्नानि संभवन्ति महात्मनाम् ॥ ३८
कण्ठे विकारः प्रथमो गद्गदाख्यश्शरीरजः । जिह्वास्पन्दो द्वितीयस्तु स्फुरणं चोष्ठयोरपि ॥ ३९
कंपनञ्च शरीरस्य चतुर्थं भक्तिलक्षणम् । रोमाञ्चः पञ्चमोज्ञेयष्षष्ठः स्वेदोऽपि कीर्तितः ॥ ४०
स्खलनं सप्तमं ज्ञेयमष्टमं बाष्पनिर्गमः । रोदनं नवमं चिह्नं दशमं पारवश्यकम् ॥ ४१

ப்ரதமம் பஸ்மருத்ராக்ஷதாரணம் ஸமுதீரிதம் । த்விதீயம் குருஸேவாச சிவஸ்தோத்ரம் த்ருதீயகம் ॥ 31
நாமோச்சாரணமீசஸ்ய சதுர்தம் பரிபட்யதே । பஞ்சமம் தேவதேவஸ்ய பூஜனம் ப்ராம்ஹணோத்தமா: 32
சிவாலயஸ்ய புண்யஸ்ய தர்சனம் ஷஷ்டமீரிதம் । ததா சிவபுராணானும் ச்ரவணம் ஸப்தமம் த்விஜா: ॥ 33
நமஸ்காரம் து பக்தானுமஷ்டமம் கதிதம் கலு । நவமம் சிவபக்தானும் க்ருஹே போஜனமீரிதம் ॥ 34
தானஞ்ச தசமம் க்ஞேயம் சிவபக்தே குராவபி । ஏவம் பாஹ்யானி சின்ஹானி கதிதானி தசத்விஜா: 35
ஆந்தராண்யபி சின்ஹானி மனஸ: ப்ரதமோ ஜப: । பூஜாச மானஸீக்ஞேயா த்விதீயா பரமேசிது: ॥ 36

ஸாக்ஷாத்காரஸ்த்ரிதீயஸ்து ப்ரும்ஹணோ ப்ராம்ஹணோத்தமா: ।
இமானி த்ரீணி சோக்தானி புராவித்பிர்முனீச்வரை: ॥ 37

ஆந்தராண்யபி பாஹ்யானி யேஷாம் ஸந்தி யதா த்விஜா: ।
ததா பாக்தானி சின்ஹானி ஸம்பவந்தி மஹாத்மனும் ॥ 38

கண்டே விகார: ப்ரதமோகத்கதாக்யச்சரீரஜ: । ஜிஹ்வாஸ்பந்தோ த்விதீயஸ்துஸ்புரணம் சோஷ்டயோரபி

கம்பனஞ்ச சரீரஸ்ய சதுர்தம் பக்திலக்ஷணம் ।
ரோமாஞ்ச: பஞ்சமோக்ஞேயஷ்ஷஷ்ட: ஸ்வேதோऽபி கீர்தித: ॥ 40

ஸ்கலனம் ஸப்தமம் க்ஞேயமஷ்டமம் பாஷ்பநிர்கம: । ரோதனம் நவமம் சின்ஹம் தசமம் பாரவச்யகம் ॥ 41

விபூதி, ருத்திராக்ஷங்களை தரிப்பது முதலாவதாகவும், குருவை ஸேவிப்பது இரண்டாவதாகவும், ஸ்ரீபரமேச்வரனை ஸ்தோத்திரம் செய்வது மூன்றுவதாகவும் (31) ஸ்ரீ பரமசிவனுடைய திருநாமாக்களை உச்சரிப்பது நான்காவதாகவும், அந்த மகாதேவரை பூஜிப்பது ஐந்தாவதாகவும் (32) மிகப் புண்ணியமான சிவாலயத்தை தர்சிப்பது ஆறுவதாகவும், சிவபுராணங்களைக் கேட்பது ஏழாவதாகவும் (33) சிவ பக்தர்களை நமஸ்கரிப்பது எட்டாவதாகவும், சிவ பக்தர்களின் க்ருஹத்தில் போஜனம் செய்வது ஒன்பதாவதாகவும் (34) சிவ பக்தரான ஆசிரியனுக்கு தானம் கொடுப்பது பத்தாவதாகவும் கூறப்படுகிறது. ஆக இப் பத்து அடையாளங்களும் வெளிக் குறிப்புகளாகச் சொல்லப்படுகிறது. (35) அந்தரமான அடையாளங்களோவெனில் மனதினால் ஸ்ரீ பரமேச்வரனைக் குறித்து ஜபம் செய்வது ஒன்றுவது ஆகும். ஸ்ரீ மஹேச்வரனை மனதினால் பூஜை செய்வது இரண்டாவது ஆகும். (36) ஓ பிராம்மணோத்தமர்களே! பரப்ரும்மத்தை நேரில் பார்ப்பது மூன்றுவதாகும். ஆகிய இம் மூன்றும் உட்குறிப்புகள் என்று புராணங்களை அறிந்த முனிவர்கள் கூறுகிறார்கள். (37) ஓ வேதியர்களே! மேலே சொல்லப்பட்ட வெளிக் குறிகள், உள் குறிகள் ஆகிய பதின்மூன்றும் எந்த பக்தர்களுக்கு இருக்கின்றனவோ, அப்படிப்பட்ட மகாத்மாக்களுக்கு பக்தர்களுக்குரிய மற்ற பத்து அடையாளங்களும் உண்டாகின்றன. (38) அவைகளோவெனில், தழதழத்த கண்டத்தொனியில் மாறுதல் ஏற்படுவது முதலாவது ஆகும். நாவின் துடிப்பு இரண்டாவதாகும், உதடுகளின் துடிப்பு மூன்றுவது ஆகும். (39) உடல் நடுக்கம் பக்தனின் நான்காவதான லக்ஷணமாகும். மயிர் சிலிர்த்தல் ஐந்தாவதாகும். வியர்வை உண்டாவது ஆறுவது ஆகும். (40) நடக்கையில் இடறி நடப்பது ஏழாவதாகும். கண்ணீர் வடிதல் எட்டாவதாகும். அழுதல் ஒன்பதாவதாகும். பரவசம்

एतानि दश चिह्नानि भक्तान्युक्तानि शूलिना । त्रिविधान्यपि चिह्नानि येषां सन्ति महात्मनाम् ॥ ४२
ते भक्ताश्शाङ्करा ज्ञेयास्सर्वलोकैकपावनाः । अथवा शिवभक्ता ये भस्मरुद्राक्षधारिणः ॥ ४३
तेषु पूर्वोक्तचिह्नानि न ज्ञायन्ते यदा तदा । तान् दृष्ट्वा प्रणमेद्भक्त्या शिवभक्तान् शिवप्रियः ॥ ४४
ये वै शिवं गुरुं भक्तान् प्रणमन्ति स्तुवन्त्यपि । कांक्षितान्यपि सर्वाणि लब्ध्वा ते परयामुदा ॥ ४५
भुक्त्वा भोगान् सुविपुलान् पुत्रैः पौत्रैस्समन्वितः । अरोगा दृढगात्राश्च स्थित्वात्र बहुकालतः ॥ ४६
अन्ते विमानमारुह्य नानारत्नविचित्रितम् । सौरलोकस्थितैर्देवैश्चन्द्रलोकस्थितैरपि ॥ ४७
तथान्यैर्देवलोकस्थैर्दिक्पालैर्जगदीश्वरैः । ब्रह्मणा विष्णुनाचापि तथैव ऋषिसत्तमैः ॥ ४८
एतैरन्यैश्च सकलैरग्रतोयायिभिर्मुदा । देवदुन्दुभिनिर्घोषैः पुष्पवर्षैरितस्ततः ॥ ४९
नृत्यद्भिरप्सरोवृन्दैर्गायद्भिः किन्नरैर्वृतः । दिव्यं शरीरं संप्राप्य शिवलोकं शिवप्रियम् ॥ ५०
गत्वाऽत्र सन्निधौ शंभोः स्थित्वा प्राप्य सरूपताम् । अन्तेच शिवसायुज्यं लभन्ते ब्राह्मणोत्तमाः ॥ ५१

ஏதானி தச சின்ஹானி பாக்தான்யுக்தானி சூலினு ।
த்ரிவிதான்யபி சின்ஹானி யேஷாம் ஸந்தி மஹாத்மனும் ॥ 42
தே பக்தாச்சாங்கரா க்ஞேயாஸ்ஸர்வலோகைகபாவனு: ।
அதவா சிவபக்தா யே பஸ்மருத்ராக்ஷதாரிண: ॥ 43
தேஷு பூர்வோக்தசின்ஹானி ந க்ஞாயந்தே யதா ததா ।
தான் த்ருஷ்ட்வா ப்ரணமேத்பக்த்யா சிவபக்தான் சிவப்ரிய: ॥ 44
யே வை சிவம் குரும் பக்தான் ப்ரணமந்தி ஸ்துவந்த்யபி ।
காங்க்ஷிதான்யபி ஸர்வாணி லப்த்வா தே பரயாமுதா ॥ 45
புக்த்வா போகான் ஸு விபுலான் புத்ரை: பௌத்ரைஸ்ஸமன்வித:
அரோகா த்ருடகாத்ராச்ச ஸ்தித்வாத்ர பஹுகாலத: ॥ 46
அந்தே விமானமாருஹ்ய நாநாரத்ன விசித்ரிதம் । ஸௌரலோகஸ்திதைர்தேவை: சந்த்ரலோகஸ்திதைரபி
ததாऽன்யைர்தேவலோகஸ்தை: திக்பாலைர்ஜகதீச்வரை: ।
ப்ரம்ஹணு விஷ்ணுனாசாபி ததைவ ருஷிஸத்தமை: ॥ 48
ஏதைரன்யைச்ச ஸகலைரக்ரதோயாயிபிர்முதா । தேவதுந்துபி நிர்கோஷை: புஷ்பவர்ஷைரிதஸ்தத: 49
ந்ருத்யத்பிரப்ஸரோப்ருந்தை: காயத்பி: கின்னரைர்வ்ருத: ।
திவ்யம் சரீரம் ஸம்ப்ராப்ய சிவலோகம் சிவப்ரியம் ॥ 50
கத்வாऽத்ர ஸன்னிதௌ சம்போ: ஸ்தித்வா ப்ராப்ய ஸ ரூபதாம் ।
அந்தேச சிவஸாயுஜ்யம் லபந்தே ப்ராம்ஹணோத்தமா: ॥ 51

அடைதல் பத்தாவதாகும். (41) ஆகிய இப்பத்து சின்னங்களும் பக்தர்களுக்குரிய அடையாளங்கள் என்று ஸ்ரீ பரமசிவனால் கூறப்பட்டிருக்கிறது. எந்த மகான்களுக்கு இவ்விதமான மூன்று சின்னங்களும் இருக்கின்றனவோ (42) அவர்கள் எல்லா உலகங்களையும் பரிசுத்தமாக்கும் சிவபக்தர்கள் என்று அறியப் படுகிறார்கள். என்றாலும் விபூதி ருத்திராக்ஷங்களை தரித்திருக்கும் சிவ பக்தர்களிடத்தில் (43) முன் சொல்லப்பட்ட அடையாளங்கள் இல்லாவிடினும் அவர்கள் சிவபக்தி உள்ளவர்கள். அப்படிப்பட்ட சிவ பக்தர்களைக் கண்டவுடன் நமஸ்கரிக்க வேண்டும். (44) எவர்கள் ஸ்ரீ பரமசிவன், ஆசாரியன், சிவ பக்தர்கள் இவர்களை நமஸ்கரித்து ஸ்துதி செய்கின்றார்களோ அவர்கள் எல்லாவித விரும்பங்களையும் மிகுந்த ஸந்தோஷத்தோடு அடைந்து (45) புத்திர பௌத்திரர்களுடன் கூடியவர்களாய் அளவற்ற ஸுகங்களை அனுபவித்துக்கொண்டு நோய் அற்றவர்களாகவும், த்ருட சரீரம் உடையவர்களாகவும் இங்கு வெகுகாலம் வாழ்ந்து (46) முடிவில் பல இரத்தினங்களால் விசித்திரமான விமானத்தில் ஏறிக்கொண்டு சூர்யலோகம், சந்திர லோகம், இன்னும் மற்ற தேவர்களின் உலகங்களில் உள்ள தேவர்கள், உலகங்களுக்கு அதிபர்க ளான திக்பாலர்கள், ப்ருமா, விஷ்ணு, ரிஷிச்வரர்கள், இவர்களாலும் ஸந்தோஷத்தோடு முன் செல்லும் மற்றும் பலர்களாலும், தேவ துந்துபி வாத்தியம் முழங்க நான்கு பக்கங்களிலும் புஷ்பமாரி சொரிய (49) நர்த்தனம் செய்யப்படுகின்ற அப்ஸர ஸ்த்ரீகளாலும், கானம் செய்கின்ற கின்னரர்களாலும் சூழப்பட்டவ னாகி, தேவ சரீரத்தை அடைந்து, ஸ்ரீ பரமசிவனுக்கு மிக ப்ரியமான சிவலோகம் சென்று (50) அங்கு சிவ ஸாரூப்யத்தை அடைந்து, ஸ்ரீ பரமேச்வரனின் ஸந்நிதியில் பலகாலம் இருந்து, முடிவில் சிவ ஸாயுஜ்

तस्मान्न शिवपुण्यानां माहात्म्यं वर्णितुं मया । शक्यं यथा वै माहात्म्यं शङ्करस्य महात्मनः ॥ ५२
एवमेव पुरा देवी शिवपुण्यमनुत्तमम् । श्रुत्वा महेश्वराद्भक्त्या प्रीत्या परमयायुता ॥ ५३
अत्याश्चर्येण संयुक्ता सहसोत्थाय चासनात् । प्रदक्षिणत्रयं कृत्वा प्रणम्यच महेश्वरम् ॥ ५४
अब्रवीत्सुस्मिता वाक्यं प्रसन्नं वीक्ष्य शङ्करम् । अनेन शिवपुण्येन प्राणिनः परमेश्वर ॥ ५५
विदित्वा त्वां गतिं यान्तु तव सायुज्य रूपिणीम् । इत्युक्तश्शिवया देवः करुणारूपया पुरा ॥ ५६
ज्ञातुं न सुलभं लोकैर्मम पुण्यमनुत्तमम् । पशुपुण्यानि सर्वाणि कृत्वा शुद्धान्तरात्मभिः ॥ ५७
पक्वैर्हि शिवपुण्यानि ज्ञातुं शक्यानि लेशतः । अन्येषां केवलानान्तु शिवपुण्यं कुतो भवेत् ॥ ५८
तस्मात्सर्वप्रयत्नेन पशुपुण्यमनेकशः । चरित्वा शिवपुण्येषु मनो भवति नान्यथा ॥ ५९

தஸ்மான்ன சிவபுண்யானாம் மாஹாத்ம்யம் வர்ணிதும் மயா ।
சக்யம் யதா வை மாஹாத்ம்யம் சங்கரஸ்ய மஹாத்மன: ॥ 52

ஏவமேவ புரா தேவீ சிவபுண்யமனுத்தமம் । ச்ருத்வா மஹேச்வராத் பக்த்யா ப்ரீத்யா பரமயாயுதா ॥ 53

அத்யாச்சர்யேண ஸம்யுக்தா ஸஹஸோத்தாய சாஸனாத் ।
ப்ரதக்ஷிணத்ரயம் க்ருத்வா ப்ரணம்ய ச மஹேச்வரம் ॥ 54

அப்ரவீத் ஸுஸ்மிதா வாக்யம் ப்ரஸன்னம் வீக்ஷ்ய சங்கரம் ।
அனேன சிவபுண்யேன ப்ராணின: பரமேச்வர ॥ 55

விதித்வா த்வாம் கதிம் யாந்து தவ ஸாயுஜ்யரூபிணீம் ।
இத்யுக்தச்சிவயா தேவ: கருணாரூபயா புரா ॥ 56

க்ஞாதும் ந ஸுலபைர்லோகைர்மம புண்யமனுத்தமம் ।
பசுபுண்யானி ஸர்வாணி க்ருத்வா சுத்தாந்தராத்மபி: ॥ 57

பக்வைர்ஹி சிவபுண்யானி க்ஞாதும் சக்யாணி லேசத: ।
அன்யேஷாம் கேவலானாந்து சிவபுண்யம் குதோ பவேத் ॥ 58

தஸ்மாத் ஸர்வப்ரயத்னேன பசுபுண்யமனேகச: ।
சரித்வா சிவபுண்யேஷு மனோ பவதி நான்யதா ॥ 59

யத்தை அடைவார்கள், (51) ஆகையால் மகாத்மாவாகிய ஸ்ரீ பரமசிவனுடைய மகிமையை எவ்வாறு கூறமுடியாதோ அவ்விதமே சிவ புண்ணியங்களின் மகிமையையும் என்னால் கூறுவது அஸாத்தியமே (52) பூர்வத்தில் பார்வதியானவள் ஸ்ரீ மகேச்வரரிடமிருந்து மிகச் சிறந்த இச் சிவபுண்யத்தை மிகுந்த பக்தியுடன் கேட்டு மிகுந்த ஸந்தோஷத்தையும் ஆச்சரியத்தையும் (53) அடைந்தவளாகி, சீக்கிரம் தனது ஆஸனத்திலிருந்து எழுந்து ஸ்ரீ மகேச்வரரை மூன்று முறை பிரதக்ஷிணம் செய்து நமஸ்கரித்து (54) பிரஸன்னராய் விளங்கும் ஸ்ரீ சங்கரரைப் பார்த்து மந்தஹாஸத்துடன் கூறியதாவது : "ஸ்ரீ பரமேச்வரரே இப்படிப்பட்ட சிவ புண்ணியத்தினால் பிராணிகள் (55) தங்களை அறிந்து, தங்களுடைய ஸாயுஜ்ய பதவியை அடைய வேண்டும்" என்றாள். கருணைமூர்த்தியாகிய பார்வதி தேவியால் இவ்வாறு சொல்லப்பட்டதும் ஸ்ரீ பரமசிவன் (56) ஓ தேவி! பிராணிகளால் மிகச் சிறந்த சிவபுண்ணியமானது ஸுலபமாய் அறியக்கூடியது அல்ல. ஆனால் *ஸகல பசு புண்ணியங்களையும் செய்து முதிர்ந்தவர்களும், மிகப் பரிசுத்தமுடைய மனதை உடையவர்களுமான மகாத்மாக்களால் மட்டும் தான் சிவ புண்ணியங்கள் சிறிது அறியப்படும். மிகவும் கேவலர்களான மற்றவர்களுக்கு சிவ புண்ணியமானது எவ்விதம் கிடைக்கும்? (58) ஆகையால் எல்லாவித முயற்சியோடும் பசு புண்ணியங்களை மிகுதியாய் செய்தால்தான் சிவ புண்ணியங்

குறிப்பு:— * "ஸகல பசு புண்யங்களையும் செய்து முதிர்ந்தவர்களான" என்பதின் பொருள்:- ஸ்ரீ பரமேச்வரன் பசுபதி ஆதலால் அவரே பதி எனவும், மற்ற விஷ்ணு முதலிய தேவர்களும், இன்னும் பிரபஞ்சங்களிலுள்ள எல்லா பொருள்களும், பசு எனப்படும். ஆகையால் அப்பேர்க்கொத்த சிவபிரானுக்குரிய புண்யமே பதி புண்யமென்றும், மற்ற தெய்வங்களுக்குரிய பற்பல கர்மங்களால் செய்யப்படக்கூடிய புண்யங்களெல்லாம், பசு புண்யம் என்றும் சொல்லப்படும். அனேக ஜென்மங்களில், மற்ற தெய்வங்களுக்குரிய பக்தி, யாகாதி கருமங்கள், பற்பல விதமான தர்மங்கள், யாத்திரைகள் முதலிய பசு புண்யங்களைச் செய்து, முதிர்ந்தவர்களாயிருப்பவர்களுக்கே சிவ பக்தியில் மனப்பற்றுதல் உண்டாகுமென கருத்து.

इत्युक्तं देवदेवेन देव्यै पूर्वं द्विजोत्तमाः । अथात्र वक्ष्ये युष्माकं कथां पुण्यां मनोरमाम् ॥ ६०

इति श्री स्कान्दे महापुराणे शंकरसंहितायां शिवरहस्यखण्डे
उपदेशकाण्डे एकोनचत्वारिंशोऽध्यायः ॥

॥ अथ चत्वारिंशोऽध्यायः ॥

विश्वामित्र वसिष्ठादि मुनिशापात् शिवपुण्येन मोक्षणम् ॥

पुनश्च शिवपुण्यस्य माहात्म्यं वर्णयामि वः । शृण्वन्तु सावधानेन ब्राह्मणानामधीश्वराः ॥ १
अस्ति कश्चिन्महीपालः कोसलानामधीश्वरः । अजाह्वयश्चतस्रोऽस्य समजायन्त कन्यकाः ॥ २
रूपलावण्यसंपन्नास्सुकुमाराङ्गयष्टयः । कल्याणमण्डपञ्चक्रे तासां स मतिमान्नृपः ॥ ३
आनयामास तनयान्राज्ञामति मनोहरान् । तस्थुस्ते राजतनयास्समागत्यात्र मण्डपे ॥ ४
ततः प्रतस्थिरे ताश्च कन्यास्तान्राजपुत्रकान् । समुद्वीक्ष्यैषुयः स्वेष्टस्य जह्रुः करानिमाः ॥ ५
प्रथमा निषधाधीशं महेन्द्रं पतिमाप हि । सानन्दं कंबुदेशेशं द्वितीया चालभत्पतिम् ॥ ६

இத்யுக்தம் தேவதேவேன தேவ்யை பூர்வம் த்விஜோத்தமா: ।
அதாத்ர வக்ஷ்யே யுஷ்மாகம் கதாம் புண்யாம் மனோரமாம் ॥ 60

இதி ஸ்ரீஸ்காந்தே மஹாபுராணே சங்கரஸம்ஹிதாயாம் சிவரஹஸ்யகண்டே
உபதேசகாண்டே ஏகோனசத்வாரிம்சோऽத்யாய: ॥

॥ அத சத்வாரிம்ஶோऽத்யாய: ॥

விச்வாமித்ரர், வஸிஷ்டர் முதலிய முனிவர்களின் சாபத்திலிருந்து சிவ புண்யத்தால் விடுபட்டது

புனச்ச சிவபுண்யஸ்ய மாஹாத்ம்யம் வர்ணயாமிவ: । ச்ருண்வந்து ஸாவதானேன ப்ராம்ஹணாநாமதீச்வரா:
அஸ்தி கச்சின் மஹீபால: கோஸலானாமதீச்வர: । அஜாஹ்வயச்சதஸ்ரோऽஸ்ய ஸமஜாயந்த கன்யகா: 2
ரூபலாவண்ய ஸம்பன்ன: ஸுகுமாராங்கயஷ்டய: ।
கல்யாணமண்டபஞ்சக்ரே தாஸாம் ஸ மதிமான் நிருப: ॥ 3
ஆனயாமாஸ தனயான் ராக்ஞாமதி மனோஹரான் ।
தஸ்துஸ்தே ராஜதனயாஸ்ஸமாகத்யாத்ர மண்டபே ॥ 4
தத: ப்ரதஸ்திரே தாச்ச கன்யாஸ்தான் ராஜபுத்ரகான் ।
ஸமுத்வீக்ஷ்யைஷுய: ஸ்வேஷ்டஸ்தஸ்ய ஜஹ்ரு: கரானிமா: ॥ 5
ப்ரதமா நிஷதாதீசம் மஹேந்த்ரம் பதிமாப ஹி । ஸானந்தம் கம்புதேசேசம் த்விதீயா சாலபத்பதிம் ॥ 6

களில் மனப் பிரவர்த்தி ஏற்படுமேயன்றி வேறு விதமாய் இல்லை (59) என்று பூர்வத்தில் தேவாதிதேவரால் பார்வதி தேவிக்கு சொல்லப்பட்டது. ஓ முனிவர்களே! இந்த விஷயத்தில் உங்களுக்கு மிக அழகிய ஓர் கதையை சொல்லுகிறேன். (60)

முப்பத்தொன்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

நாற்பதாவது அத்தியாயம்.

ஓ பிராம்மணோத்தமர்களே! மறுபடியும் சிவ புண்ணியத்தின் மகிமையை உங்களுக்கு எடுத்துச் சொல்கிறேன். அதை ஸாவதானமாய்க் கேளுங்கள். (1) கோஸல தேசத்திற்கு அதிபனான அஜன் என்ற ஓர் அரசன் இருந்தான். இவனுக்கு மிகவும் ரூபலாவண்யம் பொருந்தியவர்களும், மிருதுவான மேனியைக்கொண்டவர்களுமான நான்கு பெண்கள் பிறந்தார்கள் (2) மிகப் புத்திசாலியான அரசன் அவர்களுக்கு ஸ்வயம்வர மண்டபத்தை ஜோடித்து (3) மிக அழகுவாய்ந்த பல ராஜகுமாரர்களை வரவழைத்தான். அந்த இராஜபுத்திரர்கள் யாவரும் ஸ்வயம்வர மண்டபத்தில் வந்து அமர்ந்தார்கள் (4) பிறகு ராஜகுமாரிகள் அங்கு வந்து ராஜகுமாரர்களைப் பார்த்து, அவள், அவள் தனக்கு இஷ்டமான ராஜகுமாரனுடைய கையைப் பிடித்துக் கொண்டாள். (5) மூத்த பெண்ணானவள் நிஷத தேசத்திற்கு

कांबोजाधीशमपरं सुमालिं प्राप नायकम् । कोङ्कणेशं चतुर्थाच विशालाक्षमगात्पतिम् ॥ ७
एवमापुः पतीनेता मालास्स्कन्धे विधाय च । कल्याणं कारयामास नानाविभव विस्तरम् ॥ ८
राजाऽसौ परया प्रीत्या बन्धुसंमानतत्परः । तेषां वराणां भूरीणि ददौ द्रव्याणि पार्थिवः ॥ ९
भूषणानि च वस्त्राणि कटकानि तथैव च । पुत्रीणामपि दत्वैवं बहुमानेन पार्थिवः ॥ १०
चतुरङ्गबलं तेषां परिकल्प्य सुबुद्धिमान् । कन्यकाभिश्च संयोज्य स्वदेशगमनायतान् ॥ ११
प्रेषयामास पुण्यात्मा प्रीत्या परमया सह । ततः प्रतस्थिरे राजकुमारास्ते सुसंयुताः ॥ १२
बहिः पुराद्विनिर्गत्य स्वदेशगमनाय ते । संभूय तस्थिरेऽन्योन्यं वार्तां कृत्वा महीसुराः ॥ १३
तदानीमागतस्तत्र विश्वामित्रो महानृषिः । आजुहाव महीपालसुतानेतान् स्वनामतः ॥ १४
तेतु वाद्यारवैर्वार्त्ताव्यासङ्गे नान्यमानसाः । अश्रुत्वा वचनं तस्थुस्तापसेशस्य भूसुराः ॥ १५
ततः कोपेन महता विश्वामित्रो महानृषिः । मुक्त्वा राजकुमारांस्तांश्चतस्रो राजकन्यकाः ॥ १६
शशाप तान् भटान् सर्वान् द्रव्याण्यपि वराण्यपि । भवन्तु भस्मसात्सद्य इति राज्ञां तपोनिधिः ॥ १७

காம்போஜாதீசமபரம் ஸுமாலிம் ப்ராப நாயகம் ।
கோங்கணேசம் சதுர்தாச விசாலாக்ஷமகாத்பதிம் ॥ 7
ஏவமாபுः பதீநேதா மாலாஸ்கந்தே விதாய ச । கல்யாணம் காரயாமாஸ நாநாவிபவவிஸ்தரம் ॥ 8
ராஜாஸௌ பரயா ப்ரீத்யா பந்துஸம்மானதத்பரः ।
தேஷாம் வராணாம் பூரீணி ததௌ த்ரவ்யாணி பார்திவः ॥ 9
பூஷணானிச வஸ்த்ராணி கடகானி ததைவ ச । புத்ரீணாமபி தத்வைவம் பஹுமானேன பார்திவः ॥ 10
சதுரங்கபலம் தேஷாம் பரிகல்ப்ய ஸுபுத்திமான் । கன்யகாபிச்ச ஸம்யோஜ்ய ஸ்வதேசகமனாயதான் ॥ 11
ப்ரேஷயாமாஸ புண்யாத்மா ப்ரீத்யா பரமயா ஸஹ । தத: ப்ரதஸ்திரே ராஜகுமாராஸ்தே ஸுஸம்யுதா: 12
பஹி: புராத்விநிர்கத்ய ஸ்வதேசகமனாய தே ।
ஸம்பூய தஸ்திரேன்யோன்யம்வார்தாம் க்ருத்வா மஹீஸுரா: ॥ 13
ததாநீமாகதஸ்தத்ர விச்வாமித்ரோ மஹான்ருஷி: । ஆஜுஹாவ மஹீபால ஸுதாந்ஏதான் ஸ்வநாமத:14
தேது வாத்யாரவைர்வார்தாவ்யாஸங்கேநான்யமானஸா: ।
அச்ருத்வா வசனம் தஸ்துஸ்தாபஸேசஸ்ய பூஸுரா: ॥ 15
தத: கோபேனமஹதா விச்வாமித்ரோ மஹான்ருஷி: ।
முக்த்வா ராஜகுமாராம்ஸ்தான் சதஸ்ரோ ராஜகன்யகா: ॥ 16
சசாப தான் படான் ஸர்வான் த்ரவ்யாண்யபி வராண்யபி ।
பவந்து பஸ்மஸாத்ஸத்ய இதி ராக்ஞாம் தபோநிதி: ॥ 17

அதிபனான மகேந்திரனை கணவனாகக் கொண்டாள். இரண்டாவது பெண் கம்பு தேசாதிபனான ஸானந்தனை பதியாக அடைந்தாள். மூன்றாவது பெண் காம்போஜ தேசாதிபனான ஸுமாலி என்பவனையும், நான்காவது பெண் கொங்கண தேசாதிபனான விசாலாக்ஷனையும் கணவர்களாக அடைந்தார்கள். (7) இவ்விதமாய் அப்பெண்கள் அவர்களுடைய கழுத்தில் மாலையைப்போட்டு அவர்களை கணவர்களாகக் கொண்டார்கள். பிறகு அரசன் மிகுந்த வைபவத்தோடும், விஸ்தாரமாகவும் அவர்களுக்கு கல்யாணத்தை செய்வித்தான். (8) பந்துக்களை கௌரவிப்பதில் மிகவும் விருப்பமுள்ளவனான அரசன் அந்த மாப்பிள்ளைகளுக்கு அனேகம் த்ரவ்யங்களையும், தம் பெண்களுக்கு அனேகம் ஆடை, ஆபரணங்களையும், கடகங்களையும் ஸ்ரீதனமாக வெகுமானத்துடன் கொடுத்தான். (10) புத்திசாலியும், புண்ணியாத்மாவுமான அரசன் அவர்களுக்கு சதுரங்க ஸைன்யங்களையும் கொடுத்து, தன் பெண்களுடன் சேர்ந்து அவர்களை மிகுந்த ஸந்தோஷத்துடன் அவர் அவர்கள் தேசத்திற்கு அனுப்பினான். (12) பிறகு அந்த ராஜகுமாரர்களெல்லாம் சேர்ந்து புறப்பட்டு பட்டணத்திற்கு வெளியில் வந்து, தங்கள் தங்கள் தேசத்திற்கு போவதற்காக எல்லோரும் ஒன்றுகூடி பேசிக்கொண்டிருக்கும்போது, ஓ பூமி தேவர்களே! (13) அப்பொழுது அங்கு ரிஷிச்ரேஷ்டரான விசுவாமித்திர முனிவர் வந்து அந்த ராஜகுமாரர்களை அவரவர்களின் பெயர்களைச் சொல்லிக் கூப்பிட்டார். (14) அவர்கள் வாத்தியங்களின் சப்தத்தினாலும், வார்த்தை பேசுவதில் மும்முரமாய் இருந்ததாலும் வேறு கவனம் உள்ளவர்களாய், அந்த தவச்ரேஷ்டர் அழைத்தலைக் கேட்கவில்லை. (15) பிறகு விசுவாமித்திர முனிவர் கோபமடைந்தவராகி, ராஜகுமாரர்களையும், நான்கு ராஜகுமாரிகளையும் தவிர (16) மற்ற ஸகல ஸைன்யங்களையும், சிறந்த த்ரவ்யங்களையும் உடனே

ततः क्षणेन सर्वाणि भस्मभावमवापिरे । कुमारास्ताश्च तत्पत्न्यस्सर्वाश्च भयकंपिताः ॥ १८
ततस्तान् तापसश्रेष्ठस्समीक्ष्याह वचस्तदा । नालोकयत मां यूयं न कृतं कर्णयोर्वचः ॥ १९
तत्सञ्चरत घोरेऽस्मिन्वभावं वने गताः । बाधिर्यं भवतामद्य भवतात्पापिनामिह ॥ २०
ग्रामे पुरेवा युष्माकं न निवासो भवत्वलम् । भार्याभिस्सह संभोगो नैवास्तु नृपपुत्रकाः ॥ २१
निपतिष्यन्ति मूर्धानो भविष्यन्ति यदा तदा । शपित्वैवमृषिरगात् स्वाश्रमाय मुनीश्वराः ॥ २२
तथैव तच्छापवशात्ते सर्वे राजपुत्रकाः । चेरुरन्धाश्च बधिरा वने तस्मिन् सुदुःखिताः ॥ २३
स्त्रीभिः प्रदर्शिता मार्गं कन्दमूलफलाशिनः । एवमेतेषु भूपेषु विचरत्सु वनेष्वथ ॥ २४
अगस्त्यस्तपतां वर्यस्तदानीमाययाविह । तं दृष्ट्वा तपतां श्रेष्ठं तास्स्त्रियो भर्तृभिस्सह ॥ २५
प्रणम्य भृशदुःखार्ताः स्ववृत्तान्तं व्यजिज्ञपन् । इतः परं कथाऽस्माकं शापान्मोक्षो भविष्यति ॥ २६
केनोपायेन तथ्यं त्वं वद कारुण्यवारिधे । शरणं त्वां प्रपन्नाःस्मो रक्षास्मांस्तापसेश्वर ॥ २७
इत्थं निशम्य वचनं तासां तेषां घटोद्भवः । कृपया केवलं प्राह तदुपायमृषीश्वरः ॥ २८

தத: க்ஷணேன ஸர்வாணி பஸ்மபாவமவாபிரே । குமாராஸ்தாச்ச தத்பத்ந்யஸ்ஸர்வாச்ச பயகம்பிதா: 18
ததஸ்தான்தாபஸச்ரேஷ்ட: ஸமீக்ஷ்யாஹ வசஸ்ததா ।
நாலோகயத மாம் யூயம் ந க்ருதம் கர்ணயோர்வச: ॥ 19
தத்ஸஞ்சரத கோரேऽஸ்மின் நந்தபாவம் வனே கதா: । பாதிர்யம் பவதாமத்ய பவதாத் பாபினாமிஹ ॥ 20
க்ராமே புரேவா யுஷ்மாகம் ந நிவாஸோ பவத்வலம் ।
பார்யாபிஸ்ஸஹ ஸம்போகோ நைவாஸ்து ந்ருபபுத்ரகா: ॥ 21
நிபதிஷ்யந்திமூர்தானோ பவிஷ்யந்தி யதா ததா । சபித்வைவம்ருஷிரகாத் ஸ்வாச்ரமாய முனீச்வரா: ॥ 22
ததைவ தச்சாபவசாத் தே ஸர்வே ராஜபுத்ரகா: । சேருரந்தாச்ச பதிரா வனே தஸ்மின் ஸுது:கிதா: ॥ 23
ஸ்த்ரீபி: ப்ரதர்சிதா மார்கம் கந்தமூல பலாசின: । ஏவமேதேஷு பூபேஷு விசரத்ஸு வனேஷ்வத ॥ 24
அகஸ்த்யஸ்தபதாம் வர்யஸ்ததானீமாயயாவிஹ ।
தம் த்ருஷ்ட்வா தபதாம் ச்ரேஷ்டம் தாஸ்ஸ்த்ரியோ பர்த்ருபிஸ்ஸஹ
பிரணம்ய ப்ருசது:கார்தா: ஸ்வவ்ருத்தாந்தம் வ்யஜிக்ஞபன் ।
இத: பரம் கதாऽஸ்மாகம் சாபான்மோக்ஷோ பவிஷ்யதி ॥ 26
கேநோபாயேன தத்யம் த்வம் வத காருண்யவாரிதே ।
சரணம் த்வாம் ப்ரபன்னாःஸ்மோ ரக்ஷாஸ்மாம்ஸ்தாபஸேச்வர ॥ 27
இத்தம் நிசம்ய வசனம் தாஸாம் தேஷாம் கடோத்பவ: ।
க்ருபயா கேவலம் ப்ராஹ ததுபாயம் ருஷீச்வர: ॥ 28

சாம்பலாகும்படி சபித்தார். (17) பிறகு, ஓர் க்ஷணத்தில் அவை யாவும் சாம்பலாகிவிட்டன. பிறகு, ராஜகுமாரர்களும், அவரது மனைவிகளும் பயத்தினால் நடுக்கம் அடைந்தார்கள். (18) அப்பொழுது விசுவாமித்திர முனிவர் அவர்களைப் பார்த்து கூறினார். "ஓ ராஜகுமாரர்களே! நீங்கள் என்னைப் பாராமலும், நான் சொன்ன வார்த்தையைக் கேளாமலும் இருந்தபடியால் (19) பாபிகளாகிய நீங்கள் குருடர்களாகவும், செவிடர்களாகவும் ஆகி, இக்கொடிய காட்டில் அலைந்துகொண்டிருக்கக்கடவீர்கள். (20) மேலும், நீங்கள் கிராமங்களிலாவது, பட்டணங்களிலாவது வஸிக்க தகுதியில்லை. நீங்கள் உங்கள் மனைவிகளோடு சேருவீர்களாகில் உங்கள் தலைகள் வெடித்துப் போகக்கடவன்" என்று அம்முனிவர் சபித்து விட்டு தனது ஆச்ரமத்திற்கு சென்றார். ஓ முனிவர்களே! (22) பிறகு, அந்த ராஜகுமாரர்கள் யாவரும் அவருடைய சாபத்தால் அவ்விதமாகவே குருடர்களாகவும், செவிடர்களாகவும் ஆகி அக்காட்டில் கிழங்கு, காய், கனிகளை சாப்பிட்டுக்கொண்டு மனைவிகளால் வழி காண்பிக்கப்பட்டவர்களாகி மிகுந்த வருத்தத்தோடு அலைந்து வந்தார்கள். இவ்வாறு அந்த ராஜகுமாரர்கள் காடுகளில் ஸஞ்சரித்துக் கொண்டிருக்கும் பொழுது (24) தவசிகளில் சிறந்தவரான அகஸ்தியர் அங்கு வந்தார். அப்பொழுது அம்முனிவரை அந்த ராஜகுமாரிகள் தன் கணவர்களோடு கூட பார்த்து (25) நமஸ்கரித்து மிகுந்த துக்கத்தினால் பீடிக்கப்பட்டவர்களாகி தங்கள் வரலாற்றை தெரிவித்துக்கொண்டார்கள். (26) ஓ கருணைக்கடலே! இனி எங்களுக்கு எப்பொழுது எந்த உபாயத்தால் சாபத்திலிருந்து விடுதலை ஏற்படும் என்பதை உண்மையாய் சொல்ல வேண்டும். ஓ ரிஷிச்ரேஷ்டரே! தங்களை சரணம் அடைந்த எங்களை ரக்ஷிக்க வேண்டும் என வேண்டினார்கள். (27) இவ்வாறு அவர்களுடைய வார்த்தையைக் கேட்டு அகஸ்திய முனிவர்

शिवपुण्यं यदि कृतं भवद्भिः सर्वपापहम् । शापमोक्षो भवेन्नूनमैश्वर्यञ्च भविष्यति ॥ २९
राज्यञ्च स्ववशे याति नात्र सन्देहकारणम् । अन्तेच शिवसायुज्यं भविष्यति यथेच्छया ॥ ३०
शिवपुण्यं विना नैव सद्गतिर्देहिनामिह । अत्रेतिहासं युष्माकं शृण्वतां कथयाम्यहम् ॥ ३१
कीचकाख्ये पुरे पूर्वं साधारणमहीपतिः । भार्ययाऽन्तःपुरे रम्ये तस्थे क्रीडारतोऽनिशम् ॥ ३२
तदा वसिष्ठस्तपतां वरिष्ठोऽस्य गृहाङ्गणे । समागत्यावसत्तत्र घटिकाः काश्चिदात्मवान् ॥ ३३
विनिर्गत्य ततो राजा भार्यया सह तापसम् । प्रणम्य प्रश्रयानम्रस्तस्थे बद्धाञ्जलिः पुरः ॥ ३४
तदा कोपेन तं प्रेक्ष्य राजानं प्राह तापसः । मयाऽत्यात्र घटिका नीता द्वित्रिचतस्रकाः ॥ ३५
इयन्तं कालमन्वीक्ष्य गृहद्वारि स्थितोऽस्म्यहम् । नन्निर्गतोऽसि यस्मात्त्वं दर्पान्मूढ महीपते ॥ ३६
तद्वने चरता नेऽद्य भूयाद्भार्यासखस्य च । वसन्ति येऽत्र नगरे जनास्ते मृगपक्षिणः ॥ ३७
भवन्तु पत्तनं चैतद्वनं भूयाद्भयङ्करम् । शपित्वैतमृषिवरः स्वाश्रमायाशु निर्ययौ ॥ ३८

சிவபுண்யம் யதி க்ருதம் பவத்பிஸ்ஸர்வபாபஹம் ।
சாபமோக்ஷோ பவேன்நூனமைச்வர்யஞ்ச பவிஷ்யதி ॥ 29

ராஜ்யஞ்ச ஸ்வவசேயாதி நாத்ர ஸந்தேஹகாரணம் ।
அந்தேச சிவஸாயுஜ்யம் பவிஷ்யதி யதேச்சயா ॥ 30

சிவபுண்யம் விநா நைவ ஸத்கதிர்தேஹிநாமிஹ ।
அத்ரேதிஹாஸம் யுஷ்மாகம் ச்ருண்வதாம் கதயாம்யஹம் ॥ 31

கீசகாக்யே புரேபூர்வம் ஸாதாரண மஹீபதி: । பார்யயாSந்த:புரே ரம்யே தஸ்தே க்ரீடாரதோSநிசம் ॥ 32

ததா வஸிஷ்டஸ்தபதாம் வரிஷ்டோSஸ்ய க்ருஹாங்கணே ।
ஸமாகத்யாவஸத்தத்ர கடிகா: காச்சிதாத்மவான் ॥ 33

விநிர்கத்ய ததோ ராஜா பார்யயா ஸஹ தாபஸம் । ப்ரணம்ய ப்ரச்ரயானம்ரஸ்தஸ்தே பத்தாஞ்ஜலி: புர:

ததா கோபேன தம் ப்ரேக்ஷ்ய ராஜானம் ப்ராஹ தாபஸ: ।
மயாSSகத்யாத்ர கடிகா நீதாத்வித்ரிசதஸ்ரகா: ॥ 35

இயந்தம் காலமன்வீக்ஷ்ய க்ருஹத்வாரிஸ்திதோSஸ்ம்யஹம் ।
ந நிர்கதோSஸி யஸ்மாத்த்வம் தர்பான்மூடமஹீபதே ॥ 36

தத்வனேசரதாதேSத்ய பூயாத்பார்யாஸகஸ்ய ச । வஸந்தி யேSத்ர நகரே ஜனாஸ்தே ம்ருகபக்ஷிண: ॥ 37
பவந்து பத்தனம் சைதத்வனம் பூயாத் பயங்கரம் । சபித்வைதம்ருஷிவர: ஸ்வாச்ரமாயாசு நிர்யயௌ 38

மிகவும் கருணையடைந்தவராகி அதற்கு உபாயம் சொன்னார். (28) ஓ இராஜகுமாரர்களே! நீங்கள் எல்லா பாவங்களையும் போக்கவல்ல சிவபுண்ணியத்தை செய்வீர்களாகில் உங்களுக்கு சாபம் தீர்ந்து ஸகல ஐச்சுவரியங்களும் கைகூடும் என்பது நிச்சயம். (29) மேலும் உங்கள் இஷ்டப்படி ராஜ்ஜியமும் உங்கள் வசமாகி முடிவில் சிவஸாயுஜ்ய பதவியை அடைவீர்கள் என்பதில் ஸந்தேகத்திற்கு இடமே இல்லை. (30) பிராணிகளுக்கு சிவபுண்யத்தைத்தவிர நற்கதிக்கு வேறு வழியில்லை. அதைப்பற்றி இப்பொழுது உங்களுக்கு ஓர் பழைய கதையை சொல்லுகிறேன் கேளுங்கள். (31) முன்பு கீசகபுரம் என்ற அழகிய பட்டணத்தில் ஸாதாரணன் என்ற ஓர் அரசன் எப்பொழுதும் அந்தப்புரத்தில் மனைவியோடு ரமித்துக்கொண்டிருப்பதிலேயே முயன்றிருந்தான் (32) அப்பொழுது ஒருநாள் தபஸ்விகளில் சிறந்தவரும், மனதை அடக்கியவருமான வஸிஷ்ட முனிவர் அவனுடைய அரண்மனைக்கு வந்து அவன் வீட்டு வாயிலில் சில நாழிகை காத்திருந்தார். (33) பிறகு அரசன் தன் மனைவியோடு வெளியில் வந்து, அந்த முனிவரை நமஸ்கரித்து வினையத்தால் வணக்கமுள்ளவனாகி எதிரில் அஞ்சலி செய்துகொண்டு நின்றான். (34) அப்பொழுது அம்முனிவர் அரசனைப் பார்த்து கோபத்துடன் சொன்னார்: "ஓ மூட அரசனே! நான் இங்கு வந்து இரண்டு மூன்று நாழிகைகள் ஆயின. நான் இவ்வளவு காலம் உன் வீட்டு வாசலில் வந்து காத்து இருந்தும் நீ கர்வத்தினால் வெளியில் வராதிருந்தபடியால் (35) உன் மனைவியோடு உனக்கு காட்டில் ஸஞ்சரிக்கும் வேடத் தன்மை வரக் கடவது. மேலும் இப் பட்டிணத்தில் வஸிக்கும் ஜனங்கள் எல்லாம் மிருகங்களாகவும், பட்சிகளாகவும் ஆகக் கடவார்கள். (37) இப்பட்டிணமும் மிக பயங்கரமான காடாக ஆகக் கடவது என சபித்துவிட்டு அம் முனிவர் சீக்கிரம் தனது ஆச்ரமத்திற்குச்

तथैव सर्वं सञ्जातं वसिष्ठस्य तपोबलात् । चचार व्याधरूपेण वनेऽस्मिन् भार्यया नृपः ॥ ३९
तदानीमागतस्तत्र तृणबिन्दुर्महानृषिः । वृत्तान्तं सर्वमाज्ञाय पप्रच्छ स्वागतं नृपः ॥ ४०
सोऽयं कृपावशादेतौ समुद्वीक्ष्य ऋषीश्वरः । शिवपुण्यं विचार्याशु सर्वदुःखविमोचकम् ॥ ४१
वनेऽस्मिन् विद्यते किंवा शिवस्थानं शिवप्रियम् । इति पप्रच्छ तं व्याधं तापसानामधीश्वराः ॥ ४२
सोऽब्रवीदविदूरेण ब्रह्मेश्वरमनुत्तमम् । तच्छ्रुत्वा तपतां श्रेष्ठः पुनः प्राह समीक्ष्य तौ ॥ ४३
युवामत्र शिवस्थाने तृणं पर्णं लतामपि । दूरीकृत्य सदा शंभोः कुरुतञ्च प्रदक्षिणम् ॥ ४४
प्रणम्य सांबमीशानं वसतञ्च शिवालये । स एव भगवानीशो युवां रक्षतु मा चिरम् ॥ ४५
इत्युक्त्वा स्वाश्रमायायं जगाम ऋषिसत्तमः । तस्य तद्वचनं श्रुत्वा तथैवैतौ चचेरतुः ॥ ४६
व्यतीयुरेतयोस्तत्र दिनान्येकादशाञ्जसा । ततो वनमिदं भूयो नगरं समजायत ॥ ४७
जनाश्च मृगपक्षित्वं मुक्त्वा तत्वमवापिरे । भार्यया सह राजत्वं प्राप्तवान् सोऽपि भूपतिः ॥ ४८
राज्यञ्च चक्रे परया प्रीत्या पूर्ववदात्मवान् । शिवपुण्यप्रभावेन पूर्वरूपमिहागतम् ॥ ४९

ததைவ ஸர்வம் ஸஞ்ஜாதம் வஸிஷ்டஸ்ய தபோபலாத் ।
சசாரவ்யாதரூபேண வனேऽஸ்மின் பார்யயா ந்ருப: ॥ 39
ததானீமாகதஸ்தத்ர த்ருணபிந்துர் மஹான்ருஷி: ।
வ்ருத்தாந்தம் ஸர்வமாவேத்ய பப்ரச்ச ஸ்வாகதம் ந்ருப: ॥ 40
ஸோऽயம் க்ருபாவசாதேதௌ ஸமுத்வீக்ஷ்ய ருஷீச்வர: ।
சிவபுண்யம் விசார்யாசு ஸர்வதுக்கவிமோசகம் ॥ 41
வனேऽஸ்மின் வித்யதே கிம் வா சிவஸ்தானம் சிவப்ரியம் ।
இதி பப்ரச்ச தம் வ்யாதம் தாபஸாநாமதீச்வரா: ॥ 42
ஸோऽப்ரவீதவிதூரேண ப்ரும்ஹேச்வரமனுத்தமம் ।
தச்ச்ருத்வா தபதாம் ச்ரேஷ்ட: புன: ப்ராஹ ஸமீக்ஷ்யதௌ ॥ 43
யுவாமத்ர சிவஸ்தானே த்ருணம் பர்ணம் லதாமபி । தூரீக்ருத்ய ஸதா சம்போ: குருதஞ்ச ப்ரதக்ஷிணம் 44
ப்ரணம்ய ஸாம்பமீசானம் வஸதஞ்ச சிவாலயே । ஸ ஏவ பகவானீசோ யுவாம் ரக்ஷதுமாசிரம் ॥ 45
இத்யுக்த்வா ஸ்வாச்ரமாயாயம் ஜகாம ருஷிஸத்தம: ।
தஸ்ய தத்வசனம் ச்ருத்வா ததைவைதௌ சசேரது: ॥ 46
வ்யதீயுரேதயோஸ்தத்ர தினுன்யேகாதசாஞ்ஜஸா । ததோ வனமிதம் பூயோ நகரம் ஸமஜாயத ॥ 47
ஜனாச்ச ம்ருகபக்ஷித்வம் முக்த்வா தத்வமவாபிரே । பார்யயா ஸஹ ராஜத்வம் ப்ராப்தவான் ஸோऽபி பூபதி:
ராஜ்யஞ்ச சக்ரே பரயா ப்ரீத்யா பூர்வவதாத்மவான் । சிவபுண்ய ப்ரபாவேன பூர்வரூபமிஹாகதம் ॥ 49

சென்று விட்டார். (38) வஸிஷ்ட முனிவரின் தபோ பலத்தால் யாவும் அவ்விதமே ஆகிவிட்டன. அரசன் மனைவியோடு காட்டில் வேட உருவத்துடன் ஸஞ்சரித்து வந்தான். (39) இப்படி இருக்கையில் ஒருநாள் "திருணபிந்து" என்ற சிறந்த முனிவர் அங்கு வந்தார். அப்பொழுது அரசன் அவருக்கு நல்வரவு கூறிவிட்டுத் தனது ஸங்கதிகளை எல்லாம் அவருக்குத் தெரிவித்தான். (40) அப்பொழுது அம் முனிவர் கருணையால் அவ்விருவர்களையும் பார்த்து ஸகல துக்கங்களையும் போக்கவல்ல சிவபுண்ணியத்தை சீக்கிரம் மனதில் ஆலோசித்து (41) 'ஓ பிராம்மணோத்தமர்களே! அவர் அவ்வேடனைப் பார்த்து, இக்காட்டில் ஸ்ரீ பரமேச்வரனுக்குப் பிரியமுள்ள சிவாலயம் இருக்கிறதா?' என்று கேட்டார். (42) அதற்கு வேடன் 'ஓ ஸ்வாமி! இதோ ஸமீபத்தில் மிகச் சிறந்த ப்ரும்மேச்வரம் என்ற ஓர் ஆலயம் இருக்கிறது' என்றான். அதைக் கேட்ட முனிவர் மறுபடியும் அவ்விருவர்களையும் பார்த்துச் சொன்னார். (43) நீங்கள் இருவரும் இந்த சிவாலயத்திலுள்ள புல், சரகு, கொடி இவைகளை தூரத்தில் எறிந்துவிட்டு, எப்பொழுதும் ஸ்வாமிக்கும் அம்மனுக்கும் பிரதக்ஷிண நமஸ்காரங்களைச் செய்துகொண்டே இச்சிவாலயத்தில் வஸித்து வாருங்கள். ஈசனான அந்த பகவானே உங்களை சீக்கிரத்தில் காப்பாற்றட்டும் (45) என்று சொல்லித் தனது ஆச்ரமத்திற்குச் சென்றுவிட்டார். பிறகு அவ்விருவர்களும் அவருடைய வார்த்தையைக் கேட்டு அவ்வாறே செய்துவந்தார்கள். (46) இவ்வாறாகப் பதினொரு நாட்கள் கழிந்தன. பிறகு அக்காடானது சீக்கிரத்தில் மறுபடியும் நகரமாகிவிட்டது. (47) ஜனங்கள் எல்லாம் மிருக பட்சிகளின் தன்மையை (உருவத்தை) விட்டு முன்போல் மனிதர்களாகவே ஆகிவிட்டார்கள். அரசனும் மனைவியோடு ராஜத் தன்மையை அடைந்தான். (48) மிகுந்த ஸந்தோஷத்தோடு முயற்சியுடன் முன்போல் அரசு செலுத்திவந்தான்.

एवं विचार्य चक्रेऽयं शिवपुण्यं सुविस्तरम् । देहान्ते सद्गतिं प्राप भार्यया सह भूमिपः ॥ ५०
तस्माद्यूयञ्च पुण्यानि शङ्करस्य महात्मनः । कृत्वा राज्यं धनं रूपं भजतात्र शिवाज्ञया ॥ ५१
इति ब्रुवन्तं तं भूयः प्रणम्यैते सभार्यकाः । कथं कार्यं परं पुण्यं वदास्माकमृषीश्वर ॥ ५२
इत्युक्त्वा प्रणतिं चक्रुर्दण्डवत्तस्य पादयोः । तदानीमाययावत्र शिवविप्रश्शिवप्रियः ॥ ५३
शंभुमत्रामृतेशानमयमाराधयत्यलम् । तं दृष्ट्वा तपतां श्रेष्ठः कुंभभूराहसद्गुरुम् ॥ ५४
त्वंहि लोकगुरुः पुष्पगिरिसन्तानजो महान् । शिष्यानङ्गीकुरु क्षिप्रमेतानपि सुदुःखितान् ॥ ५५
भवताराधितं शंभुममृतेशमघौघहम् । सेवयित्वाऽस्य सविधे परिचर्याञ्च कल्पय ॥ ५६
यथा भवेयुरेते वै सुखिनो दुःखसागरात् । तथात्वं कृपया विद्वन् कुरु लोकगुरुर्यतः ॥ ५७
इत्युक्त्वा योजयित्वैनं कैलासाय ययौस्वयम् । गतेऽस्मिंस्तापसश्रेष्ठे प्रणम्यैते शिवद्विजम् ॥ ५८
रक्ष नः कृपया विद्वन् प्रार्थयामासुरास्तिकाः । निशम्य वाक्यमेतेषां सोऽयं दुःखातुरोभृशम् ॥ ५९

ஏவம் விசார்ய சக்ரேயம் சிவபுண்யம் ஸுவிஸ்தரம் । தேஹாந்தே ஸத்கதிம் ப்ராப பார்யயா ஸஹ பூமிப:
தஸ்மாத்யூயஞ்ச புண்யானி சங்கரஸ்ய மஹாத்மன: । க்ருத்வா ராஜ்யம் தனம் ரூபம் பஜதாத்ர சிவாக்ஞயா
இதி ப்ருவந்தம் தம் பூய: ப்ரணம்யைதே ஸபார்யகா: ।
கதம் கார்யம் பரம் புண்யம் வதாஸ்மாகம் ருஷீச்வர ॥ 52
இத்யுக்த்வா ப்ரணதிம் சக்ருர்தண்டவத்தஸ்ய பாதயோ: । ததானீமாययாவத்ர சிவவிப்ரச்சிவப்ரிய: ॥ 53
சம்புமத்ராம்ருதேசான மயமாராதயத்யலம் । தம் த்ருஷ்ட்வா தபதாம் ச்ரேஷ்ட: கும்பபூராஹ ஸத்குரும் 54
த்வம் ஹி லோககுரு: புஷ்பகிரிஸந்தானஜோ மஹான் ।
சிஷ்யானங்கீகுரு க்ஷிப்ரமேதானபி ஸுதுக்கிதான் ॥ 55
பவதாऽராதிதம் சம்புமம்ருதேச மகௌகஹம் । ஸேவயித்வாऽஸ்ய ஸவிதே பரிசர்யாஞ்ச கல்பய ॥ 56
स्वयं वा न चकारास्य पुनर्दीपसमुद्भवम् । निर्गतौ च यथापूर्वं कालेन विलयं गतौ ॥ ९
ताभ्यां या यातनाः प्राप्ताश्शक्यास्ता वर्णितुं न च । पुनश्च पुण्यशर्मान्यश्शिवभक्तश्शिवालये ॥ १०
नाशोन्मुखं पुनर्दीपं यथापूर्वञ्चकार सः । अङ्गुल्या तं नखाग्रेतु तैलं किञ्चित्ससञ्जवै ॥ ११

மஹாத்மபிச்ச வித்வத்பிச்சிவபக்தை: க்ருதம் யதி । அக்ஞானாத்கர்ம யத்கிஞ்சிதபகாராத்மகம் மனாக் ॥ 2
தஸ்யாப்யனுபவோ த்ருஷ்டச்ச்ருதோவா பவதா வத । நரகேஷு க்வசித்வாபி ஸூத ஸர்வக்ஞ ஸுவ்ரத 3
ஸூத: — ஞானாதக்ஞானதோ வாபி பக்தைரபி மஹாத்மபி: । அபசாராத்மகம் கர்ம யத்ஸமாசரிதம் சிவே 4
தஸ்யைவானுபவோ த்ருஷ்டோ நான்யஸ்ய பசுகர்மண: । ஸோமசர்மாபுராவிப்ரச்சிவசர்மாச பூஸுரா: ॥ 5

தாவுபௌ ஸுமஹாத்மானௌ ஸர்வக்ஞௌ ச த்ருடவ்ரதௌ ।
ஏகதா தேவஸேவார்தம் கதௌ தேவாலயம் ப்ரதி ॥ 6
தத்ர த்ருஷ்ட்வா லிங்கமூர்திம் சிவம் த்ரிதசனாயகம் ।
ப்ரதக்ஷிணம் ததா சம்போச்சக்ராதே ப்ராம்ஹணாவுபௌ ॥ 7
ததானீம் புனரேகேன தீபச்சாந்தோங்கவாயுனா ।
ந த்ருஷ்டஸ்தேந ஸோऽந்யேந த்ருஷ்டோ நோக்தச்ச தம் ப்ரதி 8
ஸ்வயம் வா ந சகாரஸ்ய புனர்தீப ஸமுத்பவம் । நிர்கதௌ ச யதாபூர்வம் காலேன விலயம் கதௌ ॥ 9

தாப்யாம் யா யாதனா: ப்ராப்தாச்சக்யாஸ்தா வர்ணிதும் ந ச ।
புனச்ச புண்யசர்மான்யச்சிவபக்தச்சிவாலயே ॥ 10
நாசோன்முகம் புனர்தீபம் யதாபூர்வஞ்சகார ஸ: ।
அங்குல்யா தம் நகாக்ரேது தைலம் கிஞ்சித்ஸஸஞ்ஜவை ॥ 11

பட்டது. அதற்காக அவர்கள் அப்படிப்பட்ட விசித்திரமான நரகங்களில் அதன் பயனை அனுபவிக்கலாயிற்று. நல்ல விரதங்களை அனுஷ்டிக்கிறவரும், சர்வக்ஞருமான ஓ ஸூத முனிவரே! சிவ பக்தர்களும் வித்வான்களுமான மஹாத்மாக்கள் அக்ஞானத்தினாலோ, ஞானத்தினாலோ ஏதாயினும் சிறிது தவறு செய்திருந்தால் (2) அதற்காக அவர்களும் நரகங்களில் கஷ்டங்களை அனுபவித்திருப்பதை தாங்கள் எங்கேயாயினும் கண்டோ, கேட்டோ இருந்தால் அதை எங்களுக்குச் சொல்லவேண்டுமென்றார்கள். (3) ஸூதர் பதில் கூறுகிறார்: ஓ முனிவர்களே! ஞானத்தினாலோ, அக்ஞானத்தினாலோ பக்தர்களான மஹாத்மாக்களால் ஸ்ரீ பரமசிவனுக்கு என்ன அபசாரம் செய்யப்படுகிறதோ (4) அதற்கு மட்டில் நரகானுபவம் காணப்பட்டிருக்கிறதேயன்றி மற்ற கர்மங்களில் அவர்களுக்கு என்ன அபசாரம் நேரிட்ட போதிலும் அதற்கு ஒன்றுமில்லை. (5) ஓ பூமி தேவர்களே! பூர்வத்தில் ஸோமசர்மன் என்றும், சிவசர்மனென்றும், மஹாத்மாக்களும், சர்வக்ஞர்களும் விரதங்களை அனுஷ்டிப்பதில் உறுதி கொண்டவர்களுமான இரண்டு பிராம்மணர்கள் இருந்தார்கள். ஒரு ஸமயத்தில் அவ்விருவர்களும் ஸ்வாமி தரிசனம் செய்வதற்காக சிவாலயத்திற்குச் சென்றார்கள். அங்கு மஹாலிங்கமூர்த்தியும், தேவர்களுக்கு ஈச்வரனும் ஆன ஸ்ரீ பரமேச்வரனை தரிசித்து விட்டு அவ்விருவர்களும் பிரதக்ஷிணம் செய்கையில் ஒருவர் நடக்கும் பொழுது அவனுடைய உடல் காற்றினால் அங்கிருந்த தீபம் அணைந்தது. அதை அவன் பார்க்கவில்லை, மற்றவனால் அது பார்க்கப்பட்டது ஆனால் அவன் அதை அவனுக்குச் சொல்லவில்லை (8) அவனும் அந்த தீபத்தை ஏற்றவும் இல்லை. முன்போல் வீட்டிற்குச் சென்றனர். பிறகு அவ்விருவரும் காலக்கிரமத்தில் இறந்தனர். (9) அவர்களால் அதற்காக அடையப்பட்ட நரகங்களை வர்ணிப்பதற்கு முடியாது. மறுபடியும் புண்யசர்மா என்ற மற்றொரு சிவபக்தன் ஓர் சிவாலயத்தில் (10) அணைந்துபோகும்படியான நிலையிலுள்ள ஓர் தீபத்தை தன் விரலால் தூண்டி முன்போல் நன்றாக எரியும்படி செய்தான். அப்பொழுது அவனுடைய

तेनापि नरके घोरे यातनास्सेहिरे चिरम् । अनन्तरं सारमेयस्सञ्जातो बहुधा चिरम् ॥ १२
तथा सुमतिसंज्ञोऽपि शिवयोगी जितेन्द्रियः । शिवार्थं प्रतिगृह्णाति भिक्षामन्यद्धनं बहु ॥ १३
ददाति तद्धनं सर्वं शिवपूजादिकर्मसु । नालिकेरान् गृहीत्वायं तज्जलैः परमेशितुः ॥ १४
कारयित्वाभिषेकं तैरत्ति तत्सारमान्तरम् । तेनास्य नरके घोरे यातना समजायत ॥ १५
स्कन्दालये घृतेनान्यो वैश्यो भक्त्या दिने दिने । दीपानुद्दीप्य बहुधा कुर्वन् देवं प्रदक्षिणम् ॥ १६
तत्राम्लशाकं सुबहु विचित्य प्रत्यहं स्वयम् । तेनापि नरके तीव्रे यातनास्सेहिरे भृशम् ॥ १७
वज्रदन्ताभिधः कश्चिद्वचिरो योगिपुङ्गवः । देवालयं महत्पुण्यं निन्दितं पापिनाऽन्तिके ॥ १८
तत्रस्थितं यदेतेन वचिरेणापि सुव्रताः । अनुभूता पुराऽसह्या वज्रदन्तेन यातनाः ॥ १९
नेत्रहीनोऽस्ति सन्यासी भारत्याख्यो मुनीश्वराः । निद्रापरं शिवाभ्याशे पादेनास्खलितोयतिः ॥ २०
विलङ्घ्य दर्शयित्वा तं पापिनं परमेश्वरम् । जगामतेन पापेन तीव्राः पीडाश्च सेहिरे ॥ २१
तस्माज्जितेन्द्रियैश्चापि योगिभिश्च महात्मभिः । ज्ञानिभिश्च शिवद्रोहो नानुष्ठेयः कदाचन ॥ २२

தேனாபி நரகே கோரே யாதனாஸ்ஸேஹிரே சிரம் । அனந்தரம் ஸாரமேயஸ்ஸஞ்ஜாதோ பஹுதா சிரம் 12
ததா ஸுமதிஸம்ஞோऽபி சிவயோகீ ஜிதேந்த்ரிய: । சிவார்தம் ப்ரதிக்ருண்ஹாதி பிக்ஷாமன்யத்தனம் பஹு
ததாதி தத்தனம் ஸர்வம் சிவபூஜாதிகர்மஸு । நாளிகேரான் க்ருஹீத்வாயம்தஜ்ஜலை: பரமேசிது: ॥ 14
காரயித்வாऽபிஷேகம் தைரத்தி தத்ஸாரமாந்தரம் । தேனாஸ்ய நரகே கோரே யாதனா ஸமஜாயத ॥ 15
ஸ்கந்தாலயே க்ருதேனான்யோ வைச்யோ பக்த்யா தினே தினே ।
தீபானுத்தீப்ய பஹுதா குர்வன் தேவம் ப்ரதக்ஷிணம் ॥ 16
தத்ராம்லசாகம் ஸுபஹு விசித்ய ப்ரத்யஹம் ஸ்வயம் ।
தேனாபி நரகே தீவ்ரே யாதனாஸ்ஸேஹிரே ப்ருசம் ॥ 17
வஜ்ரதந்தாபித: கச்சித்பதிரோ யோகி புங்கவ: । தேவாலயம் மஹத்புண்யம் நிந்திதம் பாபினாந்திகே ॥ 18
தத்ரஸ்திதம் யதே தேன பதிரேணாபி ஸுவ்ரதா: । அனுபூதா புராऽஸஹ்யா வஜ்ரதந்தேன யாதனா: ॥ 19
நேத்ரஹீனோऽஸ்தி ஸன்யாஸீ பாரத்யாக்யோ முனீச்வரா: ।
நித்ராபரம் சிவாப்யாசே பாதேனாஸ்கலிதோயதி: ॥ 20
விலங்க்ய தர்சயித்வா தம் பாபினம் பரமேச்வரம் । ஜகாம தேன பாபேன தீவ்ரா பீடாச்ச ஸேஹிரே ॥ 21
தஸ்மாஜ்ஜிதேந்த்ரியைச்சாபி யோகிபிச்ச மஹாத்மபி: ।
க்ஞானிபிச்ச சிவத்ரோஹோ நாநுஷ்டேய: கதாசன ॥ 22

நகத்தின் நுனியில் கொஞ்சம் எண்ணெய் ஒட்டிக்கொண்டது. (11) அதற்காக அவனும் வெகுகாலம் கொடிய நரகத்தில் யாதனைகளை அனுபவித்து விட்டு பிறகு வெகு காலம் அளவும் நாய் ஜென்மத்தை அடைந்திருந்தான். (12) அதேபோல் ஸுமதி என்ற இந்திரிய ஜெயத்தோடு கூடிய ஓர் சிவயோகியான வர் ஸ்ரீ பரமேச்வரனுக்காக பிறரிடமிருந்து மிகுந்த தனத்தை யாசித்து வாங்கி (13) இந்த தனங்கள் யாவையும் சிவ பூஜை முதலிய விஷயங்களில் செலவு செய்து வந்தான். ஒருநாள் சில தேங்காய்களை வாங்கி அவைகளிலிருந்த இளநீரினால் ஸ்ரீ பரமசிவனுக்கு (14) அபிஷேகம் செய்துவிட்டு அதன் உள்ளிருந்த தேங்காயை சாப்பிட்டான். அதனால் அவனுக்கு கொடூரமான நரகத்தில் மிகுந்த யாதனைகள் ஏற்பட்டது. (15) ஓர் வணிகன் தினந்தோறும் மிகுந்த பக்தியோடு ஸுப்ரம்மண்ய ஸ்வாமி ஆலயத்தில் நெய்யினால் அநேகம் தீபங்கள் போட்டுவிட்டு ஸ்வாமியை பிரதக்ஷிணம் செய்துவந்தான். (16) அங்கு விழுந்து கிடந்த அநேகம் புளியங்காய்களை தினந்தோறும் பொறுக்கிக்கொண்டு போனான். அந்த பாவத்திற்காக அவனும் கோரமான நரகத்தில் அநேகம் கொடிய துன்பங்களை அனுபவித்தான். (17) வஜ்ரதந்தன் என்ற செவிடான ஓர் யோகீச்வரர் இருந்தார். ஓர் பாபியானவன் அவர் ஸமீபத்திலிருந்து புண்ணியமான சிவாலயத்தைப்பற்றி நிந்தித்தான். நல்ல விரதங்களை அனுஷ்டிக்கும் ஓ முனிவர்களே! அவர் செவிடராக இருந்தாலும் அவர் அந்த இடத்திலிருந்ததால் வஜ்ரதந்தர் என்ற யோகியும் கோரமான நரகங்களை அனுபவித்தார். (19) ஓ முனீச்வரர்களே! பாரதி என்ற குருடரான ஓர் சன்யாசியானவர் ஸ்ரீ சிவ சன்னதியில் தூங்கிக்கொண்டிருந்த ஓர் பாவியைக் காலினால் இடறித் தாண்டிக்கொண்டு ஸ்ரீ ஸ்வாமியைத் தரிசித்தார். அதற்காக கொடிய நரகங்களை அனுபவித்தார். (21) ஆகையால் இந்திரியத்தை ஜெயித்தவர்களாலும், யோகீச்வரர்களாலும், மஹாத்மாக்களாலும், ஞானிகளாலும் கூட

शिवालये तदा शंभोरपचारः कृतो यदि । अनुभूय फलं पश्चादन्ते मुक्तिश्च तादृशाम् ॥ २३
शिवद्रोहस्तु वै तस्मान्नश्रोतव्यो विजानता । शिवद्रोहपराणां तु समीपे च न संवसेत् ॥ २४
इति सूतात्समाकर्ण्य मुनयस्संशितव्रताः । विस्मयं परमं गत्वा भयेनच चकंपिरे ॥ २५
परिहृत्य शिवद्रोहं तपांसि सफलानि नः । कथा श्रुता यदेतेषां पापिनां श्रवणेन नः ॥ २६
प्रायश्चित्तं तदेतस्य शिवपञ्चाक्षरस्मृतिः । दध्युश्च हृदयांभोजे देव्या सह पिनाकिनम् ॥ २७
सूतोऽपि वक्ता चैतेषां तत्पापविनिवृत्तये । दध्यौ शिवमुमाकान्तं वदन् पञ्चाक्षरीं मुदा ॥ २८
आस्तेऽतिहृष्टहृदयश्चैषामेव तु सन्निधौ । पुनस्तु पूजामाहात्म्यमपृच्छंस्ते मुनीश्वराः ॥ २९

इति श्री स्कान्दे महापुराणे शंकरसंहितायां शिवरहस्यखण्डे
उपदेशकाण्डे षष्टितमोऽध्यायः ॥

சிவாலயே ததா சம்போரபசார: க்ருதோயதி । அனுபூய பலம் பச்சாதந்தே முக்திச்ச தாத்ருசாம் ॥ 23
சிவத்ரோஹஸ்துவை தஸ்மான்ன ச்ரோதவ்யோ விஜானதா ।
சிவத்ரோஹபராணும் து ஸமீபேச ந ஸம்வஸேத் ॥ 24
இதி ஸூதாத்ஸமாகர்ண்ய முனயஸ்ஸம்சிதவ்ரதா: । விஸ்மயம் பரமம் கத்வா பயேனச சகம்பிரே ॥ 25
பரிஹ்ருத்ய சிவத்ரோஹம் தபாம்ஸி ஸபலானின: । கதாச்ருதா யதே தேஷாம் பாபினும் ச்ரவணேன ந: 26
ப்ராயச்சித்தம் ததேதஸ்ய சிவபஞ்சாக்ஷரஸ்ம்ருதி: ।
தத்யுச்ச ஹ்ருதயாம்போஜே தேவ்யாஸஹ பினாகினம் ॥ 27
ஸூதோऽபி வக்தா சைதேஷாம் தத்பாபவினிவ்ருத்தயே ।
தத்யௌ சிவமுமாகாந்தம் வதன்பஞ்சாக்ஷரீம் முதா ॥ 28
ஆஸ்தேऽதி ஹ்ருஷ்ட ஹ்ருதயச்சைஷாமேவது ஸன்னிதௌ ।
புனஸ்து பூஜாமாஹாத்ம்யமப்ருச்சம்ஸ்தம் முனீச்வரா: ॥ 29

இதி ஸ்ரீஸ்காந்தே மஹாபுராணே சங்கரஸம்ஹிதாயாம் சிவரஹஸ்யகண்டே
உபதேசகாண்டே ஷஷ்டிதமோऽத்யாய:

ஒருக்காலும் சிவாபசாரம் செய்யக்கூடாது. (22) அப்படி ஒருசமயம் சிவாலயத்தில் ஏதேனும் சிறிது அபசாரம் நேர்ந்தாலும் அதை முன்பு அனுபவித்து பிறகுதான் அவர்களுக்கு மோக்ஷம் கிடைக்கும். (23) ஆகையால் ஓ முனிவர்களே! அறிவாளியானவன் சிவத்துரோகத்தை காதால்கூட கேட்கக்கூடாது. சிவத்துரோகிகளின் சமீபத்தில்கூட இருக்கக்கூடாது என்றார். (24) இவ்வாறு ஸூத முனிவரிடமிருந்து கேட்டு உறுதியுடன் விரதங்களை அனுஷ்டிக்கும் அந்த முனிவர்கள் மிகுந்த ஆச்சரியமடைந்து பயத்தினாலும் மிகவும் நடுங்கினார்கள். (25) இப்படிப்பட்ட பாவிகளின் கதைகளை நாம் கேட்டதினால் இந்த சிவத்துரோகத்தினால் ஏற்படும் பாவங்களைப் பொறுத்து, போக்கி நமது தவங்கள் பயனடைவதற்காக (26) இதற்கு ஸ்ரீ சிவ பஞ்சாக்ஷர மஹாமந்திரத்தை நினைப்பதுதான் தக்க பரிஹாரமென்று எண்ணித் தங்களுடைய ஹ்ருதய கமலத்தில் தேவியோடு கூடிய ஸ்ரீ மஹேச்வரனை மனதால் த்யானம் செய்தார்கள். (27) ஸூத முனிவரும் இக்கதைகளைச் சொன்ன பாபம் தீருவதற்காக மிகுந்த சந்தோஷத்தோடு ஸ்ரீ பஞ்சாக்ஷர மஹா மந்திரத்தை உச்சரித்து ஸ்ரீ சாம்பமூர்த்தியை த்யானம் செய்து கொண்டு (28) அம்முனிவர்களின் முன்னிலையில் மிகுந்த சந்தோஷத்தோடு உட்கார்ந்திருக்கையில் அவர்கள் மறுபடியும் சிவ பூஜையின் மஹிமையை சொல்லும்படி கேட்டார்கள். (29)

அறுபதாவது அத்தியாயம் முற்றிற்று.

॥ अथ एकषष्टितमोऽध्यायः ॥

बिन्दुनादात्मकस्य लिङ्गस्य पूजामहिमा ॥

सूतः — अतः परं प्रवक्ष्यामि पूजामाहात्म्यमीशितुः । यच्छ्रुत्वामनुजस्सद्यो मुक्तिपारं गमिष्यति ॥ १
पूर्वकल्पे महादेवः स्वाहरन्ते जगत्पतिः । संहृत्य सकलं विश्वं स्वात्मनोऽव्यतिरेकियत् ॥ २
शक्त्या तु परया विप्रा ननर्तैको निशां स्वकाम् । शर्वर्यन्ते यथापूर्वं सृजेयमिति शङ्करः ॥ ३
प्रजा तस्मादभूच्छंभोः पुराणी मुनिसत्तमाः । अध्वनश्चाऽयथापूर्वमण्डान्यपिचलीलया ॥ ४
सङ्कल्पमात्रेण तदा ससर्ज सकलं शिवः । तिस्रो मूर्तीः स्वात्मनैव सृष्टिस्थित्यन्तहेतवे ॥ ५
अप्राकृतवपुश्शीलाञ्रुद्रानपि गणानपि । देवांश्च ऋषिभिस्सार्धं पितॄनपि नरानपि ॥ ६
अन्यच्च जगतां नाथः स्थावरं जङ्गमञ्जगत् । रुद्रान्मातृगणांश्चैव प्रमथान् प्रमथाधिपान् ॥ ७
भूतानि भूतपैरेवं देवासुरमहोरगान् । ऋषीन् पितृगणान्देवो लीलया सकलञ्जगत् ॥ ८
उच्चावचानि भूतानि तया शक्त्या जगत्पतिः । विष्ण्वादीनां महर्षीणां केषाञ्चिदधिकारिणाम् ॥ ९

॥ அத ஏகஷஷ்டிதமோऽத்யாய: ॥

பிந்துநாதம் இவைகளின் உருவமாகிய லிங்கத்தை பூஜை செய்வதின் மகிமை

ஸூத: — அத: பரம் ப்ரவக்ஷ்யாமி பூஜாமாஹாத்ம்யமீசிது: ।
யச்ச்ருத்வா மனுஜஸ்ஸத்யோ முக்திபாரம் கமிஷ்யதி ॥ 1
பூர்வகல்பே மஹாதேவ: ஸ்வாஹரந்தே ஜகத்பதி: ।
ஸம்ஹ்ருத்ய ஸகலம் விச்வம் ஸ்வாத்மனோऽவ்யதிரேகியத் ॥ 2
சக்த்யாது பரயா விப்ரா நனர்தைகோ நிசாம் ஸ்வகாம் । சர்வர்யந்தே யதாபூர்வம் ஸ்ருஜேயமிதி சங்கர: ॥ 3
ப்ரஜாதஸ்மாதபூச்சம்போ: புராணீ முனிஸத்தமா: । அத்வனஷ்ஷட்யதாபூர்வமண்டான்யபிசலீலயா ॥ 4
ஸங்கல்பமாத்ரேண ச ததா ஸஸர்ஜ ஸகலம் சிவ: ।
திஸ்ரோ மூர்தீ: ஸ்வாத்மனைவ ஸ்ருஷ்டிஸ்தித்யந்தஹேதவே ॥ 5
அப்ராக்ருதவபுச்சீலான் ருத்ரானபி கணானபி । தேவாம்ச்ச ருஷிபிஸ்ஸார்தம் பித்ரூனபி நரானபி ॥ 6
அன்யச்ச ஜகதாம் நாத: ஸ்தாவரம் ஜங்கமம் ஜகத் ।
ருத்ரான் மாத்ருகணாம்ச்சைவ ப்ரமதான் ப்ரமதாதிபான் ॥ 7
பூதானி பூதபைரேவம் தேவாஸுர மஹோரகான் । ருஷீன் பித்ருகணான் தேவோ லீலயா ஸகலம் ஜகத் 8
உச்சாவசானி பூதானி தயா சக்த்யா ஜகத்பதி: । விஷ்ண்வாதீனாம் மஹர்ஷீணாம் கேஷாஞ்சிததிகாரிணாம் 9

அறுபத்தொன்றாவது அத்தியாயம்.

ஸூத முனிவர் கூறுகிறார் :— ஓ முனிவர்களே ! மனிதர்கள் எதைக்கேட்ட மாத்திரத்தில் உடன் மோக்ஷத்தின் கரையை அடைவார்களோ அப்படிப்பட்ட சிறந்த ஸ்ரீ பரமேச்வரனுடைய பூஜையின் மஹிமையைச் சொல்லுகிறேன். (1) முந்திய கல்பத்தில் ஜகதீசனாகிய ஸ்ரீ மஹாதேவர் தனது பகற்காலம் முடிந்தவுடன் உலகங்களுக்கு தன்னைக் காட்டிலும் வேறுபோல் தோன்றும் எல்லா உலகங்களையும் சம்ஹரித்துவிட்டு (2) தனது மஹாராத்திரியில் தனிமையாக ஸ்ரீ பராசக்தியோடு கூட நர்த்தனம் செய்தார். பிறகு இரவு முடிந்தவுடன் அந்த பிரபுவுக்கு மறுபடி எல்லா உலகங்களையும் முன்போல் சிருஷ்டி செய்யவேண்டுமென்று, என்றும் அழுதியான ஓர் எண்ணம் உண்டாயிற்று. ஓ பிராம்மணோத்தமர்களே ! அவர் முன்போலவே மந்திரம், பதம், வர்ணம், புவனம், தத்துவம், கலை ஆகிய ஆறு மார்க்கங்களையும், சகல அண்டங்களையும் தன்னிடத்திலிருந்து சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரங்களை நடத்துவதற்காக மும்மூர்த்திகளையும், நினைத்தவுடன் லீலையாக தானாகவே அந்த எல்லாவற்றையும் சிருஷ்டி செய்தார். (5) பிறகு மாயையின் சம்பந்தமற்ற உருவங்கொண்ட ஸ்ரீ பகவான் ருத்திரர்கள், கணங்கள், தேவர்கள், ரிஷிகள், பிதுருக்கள், மனிதர்கள் (6) மற்றுமுள்ள அசையும் பொருள், அசையாப் பொருள், ருத்திரர்கள், மாத்ருகணங்கள், பிரமத கணங்கள், பிரமத கணாதிபர்கள் (7) பூத கணங்கள், பூத கணாதிபர்கள், தேவர்கள், அசுரர்கள், மஹோரகர்கள், ரிஷிகள், பிதுரு கணங்கள் முதலிய எல்லா உலகங்களையும் பலவித பிராணிகளையும், விளையாட்டாக அந்த மாயா சக்தியைக்கொண்டு சிருஷ்டி செய்தார். பிறகு பராபர

वेदागमपुराणानि शास्त्राणि विविधान्यपि । अध्यापयामास गुरुः स्थितान्यात्मनि लीलया ॥ १०
शशास तान् पुनर्देवो विष्ण्वादीनमरप्रभुः । मां पूजयत वै देवा भक्त्या भावपुरस्सरम् ॥ ११
भावानुरूपफलदः प्रतिज्ञा या मया कृता । ततोऽधिकारं युष्माकं कल्पयामि हरे विधे ॥ १२
ततस्साञ्जलिहस्तास्ते प्रणम्य भवमूचिरे । परिपूर्णोऽसि भगवन् पुरुहूत पुरुष्टुत ॥ १३
श्रुतो वेदागमेष्वीश कथं पूज्यो हि नो वद । केनाकारेण वै देवः सर्वरूपः स्मृतः प्रभो ॥ १४
विश्वरूपाय वै देव वेदो वदति भो नमः । वयं कं विग्रहं तेषु केन संपूज्य शङ्कर ॥ १५
भवाम ते प्रसादस्य पात्रपूता जगत्पते । ईश्वरः — यस्यां कस्याञ्च वै मूर्तौ पूजितोऽत्रह मादरात् ॥ १६
प्रसन्नो वाञ्छितं दद्यां यस्य कस्यापि वा सुराः । किन्तु लिङ्गार्चकानान्तु शीघ्रमेवास्म्यभीष्टदः ॥ १७
लिङ्गमूर्तौ सदाकालं विना मन्त्रादि संस्क्रियाम् । प्रसन्नो निवसाम्येव भक्तिभाजां विमुक्तये ॥ १८
देवाः — किं लिङ्गं भवताख्यातं केन लिङ्गी त्वमव्ययः । कथं वा लिङ्गसंज्ञास्य वद विस्तरतो विभो ॥ १९

வேதாகமபுராணானி சாஸ்த்ராணி விவிதான்யபி । அத்யாபயாமாஸ குரு: ஸ்திதான்யாத்மனி லீலயா ॥ 10
சசாஸ தான் புனர்தேவோ விஷ்ண்வாதீனமரப்ரபு: ।
மாம்பூஜயத வை தேவா: பக்த்யா பாவபுரஸ்ஸரம் ॥ 11
பாவானுரூபபலத: ப்ரதிக்ஞாயா மயா க்ருதா । ததோSதிகாரம் யுஷ்மாகம் கல்பயாமி ஹரே விதே ॥ 12
ததஸ்ஸாஞ்ஜலிஹஸ்தாஸ்தே ப்ரணம்ய பவமூசிரே । பரிபூர்ணோSஸி பகவன் புருஹூத புருஷ்டுத ॥ 13
ச்ருதோ வேதாகமேஷ்வீச கதம்பூஜ்யோஹிநோ வத ।
கேனாகாரேண வை தேவ: ஸர்வ ரூப: ஸ்ம்ருத: ப்ரபோ ॥ 14
விச்வரூபாய வை தேவ வேதோ வததிபோ நம: । வயம் கம் விக்ரஹம் தேஷு கேன ஸம்பூஜ்ய சங்கர 15
பவாமதே ப்ரஸாதஸ்ய பாத்ரபூதாஜகத்பதே ।
ஈச்வர: — யஸ்யாம் கஸ்யாஞ்ச வை மூர்தௌ பூஜிதோSப்யஹ மாதராத் ॥ 16
ப்ரஸன்னோ வாஞ்சிதம் தத்யாம் யஸ்ய கஸ்யாபி வா ஸுரா: ।
கிந்து லிங்கார்சகானாம் து சீக்ரமேவாஸ்ம்யபீஷ்டத: ॥ 17
லிங்கமூர்தௌ ஸதா காலம் விநா மந்த்ராதி ஸம்ஸ்க்ரியாம் ।
ப்ரஸன்னோ நிவஸாம்யேவ பக்திபாஜாம் விமுக்தயே ॥ 18
தேவா: — கிம் லிங்கம் பவதாக்யாதம் கேன லிங்கீத்வமவ்யய: ।
கதம் வா லிங்கஸம்ஞாஸ்யவத விஸ்தரதோ விபோ ॥ 19

குருவான அந்த மஹேச்வரர் தகுந்த அதிகாரிகளான விஷ்ணு முதலிய தேவர்களுக்கும், சில மஹரிஷிகளுக்கும், தம்மிடத்திலிருக்கும் பற்பல வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள், சாஸ்திரங்கள் இவைகளை லீலையாக கற்பித்தார். (10) பிறகு தேவர்களுக்கு ஈசனான அந்த மஹேச்வரன், விஷ்ணு முதலிய தேவர்களைப் பார்த்து கட்டளையிட்டார். ஓ தேவர்களே! ச்ரத்தைக்குத் தக்க பலனை கொடுப்பதாக நான் பிரதிக்ஞை செய்திருக்கிறபடியால் நீங்கள் மனதில் பக்தி ச்ரத்தையோடு என்னை பூஜை செய்யுங்கள். ஓ விஷ்ணுவே! ஓ பிரம்மாவே! பிறகு நான் உங்களுக்கு அதிகாரங்களை ஏற்படுத்துகிறேன் என்றார். (12) பிறகு அவர்கள் அஞ்சலி செய்துகொண்டு ஸ்ரீ மஹேச்வரனை நமஸ்கரித்து தெரிவித்ததாவது அநேக விதமாய் அழைக்கப்படுகிறவரும், பலவிதமாய் துதி செய்யப்படுகின்றவருமான ஓ மஹேச்வரா! வேத ஆகமங்களில் தாங்கள் எங்கும் நிறைந்தவரென்றும், சகல பிரபஞ்ச ஸ்வரூபி என்றும் சொல்லப்படுகின்றதே ஆகையால் ஓ பிரபுவே! அவைகளில் எந்த உருவத்தை எவ்விதமாக பூஜித்து (15) நாங்கள் தங்களுடைய அனுக்கிரஹத்திற்கு பாத்திரர்களாவோம் என்றார்கள். அதற்கு ஈச்வரன் பதில் கூறுகிறார் :– ஓ தேவர்களே! எந்த உருவத்திலாவது யாவராலாயினும் ஆதரவுடன் பூஜிக்கப்பட்டால் (16) நான் பிரஸன்னனாகி, வேண்டிய பலன்களைக் கொடுப்பேன். ஆனால் லிங்கத்தில் பூஜை செய்கிறவர்களுக்கு நான் வெகு சீக்கிரத்தில் எல்லா அபீஷ்டங்களையும் கொடுப்பேன். (17) ஏனெனில் பக்திமான்களுக்கு மோக்ஷத்தைக் கொடுப்பதற்காக லிங்க மூர்த்தியில் மந்திரங்களால் ப்ராண பிரதிஷ்டை முதலிய செய்யப்படாமலேயே எப்பொழுதும் நான் பிரசன்னனாக வசிக்கிறேன் என்றார். (18) தேவர்கள் வினவுகிறார்கள்! ஓ பிரபுவே! தங்களால் சொல்லப்பட்ட லிங்கமென்பது என்ன? என்றும் அழியாத தாங்கள் எவ்விதம் லிங்கமூர்த்தியாக ஆகின்றீர்கள்? அதற்கு லிங்கமென்ற பெயர் எவ்வாறு உண்டாயிற்று? இவைகளை விஸ்தாரமாக

ईश्वरः — अव्यक्तं लिङ्गमाख्यातमनन्तमजरं ध्रुवम् । गुणत्रयं तदेवाहं सृजत्यवति हन्ति च ॥ २०
तदेव मम लिङ्गन्तु तस्य रूपं चतुर्विधम् । परो बिन्दुः परो नादस्त्वपरौ बिन्दुनादकौ ॥ २१
उपर्यधो भागनिष्ठाश्चत्वारोऽपि सुरेश्वराः । अपरो बिन्दुरादौ स्यात्तदूर्ध्वमपरो ध्वनिः ॥ २२
तदूर्ध्वं परबिन्दुस्स्यात्परनादस्तदूर्ध्वकः । प्रणवो वेदिरस्यायं नादो लिङ्गाकृतिस्सुराः ॥ २३
बिन्दुनादमये तस्मिन् लिङ्गे सन्निहितस्सदा । तस्माल्लिङ्गार्चकानांतु सद्यः प्रीतोऽस्म्यभीष्टदः ॥ २४
तस्मिन् लिङ्गेत्वहं पूर्णकलया सर्वथा सुराः । जगच्च सकलं तस्मिन् तिलेतैलमिव स्थितम् ॥ २५
प्रलये लीनमत्रैव सृष्टौ सृष्टञ्च तेन तत् । तत्स्वरूपं पुनर्लोके लिङ्गवेद्यात्मकं विदुः ॥ २६
तस्मात्सवेदिके लिङ्गे लिङ्गेऽहं संस्थितस्सदा । सवेदिकमिदं लिङ्गं रत्नकाञ्चनराजतैः ॥ २७
शिलाभिर्दारुभिर्मृद्भिर्गन्धपारदपूर्वकैः । सलक्षणं विधायैव पूजयध्वमतन्त्रिताः ॥ २८

ஈச்வர: — அவ்யக்தம் லிங்கமாக்யாதமனந்தமஜரம் த்ருவம் ।
குணத்ரயம் ததேவாஹம் ஸ்ருஜத்யவதி ஹந்தி ச ॥ 20
ததேவ மம லிங்கந்து தஸ்ய ரூபம் சதுர்விதம் । பரோ பிந்து: பரோநாதஸ்த்வபரௌ பிந்துநாதகௌ ॥ 21
உபர்யதோ பாகநிஷ்டாச்சத்வாரோऽபி ஸுரேச்வரா: ।
அபரோ பிந்துராதௌஸ்யாத்ததூர்த்வமபரோ த்வனி: ॥ 22
ததூர்த்வம் பரபிந்துஸ்ஸ்யாத் பரநாதஸ்ததூர்த்வக: ।
ப்ரணவோ வேதிரஸ்யாயம் நாதோ லிங்காக்ருதிஸ்ஸுரா: ॥ 23
பிந்துநாதமயே தஸ்மின் லிங்கேஸன்னிஹிதஸ்ஸதா ।
தஸ்மால்லிங்கார்சகானும் து ஸத்ய: ப்ரீதோऽஸ்ம்யபீஷ்டத: ॥ 24
தஸ்மின் லிங்கேத்வஹம் பூர்ணகலயா ஸர்வதா ஸுரா: ।
ஜகச்ச ஸகலம் தஸ்மின் திலேதைலமிவாஸ்திதம் ॥ 25
ப்ரளயே லீனமத்ரைவ ஸ்ருஷ்டௌ ஸ்ருஷ்டஞ்ச தேன தத் ।
தத்ஸ்வரூபம் புனர்லோகே லிங்கவேத்யாத்மகம் விது: ॥ 26
தஸ்மாத்ஸவேதிகே லிங்கே லிங்க்யஹம் ஸம்ஸ்திதஸ்ஸதா ।
ஸவேதிகமிதம் லிங்கம் ரத்னகாஞ்சனராஜதை: ॥ 27
சிலாபிர்தாருபிர்ம்ருத்பிர்கந்தபாரதபூர்வகை: । ஸலக்ஷணம் விதாயைவ பூஜயத்வமதந்த்ரிதா: ॥ 28

எங்களுக்குச் சொல்லவேண்டும் எனக் கேட்டார்கள். (19) ஸ்ரீ மஹேச்வரன் பதில் கூறியதாவது: ஓ தேவர்களே! அளவற்ற சக்தி உடையதும், மூப்பற்றதும், அழிவுமில்லாதும், சத்வம், ரஜஸ், தமஸ் இம்மூன்று குணங்களை உடையதுமான மூலப் பிரகிருதி என்ற மாயையே லிங்கம் எனப்படும். நானே அதுதான். அதுவே சிருஷ்டிக்கின்றது. ரக்ஷிக்கின்றது. சம்ஹாரம் செய்கின்றது. (20) அதுதான் எனது லிங்கம். (குறி எனப்படும்) அதின் உருவம் பரபிந்து, பரநாதம், அபரபிந்து, அபரநாதம் என்று நான்கு வகையாக உள்ளது. (21) ஓ தேவேசர்களே! இந்த நான்கு விதங்களும் முறையே மேலிருந்து கீழாய் உள்ளன. லிங்கத்தின் அடிப்பாகமானது அபர பிந்து என்றும், அதற்கு மேலாக அபர நாதம் என்றும், (22) அதற்கும் மேலாக பரபிந்து என்றும், இம்மூன்றுக்கும் மேலாக பரநாதம் என்றும் சொல்லப்படும். (23) மேலும் ஓ தேவர்களே! (மூன்று மாத்திரைகளை உடைய) ப்ரணவமே இந்த லிங்கத்திற்கு பீடமாகும். அந்த ப்ரணவம் லயமாகவும் (½ மாத்திரை உடைய) நாதம் தான் லிங்கத்தின் உருவமாகிறது. (24) பிந்து நாதங்களின் ஸ்வரூபமான அப்படிப்பட்ட லிங்கத்தில் தான் நான் எப்பொழுதும் சான்னித்யம் அடைந்திருக்கிறேன். ஆகையால் லிங்கத்தைப் பூஜிப்பவரிடத்தில் நான் உடன் சந்தோஷமடைந்து அவர்களுக்கு வேண்டிய அபீஷ்டங்களைக் கொடுக்கிறேன் (24) ஓ தேவர்களே! நான் அந்த லிங்கத்தில் எப்பொழுதும் பூர்ண கலையுடன் இருந்து வருகிறேன். எல்லா உலகங்களும் அதற்குள் எள்ளில் எண்ணெய் இருப்பதுபோல் இருந்து வருகிறது. (25) பிரளய காலத்தில் அந்த லிங்கத்திலேயே லயமடைந்து பிறகு சிருஷ்டி காலத்தில் அந்த லிங்கத்திலிருந்தே உலகங்கள் யாவும் சிருஷ்டிக்கப் படுகின்றன. அதன் ஸ்வரூபத்தை உலகில் பீடத்தோடு கூடிய லிங்க உருவமாக சொல்லுகிறார்கள். (26) ஆகையால் பீடத்தோடு கூடிய அந்த லிங்கத்தில் நான் எப்பொழுதும் இருந்து வருகிறேன். ஓ தேவர்களே! ரத்னங்கள், தங்கம், வெள்ளி, கல், மண், மரம், சந்தனம், ரஸம் முதலியவைகளாலான பீடத்தோடு கூட அந்த லிங்கத்தை லக்ஷணத்துடன் அடைந்து, நீங்கள் சோம்பலின்றி பூஜை செய்யுங்கள். (28)

वेदागमोक्तविधिना सर्वकालमतन्त्रिताः । पूजां कुर्वन्ति ये नित्यं मुक्तिभाजो भवन्ति ते ॥ २९
दानानि बहवो यज्ञास्तपांसीन्द्रियनिग्रहः । सर्वं लिङ्गार्चनस्यैव कोट्यंशेनापि नो समाः ॥ ३०
तस्माल्लिङ्गार्चकानां तु नैव जन्म न संसृतिः । तस्यां तु लिङ्गमूर्तौ मां सदाशिववपुर्धरम् ॥ ३१
भावपूतेन मनसा पूजयन्तु जगत्त्रये । ब्रह्माण्डेषु च सर्वत्र तत्र तत्राप्यहं सुराः ॥ ३२
लिङ्गमूर्तिमधिष्ठाय पूज्यो वेदोक्तवर्त्मना । केदारे च तथा काश्यां श्रीगिरौ सर्वसिद्धिदे ॥ ३३
श्रीमद्दक्षिणकैलासे वटारण्ये महत्तरे । काञ्चीपुरेऽरुणाद्रौ च श्रीमद्वृद्धाचले तथा ॥ ३४
चिदंबरे कुम्भघोणे मध्यार्जुनमहालये । ममात्यन्तमनोभीष्टवसतौ कमलालये ॥ ३५
हालास्ये च महास्थाने सेतौ रामेश्वराभिधौ । स्थानेषु चैवमादौ च प्रत्यण्डं लिङ्गरूप्यहम् ॥ ३६
निवसामि सदाकालमुमया सह हे सुराः । तस्मान्मां लिङ्गमूर्तिस्थं पूजयत्वखिलं जगत् ॥ ३७
यूयञ्चेत्यभिधायैवं तिरोऽभूज्जगतां पतिः । तत्र तत्राण्डदेशेषु पुरुहूतः पुरुष्टुतः ॥ ३८
पूज्यमानस्सदा सर्वैः पञ्चकृत्यरतस्सदा । चिक्रीडगणपैस्सार्धं देवीस्कन्दविनायकैः ॥ ३९

வேதாகமோக்தவிதினு ஸர்வகாலமதந்த்ரிதா: । பூஜாம் குர்வந்தி யே நித்யம் முக்திபாஜோ பவந்தி தே 29
தானுனி பஹுவோ யக்ஞாஸ்தபாம்ஸீந்த்ரியநிக்ரஹ: ।
ஸர்வம் லிங்கார்சனஸ்யைவ கோட்யம்சேனபி நோ ஸமா: ॥ 30
தஸ்மால்லிங்கார்சகானும் து நைவ ஜன்ம ந ஸம்ஸ்ருதி: ।
தஸ்யாம் து லிங்கமூர்தௌ மாம் ஸதாசிவவபுர்தரம் ॥ 31
பாவபூதேன மனஸா பூஜயந்து ஜகத்ரயே । ப்ரம்ஹாண்டேஷு ச ஸர்வத்ர தத்ர தத்ராப்யஹம் ஸுரா: 32
லிங்கமூர்திமதிஷ்டாய பூஜ்யோ வேதோக்தவர்த்மனு ।
கேதாரேச ததா காச்யாம் ஸ்ரீகிரௌ ஸர்வஸித்திதே ॥ 33
ஸ்ரீமத்தக்ஷிணகைலாஸே வடாரண்யே மஹத்தரே ।
காஞ்சீபுரேऽருணத்ரௌச ஸ்ரீமத்வ்ருத்தாசலே ததா ॥ 34
சிதம்பரே கும்பகோணே மத்யார்ஜுன மஹாலயே । மமாத்யந்தமனோபீஷ்ட வஸதௌ கமலாலயே ॥ 35
ஹாலாஸ்யேச மஹாஸ்தானே ஸேதௌ ராமேச்வராபிதௌ ।
ஸ்தானேஷு சைவமாதௌ ச ப்ரத்யண்டம் லிங்கரூப்யஹம் ॥ 36
நிவஸாமி ஸதாகாலமுமயா ஸஹ ஹே ஸுரா: । தஸ்மான்மாம் லிங்கமூர்திஸ்தம் பூஜயத்வகிலம் ஜகத் 37
யூயஞ்சேத்யபிதாயைவம் திரோऽபூஜ்ஜகதாம் பதி: । தத்ர தத்ராண்டதேசேஷு புருஹூத: புருஷ்டுத: 38
பூஜ்யமானஸ்ஸதா ஸர்வை: பஞ்சக்ருத்யரதஸ்ஸதா ।
சிக்ரீடகணபைஸ்ஸார்தம் தேவீஸ்கந்தவினாயகை: ॥ 39

தினந்தோறும் எல்லாக் காலங்களிலும் வேதாகமங்களில் சொன்னபடி சோம்பலின்றி பூஜை செய்கிறவர்கள் மோக்ஷத்தை அடைவார்கள். (29) பல்வித தானங்கள், யாகங்கள், தவங்கள், இந்திரிய நிக்ரகம் இவைகள் யாவும் லிங்கத்தைப் பூஜை செய்வதின் புண்ணியத்திற்கு கோடியில் ஓர் அம்சத்திற்குக் கூட நிகராகாது. (30) ஆகையால் லிங்கத்தைப் பூஜை செய்கிறவர்களுக்கு மறு பிறப்பில்லை. ஆதலால் அப்படிப்பட்ட லிங்க உருவத்தில் எப்பொழுதும் மங்களகரமான உருவத்தைக் கொண்ட என்னை (31) மூன்று உலகங்களிலும் பரிசுத்தமான மனதுடன் பூஜை செய்யட்டும். ஓ தேவர்களே! எல்லாப் பிரும்மாண்டங்களிலும் நான் (32) லிங்க உருவத்தைக் கொண்டவராகி வேதத்தில் சொல்லப்பட்ட முறைப்படி பூஜிக்கத் தக்கவனாவேன். கேதாரம், காசி, எல்லா சித்திகளையும் அளிக்கும் ஸ்ரீ சைலம் (33) காளஹஸ்தி, மஹா மகிமை வாய்ந்த திருவாலங்காடு, காஞ்சீபுரம், திருவண்ணாமலை, விருத்தாசலம், (34) சிதம்பரம், கும்பகோணம், சிறந்த க்ஷேத்திரமாகிய திருவிடமருதூர், என் மனதிற்கு மிகப் ப்ரீதி உள்ள இடமான திருவாரூர். (35) சிறந்த ஸ்தலமாகிய மதுரை, ராமேச்வரம் என்ற ராம சேது இவை முதலிய இடங்களில் ஒவ்வொரு அண்டத்திலும் நான் லிங்க உருவமாக (36) பார்வதியோடு கூட எப்பொழுதும் வசித்து வருகிறேன். ஆகையால் ஓ தேவர்களே! லிங்க உருவத்தோடு கூடிய என்னை நீங்களும், எல்லா உலகிலுள்ளவர்களும் பூஜை செய்யுங்கள் என்று சொல்லிவிட்டு ஸ்ரீ ஜகதீசன் மறைந்தார். அநேக விதங்களாக அழைக்கப்படுகிறவரும், துதிக்கப்படுகிறவரும் எப்பொழுதும் எல்லோராலும் பூஜிக்கப்படுகிறவரும் ச்ருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், அனுக்கிரஹம், திரோதனம் ஆகிய ஐந்து காரியங்களையும் செய்கின்ற

कैलासे च तथा तत्र महाकैलासपर्वते । मन्दरेच महामेरौ चक्रवाळगिरौ तथा ॥ ४०
शिवलोके च सान्निध्यं तत्र तत्राप्यनुग्रहम् । कुर्वन् सर्वात्मनामीशः स्थितः स्थाणुर्जगन्मयः ॥ ४१
ततो विष्णुमुखा देवा ऋषयश्च तपोधनाः । स्वस्वाभीष्टप्रसिध्यर्थं कृत्वा लिङ्गं सवैदिकम् ॥ ४२
स्थानेषु च नदीतीरे पर्वताग्रेषु सादरम् । उपचारैस्समभ्यर्च्य षोडशैरुमया शिवम् ॥
पदं प्रापुर्यथार्हं ते प्रसन्नादीश्वरेश्वरात् ॥ ४३

इति श्री स्कान्दे महापुराणे शंकरसंहितायां शिवरहस्यखण्डे
उपदेशकाण्डे एकषष्टितमोऽध्यायः ॥

॥ अथ द्विषष्टितमोऽध्यायः ॥

काश्यादि क्षेत्रेषु विष्ण्वादिदेवकृत शिवाराधनं ॥

ऋषयः — केषु स्थानेषु देवेशमाराधुस्सुरर्षयः । विविच्य वद विस्तारात्सूत नो निखिलं क्रमात् ॥ १

கைலாஸே ச ததா தத்ர மஹாகைலாஸபர்வதே । மந்தரேச மஹாமேரௌ சக்ரவாளகிரௌ ததா ॥ 40
சிவலோகேச ஸான்னித்யம் தத்ர தத்ராப்யனுக்ரஹம் ।
குர்வன் ஸர்வாத்மனாமீச: ஸ்தித: ஸ்தாணுர்ஜகன்மய: ॥ 41
ததோ விஷ்ணுமுகா தேவா ருஷயச்ச தபோதன: ।
ஸ்வஸ்வாபீஷ்டப்ரஸித்யர்தம் க்ருத்வாலிங்கம் ஸவைதிகம் ॥ 42
ஸ்தானேஷு ச நதீதீரே பர்வதாக்ரேஷு ஸாதரம் ।
உபசாரைஸ்ஸமப்யர்ச்ய ஷோடசைருமயா சிவம் ॥
பதம் ப்ராபுர்யதார்ஹம் தே ப்ரஸன்னாதீச்வரேச்வராத் ॥ 43

இதி ஸ்ரீஸ்காந்தே மஹாபுராணே சங்ரகஸம்ஹிதாயாம் சிவரஹஸ்யகண்டே
உபதேச காண்டே ஏகஷஷ்டிதமோऽத்யாய: ॥

॥ அத த்விஷஷ்டிதமோऽத்யாய: ॥

காசி முதலிய க்ஷேத்திரங்களில் விஷ்ணு முதலிய தேவர்கள் ஸ்ரீ மஹேச்வரனை ஆராதித்தல்

ருஷய: — கேஷு ஸ்தானேஷு தேவேசமாரராதுஸ்ஸுரர்ஷய: ।
விவிச்ய வத விஸ்தாராத் ஸூத தோ நிகிலம் க்ரமாத் ॥ 1

வரும், ஆங்காங்குள்ள அண்டங்களிலும், கைலாசம், மஹா கைலாசம், மந்தரம், மஹாமேரு, சக்கிரவாளம் அந்த பர்வதங்களிலும், சிவலோகத்திலும், ஆங்காங்குள்ள எல்லாப் பிராணிகளுக்கு அனுக்கிரஹம் செய்துகொண்டு அசைவற்ற ஸகல ப்ரபஞ்ச ரூபியுமான ஸ்ரீ ஜகதீசன், பார்வதீ, ஸுப்ரமண்யர், விநாயகர், இவர்களுடனும், ஸகல கணாதிபர்களுடனும், பூரணமாக இருந்து வருகிறார் (41) பிறகு விஷ்ணு முதலிய தேவர்களும், தவத்தையே தனமாகக் கொண்ட முனிவர்களும், தங்கள், தங்கள் அபீஷ்டங்களை அடைவதற்காக நதிக்கரையிலுள்ள க்ஷேத்திரங்களிலும், மலையின் உச்சிகளிலும், மிகுந்த ஆதரவுடன் பீடத்தோடு கூடிய அந்த லிங்கத்தை அமைத்துக்கொண்டு ஸ்ரீசாம்பமூர்த்தியை ஷோடச உபசாரங்களால் நன்றாக பூஜித்து, பிறகு ப்ரசன்னரான தேவாதி தேவரிடமிருந்து அவரவர்களுக்குத் தக்க பதவியை அடைந்தார்கள். (43)

அறுபத்தோராவது அத்தியாயம் முற்றிற்று.

அறுபத்திரண்டாவது அத்தியாயம்.

சௌனகாதி முனிவர்கள் கேட்கிறார்கள் : ஓ ஸூத முனிவரே ! தேவர்களும் முனிவர்களும் ஸ்ரீ தேவேசனை எந்த எந்த இடங்களில் பூஜை செய்தார்கள் என்பதை எல்லாம் முறையே ஒவ்வொன்றாக

सूतः — शृणुध्वमृषयस्सर्वे क्रमशो वच्मि भूसुराः । तदा विष्णुरमेयात्मा शङ्करप्रियकिङ्करः ॥ २
काशीं प्राप्याविमुक्ताख्यां नैकवर्षायुतं ततः । कुर्वंस्तपो महद्घोरं लिङ्गमूर्तिं सदाशिवम् ॥ ३
भक्त्या संपूज्य देवेशात् प्राप्तवान्वरमुत्तमम् । प्रसन्नात् पार्वतीशानात् वैष्णवं पदमुत्तमम् ॥ ४
सर्वरक्षाधिकारित्वे चाभिषिक्तो यथाविधि । शङ्खं चक्रं गदां खड्गं शार्ङ्गाद्यान्यायुधान्यपि ॥ ५
महालक्ष्मीपतित्वञ्च पीतमंबरमद्भुतम् । रथं पत्ररथाधीशं ददौ सर्वं सदाशिवः ॥ ६
जगद्रक्षेति चाज्ञप्तो देवदेवेन शूलिना । तदादिच तथा विष्णुश्शिवलोकादधः स्थिते ॥ ७
लोके स्थितो ररक्षासौ जगत्त्रयमतन्द्रितः । छत्रं रत्नमयं तद्वच्चामरे मणिदण्डके ॥ ८
बिभ्रतीभिस्सुरस्त्रीभिस्सेव्यमानस्तु पार्श्वतः । यमुवास महाविष्णुर्विष्णुलोकः स्मृतस्तु सः ॥ ९
सेव्यमानस्तु तत्रैव ब्रह्माद्यैस्सुरयोगिभिः । दुष्टानां निग्रहं कुर्वन् शिष्टानामपि रक्षणम् ॥ १०
महदैश्वर्यसंपन्नो न्यवसत्कमलापतिः । काञ्चीस्थानमनुप्राप्य ब्रह्मा संपूज्य शूलिनम् ॥ ११

ஸூத: — ச்ருணுத்வம் ருஷயஸ்ஸர்வே க்ரமசோ வச்மி பூஸுரா: ।
ததா விஷ்ணுரமேயாத்மா சங்கரப்ரியகிங்கர: ॥ 2
காசீம் ப்ராப்யாவிமுக்தாக்யாந்நைகவர்ஷாயுதம் தத: ।
குர்வம்ஸ்தபோ மஹத்கோரம் லிங்கமூர்திம் ஸதாசிவம் ॥ 3
பக்த்யா ஸம்பூஜ்ய தேவேசாத் ப்ராப்தவான் வரமுத்தமம் ।
ப்ரஸன்னாத்பார்வதீசாநாத்வைஷ்ணவம் பதமுத்தமம் ॥ 4
ஸர்வரக்ஷாதிகாரித்வே சாபிஷிக்தோ யதாவிதி ।
சங்கம் சக்ரம் கதாம் கட்கம் சார்ங்காத்யான்யாயுதான்யபி ॥ 5
மஹாலக்ஷ்மீபதித்வஞ்ச பீதமம்பரமத்புதம் । ரதம் பத்ரரதாதீசம் ததௌ ஸர்வம் ஸதாசிவ: ॥ 6
ஜகத்ரக்ஷேதி சாக்ஞப்தோ தேவதேவேன சூலினா । ததாதிச ததா விஷ்ணுச்சிவலோகாதத: ஸ்திதே ॥ 7
லோகே ஸ்திதோ ரரக்ஷாஸௌ ஜகத்த்ரயமதந்த்ரித: । சத்ரம் ரத்னமயம் தத்வச்சாமரே மணிதண்டகே 8
பிப்ரதீபிஸ்ஸுரஸ்த்ரீபிஸ்ஸேவ்யமானஸ்து பார்ச்வத: ।
யமுவாஸ மஹாவிஷ்ணுர்விஷ்ணுலோக: ஸ்ம்ருதஸ்து ஸ: ॥ 9
ஸேவ்யமானஸ்து தத்ரைஷ ப்ரம்ஹாத்யைஸ்ஸுரயோகிபி: ।
துஷ்டாநாம் நிக்ரஹம் குர்வன் சிஷ்டாநாமபி ரக்ஷணம் ॥ 10
மஹதைச்வர்யஸம்பன்னோ ந்யவஸத்கமலாபதி: । காஞ்சீஸ்தானமனுப்ராப்ய ப்ரம்ஹா ஸம்பூஜ்ய சூலினம் ॥ 11

விவரித்து எங்களுக்குச் சொல்ல வேண்டும் என்றார்கள். ஸூதர் சொல்லுகிறார்: ஓ முனிவர்களே! முறையே ஒவ்வொன்றாகச் சொல்கிறேன் நீங்கள் யாவரும் கேளுங்கள். பிறகு அளவிடமுடியாத மகிமை உள்ளவரும் ஸ்ரீ சங்கரருக்கு பிரியமான வேலைக்காரருமான ஸ்ரீ மஹாவிஷ்ணுவானவர், (2) "அவிமுக்தை" என்ற காசி க்ஷேத்திரத்திற்குச் சென்று அங்கு அநேகம் பதினாயிரம் வருஷங்களாகவும் அதிகோரமாய் தவம் செய்து லிங்கமூர்த்தியாகிய ஸ்ரீ ஸதாசிவனை (3) பக்தியுடன் பூஜை செய்து பிறகு பிரஸன்னரான பார்வதீகாந்தரிடமிருந்து சிறந்த விஷ்ணு பதவியை அடைந்து (4) எல்லா உலகங்களையும் ரக்ஷிக்கும் அதிகாரப் பதவியை முறைப்படி பட்டாபிஷேகம் செய்விக்கப்பட்டார். மேலும் அப்பொழுது ஸ்ரீ ஸதாசிவன் சங்கம், சக்கரம், கதை, கத்தி, சார்ங்கம் முதலிய ஆயுதங்கள், (5) மஹாலக்ஷ்மிக்கு கணவராய் இருக்கும் தன்மை அற்புதமான பீதாம்பரம், கருடனுகிய ரதம் இவைகளையெல்லாம் அவருக்குக் கொடுத்தார். ஓ விஷ்ணுவே! இனி உலகங்களைச் சரிவர ரக்ஷித்து வரவும் என்று தேவாதி தேவரான ஸ்ரீ மகேச்வரரால் உத்தரவிடப்பட்டு அதுமுதற்கொண்டு ஸ்ரீ மஹாவிஷ்ணுவானவர் சிவலோகத்திற்கு கீழாக உள்ள (7) ஸ்ரீ வைகுண்ட லோகத்தில் இருந்து கொண்டு மூன்று உலகங்களையும் அவ்வாறே சோம்பலின்றி ரக்ஷித்து வருகிறார். தேவ ஸ்திரீகளால் ரத்னமயமான குடைகள், ரத்னமயமான பிடிகளுடன் கூடிய இரு சாமரங்கள் இவைகள் பிடிக்கப்பட்டு இரு பக்கங்களிலும் ஸேவிக்கப்பட்டவராகி விளங்கும் ஸ்ரீ மஹாவிஷ்ணு வஸித்துவரும் அந்த உலகம்தான் விஷ்ணு லோகம் எனப்படும். (9) அங்கு லக்ஷ்மீபதியான விஷ்ணுவானவர் ப்ரும்மா முதலிய தேவர்களாலும், தேவ ரிஷிகளாலும் ஸேவிக்கப்பட்டவராகி துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனங்களை செய்து கொண்டு அளவற்ற ஐச்வரியத்தோடு வாழ்ந்து வருகிறார். அப்பொழுது ப்ரம்மதேவன் காஞ்சீபுரத்திற்குச் சென்று சூலபாணியான ஸ்ரீ மகேச்வரனை சிவ

शैले लिङ्गेऽभिषिच्येशं वरं प्राप सुदुर्लभम् । अधिकारञ्च वै सृष्टेरभिषेकपुरस्सरम् ॥ १२
सरस्वतीपतित्वञ्च लेभे हंसञ्च वाहनम् । छत्रञ्चन्द्रसमं शुभ्रं चामरद्वयमेवच ॥ १३
विष्णुलोकादधोभागे देवर्षिगणपूजितः । उवास लोकं यमयं महता वैभवेन वै ॥ १४
ब्रह्मलोकस्सविख्यातो नाम्ना तस्यैव सुव्रताः । इति लेभे वरं शंभोर्ब्रह्मा लिङ्गार्चनाबलात् ॥ १५
इन्द्रश्रीपर्वतं प्राप्य पूजयामास भावतः । भवं भवानीसहितं प्रसाद्याप वरान्बहून् ॥ १६
स्वर्गाधिपत्यं देवानामाधिपत्याभिषेकतः । पुलोमजापतित्वञ्च गजमैरावताभिधम् ॥ १७
उच्चैःश्रवसमश्वेशं वज्रञ्चायुधमद्भुतम् । द्रुमांश्च कल्पकान्धेनूः कामदाश्च महायशाः ॥ १८
चिन्तामणिं तथा रत्नमुर्वश्याद्यप्सरस्त्रियः । प्राच्या दिशोऽधिपत्यञ्च प्रसन्नादाप शङ्करात् ॥ १९
तथैव स्वर्गलोकस्थो भुञ्जन् दिव्यसुखं मुहुः । अमृतास्वादनं कुर्वंस्तिष्ठत्यद्यापि वज्रभृत् ॥ २०
अरुणाद्रौ तथैवाग्निरभिषिच्य सदाशिवम् । अनेकविभवैस्सार्धं संपूज्याप वरानयम् ॥ २१

சைலே லிங்கேऽபிஷிச்யேசம் வரம் ப்ராப ஸுதுர்லபம் ।
அதிகாரஞ்ச வை ஸ்ருஷ்டேரபிஷேகபுரஸ்ஸரம் ॥ 12
ஸரஸ்வதீபதித்வஞ்ச லேபே ஹம்ஸஞ்ச வாஹனம் ।
சத்ரம் சந்த்ரஸமம் சுப்ரம் சாமரத்வயமேவச ॥ 13
விஷ்ணுலோகாததோபாகே தேவர்ஷிகணபூஜித: । உவாஸ லோகம் யமயம் மஹதா வைபவேன வை 14
ப்ரம்ஹலோகஸ்ஸவிக்யாதோ நாம்ன தஸ்யைவ ஸுவ்ரதா: ।
இதி லேபே வரம் சம்போர்ப்ரம்ஹா லிங்கார்சனுபலாத் ॥ 15
இந்த்ர: ஸ்ரீபர்வதம் ப்ராப்ய பூஜயாமாஸ பாவத: । பவம் பவானீஸஹிதம் ப்ரஸாத்யாப வரான்பஹூன் 16
ஸ்வர்காதிபத்யம் தேவாநாமாதிபத்யாபிஷேகத: । புலோமஜாபதித்வஞ்ச கஜமைராவதாபிதம் ॥ 17
உச்சை:ச்ரவஸமச்வேசம் வஜ்ரஞ்சாயுதமத்புதம் । த்ருமாம்ச்ச கல்பகாந்தேனூ: காமதாச்ச மஹாயசா: 18
சிந்தாமணிம் ததா ரத்னமுர்வச்யாத்யப்ஸரஸ்த்ரிய: ।
ப்ராச்யா திசோऽதிபத்யஞ்ச ப்ரஸன்னாதாப சங்கராத் ॥ 19
ததைவ ஸ்வர்கலோகஸ்தோ புஞ்ஜன் திவ்யஸுகம் முஹு: ।
அம்ருதாஸ்வாதனம் குர்வம்ஸ்திஷ்டத்யத்யாபி வஜ்ரப்ருத் ॥ 20
அருணாத்ரௌ ததைவாக்னிரபிஷிச்ய ஸதாசிவம் ।
அனேகவிபவைஸ்ஸார்தம் ஸம்பூஜ்யாப வரானயம் ॥ 21

லிங்கத்தில் அபிஷேகம், பூஜை செய்து, ச்ருஷ்டி அதிகாரத்தில் அபிஷேகம் செய்யப்பட்டு, கிடைப்பதற்கரிய ச்ருஷ்டி அதிகாரத்தையும், (12) சரஸ்வதிக்கும் கணவனுய் இருக்கும் தன்மை ஹம்ஸ வாகனம், சந்திரமண்டலத்தை ஒத்த குடை, இரு வெண்சாமரங்கள் இவைகளையும் அடைந்தார். (13) ஓ முனிவர்களே ! விஷ்ணுலோகத்திற்கு கீழ் பாகத்தில் தேவ ரிஷிகணங்களால் பூஜிக்கப்பட்டவராகி மிகுந்த வைபவத்தோடு இந்த பிரும்மதேவன் எந்த உலகத்தில் வசிக்கிருரோ அதுதான் அவரது பெயரையே கொண்ட பிரும்ம லோகம் எனப்படும். பிரும்மதேவனும் லிங்கத்தைப் பூஜை செய்த மஹிமையால் ஸ்ரீ மஹேச்வரரிடமிருந்து இப்படிப்பட்ட வரத்தை அடைந்தார். (15) இந்திரன் ஸ்ரீசைலத்திற்குச் சென்று பார்வதியுடன் கூடிய ஸ்ரீ பரமேச்வரனை பக்தியுடன் பூஜை செய்து, அவரை சந்தோஷிக்கச் செய்து அநேகம் வரங்களை அடைந்தார். (16) ஸ்வர்க்க போகத்திற்கு அதிபதியாக பட்டாபிஷேகம் செய்யப்பட்டு தேவர்களுக்குத் தலைவராக இருப்பதையும், இந்ராணிக்குக் கணவனுக இருத்தலையும், ஐராவதம் என்ற யானை, (17) உச்சை-ச்ரவஸ் என்ற சிறந்த குதிரை, அற்புதமான வஜ்ராயுதம், அநேகம் கல்பக விருக்ஷங்கள், வேண்டியதைக் கொடுக்கும் காமதேனு என்ற பசுக்கள், சிந்தாமணி என்ற ரத்தினம், ஊர்வசி முதலிய அப்ஸர ஸ்திரீகள் கிழக்கு திக்குக்கு அதிபதியாக இருத்தல் இவைகள் யாவையும் ப்ரஸன்னரான ஸ்ரீ பரமேச்வரனிடமிருந்து மிகக் கீர்த்திவாய்ந்த இந்திரன் அடைந்து (19) சொர்க்கத்திலிருந்து அடிக்கடி அமிர்தத்தைச் சாப்பிட்டுக் கொண்டு திவ்ய சுகங்களை அனுபவித்துக் கொண்டு இப்பொழுதும் அந்த இந்திரன் அங்கு வசித்து வருகிருர் (20) இவ்விதமே அக்னிதேவரும் திருவண்ணுமலையில் ஸ்ரீ பரமேச்வரனை அபிஷேகம் முதலிய பல வைபவங்களோடு பூஜை

अग्नीनामाधिपत्यञ्च दक्षिणाप्राच्यधीशताम् । कृताभिषेको देवेन लाभं वाहनमुत्तमम् ॥ २२
आयुधानि च शक्त्यादि स्वाहाञ्च दयितां शुभाम् । तथैवेशाज्ञया ह्येष दक्षिणाप्रदिगीश्वरः ॥ २३
अग्नीनामधिपो ह्येष तिष्ठत्येवाग्निरद्भुतः । केताराख्ये महाक्षेत्रे यमोऽपि यमिनां वरः ॥ २४
प्रणम्य देवदेवेशं प्राप्तानेकानयं वरान् । दक्षिणाशापतित्वञ्च महिषं वाहनोत्तमम् ॥ २५
कालदण्डाद्यायुधानि सर्वेषामात्मनां पुनः । समवर्तितया नीत्वा पुण्यापुण्ये विचार्य च ॥ २६
पुण्येन स्वर्गतिं तेषां पापेन नरके स्थितिम् । यातनाश्चापि नरके तत्तत्पापानुरूपतः ॥ २७
सभ्यानपि महाभागान्मध्यस्थान्महितौजसः । चित्रगुप्तञ्च कार्यस्थं चकाराज्ञ शिवः स्वयम् ॥ २८
तदादि धर्मराड्भोगी संयमिन्यां शिवाज्ञया । अनुभूयामितां लक्ष्मीमास्तेऽद्यापि प्रतापवान् ॥ २९
गोकर्णे च शिवस्थाने निर्ऋतिः परमेश्वरम् । समभ्यर्च्य ततः प्राप प्रसन्नाज्जगतीपतेः ॥ ३०
दक्षिणापरदिक्पालभावञ्च विधिपूर्वकम् । यजतां फलदातृत्वं खड्गञ्चाप्यायुधोत्तमम् ॥ ३१
अभिषिक्तश्चाधिपत्ये रक्षसामपि सर्वशः । अद्याप्यनुभवन्नास्ते दत्तां देवेन संपदम् ॥ ३२

அக்னீனுமாதிபத்யஞ்ச தக்ஷிணுப்ராச்யதீசதாம் । க்ருதாபிஷேகோ தேவேன சாகம் வாஹனமுத்தமம் ॥ 22
ஆயுதானி ச சக்த்யாதி ஸ்வாஹாஞ்ச தயிதாம் சுபாம் । ததைவேசாக்ஞயா ஹ்யேஷ தக்ஷிணுப்ராக்திகீச்வர:
அக்னிநாமாதிபோ ஹ்யேஷ திஷ்டத்யேவாக்னிரத்புத: ।
கேதாராக்யே மஹாக்ஷேத்ரே யமோऽபி யமினும் வர: ॥ 24
ப்ரணம்ய தேவதேவேசம் ப்ராபானேகானயம் வரான் । தக்ஷிணுசாபதித்வஞ்ச மஹிஷம் வாஹனோத்தமம்
காலதண்டாத்யாயுதானி ஸர்வேஷாமாத்மனும் புன: । ஸமவர்திதயானித்வா புண்யாபுண்யே விசார்ய ச 26
புண்யேன ஸ்வர்கிதம் தேஷாம் பாபேன நரகே ஸ்திதம் । யாதனுச்சாபி நரகே தத்தத்பாபானுரூபத: 27
ஸப்யானபி மஹாபாகான்மத்யஸ்தான்மஹிதௌஜஸ: ।
சித்ரகுப்தஞ்ச கார்யஸ்தம் சகாராஸ்ய சிவ: ஸ்வயம் ॥ 28
ததாதி தர்மராட்போகீ ஸம்யமின்யாம் சிவாக்ஞயா ।
அனுபூயாமிதாம் லக்ஷ்மீமாஸ்தேऽத்யாபி ப்ரதாபவான் ॥ 29
கோகர்ணேச சிவஸ்தானே நிருருதி: பரமேச்வரம் । ஸமப்யர்ச்ய தத: ப்ராப ப்ரஸன்னுஜ்ஜகதீபதே: ॥ 30
தக்ஷிணுப்ரதிக்பாலபாவஞ்ச விதிபூர்வகம் । யஜதாம் பலதாத்ருத்வம் கட்கஞ்சாப்யாயுதோத்தமம் ॥ 31
அபிஷிக்தச்சாதிபத்யே ரக்ஷஸாமபி ஸர்வச: । அத்யாப்யனுபவன்னாஸ்தே தத்தாம் தேவேன ஸம்பதம் 32

செய்து சிறந்த வரங்களை அடைந்தனர். (21) ஸ்ரீ மஹாதேவரால் முடிசூட்டப் பெற்றவனாகி எல்லா அக்னிகளுக்கும் தென்கிழக்கு திசைக்கும் ஆதிபத்யத்தன்மையையும், சிறந்த வாகனமான ஆட்டுக்கடாவையும், (22) சக்தி முதலிய ஆயுதங்களையும், ஸ்வாஹா தேவி என்ற அழகிய மனைவியையும் அடைந்து அந்த அக்னிதேவன் அந்த பரமசிவனின் ஆக்ஞையால் தென்கிழகுத் திக்கிற்கு அதிபதியாகவும், (23) ஸகல அக்னிகளுக்கும் அதிபனாகவும் இருந்து கொண்டு மிக அற்புதமாய் வாழ்ந்து வருகிறான். இந்திரிய நிக்ரஹம் செய்கின்றவர்களில் சிறந்தவனான தர்மராஜனும் கேதாரம் என்ற சிறந்த க்ஷேத்திரத்தில் (24) ஸ்ரீ தேவாதி தேவரான மஹேச்வரனைப் பூஜித்து, அநேகம் வரங்களை அடைந்தார். தெற்கு திசைக்கு அதிபதியாயிருத்தல் சிறந்த எருமைக்கடா வாகனம், (25) காலதண்டம் முதலிய ஆயுதங்கள் இவைகளையும் அவன் அடைந்தான். மிக மஹிமை வாய்ந்த ஜகதீசன் தானாகவே அவருக்கு மிக மஹிமை வாய்ந்தவர்களும், மத்தியஸ்தர்களுமான சில சபாத்யக்ஷர்களையும், சித்திரகுப்தன் என்ற கணக்கனையும் அவனுக்குக் கொடுத்தருளினார். அதுமுதலாக அந்த தர்மராஜர் ஸகல பிராணிகளுடைய புண்ணிய பாவங்களையும், பக்ஷபாதமின்றி விசாரித்து புண்ணியம் செய்தவர்களை சொர்க்கத்திற்கும், பாவம் செய்தவர்களை நரகத்திற்கும் அனுப்பி அவரவர்களின் பாவத்திற்குத் தக்கபடி அவர்களுக்கு சிக்ஷையளித்து ஸம்யமினி என்ற பட்டணத்தில் ஸ்ரீ மகேச்வரரின் ஆக்ஞையால் அநேகம் போகங்களையும், சுகங்களையும், அளவற்ற ஐச்வரியங்களையும் அனுபவித்துக் கொண்டு இப்பொழுதும் மிகப் பராக்கிரமசாலியாக வாழ்ந்து வருகிறான். (29) நிருதியும் கோகர்ணம் என்ற சிவக்ஷேத்திரத்தில் ஸ்ரீ மஹேச்வரனைப் பூஜை செய்து அதனால் ப்ரசன்னரான ஸ்ரீ பரமேச்வரரிடமிருந்து தென்மேற்குத் திசைக்கு ஆதிபத்யத்தையும் விதிப்படி யாகம் செய்கிறவர்களுக்கு பயனைக் கொடுக்கும் தன்மையையும், சிறந்த ஆயுதமான ஓர் கத்தியையுமடைந்து, (31) எல்லா ராக்ஷஸர்களுக்கும் அதிபதியாக முடிசூட்டப்பட்டு, ஸ்ரீ பரமசிவனால் கொடுக்கப்

जम्बूवारण्ये समभ्यर्च्य प्रचेताः परमेश्वरम् । प्राचीनवाधिपत्यञ्च यादसामप्यपामपि ॥ ३३
वाहनञ्चापि मकरमभिषेकपुरस्सरम् । पश्चिमाशाधिपत्यञ्च पाशाद्यैरायुधैस्समम् ॥ ३४
तथैव लब्ध्वा तत्सर्वं महता प्राभवेन सः । वर्ततेऽद्यापि सन्तुष्टो महातेजाः प्रतापवान् ॥ ३५
वायुर्दक्षिणकैलासे कालहस्तिमहापुरे । समभ्यर्च्य महादेवमुपचारैरनन्यधीः ॥ ३६
वरमाप महेशानात् प्रसन्नादीश्वरेश्वरात् । पश्चिमोत्तरदिक्स्वाम्ये चाभिषिक्तः प्रतापवान् ॥ ३७
वायूनामाधिपत्यञ्च ध्वजाद्यायुधपूर्वकैः । मृगञ्च वाहनं लेभे सोऽद्याप्यप्रतिमोभुवि ॥ ३८
सिद्धेश्वराभिधे सिद्धवटे संपूज्य शङ्करम् । कुबेरः परया भक्त्या वरानाप महेश्वरात् ॥ ३९
उत्तराशापतित्वेच पट्टभद्रो बभूव च । निधीनाञ्च नवानाञ्च पतित्वं चापिपुष्पकम् ॥ ४०
विमानमपि देवेशाद्यक्षेशत्वञ्च वाहनम् । नरं प्रतापसंयुक्तो वर्ततेऽद्यापि तत्सखा ॥ ४१
ईशानोऽपि महादेवं कमलालयवासिनम् । संपूज्य पत्रपुष्पाद्यैरुपचारैरनेकधा ॥ ४२
प्रसन्नेन तदा पृष्टः काऽपेक्षेति पिनाकिना । प्रणम्य वरयामास वरग्रामाननन्यधीः ॥ ४३

ஜம்ப்வாரண்யே ஸமப்யர்ச்ய ப்ரசேதா: பரமேச்வரம் ।
ப்ராபார்ணவாதிபத்யஞ்ச பாசாத்யைராயுதைஸ்ஸமம் ॥ 33
வாஹனஞ்சாபி மகரமபிஷேகபுரஸ்ஸரம் । பச்சிமாசாதிபத்யஞ்ச பாசாத்யைராயுதைஸ்ஸமம் ॥ 34
ததைவ லப்த்வா தத்ஸர்வம் மஹதா ப்ராபவேன ஸ: ।
வர்ததேऽத்யாபி ஸந்துஷ்டோ மஹாதேஜா: ப்ரதாபவான் ॥ 35
வாயுர்தக்ஷிணகைலாஸே காளஹஸ்தி மஹாபுரே । ஸமப்யர்ச்ய மஹாதேவமுபசாரைரனன்யதீ: ॥ 36
வரமாப மஹேசானாத் ப்ரஸன்னாதீச்வரேச்வராத் ।
பச்சிமோத்தரதிக்ஸ்வாம்யே சாபிஷிக்த: ப்ரதாபவான் ॥ 37
வாயூனாமாதிபத்யஞ்ச த்வஜாத்யாயுதபூர்வகை: ।
ம்ருகஞ்ச வாஹனம் லேபே ஸோऽத்யாப்யப்ரதிமோ புவி ॥ 38
ஸித்தேச்வராபிதே ஸித்தவடே ஸம்பூஜ்ய சங்கரம் । குபேர: பரயா பக்த்யா வரானாப மஹேச்வராத் 39
உத்தராசாபதித்வேச பட்டபத்ரோ பபூவ ச । நிதீனாஞ்ச நவானாஞ்ச பதித்வம் சாபி புஷ்பகம் ॥ 40
விமானமபி தேவேசாத்யக்ஷேசத்வஞ்ச வாஹனம் । நரம் ப்ரதாப ஸம்யுக்தோ வர்ததேऽத்யாபி தத்ஸகா
ஈசானோऽபி மஹாதேவம் கமலாலயவாஸினம் । ஸம்பூஜ்ய பத்ரபுஷ்பாத்யைருபசாரைரனேகதா ॥ 42
ப்ரஸன்னேன ததா ப்ருஷ்ட: காऽபேக்ஷேதி பினாகினா । ப்ரணம்ய வரயாமாஸ வரக்ராமானனன்யதீ: ॥ 43

பட்ட பாக்கியங்களை இப்பொழுதும் அனுபவித்து வருகிறார். (32) வருணனும் ஜம்புகேச்வரத்தில் ஸ்ரீ மஹேச்வரனைப் பூஜை செய்து ஸமுத்திரம் ஜலத்திற்குள் இருக்கும் ஜந்துக்கள், ஜலம் இவைகளின் ஆதிபத்தியத்தையும் முதலை வாகனம், பாசம் முதலிய ஆயுதங்கள் இவைகளைப் பெற்று, பட்டாபிஷேகம் செய்யப்பட்டு மேற்கு திசைக்கு அதிபதியாயிருப்பதை அடைந்து, அந்த வருணன் இப்பொழுதும் மிகுந்த சந்தோஷத்தோடு மிகுந்த தேஜஸ்வியாகவும், மிகப் பராக்கிரமசாலியாகவும் மிகுந்த வைபவங்களோடு வாழ்ந்து வருகிறான். (35) பிறகு வாயு தேவன் தக்ஷிண கைலாசம் என்ற ஸ்ரீ காளஹஸ்தி க்ஷேத்திரத்தில் ஸ்ரீ மஹாதேவரை ஒருமைப்பட்ட மனதுடன் ஸகல உபசாரங்களாலும் பூஜித்து, பிறகு (36) பிரசன்னரான தேவாதி தேவரால் வடமேற்கு திசைக்கு அதிபனாக முடிசூட்டப்பட்டவனாகி அந்த ப்ரதாபசாலியானவன் (37) ஸகல வாயுக்களின் ஆதிபத்யம், த்வஜம் முதலிய ஆயுதங்கள், மான் வாகனம் இவைகளை அடைந்து இப்பொழுதும் அங்கு நிகரற்றவனாய் வாழ்ந்து வருகிறான். (38) குபேரனும் சித்தேச்வரம் என்ற சித்தவட க்ஷேத்திரத்தில் மிகுந்த பக்தியோடு ஸ்ரீ சங்கரனைப் பூஜை செய்து அவரிடமிருந்து வரங்களைப் பெற்றான். (39) வடதிசைக்கு அதிபனாக முடிசூட்டப்பட்டு நவநிதிகளின் ஆதிபத்யம், புஷ்பகம் என்ற விமானம், (40) யக்ஷர்களின் ஆதிபத்தியம், நரவாகனம் இவையெல்லாம் அவரிடமிருந்து பெற்று மஹா பிரதாப சாலியாகவும் அவருக்குத் தோழனாகவும் இப்பொழுதும் விளங்கி வருகிறான். (41) பிறகு ஈசான தேவன் திருவாரூரில் விளங்கும் ஸ்ரீ மஹாதேவரை பத்ர புஷ்பங்களாலும், ஸகல உபசாரங்களாலும் பலமுறை பூஜித்தான். (42) அதனால் பிரசன்னரான ஸ்ரீ பகவான் என்ன வரம் வேண்டுமென்று கேட்டார். அப்பொழுது அவர் ஒருமைப்பட்ட மனதுடன் ஸ்ரீமஹேச்வரரை நமஸ்கரித்து

समानानि च नामानि समानवपुरायुधम् । समानमपि तच्चिह्नं यद्यदस्ति शिवस्य तु ॥ ४४
वृषश्च वाहनं तद्वत् प्रागुदीचीदिगीशताम् । एतत्सर्वमसौ लेभे संप्रार्थ्येशं स्वयं वशी ॥ ४५
अन्तेऽधिकारस्य पुनस्सायुज्यं परमेश्वरः । दत्वाऽन्तर्धानमापेशस्सोऽद्यापि प्रतापवान् ॥ ४६
काञ्च्यामेव पुरा सूर्यः कमलैरीश्वरेश्वरम् । अभ्यर्च्यानन्यया भक्त्या प्रसन्नादाप्तवान्वरम् ॥ ४७
ऋग्यजुस्सामवेदानां मण्डले वसतिस्सदा । तदर्हञ्च रथं लेभे सप्ताश्वपरिमण्डितम् ॥ ४८
ग्रहाणामाधिपत्यञ्च ज्योतिश्चक्रञ्च सर्वतः (चक्रस्य सर्वदा) । कृताभिषेको देवेन दिनानामधिपोऽभवत् ४९
कुम्भघोणमनुप्राप्य चन्द्रश्शङ्करवल्लभः । भक्त्याऽभ्यर्च्य महादेवं तत्र (पत्रैः) मुक्तामयैश्शुभैः ५०
वरमाप शिवात् प्रीतान्नक्षत्रेशत्वमद्भुतम् । हिमांशुत्वं द्विजेशत्वमोषधीशत्वमेव च ॥ ५१
विभूषणत्वमीशस्य सुदुर्लभमवाप सः । प्रत्यहं तावुभौ मेरोः प्रदक्षिणपरौ मुदा ॥ ५२
शिवावासस्य सततं ग्रहैरन्यैश्शिवप्रियैः । भौमो बुधो गुरुश्शुक्रशनिश्चैतेच पञ्चच ॥ ५३

ஸமாநாநி ச நாமாநி ஸமாநவபுராயுதம் । ஸமாநமபி தச்சிந்ஹம் யத்யதஸ்தி சிவஸ்ய து ॥ 44
வ்ருஷஞ்ச வாஹநம் தத்வத் ப்ராகுதீசீதிகீசதாம் ।
ஏதத்ஸர்வமஸௌ லேபே ஸம்ப்ரார்த்யேசம் ஸ்வயம் வசீ ॥ 45
அந்தேऽதிகாரஸ்ய புநஸ்ஸாயுஜ்யம் பரமேச்வர: ।
தத்வாऽந்தர்தாநமாபேசஸ்ஸோப்யத்யாபி ப்ரதாபவாந் ॥ 46
காஞ்ச்யாமேவ புரா ஸூர்ய: கமலைரீச்வரேச்வரம் ।
அப்யர்ச்யாநந்யயா பக்த்யா ப்ரஸந்நாதாப்தவாந் வரம் ॥ 47
ருக்யஜுஸ்ஸாமவேதாநாம் மண்டலே வஸதிஸ்ஸதா । ததர்ஹஞ்ச ரதம் லேபே ஸப்தாச்வபரிமண்டிதம் 48
க்ரஹாணாமாதிபத்யஞ்ச ஜ்யோதிச்சக்ரஞ்ச ஸர்வத: (சக்ரஸ்யஸர்வதா)
க்ருதாபிஷேகோ தேவேந தினாநாமதிபோऽபவத் ॥ 49
கும்பகோணமநுப்ராப்ய சந்த்ரச்சங்கரவல்லப: ।
பக்த்யாப்யர்ச்ய மஹாதேவம் தத்ர (பத்ரை:) முக்தாமயைச்சுபை: 50
வரமாப சிவாத்ப்ரீதாந்ந க்ஷத்ரேசத்வமத்புதம் ।
ஹிமாம்சுத்வம் த்விஜேசத்வமோஷதீசத்வமேவ ச ॥ 51
விபூஷணத்வமீசஸ்ய ஸுதுர்லபமவாப ஸ: । ப்ரத்யஹம் தாவுபௌமேரோ: ப்ரதக்ஷிணபரௌ முதா ॥ 52
சிவாவாஸஸ்ய ஸததம் க்ரஹைரந்யைச்சிவப்ரியை: ।
பௌமோ புதோ குருச்சுக்ர சனிச்சைதேச பஞ்சச ॥ 53

அநேகம் வரங்களை வேண்டினார். (43) ஸ்ரீ மஹேச்வரனுக்கு சரியான நாமாக்கள் அவரைப் போன்ற உருவம், அதற்குரிய ஆயுதங்கள் மற்றுமுள்ள அவருக்குரிய அடையாளங்கள் (44) விருஷப வாகனம் வடகிழக்கு திசையின் ஆதிபத்யம் இவைகளை எல்லாம் அவர் அடக்கத்துடன் ஸ்ரீ மகேஸ்வரரிடமிருந்து ப்ரார்த்தித்து அடைந்தார். (45) பிறகு ஸ்ரீ பரமேச்வரன் அந்த ஈசானருக்கு அதிகாரம் முடிந்தவுடன் தனது சாயுஜ்ய பதவியைக் கொடுப்பதாக வரமளித்து மறைந்தார். அந்த ஈசானர் இப்பொழுதும் மிகப் பிரதாபத்துடன் விளங்கி வருகிறார். (46) முன்பு ஸூரியனும் காஞ்சிபுரத்தில் ஸ்ரீ மஹேச்வரனை சிறந்த பக்தியோடு தாமரை புஷ்பங்களால் பூஜித்து அதனால் பிரசன்னரான ஸ்ரீ பகவானிடமிருந்து வரத்தை அடைந்தார். (47) தன் மண்டலத்தில் எப்பொழுதும் ரிக், யஜுஸ், சாம வேதங்களின் இருப்பையும் அதற்கு தகுதியான ஏழு குதிரைகளால் அலங்கரிக்கப்பட்ட ஓர் ரதத்தையும், (48) நவக்கிரஹங்களின் ஆதிபத்தியத்தையும் தன்னைச் சுற்றிலும் ஜோதிர் மண்டலத்தையும் வரமாகப் பெற்று ஸ்ரீ பகவானால் முடிசூட்டப்பட்டு தினங்களுக்கு அதிபனாக, (49) ஸ்ரீ சங்கரருக்கு பிரியமுள்ளவனான சந்திரன் கும்பகோணத்திற்குச் சென்று அங்கு ஸ்ரீ மஹாதேவரை மிகுந்த பக்தியோடு அழகான அநேகம் முத்துக்களாகிய புஷ்பங்களால் அர்ச்சித்து, (50) அதனால் சந்தோஷமடைந்த பரமேச்வரரிடமிருந்து நக்ஷத்திரங்களின் ஆதிபத்தியத்தையும் பனிக்கிரணங்களை உடையதாக இருத்தல் ப்ராம்மணர்களுக்கும், ஓஷதிகளுக்கும் அதிபதியாக இருத்தல் (51) கிடைப்பதற்கு அரியதான பரமேச்வரனுக்கு ஆபரணமாக இருத்தல் இவைகளை வரங்களாக அடைந்தான். மேலும் ஸூர்ய சந்திரர்களான இவ்விருவர்களும் ஸ்ரீ பரமேச்வரனுடைய வாசஸ்தலமாகிய மேரு மலையை அவருக்குப் பிரியமுள்ளவைகளான மற்ற கிரஹங்களோடு தினந்தோறும் மிகுந்த சந்தோஷத்தோடு பிரதக்ஷிணம் செய்து வந்தார்கள். தவிரவும்

मध्यार्जुने च हालास्ये सेतौ श्वेतवने (वटवने) मुदा । वेदारण्येच पञ्चैते पञ्चस्वपि पिनाकिनम् ॥ ५४
प्रसाद्य परया भक्त्या प्रसन्नादापिरे वरान् । ऊर्ध्वमण्डलतस्सोमसूर्ययोरुपरि स्थितिम् ॥ ५५
माधिपत्यञ्च सुमहल्लोकानां सुखदुःखयोः । सर्वैरपिच पूज्यत्वं सर्वोपद्रवशान्तये ॥ ५६
देवासुराणामाचार्यौ गुरुशुक्रौ कृतौ तदा । ईश्वरेणैव देवेन प्रसन्नेन मुनीश्वराः ॥ ५७
सप्तापि ऋषयः पूर्वं देवदेवं सभापतिम् । चिदम्बरे समभ्यर्च्य मध्ये दभ्रसदः प्रभुम् ॥ ५८
अवापुर्वरमीशानात् ग्रहाणामुपरिस्थितिम् । पुनर्देहान्तरेमुक्तिं मुमुदुः प्राप्य ते वरम् ॥ ५९
सर्वशास्त्रार्थविज्ञानकुशलाश्च तदाज्ञया । वसिष्ठाद्या महात्मानस्तेऽद्यापि महितौजसः ॥ ६०

इति श्री स्कान्दे महापुराणे शंकरसंहितायां शिवरहस्यखण्डे
उपदेशकाण्डे द्विषष्टितमोऽध्यायः ॥

மத்யார்ஜுனே ச ஹாலாஸ்யே ஸேதௌ ச்வேதவனே (வடவனே) முதா ।
வேதாரண்யேச பஞ்சைதே பஞ்சஸ்வபி பினாகினம் ॥ 54
ப்ரஸாத்ய பரயா பக்த்யா ப்ரஸன்னாதாபிரே வரான் ।
ஊர்த்வமண்டலதஸ்ஸோமஸூர்யயோருபரி ஸ்திதம் ॥ 55
ஆதிபத்யஞ்ச ஸுமஹல்லோகானாம் ஸுகது:கயோ: । ஸர்வைரபிச பூஜ்யத்வம் ஸர்வோபத்ரவ சாந்தயே
தேவாஸுராணாமாசார்யௌ குருசுக்ரௌ க்ருதௌ ததா ।
ஈச்வரேணைவ தேவேன ப்ரஸன்னேன முனீச்வரா: ॥ 57
ஸப்தாபி ருஷய: பூர்வம் தேவதேவம் ஸபாபதிம் । சிதம்பரே ஸமப்யர்ச்ய மத்யே தப்ரஸத: ப்ரபும் ॥ 58
அவாபுர்வரமீசானாத் க்ரஹாணாமுபரி ஸ்திதிம் । புனர்தேஹாந்தரே முக்திம் முமுது: ப்ராப்ய தே வரம் ॥ 59
ஸர்வசாஸ்த்ரார்தவிக்ஞானகுசலாச்ச ததாக்ஞயா ।
வஸிஷ்டாத்யா மஹாத்மானஸ்தேऽத்யாபி மஹிதௌஜஸ: ॥ 60

இதி ஸ்ரீஸ்காந்தே மஹாபுராணே சங்கரஸம்ஹிதாயாம் சிவரஹஸ்யகண்டே
உபதேசகாண்டே த்விஷஷ்டிதமோऽத்யாய: ॥

அங்காரகன், புதன், குரு, சுக்கிரன், சனி இந்த ஐந்து பேர்களும், (53) முறையே திருவிடை மருதூர், மதுரை, ராமேச்வரம், திருவெண்காடு, வேதாரண்யம் இந்த ஐந்து க்ஷேத்திரங்களிலும் ஸ்ரீ பகவானை சந்தோஷத்தோடும், (54) மிகுந்த பக்தியோடும் பூஜை செய்து அதனால் சந்தோஷமடைந்த ஸ்ரீ மஹேச்வரரிடமிருந்து சந்திர ஸூரிய மண்டலங்களுக்கும் மேல் பாகத்தில் தங்களுக்கு வாசத்தையும், ஸகல உலகங்களுடைய சுக துக்கங்களின் ஆதிபத்யத்தையும் எல்லா துக்கங்களும் விலகுவதற்காக யாவராலும் பூஜிக்கப்படும் தன்மையையும் அவர்கள் வரங்களாக அடைந்தார்கள். (56) ஓ முனிவர்களே! குரு, சுக்கிரன் இவ்விருவர்களும் ஸந்தோஷமடைந்த ஸ்ரீ ஜகதீசனால் தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் ஆசாரியர்களாக அப்பொழுது செய்யப்பட்டார்கள். (57) முன்பு ஸப்த ரிஷிகளும், சிதம்பரத்தில் விளங்குகின்றவரும், கனகஸபைக்கு நாயகரும், தேவாதி தேவருமான ஸபாபதியை பூஜை செய்து (58) அந்த ஜகதீசரிடமிருந்து எல்லா கிரஹங்களுக்கும் மேல் பாகத்தில் தங்கள் இருப்பிடத்தையும், தங்களுடைய தேகத்தின் முடிவில் மோக்ஷத்தையும் வரமாகப் பெற்று ஆனந்தமடைந்தார்கள். (59) பிறகு வசிஷ்டர் முதலிய மஹாத்மாக்கள் ஸ்ரீ மஹேச்வரருடைய கட்டளையின்படி ஸகல சாஸ்திரங்களின் அர்த்தங்களை அறிவதில் தேர்ச்சி உள்ளவர்களாகி இப்பொழுதும் பிரஸித்திபெற்ற தேஜஸை உடையவர்களாக விளங்கி வருகிறார்கள். (60)

அறுபத்திரண்டாவது அத்யாயம் முற்றிற்று.

॥ अथ त्रिषष्टितमोऽध्यायः ॥

काश्यादिषु ध्रुवादिकृत शिवार्चनम् ॥

सूतः — ध्रुव औत्तानपादिस्तु काश्यां विश्वेश्वरं शिवम् । समभ्यर्च्य महेशानात् प्रसन्नादाप्तवान्वरम् ॥ १
नक्षत्रमुनिमुख्यानां मण्डलोर्ध्वस्थितिं पराम् । मेधीभूतो ग्रहाणाञ्च भ्रामयन्नेव तान्मुदा ॥ २
सर्वोपरि कृतावासस्थितत्वाप्यसंभ्रमन् । कुंभघोणे पुरा शेषस्सर्वेषां भोगिनां वरः ॥ ३
प्रसाद्यपरमेशानं भुवो भारं बभार वै । महाप्रतापसंयुक्तो वहतेऽद्याप्ययं धराम् ॥ ४
एवं स्थानेषु सर्वेषु भूम्यां पर्वतमूर्धसु । नदीनाञ्चैव तीरेषु देवाश्च मुनयोऽसुराः ॥ ५
सिद्धाश्च गरुडायक्षा विद्याधरमहोरगाः । किन्नराश्च मुनिश्रेष्ठास्तथा किंपुरुषादयः ॥ ६
मनुष्याश्च महादेवं भक्त्याराध्य सदाशिवम् । स्वं स्वं पदमनुप्राप्य सुखिनो मुदमापिरे ॥ ७
नागानां गरुडानाञ्च गन्धर्वोरगरक्षसाम् । किन्नराणां मनुष्याणां किंपुरुषाणाञ्च सर्वशः ॥ ८
प्रापुरीशवरास्ते ते ह्याधिपत्यमकुण्ठितम् । मेघानामधिपाश्चान्ये दिग्गजा येव केचन ॥ ९

॥ அத த்ரிஷஷ்டிதமோऽத்யாய: ॥

காசி முதலிய க்ஷேத்ரங்களில் துருவன் முதலிய பக்தர்களால் செய்யப்பட்ட சிவாராதனம்.

ஸூத: — த்ருவ ஔத்தானபாதிஸ்து காச்யாம் விச்வேச்வரம் சிவம் ।
ஸமப்யர்ச்ய மஹேசாநாத் ப்ரஸன்னாதாப்தவான் வரம் ॥ 1
நக்ஷத்ரமுனிமுக்யாநாம் மண்டலோர்த்வஸ்திதிம் பராம் ।
மேதீபூதோ க்ரஹாணாஞ்ச ப்ராமயன்னேவ தான்முதா ॥ 2
ஸர்வோபரி க்ருதாவாஸஸ்திஷ்டத்யத்யாப்யஸம்ப்ரமன் ।
கும்பகோணே புரா சேஷஸ்ஸர்வேஷாம் போகிநாம் வர: ॥ 3
ப்ரஸாத்யபரமேசாநம் புவோ பாரம் பபார வை । மஹாப்ரதாப ஸம்யுக்தோ வஹதேऽத்யாப்யயம் தராம் 4
ஏவம் ஸ்தாநேஷு ஸர்வேஷு பூம்யாம் பர்வதமூர்தஸு ।
நதீநாஞ்சைவ தீரேஷு தேவாச்ச முனயோऽஸுரா: ॥ 5
ஸித்தாச்ச கருடா யக்ஷா வித்யாதரமஹோரகா: । கின்னராச்ச முனிச்ரேஷ்டாஸ்ததா கிம்புருஷாதய: ॥ 6
மனுஷ்யாச்ச மஹாதேவம் பக்த்யாராத்ய ஸதாசிவம் ।
ஸ்வம் ஸ்வம் பதமனுப்ராப்ய ஸுகிநோ முதமாபிரே ॥ 7
நாகாநாம் கருடாநாஞ்ச கந்தர்வோரகராக்ஷஸாம் । கின்னராணாம் மனுஷ்யாணாம் கிம்புருஷாணாஞ்ச ஸர்வச:
ப்ராபுரீசவராஸ்தே தே ஹ்யாதிபத்யம குண்டிதம் । மேகாநாமதிபாச்சான்யே திக்கஜா யேச கேசந ॥ 9

அறுபத்துமூன்றாவது அத்தியாயம்

ஸூதமுனிவர் கூறுகிறார் :— ஓ முனிவர்களே! உத்தானபாதராஜனின் குமாரனான துருவன் காசியில் ஸ்ரீ விச்வநாதரைப் பூஜித்து அதனால் ப்ரஸன்னரான ஸ்ரீ பரமேச்வரரிடமிருந்து வரத்தை அடைந்தான். (1) நவக்கிரஹ மண்டலம், நக்ஷத்திர மண்டலம், ஸப்தரிஷி மண்டலம் இவைகளுக்கெல்லாம் உயரத்திலுள்ள சிறந்த நிலையைப் பெற்று அவைகளின் சக்கரத்தை (காற்றாகிய கயிற்றால்) இழுத்துக் கட்டப்பட்ட முனையை ஒத்தவராகி அவைகளை ஸந்தோஷத்துடன் சுற்றச் செய்து கொண்டு (2) இப்பொழுதும்கூட எல்லாவற்றிற்கும் உயரத்தில் அவர் வளர்க்கிறார். பூர்வத்தில் எல்லா ஸர்ப்பங்களுக்கும் ச்ரேஷ்டரான ஆதிசேஷன் கும்பகோணத்தில் (3) ஸ்ரீ பரமேச்வரனை ஸந்தோஷமடையச் செய்து அதனால் பூமியின் பாரத்தைத் தூக்கி வருகிறார். இப்பொழுதுகூட மிகுந்த பராக்கிரமத்துடன் கூடியவராய் பூமியைச் சுமந்து வருகிறார். (4) இதேவிதமாய் பூமி மலைகளின் உச்சிகள், நதிக்கரைகள் முதலிய எல்லா இடங்களிலும் தேவர்கள், ரிஷிகள், அசுரர்கள், (5) ஸித்தர்கள், கருடர்கள், யக்ஷர்கள், வித்யாதரர்கள், மஹோரகர்கள், கின்னரர்கள், சித்த முனிவர்கள், கிம்புருஷர்கள் முதலியவர்களும், (6) மனிதர்களும், ஆங்காங்கே ஸ்ரீ பரமேச்வரனை பக்தியுடன் பூஜித்து அதனால் அவரவரின் பதவியை அடைந்து ஸந்தோஷத்துடன் சுகமாய் இருந்து வருகிறார்கள். (7) ஸ்ரீ சம்புவின் வரத்தினால் நாகர்கள், கருடர்கள், கந்தர்வர்கள், உரகர்கள், ராக்ஷஸர்கள், கின்னரர்கள், மனிதர்கள் இவர்களெல்லாம் அழிவற்ற ஆதிபத்யத்தை அடைந்திருக்கிறார்கள். மேலும் சிலர் மேகங்களுக்கு அதிபர்களாகவும், சிலர் திக்கஜங்களாகவும்,

अष्टौ च ये महानागास्सप्तापि च महीधराः । ये येऽधिपाः स्थिता येषांते ते देवप्रसादतः ॥ १०
लब्धाधिपत्या विज्ञेया नान्यथा मुनिसत्तमाः । तस्माच्छ्रेयोर्थिभिस्सर्वैः स्वात्मनो मनुजोत्तमैः ॥ ११
शिवपूजा सदाकार्या भुक्तिमुक्तिफलप्रदा । शिवपूजाप्रभावेन केचित्सिद्धा बभूविरे ॥ १२
नवापि सिद्धविख्याता योगिनः कपिलादयः । अनेके लोककर्तारो ह्यनेके नित्यतां गताः ॥ १३
शिवलोकं ययुः केचित्सालोक्यमपरे जनाः । सामीप्यमपि सारूप्यं सायुज्यमपि सूरयः ॥ १४
देवासुरमनुष्येषु शिवपूजाप्रभावतः । अधिकैश्वर्यसंपन्ना विख्याता भुवनत्रये ॥ १५
केचिदैश्वर्यलाभेन मुक्ता मोहवशं गताः । भ्रष्टाः पुनश्च संसारान्छिवं पूर्ववदापिरे ॥ १६
जयार्थिनश्च बहवस्समभ्यर्च्य जगत्पतिम् । विजित्य शत्रून् संग्रामेशशासुः पृथिवीं पुनः ॥ १७
बलार्थिनश्च बहवो बलं सुबहु लेभिरे । पुत्रान् पुत्रार्थिनोऽन्येपि दारानपि मनोहरान् ॥ १८
पशुकामः पशूनश्वानश्वकामाश्च लेभिरे । सौभाग्यं कान्तिमद्रूपं त्यागं सत्यं पराक्रमम् ॥ १९

அஷ்டௌ ச யே மஹாநாகாஸ்ஸப்தாபிச மஹீதரா: ।
யே யேऽதிபா: ஸ்திதா யேஷாம் தே தே தேவப்ரஸாதத: ॥ 10
லப்தாதிபத்யா விக்ஞேயா நான்யதா முனிஸத்தமா: ।
தஸ்மாச்ச்ரேயோர்திபிஸ்ஸர்வை: ஸ்வாத்மனோ மனுஜோத்தமை: 11
சிவபூஜா ஸதாகார்யா புக்திமுக்திபலப்ரதா । சிவபூஜாப்ரபாவேன கேசித்ஸித்தா பபூவிரே ॥ 12
நவாபி ஸித்தவிக்யாதா யோகின: கபிலாதய: । அனேகே லோককர்தாரோ ஹ்யனேகே நித்யதாம் கதா: 13
சிவலோகம் யயு: கேசித்ஸாலோக்யமபரே ஜனா: । ஸாமீப்யமபி ஸாரூப்யம் ஸாயுஜ்யமபி ஸூரய: ॥ 14
தேவாஸுரமனுஷ்யேஷு சிவபூஜாப்ரபாவத: । அதிகைச்வர்யஸம்பன்னா விக்யாதா புவனத்ரயே ॥ 15
கேசிதைச்வர்யலாபேன முக்தா மோஹவசம் கதா: ।
ப்ரஷ்டா: புனச்ச ஸம்ஸாராச்சிவம் பூர்வவதாபிரே ॥ 16
ஜயார்தினச்ச பஹவஸ்ஸமப்யர்ச்ய ஜகத்பதிம் ।
விஜித்ய சத்ரூன் ஸங்க்ராமே சசாஸு: ப்ருதிவீம் புன: ॥ 17
பலார்தினச்ச பஹவோ பலம் ஸுபஹு லேபிரே ।
புத்ரான் புத்ரார்திநோऽன்யேபி தாரானபி மனோஹரான் ॥ 18
பசுகாம: பசூனச்வானச்வகாமாச்ச லேபிரே । ஸௌபாக்யம் காந்திமத்ரூபம் த்யாகம் ஸத்யம் பராக்ரமம் 19

சிலர் எட்டு மஹா நாகங்களாகவும், சிலர் ஏழு குல பர்வதங்களாகவும் ஆனார்கள். ஓ முனிவர்களே! எவரெவர்களுக்கு எவரெவர் அதிபதிகளாக இருக்கிறார்களோ அவர்களெல்லாம் ஸ்ரீ சங்கரருடைய அனுக்கிரஹ அருளால்தான் அந்தந்த ஆதிபத்யங்களை பெற்றிருப்பதாக அறிய வேண்டுமேயன்றி வேறில்லை. ஆகையால் தனக்கு மேன்மையைக் கோரிய எல்லா மனித ச்ரேஷ்டர்களும் (11) போக மோக்ஷங்களைப் பயனாக அளிக்கக் கூடிய சிவபூஜையை எப்பொழுதும் செய்ய வேண்டும். சிவபூஜையின் மகிமையால் சிலர் சித்தர்களானார்கள். (12) கபிலர் முதலிய சில ஸித்தர்கள் சிறந்த யோகீச்வரர்கள் எனக் கூறப்படுகிறார்கள். மற்றும் அநேக ஸித்தர்கள் உலகத்திற்கு அதிபர்களாகவும், சிலர் நித்தியத் தன்மையை அடைந்தவர்களாகவும் ஆகியிருக்கிறார்கள். (13) சில வித்துவான்கள் சிவலோகத்தையும், சிலர் ஸ்ரீ பரமேச்வரனுடைய ஸாலோக்கியத்தையும், சிலர் ஸாமீப்யத்தையும், சிலர் ஸாரூப்யத்தையும், சிலர் ஸாயுஜ்யத்தையும் அடைந்திருக்கிறார்கள். (14) மூன்று உலகத்திலுள்ள தேவ, அசுர, மனிதர்களின் சிறந்த ஐச்வரியங்களை அடைந்திருப்பவர்களெல்லாம் சிவ பூஜையின் மஹிமையால்தான் உலகத்தில் பிரஸித்தி அடைகிறார்கள். (15) (ஸாயுஜ்ய முக்தியைத்தவிர) மற்ற முக்திகளை அடைந்த சிலர் மிகுந்த ஐச்வரிய லாபத்தினால் புத்திமோகம் கொண்டு கெட்டு மறு பிறப்படைந்து, பின்னும் ஸ்ரீ பரமேச்வரனைப் பூஜித்து, மறுபடியும் ஸம்ஸாரத்திலிருந்து முன்போல் ஸ்ரீ பரமசிவனை அடைந்திருக்கிறார்கள். (16) வெற்றியில் விருப்பமுள்ள பலர் ஸ்ரீ ஜகதீசனைப் பூஜித்து, போரில் எதிரிகளை வென்று மறுபடி பூமியை ஆண்டிருக்கிறார்கள். (17) பலத்தை விரும்பிய பலர் அளவற்ற பலமடைந்திருக்கிறார்கள். புத்திரனை விரும்பியவர்கள் அநேகம் புத்திரர்களையும், மனைவியை விரும்பியவர்கள் அழகிய பல மனைவிகளையும், (18) பசுவை விரும்பியவர்கள் பசுக்களையும், குதிரையை விரும்பியவர்கள் குதிரையையும் அடைந்திருக்கிறார்கள். மேலும் பலர் ஸௌந்தரியம், சிறந்த காந்தியோடு கூடிய உருவம், கொடை, ஸத்யம்,

प्रसिद्धिश्च जगत्यस्मिन् सर्वमिष्टञ्च लेभिरे । अर्थेष्वेतेष्वनेकेषु सेतिहासेषु काञ्चन ॥
संग्रहेण कथाभागा वर्ण्यन्ते शृणुताधुन ॥ २०

इति श्री स्कान्दे महापुराणे शंकरसंहितायां शिवरहस्यखण्डे
उपदेशकाण्डे त्रिषष्टितमोऽध्यायः ॥

